# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

Vol. V. September 1919. No. 9.

புத்தகம் V.] FIDES AC ROBUR. [நம்பர் 9.

## The Little Garden of Roses.

### சிறு ரோஜாத்தோட்டம்.

மலர் 4.

"The Kingdom of heaven suffereth violence." (Math. XI. 12.)

"மோட்ச இராச்சியம் பலவந்தப்படுகின்றது."

(மத். 11-ம் அதி. 12-ம் வச.)

1. புண்ணியஞ் செய்யத் துவக்குகிறவர்கள் அநேகர். ஆனால் விடாமுயற்சியாயிருப்பவர்கள் கொஞ்சம்பேர். மேலும் சாங்கோபாங்கத்தில் சம்பூரண நெறியை அடைகிறவர்களோ வெகு சொற்பப்பேர். ஏனெனில அவர்கள் வெகு சுளுவில் உலக ஆசாபாசங்களுக்கு இணையாகிறார்கள்; அல்லது ஆங்காரங்கொள்ளுகிறார்கள்; அல்லது துன்பதுரிதங்கள் அவர்களை வெகு சுலபமாய் அலைக்கழிக்கின்றன.

ஐயோ! தன்னைத்தானே முழுதும் வெறுத்துத் தனக்குச் சேர்ந்த யாவற்றையும் பற்றற ஒழித்துக் கடவுளைத் தூய மனதோடு நேசிக்கிறவனை இப்பூவுலகில் காண்பதரிது!

"பூரணமென்பது ஒருவகை அருமையான பட்சியாம். ஏனெனில் ஒருவன் தன்னைத்தானே மேற்கொள்வது மிகவும் கஷ்டமான காரியம்," என்று ஒரு பக்திமான் சொல்லியிருக்கிறார். ஆகையால் புண்ணியத்தைக் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்காதவன் அதின் இன்பத்தை ஒருபோதும் ருசிப்பதில்லை. ஒவ்வொரு புண்ணியத்துக்கும் அததற்குத் தகுந்த இன்பமுண்டு. அதையடைய ஒருவன் நன்றாய்க் கஷ்டப்படுவானாயின்

161401



...து அவனுக்கு இளைப்பாற்றியையும், பூரண இன்பத்தையும் கொடுக்கவல்லது. ஆனால் பாவத்துக்குள்ளாயிருப்பவனெவனோ அவன் தனது மேன்மை குலைந்து, இளைப்பாற்றியின்றாமல் அநேக துன்பதுரிதங்களுக்குள்ளாகி, மனமுடைந்து, நன்மையும் புண்ணியமுமானதெதுவென்று அறியக்கூடாமல் கடைசியில் தனக்கு நித்திய கேட்டையும் விளைவித்துக் கொள்ளுகிறான்; நியாயமான பற்றுதல்களை வெறுக்கிறவன் தனக்குவரும் தந்திர சோதனைகளை எளிதில் மேற்கொள்ளுவான்.

2. வேட்டைநாயின் வாயைக் கட்டுகிறவன் அதன் குலைப்புக்குப் பயப்படவேண்டியதில்லை. ஆகையால் மௌனம் காக்கிறவனெவனோ அவன் தன் உதடுகளால் குற்றஞ் செய்யமாட்டான். மனப்பூரணமாய் அந்தரங்கத்தில் மௌனங் காக்கிறவன், பொய்யினின்றும், கலகத்தினின்றும், அபவாதத்தினின்றும், கோபத்தினின்றும், முறுமுறுத்தலினின்றும் நீங்கிக்கொள்ளுகிறான்.

கெட்ட சம்பாஷணைக்குக் காது கொடுக்காதவனும், இவ்வுலக காரியங்களின்மேல் இச்சையில்லாதவனும், வெகு சுருக்கில் அதன் கண்ணியில் அகப்படாமல் அதனுடைய வீண் எண்ணங்களின்மேல் தன் நாட்டத்தை வையான். பஞ்சேந்திரியங்களின்மேல் நாம் கட்டுங் காவலுமாயிருப்பது புண்ணியத்தின் அஸ்திவாரமும், சமாதானத்தைக் கற்பிக்கும் முறையும், பக்தியின் தாப்பணமுமாகும்.

கோபம் மனதைக்கவரும்போது ஞானம், விவேகம், உள்ளவர்கள் முதலாய் புத்திகெட்டுப்போகிறார்கள். ஆத்திரப்பட்டுப் பேசுகிறவன் குலைக்கிற வேட்டைநாய் போலாவான். ஆனால் அன்பான மறுமொழி கோபத்தின் வேகத்தைத் தணிப்பதுமல்லாமல் வருத்தப்படு மனதிற்கு துன்பத்திற்குப் பதிலாக இன்பத்தைக் கொடுக்கும்.

புறத்தியாருக்குக் கெடுதியாவது நஷ்டமாவது வருவதற்கிடங்கொடாமல் ஜாக்கிரதையாய் நடந்துகொள்பவன் என்றும் ஆசிர்வதிக்கப்பட்டவனாவான். ஏனெனில் அவன் கோபக்காரருடைய இரணங்களை ஆற்றுவான்.

3. இருதயத்தில் உண்டகும் ஆசாபாச எழுச்சிகளை அவைகள் தோன்றும்போதே அடக்குகிறவனெவனோ அவன் அவைகளை வெகு சுலபமாய் நியாயத்திற்குக் கட்டுப்படுத்தி



அவைகள் புண்ணிய எல்லையைக் கடந்துபோகாமல் அடக்கி நடத்த வல்லமையுள்ளவனாகிறான்.

4. ஜெபத்திலும் தியானத்திலும் தன் காலத்தைச் செலவழிக்கிறவன் தன் தோட்டத்தின் எல்லையில் ரோஜாச் செடியையும், லீலிச் செடியையும் நடுமுன் ஜாக்கிரதையுள்ள தோட்டக்காரனுக் கொப்பாவான். ஏனெனில் அவன் மறுமையில் மோட்ச சிங்காரத் தோப்பில் சம்மனசுகளோடும் சகல அர்ச்சியசிஷ்டவர்களோடும் களிகூர்ந்திருப்பான்.

ஆத்தும சரீரத் தூய்மையுடையவன் பரிசுத்தமான சம்மனசுபோலிருக்கிறான். ஆனால் அவைகளின் இச்சைக்கும், துராசைகளுக்கும் இடங்கொடுக்கிறவன் பசாசின் அடிமையாகிறான். கெட்ட நாட்டங்களை எதிர்த்துப் போராடுவது கடினமாயிருக்கலாம். ஆனால் நரக பாதாளத்தில் விழுந்து ஊழியுள்ள காலம் அவியாத கட்டையாய்க் கிடந்து வேகுவது இதிலும் எவ்வளவோ கொடிய தண்டனையாகும்!

உஷ்ணத்தை உஷ்ணம் தணிக்கும். ஆணியால் ஆணியைப்பிடுங்கலாம். அதேபிரகாரம் அற்ப சிரிப்பை ஆழ்ந்த விசனத்தால் அகற்றிவிடலாம். தேவசிநேகம் மனதில் உதிக்கும்போது உலக அநித்திய ஆசாபாசங்களெல்லாம் அடியோடு அகன்றுபோகும். இலௌகீக காரியங்களை முழுதும் வெறுக்கிறவனே உண்மையான ஞானியாவான்.

முடிதரித்த மன்னர்களுடைய மேன்மையும், அவர்களுடைய ஆடம்பர வைபவங்களும் இஞ்ஞானத்திற்கு முன்னால் ஒன்றுமில்லை. ஏனெனில் இவர்களின் கடைசி முடிவு சாவும், கல்லறையும், சாம்பலும் புழுக்களுமே. மனிதன் தன்னை எவ்வளவு மேலாக உயர்த்திக்கொண்டபோதிலும் அவன் சுத்த சூனியமே. சாவு அவனை வீழ்த்தாட்டும். மோட்சமே தனது சொந்த வீடாகக்கொண்டிருப்பவன் பாக்கியமும் சந்தோஷமுமுள்ளவனாவான். (இன்னும் வரும்.) S. S. G.

---

## The True Friend.

### மெய்யான சிநேகிதன்.

சிறுபிள்ளை ஒன்று கத்தியெடுத்து விளையாடுகிறதைக் காண்கிற அதின் தகப்பன் தன் அருமைப் பிள்ளைக்கு மோசம் வாராதபடிக்குக் கத்தியைக் கையிலிருந்து பிடுங்கி மறுபடியும் தன் பிள்ளை அதைத் தொடாதபடி எச்சரிக்கை செய்வான்,

சிறுவன் அறியாமையால் தன் செய்கையிலேயே பிடிவாதமாயிருந்தாலும் தகப்பன் மறுபடியும் அவனைக் கண்டிப்பது மிகவும் நியாயந்தானே.

வியாதியாயிருக்கிற பிள்ளைக்கு ஆபத்து நேரிடாதபடி மருந்து கொடுப்பாளல்லவோ அதைப் பெற்ற தாய். மருந்தின் கசப்பினால் பிள்ளை அதைக் குடிக்கப் பிரியமில்லாமல் அழுதபோதிலும் நயத்தினாலும் பயத்தினாலும் எப்படியோ அம்மருந்தை பிள்ளை குடிக்கும்படி செய்வாள் நல்ல தாய்.

பள்ளிக்கூடத்து மாணாக்கனொருவன் செய்த குற்றத்தினிமித்தம் உபாத்தியாயர் அவனைத் தண்டிப்பது கிரமம். அவன் தன்னைச் சீர்திருத்திக்கொள்ள மனமில்லாவிடில் உபாத்தியாயரை எதிர்த்துப் பேசி விரோதித்தாலும், அந்த உத்தம உபாத்தியாயர் மாணாக்கன் நன்மை விஷயமாய் தனக்குள்ள கடமையை முன்னிட்டு அவனை எவ்விதத்திலாகிலும் சீர்திருத்துவதில் விடாமுயற்சியாய் இருப்பது புத்திக்கும், நியாயத்திற்கும் ஒத்த விஷயந்தானல்லவோ !

ஒரு பங்கு விசாரணையில் யாதாமொரு கிறீஸ்துவன் தன் ஆத்துமத்திற்கு ஆபத்து நேரிடக்கூடிய வழியில் நடந்தால், அவனை அவ்வழியிலிருந்து திருப்பி, செவ்வையான புண்ணிய வழியில் நடக்க பங்குசுவாமியாரும் பெரியோர்களும் தகுந்த புத்திமதிகளைச் சொல்லி அவனுடைய அந்தகார இருளை நீக்கப் பிரயாசப்படுவார்களல்லவோ ! ஆனால் அந்நிர்ப்பாக்கியன் ஆங்கார கர்வத்தினாலும் சிலவிசை அறியாமையாலும் தனது குருட்டாட்டத்திலேயே பிடிவாதமுள்ளவனாகி பெரியோர்களுடைய புத்திமதிகளை அசட்டைசெய்து அவர்களை நிந்திப்பதோடுகூட, கூடுமானால் அவர்களுக்கு விரோதமாய் கலகமெழுப்பிக் கட்சி உண்டுபண்ணுவான். ஆ! இது எவ்வளவு மதியீனம். கிறீஸ்துவர்களை ஆண்டு நடத்த அதிகாரம் பெற்ற குருக்களுக்கும் பெரியோர்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பது விசுவாசிகளுக்குக் கடமையல்லவோ ! நமக்கு இது நன்மை, இது தின்மையென்பது அவர்களுக்குத் திட்டமாய்த் தெரியும். ஆகையால் அவர்கள் நோக்கமெல்லாம் நமது இரட்சணியமே தவிர வேறொன்றுமல்ல. அப்படியிருக்க, அவர்களைத் தவிர நாம் ஒரு உற்ற சிநேகிதனை, ஒரு மெய்யான சிநேகிதனை இவ்வுலகில் காணமுடியுமோ ? பரிச்சேத முடியாது. இதற்கொரு திருஷ்டாந்தம்:—பிரபு ஒருவர் மிகுந்த அறிவுள்ள தம்முடைய நாயொன்றைக் கூட்டிக்கொண்டு வேட்டைக்கு ஒரு



காட்டிலே சென்று நாள் முழுவதும் அலைந்து திரிந்து, வெயிலில் அடிபட்டு தாகத்தால் சோர்ந்து ஓர் ஓடையண்டை வந்து உட்கார்ந்து சற்று இளைப்பாறினார். பிறகு தாகத்தைத் தணிக்க ஓடையில் தண்ணீர் மொண்டு குடிக்க எத்தனிக்கையில், நாய் தன் எஜமான் கைமேல் பாய்ந்து பாத்திரத்தைத் தட்டிவிட அதிலிருந்த தண்ணீர் கீழே சிந்தி சேதமாய்ப்போயிற்று. உடனே பிரபு மறுபடியும் தண்ணீர் மொண்டு குடிக்கப்போகையில் நாயானது திரும்பவும் பாத்திரத்தைத் தட்டிவிட்டது. பிரபு யாதொன்றும் ஆலோசிக்காமல் தன் கைத்துப்பாக்கியால் நாயைச் சுட்டுக் கொன்றான். துப்பாக்கி சத்தமானவுடனே ஓடை ஓரத்தில் ஒரு பெரிய நாகப்பாம்பு தண்ணீரில் தன் விஷத்தைக் கக்குகிறதைக் கண்ட பிரபு தன் அரிய நாயின் அறிவையும் பிரமாணிக்கத்தையும் அறிந்து வியப்பும் விசனமும் அடைந்து என் நாய் என்னைத் தடுக்காமல் விட்டிருந்தால் விஷங் கலந்த தண்ணீரைக் குடித்து இந்நேரம் நான் இறந்திருப்பேனே ! எனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்து என்னைக் காப்பாற்றியது எனதருமையான நாயல்லலோ ! ஐயையோ ! என்னைக் காப்பாற்றின நாயை புத்தியில்லாமல் நானே கொலை செய்தேன் என்று துக்கப்பட்டு வீட்டுக்குத் திரும்பிப் போனான். இந்தப் பிரபுவைப்போலவே தங்கள் உபகாரிகளுக்கு நன்றியறியாமல் இருக்கிறதோடுகூட அவர்களை விரோதித்துத் தூஷிக்கிறவர்கள் அநேகருண்டு. கூடுமானால் அவ்வுபகாரிகளுக்கு உயிர்ச் சேதம் வருவிக்கிறவர்களும் சிலருண்டென்று சந்தேகமின்றிச் சொல்லலாம். அவ்விதமே ஜெகரட்சகராகிய சேசுநாதர், கணக்கில்லாத் தம்முடைய உபகாரங்களைப் பெற்றவர்கள் கையாலேயே சிலுவையில் அறையப்பட்டுக் கொலையுண்டார்.

Olim.

---

## Friendly Talk.

### சினேக வாச்சல்யம்.

முதல் நாள்.

குரு. செசிலி ! இந்த ஊரில் மாதாக் கோவில் உண்டா?

செசிலி. ஆமாஞ்சாமி, பசங்கோ படிக்கிற ஊட்டுக்குப் பக்கத்திலே யிருக்கிறது.

கு. நீ எப்போதாவது கோவிலுக்குப் போகிறதுண்டா?

செ. ஆமாஞ்சாமீ, ரொம்ப வேலையில்லாதிருந்தால் தினமும் போவேஞ்சாமி.

கு. கோவிலுக்குப் போய் என்னபண்ணுவாய் செசிலி?

செ. என்ன சாமி! இப்படிக் கேக்கிறய்ங்கோ. கோவிலுக்குப் போய் சாமியைக் கும்பிடராது, சாமியை வேண்டிக்கொள்றது. இதுக்குத்தான்சாமி கோவிலுக்குப்போரது.

கு. கோவிலுக்குப் போய் சாமியை என்ன கேட்பாய்?

செ. எனத்தைக் கொடுப்பார் சாமி? அதென்னமோ எனக்கொண்ணுந் தெரியாது.

கு. உன் அம்மா நோவாய்ப் படுத்திருந்தால் ஒன்றுங் கேட்கமாட்டாயா?

செ. ஆமா, அப்போ சிக்கிறஞ் சாமிகிட்ட ஓடி, எங்கம்மாளுக்கு நல்லாருஒணும் சாமி, நோகு போகுணுஞ்சாமி யிண்ணு அழுவேன்.

கு. மழை பெய்து பள்ளத்தில் வெள்ளம் வந்து காடுமேடெல்லாம் நிரவிக்கொண்டு போனல் சாமியை எப்படிக் கும்பிடுவாய்?

செ. சுவாமி ஆண்டவனே! எங்க தோட்டத்திலே ஆரியம், காட்டிலே கம்பு, பட்டியிலே ஆடு, கொட்டாயிலே கவலையேத்து மாடு, உழவு மாடு, ஊட்டுக் கண்ணுக்குட்டி, இதெல்லாம் தண்ணியில் போகாமலிருக்குணுஞ் சாமி. காப்பாத்தாண்டவனே யெண்ணு சொல்லி அழுவேன்.

கு. நல்லது செசிலி, இப்போது சோத்துநேரமாகவில்லையா?

செ. இல்லைங்கோ சாமி. சோறு இப்பத்தாம் புளுங்குது. சோறு கொண்டுபோக அந்த நிழல் இந்தக் கல்லுக்கு வரணுஞ் சாமி.

கு. நீ சோறு எடுத்துக்கொண்டு பள்ளத்தில் இறங்கையில் திடீரொன்று தண்ணீர் வந்துவிட்டால் என்ன செய்வாய் செசிலி?

செ. சாமி ஆண்டவனே! என்னைக் காப்பாத்துங்கோ, என்னைத் தண்ணி கொண்டுபோகுதேயிண்ணு கத்துவேஞ் சாமி.

கு. கொட்டாயிலே தீப்பிடித்தெரிந்தால் என்ன செய்வாய்?

செ. கொட்டாயி வேகாமல் நெருப்பவிஞ்சுபோகவேணுமாண்டவனேயிண்ணு அழுவேன்.



கு. வயிற்றுவலி வந்துவிட்டால் என்ன செய்வாய் நீ புள்ளந்தாண்டும்போது?

செ. ஐயோ பொறுக்கமுடியவில்லையே யப்பா சாமீ, என் வகுத்துவலி நீங்கவேணுமிண்ணு சாமியைக் கெஞ்சுவேன்.

கு. ஏன் ஒவ்வொன்றுக்கும் சாமியைக் கெஞ்சவேணும் செசிலி?

செ. சுவாமி மனசுவச்சால் எல்லாந் தீந்துபோகுமிண்ணு ஒருநா எங்கப்பன் சொல்லுச்சு சாமி.

கு. அப்போ சுவாமிக்கு ரொம்ப பலம் சாமர்த்தியம் வல்லமை யிருக்கிறாப்போலிருக்கிறதா?

செ. மெய்தான் சாமிக்குக் கொள்ளைப்பலனும் சாமர்த்தியமும் இருக்குதிண்ணு எல்லாஞ் சொல்லராங்கோ சாமி.

கு. சாமி எல்லாவிடத்திலும், உலகமெல்லாம் நிறைந்திருக்கிறாரா செசிலி?

செ. அண்ணைக்கொருநாள் கண்ணாடிச் சாமி சவரிபாளையத்தில் சேனைப்புள்ளைகளைப் பார்த்து சாமி எங்குமிருக்குது. எங்கு நெறஞ்சிருக்குது. சொல்லுங்கோ, சொல்லுங்கோ இண்ணார் சாமி.

கு. சாமி எல்லாம் உலகமெல்லாம் பார்க்கிறாரா?

செ. ஏஞ்சாமி சாமிக்குக் கண்ணு நோவு வருமா? அவருக்கு ஒண்ணும் வராது. எல்லாத்தையும் நல்லாப் பாப்பார். எங்குமிருக்கிற சாமி கண்ணைப் பொத்திக்கிட்டா இருப்பார்?

கு. பள்ளிக்கூடத்துக்கு வராமல் தினமும் ஒழிந்துகொள்ளுகிறானே சவரிமுத்து; அவனைக கண்டுபிடித்துப் போடுவாரா சாமி?

செ. சாமி மூலை மொடக்கெல்லாமிருக்கிது. அதுக்கு மறைஞ்ச எடமே கெடையாது. எங்கும் பாப்பாரா? அப்பா அவருகிட்ட ஒழியாது வேறே சட்டமா எண்ணு அண்ணைக்குக் குண்டிரிச்சாமியார் சொல்லுச்சே. உனக்கு நினைப்பில்லையாக்கா.

கு. சாமிக்கு இருட்டிலே கண்ணுத் தெரியுமா?

செ. என்ன சாமீ. பூனைக் கண்ணைப்பார்க்க சாமி கண் மோசமா? இராத்திரியில் பொடப்பெரிடெண்ணு பாக்கிற

பூனைக்கு உசுரு கொடுத்த சாமிக்கு இருட்டே இல்லையின்னு வாத்தியார் பசங்களுக்கு சொன்னாங்கோ சாமீ.

கு. நீ கெட்டிக்காரி செசிலி. எல்லாஞ் சொல்லராயா! நல்லபிள்ளை. இந்தா ஒரு சுரூபம். நல்லா சாமியைக் கும்புடு. பின்னே போய் சோறு கொண்டுபோ.

(இன்னும் வரும்.) S. M.

---

## Honour given to an astrologer in Hell.

### நரகத்தில் சோசியரின் மகிமை.

சில பெண்களுடைய சரீரத்திலே நின்று பல பசாசுகளைத் துரத்துகிறதற்காக சிரின் என்னும் ஓர் குருவானவர் செபதபஞ்செய்து திருச்சபை ஒழுங்குப்படி அப்பெண்களை மந்திரித்து வரும் நாளில், ஒருநாள் சிலதுகளைத் தவிர மற்றுள்ள பசாசுகள் இல்லாதிருக்கிறதைக் கண்டு, உங்கள் தோழர்கள் எங்கே என்று இருந்த பசாசுகளைக் கேட்டதற்கு, அதுகள்: பெரிய சோசியர் புதிதாய் இறந்துபோனபடியால் நரகத்தில் பெரிய திருநாளைக் கொண்டாடுகிறார்கள், அதற்குப் போயிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சிலநாள் பொறுத்து வெளியே போன பசாசுகள் திரும்பி வந்தார்கள். அப்போது குருவானவர் அவர்களைப் பார்த்து: நரகத்தில் என்ன சங்கதி? உங்கள் திருநாள் முடிவாயிற்றா என்று கேட்க, அதுகள்: நல்ல சேதிதான், எங்கள் சோசியருக்கு மகா பெரிய ஆடம்பரத்தைச் செய்தோம். லூசிப்பேர் சிம்மாசனத்துக்குக் கிட்ட நரக அடியில் அவரை அழைத்துப்போய்விட்டோம். ஆனால் அந்தத் தேசந் தனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவில்லையென்றும் உஷ்ணம் ஜாஸ்தி என்றும் இடைவிடாமல் அழுகிறார். அவர் படுகிற அவநம்பிக்கை எம்மாத்திரமென்று சொல்லி முடியாது. சோசிய சாஸ்திரத்தைத் தனக்குப் படிப்பித்தவரை இடைவிடாமல் சபித்துவருகிறார், என்று சொன்னார்கள்; இதினால் சோசியருக்கும் சோசியம் கேட்கும் கிறீஸ்துவர்களுக்கும் நரகத்தில் கிடைக்கும் மகிமையையும், மகிமைக்கேற்ற சம்பளத்தையும் எல்லோரும் எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

---



## Charity.

### தருமம்.

### Charity begets wealth.—(Continued).

### தருமம் ஐசுவரியத்தைத் தரும்.—(முன் தொடர்ச்சி).

பரதேசி. தனவந்தரே! தருமத்தை அப்போஸ்தலர்கள் ஒரு விதைக்கு ஒப்பிடுகிறார்கள்.

தனவந்தர்: ஏன் அவர்கள் தருமத்தை விசேஷ விதமாக ஓர் விதைக்கு ஒப்பிடவேண்டும்?

பரதேசி: தான தருமத்தினால் வரும் பலனின் விருத்தியை எவ்வளவென்று நாம் கற்றுக்கொண்டு அதனை ஆசையோடு நாம் அநுசரித்து வரும்படியாகத்தான், இன்னும் அர்ச். எரோணிமுஸ், "தானதருமம் அற்புதமான ஓர் பயிர்த்தொழிலேயாகும். அதன் விதைகளுக்குப் பதிலாக அன்னம் விதைக்கப்பட அதிலிருந்து நாம் என்றும் கேள்விப்படாத சம்பூரண வெள்ளாண்மை உற்பத்தியாகி வருகிறது" என்று புகழ்ந்து பேசுகிறார். இன்னும் டஸ்கனி இராச்சியப் பிரபுவான கோசிமியோ யென்பவர் சொல்லுவதைக் கேளுங்கள்: "நான் சர்வேசுரனோடு வர்த்தகஞ் செய்யத் தொடங்கின நாள் முதல் என் கணக்குகளைப் பரிசோதித்துப் பார்க்கும்போது நான் ஏழைகளுக்குக் கொடுத்துவந்த ஒவ்வோர் தருமத்திற்கு நூறு மடங்கான பலன் மெய்யாகவே பெற்றுவந்தேனென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்துகொண்டேன்" என்கிறார். அர்ச். எலியேசார் தன் கடனைத் தான தருமத்தால் அதிசீக்கிரத்தில் ஒழித்தார். ஆகையால் தனவந்தரே! நீர் ஏழைகளுக்கேதேது கொடுப்பீரோ அதெல்லாம் வியர்த்தமாகாமல் உமக்குப் பிரதிபலன் தரும்படியாக சர்வேசுரனிடத்தில் பத்திரமாகச் சேர்த்துவைத்த பொக்கிஷத்திற்குச் சமானமாகும்.

தனவந்தர்: அவர் எப்படி மறுபடி அதைத் திருப்பிக் கொடுப்பார்?

பரதேசி: ஏழைகளுக்குக் கொடுத்த தருமத்தைத் தேவன் தமக்கே கொடுத்ததாக ஏற்றுக்கொண்டு ஒன்றுக்கு நூறாக பலன் தர நேர்ந்துகொண்டிருக்கிறதாகத் திருவாக்கருளியிருக்கிறார். ஆதலால் அர்ச். அகுஸ்தீன், "தான தருமம் செய்பவர்கள் தாங்கள் கொடுப்பதைவிட அதிகம் பெற்றுக்கொள்ளுகிறார்கள்" என்று போதித்து வந்தார்.

தனவந்தர்: ஆனால் சிலர் தங்கள் ஆஸ்தியை விருத்தி செய்யத் தங்கள் பணத்தை அதிக வட்டிக்குக் கொடுக்கிறார்களே, இது ஞாயமோ?

பரதேசி: பணத்தை அநியாய வட்டிக்குக் கொடுப்பது பாவமாகும். ஆனால் தருமமோவெனில் புண்ணிய வட்டியின் முதலாகவும் நியாயமான வியாபாரமாகவுமிருக்கிறது. ஆதலால் "வாங்குகிறதைவிட கொடுக்கிறதே அதிக பாக்கியம்" என்று அப்போஸ்தலர் நடபடிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

தனவந்தர்: பரதேசியாரே! பணத்தின்மேல் அதிக ஆசைப் பற்றுதலுள்ளவனாகிய நான், ஏழைகளுக்குக் கை திறந்து கொடுப்பதால் எனது ஆஸ்தி சீக்கிரத்தில் அபிவிருத்தியடைந்து மிகவும் தனவானாகக்கூடிய மார்க்கம் ஒன்றுண்டென்று இப்போது அறிந்துகொண்டேன். ஆனால் சிற்சில சமயங்களில் நீர் எனக்கு எடுத்துக்காட்டிய அத்தாட்சிகள் நம்பத்தக்கவைகளோ அல்லவோவென்று என் மனதில் ஓர் வித சந்தேகமுண்டாகிறது; அதை நீர் நிவர்த்திக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பரதேசி: தனவந்தரே! நீர் ஒரு மனிதனைக் கடனாளியாக்கிக்கொள்ள இஷ்டப்பட்டால் ஓர் அற்பத்துண்டுக் கடுதாசி அவன் எழுதிக்கொடுத்தால் அதை நீர் நம்பிக்கையாக வாங்கிக்கொள்ளுகிறீரல்லவா? அதுபோல் எல்லாம் வல்ல சர்வேசுரனிடத்திலிருந்துங்கூட உமக்கு நம்பிக்கைச் சீட்டு அல்லது பாண்டு வேண்டுமோ? சர்வேசுரன் உமக்குக் கொடுத்திருக்கும் உறுதிமொழிச் சீட்டு வேத புஸ்தகங்களென்று உறுதியாய் நம்புவீராக. ஏழைகளுக்கு உதவிபுரிவோருக்குச் சர்வேசுரன் கொடுத்திருக்கும் உறுதிமொழிச் சீட்டைப்பற்றி அர்ச். அகுஸ்தீன் எனனும் வேத சாஸ்திரி சொல்லியதைக் கவனிப்பீராக. சுவிசேஷம் சர்வேசுரனுடைய உறுதிமொழிச் சீட்டு. "வருந்துபவர்கள் எல்லோரையும் காப்பாற்றுவோம்" என்று அவரே வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அவருடைய தபபாத வாக்கு அதற்கு அத்தாட்சியாகும். இன்னும் இதைப்பற்றி உமக்குச் சந்தேகமுண்டோ?

தனவந்தர்: இப்பொழுது என்னுடைய சந்தேகம் நிவர்த்தியானது, இன்னும் இத்தருமத்தினால் உண்டாகும் பலன் எவ்வளவென்று அறிய ஆவலுள்ளவனாயிருக்கிறேன்



பரதேசி: ஐயனே! தருமம் செய்வோர் தங்கள் ஜீவிய காலத்தில் சொல்லொண்ணாப் பலன்களை அடைவதோடுகூட தங்கள் புத்திர பௌத்திரர்பேரிலும், தாங்கள் பெற்ற ஆசீர்வாதங்களை நிலைநிறுத்தும்படி செய்துகொள்ளுகிறார்கள்.

தன: ஆ! பரதேசியாரே! இது எவ்வளவோ பாக்கியம்.

பரதேசி: ஏழைகளுக்குதவிய உபகாரி மரணமடைந்த போதிலும் அவன் குடும்பத்தின்பேரில் சர்வேசுரன் தம்முடைய உதாரகுணத்தைக் காட்டுபவராயிருக்கிறார். எப்படியெனில், "அவன் பேரால் அவன் பிள்ளைகள் நீடூழிகாலம் இப்பூலோகத்தில் நிலைத்து வாழ்வார்கள். அவன் சந்ததியும் மகிமையும் அவர்களை விட்டு விலகாதிருக்கும்" என்று சர்வேசுரன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். "அவன் ஜீவிய முழுதும் தயையோடு உபகாரம் செய்தான்; அவன் சந்ததி பாக்கியத்தில் நிலைத்திருக்கும்; அவன் பகிர்ந்து கொடுத்தான், ஏழைகளுக்குதவினான், அவன் நீதி எக்காலமும் நீடித்திருக்கும்" என்று தாவீது ராஜா பாடியிருக்கிறார். இக்காரணங்களைப்பற்றியே வேதபாரகர்கள் தாய் தகப்பன்மார்களுக்குப் புத்தி சொல்லும்போது அவர்கள் தங்கள் பிள்ளைகளை ஆஸ்திவந்தராகச்செய்ய ஆசைப்பட்டால் தாராளமாகத் தானதருமம் செய்யும்படியாகக் கற்பித்து வந்தார்கள்.

தனவந்தர்: பரதேசியாரே! தானதருமத்தால் பிள்ளைகள் எப்படி ஆஸ்திக்காரராகக் கூடுமென்பதை எனக்கு விளங்கச் சொல்லவேண்டும்.

பரதேசி: எப்படியெனில் தானதருமத்தால் சர்வேசுரனுக்குக் கடன் கொடுக்க அவர் தாம் வாங்கின கடனைத் தாராள வட்டி முதலோடு அவர்களுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் கொடுக்க நேர்ந்துகொண்டிருக்கிறார். தாய் தகப்பன்மார்களுக்குப் பிள்ளைகள் அபிவிருத்தியாகும்போது அதிக மதிகமாகத் தானதருமம் செய்யும்படியாக அர்ச். சிப்பிரியான் புத்தி சொல்லி வந்தார். இன்னும் அவர் தயை காட்டித் தினமுழுதும் தானம் கொடுப்பவனுடைய சந்ததி பாக்கியத்தில் ஸ்திரப்பட்டிருக்குமென்றும், தானதருமம் தன் பிள்ளைகளுக்கு வைத்துவிட்டுப்போகும் உன்னத ஆஸ்தியாகும். என்று புகழ்ந்து பேசியிருக்கிறார்.

(இன்னும் வரும்). உண்மை.

## PAGE FOR THE YOUNG.

## பிள்ளைகளின் பக்கம்.

### Perseverance wins the game.

### ஊக்கமது கைவிடேல்.

ஒரு சிற்றூரில் மாணிக்கம், இரத்தினம் என்ற இரண்டு மாணவர்கள் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்று வந்தார்கள். அதன்பிறகு அவ்வூருக்கு மூன்று மைல் தூரத்துக்கப்பால் இருக்கும் ஒரு நகரத்திலுள்ள பெரிய கலாசாலைக்கு இவர்கள் நாள்தோறும் கால் நடையாக நடந்து கல்வி கற்றுவர நேர்ந்தது. சில மாதங்கள் சென்ற பிறகு, மாணிக்கம் அயர்வுற்று தினந்தோறும் பள்ளிச்கூடத்துக்கு நடந்துபோய் வருவதற்கஞ்சி, படிப்பை நிறுத்திவிட எண்ணி, ஒருநாள் இரத்தினத்தைப் பார்த்து: "நண்பனே! நாள்தோறும் என்னால் அவ்வளவு தூரம் நடந்துவர முடியவில்லை. ஆகையால் நான் படிப்பை நிறுத்திவிட நினைக்கிறேன்" என்றான். அதைக்கேட்டு இரத்தினம் தாம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படிக்குங்காலத்தில், ஒரு காரியத்தில் பிரவேசித்தால் நடுவில் என்ன இடையூறு நேர்ந்தாலும் மனந் தளராமல் எடுத்த காரியத்தை ஊக்கத்துடன் செய்து முடிக்கவேண்டும் என்றும் கருத்தடங்கிய ஊக்கமது கைவிடேல், என்னும் பழமொழியை உபாத்தியாயரிடம் நன்றாய்க் கற்றுணர்ந்தானதலால், மாணிக்கத்தை நோக்கி, "மித்திரா, சிறிது சிரமத்தை உத்தேசித்து படிப்பை நிறுத்துவது சரியல்ல. இப்போது கொஞ்சம் கஷ்டப்பட்டால் பின்னால் கல்வியால் பெருஞ் சுகத்தையடையலாம், ஆகையால் நீ படிப்பை விடாதே" என்றான். அதற்கு மாணிக்கம் "வெகு நன்றாய்ச் சொன்னாய், நீ நாள்தோறும் நடக்கிறதற்கு அஞ்சுகிறதில்லை. நான் இப்படி தினந்தோறும் நடந்தால் கடைசியில் ஒன்றுக்கும் உதவாமல் வியாதியால் வீட்டிலேயே விழுந்துபோவேன். இந்தப் படிப்பினால் வரும் சம்பாத்தியம் எனக்கு வேண்டியதில்லை, நான் வேறு தொழில் செய்து ஜீவிக்க முடியும்" என்று சொல்லி அன்றுமுதல் பள்ளிக்கூடத்திற்குப் போவதை நிறுத்திவிட்டான்.



பின்னர், இரத்தினம் விடாமுயற்சியாய்க் கல்வி கற்று, உயர்ந்த பரீட்சைகளில் தேறி கடைசியில் ஒரு பட்டணத்தில் சிறந்த உத்தியோகத்திலமர்ந்து ஐசுவரியத்துடன் வாழ்ந்து வந்தான். மாணிக்கமோ கல்வி கற்காததினால் ஒரு தொழிலும் செய்ய வகையில்லாமல் சில காலத்துக்குள் வெகு வறுமையடைந்து இரத்தினமிருந்த ஊரிலேயே போய் கூலிக்கு மூட்டை தூக்கிக்கொண்டு திரிந்தான். ஒருநாள் இரத்தினத்துடைய பரிசாரகன் கடைக்குப்போய் ஒரு அரிசி மூட்டைவாங்கி அதனை கூலிக்காரனான மாணிக்கத்தின் முதுகின் மேலேற்றி அவனை வீட்டுக்கழைத்து வந்தான். மாணிக்கம் மூட்டையை வீட்டில் போட்டுவிட்டு கூலி வாங்கும்பொருட்டு காத்திருந்தான். மூட்டை தூக்கித் தூக்கி அவன் முதுகெல்லாம் தழும்பேறியிருந்தது. அப்போது கூலி கொடுக்கவந்த வீட்டெஜமானாகிய இரத்தினம் கூலிக்காரனை நோக்கவே, அவன் தன் பாலிய சிநேகிதன் மாணிக்கமென்றுணர்ந்து, பரிதாபப்பட்டு, அவனை வீட்டினுள் அழைத்துச்சென்று அவனுக்கு வேண்டிய உபசாரங்கள்செய்து அவனைப்பார்த்து, மாணிக்கம்! 'ஊக்கமது கைவிடேல்' என்னும் நீதியை மறந்ததால் வந்த தீங்கை உணர்ந்துகொண்டாயா? நீ கல்வி கற்றிருந்தால் இந்த நிலைமைக்கு வந்திருக்கமாட்டாய்" என்று சொன்னான். மாணிக்கம் அவன் தன் பாலிய நண்பனென்றறிந்து அவன் முகத்தை நோக்கி ஒன்றும் சொல்லாமல் கண்ணீர்விட்டழுதான். அதன் பிறகு இரத்தினம் தன் சிநேகிதனைக் கைசோரவிடாமல் அவனுக்கு ஒரு வேலை கொடுத்து ஆதரித்துவந்தான்.

ஆகையால் பிள்ளைகளே, நீங்கள் ஒவ்வொருவரும் 'ஊக்கமது கைவிடேல்' என்னும் நீதிமொழியைக் கவனித்து அதன்படி நடந்தால் கடைசியில் நல்ல பதவியை அடையலாம் என்பதை உணரக்கடவீர்களாக.

போதகன்.

---

### Jayaseelan.

### ஜயசீலன்.

(6-ம் அத்தியாயம்—(தொடர்ச்சி.)

இப்படியாக சிநேகிதர்களெல்லோரும் உண்டு குடித்து பல விநோதக் கதைகளைச்சொல்லி காலக்ஷேபஞ்செய்துவருங் காலையில் விருந்தாளிகளில் ஒருவன் எழுந்து "சிநேகிதர்களே, நாம் இன்று அனுபவிக்கும் இன்ப சுக சந்தோஷத்தை நமது

ஜீவியத்தில் ஒருநாளும் மறக்கத்தக்கதல்ல. ஆயினும், ஒரு காரியம் குறைவுபடுவதாகவே என் மனதுக்குத் தோன்றுகிறது. சற்று ஆனந்தமாய்ப் பாடி உல்லாசம் கொண்டாடுவது மனதிற்கு எவ்வளவோ இரம்மியத்தை அளிக்கும், இந்த என் கருத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் நண்பர்காள்" என்று சந்தோஷ முகத்துடன் வினாவினான். இவ்வார்த்தைகளைக் கேட்ட தனபாலன் ஆனந்தத்தால் பூரித்துத் தன் பிரிய சிநேகிதனின் மனதில் உதித்த நல்ல யோசனைக்காக அவனை மெச்சிப் புகழ்ந்து கொண்டாடிச் சொல்வான்: "கீர்த்திபெற்ற கவிராயர்களும் பண்டிதரும் இயற்றித்தந்த மனதைக் கவரத்தக்க காவியங்களையும், பாடல்களையும் பாடுவது இன்பத்தைத் தரத்தக்கதாயினும், நமது கூட்டத்தில் அப்பேர்க்கொத்தவைகளை விரும்பாத புண்ணியாத்துமாக்கள் இருக்கலாம். அவர்களுடைய பரிசுத்த காதுக்கு வருத்தமுண்டாகாவண்ணம் சிற்றின்ப பாடல்களைத் தவிர்த்து ஏதாவது சங்கீதம் கீர்த்தனை பாடுவது உசிதம்" என்று பரிகாசமாக ஜயசீலனைப்பற்றிச் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட அனைவரும் கை கொட்டி கெக்கலியிட்டார்கள். நற்குண நற்செய்கைகளை மறந்து, துஷ்டரும், அயோக்கியருமாகிய சிநேகிதர்களால் தூண்டப்பட்டு, தன் மனநாட்டத்தின்பிரகாரம் நடப்பதே ஞானத்தின் துவக்கமென்னுங் கொள்கையைக் கடைப்பிடித்துவந்த ஜயசீலன் இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் வெட்கி, நாணி, முகங்கோணி, மனச்சஞ்சலத்துக்கும் கோபத்துக்கும் உள்ளானான். தன் கூட்டாளிகளைவிட துஷ்டத்தனத்தில் தான் குறைந்தவனல்லவென்பதை மறுத்து அவர்களுடன் கூடி மேரை மரியாதைக் கடாத சிற்றின்ப பாடல்களை பாடவும் துவக்கிவிட்டான். தங்கள் ஆனந்தத்தை அதிகரிக்க லாகிரி வஸ்துக்களும் ஒன்றன்பின் ஒன்றாய் தாராளமாய்ப் பரிமாறப்பட்டது. இவன் இவ்வித விஷயங்களிலும், குடியிலும் தேர்ந்தவனல்ல. தன் மானத்தைக் காப்பாற்ற பாசாங்கு செய்துவந்ததின் பலனாக குடியினால் தன் புத்தி தடுமாறத் துவக்கிற்று. தான் செய்யவிருக்கும் ஈன செய்கைகளுக்கும் ஆரம்பம் இதுவே.

இவன் நன்மார்க்கத்தை விட்டு துஷ்ட சகவாசஞ்செய்யத் துவக்கினபோது இவனை நல்வழிப்படுத்த உபாத்தியாயர் அருமைநாயகம் எடுத்த பிரயாசைக்களவுண்டோ? இவன் தகப்பனார் இவனை சுகிர்த வழியில் நடத்த உண்டான கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமோ? தன்னைப் பட்ச வாஞ்சையுடன் நேசித்துவந்த தன் அருமைத் தந்தைக்குத் தன் நடக்கை எவ்



வளவு வருத்தத்தையும், ஆறாத்துயரையும் உண்டாக்குமென்று சற்றாவது எண்ணினானா? தனபாலனுடைய அயோக்கியதை துஷ்டத்தனத்துக்கும் ஜயசீலனுடைய குணத்துக்கும் எவ்வளவோ மாறுபாடாயிருந்தபோதிலும், எவ்வளவு சீக்கிரத்தில் தன்னையே மறந்தவனாய் தனபாலனை சகலத்திலும் பின்பற்றி அவன் சிநேகத்தை விட்டொழிக்க மனமில்லாமல் அவனுக்கு சரியொத்தவனானான்.

அற்ற குளத்தி லறுநீர்ப்பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
ஒட்டியுறுவா ருறவு—என்பதுபோல,

இவர்கள் இருவருடைய சிநேகமும் நாளுக்குநாள் எவ்வளவு உறுதிகொண்டதென்றால், தனபாலனுடைய எண்ணத்துக்கு மாறுபாடாகச் சொல்வதும் செய்வதும் ஜயசீலனுக்கு எவ்வளவோ துக்கத்தைக் கொடுக்கும்.

இவ்வளவு சந்தோஷ அங்களிப்புடன் காலங்கழிக்கையில் அவர்களில் ஒருவன் எழுந்து "நாம் இந்த இடத்தைவிட்டு இன்னம் உல்லாசமாய்ப் பொழுதுபோக்கக்கூடிய வேறோர் இடத்தை நாடிச்செல்வோம்: கஞ்சா அபினி விற்கும் கடைக்குப்போய் அவைகளின் ருசி எப்படியிருக்குமென்று பார்ப்போம்" என்று புறப்பட்டார்கள். ஏற்கனவே குடியால் புத்தி தடுமாறி, சிவந்த கண்களைக் கொண்டிருந்த அவர்கள், தாங்கள் காலக்ஷேபஞ் செய்துவந்த இடத்திலிருந்து படிகள் வழியாய் நடந்து தாங்கள் குறித்தவிடத்துக்குச் செல்லலானார்கள். ஜயசீலன் தான் செய்யப்போகும் அயோக்கிய கிரியைகளைப்பற்றிப் பயந்து பின்வாங்கினானே இல்லை. இவன் எவ்வளவு சீக்கிரத்தில் புது மனிதனாகிவிட்டான். கஞ்சா அபினி உபயோகப்படுத்துகிறவர்கள் எப்பேர்க்கொத்தவர்களென்றும், அவர்களுடைய சோக்கை யாரோடென்றும், யோக்கியர்கள் அவர்களைப்பற்றி என்ன நினைக்கிறார்களென்றும் வாசிப்பவர்களே சொல்லாமலே அறியலாம். இவைகளை உபயோகிக்கிறவர்கள் கூடும் இடம் சாதாரணமாய் பட்டணத்தின் தெருவீதிகளிலல்ல. மனித சஞ்சாரம் அதிகமில்லாத சந்துபொந்துகளில் இவர்கள் கூடி இந்த சபிக்கப்பட்ட இன்ப சுகத்தை அனுபவிப்பார்கள். ஜயசீலனும் இப்படிப்பட்ட இடத்திலேயே போய்ச் சேர்ந்தான்.

(தொடரும்.)

## Here and There.

### நாநா சங்கதிகள்.

Change of Name. "அர்ச். அந்தோனியார் தூதன்" இனிமேல் "சத்திய தூதன்" என்று அழைக்கப்படும். இதற்குக் காரணம் யாதெனில், பத்திராதிபர் குன்னூர் அர்ச். அந்தோனியார் கோவில் பங்கிலிருந்து கோயமுத்தூர் மேற்றிராசனக் கோவில் பங்கு சுவாமியாராக் மாற்றப்பட்டிருப்பதால் தான். ஆகவே, இம்மேற்றிராசனக் கிறீஸ்துவ சகோதரர்களுடையவும், இன்னம் இத்தூதன் மட்டில் பிரியப்படும் சகலருடையவும் பொது நன்மைக்காக அத்தூதனை அர்ச். மிக்கேல் அதிதூதரின் பாதுகாவலில் வைத்து மாதம் மாதம் பிரசுரம் பண்ணப்படும். பெயர் மாற்றப்பட்டிருக்கிறதே தவிர, பொருள் விஷயத்தில் யாதொரு மாற்றமுமில்லை.

Peace with Afghanistan. கொஞ்ச நாளாய் நமது இராஜாங்கத்தோடு சண்டை செய்துவந்த ஆப்கான் தேசத்தார் இப்போது சமாதானமாய்விட்டார்கள்.

குண்டிரி. கோயமுத்தூர் மேற்றிராசனக் கொடிவேரி பங்கைச் சேர்ந்த குண்டிரிமலை, பயங்கரமான துஷ்ட மிருகங்கள் நிறைந்த காடு. மலைச்சுரம் என்னும் மலேரியாக் காய்ச்சலுக்குத் தாய்வீடு. வேதமறியாத ஊராளி ஜாதியார் மிகுந்த நாடு. இவர்கள் ஆத்தும இரட்சணியத்தின்பேரில் பேராவல் கொண்ட சங். J. B. பெத்தீ சுவாமியாரவர்கள் இவர்கள் மத்தியில் சென்று மெத்த பாடுபட்டு, சில குடும்பங்களை நமது சத்திய மறையில் சேர்த்து, சொற்ப தொகையால் ஒரு சிறிய கோவிலொன்றை கட்டி, மீளவும் இவர்கள் ஜீவனத்துக்காக கொஞ்சம் நிலங்களைத் தேடிக்கொடுத்து தேசமெல்லாம் நாசமாக்கின ஜெர்மன் சண்டையின் நிமித்தம் சீர்மைக்குப் போனவர் திரும்பி வருகிறாரென செய்தி கேட்டு சந்தோஷிக்கிறோம். இப்போது இக்குடிகள் கொடிவேரி பங்கு விசாரணையில் சங். மார்ஷியால் சுவாமிகளின் தந்தைக்குரிய பாதுகாப்பில் இருக்கிறார்கள். இவர்கள் ஆத்தும சரீர நன்மையைக் கோரி கொடுக்கப்படும் எந்த சிறிய தருமமும் மிக்க நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

---

# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

Vol. V. October 1919. No. 10.

புத்தகம் V.] FIDES AC ROBUR. [நம்பர் 10.

MADRAS 1-OCT 1919

## CIRCULAR

### of His Lordship the Bishop of Coimbatore to the Clergy of His Diocese.

COIMBATORE,
*8th September, 1919.*

DEAR REV. FATHER,

It is universally acknowledged that every workman is worthy of his hire. Our Divine Saviour Himself has taken care to declare that the evangelical workman is no exception to the common law. (*Matt.* x. 10).

St. Paul, expounding at length this sound truth in a masterly style, bases his argument not only on the example given by J. C. and His apostles, but also on the ground of natural right and on the authority of the Mosaic Law and of the evangelical precepts. He corroborates his statement with motives of propriety and stimilitudes. Finally the Great Apostle summing up his argument concludes that "they who serve the altar should partake of the altar" and that it is the will of J. C. that "they who preach the Gospel should live by the Gospel" (*cfr.* i *Cor.* ix. 1-11). Such has been the practice in the Church from the beginning.

On one hand, the apostles, following the precepts of Jesus, give gratuitously what they have received gratuitously (*Matt.* x. 8) *viz.*, the truth, the grace and the Blood of Christ which have a transcendent, supernatural and divine value beyond all proportion or equivalence to any salary (*Act.* viii. 20); on the other hand, considering that priests are chosen among the sons of men for the spiritual service of their neighbours (*Heb.* v. 1) and that they are subject to the common needs of human kind, it follows that it is the duty of the faithful to provide suitably for their necessaries of life; hence the custom firmly established in the Church to provide for the expenses of divine worship and the obligation religiously accepted by the faithful to contribute to the sustenance of the sacrificer. In this respect, however, all idea of price, compensation or remuneration ought to be put aside. It must be considered as a gift, a subsidy offered to the priest on the occasion of a spiritual service required and received from him.

The highest form of the priestly ministry is undoubtedly the Eucharistic Sacrifice of the Mass offered for a special and personal intention.

Theology teaches us that on the Altar, as well as on Calvary, the Sacrifice is offered up for all men. However, the end and the effects of the Sacrifice of the Altar require that the redeeming grace which is derived from the Sacrifice of the Cross as from its universal source, be applied to particular persons. This explains how, in addition to the glory given to God, the benefit imparted to the Church in general and especially to the offering priest and to the faithful offering with him, the Sacrifice of the Mass has itself a virtue of its own, a special value applicable to a determined person, living or dead, for whom it is celebrated. On the Cross the Blood of Christ was shed for all, on the Altar the benefit of the Holy Blood must be applied to a determined person or persons. To such person belongs the principal fruit of the Sacrifice, so that it becomes his own Sacrifice "*Meum Sacrificium.*"—The priest is bound in justice to celebrate the Sacrifice for which he has received a stipend, however



inadequate it may be, if compared to the infinite value of the Holy Mass, as there cannot be any relation of equation between the finite and the infinite.

If any one, therefore, wishes to be entitled to the special fruit of the Sacrifice, he must make a donation both for the material expenses of the Sacrifice and the maintenance of the sacrificer. This condition is required by the nature of things.

But, in order to avoid abuses always too prompt to slip into all human things and especially in matters closely related to material concerns, and to remove all claims of covetousness as well as dangers of an exaggerated parsimony, the Church has entrusted to the Bishops the care of fixing in their respective dioceses the rates of Mass stipends, etc. In doing so the Bishops take into account both the priests' necessaries of life and the general circumstances of the faithful, and their regulations must be adapted to places and time.

If on one hand we compare the ordinary conditions of modern life to those of 30, nay 6, years ago, we must admit that they are very different. The salary of employees, the wages of workmen (coolies), trade, industry and the production of the soil have considerably increased, and the welfare of the people has generally improved. On the other hand, the necessaries of life having doubled and even tripled in price, it is evident that the actual rates of Mass stipends etc. are no more proportionate to the present wants of the priest either for his own maintenance or for the upkeep of his good works and charities.

We deem it reasonable, therefore, to prescribe in our Diocese a slight increase in the rates and to adjust them to the present circumstances without imposing upon the faithful of good will a burden beyond their means.

Therefore, Dear Rev. Father, be so kind as to communicate the contents of this letter to your parishioners and to inform them that, henceforth, the Mass stipend shall be Rs. two (2).

The new table of Church fees will be sent to you shortly under separate cover. However, if you require any modification to this table of Church fees for special reasons and for your particular parish or a portion of it, you may represent the case to me and apply for a sanction which will be granted if found necessary.

With my blessing to you and your congregation,

I am,
Dear Rev. Father,
Yours very sincerely in J. C.
(Sd.) ✠ AUGUSTIN ROY,
*Bishop of Coimbatore.*

---

சங்கைக்குரிய பிரிய குரு சுவாமிகளே :—

வேலைக்காரன் தனக்குரிய சம்பளத்திற்குப் பாத்திரவானென்பது உலகப் பிரசித்தமான விஷயம். சுவிசேஷகப் பணியாளன் இப்பொதுவிதியினின்று நீக்கப்படவில்லையென நமது தேவ இரட்சகர்தாமே திருவுளம்பற்ற மறந்தவரல்ல. (மத். X. 10.)

அர்ச். சின்னப்பர் இவ்வுண்மையை விரிவாயும் மிக்க சமர்த்தாயும் வியாக்கியானித்துப் போதிக்கையில், சேசுநாதருடையவும், அப்போஸ்தலர்களுடையவும், நடபடி அனுசாரணையை மாத்திரமன்று, மனுஷ சுபாவ சுதந்தரத்தையும், மோசேஸ் காலத்து சட்டத்தையும், சுவிசேஷக் கற்பனையையும், தமது போதகத்துக்கு அத்தாட்சியாகக் கொண்டார். மேலும் அவர், தமது கொள்கையைத் தக்க உவமான காரணங்களைக் கொண்டும் ஸ்திரப்படுத்துகின்றார். கடைசியாக, அச்சிறந்த அப்போஸ்தலர் தமது நியாயங்களையெல்லாம் ஒருங்கு கூட்டி முடிக்கையில் சொல்வதாவது—“ பலிபீடத்தையடுத்து ஊழியம்பண்ணுகிறவர்கள் பலிபீடத்தைச சேர்ந்தவைகளில் பங்கடைவார்களாக. சுவிசேஷத்தைப் போதிக்கிறவர்கள் சுவிசேஷத்தால் பிழைப்பார்களாகவென்பது ஆண்டவர் சித்தம்.” (கொ. I. IX. 1—11). இவ்வாசாரமே திருச்சபையின் ஆரம்பமுதல் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.



அப்போஸ்தலர்கள் கிறீஸ்துநாதரின் போதனையை அனுசரித்து இலவசமாய்ப் பெற்றுக்கொண்டதை இலவசமாய்க் கொடுத்தார்கள். (மத். X, 8.) ஒரு பக்கத்தில், சுபாவத்துக்கு மேலான, உன்னத, தெய்வீக சத்தியமும், தேவ இஷ்டப்பிரசாதமும், சேசுக்கிறீஸ்துநாதரின் திரு இரத்தமும், யாதொரு கிரயத்திற்கும், ஈட்டிற்கும், ஒப்புக்கும், அடங்காமல் அளவற்ற கிரயத்திற்கு பாத்திரமாயிருக்கின்றன. மற்றொரு பக்கத்திலோ, தங்கள் புறத்தியாரின் ஆத்தும நன்மைக்காக உழைக்கும் குருக்கள், மானிடமக்களுள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், இவர்கள மானிட ஜென்மத்தின் அவசரங்களுக்கு உட்பட்டிருக்கிறார்களென்பதையும், ஆலோசிப்போமானால், விசுவாசிகள், குருக்களின் ஜீவனம்சத்திற்கு வேண்டியவைகளைக் கொடுத்து, ஆதரிக்கவேண்டுமெனத் தெளிவாய் விளங்குகின்றது. இந்நிமித்தம், திருச்சபையில் தேவாராதனைக்கு வேண்டிய செலவுகளைக் கொடுப்பது உறுதியாய் நிலைபெற்ற மாமூல். இத்தோடுகூட, பலியிடுவோரின் ஜீவனத்திற்கு, விசுவாசிகள் தங்கள் தங்கள் பாகத்தைக் கொடுக்கவேண்டுமென்கிற வேதாந்த சட்டத்திற்கும் உட்பட்டிருக்கிறார்கள். ஆயினும் இவ்விஷயத்தில் திருச்சபை வியாபாரம் செய்கின்றதென்றாவது, ஈடு கொடுக்கின்றதென்றாவது அல்லது நஷ்ட பூர்த்திப் பலனளிக்கின்றதென்றாவது எண்ணலாகாது. அதற்கு விரோதமாக, குருவானவரிடமிருந்து ஞான சகாயத்தைக் கேட்டடைகிற சந்தர்ப்பத்தில், அவருக்களிக்கும் ஓர்வகைக் காணிக்கை, சகாயமென்றே கூறுதல்வேண்டும்.

தனக்காகவோ, அல்லது வேறே யாதொரு விசேஷ கருத்துக்காகவோ, குருவானவர் ஒப்புக்கொடுக்கும் பூசைப்பலியாகிய திவ்யநற்கருணைப்பலியே, குருத்துவத்துக்கடுத்த சகல கருமங்களிலும் மிக்க மேலானதென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

கல்வாரி மலைமேல், எவ்வாறு சமஸ்த மனிதர்களுக்காக பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதோ, அவ்வாறே பீடத்திலும் யாவருக்காகவும் பூசை ஒப்புக்கொடுக்கப்படுகின்றதென தேவசாஸ்திரம் நமக்குப் பயிற்றுகின்றது. ஆயினும் தமது இஷ்டப்பிரசாத சமஸ்த ஊற்றாகிய, சிலுவைப்பலியினின்று வருஷிக்கும் இரட்சண்ய வரப்பிரசாதத்தை, ஓர் விசேஷ, அல்லது குறித்த ஆளுக்காக ஒப்புக்கொடுத்தால்மாத்திரம், பூசைப்பலியின் கருத்தும், பலனும், சித்திபெறும். இதி

நிமித்தமே, சர்வேசுரனுக்கு வரும் மகிமை, பொதுவாய் திருச்சபைக்களிக்கப்படும் நன்மை, விசேஷமாய் பலி நிறைவேற்றுங் குருவும், பலி ஒப்புக்கொடுக்கும் விசுவாசிகளும், அடையும் பலன், இவை யாவும் நீங்கலாக, பூசைப்பலி தன்னில் தானே தனக்குரிய ஓர் விசேஷ பலனை உடையதாயிருக்கின்றதென்பது நன்கு விளங்குகின்றது. இவ்விசேஷ பலன், மரித்தவர்களுக்கென்றாலும் சரி, உயிரோடிருப்பவர்களுக்கென்றாலும் சரி, பூசை நிறைவேறும்பொழுது அக்குறித்த ஆளுக்குப் பிரயோகிக்கக் கூடியதாயிருக்கின்றது. சிலுவையில் யாவருக்குமே கிறீஸ்துநாதரின் இரத்தம் சிந்தப்பட்டது. பீடத்திலோ அத்திரு இரத்தத்தின் பலன் கிறீஸ்துவர்களுக்கே கையாளப்படவேண்டியதாயிருக்கின்றது. அவ்வாறு அது யாருக்காக ஒப்புக்கொடுக்கப்படுகிறதோ அவர்களுக்கே, ஒப்புக்கொடுக்கப்பட்டவர்க்கே அப்பலியின் பிரதான பலன் சொந்தமாகின்றது. ஆகவே, அவர் அப்பலி பூசையைத் தம் சொந்த உடமையென்று சொல்லக்கூடுமானவராகின்றார்.

அந்தத்திற்கும் அநந்தத்திற்கும் யாதொரு சம்மந்தமும் இருக்கமுடியாது. பூசைக்காகப்பெற்ற தர்மம் அளவில்லாப் பூசைப்பலனோடு ஒப்பனையிட்டுப் பார்த்தால் எவ்வளவுதான் குறைவாய் இருந்தபோதிலும், எந்தக் கருத்துக்காகப் பணத்தைப் பெற்றுக்கொண்டாரோ அந்தக் கருத்துககாகப் பூசை நிறைவேற்ற குருவானவர் நீதியின் பிரகாரம் கட்டுப்பட்டிருக்கின்றார். ஆகையால், யாராவது பூசையின் பிரதான பலனுக்கு உரிமைக்காரராக விரும்புவார்களேயானால், பூசைப் பண்டங்களுக்கும், பலியிடுவோரின் ஜீவனாம்சத்திற்கும், வேண்டிய செலவுகளுக்காக ஓர் காணிக்கை செலுத்தவேண்டும். இவ்விஷயத்தினியல்புக்கு இந்நிபந்தனை அத்தியாவசியமாயிருக்கின்றது.

இலௌகீக அலுவல்களிலும், அழிந்துபோகிற அற்பப் பொருள்கள்மட்டிலும் மனிதர்க்கிருக்கும் பாசத்தினால் அநேக துர்ப்பிரயோகங்கள் நேரிடுகிறது வெகு சகஜம். இவ்வகைத் துர்ப்பிரயோகத்தால் பொருளாசையும், மிதமிஞ்சின உலோபித்தனமும் விளையக்கூடும். இவ்வாபத்துகளை நீக்கும் பொருட்டு திருச்சபையானது பூசைக் காணிக்கைப் பணத்தை ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் திட்டப்படுத்தும் அதிகாரத்தை மேற்றிராணியார்கள் வசம ஒப்பித்திருக்கின்றது. மேற்றிராணியாரோவெனில் இச்சட்டதிட்டங்களில் குருக்களின்



மரியாதையான ஜீவனப் பிழைப்பிற்குவேண்டிய அவசரங்களையும், விசுவாசிகளின் நிலைமையையும் ஆராய்ந்து, தமது ஒழுங்குகளை இடத்திற்கும், காலத்திற்கும் தக்காப்போல் இணக்கப்படுத்திக்கொடுக்கின்றார்.

ஒருபக்கத்தில் ஜனங்களுடைய தற்கால ஜீவிய நிலைமையையும், முப்பது அல்லது இன்னும் ஆறு வருஷத்திற்கு முன் முதலாயிருந்த ஜீவிய நிலைமையையும் ஒத்துப்பார்க்குமிடத்து, இவைகளுக்குள் மிக்க பேதா பேதங்கள் உண்டென யாவரும் ஏற்றுக்கொள்ளவேண்டியது. அதெங்ஙனமெனில் உத்தியோகஸ்தரின் சம்பளமும், வேலைக்காரர் கூலியும், வியாபாரமும், கைத்தொழிலும், நிலபலமும் அபரிமிதமாய்ப் பெருகி அதன் காரணத்தால் ஜனங்களின் க்ஷேமம் பொதுவாய் விருத்தியாகிக்கொண்டே வருகின்றது. இன்னொரு பக்கத்தில் உயிர்ப்பிழைப்புக்கு அவசரமாகிய சாதனங்களின் விலை இருமடங்காகவும், மும்மடங்காகவும், ஏறிவிட்டபடியால் இப்பொழுது கொடுக்கப்பட்டுவரும் பூசைக் காணிக்கைப் பணம் குருக்களுடைய தற்கால சவரக்ஷணைக்கும், அவர்களுடைய பரோபகாரத் தருமக் கிரியைகளுக்கும் போதுமானதாயில்லை என்பது யாவருக்கும் தெளிவாய் விளங்கும்.

ஆனபடியால், தற்கால நிலைமைக்கு ஒத்தவண்ணம் பூசைக் காணிக்கைப் பணத்தைச் சற்று அதிகப்படுத்துவது நியாயமென எண்ணுவதுடன், இவ்வகையேற்றம் நல்ல மனதுள்ள விசுவாசிகளின் சக்திக்கு மேற்பட்டதல்லவென நம்புகின்றோம்.

ஆகையால், சங்கைக்குரிய பிரிய சுவாமிகளே, இந்நிருபத்தின் விஷயத்தை உங்கள் பங்குக் கிறீஸ்துவர்களுக்குத் தயவு செய்து தெரிவிக்கவும்; இனிமேற்பட, பூசைக் காணிக்கைப் பணம் இரண்டு ரூபாயென அறிவிக்கவும் தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தேவாலய வருமான விகிதத்தின் புதிய அட்டவணை கூடிய சீக்கிரம் பிரத்தியேகமாக அனுப்பப்படும். மேற்படி ஜாப்தாவில் வேறே ஏற்பாடுகள் செய்ய, விசேஷ முகாந்தரங்கள் உங்கள் பங்கிலாவது, அல்லது பங்கின் ஓர் பாகத்திலாவது இருக்குமாயின், நமக்கு விண்ணப்பம் செய்து புதிய

அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும். அவசரமெனத் தோன்றினால் அவ்வனுமதியளிக்கப்படும்.

உங்களுக்கும், உங்கள் பங்குக் கிறீஸ்துவர்களுக்கும் நமது ஆசீர்வாதம் அளிக்கிறோம்.

இப்படிக்கு,

சங்கைக்குரிய பிரிய சுவாமிகளே,
சேசுக்கிறீஸ்துநாதரில்
உங்கள் மிகவும் உண்மையுள்ள,
✠ அகுஸ்தீன் ரூவா,
கோயமுத்தூர் மேற்றிராணியார்.

---

## A Letter from an Indian Priest to His Lordship the Bishop of Coimbatore.

---

MY LORD,

I humbly request a favour which, undoubtedly, is in your Lordship's power to grant.

All over the world subscriptions are being made and donations given on behalf of the people of the devastated parts of France, to help them to rebuild their churches and houses, and to buy the necessary implements for their work.

We Indians of the four Dioceses who are indebted to France more than anybody else are failing in our duty to come forward to give a helping hand to our benefactors now in distress. Our Missionaries, churches, seminaries, schools, hospitals, convents and orphanages are all living monuments of the generosity of the noble French nation.



I know that our kind-hearted benefactors, clergy and laity, do not expect any help from us even in their distress. But are we thereby justified to see them in dire necessity without contributing our mite towards their relief? Are we to pass by like the Pharisee and the Levite wanting in charity towards our suffering brethren in France? Oh, no—we are poor; but should not those who suffer less, help those who suffer more? France is dearer to us than Lithuania! Such being the case, I humbly request your Lordship to send a circular asking all the Parish Priests of the Diocese to start a subscription for this purpose. Nobody can reasonably object to it. Now, my Lord, I beg to be excused if I am injudicious in my request, which I humbly submit to your wise consideration.

Your ever obedient child in Xt.,

(Sd.) (*An Indian Priest.*)

---

His Lordship the Bishop of Coimbatore was deeply moved by the above touching request. He leaves it to the discretion of the Parish Priests of His diocese to comply with it in the best way possible in their respective parishes.

Collections may be sent to His Lordship who will forward them to France. The amount contributed by every parish will be published in this paper.

[*The Editor*]

---

## மகா வந். கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்களுக்கு சுதேச குருவானவர் ஒருவரிடமிருந்து வந்த கடிதம்.

வந்திக்கத்தக்க கனம் பொருந்திய ஆண்டவரே!

தாங்கள் மனமுவந்து கொடுக்கக்கூடிய ஒரு காரியத்தைத் தயவு செய்வீர்களென்று மிகவும் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பிரான்சு தேசத்தில் கடந்த யுத்தத்தினால் பாழாக்கப் பட்ட நாடுகளிலுள்ள, கோவில்களையும், நகரங்களையும செப் பனிடுவதற்கும், அங்குள்ளவர்களுடைய தொழில்களுக்குத் தேவையான ஆயுதங்களைச் சேகரிப்பதற்கும் உலக முழுவ தும் உற்சாகத்துடன் தண்டல்கள் செய்யப்பட்டு வருகின்றன.

மற்றவர்களைவிட, பிரான்சு தேசத்திற்கு உதவிபுரியக் கடமைப்பட்டிருக்கும் கோயமுத்தூர், புதுச்சேரி, மைசூர், கும்பகோணம் ஆகிய இந்நான்கு மேற்றிராசனங்களைச் சேர் ந்த இந்திய கிறீஸ்துவர்களாகிய நாங்கள், தற்காலம் துன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கும் எங்கள் உபகாரிகளுக்கு உதவி புரிய நினையாமல் மறந்துவிடுகிறோம்.

தற்போது, இம்மேற்றிராசனங்களிலிருக்கிற குருமாரும், கோவில்களும், குருமடங்களும், கன்னியாஸ்திரிமடங்களும், கைத்தொழிற்சாலைகளும், பள்ளிக்கூடங்களும், ஆஸ்பத்திரி களும், அநாதப்பிள்ளைகள் மடங்களும், பிரான்சு தேசத் தாருடைய உதாரகுணத்தின் ஜீவனுள்ள அடையாளக்குறிப் புகளாயிருக்கின்றன.

இக்காலத்தில், தாங்கள் அநுபவித்து வருகிற சொல் லொண்ணு துன்ப வருத்தங்களிலுங்கூட தயாள குணமுள்ள எங்கள் உபகாரிகள், எங்களிடமிருந்து, யாதொரு பிரதி உத வியையும் எதிர்நோக்குகிறதில்லையென்பது, எங்களுக்குப் பரிஷ்காரமாய்த் தெரிந்த விஷயமே! ஆயினும் இக்கஷ்ட காலத்தில் அவர்களுக்கு நேர்ந்துள்ள துன்பத்தை ஒருவாறு நீக்க எங்களாலான ஒத்தாசை செய்யாமலிருப்பது நியாய மாகுமா? பிறதேசமற்ற பரிசேயனையும் லேவியனையும்போல, இத்துன்பகாலத்தில் கஷ்டப்படும் பிரான்சு தேசத்தார்மீது கிஞ்சித்தேனும் இரக்கமில்லாமல் சும்மா இருக்கலாமா?



ஆ! அப்படியன்று. நாங்கள் ஏழைகளாயிருந்தபோதிலும்; கொஞ்சம் கஷ்டப்படுகிறவர்கள், தங்களைவிட அதிக வறுமைப் படுகிறவர்களுக்கு உதவிபுரிவது நியாயமல்லவா?

லித்துவானியா தேசத்தைவிட, பிரான்சு தேசமானது எங்களுக்கு மிகவும் பிரியமானதுபற்றி, நமது மேற்றிராசனத் தைச் சேர்ந்த எல்லாப் பங்கு சுவாமிமார்களுக்கும் இது காரி யத்துக்காக ஓர் தண்டல் செய்யும்படிக்கு, ஏற்பாடுகள் செய்ய ஓர் விளம்பரம் அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

இதை ஒருவரும் மறுக்கத் துணியமாட்டார்கள்.

கடைசியாக ஆண்டவரே! இதுகாரியத்தில் யாதொரு விக்கினமிருந்தால் மன்னித்தருளும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

தங்களுக்கு என்றுங் கீழ்ப்படிதலுள்ள,

(ஒப்பம்.) **சுதேச குருவானவர்.**

---

மகா வந். கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள் ஷை கடி தத்திற்கு மிகுதியும் சந்தோஷப்பட்டு உத்தரவு அளித்திருக் கிறார்.

தமது மேற்றிராசனத்திலிருக்கிற பங்கு சுவாமிமார்கள், தங்கள் புத்திக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படிச் செய் யும்படி தாராளமாய் உத்தரவு கொடுத்திருக்கிறார். அப்படி வசூலாகும் தொகைகளை மேற்றிராணியாரவர்களுக்கே நேரில் அனுப்பிவைக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஒவ்வொரு பங்கிலும் வசூலாகும் தொகையை இப்பத் திரிகையில் விளம்பரம் செய்யப்படும். (பத்திராதிபர்.)

---

## The Little Garden of Roses.
## சிறு ரோஜாத்தோட்டம்.
### மலர் 5.

“ Woe to you that laugh, for, you shall weep ” (Luke VI 25.)

“ நகைக்கிறவர்களே உங்களுக்கு ஐயோ கேடாம். ஏனெனில் நீங்கள் கண்ணீர்விட்டழுவீர்கள் ” (லூக். 6-ம் அதி. 25-ம் வச.)

1. புண்ணியமானது பாவத்துடன் சேர்ந்திருக்க முடியா ததுபோல தேவபக்தியானது தேர் திருவிழாக்களை அநு

சரிப்பதனாலுண்டாகும் சந்தோஷத்தினால் வருவதல்ல. ஆனால் கஸ்தி துன்பங்களிலிருந்தும் ஏகாந்தத்திலிருந்தும் இதை அடையலாம்.

புண்ணிய தேர்ச்சியை உடனேக்குடனே அடையமுடியாது. ஆனால் கொஞ்சங் கொஞ்சமாய் உறுதியான மனதோடு துன்பதுரிதங்களை மேற்கொள்வதனால் நாள்தோறும் புண்ணியத்தில் விருத்தியடையலாம். மேலும் சரீர ஒறுத்தலினாலும், கடின தபசினாலும், எச்சரிக்கையினாலும், தியானம் பண்ணுவதினாலும், ஞானவாசிப்பினாலும், சரீர பிரயாசையான வேலைகளை மட்டுத்திட்டத்தோடு செய்வதினாலும், மட்டுத்திட்டமில்லாத சம்பாஷணைகளை விலக்குவதினாலும், புறக்கவலையை ஒழித்துத் தன்னுள் அடங்கியிருப்பதினாலும் புண்ணியத்தில் நாளுக்குநாள் விருத்தியடையக்கூடும்.

மெய்யான தாழ்ச்சியில் நிலைத்திருந்து, உத்தம சிரவணமுள்ளவனாய் ஜீவித்து, பிறசிநேகமும் பொறுமையுமுள்ளவனாய் நடக்கிறவன், ஞான ஜீவியத்தில் நாள்தோறும் விருத்தியடைந்து சர்வேசுரனிடத்தில் ஏராளமாய் அநுக்கிரகத்தைப் பெற்றுக்கொள்வான்.

2. சர்வேசுரனிடத்திலிருந்து வராத சந்தோஷமெல்லாம் சீக்கிரத்தில் ஆத்துமத்தைக் கறைப்படுத்தி அதற்கு நோயையுண்டாக்கிப் புகைபோல் மறைந்துபோகும்.

பிறருக்கு நற்படிப்பினையைக் கொடுக்கும் வார்த்தைகள் அதனைக் கேட்கிறவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும். கடினமான வார்த்தைகள் நமது சிநேகிதருக்குத் துன்பத்தைத் தரும். ஆனால் வியர்த்தமான வார்த்தைகளோ நமது ஜீவிய நாட்களில் நமக்குண்டாகக்கூடிய பலாபலன்களைக் கெடுக்க ஏதுவாகும்.

நன்மை செய்வதில் எப்போதும் விழிப்புள்ளவனாகவும், சுறுசுறுப்புள்ளவனாயுமிரு. உனக்குப் புறத்தியார் செய்யும் தீங்கை நல்ல மனதோடு பொறுத்துக்கொள். இப்படிச் செய்தால் உன் ஜீவிய நாட்களில் நீ நல்ல சந்தோஷமுள்ளவனாயிருப்பாய். ஏனெனில், இவ்விரண்டு காரியங்களை அநுசரிப்பதில் நீ சர்வேசுரனை என்றும் இடைவிடாமல் மகிமைப்படுத்துவாய்.



3. துக்கமான அந்தஸ்திலும் சந்தோஷமான ஸ்திதியிலுமில்லாத மனிதனை இவ்வுலகில் காண்பதரிது. இவைகளையெல்லாம் தனது நன்மைக்காகவேயென்றெண்ணி, கஸ்தி துன்பங்களிலிருந்து இன்பத்தை அடைகிறவனெவனோ அவனே மெய்யான பாக்கியவான்.

சர்வேசுரனை முழுமனதோடு நேசிக்கிறவன் அவரிடமிருந்து இன்பத்தையும் துன்பத்தையும் நல்ல மனதோடும் நன்றியறிதலோடும் ஏற்றுக்கொள்ளுகிறான். தன்னையும் மற்ற மனிதர்களையும் நம்பாமல் சர்வேசுரன்பேரில் மாத்திரம் நம்பிக்கை வைக்கிறவனே புண்ணிய சாங்கோபாங்க நெறியில் உறுதியாய் நிற்கிறவனென்று சொல்லப்படுவான்.

தன்னைத்தானே நன்றாயறிந்து நிந்திப்பதே மிக்க மேலானதும், பிரயோஜனமுள்ளதுமான படிப்பினையாம். சுத்த இருதயம் சர்வேசுரன்பேரில் பலமான நம்பிக்கையைத் தரும். தன்னை ஒன்றுமில்லாத வஸ்துவாக எண்ணிப் புறத்தியாரைக் கனமாயும் மேன்மையாகவும் மதிப்பதே உயர்ந்த ஞானமும், உன்னத சாங்கோபாங்கமுமாமே. உனக்கு வருகிற துன்ப உபத்திரவங்களையெல்லாம் சர்வேசுரனுடைய திருச் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்திச் சிலுவையில் அறையுண்ட சேசுநாதரிடத்தில் பலத்தையும் தைரியத்தையும் கேட்பதுமல்லாமல், சர்வேசுரனைப்பற்றித் துன்பங்களை மென்மேலும் ஆசிக்கும் வரத்தையும் கேட்பாயாக. உலகத்திலிருக்கிறவர்களுக்கெல்லாம் சிலுவையுண்டு. ஆனால் அநேகர் அதை நீக்கிப்போட்டு ஓடப் பார்க்கிறார்கள். சிலர் மாத்திரம் அதை ஆவலாய்த் தேடிப் போகிறார்கள். சிலுவையை நீக்கிப்போட்டு ஓடுகிறதே சகல சிலுவைகளிலும் பெரும்பாரச் சிலுவையாம். இந்தச் சிலுவை பாவிகளுடைய சிலுவை. இப்படிச் சிலுவையை நீக்கிப்போட்டு ஓடுவது, நீ சாங்கோபாங்க வழியில் நடக்காதபடி உனது காலை இடறிவிடுகிற காடுமுரடுகளாகும். நீ சிலுவையைத் தேடிப்போகிறாயோ, அல்லது சிலுவையினின்று நீங்கி ஓடுகிறாயோ, யோசித்துப்பார். ஒரு காரியம் உன் புத்தியில் ஸ்திரமாயிருக்கவேண்டியது. நீ எவ்வளவுதான் உபாயஞ்செய்து சிலுவைக்குப் பயந்து ஓடினாலும் எப்போதும் அது உனக்கெதிரே வரும். சிலவேளை நீக்கிவிட்டோடுகிற சிலுவையைப் பார்க்கிலும் அதிக பாரமான சிலுவை உன் எதிரே வரும். கட்டாயமாய் இதைச் சுமந்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் உன்னுடைய ஜீவிய நாட்களில் மாத்திரமல்ல, ஊழியுள்ளகாலம் நீ கண்ணீர்விட்டழ நேரிடும்.

ஆகையால், சுவாமி உனக்கனுப்புகிற சிலுவைகளை நீ நல்ல மனதோடு ஏற்றுக்கொள்வாயானால், சர்வேசுரன் உன்னைத் தம்முடைய வரப்பிரசாதங்களினால் நிரப்பிப் பரலோகத்தில் நியமித்திருக்கும் பேரின்ப மகிமைக் கிரீடத்துக்குப் உன்னைப் பாத்திரவானாகச் செய்வார்.

(இன்னும் வரும்) S.S.G.

# A Royal Porter.

## இராஜா சுமையாளானான்.

முன் ஒரு காலத்தில் போலன்ட் என்னும் இராச்சியத்தில் ஒரு இராஜா தனது இராஜ கடமை தனக்கு அதிக பாரமுள்ளது என்று எண்ணி சலிப்படைந்து தன் சிம்மாசனத்தை இரகசியமாய் விட்டு ஓடிப்போனார். அவர் ஒரு வேலைக்காரனுடைய ஏழை உடுப்பைத் தரித்துக்கொண்டு கடைவீதியில் இங்கும் அங்கும் கனமான சுமைகளைச் சுமந்துகொண்டு சொற்பக் கூலி சம்பாதித்து ஜீவனம் செய்துவந்தார். அவரைத் தேடின அரண்மனையார் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டு, "இராஜாவே! இத்தொழில் உமக்குத் தகாதென்றும், அதை விட்டு நீர் உம்முடைய சிம்மாசனத்துக்குத் திரும்பிப்போக வேண்டும்" என்று மன்றாடினார்கள். அதற்கு இராஜாவானவர் புன்சிரிப்புடன், "நான் விட்டுவிட்ட இராஜ உத்தியோகத்தைப்பார்க்கிலும் இந்த கனமான சுமைகளைச் சுமந்துகொண்டு போவது எனக்கு அதிக சுளுவாயிருக்கிறது. அந்த பாரத்தைப் பார்த்தால் இது ஒரு வைக்கோல் சுமைபோலத் தோன்றுகிறது. ஏனெனில் நான் சிம்மாசனத்தில் இருக்கும்போது மனக்கவலையினால் பசியில்லாமலும், தூக்கமில்லாமலும் இருந்தேன். இப்போது எனக்கு இருக்கிற பாக்கியத்தையும், மனசந்தோஷத்தையும் முன் நான் அநுபவிக்கவில்லை" என்று சொன்னார். அரண்மனையார் "இராஜாவே! நீர் சிம்மாசனத்தில் சர்வ அதிகாரத்தையும் செலுத்தினபிறகு இப்போது தாழ்ந்த வேலைசெய்து மற்றவர்களுக்குக் கீழ்ப்படிவது தகாது" என்று கூறினர்.

இராஜா: "இது தப்பான எண்ணம். நான் இராஜ அதிகாரத்தைச் செலுத்தும்போது பிரஜைகளுக்கு அடிமையாயிருந்தேன். இப்போதோ மனச்சுதந்தரமுடையவனாயிருக்கிறேன். ஆகையால் நீங்கள் என்ன சொன்னபோதிலும நான் ஒருக்காலும் சிம்மாசனத்தில் திரும்ப ஏறவேமாட்டேன்"



என்று சொல்லி தன் பக்கத்திலிருந்த ஒரு சுமையைத் தூக்கி சந்தோஷத்துடன் நடந்தார்.

மேலான அதிகாரத்தைச் செலுத்துவதினால் பாக்கியம் உண்டாவதில்லையென்றும், தாழ்ந்த உத்தியோகத்தைச் செய்வது அநேகவிசை அதிக நல்லதென்றும் இதினால் அறிந்து கொள்ளலாம்.

இந்நாட்களில் எத்தேசத்திலும் அதிகாரிகளுக்குக் கீழ்ப்பட்ட வேலைக்காரரும், உத்தியோகஸ்தரும், தங்களுக்குள் கட்டுப்பாடு செய்துகொண்டு கலாபனை எழுப்புகிறதைக் காண்கிறோம். இவர்களுடைய நோக்கம் என்னவென்றால், அதிக சம்பளத்தை வாங்கி வேலையைக் குறைவாய்ச் செய்யவேண்டுமென்பதுமன்றி, இன்னம் இவர்கள் தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கப் பிரியப்படாமல் தாங்களே மனச்சுதந்தரமுடையவர்களாயிருக்க வேண்டுமென்பதுந்தான். மேற்சொன்ன எண்ணத்தையுடையவர்கள், தங்கள் நியாயமான எஜமான்களுக்கு விரோதமாக கலாபனை செய்து தங்களுக்கு துர்ப்போதனை சொன்னவர்களுக்கு அடிமையாகி மோசம் போகிறார்கள்.

தற்காலம் நிற்பாக்கியமான ருஷியா தேசத்தில் நடந்துவருகிற அலங்கோலக்கு இதுதான் முக்கியமான காரணம். அதினால் பிரஜைகளுக்கு எவ்வளவோ நஷ்டம், எவ்வளவோ துன்பம், எவ்வளவோ பரிதாபம். உலகமுடிவு வரையில் மனிதர்களில் சிலர் அதிகாரத்தைச் செலுத்தவேண்டுமென்றும், சிலர் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும, கடவுள் சித்தமாயிருக்கிறார். எஜமான்கள் தங்கள் ஊழியர்களை நீதிப்பிரகாரம் நடத்தவும், ஊழியர்கள் தங்கள் எஜமான்களுக்கு கீழ்ப்படியவும் வேணுமென்று சத்தியவேதம் போதிக்கின்றது. அதின் பிரகாரம் எல்லாரும் நடந்துவருவார்களேயானால் இவ்வுலகத்தில் அதிக பாக்கியமும், செல்வமும் உண்டாகும என்பதற்கு சந்தேகமில்லை.

(Olim.)

# Saveriarpalayam-Temperance Society.

## சவேரியார்பாளையம் மதுவிலக்கு சபை.

கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச்சேர்ந்த சவேரியார்பாளையத்தில், அவ்வூரை விசாரணை செய்துவந்த சங்கைக்குரிய இஞ்ஞாசியார் சுவாமிகளால், 1906-ம் வருஷம் "திருச்சிலுவைச் சபை" எனப் பெயர் பூண்ட ஓர் மதுவிலக்கு சபை

ஏற்படுத்தப்பட்டது. இவர் இச்சபையை ஏற்படுத்துவதற்கு முன், சவேரியார்பாளையம் பங்கைச்சேர்ந்த கிராமங்களாகிய சவேரியார்பாளையம், பிலியகுளம், கன்னம்பாளையம் ஆகிய இவ்வூர்களில் கத்தோலிக்கரில் பலருக்கு தலைமுறை தலைமுறையாக மதுபானப்பழக்கம் ஏற்பட்டு இவ்வூர்களிலுள்ள பல கிறீஸ்துவக் குடும்பங்களுக்கு அநேக கஷ்ட நஷ்டங்களையும், திருச்சபையின் மகிமைக்குக் குறைவையும் வருவித்து வந்தது. இக்குறைகளைக் கேட்டும் பார்த்தும் அறிந்தவராகிய மேற்கண்ட சங்கைக்குரிய சுவாமியார் மிகவும் துக்கித்து, ஏற்கனவே மதுபானப் பழக்கமுடையவர்கள் அப்பழக்கத்தை விட்டுவிடவும், இன்னும் அதைப்பழகாத வாலிபர் முதலிய சிறியோர் மதுவை முற்றிலும் வெறுக்கவும் வேண்டிய வழிப்பாடுகளை மிக்க ஆசை கவலையுடன் தேடினவராய், முந்தமுந்த சில ஏற்பாடுகளை யோசித்தும், செய்தும், அவைகளால் அதிக பிரயோஜனத்தைக் கண்டடையாமல், கடைசியாய் இம்மதுவிலக்குச் சபையை ஏற்படுத்தி அதற்கு, "திருச்சிலுவைச் சபை" எனப் பெயர் கொடுத்தார். சபை ஏற்படுத்தப்பட்ட அன்றுதானே 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்னும் வாக்கியமும், அந்த உத்தம குருவின் நல்ல ஆசைகளும் இச்சபையின் வழியாய் நிறைவேறும் என்பதற்குரிய முன்னோடியான சில அடையாளங்கள் காணப்பட்டன. அதெவ்வாறெனில், இவர் இச்சபையை ஏற்படுத்துவதற்கு முன், மதுபானத்தைப்பற்றி ஓர் அரிய பிரசங்கஞ்செய்தார். அதில் மதுபான மிகுதியால் வரும் தின்மைகளை விளக்கியும், உதாரணங்களால் ரூபிகரித்தும் காட்டி, எல்லோரும் மதுபானத்தை அருவருத்துத்தள்ளி, மதுவிலக்குச் சபையில் சேர்ந்து பிரயோஜனமடையும்படி தூண்டினார். கடவுள் கிருபையால் அன்றுதானே இதோ! 30 பேர் தங்களை மதுவிலக்கு சபையில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென இக்குருவானவரை உருக்கமாய் மன்றாடி, மதுவிலக்கு வார்த்தைப்பாடு கொடுத்து சபையிற் சேர்ந்தார்கள். இவர்களில் சிலர் பலவருஷகாலமாக ஊரில் முதல்தரக் குடியனெனப் பேர்பெற்றவர்கள். இவர்கள் இச்சபையில் சேர்ந்தபின் குடியைமுற்றிலும் துவேஷித்துத்தள்ளி, நன்மாதிரியாய் நடந்து, மற்றவர்களும் அதில் சேரப் புத்திசொல்லித் தூண்டியதால், இன்னம் பலர் இச்சபையில் சேர்ந்து தங்களுக்கும், தங்கள் குடும்பங்களுக்கும், பொதுவில் இவ்வூருக்குமே பல ஆத்துமசரீர நன்மைகள் வரக்காரணமானார்கள். (இன்னும் வரும்.) M. S. M.

---

**PAGE FOR THE YOUNG.**

**பிள்ளைகளின் பக்கம்.**

## The Efficacy of Daily Rosary.

## நாள்தோறும் ஜெபமாலை ஜெபிப்பதின் பிரயோஜனம்.

சில வருஷங்களுக்கு முன் பிரான்ஸ் தேசத்தில் ஒரு பெரிய பட்டணத்தில் பிரபு வம்சத்தைச்சேர்ந்த பிரசித்திபெற்ற துன்மார்க்க வாலிபன் ஒருவன் மரண அவஸ்தையாயிருப்பதைக் கேட்டு பங்கு சுவாமியார் உடனே எழுந்து அவன் வீடு நோக்கிச் சென்றார். உள்ளே போனவுடன் வியாதிஸ்தன் குருவானவரைப் பார்த்து, "ஏன் இங்கே வந்தீர். எனக்குப் பரவசங்கீர்த்தனம் செய்யப்பிரியமில்லை, வெளியே போங்கள்" என்று கடுகடுத்துச் சொல்ல, குருவானவர் தன்னாலானமட்டும் வெகுநேரம் அவனுக்குப் புத்தி சொல்லியும், அதெல்லாம் வியர்த்தமாய்ப் போனதைக் கண்டு சஞ்சலப்பட்டு, வெளியில் வந்து ஜெபமாலை ஜெபித்துக்கொண்டிருந்தார். சற்றுப் பொறுத்து நோயாளி, "நான் வரமாட்டேன், நான் வரமாட்டேன்" என்று இருமுறை உரக்கக் கத்தினான். இதைக் கேட்டு, குருவானவர் தீவிரித்து உள்ளே ஓடினார். அவனைக் கண்டதும், "சுவாமி உடனே எனக்குப் பாவசங்கீர்த்தனம் கொடுங்கள்" என்று நோயாளி வெகு பச்சாத்தாபத்துடன் கேட்டதைக் கண்ட குருவானவர் அவனுக்கு உடனே பாவசங்கீர்த்தனம் கொடுத்தார்.

பிறகு சூழநின்றவர்கள் அவனை நோக்கி "ஏன் கத்தினாய்" என்று கேட்டபோது, வாலிபன் சொல்வான். என் தாயார் இறக்குமுன் என்னைக் கிட்ட அழைத்து, "என் அருமைக் கண்மணி! நான் சாகப்போகிறேன். நீ மெய்யாகவே உன் தாயைச் சிநேகித்தால் தினந்தோறும் ஐம்பத்து மூன்று மணி ஜெபம் செய்வேனென்று எனக்கு வாக்குக் கொடு" என்றாள். அப்படியே நான் வாக்குத்தத்தம் செய்தேன். அவள் இறந்தபின்பு என் மதியீனத்தினால் அநேக அக்கிரம துரோகங்களை இதுவரையிலும் செய்துவந்தேன். இதனால் பிரசித்திபெற்ற

துன்மார்க்கனாகி அநேக கோடி பாவங்களைக் கட்டிக்கொண்ட பெரும்பாவியானேன். ஆனால் என் தாயாருக்குக் கொடுத்த உறுதிமொழியை மாத்திரம் நான் இதுவரையில் தவறிப்போகவில்லை. இந்தப் பத்து வருஷமளவாய் ஜெபமாலை சொல்லாமல் ஒருநாளும் நான் படுக்கைக்குப் போனதில்லை. அதன் பிரயோஜனம இன்றுதான் தெரிந்தது. எப்படியெனில், சற்று நேரத்துக்குமுன் ஒருகாட்சி கண்டேன்: எனக்கு எதிரில் ஒரு பெரிய தராசு மாட்டியிருந்தது. ஒரு தட்டில் நான் செய்த எண்ணிறந்த பாவக்கிரமங்களும், மற்றொரு தட்டில் எனது புண்ணியங்களுமிருப்பதாகத் தோன்றினது. உடனே பாவமுள்ள தட்டானது மெள்ள மெள்ள அக்கினிச் சுவாலை நிறைந்த ஒரு பெரிய படுகுழியில் இறங்குவதாகக் காணப்பட்டது. அச்சமயத்தில் யாரோ என் கழுத்தில் பெரிய பாரச் சங்கிலி ஒன்றை மாட்டி அந்த அக்கினிக் குழிக்குள் இழுப்பதாகக் கண்டு கத்தினேன். அத்தருணத்தில் சூரியனை மங்கச்செய்யும் ஜோதிப்பிரகாசத்தோடு உரோசாப்பூ முடியும், நக்ஷத்திரக் கிரீடமும், காந்தியுள்ள மற்ற ஜோடிப்புகளும் அணியப்பெற்ற மகா சௌந்தரியமுள்ள ஒரு ஸ்திரீயானவள் திடீரெனத் தோன்றி தமது கையிலிருந்த ஜெபமாலையைப் புண்ணியம் நிறைந்த தட்டில் போடவே பாவத்தின் கனம் குறைய, என் கழுத்திலிருந்த சங்கிலி துண்டு துண்டாகத் தெறித்து அக்கினிக்குள் விழுந்தது. உடனே விழித்துக்கொண்டேன்" என்றான். அங்கிருந்தவர்கள் மோட்ச இராக்கினிக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்தார்கள்.

பிள்ளாய்! தினந்தோறும் ஐம்பத்துமூன்று மணி ஜெபம் செய், முடியாவிட்டால் பத்து அல்லது இருபது மணி ஜெபமாகிலும் நாடோறும் சொல்லிவரப் பழகவேண்டும். எவ்வளவோ நேரம் வீண் காரியங்களில் போக்குகிறாய். நமது தேவதாயைக் குறித்து இதர கவலை பராக்குகளை நீக்கிக் கால் மணி நேரம் செலவழிக்க உனக்குச் சமயம் வாய்க்காமற் போகாது. ஜெபமாலை மாதமாகிய இந்த மாதம் துவக்கியாகிலும் பிரமாணிக்கத்துடன் ஜெபமாலை சொல்லி வருவாயாக.

போதகன்.

---



## ere and There.

### நானா சங்கதிகள்.

The Messenger of Truth. சத்தியதூதன் கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் பிரசித்தப் பத்திரிகையாய் இருக்கவேண்டுமென்று மகா வந்திக்கத்தக்க கோயமுத்தூர் மேற்றிராணியார் அவர்கள் உத்தரவு செய்திருக்கிறார். ஆகையால் இம்மேற்றிராசனத்துக்கு சம்பந்தப்பட்ட பொது நிருபங்களும், சமாச்சாரங்களும் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அப்படியிருப்பதால் மேற்கண்ட மேற்றிராசனத்தில் சேர்ந்த குருக்களும் விசுவாசிகளும் சத்திய தூதன் பத்திரிகையை வாங்குவது நலமாயிருக்கும்.

Back from France. சங். (J. B. Petit) ஜே. பி. பெத்தி சுவாமியார், சங். (P. Jambeau) பி. ஜாம்போ சுவாமியார், சங். (A Baron) ஏ. பரோன் சுவாமியார், சங். (L. Tournier) எல். தூர்னியே சுவாமியார் ஆகிய இவர்கள் நால்வரும் ஐரோப்பா மஹா யுத்தத்தினின்று சென்ற செப்டெம்பர்-மீ 12-ம௳ கோயமுத்தூருக்கு திரும்பிவந்தார்கள். கடவுள் அவர்களை அநேக விதமான ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றினதற்காக அவருக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செலுத்தக்கடவோம்.

Obituary. புதுச்சேரி அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். பி. ஜி. புசோல் சுவாமியார் (Rev. Fr. P. G. Pouzol) சென்ற செப்டெம்பர்-மீ 4-ம௳ வெல்லிங்டன் சென்ற் தெயாதோர் சானிட்டோரியத்தில் தமது 76-ம் வயதில் பரலோக பதவியடைந்தார். மைசூர் மேற்றிராசனத்தைச்சேர்ந்த சங். எப். ஜாக்மீன் சுவாமியார் (Rev. Fr. F. Jacquemin) சென்ற செப்டெம்பர்-மீ 15-ம௳ தமது 69-ம் பிராயத்தில் மரித்தார். சங். புசோல் சுவாமியார் 49 வருஷமும், சங். ஜாக்மீன் சுவாமியார் 44 வருஷமும் இந்தியாவில் ஆத்துமாக்களுடைய இரட்சணியத்துக்காக உழைத்தார்கள்.

R. I. P.

Feast of Karumathampatty. அக்டோபர்-மீ 5-ம௳ ஞாயிற்றுக்கிழமை கருமத்தாம்பட்டி ஜெபமாலை மாதாத் திருநாள். அக்டோபர்-மீ 3-ம௳ வெள்ளிக்கிழமை மகா வந்திக்கத்தக்க மேற்றிராணியார் அவர்களுடைய அழைப்பு.

5-ம்வ ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மகா வந்திக் கத்தக்க மேற்றிராணியார் அவர்கள் பாட்டுப்பூசை செய்வார். சாயந்திரம் 5 மணிக்கு தேவ சங்கீத பிரார்த்தனை. அதன் பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம். இரவு 8 மணிக்கு ஜெபமாலைமாதாத் தேர் சுற்றுப்பிரகாரம்.

திரு யாத்திரைக்காரர் அஞ்ஞானிகளைப்போல் நடவாமல் தேவமாதாவின்பேரில் பக்தி விசுவாசமுள்ளவர்களாய் தக்க ஒழுங்கோடும், விசுவாசத்தோடும், மரியாதையோடும் அத் திருநாளைக் கொண்டாடுவார்களாக.

Coimbatore. மாட்சிமை தங்கிய மதறுாஸ் கவர்னராகிய உவில்லிங்டன் பிரபு அவர்கள் தமது மனைவியுடன் சென்ற செப்டெம்பர்-மீ 16, 17, 18-ம் தேதியாகிய இத்தினங்களில் கோயமா நகரைச் சந்தித்தார்கள். அர்ச். சூசையப்பர் கைத் தொழிற்சாலை, செயின்ற் மிக்கேல்ஸ் ஹைஸ்கூல், செயின்ற் பிரான்ஸிஸ் தாயார் மடம், அமலோற்பவமாதா மடம், ஆகிய இவைகளை மாட்சிமை தங்கிய கவர்னர் துரைசாமி அவர்கள் பார்வையிட்டார்கள்.

Coonoor. குன்னூர் அர்ச். அந்தோனியார் கோவிலில் அக்டோபர் மாதத்தில் தினந்தோறும் ஜெபமாலைமாதா வணக்கமாதம் நடைபெறும். பூசை நேரத்தில் ஜெபமாலையும், தேவமாதாப் பிரார்த்தனையும், அர்ச். சூசையப்பருக்கு ஸ்தோத்திர ஜெபமும் சொல்லப்படும். தினந்தோறும் பூசைக்குப் பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப் படும்.


# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. V.** **November 1919.** **No. 11.**

புத்தகம் V.] FIDES AC ROBUR. [நம்பர் 11.


## NOTICE.

We hereby notify to the Revd. Clergy of our Diocese that the obligation of saying the hitherto prescribed oration "pro pace" at Mass and the other prayers for peace at Benediction shall cease on the 31st October 1919.

However, in thanksgiving to Almighty God for the Victory of the Allies and the Peace of the world the oration "pro gratiarum actione" (Deus, cujus misericordiæ non est numerus. Post missam de SS. Trinitate) shall be said at Mass during the month of November 1919. Servatis rubricis.

COIMBATORE. 20-10-19. ✠ AUGUSTIN
*Bishop of Coimbatore.*

## The Little Garden of Roses.

### சிறு ரோஜாத்தோட்டம்.

### மலர் 6.

"Blessed are they who hear the word of God and keep it." (Luke. 11-28.)

"சர்வேசுரனுடைய வாக்கியத்துக்குச் செவிதந்து அதை அநுசரிக்கிறவர்களே பாக்கியவான்கள்" (லூக். 11-ம் அதி. 28-ம் வசனம்.)

1. தேவ ஆறுதல்களுக்கு விக்கினமாயிருந்தால் மனுஷ ஆறுதல்களெல்லாம் வீண். மனிதன் தன்பேரிற்றானே நம் பிக்கைவைத்து ஊன்றியிருக்கையில் வெகு லேசாய் மனுஷ

ஆறுதலைத் தேட ஆரம்பிப்பான். ஏனெனில் மனித ஆறுதல் நிலையற்றது. அதை நம்பினால் அவன் வறுமையுள்ளவனும் பலவீனனுமாகித் துன்பத்துக்கே கைவிடப்பட்டவன்போலாவான். ஞான ஆறுதலானது உலக சரீர சுக முதலிய எல்லாவற்றிலும் மேலானது. மனிதன் தனக்கு வரும் இடையூறுகளைச் சகிக்க அதிக பலவானாகும் பொருட்டு தேவ ஆறுதல் அவனுக்குக் கொடுக்கப்படுகின்றது.

வேதாகமங்கள் வாசிக்கப்படுவதை நீ கேட்கும்போது, சுவாமியே நேரில் உன்னிடம் பேசுகிறாரென்று நினைத்துக்கொள். ஆகையால் மகா தாழ்மையுடனும், கபடற்ற மனதோடும், மிக்க நன்றியறிதலோடும், அவைகளை ஏற்றுக்கொள்வாயாக. அவைகளை உண்டாக்கினவர் பெரிய கல்விமானோ இல்லையோவென்று விசாரிக்காமல், அவைகளிலுள்ள உண்மையை மாத்திரம் தேடவேண்டுமேயொழிய, வசன அலங்காரத்தைத் தேடப்போகாது. ஏனெனில், புண்ணிய சாங்கோபாங்க நெறியில் நடக்கிறவன் நமக்கு நற்போதனையைக் கற்பிக்கிறான். நன்றாய் வாசிக்கிறவனும் அல்லது உபந்நியாசம் செய்கிறவனுமெவனோ, அவன் கர்த்தரின் தூதனெனப்படுவான்.

விசுவாசமுள்ள போதகன் புறத்தியாருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடுமானவற்றைத் தவிர்த்து, அவர்களுக்கு நன்மையை உண்டாக்கக்கூடியவைகளைப்பற்றி மாத்திரம் யாதொரு பாசாங்கில்லாமல் போதிப்பான். ஏனெனில், கபடமற்ற மனதுடையவன் பேசும் வார்த்தைகள் அதைக் கேட்கிறவர்களுக்கு எப்போதும் இன்பத்தைத் தரும்.

சூதான சம்பாஷணை பரிசுத்த இருதயங்களுக்குக் கேட்டை விளைவிக்கும். நமது தற்பெருமையைச் சாந்தி செய்யும் சம்பாஷணையோ ஆத்துமத்தைக் கறைப்படுத்தித் தப்பிதத்தில் விழுவிக்கும்.

சம்பாஷிக்கும்போது தன் முழு நோக்கம் மோசஞ் செய்வதிலே நிற்க, தன் பேச்சுகளை உண்மைபோலக் காட்டுகிறவன் சமாதானத்தின் சத்துரு எனப்படுவான். அதனைக்கேட்கிறவர்களும் அபகீர்த்திக்குக் காதுகொடுத்தவர்கள்போலாவார்கள். விவேகத்தோடு தீர்ப்புச் சொல்லுகிறவன் மிகவும் மேலாக மதிக்கப்படுவான். ஆனால் கடினமாயும் இரக்கமில்லாமலும் நீதி தீர்மானம் செய்பவன் இரக்கத்துக்கு அபாத்திரவானாவான். பதைபதைக்கும் குணமுள்ளவன் தனக்குத் தானே அதிக கேட்டை விளைவித்துக் கொள்ளுகிறான். அவன் அடிக்கடி மாசற்றவர்களைத் துன்பப்படுத்துவதுமல்லாமல்,



இரகசியத்தில் தனக்கு மேற்பட்டவர்களையும் நிந்திக்கிறான். மேலும் நற்குணமுள்ளவர்களைப் பகிரங்கமாய்ப் பரிகாசம் செய்கிறான்.

2. மோசமான வார்த்தைகளைப் பேசுகிறவன், தன் வார்த்தையைக் கேட்டு நம்புகிறவர்களுக்குத் தீங்கு செய்கிறான். ஆனதால் அவனுக்கு உற்ற நண்பர்கள் சிலரே.

அவதூறான காரியங்களைப் பிரசித்தம் செய்யாதே. ஏனெனில் இது விஷயத்தில் மௌனமாயிருப்பது நல்லது. உண்மையை வெளிப்படுத்து. ஏனென்றால் இது நல்ல இதமான காரியம். அடக்கமுள்ளவனாயிரு. ஏனெனில் இது கிரமமானது. ஒருவனையும் மனநோகப்பண்ணவேண்டாம். ஏனெனில் இது நியாயமானது. எல்லோருக்கும் உன்னால் கூடுமானவரையில் ஒத்தாசை செய். இப்படிச் செய்வது பக்தியின் அஸ்திவாரமாகும். உன் மனோவாக்குக் காயங்களால் புறத்தியாருக்குச் சுகிர்த மாதிரிகையாயிரு. இதுதான் வேதம் எனப்படும்.

புறத்தியாருக்குக் கெடுதியாவது நஷ்டமாவது வருவதற்கு இடங்கொடாமல் ஜாக்கிரதையாய் நடக்கிறவன், முன் ஆலோசனையின்றி யாதொரு காரியத்தையும் செய்யான். மேலும் அவன் தான் அறியாத விஷயத்தைப்பற்றியாவது, சந்தேகமான காரியத்தைக் குறித்தாவது, பேசுவதில் அதிக ஜாக்கிரதையுள்ளவனாயிருப்பான். வாயைத்திறவாமல் மவுனம் காப்பது மனச்சமாதானத்துக்கு நல்ல வழியாகும். ஆனால் மதியீனனுடைய வாயோ சண்டை சச்சரவுக்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கும்.

சர்வேசுரனுக்கு மாத்திரம் பிரியப்பட விரும்புகிறவன், தன் பஞ்சேந்திரியங்களின்மேல் கட்டுங் காவலுமாயிருந்து, தன்னுடைய தேவபக்தியை இழந்துபோகாமலும், சமாதானத்தை நாடுகிறவர்களுக்கு யாதொரு இடைஞ்சலுமில்லாமலிருக்க மிக எச்சரிக்கையுள்ளவனுமாயிருப்பான்.

இனிமையான வசனங்கள் எவ்வளவு அதிகமாயிருந்தபோதிலும் போதாது. மனத்தைக் கவருகிற வாய்ச்சால மொழிகள் சோம்பேறிகளையும், கல்விமான்களையும் தூய்மைப்படுத்த மாட்டா. ஆனால் தான் சொல்லும் இனிய மொழிகளின் பிரகாரம் நன்மைகளைச் செய்கிறவனே நன்மையைப் பிரதிப்பிரயோசனமாகப் பெறுவான்.

(இன்னும் வரும்) S. S. G.

# History of St. Joseph's Industrial School Coimbatore.

## கோயமுத்தூர் அர்ச். சூசையப்பர் கைத்தொழிற்சாலையின் சரித்திரம்.

கோயமுத்தூர் அர்ச். சூசையப்பர் கைத்தொழிற்சாலையானது அக்காலத்தில் ஷை யூர் அர்ச். மிக்கேல் மடத்து அனாதப்பிள்ளைகளை அதிக அன்புடன் வளர்த்துவந்த, கனம் சங். இ. பெட்டிட் சுவாமியார் அவர்களின் வேண்டுகோளின்படி, காலஞ்சென்ற சரியாய் வந்திக்கத்தக்க மிகவும் சங். டாக்டர் ஜோசேப் பார்தோ ஆண்டவர் அவர்களால் 1900-ம் வருஷம், பள்ளிக்கூடத்தில் தங்கள் போதனாமுறைப் பாடங்களை சரியாய்ப் படிக்கமுடியாதவர்களுக்கென்றும், இன்னும் படிப்பதற்குக் குறிக்கப்பட்ட வயது கடந்தவர்களுக்கென்றும் ஏற்படுத்தினார். அப்பொழுது ஷை மிக்கேல் மடத்தை விசாரித்து வந்த கனம் சங். இ. பெட்டிட் சுவாமியாரே இதற்கும் மானேஜராக ஏற்படுத்தப்பட்டார். ஷை தொழிற்சாலையானது நாளாவட்டத்தில் படிப்படியாய் விர்த்தியாகிக்கொண்டே வந்து, சர்க்காரால் கைத்தொழில் போதனாமுறைப் பாடசாலையாக 1903-ம் வருஷம் அங்கீகரிக்கப்பட்டது. பிற்பாடு ஷை மானேஜர் தம்முடைய மற்ற வேலைகளோடு இந்த வேலையையும் செய்வது அசாத்தியமெனக் கண்ட சரியாய் வந். மிக. சங். டாக்டர் அகுஸ்தீன் ரூஹா ஆண்டவரவர்கள், ஷை சாலைக்கென்றே கனம் E. பூபெர்ட் சுவாமியாரையும், அதற்குப்பின் தற்காலம் இருக்கிற மானேஜரையும் நியமித்தார். முதலில் ஒரு சிறிய இஞ்சினும், ஒரு மரம் அறுக்கும் யந்திரமும், அதன்பின் ஒரு பெரிய அறுப்பு யந்திரமும், அதை இழுக்கக்கூடிய பெரிய இஞ்சினும் வாங்கி, அறுப்புப்பட்டறை பூர்த்தி செய்யப்பட்டது. 1913-ம் வருஷம் சர்க்காரால் இலவசமாய்க் கொடுத்த 10,000 ரூபாயையும், ஏற்கனவே ஷை சாலையில் மீதியாயிருந்த பணத்தையும், மிஷன் உதவியையுங் கொண்டு தற்காலம் நடக்கும் மோட்டார் வேலைக்கு வேண்டிய யந்திரங்கள் வாங்கப்பட்டது. ஷை வேலைக்காக ஒரு தகரக் கொட்டாயும் போடப்பட்டது. இதற்கு இடையில் கொடிய சண்டையின் நிமித்தம் கனம் மானேஜர் மற்ற குருமார்களுடன் சண்டைக்குப் போக நேரிட்டது. பிற்பாடு, காலஞ்சென்ற மிகவும் சங்.



ராஜரிஷி கனம் N. ராண்டி சுவாமியார் அவர்கள் தமது தள்ளாத வயதில், தம்முடைய கருணையிலிருந்து இதுபரியந்தம் பிரிந்திருந்த இந்த வேலையையும், தம்முடைய மற்ற வேலைகளோடுகூட ஏற்றுக்கொண்டார். அப்பொழுது ஷை சாலையின் பெரிய கடைச்சல் யந்திரம் சண்டைக்காக தளவாடங்கள் செய்ய சர்க்காரால் உபயோகிக்கப்பட்டது. பின்னும், அறுப்புப்பட்டறையும் மெசோபொட்டேமியாவுக்கு பலகைகளும், சைஸ்களும், அறுப்பதற்காக உபயோகிக்கப்பட்டது. கனம் சங். பெரின் சுவாமியார் சண்டை முகத்திலிருந்து வந்ததும் மற்றும் சில தேவையான யந்திரங்களையும், மின்சார விளக்கு போடுவதற்கு வேண்டிய கருவிகளையும் வாங்கினார். கடந்த 9 வருஷகாலத்தில் ஷை தொழிற்சாலையில் தச்சுவேலை செய்தவர்களில் 94 மாணாக்கர்கள் போத்தனூர் ஓர்க்ஷாப்பிலும், கார்டைட் பாக்டரியிலும், தற்காலம் நடந்த சண்டையில் போர் வீரர்களாகவும், சேர்ந்தார்கள். மேற்கண்டவைகளைக் கவனிக்கும்பொழுது, ஷை சாலையானது திக்கற்ற அனாதப்பிள்ளைகளையும், தங்களால் வேறு உத்தியோகம்செய்து பிழைக்க முடியாதவர்களையும் ஏற்றுக்கொண்டு, அவரவர் திறமைக்குத் தக்கபடி அவர்களைப் பழக்கி, அவர்கள் பின்னால் பிழைக்கக் கூடிய வழியைக் காட்டுகிறதென்றும், ஏனைய கம்பெனியார்களுக்கும் வேண்டிய ஆட்களைச் சரியாய் அந்தந்த வேலையில் பழக்கி அனுப்புகிறதென்றும், அதினால் அக்கம்பெனியார்களுக்குத் தகுந்த ஆதாயம் ஏற்படுகிறதென்றும், இம்மாணவர்களும் தங்களுக்குக் கிடைக்கும் சம்பளத்தைக்கொண்டு காலக்ஷேபம் செய்கிறார்களென்பதும் பட்டப்பகலிலும் வெட்டவெளிபோல் நன்கு விளங்குகின்றது. ஆகையால் நமது மாட்சிமைதங்கிய துரைத்தனத்தாரும், மற்றுமுள்ள லோக்கல் போர்டு அதிகாரிகளும், ஷை சாலையின் அபிவிர்த்திக்காகத் தங்களால் கூடுமான உதவிசெய்து உற்சாகப்படுத்துவார்களென்றும், அப்படியே முனிசிபாலிட்டியாரும் தற்காலம் விதித்திருக்கும் வரியை நீக்கி ஷை சாலையின் முன்னேற்றத்தையே கவனிப்பார்களென்றும், மிகவும் குதூகலத்துடன் எதிர்பார்க்கப்படுகின்றது. தற்காலம் மோட்டார் வேலையில் அதிக மாணாக்கர்கள் இருப்பதால் அவ்வேலையில் அதிக அனுபோகமுள்ளவரும், உயர்தரப் பரீட்சையில் தேர்ச்சியடைந்தவருமான ஒரு உபாத்தியாயரை ஏற்படுத்தவேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டுவருகிறது. தற்காலம் ஷை தொழிற்சாலையில் வேலை செய்யும் பணியாளரின் தொகை பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| டைட்டர்களும் உபாத்திமார்களும் | | 20 |
| தச்சுவேலை செய்யும் மடத்துப் பிள்ளைகள் | 47 | 69 |
| ,, வெளிப்பிள்ளைகள் | 22 | |
| மோட்டார் வேலையில் மடத்துப்பிள்ளைகள் | 10 | 24 |
| ,, வெளிப்பிள்ளைகள் | 14 | |
| கார் ஓட்டும் வேலை பழகுகிறவர்கள் | | 8 |
| அறுப்புப் பட்டடையில் வேலை செய்கிறவர்கள் | | 15 |
| ஆக மொத்தம் | | 136 |

---

## Friendly Talk.

### சிநேக வாய்ச்சல்லியம்.

செப்டெம்பர் மாதத்தின் தொடர்ச்சி:

இரண்டாம் நாள்.

செசிலி: சாமி சர்வேசுரன் தோத்திரம்.

குரு: ஆசீர்வாதம்.

செ: அண்ணைக்கு ஒரு சுருவம் குடுத்திங்களே, அது நல்ல சுருவஞ்சாமி.

கு: எப்படி அது நல்ல சுரூபம்.

செ: அலங்காட்டுக்குப் போய் வெரகு பொறுக்கி வீட்டுக்கு வார வரைக்கும் எங்கூட்டிலே உசுரோ இல்லேசாமி— எண்ணைக்கு கழுத்திலே சுருவம் போட்டேனோ அண்ணைக்கே கருக்கு வெருக்கிண்ணதெல்லாம் பறந்து போயிட்டுதுசாமி.

கு: பார்த்தாயா சுரூபம் போட்டுக்கொள்ளுகிறது எவ்வளவு நல்ல வழக்கமென்று.

செ: ஆமாஞ்சாமி உன்னிமேல் எங்கிட்ட பிசாசு அண்டாது. எங்கூட வந்த புள்ளைங்கோ கிட்டப்போய், எல்லாரும் சுருவம் போட்டுக்கிங்கோ யிண்ணு சொல்லட்டுமாசாமி.

கு: ஆமா சொல்லு; இது நல்ல வழக்கம். ஆனால் ஒரு நாளைக்குமாத்திரம் போட்டால் பத்தாது. எப்போதும் சுரூபம் கழுத்திலே இருக்கவேணும்.

செ: ஆமாஞ்சாமி, இது பாருங்கோ சுரூவம் என் கழுத்திலே. நான் களட்டவேமாட்டேன். கவுரு அந்துபோனாலும் வேறே கவுரு கோத்து போட்டுக்குவேஞ்சாமி. செத்தாலும் சுருவம் என் களுத்தைவிட்டுப் போகாதுசாமி; வேணுமிண்ணாப் பாருங்கோ.



கு: அப்போ சுரூபமென்றால் உனக்கு ரொம்பப் பிரியம்போலிருக்குதா?

செ: அது பொய்யா? கொள்ளைப் பிரியஞ்சாமி.

கு: அதென்னத்தினாலே?

செ: சுரூவம் களுத்தில் இருந்தாக்கா மனசிலே நல்ல நினைப்பு வருது, சாமியாரு நீங்கோ சொல்றதெல்லாம் மறக்காமே மனசிலியே இருக்குது, பொளுதனைக்கும் எங்கியிருந்தாலும், கம்பு குத்தினாலும், ரக்கரி கடஞ்சாலும், தண்ணிக்குப் போனாலும் சாமி என் பக்கத்திலே இருக்கிறமாதிரி, நான் சாமி கூடவே இருக்கிற மாதிரி இருக்குது. கோளி கூப்பிடர நேரத்திலே எந்திரிச்சு செவம்பண்ணி கோயிலுக்குப் போகச்சொல்லுது. ராத்திரி படுக்கிறதுக்கு மிந்தி வேண்டிக்கொள்ளச் சொல்லுது. நோவுநொடி வந்தாக்கா அய்யோங்க வாண்டாங்கிது. சேசுவே, மரியாயே, சூசையப்பரே யெண்ணு சொல்லச் சொல்லுது. இதெல்லாம் சொல்லச் சொல்லுதுசாமி.

கு: அதென்ன பெரிய கூட்டம் ஊருக்குள்ளே?

செ: எங்கபெரியப்பன் செத்து மூணு நாளாச்சு; இண்ணைக்கு கல்லறைக்கு வெளக்குக் கொண்டுபோராங்கசாமி.

கு: அன்றைக்கு நீ அடக்கத்திற்குப் போனாயா?

செ: என்ன சாமி அடக்கத்துக்கா? அடக்கமிண்ணா என்னா சாமி?

கு: முத்து உனக்குத் தெரியாதா அடக்கமின்னதென்று? நீ பார்த்ததில்லையா?

முத்து: அக்கா! செத்தவர்களை கோயிலுக்குக் கொண்டுபோய் பாட்டுப்பாடி செபம் சொல்லி மந்திரிச்சு கல்லறைக்கு செபஞ் சொல்லி எடுத்துக்கிட்டுப்போய் குழி மந்திரிச்சு, அதிலே வச்சு மண்போட்டு மூடி, மேலே சிலுவை வக்கிறதுதான் அடக்கம்பண்ணுகிறது. கோயமுத்தூரில் நான் பார்த்தேன்.

செ: தம்பி நான் எங்கும் போனதுமில்லை. அதைப் பார்த்ததுமில்லை.

கு: உங்கள் பெரியப்பனைப் பெட்டியில் வைத்துக்கொண்டு போனார்களா செசிலி.

செ: பாரு முத்தாயி, சாமியார் பேசாதே புதுமை. ஏஞ்சாமி எங்க பெரியப்பன் சத்தா, சாடா அல்லாட்டி தண்டட்டியா, மேலிடா, பூலாம்பட்டி புதுப் பொடவையா, பொட்டியில்போட்டு பூட்ட.

கு: முத்து, உங்கள் பெரியப்பனை என்னத்தில் வைத்து கல்லறைக்கு எடுத்துக்கொண்டு போனார்கள்?

முத்து: பாடையில் வச்சுதான்சாமி கொண்டுபோனாங்கோ.

கு: பாடையில வச்சாங்களே, அப்போ உங்கள் பெரியப்பனுக்குக் காலிருந்ததா?

செ: காலைக் கத்தரிச்சு தின்னுபோட்டோஞ்சாமி?

கு: இரண்டு கையுமிருந்ததா?

செ: பாராயா முத்தாயி, எங்க பெரியப்பன் பாடுபட்ட சுருவத்தை இரண்டு கையிலே இருக்கமாய் சேத்திப்புடிச்சுகிட்டிருந்தாங்களே நீயுங்கூடத்தானையா பார்த்தே!

கு: கையிருந்தது நிசந்தான். ஆனால் கண்ணிரண்டும் இருந்ததா? உள்ளதைச் சொல்.

செ: இரண்டு கண்ணையும் பொட்டுப்போல மூடிக்கிட்டிருந்தாங்கோ எங்க பெரியப்பன். இது பொய்யல்ல. ஊருக்குத் தெரியுஞ்சாமி.

கு. காதைப் பார்த்தது உனக்கு நினைப்பிருக்கிறதா செசிலி.

செ: இதல்லாமிருக்க காதுக்குமாத்திரம் திருடன் வந்திட்டானா?

கு: சரி, உனக்குக் கால் இருக்கிறது நடக்கிறாய். கண்ணிருக்கிறது பார்க்கிறாய். வாய் இருக்கிறது பேசுகிறாய். அப்போ பாடையில் வைத்திருந்த பெரியப்பனுக்கு கண் கால், வாய் எல்லாமிருந்ததென்று நீ சொன்னாயே, அப்போ உன் பெரியப்பன் நடந்தானா? பார்த்தானா? பேசினானா? செசிலி நீங்கள் எல்லாரும் அழுதீர்களே. ஏன் அழுகிறீர்கள் என்று கேட்டானா?

செ: உங்களோடு அறுபோகஞ்சாமி. நம்மைப்போல செத்தவங்க எல்லாம் அப்படி. செய்தாக்கா அவங்களைக் கொண்டுபோய் குழியிலே வைக்க எங்களுக்குப் பைத்தியமா புடிச்சிருக்குது சாமி?

கு: சரி, ஏன் செத்தவர்கள் பேசுகிறதுமில்லை, பாக்கிறதுமில்லை, நடக்கிறதுமில்லை, நம்மைப்போல் ஒன்றும் செய்கிறதுமில்லை?

செ: அதேனோ எனக்குத் தெரியாதப்பா. ஆயா முத்தாயி நீதாஞ்சொல்லு.

முத்தாயி: நீயொரு வகுத்தெரிச்சக்காரி செசிலி. போ குழியை நோண்டி ஏனின்னு கேளு போயி.

செ: தம்பி முத்து! நீனாலுஞ் சொல்லு.



முத்து: நடக்காதுங்கோ, பேசாதுங்கோ, பாக்காதுங்கோ, ஒண்ணும் பண்ணாதுங்கோ. யிண்ணு செத்தவங்களுக்கு சாமி செரியானபோடு போட்டிருக்கிறாரிண்ணு அண்ணைக்கு மச்சாஞ் சொன்னாங்கக்கா.

கு: பேசாதிரு முத்து, நான் இங்கே நிற்கிறதை நீங்கள் மூன்று பேரும் பார்க்கிறீர்கள் அல்லவா, திடீரென்று செத்துப்போனால்—

செ: சாமி சாமி ஏஞ்சாமி படிக்கிண்ணு அப்படிச் சொல்றீங்கோ? அது ஆகாது சாமி.

கு: அதினால் என்ன? சொன்னால் செத்துப்போகிறேமா, இல்லை. ஆனால் அப்படிச் செத்துப்போய்விட்டாலும், என் கண், காது, கால், வாய் எங்கிட்டத்தானிருக்கிறது. நீங்கள் கொட்டினாலும், தட்டினாலும், அழுதாலும், பாடினாலும், ஜெபம் பண்ணினாலும் இன்னம் என்னென்னதான் செய்தாலும் எனக்குத் தெரியவே தெரியாது. ஆனால் உயிரோடு பக்கத்திலிருக்கிற உங்களுக்கு சகலமும் தெரியும்—இதேன் தெரியுமா?

செ: ஆமாஞ்சாமி நீங்கள் சொல்லுகிறது நெசந்தான், அதேஞ்சாமி அப்படி?

கு: இன்னொரு நாளைக்கு எல்லாம் விபரமாய்ச் சொல்லுகிறேன், கொடிவேலிக்குப் போகிறேன், தந்தி வந்திருக்குது. அவசரம் சண்டைக்குப்போன சாமிமார்களெல்லாம் திரும்பிக் கோயம்புத்தூருக்கு வீந்துவிட்டார்களாம். கொடிவேலியிலிருந்து போன பெத்தி சாமியாரும், பரோன் சாமியாரும் மோட்டேகார் வண்டியேறி மறுபடியும் கொடிவேலிக்கு வருகிறார்களாம். ரொம்ப ஆடம்பரமாம் கொடிவேலியில். இஞ்ஞாசியார் சாமியாரும், மார்ஷியால் சாமியாரும், என்னை அழைத்திருக்கிறார்கள். நாம் போகவேணும்.

முத்து: அவுங்க ரண்டுபேர்தானா வந்தாங்க சாமி. வேறொருத்தரும் வரல்லையா?

கு: ஜாம்போ சாமியார், பள்ளிக்கூடத்திலிருந்தாரே, பெரிய கோவிலிலே கின்னாரப் பெட்டி கொட்டிக்கிட்டிருந்தாரே, அவர் மறுபடியும் பள்ளிக்கூடத்திற்கு மாத்தமாய்ப் போச்சு. போர்டிங்கு மடத்திற்கு அவர்தான் மானேஜர். அப்புறம் சண்டைக்கு முந்தி குன்னூரிலே இருந்தாரே.

இன்னும் வரும் S. M.

# Saveriarpalayam Temperance Society.

## சவேரியார்பாளையம் மதுவிலக்கு சபை. (தொடர்ச்சி.)

திருச்சிலுவை சபையென்னும் இம்மது விலக்குச் சபையை சவேரியார் பாளையத்தில் ஏற்படுத்தியபின் சங். இஞ்ஞாசியுஸ் சுவாமியார், தாயானவள் தான் பெற்றெடுத்த பிள்ளையை எவ்விதமாக அருமைப் பெருமையுடன் வளர்ப்பாளோ அவ்விதமாகவே இச்சபையை மிக்க ஆவலுடனும், அன்புடனும், ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் நடத்திவந்தார். தாமதமின்றி வேறு பலரை இச்சபையிற் சேர்த்து நாளுவழியில் அதை விர்த்திசெய்தும் வந்தார். அடுத்த வருஷத்திலோ அவர் வேறு பங்குக்கு விசாரணைக் கர்த்தராக அனுப்பப்பட்டார். அவருக்குப்பின் இப்பங்கை விசாரித்து நடத்த அனுப்பப்பட்ட குருசுவாமிமார்களும் இச்சபையின் நாயகமாகிய சங். இஞ்ஞாசி சுவாமியாரைப் பின்பற்றி, இதின்மட்டில் அதிக கவலை, பற்றுதல் உடையவர்களாய், இச்சபையானது நிலைபெற்றிருப்பதற்கு விரோதமான அநேக விக்கினங்கள் நேர்ந்திருந்தபோதிலும், மனந்தளராமல் இச்சபையைப் பாதுகாத்துக் காப்பாற்றி வந்தார்கள்.

கார், பருவம் ஆகிய இவ்விரு காலங்களும் வசதியாய் அமைக்கப்பெற்றும், இச்சென்னை இராஜதானியிலே சௌக்கியகரமான ஜில்லாக்களில் ஒன்றாக பாவிக்கப்பட்டும், பல ஐரோப்பிய துரைமக்களாலும், இன்னும் மற்றவர்களாலும், தங்கிவாசஞ் செய்வதற்கு வசதியான இடமாக மதிக்கப்பட்டதும், ஆசிக்கப்பட்டதுமான இக்கோயமுத்தூர் ஜில்லாவிலும் பயங்கரத்துக்குரிய **பிளேக்** என்னும் நூதன வியாதி தோன்றி, ஆரம்பத்தில் ஜனங்களுக்கு மிகுதியான அச்ச நடுக்கத்தைக கொடுத்து வந்தது யாவருக்கும் தெரிந்த விஷயமே.

சவேரியார் பாளையமானது கோயமுத்தூருக்கு அடுத்தாப்போல் மூன்று மைல் தூரத்திற்குள்ளிருக்கும் சமீபமான ஊரானதால், கோயமா நகரில் பிளேக் வியாதி ஆரம்பித்து அவ்வூர்வாசிகளை அழித்தல், நஷ்டப்படுத்தல், வேலையின்றி, கையில் காசின்றி, கஞ்சிக்கில்லாமலும், பிழைக்க யாதொரு வழியில்லாமலும் கஷ்டப்படுத்தல் ஆகிய இக்கொடிய செய்கைகளை நடத்திவந்தபோதெல்லாம் சமீபத்திலிருக்கும் இச்சவேரியார் பாளையம் என்னும் ஊரையும் தாக்கி, முற்றுகையிட்டு, தாவிப்பிடித்து, அல்லல்படுத்தி வந்தது. இந்நோயானது கடந்த பத்து வருஷங்களுக்குள் நாலு தடவை அகோரத்துடன் சவேரியார் பாளையத்தில் பிரவேசித்தது.



ஊர்ச்சனங்கள், தங்கள் பங்குக் குருவுடன் ஏகோபித்து அவ்வியாதியைத்தடுத்து, நிறுத்தமுயன்றார்கள். ஊரிலுள்ள வீடுகளையெல்லாம், ஒன்றாவது பாக்கியின்றி, ஊர் பொதுச்செலவில் லோஷன் தண்ணீரால் கழுவினார்கள். தங்களையும் தங்கள் வீடு வாசல்களையும் சுத்த பத்தமாய் வைத்துக் காப்பாற்ற முயன்றார்கள். பலர் பிளேக் அம்மையும் குத்திக்கொண்டார்கள். இன்னும் தங்களுக்குத் தெரிந்ததும் பெரியோர் முதலியவர்களால் சொல்லக்கேட்டு தாங்கள் அறிந்ததுமான காரியங்களையெல்லாம் செய்தும் அந்நோயை ஊரைவிட்டு நீக்கப் பார்த்தார்கள். ஆயினும், ஐயோ! சுவாமியின் திருக்கரத்தைத்தடுத்து நிறுத்த வல்லவனார்? ஏற்கனவே நோயானது பலமாக ஊரைப் பற்றிக்கொண்டது. அநேகாநேகர் தலைவலி காய்ச்சலென படுக்கையில் தலைதூக்க முடியாமல் கிடக்கிறார்கள். அவர்கள் பங்குக் குருவும் வைத்தியருடன் வீடுவீடாக ஓடித்திரிகிறார். நாள்தோறும் இரண்டு, மூன்று, நான்கென மரித்து கல்லறைக்குத் தூக்கிக்கொண்டுபோய் அடக்கஞ் செய்யப்படுகிறார்கள். இச்சிற்றூரில் ஏற்கனவே மரித்த விசுவாசிகளின் தொகை முப்பது பக்கம் வந்துவிட்டது. மிகுதியான பயம், திகில் அனைவரையும் பற்றிக்கொண்டது. ஆத்திரத்துடன் ஊரைவிட்டு ஓடுகிறார்கள். பக்கத்திலுள்ள காடு தோட்டங்களில் சாலைகள் கட்டி குடியேறுகிறார்கள். ஊரிலுள்ள வீடுகளில் கிடக்கும் நோவாளிகளும், அவர்களைக் காத்துக்கிடக்கும் தாய் அல்லது பிள்ளையும், பக்கத்து வீடுகள் குடியில்லாமல் பாழாய்க்கிடக்க, தாங்கள் யாதொரு உதவி, ஆறுதலின்றி தனிமையாய் விடப்பட்டிருப்பதை நினைத்து பயப்பிராந்தியால் பீடிக்கப்பட்டு மெய் நடுங்கி இராக்காலங்களில் வீட்டின் கதவை முதலாய்த் திறக்க மனந் துணியாமல் வீட்டின் உள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறார்கள். இவர்கள் பங்குக்குருவும், இராக்காலங்களில் எந்த நேரமென்றும் பாராமல் வீடு வீடாய்ப் போய் அவர்களுக்கு ஆறுதல் தைரியம் சொல்லுகிறார். வீடுகளில் பிராணன் பிரிந்து கிடப்பவர்களை நல்லடக்கஞ் செய்யப் பார்த்தாலோ குழிவெட்ட ஆளைக் காணோம். குழிதயாரான பின்பும் ஊருக்குள் வரவும், வீட்டில் பிரவேசிக்கவும், மரித்த விசுவாசிகளின் சரீரத்தைக் கல்லறைக்குத் தூக்கிச்செல்லவும், ஓடி ஒளிகிறார்கள், இச்சமயத்தில் குருவானவரின் வேலைக்காரனும் வியாதிக்குப் பயந்து அவரைவிட்டு வேறிடம் போகிறான். தாமே கையில் விளக்கைப்பிடித்து, அவர்களையும் தைரியப்படுத்தி, கூட்டிவந்து மரித்தோரை நல்லடக்கஞ் செய்கிறார். சாகுமுன்னும் செத்த

பின்பும் அவர்களைக் காத்து துணையாயிருந்தவர்களையும் அப்புறப்படுத்தி, பந்தோபஸ்தான இடத்தில் வைக்கிறார். இச்சமயத்தில் இவருக்கும் காயல் வந்து கட்டியும் காணப்படவே, இது பிளேக் காய்ச்சல், பிளேக் கட்டி அல்லவென அப்போதிருந்த பிளேக் அப்பாத்தகிரி மிஷ்டர் பொன்னையா என்பவரால் தீர்மானிக்கப்பட்டு, தாமதமின்றி தமது வேலையைத்தொடர்ந்து நடத்த சக்தியுள்ளவராகிறார். இப்பயங்கரத்துக்குரிய பிளேக் வியாதி காலங்களில் தான், மருந்துக்கென்றும், பயத்துக்காகவும் சபையாரிற் சிலர் மதுவை அருந்த நேரிட்டது.

(இன்னும் வரும்.) M. S. M.

---

## Charity.

### தருமம்.

Charity helps a man.

தருமம் தலைகாக்கும்.

பரதேசி: தனவந்தரே! தருமத்தினால் ஐசுவரியத்தை அடையலாமென்று உமக்குச் சொல்லிக் காண்பித்தேன். இப்போது தருமத்தினால் ஐசுவரியங்களோடு மகிமைப் பிரதாபங்களையும் அடையக்கூடுமென்பதை உமக்கு எடுத்துக்கூறுகிறேன்.

தனவந்தர்: நீர் சொல்லிவந்த உபதேசத்தால், தருமத்தால ஐசுவரியத்தை மாத்திரம் பெறக்கூடுமென்று எண்ணியிருந்தேன். ஆனால தருமத்தினால் இன்னும் அநேக நன்மைகளை அடையக்கூடுமென்று சொல்லுகிறீர். அதினால் உம் உபதேசத்தைக் கேட்கக்கேட்க ஆசையும் இன்பமும் விளைகின்றன.

பரதேசி: தருமத்தினால் ஏராளமான நன்மைகளை அடையலாமென்று தருமம செய்யத் தலைப்பட்டு விட்டீர் போலும். அப்படிச் செய்வது யாதொரு நன்மையையும் பயக்காது என்று உமக்கு அநேகம் விசை சொல்லியிருக்கிறேன். தருமம் செய்யும்போது சர்வேசுரனுடைய பெயராலும் அவருடைய திருச்சித்தத்திற்கு அமைந்தும் செய்ய வேண்டுமென்பதை மறந்து போகாதீர்.

தனவந்தர்: ஆ! பரதேசியாரே! நான் அதை ஒருபோதும் மறக்கவில்லை. அது என்னுடைய ஞாபகத்தில் எப்போதும் குடிகொண்டிருக்கும். நீர் அதைப்பற்றிக் கொஞ்சமேனும் ஐயப்படவேண்டாம்.



பரதேசி: அப்படியானால் மிகவும் சந்தோஷமே. "தயாளகுணமுள்ளவன் மகிமையையும் வெற்றியையும் அடைவான்" என்று வேத புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது. தருமம் மிகவும் சுலபமாய் ஏறக்கூடிய ஓர் ஏணிக்குச் சமானம். ஏனெனில் தருமம் செய்பவன் தன் புறத்தியானைவிட அதிக உன்னத பதவியையடைந்து மகிமைப் பிரதாபங்களை அடைகிறான்.

தனவந்தர்: இப்புண்ணியத்தின் விசேஷ மகத்துவத்தைப் பற்றிக் கொஞ்சம் விவரமாய்க் கூறக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பரதேசி: ஓர் மனிதன் இம்மையிலும் மறுமையிலும் பாக்கியமாய் வாழ்ந்திருப்பது கூடாத காரியமென்று சொன்னபோதிலும், தருமத்தினால் இவ்விருஸ்தலங்களிலும் சுகமாய் வாழக்கூடுமென்பதே இப்புண்ணியத்தின் விசேஷ மகத்துவம். "ஏழைகளும் எளியோருமானவர்களைப் பற்றி அறிந்தவன் பாக்கியவான். சர்வேசுரன் அவனை இப்பூலோகத்தில் காப்பாற்றி அவனுக்குத் தீர்க்காயுளைத் தந்து பாக்கியவானுக்குவார்" என்று தாவீது இராஜா 40-ம் சங்கீதத்தில் பாடியிருக்கிறார். திருச்சபையானது இந்த சங்கீதத்தைத் தினந்தோறும் ஜெபித்து வருகிறது. ஏனெனில் ஏழைகளுடைய உபகாரிகளுக்காக இடைவிடாமல் மன்றாடி வருகிறதென்றும், இம்மன்றாட்டுக்குச் செவிகொடுத்துக் கேட்பது சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமாயிருக்கிறதென்று நாம் கண்டுபிடிக்கவுந்தான்.

தனவந்தர்: பரதேசியாரே! இவ்வுலக அற்ப மகிமையையடைய, எத்தனையோ பேர் தங்கள் ஆஸ்தியை வாரி இறைக்க உடன்படுகிறார்கள். ஆனால் தருமத்தினால் வரும் இவ்வற்ப மகிமையை விட, ஆயிர மடங்கு அதியுன்னதமான மெய்யான மகிமையும், சகல விசுவாசிகளும் அதை அங்கீகரித்துப் புகழவும், சகல சம்மனசுகளும் அதை ஏற்றுக்கொண்டு ஆனந்திக்கவும், சர்வத்துக்கும் வல்ல தயாபர சர்வேசுரன் அதை ஸ்திரப்படுத்தி நித்திய காலமும் மோட்ச பாக்கியத்தைச் சுதந்தரிக்கச் செய்வார் என்பதை நான் நினைக்கும்போது, என் இருதயம் ஆனந்தத்தால் பரவசமாகிறது.

பரதேசி: அற்பனாகிய நான் சொல்லிய புத்திகளைக் கேட்டு அதின்படி நடக்க சித்தம் கொண்ட அன்பரே கேளும். தருமம் செய்பவன் மகிமைப்பிரதாபம்; ஐசுவரியம் முதலிய சகல நன்மைகளை அடைவதோடு சரீர சௌக்கியத்தையும், நீடிய ஆயுளையும் பெற்று வாழ்வான். இவ்வித பாக்கியங்களை நமக்குக் கொடுப்பதாகச் சர்வேசுரன் நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்: "எளிகளுடையவும் வறுமை

யடைந்தவர்களுடையவும் ஸ்திதியை அறிந்தவன் பாக்கியவான்; சர்வேசுரன் அவனைக் காப்பாற்றி அவனுக்கு ஜீவியத்தைத் தருவார். தேவன் அவனுடைய கஸ்தி துன்பங்களில் அவனுக்குப் பக்கத் துணையாயிருப்பார்.”

தனவந்தர்: ஒருவன் மெய்யாகவே தருமத்தினால் உண்டாகும் நன்மைகளை நன்றாய் உணர்ந்து தனது ஆஸ்திகளை ஏழைகளுக்குக் கொடுப்பானாகில் அவனைவிட இவ்வுலகில் பாக்கியவான் ஒருவனுமில்லையென்று சொல்ல என்ன தடை?

பரதேசி: அதுவும் சந்தேகமா? இசையாஸ் என்னும் தீர்க்கதரிசி சொன்ன வாக்கியத்தைக் கேளும்: “ஏழைகளுக்கு உன் அப்பத்தைக் கொடு. உனக்குச் சரீரசுகம் சீக்கிரத்தில் விருத்தியாகும்; பசித்திருக்கிறவர்களுக்கு உன் இருதயத்தைத் திறந்து, உதாரகுணமாகக் கொடுத்து, கஸ்தியில் மூழ்கின ஆத்துமத்தை நீ திருப்தி செய்யும்போது தேவன் உன் ஆஸ்திகளைக் காப்பாற்றுவார்.” ஆகையால் நாம் வியாதி துன்பப்படுகையில் சர்வேசுரன் நம்மைக் காப்பாற்றுவார் என்பதில் கொஞ்சமேனும் ஐயமில்லை.

தனவந்தர்: ஆனால் சில தருமவான்கள் எப்போதும் வியாதியாயிருந்து இவ்வுலக பாக்கியங்களை அனுபவிக்க முடியாதவர்களாயிருக்கிறார்களே! அது ஏன்?

பரதேசி: அப்படிப்பட்ட தருமவான்களைத் துக்க சாகரத்தில் அழுந்தும்படி செய்ய சர்வேசுரன் சித்தங்கொண்டால், அவர்கள் மோட்ச பாக்கியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படியாக ஆசித்து அவர் தம் அணைகடந்த பட்சத்தினால் அனுப்புகிறாரேயொழிய வேறல்ல. ஆனால் எங்கும் நிறைந்த கடவுள் கஸ்தி துக்கத்தில் அவர்கள் மூழ்கிப்போகாமல் தம்முடைய திருக்கரத்தினால் அவர்களைத் தாங்கி, பொறுமையாலும் தருமத்தினாலும் மோட்சப் பேறு பலன்களை எளிதாக அடையச் சகாயம் செய்து வருகிறார். அதனால்தான் தாவீது இராஜா, ‘நீதிமான் தயை காட்டித் தானங் கொடுப்பான்” என்று எழுதி வைத்தபின், “அவன் விழும்போது சிதைந்து போகான். ஏனெனில் சர்வேசுரன் அவனைத் தமது திருக்கரத்தால் தாங்கிக்கொள்வார்” என்றும் எழுதிவைத்திருக்கிறார்.

தனவந்தர்: சர்வேசுரன் எவ்வளவோ நல்லவர். அவர் நமக்குக் கொடுத்திருக்கும் திரவியத்தை ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்க அதனால் உண்டாகும் நன்மைகளை நினைக்கும்போது மெய்யாகவே இவ்வுலகத்திலேயே மோட்ச பாக்கியத்தை அடைந்துவிட்டதாக எனக்குத் தோன்றுகிறது.

“உண்மை”—(இன்னும் வரும்)

## PAGE FOR THE YOUNG.

## பிள்ளைகளின் பக்கம்.

### The Pilgrim's Guide.

### மோட்சப் பிரயாணியின் வழிகாட்டி.

ஒருநாள் ஒரு பிரயாணி ஒரு ஊருக்குப் போகக் கால் நடையாய்ப் புறப்பட்டுச் சூரியன் அஸ்தமித்தவுடனே பிரமாண்டமான விருட்சங்களும், நெருங்கிய முட்செடிகளுமடர்ந்த ஒரு பெரிய வனத்தருகில் வந்து சேர்ந்தான். அவன் போக நினைத்துப் புறப்பட்ட ஊருக்கு அவ்வனத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும். இருட்டிப்போனமையாலும் துஷ்ட மிருகங்கள் நிறைந்த காடாயிருந்தமையாலும், அதனுள் நுழையப் பயந்து சற்றுத்தயங்கினான். அச்சமயத்தில் யாரோ ஒருவர் தன்னை நோக்கி வருவதைக்கண்டு அவரை நோக்கி, “ஐயா! நான் அடுத்த பட்டணத்துக்குப்போகும் ஒரு வழிப்போக்கன். இந்தப் பயங்கரமான இருளடர்ந்த காட்டை எப்படிக் கடந்து செல்வதென்று வகையறியாமல் தவிக்கிறேன்” என்றான். அதற்கு அவர், இவ்வனமோ மகாப்பயங்கரமானது. ஏனெனில் இதனுள் நுழைகிற எவனும் எப்பேர்ப்பட்ட தைரியசாலியாயிருந்தாலும் ஆபத்துக்குள்ளாவானென்பது நிச்சயம். ஏனெனில் இக்காட்டில் கரடி, புலி, சிங்கம் முதலிய கொடிய மிருகங்கள் யாரை விழுங்கலாமோவென்று சுற்றித் திரிகின்றன. மேலும் அவைகள் தின்று மிகுந்த மனித சரீரத்தின் கை, கால் முதலிய அவயவங்களைக் காட்டின் ஓரங்களில் நான் அநேக முறை பார்த்திருக்கிறேன். வன முழுவதும் மனித எலும்புகள் எங்கும் சிதறிக்கிடக்கின்றன. இதுவுமல்லாமல் இவ்விடத்தில் விஷப்பாம்புகளும், விஷப்பூச்சிகளும் அநேகமுண்டு. மேலும் இக்காட்டின் மத்தியில் விசாலமான பாதை ஒன்றுண்டு. ஆனால் அது அடுத்த பட்டணத்துக்குச் செல்லுவதற்குப் பதிலாக ஒரு பெரும் படுகுழியில் கொண்டுபோய் விடும். ஐயோ, பாவம்! எத்தனையோ வழிப்போக்கர்கள் இப்படுகுழியில் விழுந்து மாண்டுபோயிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கண்ணுற்ற நான் ஒரு பரதேசி வேஷங்கொண்டு இவ்வழியில் வருகிற

வர்களுக்கு யாதொரு ஆபத்தும் வராமல் அடுத்த பட்டணத்துக்கு அவர்களை க்ஷேமமாய்க் கூட்டிக்கொண்டு போவதுதான் என் அலுவல். “உமக்கு என்னுடன் வர இஷ்டமிருந்தால் அடுத்த பட்டணத்துக்கு உம்மைக் கொண்டுபோய்ச் சேர்ப்பேன்” என்றார். பிரயாணி இதற்குச் சம்மதிக்கவே அப்பரதேசியார் தம்முடன் கொண்டுவந்த விளக்கையேற்றி, அப்பிரயாணியைக் கைப்பற்றி, அவ்வனத்தின் வழியே அழைத்துச் சென்றார். அவர்கள் போகும்போது வழியில கொடிய காட்டு மிருகங்களின் பயங்கரமான சத்தங்கள் கேட்டன. ஆனால் அவர்களிடம் வெளிச்சமிருந்ததால் அம்மிருகங்கள் பக்கத்தில் வரத்துணியவில்லை. இவ்விதமாக இராமுழுதும் நடந்து யாதொரு ஆபத்தின்றி விடியற்காலையில் சுகமாய் ஊர்போய்ச் சேர்ந்தார்கள். பிறகு பரதேசியானவர் பிரயாணியிடம் விடைபெற்றுக்கொண்டு தமது பழைய இருப்பிடத்துக்குத் திரும்பிச் சென்றார்.

பிள்ளாய்! இப்பிரயாணி நீதான். பயங்கரமான பெரிய வனம் இவ்வுலகந்தான். சிங்கம், கரடி, புலி, விஷசர்ப்பம் முதலியவை உன்னிடமுள்ள ஆங்காரம், கோபம் முதலிய வழுதலையான பாவங்களாகும். படுகுழியானது நரக பாதாளத்தைக் குறிக்கிறது. இப்படுகுழியில் வீழ்ந்து இறந்தவர்கள் தங்களைப் படைத்து நடத்தி ஆண்டுவரும் அளவில்லாத சகல நன்மைச் சுரூபியாயிருக்கிற சர்வேசுரனை மறந்து மேற்கூறிய பாவங்களுக்கு அடிமைகளாகித் தங்களைப் பசாசின் கையில் ஒப்புக்கொடுத்தவர்களாம். பிரயாணி போய்ச் சேர்ந்த பட்டணம் மோட்ச நகர். பரதேசியானவர் உன் கிட்டயிருக்கும் குருவானவர்தாம். உன் திவ்விய ஆண்டவர் கண்ணீர்க் கணவாயாகிய இவ்வுலகத்தில் உனக்கு வழிகாட்டியாகக் குருவானவரை நியமித்திருக்கிறார். அவர் உன் கையைப் பிடித்து அழைத்துப்போகும்படி விடுவாயானால் உனக்கு யாதொரு மோசமும் வராது. அப்போது சர்வேசுரன் உனக்காகச் சித்தஞ்செய்து வைத்திருக்கும் உன்னத மோட்ச இராச்சியத்தில் சேர்ந்து அங்கே நவகோடி சம்மனசுகளோடும், சகல அர்ச்சியசிஷ்டவர்களோடும். என்றென்றைக்கும் அவரை முகமுகமாய்த் தரிசித்து நித்திய பேரின்ப பாக்கியத்தை அநுபவிப்பாய்.

(போதகன்.)

---



# Jayaseelan.

## ஜயசீலன்.

### 7-ம் அத்தியாயம்.

ஜயசீலன் இப்பொழுதுதான் முதல்தடவை இப்படிப்பட்ட இடத்தில் கால்வைத்தது. துர்மார்க்கர்களும், அயோக்கியர்களும் காலட்சேபஞ் செய்வதற்கு இப்பேர்ப்பட்ட வாசஸ்தலம் உண்டென்று இதற்குமுன் இவன் பார்த்தும் கேட்டுமறியான். இதில் பிரவேசித்ததும் அறையிலிருந்து புறப்பட்ட உஷ்ணத்தினாலும், புகையாலும் ஒருவித மயக்கங்கொண்டவனாய் மெய் கலங்கி, புத்தி தடுமாறி, தரையில் விழும் ஆபத்திலிருந்தான். ஆயினும் தைரியத்தைக் கைக்கொண்டு தன் சிநேகிதர்களுடன் அறையின் மத்தியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஒரு மேசைப்பக்கத்தில்போய் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். தன் நண்பர்கள் ஏற்கனவே இந்த இடத்துக்கு வந்து பழக்கப்பட்டிருந்தபடியால் அவர்களுக்கு ஒன்றும் நூதனமாகத் தோன்றவில்லை. உடனே பரிசாரகர்களை அழைப்பித்து அபினி, கஞ்சா, சாராயம் முதலியவைகளைப் பரிமாறச் செய்தார்கள். அவர்கள் தங்கியிருந்த அறையை வர்ணிப்பது அவசரமில்லை. அநேகர் கூடியிருந்த அந்தப் பெரிய அறையைப் பிரகாசிப்பிக்க ஒரு சிறு விளக்கே ஓர் மூலையில் வைக்கப்பட்டிருந்தது. ஒருவர் மற்றொருவருடைய முகத்தைக் கண்டுகொள்ளவும், அறையில் வைக்கப்பட்டிருந்த ஜாமான்களைத் தெளிவாய் அறிவதும் சாத்தியமல்ல. ஜயசீலனுக்கு துவக்கத்தில் எல்லாம் விபரீதமாகக் காணப்பட்டபோதிலும் சற்றுநேரம் சென்றபின் தான் வந்திருக்கும் இடம் எப்பேர்க்கொத்ததென்றும், அதில் கூடியிருக்கும் ஜனங்கள் எம்மாதிரியானவர்களென்றும் பரிஷ்காரமாய் அறிந்தான். சுவர்களும், ஜன்னல்களும், புகையால் மூடப்பட்டு பார்ப்பவர் கண்களுக்கு அரோசிகத்தையும், பயங்கரத்தையும் உண்டுபண்ணினது. தரைமுழுதும் பாதி எரிந்ததும, எரியாததுமான காகிதத் துண்டுகளால் நிரப்பப்பட்டு ஒரு அசுத்தமான வீதியைவிட கேவல அந்தஸ்தில் காணப்பட்டது. அதின்மேல் ஒருவன் குடி மயக்கத்தால் தவித்து புரண்டுகொண்டிருக்க, அரை மயக்கத்துடன் இருந்த மற்ற சிலர் சிரித்துக் கோஷ்டம் செய்து, மரண அவஸ்தையில் இருப்பவன்போல் காணப்பட்ட இவனை ஒருவரும் கவனிக்கவில்லை.

இந்த நிர்ப்பாக்கிய இடத்தில் கூடியிருந்த அயோக்கியர்களைப்பற்றி என்ன சொல்லலாம்! சிலர் நரைமயிரைக்கொண்ட விருத்தாப்பியராயும், பலர் அரை வயதுள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள். ஆனால் கூட்டத்தில் பெரும்பாலார் வாலிபர்களே. இவர்கள் யோக்கியம், மரியாதைக்கடுக்காத இத்துர் வழக்கத்துக்கு தங்களைக் கையளித்ததினால் சரீர சக்தி, பலம் இழந்து, பிஞ்சில் பழுத்த பழத்துக்கொப்பானவர்களென்று சொல்லத் தேவையில்லை. இவர்களெல்லோரும் சிறு கூட்டங்களாகப் பிரிந்து சூது விளையாடின பின் சற்று இளைப்பாற்றியடைய விளையாட்டை நிறுத்தி, பீர், சாராயம் நிறைந்த பாத்திரங்களைக் கொண்டுவரச்சொல்லி மனம்போல குடித்து மகிழ்ந்தபின், விளையாட்டைத் தொடர்ந்து நடத்துவார்கள். ஒருவனுக்காவது யோக்கியமான உடை கிடையாது. கிழிந்தும் வெறிமயக்கத்தில் தரையில் புரண்டு உருளுவதால் அசுத்தப்பட்டதுமான அவர்களுடைய வஸ்திரங்களைப் பார்க்கும்போது அவர்களைப்பற்றி பரிதாபப்படாதவர்கள் யார்? விகார முகத்துடன் கத்தி கதறும் இம்மனிதர்கள் சொல்லும் வார்த்தைகளின் அர்த்தத்தை அறிய ஜயசீலன் மிகவும் ஆசைகொண்டான். இவ்வார்த்தைகள் அவனுக்கு நூதனமாயிருந்தது. தன் ஜீவியத்தில் இவ்வித அசுத்த வார்த்தைகளை அவன் கேட்டறியான். இவ்வித சம்பாஷணைகளை இவன் கேட்டுக் கிடுகிடுத்து தான் இருந்த இடத்தைவிட்டுப் புறப்படுவதே நலமென்று ஒரு எண்ணம் அவன் மனதில் உதித்தது. அந்த நல்ல ஏவுதலுக்கு உடன்பட அவன் மனம் துணியவில்லை. சிநேகிதர்களுடைய துர்ப்புத்தியால் தூண்டப்பட்டு நாணம், அடக்க ஒடுக்கம், மனசுயாதீனத்தை முதலாய் இழந்தவனை இவனுக்கு, நல்ல யோசனைகளின் பிரகாரம் நடக்க மனம் வருமோ? தைரியமுண்டோ? தனக்குள் ஒருவித சடுத்தம் நடந்துகொண்டிருக்க, தன் துர்ச்சுபாவம் ஜெயங்கொள்ள, தான் தன் நண்பர்களைவிட நல்லவனல்லவென்னும் எண்ணம் அவனைத் தான் விழுந்திருந்த படுகுழியிலிருந்து எழுந்திருக்க விடவில்லை. தன்னைப்போல நல்ல குடும்பத்தில் பிறந்து யோக்கியமான பெற்றோர்களைக் கொண்டிருந்த தன் நண்பர்கள் நடத்தையைத் தான் துர்மாதிரிகையாகப் பாவிக்கவில்லை. ஜயசீலன் ஆசாபாசத்துக்கு இடங்கொடுத்து அவ்விடத்திலேயே தங்கிவிட்டான். சற்று நேரத்துக்குள் தன் கூட்டாளிகளின் வார்த்தை சம்பஷணைகளுக்குப் பழக்கப்பட்டு அவர்களுடன் சேர்ந்து உல்லாசம் கொண்டாடினான்.



முதலில் ஒரு சாராயப்புட்டி அவர்கள்முன் கொண்டுவந்து வைக்கப்பட்டது. அது மாயமாய் கண்விழித்து முடியாமுன் காலியாய்விட்டது. இரண்டாவது புட்டியும் அதே கதியானது. பலவித உயர்ந்த சாராயங்களும் ஒன்றன்பின் ஒன்றாய்ப் பரிமாறப்பட, கூச்சல், சந்தடி அதிகமாக, அந்த இடத்தைக் கூளிகள் வசிக்கும் நரகக் குழியென்றே சொல்லவேண்டும். ஆனால் தாங்கள் செய்த செலவுக்கு வேண்டிய பணத்தைக் கொடுப்பவர்கள் யார்? ஒருவன தட்டுத்தடுமாறி எழுந்து சொல்வான் "இப்போது சாராய வகைகளுக்கு நாம் செய்த செலவையும், இனிமேல் ஆக இருக்கும் செலவையும் விளையாட்டில் தோல்வியடைபவனே செலுத்துவது ஞாயம். நாம் சீட்டு விளையாடத் துவக்குவோம்; யார் துர் அதிஷ்டவாளியோ பார்க்கலாம்" என்றான்.

(தொடரும்.)

---

## Here and there.

### நானா சங்கதிகள்.

மகா கனம் பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாண்டவரவர்கள், சிலநாள் சௌக்கியக்குறைவாயிருந்தார். இப்போது நாளுக்கு நாள் சொஸ்தமாகிறார் என்று அறிந்து சந்தோஷிக்கிறோம்.

இவ்வருஷம் கருமுத்தன்பட்டியில் அர்ச். ஜெபமாலைமாதா மகோற்சவம் மிகுந்த சிறப்பாடம்பரத்தோடும், தக்க மேளை மரியாதையோடும், கொண்டாடப்பட்டது. இத்திருநாள் மிகுந்த ஒழுங்கோடும் மேலான பத்தி விசுவாசத்தோடும் நடைபெற சர்வ பிரயாசையும், முயற்சியும், எடுத்துக்கொண்ட அவ்வூர் பங்கு குரு சங். சி. கஸ்தானியே சுவாமிகளுக்கு மிகக வந்தனமளிககிறோம.

சண்டையிலிருந்து திரும்பிவந்த சங். தூர்னியே சுவாமிகள் கோயமுத்தூர் அர்ச். மிக்கேல் மடத்து சிரேஷ்டராகவும், அர்ச். சூசையப்பர் கைத்தொழிற் பாடசாலை அசிஸ்டண்ட் மானேஜராகவும், ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்.

## யுத்தத்துக்குப்போய் மீண்டுவந்த குரு சுவாமிமார்கள்.

கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த கொடிவேரி பங்கு விசாரணையிலிருந்து ஐரோப்பாவின் கொடிய யுத்தத்துக்கு போன சங்கை J. B. பெடிட் சுவாமியார் அவர்களும், பரோன் சுவாமியார் அவர்களும் கொடிவேரி கிறீஸ்துவர்களால் வணக்க மரியாதையுடன் மோட்டார் வண்டியில் அழைக்கப்பட்டு வாத்தியங்களுடன் ஊர்வலம் செய்விக்கப்பட்டதின்பிறகு கோவிலினுள் பிரவேசித்ததும் தேதெயும் பாடி ஜனங்களுக்கு ஆசீர்வாதம் கொடுத்தார்கள். ஊர் ஜனங்களும் ஆண், பெண் பள்ளிக்கூடத்து மாணவர்களும் தங்களுக்குக் காட்டிய மரியாதை சிரவணக்கத்துக்கு மகிழ்ச்சி அடைந்து சந்தோஷப்பட்டார்கள். இக்குருப்பிரசாதிகள் இருவருக்கும் யுத்தத்தில் உயிர் ஆபத்து இல்லாமல் திரும்பி இப்பங்கு ஜனங்களைக் காணவைத்த சர்வேசுரனுக்கு நன்றி செலுத்தக்கடவோம். இவர்களுக்கு கடவுள் நீடிய ஆயுளையும் சுகத்தையும் பெலனையும் கொடுத்து, அநேக ஆத்துமங்களுக்கு உதவியாயிருக்கும்படி கிருபை செய்வாராக!

ஓர் கிறீஸ்துவன். கோடிவேரி.

# The Messenger of Truth.

## சத்திய தூதன்.

Vol. V. December 1919. No. 12.

புத்தகம் V.] FIDES AC ROBUR. [நம்பர் 12.

## NOTICE.

OFFICE OF THE REGISTRAR-GENERAL OF BIRTHS, DEATHS AND MARRIAGES, MADRAS,
*Dated the 24th September 1919.*

No. 34.

From
C. M. SCHMIDT, Esq.,
REGISTRAR-GENERAL OF
BIRTHS, DEATHS AND MARRIAGES,
*Madras.*

To
THE SECRETARY
TO THE
RT. REV. THE ROMAN CATHOLIC BISHOP,
*Coimbatore.*

SIR,

The Government of India have drawn attention to the fact that the last column of the registers of baptisms, marriages and burials has not always been

signed by the person who actually conducted the ceremony but that the name has been filled up by some other person. This procedure is doubtless due to the fact that the present heading of the column in the registers is "name and designation of person by whom the ceremony is performed." The Government of India accordingly suggest that this heading in all the three registers should be altered into "signature and designation of person by whom the ceremony is performed." I have the honour therefore to request that you will be so good as to make the correction in the registers maintained in the churches under your jurisdiction and in the forms of quarterly returns of sacred offices.

To ensure that the requirements are observed I would suggest that the headings in the registers and in the forms on hand and those that may be received may be corrected as early as practicable.

I have the honour to be,

Sir,

Your most obedient servant,

C. M. SCHMIDT,

*Registrar-General of Births, Deaths and Marriages.*

---

*N. B.*—Communicated by order of His Lordship the Bishop of Coimbatore to the Rev. Clergy of his Diocese.



# 'he Little Garden of Roses.

## சிறு ரோஜாத்தோட்டம்."

## மலர் 7.

"The Lord is nigh unto them that are of a contrite heart."
(Ps. 33-19.)

"மனஸ்தாபமுள்ள இருதயமுடையோர்க்குச் சர்வேசுரன் அருகிலிருந்து உதவிபுரிகிறார்." (தாவீ. 33-ம் அதி. 19-ம் வச.)

1. எத்தேசத்திலும், எவ்விடத்திலும், எக்குலத்திலும், எவ்வந்தஸ்திலும் கஸ்தி துயரங்களுண்டு. செங்கோலைக் கைக்கொண்ட இராஜாக்களாயிருந்தாலும்சரி, திரவியம் நிறைந்த செல்வர்களாயிருந்தாலும்சரி, ஏழைகளாயிருந்தாலும்சரி, எவ்வளவு நல்லவர்களாயினும்சரி, என்னதான் புண்ணிய விருத்தியடைந்திருந்தாலும்சரி ஒவ்வொருவருக்கும் குறைவின்றி சஞ்சலங்களுண்டு. ஆகையால் உனக்குக் கஸ்தி துன்ப வியாதிகள் வரும்போது உனக்காகச் சிலுவையில் அறையுண்டிருக்கிற சேசுநாதனை நோக்கிப்பார்த்து, அவர் உன்னை இரட்சிப்பதற்காக அநுபவித்ததை நீயும் அவருடைய ஸ்தோத்திரத்திற்காக அநுபவிக்கவேண்டுமென்று அவர் உனக்குச் சொல்லுகிறதாகப் பாவித்துக்கொள், அப்போது உன் கஸ்தி உனக்கு எவ்வளவோ இன்பமாகும்.

துன்பதுரிதங்கள் வரும்போது அவைகள் தேவசித்தத்தினால் வருகின்றமையால் அவைகளைப்பற்றிச் சற்றேனும் முறையிடாமல் பொறுமையுடனேயுஞ் சந்தோஷத்துடனேயும் அநுபவிக்கும் வரத்தை இரந்து மன்றாடுவாயானால் அவர் உனக்குத் தமது தேவ ஆறுதலையும் தைரியத்தையும் நிரம்பத் தந்தருளுவார். அதனால் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தருளின சேசுநாதனைப்போல நீயும் புது ஜீவியம் ஜீவிப்பதற்காக மரித்தவர்களிடத்திலே நின்று உயிர்த்தெழுந்தருளின அவரோடு பாஸ்காவாகிய இரவுமுதைக் கொண்டாடுவாய். உன் பகையாளி உன்னை ஆவலாதிப்படுத்தி உன்னைத் தூஷித்துக் கொடிய பேச்சுப் பேசும்போது உனது இரட்சண்ணியத்தினிமித்தம் சேசுநாதருடைய பாடுகளின் பாத்திரத்தில் பானம்பண்ணுகிறாய்.

2. ஆகையால் உனது ஆத்தும இரட்சண்ணியத்தின் கசப்பான பாத்திரத்தை நீ பொறுமையோடும், அமைதியோடும் குடிக்க முறுமுறுக்காதே. அப்போது சர்வேசுரன் தமது

தாசனாகிய உன்னைக் கைநெகிழவிடாமல் இம்மையிலும் மறுமையிலும் உனக்குப் பக்கத்துணையும் பாதுகாவலுமாயிருப்பார்.

பிலாத்தென்பவன் முன் தமக்கு விரோதமாகச் சொல்லப்பட்ட பற்பல பொய்ச்சாட்சிகளை மறுக்கயாதொரு பிரத்தியுத்தாரமுஞ் சொல்லாமல் மவுனமாயிருந்த சேசுநாதனைப் போல் நீயும் உன்னை நிந்தித்துத் தூஷணித்துப் பேசுகிறவனுடைய வாயை உனது மவுனத்தாலும் பொறுமையாலும் அடக்குவது எவ்வளவோ புகழ்ச்சிக்குரிய காரியமாகும்.

உன்மேல் வைத்துள்ள அணைகடந்த அன்பினால் உனக்காகப் பாதந்துவக்கிச் சிரசுபரியந்தம் சர்வாங்கத்திலும் நிஷ்டூரமாய் அடிபட்டு, ஏககாயமாகி, திரளான ஜனங்களால் அவமானமாய்த் தூஷணிக்கவும், நிந்திக்கவும்பட்டுக் கடைசியில் துஷ்டர்களால் சிலுவையில் அறையப்பட்டு மரித்த உனது இரட்சகனைவிட மெய்யாகவே நீ மேலானவனல்ல.

உலையிற் பொன், வெள்ளி சுத்தமாகிறப்போல மனுஷன் துன்பவியாதிகள் என்கிற உலையில் சுத்தமானாலொழிய அவன் புண்ணியத்தின் மேன்மை எவ்வளவென்று கண்டறியமுடியாது.

சேசுநாதருடைய போஜன பந்தியிலமருவதற்கு வெகு ஆவலுடன் வருகிறவர்கள் அநேகம்பேர். ஆனால் அவர்களில் தங்களைத் தாங்களே பரித்தியாகம்பண்ணித் தங்கள் சிலுவையைச் சுமந்துகொண்டு தம்மைப் பின்செல்பவர்கள் வெகு கொஞ்சம்பேர் என்று அவருக்குத் தெரியும்.

**3. இருகள்ளருக்கு நடுவில் சகல அவமானத்திலும் பெரும் அவமானமான கழுமரத்தில் அறையப்பட்டு, கேலி, நிந்தை, பகடி, பரிகாசத்துக்குத் தம்மைக் கையளித்த திவ்விய சேசுவை மெய்யாகவே நேசிக்கிறவன், பேரின்ப மகிமையில் அவரோடு ஐக்கியமாகும்பொருட்டு, அழிந்துபோகும் உலக மகிமையின்மேலும், ஆசாபாசங்களின்மேலும் அருவருப்புக் கொண்டு சேசுவின்பேரால் தனக்கு வரும் கஸ்தி, துன்பவாதனைகளைப் பொறுமையோடு அநுபவிக்கத் துணிவான். ஏனெனில், கிறீஸ்துநாதனைப்போல் பரிசுத்த ஜீவியம் ஜீவிப்பவனுக்கு அவரே ஜீவனும், மரணமும், உத்தானமுமாயிருக்கிறார். ஆகையால் சேசுவை முழு இருதயத்தோடு நேசிக்கிறவனே பாக்கியவான். சேசுநாதர் உனக்கில்லாவிட்டால் உலகத்தில் உனக்கு என்ன கிடைக்கும். அவரோடிருப்பதுதான் மோட்சம்.**



ஆகையால் தேவ மகத்துவ சர்வேசுரனை அளவற்ற சிநேகத்தோடு சிநேகித்து, அவருக்கு எவ்வகையிலும் ஊழியஞ் செய்யவேண்டியது உனது முக்கிய அலுவல். நீ பிறந்த நாள் முதற்கொண்டு இதுமட்டும் உனக்காக விசேஷமான தயவும், அருளும், அன்பும் காண்பித்து, நன்மை வரங்களை எவ்வளவோ உனக்குக் கொடுத்திருக்கிறார். அவர் உனக்குக் காண்பிக்கும் உத்தம சிநேகத்தைச் சரியாயறிந்து விவரிக்க உன்னால் முடியாது. ஆனதுபற்றி அவர் செய்ததும், இன்னும் செய்து வருகிறதுமான எண்ணிலடங்காத நன்மைகளினிமித்தம், நீ அவரைச் சிநேகிக்கக் கடமைபட்டவனாயிருக்கிறாய். மேலும் சர்வேசுரன் தம்மைச் சிநேகிக்கவேண்டுமென்று உறுதியான கட்டளை கொடுத்திருக்கிறார். ஆகையால் நீ சர்வேசுரனை மெய்யாகவே சிநேகிப்பாயாகில் அவருடைய கற்பனைகளையெல்லாம் அநுசரித்து அவருக்குப் பிரியப்படவும், சந்தோஷம் வருவிக்கவும் விரும்பி, எல்லாவற்றிலும் அவருடைய திருச்சித்தத்தின்படியே நடக்கக்கடவாய். சர்வேசுரனுடைய சிநேகத்தில் சாகுமட்டும் நிலைநிற்பவனே பாக்கியவான்.

சகல சுகுண இலட்சணங்களும் நன்மையும் பூரணமாய் அமையப்பெற்ற சர்வேசுரன் முன் சாஷ்டாங்கமாய் விழுந்து அவரை ஆராதித்து உன்னை முழுதும் அவருடைய ஊழியத்துக்கு நேர்ந்து ஒப்புக்கொடுத்து அவரை உன் முழு இருதயத்தோடு சிநேகிப்பாயாக.

(இன்னும் வரும்.) S. S. G.

---

## Charity.

### தருமம்.

Charity remits our sins.

*தருமத்தினால் பாவமன்னிப்பை அடையலாம்.*

பரதேசி: தனவந்தரே! தருமத்தின் பலாபலன்கள் இப்பூலோக சுக பாக்கியங்களோடு முடிவு பெறுகிறதாயிருந்தால், அதைப்பற்றி நான் இவ்வளவு புகழ்ந்து பேசினது வியாத்தமாகும். ஏனெனில் ஓர் மனிதன் எவ்வளவுதான் ஆரோக்கியமுள்ளவனும், தனதானிய இலாபங்களையெல்லாம் அடைந்து செல்வச்செருக்கோடு பிரக்கியாதியாக வாழ்ந்து வந்தபோதி

லும், பாவச்சேற்றில் அழுந்தி நித்திய நரக நெருப்புக்குத் தன்னை பாத்திரவானுக்கிக்கொண்டால் அவனுக்கு என்ன இலாபம்!

தனவந்தர்: வரப்போகிற உலகத்தின் தீமைக்கு முன் நாம் அநுபவிக்கக்கூடுமான பூலோக தீமைகளெல்லாம் ஓர் துரும்புக்குச் சமானம் என்பதை நீர் எனக்குச் சொல்லிய புத்திமதிகளால் அறிந்துகொண்டேன். அதிலும் இத்தீமைகளைவிட பாவமென்கிறதீமை எத்தன்மையென்பதை என்னால் சொல்லிக் காண்பிக்க முடியவில்லை.

பரதேசி: ஆகையால் பாவ வழியில் ஜீவிப்பவர்களுக்குச் சம்பாவனை நரகந்தானே. உம்மைப்போலொத்த ஐசுவரியவான்கள் இக்கொடிய நெருப்புக்குச் சுலபமாய் இரையாய்ப் போகிறார்கள். ஏனெனில் அவர்களிடத்திலிருக்கும் ஆஸ்தியானது அவர்களின் அகங்காரத்திற்கும் குடிவெறிக்கும் காரணமாகிறது. மேலும் அது அவர்களைக் கொடிய மனதுடையவர்களாகவும், அதிக ஆசையுடையவர்களாகவும், பலவீனர்களுக்குப் பொறுத்தல் கொடாமலும், சகல சட்டதிட்டக் கிரமங்களுக்கு அடங்காதவர்களாகவும் செய்து விடுகிறது. சோம்பல், சூதுவாது முதலிய வேறநேக பாவங்கள் தனத்தினின்று பிறக்க, எண்ணமுடியாத அக்கிரமங்கள் பூலோகத்தில் உண்டாகிப் பாவம் இரட்டித்துப்போக உதவிசெய்யும். அதினாலேயே "ஓர் ஐசுவரியவான் சர்வேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிப்பதைவிட ஓர் ஒட்டகம் (ஊசியின் காது) வழியாய்ப்போவது எளிதாம்" என்று சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தனவந்தர்: இக்கொடிய பயங்கரமான வார்த்தைகளின் தாற்பரியமென்ன?

பரதேசி: அதென்னவென்றால் ஐசுவரியத்தைக் கொண்டிருப்பவன் அதியாசை, காமம், அநியாயம், வீணிச்சைகளைத் தினந்தோறும் அநுசரித்துவருகிறபடியால் புண்ணியம் செய்ய முடியாது.

தனவந்தர்: இப்பேர்ப்பட்ட பாவங்களை வெற்றிகொள்ள யாதோர் வழியுண்டோ?

பரதேசி: சர்வ தயாபர சர்வேசுரன் தமது திவ்விய நீதிக்குப் பரிகாரமும், பாவப்பொறுத்தலும், தயையுமடைய ஐசுவரியவான்களுக்கு ஓர் இரகசிய மார்க்கம் காட்டியிருக்கிறார். அதாவது, தானதருமமாம். "உன் பாவத்தைத் தானதருமங்களால் பரிகாரம் செய்துகொள்" என்று தானியேல் தீர்க்க



தரிசி சொல்லியிருக்கிறார். நபுக்கோதோனேசர் என்னும் அரசன் தான் செய்த அக்கிரமங்களால் சர்வேசுரனுடைய கோபாக்கினைக்குத் தப்பித்துக்கொள்ள தானதர்மம் செய்தான். அதனால் அவன் சர்வேசுரனால் மன்னிக்கப்பட்டான்.

தனவந்தர்: பரதேசியாரே! பாவங்களைப்போக்கிச் சர்வேசுரனுடைய தயை பெற வேறே ஏதாவது மார்க்கமிருக்குமென்று நினைத்தேன். தருமத்தினால் ஏராளமான நன்மைகளை அடைவதோடு பாவாக்கிரமங்களையும் ஒழிக்கக்கூடுமென்பதால் தருமத்தின் வல்லமையை என்னவென்று சொல்லுவது!

பரதேசி: யூத ஜனங்கள் தங்கள் பாவங்களால் சர்வேசுரனுடைய கோபாக்கினைக்குப் பாத்திரமானார்கள். அக்கோபாக்கினைக்குத் தப்பித்துக்கொள்ள அர்ச். ஸ்நாபக அருளப்பர், "இரண்டு சட்டையையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுப்பானாக. ஆகாரத்தையுடையவனும் அப்படியே செய்யக்கடவானாக" என்று அவர்களுக்குப் புத்திசொன்னார். அர்ச். அகுஸ்தீன் என்பவர் தருமத்தைப்பற்றிப் பேசும்போது: "உன் ஆசாபாசங்களாலும் பாவங்களாலும், கட்டப்பட்ட பந்தனத்தையவிழ்க்கத் தானதருமத்தைவிட வேறே யாதோர் நல்வழி இல்லை" என்கிறார்.

தனவந்தரே! தருமத்தால் ஓர் ஐசுவரியவான் தன் மரணத்தீர்வையை மாற்றிக்கொண்டு சர்வேசுரன் தனக்குக் கோப நியாயாதிபதியாக இருக்காமல் தன் நேச தந்தையாயிருக்கும்படி செய்துகொள்ளுவானாகில், நித்திய நீதியதிபதி சகலரையும் அவரவர்கள் செய்த பாவபுண்ணியங்களுக்குக் கணக்குக் கேட்க எழுந்தருளிவரும் கடைசி நாளில் சர்வேசுரன் அவனைத் தம்மிடம் வரவழைத்து அவன் கரத்தைப் பிடித்துக்கொண்டு, சகல அர்ச்சியசிஷ்டவர்கள், சம்மனசுகள் மத்தியில் அவனை நிறுத்தி, "இம்மனிதன் நமக்கு சாப்பாடு கொடுத்தான், நமக்குச் சகாயம் செய்தான், நம்மை உடுத்தினான். ஆதலால் நல்ல நம்பிக்கையுள்ள ஊழியனே! உன் ஆண்டவருடைய சந்தோஷ ஆனந்தத்திலும, நித்திய ஜீவியத்திலும் பிரவேசிக்க வருவாயாகவென்று நாம் அழைக்கிறோம்" என்று சர்வேசுரன் திருவாக்கருளி அவனுக்கு நித்திய பாக்கியத்தைக் கொடுப்பார்.

முற்றிற்று. V. K. S.

## PAGE FOR THE YOUNG.
## பிள்ளைகளின் பக்கம்.

### The priest and the old pagan.
### குருவானவரும் அஞ்ஞானக்கிழவனும்.

பிரேஜில் தேசத்தில் ஒரு குருவானவர் ஒரு நாள் பிரயாணம் செய்யும்போது வழிதப்பி ஒரு பெரிய காட்டுக்குள் அகப்பட்டுக்கொண்டார். வெளியே வருவதற்கு வகைதெரியாமல், அங்குமிங்கும் காட்டுக்குள் சுற்றி அலைந்துகொண்டிருக்கும் போது எங்கேயோ சற்றுத்தூரத்தில் மனிதகுரல் கேட்பது போலத் தோன்றிற்று. உடனே அக்குரல் வரும் மார்க்கமாய்ப் போகவே, அங்கே ஓர் பெரிய விருட்சத்தினடியில் மிக்க விருத்தாப்பியனொருவன் படுத்திருப்பதைக் கண்டார். அவனைக் கண்டு ஆச்சரியப்பட்டுக் குருவானவர் அவன் பக்கத்தில் போய் அவனைப்பார்த்து, "பெரியவரே! இக்காட்டில் இம்மரத்தினடியில் என்ன செய்கிறீர்" என்று கேட்டார். அதற்கு அக்கிழவன், "ஐயா, என் ஆயுள்காலமெல்லாம் கடவுளை ஸ்துதித்து எனக்கு நற்கதி கொடுக்குமாறு அவரைப் பிரார்த்தித்துக்கொண்டுவந்தேன், நானோ ஒரு அஞ்ஞானி, எனக்குச் சாவு கிட்ட நெருங்கியிருக்கிறது, செத்தபிறகு எனக்கு மோட்சம் கிடைக்குமோ என்னமோவென்று சந்தேகப்பட்டு யாருமில்லாத இக்காட்டில் வந்து பகவானைத் தியானித்துக்கொண்டிருக்கிறேன். உம்மைப் பார்த்தால் ஓர் பரிசுத்தவான்போல் தோன்றுகிறது. நான் மரணமடையுமுன் மோட்சத்துக்குப் போகிற மார்க்கம் எனக்குக் காட்டுவீரானால் கடவுள் உம்மை ஆசீர்வதிப்பார்" என்று உருக்கமாய்ப் பதிலுரைத்தான்.

இதைக்கேட்டு அக்குருவானவர் ஆச்சரியப்பட்டு, உடனே நமது பரிசுத்த வேதத்தின் சத்தியங்களை அவனுக்குச் சுருக்கமாய்ப் போதித்தார். அவர் அப்படிச் சொல்லிக்கொண்டு வருகையில் அர்ச். தமதிரித்துவத்தின் இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேசுரன் மனிதர்பேரில் வைத்துள்ள அணைகடந்த அன்பினால் அவர்களை நரகத்தினின்று மீட்கத் தமது உயிரைச் சிலுவைமரத்தில் பலியாக ஒப்புக்கொடுத்தாரென்று சொன்னதைக் கேட்டு அக்கிழவன் மனம் மெழுகுபோல் உருகத் துவக்கிற்று. உடனே குருவானவரை நோக்கி, "சுவாமீ! கடவுள் எனது மன்றாட்டைக் கேட்டருளினார். என்னை இரட்சிக்க



அனுப்பப்பட்ட தேவ குரு நீரே. உம்முடைய வேதம் மகா மகத்துவம்பொருந்திய உன்னத வேதம். இன்றுதான் உம்மால் நான் மோட்சத்துக்குப் போகும் மார்க்கத்தைக் கண்டுபிடித்தேன். ஆனதுபற்றி நீர் சொல்லுகிறபடி செய்யத் தயாராயிருக்கிறேன்" என்றான். உடனே குருவானவர் அவனுக்கு ஞானதீட்சை கொடுத்தார். ஞானஸ்நானம் பெற்றபிறகு அக்கிழவன் ஆனந்தத்தால் கண்ணீர் சொரிந்து அழுது பிரலாபித்து சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரம் புரிந்தான். குருவானவர் அவன் சாகுந்தருணத்தில் இருக்கிறானென்று கண்டு கடைசிபரியந்தம் அவனோடிருக்கத் தீர்மானித்தார். கிழவன் ஞானஸ்நானம் பெற்ற கொஞ்ச நேரத்துக்குள் தனது பரிசுத்த ஆத்துமத்தை சர்வேசுரன் கையில் ஒப்புவித்து பாக்கியமாய் மரித்தான்.

பிரியமான பிள்ளைகளே! ஒரு அஞ்ஞானி தேவ கற்பனைகளை அநுசரித்து சர்வேசுரனுக்கு யாதொரு துரோகமும் செய்யாதிருந்தால் அவன் மோட்சக் கரையேறப் புதுமை செய்யவேணுமென்றாலும் சர்வேசுரன் செய்வார். உங்களோடு படிக்கும் அஞ்ஞானப் பிள்ளைகளுக்கு நீங்கள் மெய்யான உதவி செய்து அவர்களுடைய ஆத்துமத்தை இரட்சிக்க வேணுமானால் உங்கள் சுறுசுறுப்பினாலும், நன்மாதிரிகையினாலும், தெய்வ பக்தியினாலும், நமது சத்திய வேதமே மெய்யான வேதமென்று அவர்கள் உணரும்படி செய்யவேண்டியது. உங்கள் நன்மாதிரிகை அவர்களை நல்லவர்களாக்கும். அவர்கள் நல்லவர்களாயிருந்தால் மனந்திரும்பி பக்தியுள்ள கிறீஸ்துவர்களாகும் வரத்தை சர்வேசுரன் அவர்களுக்கு அளித்தருளுவார்.

போதகன்.

---

### The child and the Sanctuary Lamp.
### சிறு பிள்ளையும் தேவநற்கருணை விளக்கும்.

ஒரு நாள் ஒரு பதிதப் பாதிரியார் ஏழு வயதுள்ள தன் பிள்ளையை ஓர் கத்தோலிக் கோவிலைப் பார்க்கக் கூட்டிக்கொண்டுபோனார். அந்தச் சிறுபிள்ளை, அக்கோவிலில் தேவநற்கருணை விளக்கு எரிகிறதைக்கண்டு: "அப்பா, என்னத்திற்கு இந்த விளக்கு" என்று கேட்க, தகப்பன்: "இந்தக் கோவிலில் சேசுநாதர்சுவாமி தேவநற்கருணையில் எழுந்தருளி இருக்கிறார் என்று கத்தோலிக்கர் விசுவசிக்கிறார்கள்" என்று மறுமொழி சொன்னார். அதற்கு அச்சிறுபிள்ளை, "நான் சேசுநாதரைப் பார்க்க ஆசையாயிருக்கிறேன்" என்று சொல்ல: தகப்பன்,

"அவரைப் பார்க்க முடியாது, ஏனெனில் இந்த சின்ன பெட்டியின் கதவுக்குப்பின்னால் ஒரு தங்கப் பாத்திரத்தில் மறைந்திருக்கிறார்" என்று சொன்னார்.

பிறகு பாதிரியாரும் அவருடைய பிள்ளையும் அவ்வூரில் இருந்த பதிதக கோவிலைச் சந்திக்கப் போனார்கள். அதில் பிரவேசித்தவுடனே சிறு பிள்ளை இங்கும் அங்கும் உற்றுப் பார்த்து கத்தோலிக் கோவிலில் பார்த்ததுபோல சிறு விளக்கைக் காணாமல் ஆச்சரியப்பட்டு, தன் தந்தையை நோக்கி, "இந்தக் கோவிலில் சேசுநாதர் இல்லையோ!" என்று கேட்டான். தகப்பன், தியங்கி, "இங்கே தேவநற்கருணையும் இல்லை, சேசுநாதருமில்லை" என்று சொன்னார்.

அதைக்கேட்டு அந்தச் சிறுபிள்ளை, "அப்படியானால் நான் இனிமேல் இந்தக் கோவிலுக்கு வரமாட்டேன், சேசுநாதர் இருக்கிற கோவிலுக்குத்தான் போவேன்" என்று சொன்னான். அந்த வார்த்தை பாதிரியாருடைய மனதில் ஞான வெளிச்சம்போல் ஆயிற்று. அதினால் அவர் திருச்சபையின் சத்தியத்தை அறிந்து சிலநாட்களுக்குப் பிறகு தம முழு குடும்பத்தோடுகூட சத்திய வேதத்தில் சேர்ந்து நல்ல கத்தோலிக்கரானார்.

(Olim.)

## Annual Report of the society of Foreign Missions for the year 1918.

### அன்னிய தேசத்து போதகர் சபையின் 1918-ம் ஆண்டின் வருஷாந்தர ரிப்போர்ட்.

| | | கோயமுத்தூர் மேற்றிராசனத்தில் |
|---|---|---|
| மேற்றிராசனங்கள் ... ... | 35 | |
| கத்தோலிக்கரின் தொகை ... | 1,652,795 | 42839 |
| கோவில்கள் ... ... ... | 6233 | 121 |
| ஐரோப்பிய வேதபோதகர்கள் ... | 1206 | 34 |
| சுதேச குருக்கள் ... ... | 1073 | 19 |
| உபதேசிமார் ... ... ... | 3108 | 50 |
| குருமடத்திலுள்ள வித்தியார்த்திகள் ... ... ... | 2495 | 13 |
| சந்நியாசிகள் ... ... ... | 393 | 11 |
| கன்னியாஸ்திரிகள் ... ... | 6632 | 114 |
| மனந்திரும்பின அஞ்ஞானிகள் ... | 27928 | 383 |
| பாடசாலைகள் ... ... ... | 5195 | 76 |
| மாணாக்கர்கள் ... ... ... | 187616 | 6526 |



**National contributions to the Propaganda of the Faith.**

| | | |
|---|---|---|
| பிராஞ்சு ... ... | 3,524,000 | Francs. |
| அமேரிக்கா ... ... | 2,325,000 | ,, |
| பெல்ஜியம் ... ... | 531,000 | ,, |
| இத்தலி ... ... | 230,000 | ,, |
| ஆலண்டு ... ... | 213,000 | ,, |
| அயர்லாண்டு ... ... | 191,000 | ,, |
| சுவிட்சர்லாண்டு ... | 115,000 | ,, |

## Friendly Talk.

### சிநேக வாய்ச்சல்லியம்.

மூன்றாம் நாள்.

முத்தாயி. அடே தம்பி முத்து உங்கக்கா எங்கே?

செசிலி. ஏனையா முத்தாயி அக்காளுக்கு என்ன குடுக்கிறே.

முத். ஆமாப் போ! குடுக்கிறதேத்தாங்கண்டே. மணியடிச்சு என்னேரமாச்சே. திங்கட்கிழமை மணியடிச்சதும் புதுநன்மைக்காரரெல்லாம் மந்திரம் படிக்க வரவேணுமின்னு போன ஞாயித்துக்கிழமை சாமியார் சொன்னதை அதுக்குள்ளே மறந்தாபோயிட்டே?

செ. இதாயா வந்திட்டே. இப்பத்தாங் கஞ்சி குடிச்சுப்போட்டுக் கைகழுவினேன்.

முத்து. வாங்கக்கா சுருக்காப் போலாம்.

செ. மு. மு. சாமி சர்வேசுரன் தோஸ்திரம்.

குரு. ஆசீர்வாதம். இன்னம் எல்லாரும் வல்லையே.

செ. அதெங்கயோ உன்னம் காணோஞ்சாமி.

குரு. இது பெரிய தொந்திரவு நமக்கு. இந்த ஊருப் பிள்ளைகள் வருஷா வருஷம் இந்தமாதிரிதான். மணியடித்த உடனே வரவேமாட்டார்கள். இது ஒரு மாமூல். உபதேசி எங்கே. கூப்பிடுங்கள்.

குரு. என்னப்பா பிள்ளைகள் சரியாய் வரவில்லையே. போய் எல்லாரையும் கூட்டிக்கொண்டு வா. சரி மற்றவர்கள் வருவார்கள். நீங்கள் உட்கார்ந்து சிலுவைபோட்டு மந்திரம் துவக்குங்கள்.

முத்து. அர்ச்சியசிஷ்ட சிலுவை...

செ. சாமி 'அன்னைக்கி என்னமோ சொல்லறேமின்னேங்களே. அது சொல்லுங்கோ சாமி.

குரு. என்ன சொல்லுகிறோமென்று சொன்னோம்.

செ. சாமி. செத்தவங்கோ ஒண்ணும் செய்யமாட்டாங்கோ. உசுரோடே இருக்கிறாங்களே. அவுங்கோ எல்லாம் செய்வாங்கோ அதெப்படி நல்லாச் சொல்லுங்கோ சாமி.

குரு. போன செவ்வாய்க்கிழமை தச்சப்பையன் சின்னச்சாமி 'இரண்டு பொம்மைபண்ணி சூச்சம்போட்டு ஆட்டினானே அதைப் பார்த்தீர்களா?

செ. ஆமாம் சாமி பாத்தோமா. தையாத் தய்யாவெண்ணு ஆடுச்சு.

குரு. சரி. நாம் சொல்லுகிறதைக் கவனமாய்க் கேளுங்கள். சின்னச்சாமி இரண்டு பொம்மைக்கும் இரண்டு சூச்சக் கவுரு போட்டிருந்தான். இரண்டு சூச்சத்தையும் பிடித்து இழுக்கவே இரண்டு பொம்மையும் கைகாலெல்லாம் ஆடினது. இதைக கவனிச்சுப் பார்த்தீர்களா.

செ. ஆமாம் சாமி இரண்டும் ஆடுச்சு. பிறகு ஒரு பொம்மை ஆடவேமாட்டெனெண்ணுட்டது சாமி. அதேஞ் சாமி அப்படி?

குரு. அதேன் தெரியுமா. ஒரு பொம்மையிலிருந்த சூச்சத்தை எடுத்துப்போட்டான் சின்னச்சாமி. அதுதான் சூச்சமிருந்த பொம்மை காலுங் கையும் கண்ணும் வாயும் அசைத்தது. சூச்சமில்லாது அசைக்கவேயில்லை.

செ. ஆமாம் அது நெசந்தான்.

குரு. அதேமாதிரி, தலை, கண், கை, கால், வாய் இவையெல்லாம் சரீரத்தில் வைத்து அதையுண்டாக்கி, கைகால் எல்லாம் அசைய சரீரத்துக்குள்ளே ஒரு சூச்சம் வைத்திருக்கிறார் சாமி. இந்தச் சூச்சத்துக்கு ஆத்துமமென்று பேர்வைச்சிருக்கிறார். இந்த ஆத்துமந்தான் கையை வேலைசெய்யச் செய்கிறது. காலை நடக்கச்செய்கிறது. கண்ணைப் பார்க்கச் செய்கிறது. வாயைப் பேசச்செய்கிறது. இப்படி ஆத்துமம் ஏவினபடி கை கால் எல்லாம் கீழ்ப்படிந்து செய்கின்றன. இதை நன்றாய்க் கண்டுபிடிக்கிறீர்களோ எல்லாரும்?

செ. மனுசருக்கு ஆத்துமமிருக்குதின்னு இன்னைக்குத்தான் எங்களுக்குத் தெரியுஞ் சாமி.

முத்து. ஏஞ்சாமி. எனக்கு இப்போ ஒரு ஆத்துமமிருக்குதல்லோ.

குரு. ஆமாம் இருக்கிறது.

முத்தாயி. ஏஞ்சாமி எனக்கு.

குரு. உனக்குங்கூடத்தான்.

முத்து. ஏஞ்சாமி எங்கக்காளுக்கு.

குரு. ஒவ்வொருத்தருக்கும் ஆத்துமம் கட்டாயமிருக்கிறது.

செ. மு. மு. பாராயா முத்தாயி நம்மளுக்கு ஒருத்தரும் இத்தனை நாளா இதெல்லாம் சொல்லிலேயம்மா. இன்னைக்குத்தாண்டா தம்பி நமக்கிதல்லாம் தெரியுது. ஏஞ்சாமி அப்போ உசுரோடிருக்கிறமட்டுந்தான் ஆத்துமஞ் சரீரத்துக் கூட இருக்குமாக்கு.

குரு. ஆமாம் அதுக்குச் சந்தேகமா. நாம் உயிரோடிருக்குமட்டும், ஆத்துமம சரீரத்தைவிட்டுப் பிரியாது. சரீரம் ஆத்துமத்தைவிட்டுப் பிரியாது. சாகிறபோது சாமி உத்திரவுப்படி ஆத்துமம் கூடுபோலிருக்கிற இந்த உடலை விட்டுப் பிரியும் (கவனமாய்க் கேளுங்கள். என்ன பேச்சங்கே. அஞ்சு மணிக் கவுரு இருக்குது பாருங்கோ அடிச்சுப்போடுவேன்).

எல்லாரும். இல்லைசாமி சொல்லுங்கோ சாமி சொல்லுங்கோ.

குரு. 'சூச்சமான ஆத்துமம் சரீரத்தை விட்டுப் போக, மனுஷன் சாக, இந்த உடல, கைகால், தலை சகலமும் ஒன்றும் செய்யாமல், போட்டது போட்டாப்போல வெரச்சு வெரகுக் கட்டைபோல் கிடக்க, பிறகு அதை வேத ஒழுங்குப்படி கல்லறையில் குழிதோண்டி அடக்கம்பண்ணுவார்கள். தெளிவாய்த் தெரியுதா இதெல்லாம்.

எல்லாரும். ஆமாஞ்சாமி. தெரியுது.

குரு. அப்போ செத்தபிறகு நமது கால் நடக்குமா?

செ. போங்கசாமி, விடுகதை போடாதீங்கோ. விடுவிக்கிறது நீங்கோ. உசுரு போனக்கா ஒடலு வெரச்சுப் போகுமின்னு சொல்லிப்போட்டு, சூச்ச ஆத்துமம் போன பிறகு கால் நடக்குமின்னு தெரியாதவங்காட்டக் கேக்கிறங்கோ. அதெங்கிருந்து சாமி நடக்கும். நடக்காது சாமீ நடக்காது.

குரு. சரீரத்தைக் குழியில் வைத்து மூடியபிறகு பூமிக்குள்ளே அதெப்படியிருக்கும்?

செ. ஐயோ அதெப்படிச் சொல்லறது அந்தச் சீண்டரத்தே. அந்தச் சூரநாத்தத்தே, அதை நெனேச்சா வாந்தி வருது. அது புழுத்து மண்ணோடு மண்ணாகி பொணநாத்தந்தா எடுத்துக்கிட்டிருக்குஞ்சாமி.

குரு. இதெல்லாம் உனக்கெப்படித் தெரியும்? நீ எப்போதாகிலும் கல்லறைக்குப் போனதுண்டா செசிலி?

செ. ஒண்ணு இரண்டுவிசை போயிருக்கிறேன் சாமி.

குரு. குழி வெட்டுகிறபோது, முந்திப் புதைத்தவர்களுடைய கால எலும்பு, கை எலும்பு, தலைமண்டையெல்லாங் கிடக்கிறதைக் கவனமாய்ப் பார்த்திருக்கிறாயா?

செ. ஆமாஞ்சாமி எலும்பு எல்லாம் இத்துக்கெடந்தது. தலைமுடி மாத்திரம அப்படியே இக்காமலிருந்தது சாமி.

குரு. அப்படியிருக்க நீங்கள் செத்தாலும், நாம் செத்தாலும் நம்மைக் குழியில் வைத்தபிறகு நம்மெல்லோருடைய சரீரமும் ஒருநாளைக்கு அப்படித்தானே ஆகும்.

செ. அதேமாதிரிதான் ஆகும்சாமி.

குரு. ஆகையால் பிள்ளைகளே, இப்படி எலும்பும் தோலும் தூசியும் புழுவுமாய் பொணநாற்றம் எடுக்கிற இந்த ஊத்தை உடல் எவ்வளவு அரோசிகமும் அருவருப்புக்குரிய காரியமல்லவா!

எல்லாரும். நீங்கள் சொல்லறது நெசந்தான் சாமி.

குரு. ஆகையால் இப்படி ஒன்றுக்குமுதவாத இச்சரீரத்தை அவ்வளவு கரிசனத்தோடு காப்பாற்றுமல, நம்முடைய ஆத்துமம் மோட்சம் போகிறதற்குத்தான் அதிகமாய்ப் பிரயாசப்படவேணும. அதற்காகத் தினமும் சாமியை வேண்டிக்கொள்ளுங்கள்.

எல்லாரும். அப்படியே வேண்டிக்கொள்ளுகிறோம் சாமி. சாமி சாமியாரெல்லாம் பொங்கைவெண்டி பாக்கப் போறாங்கோ நீங்கோ போகலே.

குரு. சண்டைக்குப்போன (Fanet) பனேட் சாமியார் 9 மணி மெயிலில் வருகிறார், அவரை அழைக்கப் போகிறார்கள். நாமும் போகவேணும்.



செ. அதாரு சாமி பணத்துச்சாமியார்? மிந்தி சுசானத் தோட்டம் பார்த்தாரோ அவுரு? கருமத்தம்பட்டியில் கோயில் அரையூட்டுக்கு மின்னாலே கல்லிக்கோடு ஓடு போட்டாரோ, அவுரு? சாமி. அவர் எனக்கு மூணு சுரூபம் குடுத்துப் போனார். உனக்கென்ன குடுத்தார் முத்தாயி. எனக்கு ஒரு பாடுபட்ட சுரூபம். முத்து உனக்கென்ன. எனக்கா கைரொம்ப முட்டாய். (தொடரும்) S. M.

---

## Teaching Grants for Elementary schools.

### பிரதமப் பாடசாலைகளுக்கு சர்க்காரால் கொடுக்கப்படும் பண உதவி.

சர்க்காரால் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட திட்டத்தின் பிரகாரம் இனிமேல் பிரதமப் பாடசாலைகளுக்கு அதிக பண உதவி கிடைக்குமென்று அநேகர் எண்ணிக்கொண்டு ஏமாந்து போகிறார்கள். அதற்கு அத்தாட்சியாக ஒருவர் மதிராஸ் டைம்ஸ் என்னும் பத்திரிகையில் கணக்கு காட்டி விவரிக்கிறதாவது:—

1. ஒரு பிரதமப் பள்ளிக்கூடத்தில் சராசரி 50-மாணாக்கர் ஆஜராயிருக்கிறார்கள் என்றும் அவர்களில் 30-பேர் பெண் பிள்ளைகளும், படிப்பில் கீழ்தர ஜாதி மாணாக்கர்களும் இருக்கிறார்கள் என்றும் வைத்துக்கொள்வோம். அந்தப் பள்ளிக்கூடத்தில் இரண்டு உபாத்திமார்கள் உண்டு. ஒருவர் தாழ்ந்த வகுப்பு எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர் வேலைக்காக பரீட்சை கொடுத்தவர், வேறொருவர். உபாத்தியாயர் பரீட்சை கொடுக்காதவர்.

| கிராண்ட் கணிக்கும் வகை: | பழைய சட்டம். ரூ. | புதிய சட்டம். ரூ. |
|---|---|---|
| தாழ்ந்த வகுப்பு எலிமென்டெரி பாடசாலை உபாத்தியாயருக்காக ... ... | 60 | 76 |
| உபாத்தியாயர் பரீட்சையில் தேறாத உபாத்தியாயருக்காக ... ... | 36 | 48 |
| 30-பெண்பிள்ளைகளுக்காகவும், படிப்பில் கீழ்தர ஜாதிப் பிள்ளைகளுக்காகவும் ... | 30 | 0 |
| மற்ற 20-மாணாக்கர்களுக்காக ... ... | 10 | 0 |
| மொத்தம் ... | 136 | 124 |

ரூ. 136—ரூ 124—ரூ. 12 நஷ்டம்.

2. ஒரு உயர்தர பிரதம பள்ளிக்கூடத்தில் 300 மாணுக்கர்களும், 8 உபாத்திமார்களும் இருக்கிறார்கள் என்று இப்போது வைத்துக்கொள்வோம்.

கிராண்ட் கணிக்கும் வகை :

| | பழைய சட்டம். | புதிய சட்டம். |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 2 செக்கன்டெரி பாடசாலை உபாத்தியாயர்களுக்காக ... ... | 288 | 336 |
| 2 தாழ்ந்த வகுப்பு செக்கன்டெரி பாடசாலை உபாத்தியாயர்களுக்காக ... | 144 | 184 |
| 2 பிரதம பாடசாலை உபாத்தியாயர் பரீட்சையில் தேர்ந்த உபாத்தியாயர்களுக்காக ... ... ... | 120 | 152 |
| 2 எலிமென்டெரி பரீட்சையில் தேருத உபாத்தியாயர்களுக்காக ... ... | 72 | 96 |
| 100 பெண்பிள்ளைகளுக்காகவும், படிப்பில் கீழ்தர ஜாதி பிள்ளைகளுக்காகவும் ... | 100 | 0 |
| 200 மற்ற மாணுக்கர்களுக்காக ... ... | 100 | 0 |
| மொத்தம் ... | 824 | 768 |

ரூ. 824 — ரூ. 768 ரூ. 56 நஷ்டம்.

பரிகரிப்பாக, விசேஷமான கிராண்ட் கொடுக்கப்படும் என்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் முந்தி அப்படித்தான் கொடுக்கப்பட்டது. ஆகையால் மேற்கண்ட நஷ்டம் அதினுல் சரிக்கட்டாது.

மேற்கண்ட புது சட்டத்தினுல் பிரதம பாடசாலைகளுக்கு நஷ்டம் வருமொழிய இலாபம் வரமாட்டாது என்று கண்டுபிடிக்கலாம்.

---

## Jayaseelan.

## ஜயசீலன்.

7-ம் அதிகாரம். (முன் தொடர்ச்சி.)

இவன் சொன்ன யோசனையானது மிக்க ஆர்ப்பரிப்புடன் மற்ற சிநேகிதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஐயோ பாவம்!! என்ன செய்வான் ஜயசீலன். சூதாட்டத்தில் இவன்



161401

தேர்ச்சியடைந்தவனல்ல. சிலநாட்களுக்குமுன் சீட்டு விளையாடுவது எப்படியென்றும், இந்த ஈனச்செய்கையால் விளையக்கூடிய தீங்கு, அவமானம், அபகீர்த்தி, தரித்திரம் முதலிய அநேக கெடுதிகளை உணரக்கூடாத அந்தஸ்திலிருந்தான். துஷ்டருடைய சகவாசம் கிடைத்த பிற்பாடோ. அதினுல் வரும் தீமையை மற்றவர்கள் வழியாகவும், தானும் அனுபோகத்தில் அறிந்திருந்தும் அதை விலக்கிவிட இவன் சிறிதும் முயற்சிக்கவில்லை. தான் விளையாட்டில் தோல்வி அடைவது நிச்சயமெனத் தெளிவாய் அறிந்தாலும், முகத்தாட்சணியத்தைப்பற்றி சம்மதிக்கவேண்டியது அவசியமாயிற்று. ஆகையால் தன் மானத்தையும் மதிப்பையும் காப்பாற்ற சிநேகிதர்களுடைய ஆலோசனைக்கு இணங்கினுன். இவர்களோ சூதாடுவதே தொழிலாகக் கொண்டவர்கள். மிகவும் சமர்த்தர்கள். இவர்கள்முன்னுல் ஜயசீலன் என்ன? தான் முன்னமே எண்ணினதுபோல் விளையாட்டுத் துவக்கத்திலிருந்து கடைசிமட்டும், ஒவ்வொரு ஆட்டத்திலும் அபஜெயமடைந்தான். ஆகையால் ஜயசீலனை, அன்று சிநேகிதர்களெல்லாம் ஆடிப்பாடிக் குதித்து உல்லாசம் கொண்டாடின செலவுக்கெல்லாம் உத்தரவாதியென்று தெளிவாய் விளங்கினது. ஜயசீலனுக்குக் கஸ்தி அதிகரித்தது. கஸ்தியில் ஆறுதலடையும், மனச் சஞ்சலத்துக்கு அவுஷதமாகவும், முன்னிருந்த குடி மயக்கத்தோடு இன்னம் தாராளமாய் மதுபானம் அருந்த, திக்குமுக்காடி, வாய்குளற, புத்தியும் தடுமாறத் துவககிற்று. தான் செய்வது என்னவென்று அறியாதவனுய், அறையிலுள்ள ஜாமான்களெல்லாம் தங்களுடைய இடத்தைவிட்டு மிகவும் வேகமாய் அங்குமிங்கும் அசைவதாகவும், தான் ஆகாயத்தில் தொங்குவதாகவும் காட்சி கண்டான். நிற்க சக்தியில்லாமல் சற்று இளைப்பாற உட்கார முயலுகையில் மதுவின் மயக்கத்தால் தலைகீழாக விழுந்து ஸ்மரணையின்றிக்கிடந்தான்.

ஜயசீலன் இருந்த பரிதாப அந்தஸ்தைக்கண்ட அவனு சிநேகிதர்கள் கொஞ்சமாவது ஈவிரக்கம் காண்பித்து அவனுக்கு உதவினர்களோ! சற்றேனுமில்லை. பிரக்ஞையின்றி தலைகீழாககிடக்கும இவனைத் தூக்கிவிடாமல் இவனருகிலேயே உட்கார்ந்து இந்த விநோதத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் அனைவரும் இரவு 11 மணி வரைக்கும் இந்த நிர்ப்பாக்கிய ஸ்தலத்தில் பலவகையான சாராயங்களை அடிக்கடி குடித்து காலங்கழித்தபின் ஒருவன் கூட்டத்தில் எழுந்து 'கண்பர்காள்: ஜயசீலன் குடி மயக்கத்தால் பரவசமானவன்

போல் காணப்படுகிறான், இவன் பரவசம் நீங்கி எப்போது சுயபுத்தியை யடைவானோ தெரியாது, காலதாமதம் செய்யாமல் நாம் சீக்கிரம் நமது வீடுபோய்ச் சேரவேண்டும். நாம் ஆரம்பித்த வேடிக்கையின் முடிவை இன்னம் சுகிக்குமாறு இந்த முழுக்குடியனை இவ்விடமே விட்டு வெளிப்படுவது நலம். புத்தித் தெளிவடைந்து எழுந்து பார்க்கும்போது, தான் இருக்கும் இடம் யாதென்று அறியான். அநேக கூளிகள் சேர்ந்து பாதாளத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்ததாக எண்ணுவான். ஆகையால் நாம் தீவிரமாய்ப் புறப்பட்டு வெளியில் செல்லலாம் வாருங்கள்" என்று கூவிச் சத்தமிட்டான். தன் சிநேகிதன் தாழ்த்தப்படுவதற்கும் அவமானம் அடைவதற்கும் காரணக் கர்த்தனாயிருந்த தனபாலன் இந்த யோசனையை மறுத்து, தீங்கை விளைக்குவதற்குப் பதிலாய் மற்றவர்களுக்கு முன் அவனே பின்வரும சதியை நிறைவேற்றத் துணிந்தான். என்னவெனில், சூதாடும் வீட்டுக் காவலாளியிடம் ஜயசீலன் தங்களுக்கு நேர்ந்த சகல செலவுகளுக்கும் உத்தரவாதியாயிருப்பதாக ஒத்துக்கொண்டபடியால், அவன் தூக்கத்தைக் கலைக்காமல் அவன் மயக்கம் தீர்ந்து எழுந்தபின், தனக்குச் செல்லவேண்டிய பணத்தை அவனிடமே வசூலிக்கும்படி சொல்லிவிட்டு எல்லோரும் தங்கள் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

நடுச்சாமம் 12 மணி அடித்தது. போலீஸ் ஒழுங்குப் பிரகாரம் அதற்குப்பின் கடை சாத்தப்படவேண்டும். அரைக் குடியரும், முக்கால் குடியரும் தட்டுத்தள்ளாடி அவரவர் வீட்டுக்குத் திரும்பிவிட்டார்கள். முழுக்குடியனான ஜயசீலனோ இன்னம் சிலருடன் கடை சாத்தப்படும் நேரம் மட்டும் இவ்விடத்திலேயே தங்கிவிட்டான். காவலாளி அரைத்தூக்கத்திலிருந்த சிலரைத் தட்டி யெழுப்பியபின், ஜயசீலனிடம் வர இவன் உயிரற்ற பிணம்போல் அசைவற்று, கண்திறவாமலும், யாதொரு பதில் சொல்லாமலும் அயர்ந்த நித்திரையாய்க் குடி மயக்கத்தில் கிடந்தான். காவலாளி அவனையொத்த பலரை இக்கடையில் பலதடவை பார்க்க நேர்ந்திருப்பதால் இதன் காரணம் என்னதென்றறிந்து, ஜயசீலனை வெளிப்படுத்தி கூடுமானால் அவனை வீட்டுக்கு அனுப்ப முயற்சிசெய்தான். ஆனால் அவன் செலுத்தவேண்டிய தொகையை வசூல்செய்வதெப்படி? சட்டைப் பையைத் தடவிப் பார்க்கையில் அதனுள் ஓர் கடிதமும், 15 ரூபாய் பாங்கி நோட்டும் இருப்பதாகக் கண்டான். இன்னம் தனக்குச் சேரவேண்டிய பாக்கி 10 ரூபாய்



கிடைப்பதற்கு வழி தெரியாமையால், வழக்கமாய்ச் சாராயக் கடைகளில் நடப்பதுபோல் ஜயசீலன்மேல் அணிந்திருந்த சட்டையையும் அவன் ஜரிகை முண்டாசையும் பணத்துக்குப் பதிலாய் எடுத்துக்கொண்டான். ஜேப்பிலிருந்த கடிதத்தின் வழியாய் ஜயசீலன் இருந்த வீட்டின் நம்பரும் வீதியும் அறிந்து, அச்சமயத்தில் கடையில் இருந்த சில குடியர்களைப் பார்த்து "ஒரு டிராம் சாராயத்துக்காக ஜயசீலனை வீடு கொண்டுபோய்ச் சேர்ப்பீர்களா" என்றான். அவர்களும் அதற்குச் சம்மதித்து ஜயசீலனை ஒரு கட்டிலில் கிடத்தி அவன் தகப்பனார் வீட்டின் மார்க்கமாய்த் தூக்கிப்போனார்கள். வீடு சேர்ந்ததும் இன்னமும் தூக்கத்திலிருந்த ஜயசீலனை அலங்கோலமாய்த் திண்ணையில்போட்டுத் தலையணையாக ஒரு கல்லையும் வைத்துத் தாங்கள் வந்த வழியாய்த் திரும்பினார்கள்.

(தொடரும்.)

---

## Here and There.

### நானா சங்கதிகள்.

Montmartre:—பிரான்சு தேசத்தில் பாரீஸ் பட்டணத்திலுள்ள Montmartre என்னும் மலையில் சேசுநாதருடைய திரு இருதயத்தைக் குறித்து ஸ்தாபிக்கப்பட்ட தேவாலயம் அக்டோபர்-௴ 16-ம் தேதி அபிஷேகஞ் செய்யப்பட்டது. அர்ச். பாப்புவின் ஸ்தானாதிபதியாகிய மகா கனம் பொருந்திய Vico கர்தினால் அவர்கள் அத்திரு சடங்குக்கு முகாமையாயிருந்தார்கள். தவிர அநேக கர்தினால்மார்களும், மேற்றிராணிமார்களும், குருக்களும், கணக்கில்லாத விசுவாசிகளும் வெகு ஆடம்பரத்தோடே அந்த மகிமையுள்ள திருநாளைக் கொண்டாடினார்கள். கடைசியாய் எல்லாரும் சேர்ந்து திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கிற செபத்தை வேண்டிக்கொண்டார்கள். அந்த அலங்காரமான கோவில் பிரான்சு கத்தோலிக்கருடைய அழியாத விசுவாசத்துக்கு அடையாளம்.

Transfers:—சங். (H. Tignous) திக்னுஸ் குருசுவாமியார் கேத்திக்கும் சங். இஞ்ஞாசிநாதர் குருசுவாமியார் புக்கிலிப்பாளையத்துக்கும், சங். அந்தோனிநாதர் குருசுவாமியார் உடமல் பேட்டைக்கும், சங். மதலைநாதர் குருசுவாமியார் வடக்கஞ்

சேரிக்கும், சங். (L. Perriere) பெரியர் குருசுவாமியார் கோயமுத்தூர் குரு மடத்துக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

Back from France:—சங். (A. Panet) பானெட் குருசுவாமியார் ஐரோப்பா மகா யுத்தத்திலிருந்து, சென்ற நவம்பர்-மீ 17-ம தேதி கோயமுத்தூருக்கு சுகமாய்த் திரும்பி வந்ததினால் சந்தோஷப்படுகிறோம். இன்னம் சங். (Begls) பெல்ஸ் குரு சுவாமியாரும், சங். (P. Crayssac) கிரேசக் குரு சுவாமியாரும் கூடிய சீக்கிரம் வருவார்களென்று எதிர்பார்க்கிறோம.

Beware of imitation: 100-ரூபாய் கள்ள பாங்கு நோட்டுகள் B. D. 74 1914-வரு ஆகஸ்ட்-மீ 24-ம் தேதி என்னும் முத்திரையிடப்பட்டு அநேகம பரப்பப்பட்டிருக்கின்றன என்று தெரியவந்தது. ஷை கள்ள நோட்டு செல்லாதென்று அறிந்து, 100-ரூபாய் நோட்டு வாங்கும்போதாவது, மாற்றும் போதாவது ஏமாந்துபோகாதபடி மெத்த எச்சரிக்கையாயிருக்கத்தகும்.

For the devasted parts of France:—பிராஞ்சுதேசத்தில் கடந்த யுத்தத்தில் பாழாக்கப்பட்ட நாடுகளிலுள்ள கோவில்களையும் வீடுகளையும் செப்பனிடுவதற்கு உதவியாக வசூலான தர்மத் தண்டல்.

| | |
|---|---|
| கோயம்பத்தூர் மேற்றிராசனக் கோவில் பங்கு | ரூ. 87-8-0 |
| வில்லிங்டன் பங்கு (முதல்பாகம்)... ... | ,, 37-0-0 |
| கருமத்தன்பட்டிப் பங்கு ... ... ... | ,, 11-0-0 |
| ஆக மொத்தம் | 135-8-0 |

---

**For the church of the Sacred Heart, Coimbatore.**

**கோயம்பத்தூர் திரு இருதயக் கோவில் கட்டிடத்திற்குத் தர்மம்.**

A. V. Arokiasawmy, writer, Coonoor ரூ. 1.

---

# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VI.** **January 1920.** **No. 1.**

புத்தகம் VI.] FIDES AC ROBUR. [நம்பர் 1.

## A Happy New Year.

### பாக்கியமான புது வருஷம்.

நமது பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கும், இதனை வாசிப்பவர்களுக்கும் இப்புது வருஷம் பாக்கியமான வருஷமாக இருக்கும்படி சர்வேசுரனைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். வியாதியஸ்தருக்குச் சௌக்கியமும், கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலும், ஏழைகளுக்கு வேண்டிய உதவியும், சகலருக்கும் தேவ ஆசீர்வாதமும் உண்டாகும்படி திவ்விய குழந்தை சேசுநாதர் கிருபை செய்வாராக.

## The Little Garden of Roses.

### சிறு ரோஜாத் தோட்டம்.

### மலர் 8.

"Rejoice in the Lord always" (Phil. IV. 9.)

"ஆண்டவரிடத்தில் எப்போதும் சந்தோஷமாயிருங்கள்" (பிலிப். 4-ம் அதி. 9-ம் வச.)

1. நல்லோர்களோடு சேர்ந்து களிகூர்ந்திரு. உன் பகைவரைப் பொறுத்துச் சிநேகி. துக்கப்படுகிறவர்களோடு நீயும் துக்கப்படு. புறத்தியார் உனக்குச் செய்யும் குற்றங்களையெல்லாம் முழுமனதோடு பொறுத்துக்கொள். எல்லாருக்காகவும் வேண்டிக்கொள்.

ஆத்துமத்தில் வெறுப்பும் துவேஷமுமுண்டாக்கக்கூடிய துக்கமுள்ள விசாரத்தை உன்னிடத்திலிருந்து தூரத்திவிடு. சேசுக்கிறீஸ்துநாதருடைய திருப்பாடுகளைப்பற்றியும், அவருடைய பரிசுத்த ஜீவியத்தைப்பற்றியும் அடிக்கடி தியானிக்கும் சுகிர்த வழக்கத்தைக் கற்றுக்கொள். அதனால் உனக்கு நேரிடும் தந்திர சோதனைகளிலும், உன்னிருதயத்தில் பல விசாரங்கள் கிளம்பி அதைத் துன்பப்படுத்துகின்றபோதும் அவரிடத்தில் மெய்யான ஆறுதலைக் கண்டடைவாய். நன்னடக்கையோடு கூடிய வாழ்வு கீர்த்தியைப் பெறுவிக்கும்; ஆனால் அசிரத்தையான சம்பாஷணையோ எல்லோருக்கும் சுமையாயிருக்கும்.

நல்ல மனச்சாட்சியுள்ளவனாயிருப்பாயேயாகில் எப்போதும் சந்தோஷமுள்ளவனாயிருப்பாய். தீயமனச்சாட்சியோவென்றால் எப்போதும் அச்சமும் ஏக்கமுமுள்ளதாயிருக்கும். எப்போதும் நன்மையையே செய்யப் பிரயாசப்படு. அப்போது நீ என்றும் முடிவில்லாத சமாதானத்தை அநுபவிப்பாய். நன்னெறியில் ஒரு க்ஷணமும் பிசகாமல் நடந்து வந்தால் தீயோருடைய நிந்தைக்குக் கொஞ்சமேனும் பயப்படவேண்டியதில்லை. நற்போதனையான சம்பாஷணை ஒருவனுக்கு இருதய சமாதானத்தையும், ஞான சந்தோஷத்தையும் பெறுவிப்பதுமல்லாமல், அவனுக்குப் பேரும் கீர்த்தியையும் உண்டாக்கும்.



முகப்பிரீதியைத் தேடுகிறவனுக்கு அளவற்ற இகழ்ச்சி கிடைக்கும். ஏனென்றால் ஒரு மதியீனனுடைய முகஸ்துதியானது விவேகமும் நன்னடக்கையுமுள்ளவர்களுடைய கண்டனையைப் பார்க்கிலும் அதிக தீங்கிழைக்கும்.

2. தாழ்ச்சியுள்ள ஜெபம் விண்ணுலகத்தை ஊடுருவச் செய்யும். மேலும் அது கடவுளின் கோபத்தைத் தணித்து அவருடைய இரக்கத்தையும் வரப்பிரசாதத்தையும் பெறுவித்துப் பசாசின் தந்திர சோதனைகளை வெகு சுளுவில் வெற்றிகொள்ளச் செய்யும.

உத்தம மனஸ்தாபம் ஆத்துமத்தின் பாவக்கறைகளைப் போக்கி, அதைச் சுத்திகரிக்கச் செய்யும். நம்பிக்கையுடனும் ஆவலுடனும் செய்யும் தியானமானது தபசின் அவசியத்தைக் குறைக்கும்.

வியர்த்தமான சம்பாஷணை தெய்வ பக்தியைக் குறைக்கும்; ஆனால் பக்தியுள்ள சம்பாஷணையோ ஆத்தும சந்தோஷத்தை அதிகரிக்கச் செய்யும்.

எவ்விடத்திலும் நாம் நமது பஞ்சேந்திரியங்களின்மேல் சட்டும் காவலுமாயிருக்கவேண்டியது. தன் வேலையினிமித்தம் வெளியேறிச் செல்பவனுக்கு மனவொடுக்கம் மிகவும் பிரயோசனத்தைத் தரும்.

அடிக்கடி ஜெபம் பண்ணுவது சமாதானத்தின் அடைக்கலமும், உதடுகளின் மவுனம் அதனின் மெய்யான வாசஸ்தலமுமாகும். சாங்கோபாங்கநெறியை அதிக உற்சாகத்துடன் நாடுகிறவர்களனந்தம். ஆனால் அதில் மரணபரியந்தம் நிலைநிற்பவனே நித்திய மோட்ச முடியை அடைவான்.

கிறீஸ்துநாதருடைய பாரம் அவனைச் சிநேகிக்கிறவர்களுக்கு மதுரமாகவும், சிரத்தையில்லாதவர்களுக்குச் சிரமமாகவும், அகங்காரிகளுக்குக் கசப்பாகவும், சாந்தமுள்ளவர்களுக்கு இலேசாகவும், அடக்கமுள்ளவர்களுக்குப் பிரியமாகவுமிருக்கும்.

இலௌகீக மனிதன் ஐம்புலன்களின் ஆசாபாசங்களைத் தேடுகிறான். ஆனால் ஆத்மார்த்த மனிதனோ அவைகளையெல்லாம் அருவருத்து விலக்குகிறான்.

சரீர துராசாபாசங்களைத் தடுத்தடக்க மகா பலவீனனாகவிருப்பதே ஒரு புண்ணியவாளனுக்கு வெகுவாய் உண்டாகும் கஸ்தி. ஏன் சர்வேசுரன் அவைகளிருக்க விரும்புகிறார்? ஏனெனில் மனிதன் எப்போதும் தாழ்ச்சியுள்ளவனாகவிருந்து இடைவிடாமல் அவைகளை எதிர்த்து ஜெயிக்கவேண்டி தேவ உதவியைத் தேடவுந்தான்.

3. பெருந்தன்மையுள்ள மனிதன் தன் மகிமையைக் கண்டு சந்தோஷிப்பதுபோலவும், தனவந்தன் தன் செல்வத்தினால் மகிழ்வடைந்திருப்பதுபோலவும், மெய்யாகவே அடக்கமுள்ளவன் தன்னைத்தான் நிகிருஷ்டமாய் எண்ணுவதிலும், இருதயத் தாழ்ச்சியுள்ளவன் தன் வறுமையிலும் சந்தோஷங் கொள்ளுகிறான்.

பரலோக இராஜாவாகிய கிறீஸ்துநாதர் தமது தாசர்களுக்குத் தாமே உன்னத கீர்த்தியும் செல்வமுமாகவிருக்கிறார்.

கடவுளுக்கன்னியமான அன்பெல்லாம் அசுத்தமானவை; இன்ப சுகங்களெல்லாம் வீணானவை; செல்வங்களெல்லாம் தரித்திரமே.

ஆத்துமாவின் தாகத்தை அதைச் சிருஷ்டித்த கடவுளைத் தவிர வேறெதுவும் நீக்க முடியாது, அல்லது திருப்திசெய்ய முடியாது. இவ்வுலகப் பற்றுதல்களின்மேல் ஆசைவைக்காத மனிதனின் ஆத்துமம் உண்மையாகவே சுயேச்சையானது.

4. நற்காரியங்களைச் செய்வதும், கஷ்ட துன்பங்களை அநுபவிப்பதும், எல்லாக் காரியங்களில் சர்வேசுரனைப் புகழ்வதும், அவர் தரும் வரங்களினின்று டம்பமடையாதிருப்பதும் ஆகிய இவையெல்லாம் நீதிமான்களின் வாழ்க்கை நிலையாம்.

தன்னை இகழ்ச்சியாக மதித்து மனோவாக்குக் காயங்களில் ஏற்படும் நன்மையைக் கடவுளுக்கே சமர்ப்பிக்கிறவனே அவருக்கு நியாயமாய்ச் சேரவேண்டிய புகழை அவருக்குத் தந்தவனாவான்.

வீண் டம்பத்துக்கேதுவான எண்ணங்கள் உன் மனதில் உதித்தால், நீ அவற்றிற்குட்பட்டிராமல், "எங்களுக்கல்ல, கர்த்தாவே! எங்களுக்கல்ல, உமது நாமத்திற்கே தோத்திரத்தைச் செலுத்துவேன்" என்று தாழ்ச்சியோடும் தீர்க்கதரிசி சொன்ன விதமாய்ச் சொல்லுவாயாக.

தனது துராசைகளை அடக்குவதிலும், தனது வெறுப்புகளை மேற்கொள்ளுவதிலும், தனக்கு வரும் துன்ப இடைஞ்சல்களை நல்ல மனதோடு பொறுத்துக்கொள்ளுவதிலுமே மனிதனின் உத்தம கீர்த்திவாய்ந்த வெற்றியடைந்திருக்கிறது

(இன்னும் வரும்.) S. S. G.

## Seven kinds of givers.

## தர்மம் கொடுக்கிறவர்கள் ஏழுவகைப்படுவார்கள்.

1-வது. சிலர் பிரியத்தோடும் தாராளத்தோடும் தர்மம் செய்கிறார்கள். ஆனால் மற்றவர்களுக்கல்ல, தங்களுக்குத் தானே அவ்விதமான தர்மம் செய்கிறார்கள். அல்லது பிறரிடத்தில் தாங்கள் கொடுக்கிற அற்பப் பொருளுக்குப் பதிலாக அதிக இனாம் வாங்க விரும்பி தர்மம் செய்கிறார்கள், அது சுயபட்சம்.

2-வது. சிலர் விவேகமில்லாமலும், சுத்த கருத்தில்லாமலும் ஒருவிதமாய்க் கண்ணை மூடிக்கொண்டு தர்மஞ் செய்கிறார்கள். அது குருட்டுத் தர்மம்.

3-வது. சிலர் மனுஷர் முகத்தாக்ஷணைக்காகவும், பெருமை சிலாக்கியத்திற்காகவும் தர்மம் செய்கிறார்கள். அது வேடிக்கைத் தர்மம்.

4-வது. சிலர் தாங்கள் செய்த அநியாயங்களுக்காக பரிகாரமாகவும், தங்கள் மனச்சாட்சிக்கு ஆறுதலாகவும் தர்மம் செய்கிறார்கள். அது தவத்தர்மம்.

5-வது. மற்றவர்கள் தர்மம் செய்கிறதுபோல தாங்களும் தர்மம் செய்யவேணுமென்றும், அப்படி செய்யாதே போனால் ஒருவித கேவலமாயிருக்குமென்றும் எண்ணி சிலர் தர்மம் செய்கிறார்கள். அது அடிமைக்குரிய தர்மம்.

6-வது. சிலர் தர்மம் செய்வது கடன் என்னும் கருத்தோடே, பிறர்சிநேகமில்லாமல், கடமையின் கட்டாயத்தினால் மாத்திரம் தர்மம் செய்கிறார்கள். அது கடமைக்குரிய தர்மம்.

7-வது. சிலர் சேசுநாதருடைய கட்டளையின்படி தங்களைத் தாங்கள் சிநேகிக்குமாப்போலே பிறரையும் சிநேகித்து, அவர்களுக்கு உதவியும் செய்ய விரும்பி தர்மம் செய்கிறார்கள். அது கிறீஸ்துவ தர்மம்.

இவ் ஏழுவகையில் நீ எந்த வகையில் இருக்கிறாய்?

## Friendly Talk.

### சிநேக வாய்ச்சல்லியம்.

#### 4-ம் நாள்.

சே: சர்வேசுரன் தோத்திரம்.

கு: அப்படிச் சொல்லாதே செசிலி. நாம் சொல்லுகிற மாதிரி சொல்லு.

சே: அதெப்படிச் சொல்லுங்கோ சாமி பார்க்கலா.

கு: சர்வேசுரனுக்குத் தோத்திரம்.

சே: சாமி நான் சொல்லறேன் நல்லாய்ப் பாருங்கோ சாமி. "சர்வேஸ்பரனுக்குத் தோஸ்திரம்.

கு: ஆசிர்வாதம். சரி இனிமேல் அப்படித்தான் சொல்லவனும் தெரியுமா ?

சே: தெரியும் சாமி.

கு: நாம் முந்தி சொன்னதெல்லாம் உன் மனதில் வைத்ருதிக்கிறுயா ? நாம் செத்தபிறகு நமது சரீரம் பூமிக்குள்ளே புழுத்து நாரி மண்ணோடு மண்ணாய்ப் போகுமல்லவா ?

சே: ஆமாஞ்சாமி.

கு: சரீரம் அப்படியானால், ஆத்துமத்துக்கு என்னவரும் உனக்குத் தெரியுமா முத்து ?

மு: எனக்கெப்படித் தெரியும் சாமி ?

கு: முத்தாயி நீ சொல்லு பார்க்கலாம்.

மு: ஐயோ ! உடம்பு என்னைவிட்டு ஓடிப்போச்சே, நான் ஒண்டியமாய் இருக்கிறதக்காச்சே, நான் என்னப்பா பண்ணிட்டுமிண்ணு அழுதுக்கிட்டேயிருக்குஞ் சாமி.

கு: அப்படியல்ல பிள்ளைகளே ! ஆத்துமஞ் சரீரத்தைவிட்டுப் பிரிந்தவுடனே ஒரு நொடியில் சாமி கிட்டப்போய் தான் உலகத்தில் சரீரத்துக்கூட இருந்தபோது தான் பண்ணினது, சொன்னது, நினைத்தது சகலத்தையும் ஒன்றும் விடாமல் சாமிகிட்ட கணக்காய்ச்சொல்லும். அப்போது, அது நல்ல ஆத்துமமாயிருந்தால், அதாவது உலகத்திலே இருக்



கும்போது சாமி பேச்சைத் தட்டாமல், ஒரு குற்றமும் செய்யாமல், சாமிக்குப் பிரியமான புண்ணியங்களை செய்து வந்திருந்தால், சுவாமி அதை மோட்சத்திற்கு ரொம்ப சந்தோஷத்தோடு அழைத்துக்கொண்டுபோய், அர்ச். தேவமாதா, சகல சம்மனசுகள், சகல அர்ச்சியசிஷ்டவர்கள் பக்கத்திலே நல்ல நேர்த்தியான தங்க சிம்மாசனத்திலே உட்காரவைப்பார். அங்கே எப்போதும் சந்தோஷமேதவிர சலிப்பும் துக்கமும் கிடையவே கிடையாது.

கு: சரி, ஆத்துமம் சரீரத்தைவிட்டுப் பிரிந்தவுடனே அதற்கு என்ன சம்பவிக்கும் ? இப்போது சொல்லிக்கொடுத்தேனே, சொல்லு பார்க்கலாம் செசிலி.

சே: ஆத்துமம் சரீரத்தைவிட்டுப் பிரிந்தவுடனே மோட்சத்துக்குப் போகும்.

கு: மோட்சத்துக்குத்தான் போகும். நிசந்தான், ஆனால் எப்போ ? அது உலகத்திலிருக்கும்போது காலை மாலை ஜெபம் செய்து, ஞாயிற்றுக்கிழமை கடன் திருநாட்களில் முழுப் பூசைகண்டு, அந்நாட்களில் விலக்கப்பட்ட வேலை செய்யாமலிருந்து, சாமி உயிர்த்த திருநாள் சமயத்தில் வருஷக்கடன் தீர்க்க பாவசங்கீர்த்தனம்பண்ணி நன்மை வாங்கி, சுவாமிக்குப் பிரியமில்லாத சகல பாவத்தையும் தள்ளி, அவருக்குப் பிரியமான புண்ணியத்தையே செய்து கொண்டு வந்திருந்தால் தான் மோட்சத்துக்குப்போகும். ஆனால், அப்படிச் செய்யாமல் திருடிக்கொண்டும், பொய் பித்தலாட்டம் பேசி சத்தியம்பண்ணி, சாமியைத் திட்டி, சாமி கட்டளைப் படியும், திருச்சபையின் சொற்படியும், பெரியோர்கள் புத்திப் பிரகாரமும் நடக்காமலும் இருந்தால் மோட்சத்துக்குப் போக முடியவே முடியாது. ஆனால் எங்கே போகவேணும ! நரகத்திற்கேதான் போய்த் தீரவேணும்.

**பிள்ளைகள்:** மோட்சத்திலே ஆத்துமம் எப்போதும் சந்தோஷமாயிருக்குமிண்ணு சொன்னய்ங்களே சாமி, நரகத்துக்குப்போனால் அங்கே எப்படியிருக்கும் ஆத்துமம்.

கு: நரகத்திலேயா ! நரகத்திலே பொல்லாத பிசாசுகளாலே அடியும் உதையும்பட்டு, எப்போதும் கொள்ளிக் கட்டை நெருப்பிலே வேகிறுப்போல ஆத்துமமும் ஓயாமல் வெந்துகொண்டேயிருக்கும். இந்த வேதனையெல்லாம சகிக்க முடியாமல் அந்த ஆத்துமம் ஒரு ஆதரவுமில்லாமல் தலைமேலே கை வைத்து ஓயாமல் அழுத கண்ணீரும் சிந்தின

ழக்குமாயிருக்கும். இதெல்லாம் உன் தாயார் உனக்குச் சொல்லிக்கொடுக்கவில்லையா செசிலி?

சே: இல்லை சாமி. நான் சின்னப் பிள்ளையாயிருக்கும் போதே எங்கம்மா செத்துப்போச்சு சாமி. வேறே ஆரு எனக்கு அவ்வளவு அக்கறையோடு சொல்லிக் கொடுப்பாங்கோ சாமி!

கு: பரிதாபம்! இந்தச் சின்னஞ் சிறுவயசிலேயே சுவாமி உனக்கு இந்தப் பெரிய துன்பத்தை வைத்திட்டார் அம்மணி, அதினால்தான் வேதகாரியங்கள் அத்தனை நன்றாய்த் தெரிகிறதில்லை. ஆனாலும் இருக்கட்டும், அது உன் தப்பிதமல்ல, சொல்லிக்கொடுத்திருந்தால் நன்றாய்ப் படித்திருப்பாய். பின்னே, நீங்கள் ஒருசோட்டுப்பிள்ளைகள் எல்லாம் ஒன்றாய்க் கூடி வேலையொழிந்த சமயத்தில் வேதகாரியங்களைக் குறித்தும் சாமியைக் குறித்தும் பேசிக்கொள்ளுகிற வழக்கம் இல்லையா?

மு: அப்படியும் பேசாதாஞ்சாமி; சிறிப்புக்கும், பரிகாசத்திற்கும், வெளையாட்டுக்கும், கேலிக்கும் பேசாதாஞ் சாமி. உங்கிட்ட ஏன் அதை ஒழிக்காட்டி?

கு: ஆகையால் பிள்ளைகளே, நாமெல்லாம் மோட்சத்திற்குப் போனால்தான் நல்ல சந்தோஷமாயிருக்கலாம். அதற்கு என்ன செய்யவேணும்? வேதகாரியங்களை அறியவேணும். அப்படி அறிந்தாலதான் மோட்சத்திற்கு நம்மைக் கூட்டிக் கொண்டுபோகிற வழியைக் கண்டுபிடிப்போம். இல்லாவிடில் மோட்சம்போகிற வழியைக் கண்டுபிடிக்க முடியாது. அப்படியிருக்க அந்த வழியைக் கண்டுபிடிக்க வேதகாரியங்கள் எவ்வளவு அவசரமான காரியமென்று இப்போது உங்களுக்கு நன்றாய்த் தெரியுதல்லவா?

பிள்: ஆமாம் சாமி, வேதத்தைக் கவனமாய்ப் படிச்சுக்கிறது ரொம்ப ரொம்ப அவசரமின்னு தெரியுது சாமி.

கு: ரொம்ப சந்தோஷம். இன்னும் நீங்கள் எப்போதும் இதே புத்தியோடும் ஆசையோடும் இருக்கவேணும். நாமும் உங்களுக்கு நமது வேதத்தை நல்ல பட்சத்தோடும் பிரியத்தோடும சொல்லிக்கொடுக்க ரொம்ப ஆசையாய் இருக்கிறோம். நீங்கள் எந்த நேரத்தில் வந்து கேட்டபோதிலும் நாம் நமது வேதகாரியங்களை உங்களுக்கு விபரமாய்ச் சொல்லி மோட்சத்திற்குப் போகிற பாதையைக் காட்டத் தயாராய்



இருக்கிறோம். நீங்கள் நம்மிடத்தில் வரப் பயப்படவேண்டியதில்லை. தெரியுமா பிள்ளைகளே.

பி: தெரியுஞ்சாமி, உங்ககிட்ட வாரதுக்கு எங்களுக்கு என்ன பயஞ்சாமி.

கு: நல்லது, போய்வாருங்கள்.

பி: சர்வேசுப்பரனுக்குத் தோஸ்திரம்சாமி.

கு: ஆசீர்வாதம்.

பி: சாமீ! சாமீ!! சாமீ!!! சாமி நில்லுங்கோ.

கு: என்ன, என்னத்திற்கு நிற்கச் சொல்லுகிறீர்கள்?

பி: சாமி கொளந்தை சாமி திருநாள் எண்ணைக்கி?

கு: ஏன் அதைக் கேட்கிறீர்கள்?

பி: என்னசாமி, அண்ணைக்குப் பெரிய திருநாளு. சாமிக்குப் பூவு, மரிக்கொழுந்து, சாம்பிராணி, மொழுகுதிரி சந்தையிலே வாங்கினும். அப்பரம் நாங்கெல்லாம் தலை சீவி, பூவச்சு, புதுச்சீலை கட்டிக்கிட்டு சாமத்திலே சாமி கும்பிட கோயிலுககு வருவோ. சாமிக்கு முத்தி செய்து காசு போடினு. ஆராரோ தூங்கு தூங்கிண்ணு பாட்டு பாடுவாங்கோ, நாங்கெல்லாஞ்சேந்து கும்மியடிப்போம் சாமிக்கு. இதுக்குத்தாஞ்சாமி கேட்டோ, சாமி எண்ணைக்கிச் சொல்லுங்கோ.

கு: இன்னம் பத்து நாளிருக்கிறது. இன்றைக்கு ஒன்பதாம் பக்கம் ஒருசந்தி.

பி: எப்படிச்சாமி, எண்ணைய்க்கி.

கு: வருகிற வியாழக்கிழமைபோய், இன்னொரு வியாழக்கிழமைக்கு.

பி: ஏஞ்சாமி. இந்த விசாளனில்லை. உன்னொரு விசாளத்திற்கு. ஏஞ்சாமி அண்ணைக்குத்தானோ?

கு: ஆமாம், போய்விட்டு வாருங்கள்.

பி: வாழுத்தாயி போலா. சாமீ சோஸ்திரம்.

கு: ஆசீர்வாதம்.

(தொடரும்.) S. M.

## Madras and the War.

### மதுராஸும் சண்டையும்.

இந்தப் பெரிய சண்டையில் மாட்சிமைதங்கிய மன்னனும் சக்கரவர்த்தியின் சேனைகளுக்கு உதவியாக சென்னை இராஜதானியிலிருந்து போனவர்களில் 60,000-க்கு மேலே சண்டை செய்தார்கள். சில விசேஷ ஜில்லாக்களிலிருந்து சேர்த்து அனுப்பப்பட்ட மனிதர்களின் தொகை பின் வருமாறு.

சேர்க்கப்பட்டவர்கள்.

| ஜில்லா. | | சண்டை செய்தவர்கள். | சண்டை செய்யாத படைப் பின்னுட்கள். |
|---|---|---|---|
| மலையாளம் | ... | 4413 | 2583 |
| வடஆற்காடு | ... | 2906 | 1940 |
| தென் ஆற்காடு | ... | 1103 | 570 |
| கோயமுத்தூரும் நீலகிரியும் | .. | 1053 | 918 |
| சேலம் | ... | 1207 | 762 |
| தஞ்சாவூர் | ... | 897 | 1182 |
| மதுராஸ் | ... | 881 | 936 |
| திருச்சினப்பள்ளி | ... | 1462 | 678 |

இந்தப் பெரும் சண்டையில் மாண்டுபோன சென்னை மனிதர்களின் தொகை 1500-க்கு மேலே யிருக்கும். சண்டை நடந்த காலத்தில் மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியின் சேனைகளிலிருந்து சண்டை செய்த சிப்பாய்கள் கேட்பார்களானால் அவர்களுக்கு தலைக்கு 5 ஏக்ரா நஞ்சை நிலமாவது, 10 ஏகரா புஞ்சை நிலமாவது கொடுக்கக்கூடுமிடத்தில், இனாமாகக் கொடுக்கும்படி இராஜாங்கத்தார் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

இதுவரையிலும் நிலமானிபம் பெற்றுக்கொண்டவர்களின் தொகையும், சில விசேஷ ஜில்லாக்களில் கொடுக்கப்பட்ட நில விஸ்தீரணமும் அடியில் காட்டப்பட்டிருக்கிறது.



| ஜில்லா. | | நிலம் கொடுக்கப்பட்டவர்களின் தொகை. | ஏக்ராவின் நில விஸ்தீர்ணம். |
|---|---|---|---|
| மலையாளம் | ... | 43 | 94·88 |
| வடஆற்காடு | ... | 348 | 735·68 |
| தென் ஆற்காடு | ... | 173 | 642·39 |
| கோயம்பத்தூர் | ... | 64 | 249·72 |
| நீலகிரி | ... | 1 | 5·31 |
| சேலம் | ... | 22 | 117·28 |
| தஞ்சாவூர் | ... | 9 | 45·00 |
| திருச்சினப்பள்ளி | ... | 105 | 610·00 |

மேலும் சர்க்கார் உத்தியோகம் கொடுப்பதில், சண்டையில் வேலை செய்தவர்களுடைய பாத்தியத்தை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும் என்றும் சர்க்கார் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

சண்டையில் நல்ல பெயர் வாங்கின இந்திய இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும், மற்றுள்ள கீழ் உத்தியோகஸ்தர்களுக்கும், இனாம் அளிப்பதற்காக இராஜாங்கத்தார் இப்போது ஏற்பாடு செய்துவருகிறார்கள்.

சண்டையில் இறந்துபோன, அல்லது காயப்பட்ட போர் வீரர்களின் பிள்ளைகளை, சர்க்கார் செலவில், அல்லது சர்க்கார் பணத்தின் உதவியால் நடத்தப்படும், ஆரம்பக் கல்வி அல்லது உயர்தரக் கல்வி கற்பிக்கும் பாடசாலைகளில் பள்ளிக்கூட சம்பளமில்லாமல் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், அவர்களுக்கு வேண்டிய பாடசாலைப் புஸ்தகங்கள் சர்க்கார் செலவில் வாங்கிக் கொடுக்கப்படவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

இதைத்தவிர அங்கஈனர்களாக்கப்பட்ட போர்வீரர்களுக்கும் சண்டையில் இறந்துபோன போர் வீரர்களின் குடும்பத்தார்களுக்கும் உதவி செய்து வருகிறார்கள். யாதொரு ஆதரவுமில்லாமல்போன குடும்பங்களுக்கு ரூபாய் 300 கொடுக்கப்படும். அதிக செலவில்லாத குடும்பங்களுக்கு அவர்கள் நிலைமைக்குத்தக்கபடி அதிக ஏழையாயிருந்தால் ரூபாய் 250-ம், கொஞ்சம் வரும்படியுள்ளவர்களாயிருந்தால் ரூபாய் 200-ம் கொடுக்கப்படும்.

(From the Publicity Bureau.)

## Restitution.—உத்தரிப்பு.

ஒரு செட்டியிடத்தில் ஒரு குடியானவன் 300 வராகன் கடன்பட்டிருந்தான். கெடுவு முடிந்தபிறகு செட்டி கடனைக் கேட்டதற்கு குடியானவன் ஒரு வருஷக் கெடுவு கேட்டான். வருஷக் கெடுவு முடிந்தபிற்பாடு ஆறு மாசக் கெடுவு கேட்டான். மாசக்கெடுவு கடந்தபின்னர் ஆறு வாரக்கெடுவு கேட்டான். வாரக்கெடுவு தீர்ந்தபின்னர் ஆறுநாள் கெடுவு கேட்டான். குறித்த நாளில் செட்டியானவன், இன்றைக்காகிலும் கொடுப்பானென்று நம்பி குடியானவனுடைய வீட்டிற்குப் போய் வீட்டுக்காரன் எங்கேயென்று விசாரிக்கையில "தோட்டத்திலிருக்கிறான் அங்கே போய் அவனைக் காணலாம," என்று வீட்டு ஜனங்கள் சொன்னார்கள்; செட்டி தோட்டத்திற்குப் போய் தன் பணத்தைக் கேட்கையில், குடியானவன் அவனைக் கண்ணெடுத்துப் பாராமல் பூமியைத் தோண்டிய வண்ணமாய் மகா சுறுசுறுப்புடன் வேலை செய்துகொண்டிருந்தான். செட்டி அதைக்கண்டு, "என் ஐயா அசட்டையாயிருக்கிறாய்" என்று கேட்க, குடியானவன், "இல்லை உனக்காகவே வேலை செய்கிறேன் இதோ புளியங்கொட்டையை பூமியில் போடுகிறேன் அது முளைத்து மரமானவுடன் முதல் காய்ப்பை உனக்குக் கொடுப்பேன" என்றான்.—

அது கதை என்றாலும், தினந்தோறும் உலகத்தில் நடந்துவருகிற காரியங்களைப் பார்த்தால், கடன் வாங்கினபிறகோ அல்லது பிறர் பொருளை அபகரித்தபிறகோ, உத்தரிக்கிறது மிகவும் கஷ்டம். உத்தரிக்கிறதற்கு மனசுவராது. மனசு இருந்தாலும் சிலவேளை வகையும் வழியுமிராது.

ஓர் வனவாசி கண்ட காட்சியாவது: ஒருநாள் லூசிப்போர் என்னும் தலையான பசாசு, வேறொரு பசாசு பூலோகத்திலிருந்து நரகத்திற்கு தாமதமாய் வருகிறதைக் கண்டு, "அடா இப்படித் தாமதமாய் வருவானேன்" என்று கேட்டதற்கு அந்தப் பசாசு, "பாவசங்கீர்த்தனம் பண்ணின ஓர் திருடன் திருடின பொருளை உத்தரியாதபடிக்கு தடைசெய்ததில் தாமதம் ஆயிற்று" என்று சொன்னது. இதைக் கேட்டு லூசிப்போர் கோபம்கொண்டு மற்றுள்ள பசாசுகளைக் கூப்பிட்டு, "அடே மூடா, திருட்டுக்கு உத்தரிக்க மனசாயிருப்பவர் ஒருவருமில்லையென்று உனக்குத் தெரியாதா" என்று சொன்னது.—ஆகையினால் பிறரிடத்தில் அநியாயமாய் அபகரித்த பொருளை உத்தரித்தால்தவிர மற்றப்படி பாவ மன்னிப்பு இல்லை.—(Olim.)

## PAGE FOR THE YOUNG.
## பிள்ளைகளின் பக்கம்.

### Follow the Good.
### நல்லோர்களுக்கு இணங்கி நட.

பல நூற்றாண்டுகளுக்குமுன் வடராச்சியத்தில் பிரபலஸிங்கன் என்னும் அரசன் இராச்சிய பரிபாலனம் செய்துவரும் நாளில் அவனுக்கு குணசுந்தரன் என்னும் ஒரு புத்திரன் உண்டாயினான். அவனைப் பிரபலஸிங்கன் மெத்த சீர்பெருமையுடன் வளர்த்து வருகையில் ஐந்து வயதில் சகல கலைஞானங்களையும், சாஸ்திரங்களையும கற்றுணர்ந்த மேதாவியாகிய சுசிமுகர் என்னும் ஒரு உபாத்தியாயரைக்கொண்டு அவனுக்குப் பல சாஸ்திரங்களைப் படிப்பித்துவந்தான். பிள்ளைக்கு இளவரசுப்பட்டம் தரிக்குமுன் அவனைத் தன்னிடம் அழைத்து அவனுக்கு வேண்டிய திரவியமளித்து, பல இராச்சியங்களைச் சுற்றிப்பார்த்துவரும்படி அவனை அனுப்புவித்தான்.

இராஜகுமாரன் பல் நாடுகளைச் சுற்றிக் கடைசியில் எட்டியாபுரஞ் சென்று அங்கே பல துஷ்ட சிநேகிதருடன் கூடித் தன் ஆஸ்தியை விரயம்செய்துவந்தான். அப்போது அவனுடைய பழைய உபாத்தியாயராகிய சுசிமுகர் மாறுவேடம் அணிந்து அவனுக்குத் தெரியாமல் அவனைப் பின்தொடர்ந்து அவனுடைய நடவடிக்கைகளை விசாரித்துக்கொண்டே எட்டியாபுரம் வந்துசேர்ந்தார். இப்படியிருக்கையில் ஒரு நாள் குணசுந்தரன் தன் தோழருடன் கூடிக்கொண்டு உல்லாசமாக ஓர் நந்தவனத்தில் ஆடிப்பாடித் திரிகையில், அவன் உபாத்தியாயர் தாம் அணிந்திருந்த மாறுவேஷத்துடன் அவனருகில் போனார். அப்போது இராஜகுமாரன் அவரைநோக்கி, "ஐயா: பெரியவரோ! உம்மைப் பார்த்தால் வழிப்போக்கராகத் தோன்றுகிறீர்; எவ்விடம் செல்ல இங்குவந்து தயங்குகிறீர்" என்றான். அதற்கு அவர்: "ஆம், அப்பா! நான் ஒரு வழிப்போக்கன்தான்" என்று சொன்னவுடன், அவர் குரல் தொனியைக் கண்டுகொண்டு அவரை இன்னான் என்று அறிந்துகொண்டு, "ஐயா! உமது நாடு நகரத்தைவிட்டு நீர் இப்பரதேசிகோலங் கொண்ட காரணம் என்ன?" என்று கேட்டான்.

அப்போது அவ்வுபாத்தியாயர் சொல்லுகிறார், "நான் எடக்காட்டூருக்கு யாத்திரையாக வந்தேன்; வழி தெரியாமல் தெறிகெட்டு வந்தமையால் மனம்போன போக்காய்ச் செல்லலாம் என்று வந்தேன்" என்றார். அதற்கு இராஜகுமாரன், "இப்படியாக நீர் பிரயாணஞ் செய்தால் எப்போது எடக்காட்டூருக்குப் போவீர்? அதற்கு இப்பால் வெகுதொலை கடந்து வந்துவிட்டீரே, வந்த வழியே திரும்பிப்போமையா" என்றான். "இல்லை, இல்லை, நான் போகவந்த இடத்தை மறந்துவிட்டேன். ஆகையால் எனக்கு எப்படி இஷ்டமோ அப்படிப் போகிறேன்" என்றார். "அப்படியானால் இந்த வழி எந்த ஊருக்குப் போகிறதென்று தெரியுமா?" என்றான். உபாத்தியாயர், "அப்படித் தெரியவேண்டியது அவசியமல்ல. மனம் போகிறபடி விட்டால் வருகிறது வரட்டும்" என்று சொல்லி நாலடி எட்டிவைத்தார். இதைக்கண்டு குணசுந்தரன் தன் தோழர்களை நோக்கி, "ஆஹா! இவன் சொல்வது நன்றாயிருக்கிறது. பசிக்குப் பனம்பழத்தைப் புசித்தால் பித்தம் பட்டபாட்டைப் படுமென்கிறான். இவன் யாரென்று அறிவீர்களோ. என்னுடைய உபாத்தி. இவன் நல்ல திறமைசாலி, மகா கெட்டிக்காரன். ஏதோ இவன் புத்தி சிதறிப்போனதாகக் காணப்படுகிறது. ஆகையால் நியாயமற்றவிதமாய்ப் பிதற்றுகிறான்" என்றான்.

அப்போது உபாத்தியாயர் திரும்பிவந்து சொல்லுகிறார், "தம்பி, நீ நினைப்பதுபோல் அல்ல; நான் முந்தி உனக்கு உபாத்தியாயராயிருந்தபோது உனக்குக் காட்டிய வழியில செவ்வையாய் நடந்துவந்தாய். நீ என்னைவிட்டுப் பிரிந்து யாத்திரையாய் வந்தநாள்முதல், நான் உன்னைவிட்டுப் பிரியாமல் உன் காலடியிலேயே சுற்றி வருகிறேன். உன் நடவடிக்கைகள் எல்லாம் சம்பூரணமாயறிவேன். உன் நிலைமையை உனக்கு அறிக்கையிடவேண்டிமாத்திரம் இன்று உன் முன் இக்கோலத்துடன் எதிர்ப்படத் துணிந்தேன்" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்ட இராஜபுத்திரன் தன் குற்றத்தைக் கண்டுபிடித்து உணர்ந்து வெட்கப்பட்டு அவரை மன்னிப்புக்கேட்டுப் பொறுத்தலடைந்தான். அதன்பிறகு இருவரும் சந்தோஷமாகத் தங்களிருப்பிடம் வந்துசேர்ந்தார்கள்.

பிள்ளைகளே! இக்கதையால் நீங்கள் எப்போதும் நல்லோர்களுக்கிணங்கி நடக்கவேண்டுமென்றும், ஏழைகளைக் கண்டால் தூஷணித்துப் பேசக்கூடாதென்றும் அறியவேண்டியது.

(போதகன்.)

## Jayaseelan.
## ஜயசீலன்.

8-ம் அதிகாரம்.

மாணாக்கர் கூட்டத்துக்குப் போய் வருவதாக உத்தரவு பெற்றுப்போன ஜயசீலன், இரவு அதிக நேரமாகியும் வராமையால், தகப்பனார் ஸத்தியானந்தன் ரொம்பவும் கவலையுற்று, தன் மகனுக்கு என்ன நேர்ந்ததோவென்று அங்கலாய்த்து ஒவ்வொரு நிமிஷமும் அவனுடைய வருகைக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். சகோதரனைச் சற்றும் பிரியச்சகிக்காத இரஞ்சிதமும் தன் தமையன் இன்னும் வீடு வந்து சேராமையால் அவனுக்கு என்ன ஆபத்து உண்டாயிருக்குமோவென்று பயந்து, துக்கித்து, கஸ்தியால் கலங்கி தகப்பனாருடைய ஆறுதலான வார்த்தைகளைக் கேட்டும் தேறுதலடையாமல் 10-மணி வரையிலும் காத்திருந்து கடைசியாய் தகப்பனாருடைய கட்டளைக்கு இணங்கி, தான் சயனிக்கும் அறையை நோக்கிச் சென்றாள். ஆனால் சகோதரனுடைய கவலையால் ஒரு நிமிஷமாவது கண் மூடினவளல்ல. காற்றினால் ஜன்னல் கதவில் கொஞ்சம் சத்தம் கேட்கப்படும்போது, அதிக கவலையுடன் மெதுவாய்க் கட்டிலைவிட்டு எழுந்து, ஜயசீலன் வரக்கூடுமென்று எண்ணி சத்தம்வரும் மார்க்கமாய் உற்றுக்கேட்பாள். தன் சகோதரன் வீடு வந்து சேர்ந்த அடையாளத்தைக் காணவில்லை. ஏறக்குறைய நடுச்சாமம் வரையிலும் இப்படி கவலையுடன் காத்திருந்து பார்த்தும் அவன் வராமையால், விசாரத்துடனும், சலிப்புடனும் நித்திரை போய்விட்டாள். தகப்பனாரோ 10-நிமிஷத்துக்கு ஒரு தடவை தன் அறையைவிட்டு நடைக் கதவண்டை வந்து மனக்கிலேசத்தால் ஜயசீலன் வருகிறானோவென்று பலதடவை பார்ப்பார். அவனுடைய வருகையை எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. 11-மணிக்கு தன் கைவிளக்கை எடுத்துக்கொண்டு வீதியின் ஒரு முடுக்கிலிருந்து மற்றொரு முடுக்குமட்டும் போய்ப்பார்த்தார். தூரத்தில் யாராவது வருவதைக் கண்டால் மிகவும் அவாவுடன் சில சமயம் வருவது தன்

மகனாயிருக்கக்கூடுமென்று மிகவும் விரைவாய் நடந்து செல்வார். சமீபத்தில் சேர்ந்ததும், தன் மகனல்ல வேறே யாரோ அன்னியனென்று கண்டு அவர் இருதயத்தில் உண்டான துக்கம் எம்மாத்திரமென்று யாரால் யூகிக்கக்கூடும்! ஜயசீலன் சில மணி நேரமாய் பொல்லாத தன் நண்பர்களுடன் சேர்ந்து சாராயம், அபினி முதலியவைகளை உட்கொண்டு சூது விளையாடி தன்னை மிகவும் கேவலப்படுத்திக்கொண்ட அந்த நிர்ப்பாக்கிய வீட்டின் முன்னால் தன் மகனைத் தேடிச் சென்றார். இப்படிப்பட்ட இடத்தில் தன் மகன் இருக்கக்கூடுமென்று அவர் கனவிலும் எண்ணினவரல்ல.

நற்குண நற்செய்கைகளால் கீர்த்தி பெற்ற உபாத்தியாயர்களிடமிருந்து கல்வி பயின்று, தெய்வ பக்தி, சிநேகம், நேர்மை முதலிய புண்ணியங்களாகிற அமுதால் ஊட்டப்பட்ட தன் மகன் குடியரும் அயோக்கியரும் கொலைபாதகர்களும் கூடும் இடத்தில் இருக்கலாமென்று கருதத்துணிவாரோ? தன் மனதில் உதித்த இந்த எண்ணத்தை தப்பறையென்று உடனே விலக்கி, வந்த வழியாய் மறுபடியும் திரும்பிப் போனார். இவருக்கு அங்கலாய்ப்பும் அவநம்பிக்கையும் அதிகரித்தது. பல பயங்கரமான காட்சிகளைப் பார்ப்பதுபோல் மனதில் உணர்ந்தார். மகனைத்தேடுவதில் தான் பட்ட பிரயாசை அநுகூலப்படாதது கண்டு, கடைசியாய் ஏறக்குறைய நடுச்சாமத்துக்குமேல் ஒரு மணிக்கு தன் வீட்டை நாடிச் சென்றார். வீட்டின் பக்கம் சேர்ந்தபோது உடுப்பு அலங்கோலையாய் ஒருவன் தள்ளாடி நடப்பதையும், சந்துக் கதவைத் திறக்க எத்தனிக்கையில், நிற்க பலமின்றி கீழே விழுவதையும், மறுபடியும் பிரயாசையுடன் எழுந்து வீட்டுக் கதவைத் தள்ளுவதையும் பார்த்தார். இவ்வளவு கேவல வேஷத்துடன் காணப்பட்டது ஜயசீலனேயன்றி வேறொருவருமில்லை. சூதாடும் கூட்டத்திலிருந்து பிரக்ஞையின்றி இருந்த இவனை சில குடியர்கள் தூக்கி இழுத்து தன் தகப்பனார் வீட்டுத் திண்ணையில் இரக்கமின்றி தள்ளிப்போனார்கள். சற்று நேரத்தில் பனியின் அகோரத்தைப் பொறுக்க முடியாமல் கொஞ்சம் புத்தி தெளிவடைய, தான் இருக்கும் அந்தஸ்தை ஒருவாறு உணர்ந்து யாரும் பார்க்குமுன் வீட்டில் நுழைய எத்தனித்தான். குடி மயக்கம் இன்னம் இருந்தது. நடக்க சக்தியில்லை. தன் சட்டை ஜேப்பில் வைத்திருந்த கதவு சாவியையும் எங்கேயோ இழந்துவிட்டான். என்ன செய்வான்; பாவம்.



இச்சமயத்தில் தகப்பனார் ஸத்தியானந்தனுக்கு வந்த எண்ணம் என்ன? சிலகாலமாய் ஊரில் திருடர்கள் நுழைந்து இராக்காலத்தில் வீட்டில் பிரவேசித்து பொருட்களைக் கொள்ளையாடிக்கொண்டு வந்தார்கள். அதைத்தடுக்க சர்க்கார் பிரயாசப்பட்டும் சாத்தியப்படவில்லை. அர்த்த இராத்திரியில் இப்படி வீட்டின் பக்கம் சென்று கதவைத் திறக்கப் பார்ப்பது திருடனாய்த்தான் இருக்கவேண்டுமென்று பூர்த்தியாய் எண்ணினார். வீட்டைச் சமீபித்ததும் அவ்வக்கிரமக் கிரியையைச் செய்ய எத்தனிக்கும் அயோக்கியனைப்பிடிக்க அவர் யாரைக் கண்ணுற்றார்? ஐயோ பரிதாபம்! தன் அருமை மகனே இவனென்று கண்ணுற்று துக்க சாகரத்தில் ஆமிழ்ந்தி, மனம் துடிக்க, இருதயம பதைக்க ஒன்றும் சொல்லக் கூடாதவராய்ச் சற்று நேரம் ஸ்தம்பம்போல் நின்றார்.

(இன்னும் வரும்.)

---

## Here and There.

### நானா சங்கதிகள்.

H. E. the Delegate Apostolic.—தற்காலம் இந்தியாவில் பாப்பானவரின் ஸ்தானாதிபதியாய் விளங்கிவரும் மிகவும் வந்திக்கத்தக்க பீற்றர் புமாசோனி பயோந்தி என்பவர் ஜப்பான் தேசத்துக்கு பாப்பானவரின் ஸ்தானாதிபதியாக நியமனம் பெற்றிருக்கிறார் என்றும், அவருக்குப்பதிலாய் பியேத்ரோ பிஸானி என்பவர் இந்திய ஸ்தானாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும் தெரியவருகிறது.

Coimbatore—சென்ற டிசம்பர்-மீ 14-உ மிகவும் வந்திக்கத்தக்க கோயமுத்தூர் மேற்றிராணியார் அவர்கள் பிரதர் M. சவரிமுத்துக்கு தலைப் பட்டத்தைக் கொடுத்தார்.—சாதாரண கிறீஸ்துவர்களிலிருந்து ஒருவர் திருப் பட்டம்பெற ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்னும் அடையாளமாக அவருடைய

தலைமயிரை மேற்றிராணியார் முடி ரூபமாக கத்தரிப்பதே தலைப்பட்டமென்னப்படும்.

Kandy.—சென்ற டிசம்பர்-௴ 20௳ கண்டி பாப்பானவர் குருமடத்தில் படித்துவரும் பிரதர் மாசில்லாமணி சப்தியாக்கோன் என்கிற மேலான பட்டத்தையும், பிரதர் மரிய ஆரோக்கியம் கீழான பட்டங்களையும், பிரதர் அம்புரோஸ் தலைப்பட்டத்தையும் பெற்றார்கள்.

மேற்சொல்லப்பட்ட வித்தியார்த்திகள் கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர்கள்.

Peace celobrations.—சென்ற டிசம்பர்-௴ 13, 14, 15-ம் தேதிகளில் சென்னை இராஜதானி முழுவதும் சமாதான கொண்டாட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

For the devastated parts of Franco—பிரான்ஸ் தேசத்தில் பாழாக்கப்பட்ட நாடுகளிலுள்ள கோவில்களையும், வீடுகளையும் செப்பனிடுவதற்கு வசூலான தர்மத் தண்டல்.

அத்திக்கோட்டுப் பங்கு ரூ. 100—0—0.

Saveriarpalayam.—சவேரியார்பாளையத்தில் ஓர் பெரிய கோவிலைப் புதிதாய்க் கட்டும் வேலையில் சங். J. Hedde (ஹெட்) சுவாமியாருக்கு உதவிசெய்யும்படியாக சங். J. M. Goucher (கொஷே) சுவாமியார் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதினிமித்தம் சங். A. Baron (பரோன்) சுவாமியார் தாராபுரத்து பங்கு விசாரணைக்கு தற்காலத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்.

Reminder.—சத்தியதூதனின் சந்தாதாரர்கள் பாக்கியாயிருக்கும் தொகையை தாமதமில்லாமல் செலுத்தவேணுமென்றும், 1920-௵த்திய சந்தாவையும் அனுப்பிவைக்க வேணுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.



## Coonoor.

### குன்னூர் அர்ச். அந்தோனியார் கோவில் பஞ்சாங்கம்.

**1920-௵ ஜனவரி-௴.**

1-ம௳ வியாழக்கிழமை வருஷப்பிறப்பின் பண்டிகை. காலை $6\frac{1}{2}$-மணிக்கு முதல் பூசை, 8-மணிக்குப் பாட்டுப்பூசை.

மாலை $5\frac{1}{2}$-மணிக்கு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

2-ம௳ வெள்ளிக்கிழமை மாதத்தின் முதல் வெள்ளி. காலை 7-மணிக்குப் பூசை.

மாலை $5\frac{1}{2}$-மணிக்கு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

6-ம௳ செவ்வாய்க்கிழமை மூன்று இராஜாக்கள் திருநாள். காலை $6\frac{1}{2}$-மணிக்கு முதல் பூசை. 8-மணிக்கு 2-வது பூசை. பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

---

## Kodivery.

### பெரிய கோடிவேரி பங்கு.

(கோவில் பஞ்சாங்கம் 1920-ம் ௵ ஜனவரி-௴)

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்

காலை 8 மணிக்கு பூசை

மாலை 5 மணிக்கு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

நாள்தோறும் காலை $5\frac{1}{4}$ மணிக்கு முதல் பூசை.

,, $5\frac{3}{4}$ மணிக்கு இரண்டாவது பூசை.

ஜனவரி-௴ 1-ம௳ வியாழக்கிழமை: நமதாண்டவர் விருத்தசேதனப்பட்டு பெயர் தரித்துக்கொண்ட திருநாள். காலை 8 மணிக்கு பாட்டுப்பூசை. மாலை 5 மணிக்கு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

2-ம௳ வெள்ளிக்கிழமை: மாதத்தின் முதல் வெள்ளி. காலை $5\frac{3}{4}$ மணிக்கு இரண்டாவது பூசை, பூசைக்குப் பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம். மாலை 6 மணிக்கு சிலுவைப்பாதை.

6-ம௳ செவ்வாய்க்கிழமை: மூன்று இராஜாக்கள் திருநாள். காலை $5\frac{3}{4}$ மணிக்கு இரண்டாவது பூசை, பூசைக்குப்பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

## சிக்கரசம்பாளையம்.

ஜனவரி 1-ம்௳ வியாழக்கிழமை காலை 6 மணிக்கு பூசை.

1919-௵ டிசம்பர்-மீ ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகள் பெயர்.

1. கோங்கரபாளையம்: சின்னப்பன், மரியம்மாள் இவர்களுடைய குமாரத்தி அன்னமரியம்மாள்.

2. குண்டிரி: சந்தியாகு, மரியம்மாள் இவர்களுடைய புத்திரன் ஆனந்தப்பன்.

3. கொடிவேரி: சூசையப்பன், மரியம்மாள் இவர்களுடைய புத்திரி மதலைமரியம்மாள்.

4. கோடிவேரி: லூயிஸ், மரியம்மாள் இவர்களுடைய புத்திரி சவரியம்மாள்.

5. கோடிவேரி: முத்துசாமி செட்டி, பாப்புசவரியம்மாள் இவர்களுடைய புத்திரன் பெருசுமேன் கண்ணுசாமி.

6. சின்னப்பன், செபஸ்தியம்மாள் இவர்களுடைய புத்திரன் லாசர்.

7. அருளப்பன், அருளாய் இவர்களுடைய புத்திரன் பிச்சைமுத்து.

8. சாமியப்பன், அந்தோனியம்மாள் இவர்களுடைய புத்திரன் குழந்தைசாமி.

9. சிலுவைமுத்துக் கவுண்டர், அருளாயம்மாள் இவர்களுடைய புத்திரன் சூசையப்பன்.

இக்குழந்தைகள் பக்தியிலும், புத்தியிலும், தேவ பயத்திலும் வளரும்படியாக சேசு பாலகனைப்பார்த்து வேண்டிக்கொள்வோமாக. இப்புதுவருஷம் பரிசுத்தமானதாகவும், பாக்கியமானதாகவும் இருக்கும்படியாக, குழந்தை சேசுவைப் பிரார்த்தித்து, நமது கிறீஸ்துவ சகோதரர்கள் அனைவரையும் ஆசீர்வதிக்கின்றோம்.

இப்படிக்கு,

(Sd.) ஜெ. பி. பெத்தி,

கொடிவேரி பங்கு சுவாமியார்.

---


# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VI.** **February 1920.** **No. 2.**

புத்தகம் **VI.**] FIDES AC ROBUR. [நம்பர் **2.**


## The Pure Heart of Our Blessed Mother.

## தேவமாதாவின் பரிசுத்த இருதயம்.

கடந்த மாதத்தில் மகா கனம்பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள் தேவமாதாவின் பரிசுத்த இருதயத்தைப்பற்றி நேர்த்தியான ஒரு நிருபம் எழுதியிருந்தார். அதில் அடங்கியுள்ள மிக விசேஷித்த விஷயங்களை எடுத்துக் காட்டுவோம்:

1. மனிதனிடத்தில் அவனுடைய இருதயமே முக்கிய வஸ்து. இதுவே மனிதனை மனிதனாகவும், அவன் எப்பேர்ப்பட்டவன் என்பதையும் தீர்மானப்படுத்துகிறது. இருதயம் அல்லது நெஞ்சு என்னும் வார்த்தையானது தைரியம், உதாரம், சிநேகமாகிய இவைகளைக் குறிக்கிறதென்று சகல ஜாதி ஜனங்களுக்கும் தெரியும்.

2. மனிதர் இருதயங்களிலெல்லாம் தாய்மார்களுடைய இருதயத்தைப்போல் அவ்வளவு ஆச்சரியத்துக்குரியது வேறொன்றுமில்லை. அர்ச். அகுஸ்தீனார் அதை சிருஷ்டிகரின் அதிஉத்தம வேலைப்பாடு என்று அழைக்கிறார். கடவுள் தாயினுடைய இருதயத்தில் வைத்திருக்கும் அன்பு, உருக்கம், பொறுமை, வீரம், உதாரமாகிய இவைகளின் மிகுதியைத் தக்கபடி சொல்லிக்காட்ட எவராலும் முடியாது.

3. நமது பூலோக தாயின் இருதயம் அவ்வளவு ஆச்சரியத்துக்குரியதென்றால், மாசற்ற கன்னிமரியம்மாளுடைய

இருதயத்தைப்பற்றி நாம் எம்மாத்திரம் இன்னுமதிகமாய்ச் சொல்லவேண்டியிருக்கிறது. அர்ச். அகுஸ்தீனார் சொல்வதைக் கேளுங்கள். சேசுநாதரின் மாம்ஸமானது மரியாயின் மாம்ஸமாயிருக்கிறது. மாம்ஸத்தினாலன்றி இருதயத்தினாலேயே மரியாயி கிறீஸ்துநாதரின் தாயாயிருக்கிறாள்.

ஆகையால் சேசுநாதரின் இருதயம் மரியாயின் இருதயந்தானென்று நாம் மெய்யாகவே சொல்லக்கூடும். வாஸ்தவத்தில் மரியாயின் இருதயத்தின்மேலேதான் தாய் குழந்தை ஆகிய இவர்கள் இருவருக்கும் பொதுவான ஜீவனிருந்தது. இதனால் நாம் மரியாயின் இருதயத்தை வணங்கும்போதெல்லாம் சேசுநாதருடைய மனுஷீக ஜீவனின் ஆதிகாரணத்தையே வணங்குகிறோம்.

நாம் மரியாயின் இருதயத்தை வணங்குகையில் அவளுடைய புண்ணியங்களை எல்லாம் வணங்குகிறோம்.

ஏனெனில் சகல புண்ணியங்களும் இருதயத்தினின்றுதான் புறப்படுகின்றன. அவளுடைய மிகுதியான மேனா மரியாதை ஓர் சமமனசானவளாக கண்டு பயப்படச் செய்கிறது. மாட்டுக்கொட்டாயில் சேசுநாதருக்கு அவள் காட்டிய நேசம் அதிகமானது. எவ்வளவு கவலையுடன் அவரைத் துணிகளால் மூடுகிறாள்! எவ்வளவு நுட்பத்துடன் அவரைக் கீழே படுக்க வைக்கிறாள்! தனது மகனும் கடவுளுமாகிய அவரை மிக்க அன்பு வாஞ்சையுடன் தமது கரங்களில் ஏந்தி முத்தஞ்செய்கிறாள். இவைகளுக்கெல்லாம் காரணம் அவளது தாய்க்குரிய இருதயந்தான். சேசுநாதர் மனிதர்களுக்கு சகலவித நன்மைகளைச் செய்வதில் தமது ஜீவியகாலத்தைக் கழித்தார். இவர்களோ நன்றிகெட்டவர்களாய்ப் பலவிதத்திலும் அவரை உபாதித்துக் கடைசியில் சிலுவையில் அறைந்தார்கள். தேவமாதா சிலுவையடியில் நின்றுகொண்டு தமது திருக்குமாரனோடுகூட மென்மேலும் வியாகுல வாட்களால் தமது இருதயத்தில் ஊடுருவப்படுகிறாள்.

ஓ! மரியே! நாங்கள் உமது இருதயத்தை வணங்குகையில் பூலோகத்தில் இதுவரையில் பாராத துன்ப துயர் நோக்காடுகளின் மிகுதியைத்தானே வணங்குகிறோம். ஓர் சாதாரண சிருஷ்டி மனிதருக்காக இப்பூலோகத்தில் எப்போதாவது செய்த பரித்தியாகங்களிலெல்லாம் அதிமேலான பரித்தியாகத்தைத்தானே வணங்குகிறோம்.

4. நமது பரிசுத்த தாய் பரலோக இராக்கினியாக அர்ச். தமதிரித்துவத்தால் உயர்த்தப்பட்டு முடிசூட்டப்பட்டு இப்போது மோட்ச இராச்சியத்தில் வீற்றிருக்கிறாள். ஆயினும்



அவள் இருதயமானது மனிதர்மட்டில் எப்போதும்போலவே நேசமுடையதாய், அவர்கள் தாயின் இருதயமாகவேயிருக்கிறது. அவள் பரலோகத்தில் இன்னும் நமது தாயாயிருந்துகொண்டு பாவியானவன் கடவுளை விட்டகன்று அவருக்கு விரோதமாய் நடக்கும் காலங்களில் அவள் மிக மனநொந்து, அவன் மனந்திரும்பி சேசுநாதருக்கு மறுபடியும் உகந்தவனாகும்வரையில் அவள் அவன்மட்டில் உருக்க இரக்கமுடையவளாய் அவனுக்காக மனுப்பேசி மன்றாடி வருகிறாள்.

சில சமயம் உங்கள் குடும்பங்களில் பாவிகளும், குடியர்களும், சூதாரிகளும், சண்டாளரும் இருக்கக்கூடும். அப்படியானால் நீங்கள் மரியாயை அண்டி மன்றாடுங்கள். அவள் அவர்கள் மனந்திரும்புதலை அடைந்து கொடுப்பாள். அவள் ஒருத்தி மாத்திரம் சகல தாய்மார்களிலும் அதிஉத்தம, அதி பரிசுத்த தாய்; அணைகடந்த நேசப்பற்றுதல் இரக்கம் நிறைந்த தாய். உன்னோடு சேர்ந்து அவளும் ஓலமிட்டு உனக்கு வேண்டிய சகலத்தையும் தமது திருமகனிடத்தில் பெற்றுக் கொடுத்து உன்னையும் தமது திருக்குமாரனுக்கு ஒப்பாயாக்குவாள். ஆமென்.

---

நித்திரை மரணத்தைப்போல் இருக்கிறதென்று நினைத்து நான் செபம் செய்யாமல் படுக்கத் துணிகிறதில்லை.

## Temperance Society

## சவேரியார்பாளையம் மதுவிலக்கு சபை.

(தொடர்ச்சி.)

திருச்சிலுவைச் சபை எனப் பெயர்பூண்ட மதுவிலக்கு சபையானது சவேரியார்பாளையத்தில் ஸ்தாபிக்கப்பட்டபின் தாமதமின்றி அப்பங்குக்குச் சேர்ந்த வேறு முக்கிய கிராமங்களாகிய கன்னம்பாளையம், பிலியகுளம் இவைகளிலும் ஏற்படுத்தப்பட்டது. பிலியகுளமானது சவேரியார்பாளையத்திற்கு மேற்குத் திசையில் ஓர் மைல் தூரத்திலுள்ள கிராமம். மதுவிலக்கு சபை அவ்வூரில் ஸ்தாபிக்கப்பட்ட நாளானது அவ்வூர் முழுவதுக்குமே ஓர் பெரிய திருநாளாகவும், பாக்கியம் பெற்ற நாளாகவுமிருந்தது. அந்நாளில் பூசைக்கு முன் சபை

யிற் சேர ஆயத்தமாயிருந்த வாலிபர்கள் எல்லோரும் சபையிற் சேரும் நாளுக்கென்று ஏற்கனவே ஓரேவிதமான துணிகளால் தயார்செய்யப்பட்டிருந்த தூய வெள்ளை உடுப்புகளை அணிந்து, சோயமுத்தூர் குரு மடத்து சிரேஷ்டரான சங்கைக்குரிய எல். ரீவியேர் ஞானப்பிரகாச சுவாமிகளுக்குமுன் இரு பக்கத்திலும் வரிசையாக அணிவகுத்துச் சென்று, மேளதாள கொட்டு வாத்தியங்கள் வெடிகளுடன் முழங்க, அவருடன் கோவிலிற் பிரவேசித்தார்கள். அங்கு அவரால் பாடற் பூசை செய்யப்பட, சபையிற் சேர ஆயத்தமாயிருந்தவர்களும், ஊராரில் நூற்றுக்கணக்கான பேர்களும் திவ்விய சற்பிரசாதத்தை உட்கொண்டார்கள். சாயந்திரம் திவ்விய நற்கருணை ஆசீர்வாதத்தில் மதுவிலக்கு வார்த்தைப்பாடு கொடுத்து சபையிற் சேர்ந்தார்கள். அது முதற்கொண்டு மதுபான வஸ்துக்களை முழுவதும் நீக்கி வாரவாரம் ஞாயிற்றுக்கிழமைகளில் சபைக் கூட்டங் கூடி ஞானப் புஸ்தகங்களை வாசித்தும், கேட்டும், அடிக்கடி பாவசங்கீர்த்தனஞ் செய்து, திவ்விய நற்கருணை உட்கொண்டும், கோவிற் காரியங்களிலும், தேவாராதனை விஷயத்திலும் அதிக கவலை பற்றுதல் உடையவர்களாய், தங்கள் ஊரிலேயே மற்ற ஜனங்களுக்குள் விசேஷித்து விளங்கிவந்தார்கள். வருஷா வருஷம் சபைத் திருநாளுக்காக மே மாத ஞாயிற்றுக்கிழமைகளில் ஒன்றைத் தெரிந்துகொண்டு, அந்நாளில் எல்லோரும் பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்விய நன்மை உட்கொண்டு, தங்கள் மதுவிலக்கு வார்த்தைப்பாட்டைப் புதுப்பித்து ஞான சந்தோஷத்தை அநுபவித்து ஏழு வருஷ காலம் ஊரிலேயே தீபங்களாக ஒழுகிவந்தார்கள்.

இது இவ்வாறு இருக்கையில், இந்த 1920-ம் வருஷம் திடீரென ஊரில வாந்தி பேதி ஆரம்பித்து, ஜனவரி மாதம் 3-ம் தேதி மதுவிலக்கு சபைக்குச் சேர்ந்தவனும், பிலியகுளம் இராயப்பன் மகனுமாகிய 15 பிராயமுள்ள மதலைமுத்து என்பவனுக்கு, இராத்திரி 8 மணிக்கு வேலையிலிருந்து திரும்பி வந்தவுடன், வாந்தி பேதி ஆரம்பித்தது. நடுச்சாமத்தில் அவஸ்தைபூசுதல் பெற்று, விடியுமுன் மரணமடைந்து, காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டான். இவன்தான் பிலியகுளம் மதுவிலக்குச் சபையாருக்குள் முதலில் மரணமடைந்தவன். அவனை அடக்கஞ் செய்யும்போதே, கல்லறையிலதானே அவனது ஏக சகோதரனும், அவனுக்கு மூத்தவனுமாகிய சுமார் 28 வயதுள்ள செல்வனென்பவனுக்கு வாந்தி பேதி துவக்கி, மத்தியானம் $12\frac{1}{2}$ மணிக்கு அவஸ்தைபூசுதல் முதலிய



தேவதிரவிய அநுமானங்கள் கொடுக்கப்பட்டு, அன்று இரவு பாக்கியமான மரணத்தை யடைந்து நல்லடக்கஞ் செய்யப்பட்டான். இவன் துவக்கத்திலேயே மதுவிலக்கு சபையிற் சேர்ந்து, கடைசிபரியந்தம் அதிற் பிரமாணிக்கமாயிருந்து, ஊரில் மற்றவர்களுக்கு நன்மாதிரிகையாயும், தீபம்போலவும விளங்கின உத்தமகிறீஸ்துவர்களில் ஒருவன். தனது தம்பிக்கு அவஸ்தைபூசுதல் கொடுத்து முடிந்தவுடன் அந்த நடுச்சாமத்தில் குருவானவருக்கு வழித் துணையாயிருந்து அவரைத் தம்மில்லிடம் சேர்த்துத் திரும்பினவர்களில் ஒருவன். இவன் வியாதியாய் விழுந்தவுடன் மதுவிலக்குச் சபையாரில் பலர் அவனோடு கூடவேயிருந்து அவனுக்கு வேண்டிய ஆறுதல் உதவிகளைச் செய்துவந்தார்கள். அவனுக்கு அவஸ்தைபூசுதல் கொடுக்கையில் குருவானவர் கண்களிலிருந்து அவரை அறியாமலே கண்ணீர் முத்து முத்தாக விழுந்தன. இவன் உத்தம கிறீஸ்துவனாக ஒழுகி வந்ததோடு, வேதத்தின்மட்டிலும் கோவிற் காரியங்களிலும் அதிகமான கவலையுடையவனாகவே யிருந்தான். தனது வேலை முடிந்து சாயந்திரம் வீடு வந்து சேர்ந்தவுடனும், ஞாயிற்றுக்கிழமைமுதலிய மற்ற லீவு நாட்களிலும், கோவிலின் ஜோடினை சிறப்பு முதலிய காரியங்களைக் கவனிப்பதிலும் செய்வதிலும் எப்போதுமே விசேஷ சிறத்தையுடையவனாகவிருந்தான். இதை நன்கறிந்த ஊர்க் கிறீஸ்துவர்கள் மெய்யாகவே அவன் மரணத்தைப்பற்றி அதிகம் துக்கிக்கிறார்கள். சபையாரும் இவ்விரு சகோதரரின் ஆத்தும இளைப்பாற்றிக்காகப் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்படி செய்தார்கள். அவர்கள் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி இதை வாசிக்கும் மற்ற கிறீஸ்துவ சகோதரர்களையும் கேட்டுக்கொள்ளுகிறார்கள். இவர்கள் மரணத்தை அடைந்த 5 நாளைக்குப் பிற்பாடு வாந்தி பேதியானது அதிக பயங்கரத்துக்குரிய விதமாய் ஊரில் துவக்கினது. C. C. (இன்னும் வரும்.)

# The Little Garden of Roses.

## சிறு ரோஜாத் தோட்டம்.

### மலர் 9.

"God giveth grace to the humble" (Jac. iv. 6).

*"சர்வேசுரன் தாழ்மையுள்ளவர்களுக்கு இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கிறார்" (இயாக. 4-ம் அதி. 6-ம் வச.)*

1. தேவ ஊழியத்திற்குத் தன்னைப் பரித்தியாகம் செய்தவன் தன் வாக்குக் கிரியைகளில் மேரைமரியாதை அடக்கவொடுக்கமுள்ளவனாகவிருந்து தனது புத்தி, மனமுதலிய உள்ளிந்திரியங்களையும், தன் கண், செவி முதலிய பஞ்சேந்திரியங்களையும் புறத்துக்காரியங்களில் சிதறவிடாமல் தன்னிடத்திலடக்கிக்கொண்டு, தன்னைச்சேராத காரியங்களில் நுழையாமல், தான் செய்யவேண்டிய கடமைகளை விசாரித்து நிறைவேற்றிப் பத்தியடக்கமாயிருக்கத் தேடுவான்.

ஏனெனில ஆத்தும ஈடேற்றத்துக்கும் பரிசுத்த ஒழுக்கத்துக்கும் அடக்கவொடுக்கம் அத்தியாவசியமானது. சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்வதே தனக்கு மகிமையாகவும், சந்தோஷமாகவும், பாக்கியமாகவும் கொண்டவன் பரிசுத்தமாய்ச் சீவிப்பானென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஏனெனில் தன் முதல் பிரயத்தனப் பரீட்சை அந்தஸ்தில் அடக்கவொடுக்கமாயிருக்கப் பழகுவதுமல்லாமல் தனது பெரியோர் முன்னிலையில வாயடக்கவும், மவுனத்தை அநுசரிக்கவும் எச்சரிக்கையாய் இருப்பான்.

காதில் விழும் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்துக் கேட்கப் பழக்கமில்லாதவனும், வாயடக்கத்தோடு மவுனத்தைக் கற்றுக்கொள்ளப் பிரயாசப்படாதவனும் அறிவுடையோரிடத்தில் நல்ல பேரெடுக்கமாட்டான். அநாகரீகமான நடத்தையுள்ளவர்கள் என்கிற இவ்வொரு காரணத்தினாலேயே அநேகர் முட்டாள்களென்று கருதப்படுகிறார்கள்.

சந்தோஷத்துடன் கீழ்ப்படிவதும், அடிக்கடி செபம் பண்ணுவதும, பக்தியுடன் தியானஞ் செய்வதும், சுறுசுறுப்புடன் வேலை செய்வதும், உற்சாகத்துடன் படிப்பதும், உலகத்தை முழுதும்வெறுத்துத் தள்ளிப்போடுவதும, மவுனம் காப்பதும், சர்வேசுரனுக்குப் பிரதிஷ்டைசெய்யப்பட்ட ஆத்துமங்களுக்கு



மெய்யான பக்தியையும், மனச்சமாதானத்தையும் கொடுக்கக்கூடிய புண்ணியங்களாகும்.

ஆதியாகமத்தில் "ஆண்டவர் ஆபேலையும், அவன் காணிக்கைகளையும் அங்கீகரித்தார். ஆனால் காயீனுடைய காணிக்கைகளையோ அவர் பாராமல் விட்டுவிட்டார்" என்று வாசிக்கிறோம். ஏன்? ஏனென்றால் ஆபேல் மாசற்றவனாகவும், அடக்கவொடுக்கமுள்ளவனாகவுமிருந்தான். ஆனால் காயீன் பொறாமையுள்ளவனாகவும் மூர்க்கக் குணமுள்ளவனுமிருந்தான்.

ஆனபடியால் ஆபேலைப்போல் உனக்கு இக்கட்டு, இடையூறு நேரிடும்போது கஸ்திப்பட்டு முறையிடாமல் பொறுமையுடனிருக்கக்கடவாய். மேலும் காயீனைப்போல் இருதய சமாதானத்தையும், ஞான சந்தோஷத்தையும், கீர்த்திப்பிரதாபத்தையுமிழந்து போகாதபடி எச்சரிக்கையாயிரு. ஏனென்றால் சர்வேசுரனை மனநோகப்பண்ணுவதைக்காட்டிலும், உனது சகோதரனுக்குத் தீங்கிழைப்பதைக்காட்டிலும், தருமம் செய்பவர்களை இம்சிப்பதைப் பார்க்கிலும் உன்னுடைய சொத்தையெல்லாம் இழப்பது நலம்.

2. மோட்சத்தில் திவ்விய கர்த்தரின் பிரத்தியட்ச தரிசனத்துக்கு நீ பேறுபெற்றவனாகவேண்டுமானால் உலகப்பற்றுதல்களை ஒழித்துவிடு. நீ மோட்ச இராச்சியத்திலே என்றென்றும் களிகூர்ந்திருக்கவேண்டுமானால் இப்பூலோக வீண் மாய்கைகளையும், பொல்லாத கலக்கங்களையும், வியர்த்தமான கவலைகளையும் அகற்றிவிடு.

சமாதானமுள்ளவனாயிருக்க விரும்புவாயானால் வாதஞ்செய்வோருடைய கோஷ்டியில் சேராதே. மேலும் கோபத்துக்குக் காரணமின்னதென்பதைக் கண்டறிந்து அதை அறவே ஒழி. மோட்சத்தில் பெரியவனாயிருக்கவேண்டுமென்று ஆசித்தால் உலகத்தில் மிகத் தாழ்ச்சியுள்ளவனாயிரு.

மனிதருடைய சன்னிதானத்தில ஞாயவானென்று சொல்லப்பட விரும்பாதே. ஏனென்றால் மனிதருடைய புகழ்ச்சியெல்லாம் இன்றைக்கிருந்து நாளைக்கு அழியக்கூடியன. வஞ்சனையுள்ள மனதோடு கூடியவனது பொய்யான ஒழுக்கத்தைப் பார்த்து அவனுடைய ஐந்து பஞ்சபூதங்களும சிரிக்கும்.

"வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
அஞ்சும், அகத்தே நகும்"

துணிவுள்ளவனும், வீண் பேச்சுப் பேசுகிறவனும் பழிக்குப் பாத்திரமானவர்கள். ஏனெனில் இவ்விருவரும் சத்திய நடத்தையின் வரம்பைத்தாண்டி நடக்கிறார்கள்.

பலவான்களில் அநேகர் தங்கள் பலத்தின் கர்வத்தினால் சிதைவுறுகிறார்கள். ஆனால் பலவீனமுடையவர்களில் அநேகர் பலப்படுத்தப்படுகிறார்கள். ஏனெனில் இவர்கள் எல்லாவற்றிற்கும் மேலாகச் சர்வேசுரனைச் சிநேகித்து அவர்பேரில் தங்கள் பூரண நம்பிக்கையை வைக்கிறார்கள். சுவாமி, ஏழைகளையும், தாழ்ச்சியுள்ளவர்களையும், இவ்வுலகத்தாரால் நிந்திக்கப்பட்டவர்களையும், தமக்குச் சிநேகிதராகவும், தாசராகவும் தெரிந்துகொள்ளுகிறார்.

அடக்கமுள்ளவர்களும் சாந்தமுள்ளவர்களும் எல்லோராலும் சிநேகிக்கப்படுகிறார்கள். ஆனால் கடின மனமுடையவனை எல்லோரும் அலக்ஷியம் செய்வார்கள். பொறுமையும் அடக்கமுமுள்ளவன் தனது தாழ்ச்சியினாலும் தர்மகுணத்தாலும் தனது பகைவனை மேற்கொள்வான்.

பிறருடைய ஊழியத்திற்குத் தன்னைக் கையளித்து, அவர்களுடைய நன்மைக்காக உழைத்து, அவர்களுடைய குறைகளும், பலவீனங்களும் எப்படிகொத்தவைகளாயிருந்தபோதிலும், அவைகளைப் பொறுமையாய்ச் சகித்து, அவர்களுக்கு வரும் கஸ்தி, நோவு, வருத்தம், சுயநன்மை, சந்தோஷமெல்லாம் தனக்கு வந்தாற்போல கருதுகிறவனுக்கு உற்ற நண்பர்கள் அனந்தம்.

சமயோஜிதமாய் மவுனம் காக்காதவன் அநேகர் முன்னிலையில் அவமானமடைவான். "மவுனம் மலையைச் சாதிக்கும்" என்கிற பழமொழியின்படியே மவுனமானது மலையைப் போலப் பெரிதான பொய்யைச் சாதித்து மறுக்கும். சேசுநாதர்சுவாமி தமதுபேரில் சொல்லப்பட்டப் பொய்க்குற்றங்களுக்கும், பொய்ச்சாட்சிகளுக்கும் எதிர்மொழி பேசாமல் மவுனமாயிருந்தபோதிலும் அவைகளெல்லாம் பொய்யென்று பிலாத்தென்ற துரையும் மற்றவர்களும் நன்றாய்க் கண்டுபிடித்தார்கள்.

ஆகையால் நல்லோர்கள் துஷ்டர்களுடைய தூஷணங்களையும் அவர்கள் சொல்லும் அபாண்டங்களையும் மறுக்கிறதற்கு அவர்களது மவுனமே போதும்.

(தொடரும்). S. S. G.

# Lenten Rules.

## தபசுகாலத்து ஒழுங்குகள்.

### I

ஏழு பிராயத்திற்கு மேற்பட்டவர்கள் :—(1) வருஷத்தில் வரும் சகல வெள்ளிக்கிழமைகளும், (2) தபசுகாலத்தில் சகல புதன்கிழமைகளும், (3) பெரிய சனிக்கிழமையும், (4) கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தின நாளும் நீங்கலாக, மற்ற சகல நாட்களிலும் மாமிசம் சாப்பிடலாம். மேற்கண்ட நாட்களில் கடன் திருநாள் வந்தால் அப்போது சுத்தபோசனம் அநுசரிக்கக் கடனில்லை.

### II

21 வயதிற்கு மேற்பட்டு 60 வயது இன்னும் தொடங்காதவர்கள எல்லாரும், (1) தபசுகாலத்து ஏழு வெள்ளிக்கிழமைகளும்—(2) பெரிய சனிக்கிழமையும், (3) கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தின நாளும் ஒருசந்தி அநுசரிக்கக் கடன். பெரிய சனிக்கிழமை மத்தியானம் பன்னிரண்டு மணிக்குமேல் ஒருசந்தி சுத்த போசனக்கடன் தீர்ந்துவிடுகிறது.

### III

தபசுகாலத்தில் (1) ஒருசந்தி சுத்தபோசன நாட்களில், பெரிய வெள்ளிக்கிழமையும் முதலாய் எல்லாப் போசனங்களிலும் முட்டை, வெண்ணெய், பாற்கட்டி, பால் சாப்பிட உத்திரவுண்டு; (2) மற்ற நாட்களில், அதாவது ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் எல்லாப் போசனங்களிலும கறி மீன் சாப்பிட உத்திரவுண்டு.

### IV

மேற்கண்ட சுதந்தர நன்மைகளை அநுபவிக்கப் பிரியமுள்ள விசுவாசிகள் அதற்குக் கைம்மாறாக, செபம் முதலிய நற்கிருத்தியங்களையும், தங்கள் சக்திக்குத் தக்காப்போல் தருமங்கொடுத்தலையும் அநுசரித்துவரக்கடவார்கள்.

### V

மேற்சொன்ன ஒழுங்குகளிலிருந்து விசேஷ காரணத்தை முன்னிட்டு, விசேஷ நீக்குதல வேண்டிய விசுவாசிகள் தங்கள் பங்குசுவாமியாரிடமாவது ஆத்தும குருவினிடமாவது யோசனைசெய்துகொள்ளலாம்.

# Friendly Talk.

## சிநேக வாய்ச்சல்லியம்.

### 5-ம் நாள்.

கு: ஞான உபதேசத்திலே நான் உங்களுக்குச் சொன்ன விபரமெல்லாம் நன்றாய் அறிந்து மனசிலே வைத்திருக்கிறீர்களா, முத்தாயி?

முத்தாயி: ஆமாஞ்சாமி, நீங்கள் சொன்னதெல்லாம் மனசிலே கொஞ்சங் கொஞ்சமிருக்குது சாமி.

கு: சாமி எப்பேர்ப்பட்டவரென்றும், மனுஷன் யாரென்றும், அவனை யாருண்டாக்கினதென்றும் இதெல்லாம் விபரமாய்ச் சொல்லுவாயா, செசிலி?

சே: சொல்லுவேன் சாமி.

கு: நரகமிருக்குதா, முத்து? மோட்சமிருக்கிறதா? அந்த இடங்களுக்குப் போகிறது யார்? நரகம் மோட்சம் இந்த இடங்களில் இருக்கிறவர்கள் என்ன செய்வார்கள்? மனுஷனுக்கு ஆத்தும சரீரமிருக்குதா? அவன் செத்தபிறகு ஆத்தும சரீரம் என்னமாய்ப் போகும், இதெல்லாம் நன்றாய் விபூரமாகச் சொல்லுவீர்களா?

பி: விபரமாய்ச் சொல்லுவோம் சாமி.

கு: முத்து, நீ நல்ல பையனா?

மு: ஆமாஞ் சாமி. இதோ பாருங்கோ, எனக்கென்னாச்சி சொரங்கு சொரி இருக்குதா? கெடையாது. காச்சல்கீச்ச ஒண்ணுமேயில்லை. பல்லு நல்லா வெளக்கியிருக்கிறேன். இதோ சாமி. இஞ்சே பாருங்கோ. ஈ - ஈ. வெள்ளைத்துணி இடுப்பிலே. அழுக்குத் தேய்ச்சு தண்ணீர் வாத்துக்கிட்டேன். நான் நல்லாத்தாஞ் சாமி இருக்கிறேன்.

மு: பாராயா செசிலி உன் தம்பி சொன்னதைக் கேட்டையா? ஒடம்புக்குத் தண்ணி வாத்துக்கிட்டானா, பல்லு வெளக்கிட்டானா, தலை சீவிக்கிட்டானா—அப்பறம் வெள்ளித்துணி கட்டிக்கிட்டானா, நல்ல பையனாப்போயிட்டானா—நல்ல பையனாயிருக்க இதெல்லாம் இருந்தால் போதுமா? தினம் காத்தாலே பொழுதோடே செபம் பண்ணவேண்டாமா? அப்பன் ஆயிக்கு அடங்கி, அவுங்க பேச்சுக்கு எதிர்ப்பேச்சு பேசாமல் அவுங்கள் பேச்சுக்கேட்டு கீழ்ப்படிந்து நடக்கவேண்டாமா? கடம்பூசை காணவேண்டாமா? வருஷக்கட்டளை தீர்க்கவேண்டாமா? சாமியார் புத்தி பிரசங்கம் கேட்கவேண்டாமா?



ஞானோபதேசம் படிக்க தினமும் தப்பாமல் மந்திரப் பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டாமா?

சே: ஏனையா முத்தாயி, நீ சொன்னாப்பிலே மாத்திரம் செய்துபோட்டால் தீந்துபோச்சா நல்லபிள்ளையாய் இருக்கிறதற்கு.—இன்னும் பொய் சொல்லப்படாது. திருட்டாகாது. கெட்டவார்த்தை வாயில் வரப்படாது. சத்தியம் பண்ணப்படாது. சாபம் போடப்படாது. சாமியைத் திட்டப்படாது. கோள் குண்டணியாகாது. இன்னம் இதெல்லாமாகாது.

கு: சரி, நல்லபிள்ளையாயிருக்க மனசுண்டானால் முத்தாயி சொன்னபடி செய்யவேணும். செசிலி புத்திப்படி நடக்கவேணுமல்லவா பிள்ளைகளே.

பி; ஆமாம் சாமி அது நெசந்தான்.

கு: அப்படியானால் இப்பேர்க்கொத்தவர்கள் செத்தால் அவர்கள் ஆத்துமம் எங்கே போகும்?

பி: மோச்சத்துக்குப்போயி நல்ல சுகமாயிருக்கும்.

கு: மோட்சத்துக்குப் போனால் அங்கே அது யாருகூட இருக்கும்?

பி: சம்மனசுக்குப் பக்கத்திலே இருப்பாங்கோ சாமி.

கு: தேவமாதாவுக்குப் பக்கத்திலே இருப்பார்களா?

பி: தேவமாதாவுக்குப் பக்கத்திலேயும் இருப்பாங்க சாமி

கு: நல்லது. சாமிகூட இருப்பார்களா?

பி: சாமிகூடவும் இருப்பாங்கோ சாமி.

கு: மோட்சத்திலே நோவுநொடி, காய்ச்சல், காலரா, திருடர் கள்ளர் முதலிய இப்படிப்பட்ட பொல்லாப்புண்டா?

பி: அங்கே இப்படிப்பட்ட யாதொரு பொல்லாப்புங் கெடையவே கிடையாது.

கு: நீங்கள் சொன்னது நியாயந்தான். பின்னே பொய் பித்தலாட்டக்காரர், திருடர், தேவனுக்குப் பயப்படாத கெட்ட மனிதர்கள் எங்கே போவார்கள் செத்தபிறகு? மோட்சத்துக்குத்தானே!

பி: அப்படிப்பட்டவங்கோ மோச்சத்துக்குப் போகவே மாட்டாங்கோ சாமி.

கு: அதேனப்படி?

பி: ஏனிண்ணா,—மோச்சம் போறவங்கோ நல்ல சனமாயிருக்கினும், பொய் பித்தலாட்டக்காரர், திருடர், சண்டைக்காரர், தங்கள் சாதியவே மெச்சி, தங்கள் சனங்களையே விர்த்தி பண்ணி, மற்ற சாதியாரை நிந்தித்து, அவர்களைச் சிநேகியாமல் காலைவாரி காலைவாரி கீழடிச்சு அவர்களை அநியாயமாய் அடக்கி ஆளராங்களே, அந்த ஒழுக்கமுள்ள ஓரவஞ்சனைக்கா

ர் இவங்கெல்லாம் கெட்டவங்க; பெரிய பாவிகள். இவங்க மோச்சம் போகவேமாட்டாங்கோ.

கு: பின்னே எங்கேதான் போவார்கள்?

பி: நீங்கதான் சொல்லியிருக்கிறீங்களே, அதுக்குள்ளே மறந்தா போயிட்டோ, நரகத்துக்குத்தான் போய்ச் சேருவாங்க சாமி, நரகத்துக்குத்தான்.

கு: நரகத்திலே யாருகூட இருப்பார்கள்?

பி: நரகத்திலே பிசாசுகூடத்தான் இருப்பார்கள்.

கு: ஆமாம் பாத்தீர்களா—நான் முன்னே சொன்னது போல அந்தப் பொல்லாத பாவிகள் இந்தப் பூமியில் இருக்கும்போது, சாமியில்லை, நரக மோட்சமேது, செத்தபிறகு மனுஷர் நரகத்துக்கோ மோட்சத்துக்கோ போகிறார்களென்று யார் கண்டதென்று, சாமி வைத்திருக்கிற கட்டளைப்படி நடவாமலும், திருச்சபைச் சொல்லைக் கேளாமலும், பெரியவர்களையும் அவர்கள் நல்ல புத்தியையும் மதியாமலும் நடந்துவிட்டு, செத்தபிறகு நரகத்திற்குப் போய் விழுந்து பொல்லாத பிசாசுகளாலே என்றென்றைக்கும் அடியும் உதையும்பட்டு, வெட்டுங் குத்தும் வாங்கி, ஓயாமல் வெந்து, கண்ணீர்விட்டு கதறியழுதுகொண்டேயிருப்பார்கள்.

இப்படியிருக்க நரகத்துக்குப் போகிறது சின்னப்பொல்லாப்பென்று சொல்லலாமா?

பி: இல்லை சாமி நரகத்துக்குப்போறது பெரிய பெரிய பொல்லாப்புத்தான் சாமி. அங்கே போகவேபடாது சாமி.

கு: மெய்தான், நரகத்துக்குப் போகிறது மிகவும் பெரிய பொல்லாப்பாய் இருக்கிறபடியால், நாம் அங்கே போகாதபடிக்கு ரொம்ப எச்சரிக்கையாய் இருக்கவேணும். அதற்காக நல்ல பத்தியாய் இருக்கவேணும். நல்ல புத்தியோடு நடக்கவேணும். காலமே சாயந்திரம் ஜெபம் செய்யவேணும். ஞாயிறு கடன் திருநாள்களில் முழுப் பூசை காணவேணும். பாவசங்கீர்த்தனம் பண்ணி நன்மை வாங்கவேணும். ஒருசந்தி சுத்தபோசனம் அனுசரிக்கவேணும். ஞாயிறு கடன் திருநாளில் விலக்கப்பட்ட வேலை செய்யப்படாது. இப்படியே வேத ஒழுங்குப்பிரகாரம் நடந்து நரகத்திற்குத் தப்பி மோட்சத்திற்குப்போய் சேர சாமி உதவி செய்யவேணுமென்று தினம் தினம் அவரைப் பார்த்து ஜெபம் பண்ணவேணும். தெரியுமா பிள்ளைகளே.

பி: தெரியும் சாமி, அப்படியே ஜெபம் பண்ணுகிறோம் சாமி.

**பள்ளிப்பிள்ளைகள்**: சாமி சர்வேசுரனுக்குத் தோத்ரம்.



கு: ஆசீர்வாதம். மந்திரம் படித்தீர்களா?

ப. பி: படித்தோம் சாமி.

கு: பாடம் சரியாய்ப் படித்து ஒப்பித்தீர்களா?

ப. பி: ஆமாம் சா......மீ.

சே: முத்தாயி இதென்னடி ஆயா, இத்தனை பசக.

மூ: ஏனாயா, உனக்கு இத்தனை நாளாத் தெரியாது? பங்கு சாமியார், சின்னப்பசக படிப்பில்லாமல் கெட்டுப்போறாங்கோ இண்ணிட்டு மந்தரப் பள்ளிகொடத்திலே பள்ளிக்கொடம் வச்சிருக்கிறாங்கோ. இரண்டு வாத்தியாரு இருக்கிறாங்கோ. பெரிய—ரொம்ப பெரிய பள்ளிக்கொடம் ஒண்ணு கட்டராங்கோ நஞ்சபெரா சத்திரத்துக்கும் பொறகாலே.

சே: அப்படியானுக்கா இனிமேலு ஆம்பிளைப் பசகளுக்கு படிப்புக்குக் கொறைச்சலே இல்லை. மந்திரம் குறிப்பிடம் நல்லாப் படிச்சுக்குவாங்கோ. அவுங்க ஊட்டிலே பண்ணுகிற கொட்டம், கொட்டாலை எல்லாம் இனிமேலு பொட்டிப் பாம்பு அடங்கிறாப்போல அடங்கிப்போகும். சல்லியம் தொலைஞ்சுதாயா.

மூ: ஆமாஞ் செசிலி, நல்லாச் சொன்னே. உன் வாயிக்கு ஒரு படி சக்கரை கொட்டவேணும்

பி: சாமியாரைக் கும்பிட்டிட்டு போலாம் வாங்கெல்லா.

பி: சாமி சர்வேசுரனுக்குத் தோஸ்திரம்.

கு: ஆசீர்வாதம்.

பி: சாமி நாளைக்கு வரமாட்டோம் சாமி.

கு: சரி, ஆனல் புதன்கிழமைக்கு கட்டாயம் வரவேணும்.

பி: அப்படியே வாறோம் சாமி. S. M.

## PAGE FOR THE YOUNG.

## பிள்ளைகளின் பக்கம்.

"Trust in God and you will never be forsaken."

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்."

பிரான்ஸ் தேசத்தில் ஒரு சிற்றூரில் ஹெர்மான், ஜோவாகீன் என்னும் இரு வாலிபரிருந்தனர். இவர்களில் ஜோவாகீன் தெய்வபக்தியுடையவன்; களங்கமில்லாதவன்; பெரியோரிடத்தில் அடக்கமும், உண்மைபேசும் உயர்குணமுமுடையவன்.

ஹொர்மான் நற்குண நற்செய்கையுடையவனல்ல; உடலை வளர்க்கும் சோம்பேறி; ஞாயிற்றுக்கிழமைமுதலாய் கோவிலுக்குப் போகமாட்டான்.

ஒரு நாள் இவர்களிருவரும் சேர்ந்து பக்கத்தூரில் நடந்த ஒரு திருவிழாவுக்குக் கால்நடையாகச் சென்றனர். போகும்போது அவர்கள் பலபேச்சுக்கள் பேசிக்கொண்டு போனபோதிலும் ஜுவாக்கினுடைய சிந்தனையெல்லாம் கடவுளிடத்திலேயேயிருந்தது. ஹொர்மான் திருவிழாவில நடக்கும் வைபவங்களையும், கொட்டு முழக்குகளையும் காணவிரும்பி புறப்பட்டவனாதலால் அவன் மனம் அவன் பேச்சுகளிலேயே ஆனந்தமடைந்தது. இப்படி இவர்கள் சென்றுகொண்டிருக்கையில் வழியிலே ஒரு சிறிய கோயிலிருந்தது. ஜுவாக்கின் அந்த ஆலயத்தைக்கண்டதும், "மித்திரா! வா, நாம் போய் இவ்வாலயத்துள் சென்று கொஞ்சநேரம் கடவுளைப் பிரார்த்தித்துப் பிறகு செல்வோம்" என்றழைத்தான். ஹொர்மான் வெறுப்படைந்து தன் சிநேகிதனைப்பார்த்து, "போ, மடையா, எப்போது பார்த்தாலும் 'சுவாமி, கோயில்' என்று கூறிக்கொண்டேயிருப்பதுதான் உன் வேலை. நான் வரவில்லை, நானிந்த மரத்தினடியில் படுத்துக்கொண்டிருக்கிறேன். நீ கோயிலுக்கு போய் செபம் செய்துவிட்டு வா" என்று கூறினான். ஜுவாக்கின் நகைத்து, "அப்படியானால் நீ இங்கேயே படுத்திரு, நான் போய் கொஞ்சநேரம வேண்டிக்கொண்டு ஒரு நொடிப்பொழுதில் வருகின்றேன்" என்று சொல்லிக் கோயிலுக்குள் சென்று வேண்டிக்கொண்டு வெளியில் வரும்போது அவன் காலிலே ஒரு பெரிய முள் அழுந்தப்பாய்ந்தது. அதைப் பிடுங்கியெறிந்து, "என் ஆண்டவரே, எல்லாம் உன்செயலென்று நம்பினேன். துன்பம் வந்தகாலத்தும் இன்பம் வந்தகாலத்தும உன் திருவடி மறவேன்" என்று சிந்தித்துக்கொண்டே தன் சிநேகிதனிடம வந்தான். ஜுவாக்கின் நொண்டிக்கொண்டுவந்ததைக்கண்ட ஹொர்மான், "அடே, கோயிலுக்குப் போய் செபம் செய்ததற்குப் பலன் கிடைத்ததுபோலிருக்கின்றது. அடமூடா! உன் புத்தியை என்னென்று கூறுவது. இதோ என் கையிலிருக்கும் பிரான்கைப் பார், இது எப்படி கிடைத்ததென்று உனக்கு தெரியுமா? இங்கு மணலைக் கிண்டிக்கொண்டு என் மனப்போக்கின்படி சிற்றின்பப்பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தேன். இங்கிருந்து கிடைத்தது. சிற்றின்பப்பாடல்களைப் பாடியதில் கிடைத்தப் பயனைப் பார்த்தாயா? சுவாமியாவது பூதமாவது! மூடப்பயல்களுடைய பேச்சல்லவா அது!" என்று நகைத்துக்கொண்டே எழுந்தான். ஜுவாக்கின்



அதைக்கேட்டதும், "என் பொல்லாத காலத்தினால் என் காலில் முள் தைத்தது. உனக்கு நற்காலமிருந்து பிரான்க் கிடைத்தது, எழுந்திரு, போவோம்" என்றான். ஹொர்மான் பெருமகிழ்ச்சியுடன் புறப்பட இருவரும பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்தினர்.

போகும்போது ஜுவாக்கின், "கடவுளே! இந்த மூடன் என்னைக் கண்டு நகைத்துக் கேலி செய்கிறானே? ஈசா! நான் உமது அடிமையல்லவா? கடவுளே சரணம" என்று மனதில் கூறிக்கொண்டு கடவுளை நினைத்தான். அப்போது திடீரென்று ஒரு வாலிப சந்நியாசி அவர்கள் எதிரில் வரக் கண்டான். உடனே ஜுவாக்கின் பெரியாரை வணங்குமியல்புடையவனாதலால், அவரைத் தாழ வணங்கி அவரிடம் நடந்த செய்தியைச் சொன்னான். அவர் ஜுவாக்கின் முகத்தைப்பார்த்து, "அப்பா, தேவ இரகசியத்தை நீங்கள் அறியமாட்டீர்கள். இன்று உனக்கு மரணம் நேரிடவேண்டிய நாள், இந்நாளில் கோயிலைக் கண்டதும கடவுளைப் பணியவேண்டுமென்கிற எண்ணம் உனக்குதித்து அவ்வாறே செய்தமையினால் உனக்கு நேரிடக்கூடிய மரணமானது இப்படிச் சிறிய கஷ்டத்தோடு முடிந்தது. கடவுளை நம்பினோர் கஷ்டம் மலைபோல வந்தாலும பனிபோல நீங்கும். உனது சிநேகிதனுக்கு இன்று பெரிய புதையல் கிடைக்கவேண்டிய சமயம. இவன் கடவுளையும் ஆலயத்தையும் இகழ்ந்ததனால் இவனுக்கு ஒரு பிரான்க்கோடு போயிற்று. இது இரகசியம். எக்காலத்தும் கடவுளை மறவாமல் நல்ல காரியங்களைச் செய்துவரவேண்டியது. அப்படிச் செய்பவனுக்கு யாதொரு பொல்லாப்பும் நேரிடாது. அவனிடம் கடவுள் கருணை பாலிப்பார்" என்று புத்திமதி சொல்லி திடீரென மறைந்துபோனார்.

பக்தி விசுவாசமற்ற ஹொர்மான் வாலிப சந்நியாசியாரின் உத்தம புத்திமதியைக்கேட்டு ஜுவாக்கினுடன் அத்திருநாளைத் தக்க ஒழுங்கோடும, விசுவாசத்தோடும, மரியாதையோடும, கொண்டாடி, உத்தம கிறீஸ்தவனாக வீட்டுக்குத் திரும்பி வந்து மரணபரியந்தம சர்வேசுரனிடம அத்தியந்த பக்தி விசுவாசத்துடன் ஒழுகிவந்தான்.

ஆகையால் பிரியமான பிள்ளைகளே! நீங்கள் செய்கிறதெல்லாம் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து, எந்தெந்த கிரியையும் அவரைப்பற்றி, அவருக்குத் தோத்திரமாக, அவருடைய சித்தம் நிறைவேற்ற, அவருக்குப் பிரியப்பட அல்லது அவருடைய தேவசிநேகத்தினிமித்தம் செய்யவேண்டியதென்று அறியக்கடவீர்களாக.

# Jayaseelan

## ஜயசீலன்.

### 8-ம் அதிகாரம். (தொடர்ச்சி.)

ஸத்தியானந்தன் தைரியங்கொண்டு, வீட்டுக் கதவை மெதுவாய்த் திறந்து கைத்தாங்கலாய் ஜயசீலனை படிவழியாய் அவனுடைய அறைக்குக் கூட்டிச் சேர்த்துப் படுக்கையில் அமர்த்தினார். அவனுக்கு நேர்ந்த விபத்தைப்பற்றி அறியப் பிரயாசப்படுவதில் என்ன பயன்? அளவுக்குமிஞ்சிக் குடித்து வெறியில் இருப்பவர்கள் உளறும் அர்த்தமற்றதும், அரைச் சொல்லானதுமான வார்த்தைகளைப்போல, ஜயசீலனும் தகப்பனார் கேட்ட வினாக்களுக்கு விடை பகர்ந்தானேயொழிய கண்டுபிடிக்கக்கூடுமான ஒரு சொல்லாவது அவன் வாயில் வரவில்லை. இவ்வளவு கேவல அந்தஸ்தில் இருப்பவனிடம் நடந்த விஷயங்களைக் கேட்பது வீண் என்று ஸத்தியானந்தன் உணர்ந்து, மகனை சயனிக்கவிட்டுத் தன் அறையை நோக்கிச் சென்றார். அவர் கொஞ்சநேரமாவது கண்களை மூடி நித்திரைகொள்ளக் கூடுமாயில்லை. மகனுடைய ஈனசெயல்களும், அவன் தன்னைத் திருத்திக்கொள்ளாதேபோனால் வர இருக்கும் ஆபத்துகளும், குடும்பத்துக்கு வரும் அவமானமும் தன் கண்முன்பாக நிற்க, கஸ்தியில் மூழ்கித் துக்கசாகரத்தில் அமிழ்ந்தினார். ஜயசீலன் கட்டிலில் கிடத்தப்பட்டவுடன் குடியின் மயக்கம் இன்னம் அவனைவிட்டுப் போகாதபடியால் அயர்ந்த நித்திரைபோனான். "குடியன் தூக்கம் குடிமயக்கம் தீர்ந்தால்தான் முடியும்." அப்படியே ஜயசீலனுக்கும் காலை 10-மணிக்குமுன் படுக்கையை விட்டு எழுந்திருக்கச் சாத்தியப்படவில்லை. கடைசியாய் கட்டிலைவிட்டு உட்கார்ந்தான். ஆனால், என்ன விகாரமான காட்சி! அவன் கண்கள் கோவைப்பழம்போல் சிவந்து, முகம் கொஞ்சமாவது இரத்தப்பசையின்றி வெளுத்து, நாவெரிச்சலும், தலைநோவும், ஓரோ வார்த்தையில் அவன் சரீர முழுதும் ஓரோ ரணமாயிருப்பதுபோல் காணப்பட்டது. மெதுவாய் எழுந்து நடந்து பக்கத்திலிருந்த பலகணியைத் திறக்க, அதன் வழியாய் வந்த குளிர்காற்று அவன் சரீரத்தில் பட்டதும், ஒரு மாதிரி மயக்கம் உண்டானதுபோல் மூர்ச்சையாய் விழுந்து தனக்கே தெரியாமல் மாலைமாலையாய்க் கண்ணீர் சொரிந்தான்.



இவ்வித அந்தஸ்தில் இருக்கையில் தகப்பனார் ஸத்தியானந்தன் அவனுடைய அறையில் பிரவேசித்து மகன் கண்ணீர் விடுவதையும், மெத்தத் திகிலடைந்திருப்பதையும் பார்த்து, ஜயசீலன் முந்தின தினத்தில் நடந்த விஷயங்களை நினைத்து, விசனித்து மனஸ்தாபப்படுவதாக எண்ணினார். மகன் தன் குற்றத்தை உணர்வதால் அவனைக் கோபித்துத் திட்டுவதும், நடந்த சமாச்சாரங்களைப்பற்றி வற்புறுத்துவதும் பிரயோஜனமில்லையென்று எண்ணி ஒருவகையில் தேறுதலடைந்து, பின்வருமாறு அவனுக்கு உபந்நியாசித்தார்: "என் அன்புள்ள குமாரனே! உன்னிடம் நான் கண்டிப்பாய்ப்பேசி உன் அயோக்கிய செய்கைக்காகத் தகுந்த சிட்சை செய்யலாமென்று தீர்மானஞ் செய்திருந்தேன். ஆனால் இப்போது உன் கண்களினின்று வடியும் நீரானது உன் விஷயத்தில் பரிதாபப்படச் செய்கிறது. நேற்று என்ன செய்தாயென்றும், எங்கேயிருந்தாயென்றும் நான் கேட்கப்போகிறதில்லை. சிலசமயம் நடந்த வர்த்தமானங்களை விவரித்துரைப்பது உனக்குச் சாத்தியமல்ல. நீ இருக்கும் அந்தஸ்தும், உன் கண்ணீர்த் துளிகளுமே நான் அறிய ஆசிக்கும் காரியங்களைப் பரிஸ்காரமாய் எடுத்துக் காட்டுகின்றன. நீ அயோக்கியமும் அக்கிரமுமான செய்கையில் தலையிட்டுக்கொண்டாயென்பது நிச்சயம். இது உன் ஜீவியத்தில் முதற்தடவையாகையாலும், குற்றத்தைக் கண்டுபிடித்து நீ விசாரப்படுவதாகக் காணப்படுவதாலும், நான் என் மனப்பூரணமாய் உனக்கு மன்னிப்புக்கொடுக்கிறேன். இனிமேலாவது இப்படிப்பட்ட கிரியைகளுக்கு உட்பட வற்புறுத்தி உன் புத்தியைக் கெடுத்த தோழர்களை விட்டொழிப்பாயென்று நான் நம்புகிறேன். 'சூடுண்ட பூனை அடுப்பங்கரை அண்டாது' என்பதுபோல நீ இப்போது அநுபோகத்தில் அறிந்த பாடங்களை மறக்காதே, மகனே!" என்று சொல்லி தயையும், சாந்தமும், பட்சமுமுள்ள தகப்பனார் தன் உபந்நியாசத்தை முடித்தார்.

இவ்வளவு அயோக்கிய செய்கையில் உட்பட்ட ஜயசீலனைத் தகப்பனார் எவ்வளவு அன்புடன் வரப்பெற்றார்! கொஞ்சநேரமாவது விட்டுப்பிரியச் சகியாத சகோதரி இரஞ்சிதமும், நடந்த சங்கதிகளின் காரணத்தை அறியாததினால் தமையனுக்கு ஏதோ சௌக்கியக் குறைவு நேரிட்டு இப்போது கொஞ்சங்கொஞ்சமாய் சுகமடைவதைப்பார்த்து சந்தோஷித்து முன்போல் அவனிடம் அன்புகாட்டி வந்தாள். தகப்பனாருடைய பட்சம், தயை, சாந்தம், நல்ல உபசரிப்பு, சகோதரியின் நேசம் ஜயசீலனை நன்றியறிதலுக்கும் மனஸ்தாபத்துக்கும் தூண்டி

யிருக்கவேண்டும். புத்தி சுயாதீனத்தையடைந்தபோது தான் சிநேகிதனைத் தெரிந்துகொண்ட தனபாலன் எவ்வளவு அயோக்கியனென்றும், அவனுடன் சகவாசம் செய்வதால் தனக்கு வரக்கூடிய தீங்கு, கேடு எம்மாத்திரமென்றும் தெளிவாய் அறிந்திருக்கவேண்டும். ஆனால் ஐயோ! ஜயசீலனுடைய எண்ணமும் கருத்தும் எவ்வளவோ மாறுபாடுள்ளதாயிருந்தது! தகப்பனார் சொல்லிய பட்சமுள்ள வார்த்தைகளும், சகோதரியுடைய அன்பும் அவனுடைய இருதயத்தைப் புண்படுத்தினதுபோலிருந்தது. தன்னை இவ்வளவு அவமானத் துக்குட்படுத்திப் பாவ விதையை நாட்டின தனபாலன் சிநேகத்தை விட்டுவிட ஒரு நிமிஷமாவது அவனுக்கு மனதில்லை. ஆயினும், ஒரு விஷயத்தைப்பற்றிமாத்திரம் தனபாலன் பேரில் அவனுக்கு வருத்தம்: அதாவது அயோக்கியர்கள் சேர்ந்து குடித்து சூதுவிளையாடும் இடத்துக்குத் தனபாலன் தன்னைக் கூட்டிச்சென்றது தகாதென்று அவனிடம் முறையிட்டான்.

அதற்குத் தனபாலன் மாறுத்தாரமாக, "சிநேகிதா! நீ மிகவும் பயங்காளியாயும், மனத்தைரியமற்றவனாகவும் காணப்படுகிறாய். நீ தத்துவ சாஸ்திரம், இராஜாங்க சட்டங்களெல்லாம் சரியாய்க் கற்றுணர்ந்து பெரிய லாயராக வேண்டுமானால், நீ ஒவ்வொரு இடத்திலும்போய் நடக்கும் காரியங்களைக் கண்ணால் காணவேண்டும். அப்போதுதான் உன் அலுவலைச் சரியாய் நிறைவேற்றக்கூடும். சொல்லிக் கேட்பதால் அதிக பிரயோஜனமுண்டாகாது.

**ஜயசீலன்:** என்ன சொல்லுகிறாய்? நான் லாயர் உத்தியோகம் செய்ய குடியரும், சூதாடிகளும், கள்ளரும், கொலைபாதகரும் கூடும் இடத்துக்குப் போகவேண்டுமா?

**தனபாலன்:** அதற்கும் சந்தேகமா?

**ஜய:** அது என்னத்துக்கு உதவும்?

**தன:** நீ முன் சொல்லப்பட்ட இடங்களுக்குப்போய் அவர்களுடன் கலந்துவந்தால் அவர்களுடைய நடக்கை எப்படிப்பட்டதென்றறியலாம்.

**ஜய:** முந்தினநாளில் நம்மோடுசேர்ந்து, நமது நண்பர்களாயிருந்த அயோக்கியர்களுடைய நடக்கையை அறிவதால் என்ன பிரயோஜனம்?

**தன:** நீ நினைப்பதைவிட அது பின்னால் உனக்கு உதவியாயிருக்குமென்று நம்பு. சிலவேளை ஒருநாள் அப்படிப்பட்ட குடியர், சூதாடிகள், கள்ளர் இவர்களுக்கு விரோதமாய் கோர்ட்டில் வியாச்சியமிருக்கும்போது நீ இவர்கள் பாரிச



மாய்ப் பேசி இவர்களை விடுதலையடைவிக்க வேண்டியிருக்கும். அந்த வேலையைச் சரியாய்ச்செய்ய அவர்களுடைய ஜீவியம், பழக்கம், நடத்தை, அவர்கள் கூடுமிடம், அவர்கள் பாஷை முதலிய அநேக விஷயங்களை அறிந்திருக்கவேண்டும்.

(தொடரும்)

---

## Here and There.

### நாலு சங்கதிகள்.

H. L. the Bishop.—மகா கனம் பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள் கடந்த மாதம் 15-உ கோயமுத்தூரிலிருந்து புறப்பட்டு பட்டத்துக்குளம், தாராபுரம், சின்ன தாராபுரம், அரவக்குறிச்சி, சென்னிமலை, குமாரபாளையம் இவை முதலிய பங்குகளில உறுதிபூசுதல் என்னும் தேவதிரவிய அநுமானச் சடங்கை நிறைவேற்றினர்.

Seminary.—பெபுருவரி மாதத்தில் புதுச்சேரி குருமடத்தில் படித்துவரும் பிரதர் பெலவேந்திரமும், பிரதர் மரிய அம்புரோசும், பிரதர் பிராஞ்சிஸ் சவேரியாரும் சப்தியாக்கோன் என்னும் மேலான பட்டத்தையும், பிரதர் மரிய ஆசை கீழான பட்டங்களையும் புதுச்சேரி அதிமேற்றிராசனக் கோவிலில் பெறுவார்கள்.

Coimbatore.—கோயமுத்தூரில் ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளை பள்ளிக்கூடங்களில் இனிமேல் படிக்க உத்தரவு இல்லாமையால் "நல்ல ஆயன்" என்னும் ஓர் புது எலிமெண்டெரி பாடசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த பாடசாலை திறந்த முதல் நாளில் 90 சிறு பிள்ளைகள் சேர்ந்தார்கள்.

The Messenger.—கொடிவேரி பங்கு குருவானவராகிய சங். J. B. Petit (பெதித்) சுவாமியார், சங். மாஷல் சுவாமியார் இவர்களுடைய பிரயாசை முயற்சியினால கொடிவேரி பங்கில் 60 கிறீஸ்தவர்கள் நமது சத்திய தூதனுக்கு சந்தாதாரர்களாகச் சேர்ந்தார்கள். மெத்த உபகாரம்!

England.—இங்கிலாந்து தேசத்தில் ஒரு மாதத்துக்கு சராசரி 600 பேர் மனந்திரும்பி சத்திய வேதத்தில் சேருவதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

## Kodiveri.

### பெரிய கோடிவேரி பங்கு.

(கோவில் பஞ்சாங்கம் 1920-ம் ௵ பெபுருவரி-௴)

பெபுருவரி-௴ 2-ம் உ திங்கட்கிழமை: சுத்திகரத் திருநாள். காலை $5\frac{3}{4}$ மணிக்கு மெழுகுதிரிகள் மந்திரிக்கப்படும். பிறகு பூசை. பூசைக்குப்பிறகு திவ்விய நற்கருணை ஆசீர்வாதம்.

" 6-ம் உ வெள்ளிக்கிழமை: மாதத்தின் தலை வெள்ளி. காலை $5\frac{3}{4}$ மணிக்கு பூசை. பூசைக்குப்பின் திவ்யநற்கருணை ஆசீர்வாதம். மாலை 6 மணிக்கு சிலுவைப்பாதை.

" 11-ம் உ புதன்கிழமை: லூர்து நகரில் அமலோற்பவ நாயகியின் தரிசனம். காலை $5\frac{3}{4}$ மணிக்கு பூசை. பிறகு திவ்யநற்கருணை ஆசீர்வாதம்.

" 18-ம் உ புதன்கிழமை: விபூதித் திருநாள். காலை 6 மணிக்கு விபூதி மந்திரிக்கப்படும். பிறகு பூசை. இன்று முதல் பெரிய கோடிவேரியிலும், சிக்கரசம்பாளையத்திலும் விசாரணை ஆரம்பிக்கின்றது.

தபசுகாலத்தில் வரும் சகல வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 6 மணிக்கு சிலுவைப்பாதை. தபசுகால ஒழுங்குகளை கோவிலில் பிரஸ்தாபப்படுத்தியிருக்கின்றோம். 20, 27-ம் உ இம்மாதத்தின் தபசுகால வெள்ளிக்கிழமைகள். கடன் ஒரு சந்தி. மாலை 6 மணிக்கு சிலுவைப்பாதை.

மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது பரிசுத்தமும் பிரயோஜனமும் உள்ளது.

கொடிவேரி கொல்லத்து அந்தோனி முதலி:

சிக்கரசம்பாளையம் பெரியதனம் பெரியகுட்டி என்கிற சவரியப்ப முதலி. இவர்களுடைய ஆத்துமங்களுக்கு சர்வேசுரன் நித்திய சமாதானத்தையும் இளைப்பாற்றியையும் அருள்வாராக!

1920-௵ ஜனவரி-௴ ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகள் பெயர்.

1. பெரிய கோடிவேரி: சவேரியப்பன், மதலையம்மாள், இவர்களுடைய புத்திரன் அருளப்பன்.

2. கொங்கரபாளையம்: சின்னப்பன், செலுவம்மாள்—இவர்களுடைய புத்திரன் சிலுவைமுத்து. இவர்கள் ஞானத்திலும் வயதிலும் வளருவார்களாக!


# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VI.** **March 1920.** **No. 3.**

புத்தகம் **VI.** FIDES AC ROBUR. நம்பர் **3.**


## Teaching Profession.

### உபாத்தியாயர் உத்தியோகம்.

உபாத்தியாயர் உத்தியோகமானது மேன்மையும் மகிமையுமுள்ள உத்தியோகம்; பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எப்படி அன்னவஸ்திரங் கொடுத்து வளர்த்து வருகிறார்களோ, அப்படியே, உபாத்தியாயர் மாணாக்கர்களுடைய புத்தி அறிவையும், இருதயத்தையும், ஆத்துமத்தையும் உருவாக்கி அலங்கரிக்கிறார். ஆகையால் "தகப்பன் எப்படியோ பிள்ளையும் அப்படியே," என்பது மெய்யானால், "உபாத்தியாயர் எப்படியோ, மாணாக்கனும் அப்படியே," என்று சொல்லுவதும் சரியே.

உபாத்தியாயர் ஒருவித குருவென்று சொல்லலாம். ஏனெனில் குருவானவரைப்போலவே, உபாத்தியாயர் கடவுளுக்கு பதிலாளியாகவும், கல்விக்குத் தூதனாகவும் இருந்து நல்லொழுக்கத்தைப் படிப்பிக்கக் கடன்பட்டிருக்கிறார்.

இவ்வுத்தியோகம் சகல மனிதர்களாலும் மேன்மையாய் மதிக்கப்படுகிறது. முற்காலத்தில் மகா தியோடோஸ் என்னும்

இராஜா அதை எவ்வளவு கனமாய் எண்ணிக்கொண்டாரென்றால், அவர் தமது குமாரன் பாடம் படிக்கும்போது, அர்சேன் என்னும் உபாத்தியாயர் சமுகத்தில் உட்காரக்கூடாதென்று கட்டளையிட்டிருந்தார்; ஏனென்றால், மாணாக்கனானவன் இராஜ குமாரனாயிருந்தபோதிலும், உபாத்தியாயர் முன்னிலையில் உட்கார்ந்திருந்தால் உபாத்தியாயர் பெருமைக்குக் குறைவுவருமென்று சொல்லுவார். மேலும் மற்ற உத்தியோகஸ்தர்களைப் பார்க்கிலும் உபாத்தியாயர் வேலை செய்கிறவர் அநேகவிதமான விசாரங்களுக்கும், கவலைகளுக்கும் தப்பித்துக்கொள்ளுகிறார். வழக்கமாய் அவர் தினந்தோறும் 5-மணிநேரம் மாத்திரம் கல்விசாலையில் பாடம் கற்றுக்கொடுக்கிறார். அநுதின பாடங்களை அவர் முஸ்திப்பு செய்வதற்கு ஏற்படும் நேரத்தையும் சேர்த்தால் நாள் ஒன்றுக்கு 7-மணி நேரத்துக்குமேல் பள்ளிக்கூடத்துவேலை இராது. தவிர வருஷத்தில், அநேக ஓய்வுநாட்கள் அவருக்கு உண்டு. அவ்விதமே, உபாத்தியாயர் உத்தியோகஞ் செய்கிறவருக்கு தம் வீட்டுக்காரியங்களையும், தம் ஆத்தும காரியங்களையும் கவனிக்க வேண்டிய நேரம் உண்டென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் இவ்வுத்தியோகம், ஆத்தும சரீர சௌக்கியத்துக்குத் தகுந்த உத்தியோகம்.

உபாத்தியாயர் உத்தியோகம் அவ்வளவு நன்மையும், மேன்மையுமாயிருந்தாலும், இந்த நாட்களில், அவ்வளவு கொஞ்சம்பேர் அதின்பேரில் பிரியப்படுவானேன்? விசேஷமாய் நமது எலிமெண்டெரி பள்ளிக்கூடங்களுக்கு உபாத்தியாயர்கள் கிடைக்கிறது நாளுக்குநாள் அதிகக் கஷ்டமாய் விட்டது. சம்பளம் குறைவும், அரிசிவிலை அதிகமுமாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். ஆனால், சகல உத்தியோகஸ்தர்களும் இப்படி முறையிடுவது வழக்கந்தான்:—உபாத்திமார்களுக்குச் சம்பளம் அதிகமாய்க் கொடுக்கவேண்டியதானாலும், சர்க்காரார், நமது கத்தோலிக் எலிமெண்டெரிப் பள்ளிக்கூடங்களுக்கு பணஉதவி (Grant) அதிகமாய்ச்செய்கிறதில்லை. அந்தச் சொற்பத் தொகையும் அற்பக் குறைச்சலினிமித்தம் சிலசமயம் குறைக்கப்படும் ஆபத்தில் இருக்கிறது. மாணாக்கர்களுடைய பெற்றோர்களிடம் பள்ளிக்கூடத்துச் சம்பளம் கேட்டால், முறையிடுகிறார்கள். பங்கு குருவானவர் எல்லாவற்றையும் நடத்தி, எல்லாவற்றுக்கும் செலவு செய்யவேணும். குற்றங் கண்டுபிடிப்பதுதான் ஜனங்களுடைய அலுவல்; அவருக்கு உதவி செய்பவர்கள் ஒருவருமில்லை. ஆனாலும்,



பள்ளிக்கூடமும்வேணும், உபாத்திமாருக்கு அதிக சம்பளமும் வேண்டும். பள்ளிக்கூடங்களுடைய தொகை அதிகரிக்கும் வேளையில் உபாத்திமார்களுடைய தொகை குறைந்து போகிறது.

ஆகையால், நம்மாலானமட்டும், வாலிபர்கள் உபாத்தியாயர் உத்தியோகத்திற் சேரும்படியாகத் தூண்டவேண்டும். இதுவுமல்லாமல், கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் தாங்கள் தங்கள் அந்தஸ்துக்குத்தக்கதுபோல, தங்கள் ஊரில் இருக்கும் பள்ளிக்கூடங்களுக்கு பண உதவி செய்யவேண்டியது கடமையாகும்.

பள்ளிக்கூடமானது திருச்சபை தன் பிள்ளைகளை வளர்க்கிற தொட்டிலைப்போலிருக்கிறபடியால், ஒவ்வொரு கோவிலின் அருகில் ஒரு பள்ளிக்கூடமும் இருக்கவேண்டும். அதிலே, கிறீஸ்துவப் பிள்ளைகள் "அன, ஆவென, இன, ஈயென" முதலிய நெடுங் கணக்கட்சரங்களைப் படிப்பதோடுகூட, நல்ல தாயாகிய திருச்சபை ஊட்டும் பாலைக் குடித்து, பக்தி, அடக்கம், கற்பு, கீழ்ப்படிதல், பொறுமை முதலிய நல்லொழுக்க முறைகளைக் கற்றுக்கொண்டு, பிற்பாடு, நல்ல கிறீஸ்துவர்களாய் ஆவார்களேயானால், நமது நோக்கமும் கடமையும் நிறைவேறுமே! இதுதான் திருச்சபையின் இடைவிடாத நம்பிக்கை. (சத்திய நேசன்.)

---

## The Little Garden of Roses.

## சிறு ரோஜாத் தோட்டம்.

### மலர் 9.

(முன் தொடர்ச்சி.)

3. இப்பிரபஞ்ச நன்மை சந்தோஷ பாக்கியமெல்லாம் அழிவுள்ளதென்றும், மோசமுள்ள மாய்கையென்றும், வழக்கமாய் அவைகள் ஆத்தும கெடுதிக்குக் காரணமென்றும்

அறிந்துகொள்ளக்கடவாய். மேலும் இவ்வுலகத்தில் புண்ணியமும், மறுலோகத்தில் சர்வேசுரனுடைய பேரின்ப தரிசனையும், மெய்யான பாக்கியமாயிருக்கிறதென்றும் உறுதியாய் விசுவசிக்கக்கடவாய்.

புண்ணிய சாங்கோபாங்கத்தில் விருத்தியடையவும், தன்னைத்தானே திருத்திக்கொள்ளவும், புண்ணியப் பயிற்சியால் நன்கு மதிப்பையடையும் யோக்கியதையைப் பெறவும் அறிந்தவன் ஞானவானாம். அவனுக்கே உண்மை ஞானம் வாய்த்துள்ளது. உலகப் பொய்நன்மைகளை வெறுத்துவிட்டுப் பரலோக நன்மைகளைத் தேடுகிறவன் மேன்மையுள்ளவனும்; தாக்குதல்களைத் தைரியத்தோடு எதிர்த்துப் போராடுபவன் பலசாலியாம்; மனப்பாசங்களை அடக்கியாளுபவன் மன்னனும்; தனது சரீர துர்ப்பலங்களைத் தன்னடக்கத்தால் ஜெயிப்பவனே கவசம் தரித்த வீரனும்; ஆனால் சிற்றின்பங்களால் மயங்காமல் எப்போதும் மாறாத கற்புள்ளவனாயிருப்பவன், சம்மனசுக்களின் மத்தியில் தனக்கென ஒரு ஸ்தானம் பெறத்தக்கவன்.

பரிசுத்த கற்புடையவன் தனக்கு வரும் தந்திர சோதனைகளை ஜெயித்து, பஞ்சேந்திரியங்களை அடக்கி, மனுஷ சுபாவத்தின் துராசாபாசங்களையெல்லாம் நிர்மூலமாக்கி அப்புண்ணியத்தின் தூய்மையைக் காப்பாற்ற என்றும் எச்சரிக்கையாயிருப்பான். பழுதற்ற கற்புள்ளவன் பேரின்ப இராச்சியத்தில் திவ்விய கர்த்தர் போகிற எவ்விடங்களிலும் அவரோடு கூடப்போகிறதுமல்லாமல், மற்றவர்கள் பாடவறியாத விசேஷ பேரின்ப சங்கீதங்களைப் பாடுவான்.

ஆனதுபற்றி கற்புள்ள மனிதன் கடவுளின் சிநேகிதன்; சம்மனசுக்களின் தோழன்; கன்னிகைகளின் சகோதரன்; அர்ச்சியசிஷ்டவர்களின் அப்பரந்த நகரவாசியாம். தாழ்ச்சியோடு கூடிய கற்புள்ளவன் தீயவனை ஜெயிப்பதோடு அடக்கமில்லாத மனிதர்களையும் தோற்றோடச் செய்கிறான்.

சிற்றின்பப் பாட்டுகளினாலும், வேதத்துக்கும், கற்புக்கும் விரோதமான பேச்சுகளினாலும், ஆவலாதி முதலிய துர்ப்பாஷைகளினாலும், இல்லை பரிகாசச்சிரிப்பு, தந்திர முதலிய எக்கெட்ட துர்நடத்தையினாலும் உன் அயலானுக்கு ஒருபோதும் துர்மாதிரிகையான பழுது ஓர் அற்பமும் இராதபடி



எச்சரிக்கையாயிருக்கக்கடவாய். துர்மாதிரிகையானது ஞானக் கொலைப்பாதகம் எனப்படும். துர்மாதிரிகை எவனாலே வருகிறதோ அவனுக்கு ஐயோ கேடாம்!

நல்லொழுக்கமென்ற செங்கோலால் தன்னையே ஆண்டு, தன் ஜெபத்தினாலும், வார்த்தைகளினாலும், நற்கிரியைகளாலும், சுகிர்த மாதிரிகைகளினாலும் தனக்குக் கீழ்ப்பட்டவர்களைப் புண்ணிய நெறியில் திருப்பி ஈடேற்றப் பிரயாசப்படும் சற்குருவே உண்மையில் உயர்ந்தவராம். நன்மாதிரிகை உறுதியான சுகிர்த பிரசங்கமாம். உன் சுகிர்த மாதிரிகையினால் எத்தனை புண்ணியம் விளையுமோ, உன்னைப் பின்செய்து எத்தனைபேர் கரையேறுவார்களோ, அத்தனைக்கும் மிகுதியான மோட்ச சம்பாவனை அடைவாய். புண்ணியவாளருடைய பரிசுத்த தர்மநடக்கையைக் கண்டுபாவித்து அனுசரிக்கிறவன் அவர்களது புகழ்ச்சிக்குத்தக்கவன். நீ மோட்ச இராச்சியத்தில் பேரின்ப மகிமை பாக்கியமடைய வேண்டுமானால் புண்ணியாத்துமாக்களுடைய ஞானப்பிரசங்கங்களையும் புத்திமதிகளையும் கேட்டு, அவர்களுடைய சுகிர்த ஒழுக்கங்களைப் பின்பற்றக்கடவாய். புண்ணிய ஒழுக்கத்தால் பெருமைப்படுத்தப்பட்டவன் உண்மையிலேயே சுயாதீனமுள்ள கனவானும்.

பாவத்தாற் பிடிக்கப்படாதவன் அழகுவாய்ந்தவனும். ஒரு பாவி எவ்வளவு வெளி அழகு பண்ணிக்கொண்டாலும் அவன் உள்ளம் மலினப்பட்டும் அருவருப்புக்கிடமாயுமேயிருக்கும்.

தேவ இஷ்டப்பிரசாதத்தால் நிரப்பப்பட்டு உலகத்தின் அநித்திய மகிமைகளை விரும்பாதவன் செல்வத்தையும் சுகத்தையும் பெற்றவனாவான். ஆத்தும இரட்சணியத்துக்கு ஏதுவானவைகளை விலக்கி, ஆத்துமத்துக்குத் தீமையைத் தேடிக்கொள்ளுபவன் கதியோ பேதமையும், மூடத்தன்மையுமேயாம்.

ஆனால் என்றும் அழியாத நித்திய நன்மைகளைத் தேடுவதும், உபயோகிக்கும்போதே அழியக்கூடிய இவ்வுலக சிற்றின்ப சுகபோகங்களை நிராகரிப்பதுமே தெய்வ ஞானமாம்.

(இன்னும் வரும்.) **S. S. G.**

## The Priest the Padri and the Rabbi.

### மூன்று வேதக் குருக்கள்.

ஓர் கத்தோலிக் குருவானவரும், ஓர் பதிதப்பாதிரியாரும், ஓர் யூத குருவுமாக ஓர் சத்திரத்தில் ஒருநாள் தேவாதீனமாய்க் கூடியிருக்க நேரிட்டது. அப்போது பதிதப்பாதிரியார் முந்தமுந்தப் பேசத்துவக்கிச் சொன்னதாவது:—இந்தச் சமயத்தில் மூன்று வேதக் குருக்களும் ஒன்றாய்க் கூடியிருக்கிறோம். ஆனால், நாம் போதிக்கும் வேதங்களில், எது மெய்யானதென்று கேட்க, உடனே யூதகுரு சொன்ன மறுமொழியாவது:—இதற்கு மறுமொழி சொல்ல சற்று யோசிக்க அவசரமில்லை; எளிதிற் சொல்லலாம். அதேதெனில், சேசுக்கிறீஸ்து பிறவாதிருந்தால், நான் போதிக்கிற வேதந்தான் மெய்யானது. அவர் பிறந்திருந்தால் கத்தோலிக்குக் குரு போதிக்கிற வேதந்தான் மெய்யானது. அவர் பிறவாதிருந்தாலும், பிறந்திருந்தாலும், நீர் போதிக்கிற வேதம் பொய்யானதென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறதென்றார்.

OLIM.

---

### விநோத வினா?

உபாத்தியாயர்:—ஒரு தோட்டத்தில் 19 ஆடுகள் மேய்ந்துகொண்டிருக்கின்றன. அவைகளில் 7 ஆடுகள் வேலியைத் தாண்டி ஓடிவிட்டன என்றால், தோட்டத்தில் மிச்சம் எத்தனை ஆடுகள்?

மாணாக்கன்:—ஒன்றுமில்லை ஸார்.

உபாத்தியாயர்:—நன்றாய் யோசித்துச்சொல்லு. தோட்டத்தில் இருக்கும் 19 ஆடுகளில் 7 வேலி தாண்டியோடுகின்றன. மீதியான ஆடுகள் எத்தனை?

மாணாக்கன்:—ஸார், நீங்கள் சொல்லுகிறதைக் கண்டுபிடித்தேன். ஆனால் கணக்கு உங்களுக்கு நன்றாய்த் தெரிந்தாலும் ஆடுகளுடைய குணம் உங்களுக்குத் தெரியாது.

---

You do a service to good Catholic reading by patronizing the Messenger of Truth.

## Piliakulam.

### பிலியகுளம்.

மதுவிலக்கு சபைக்குச் சேர்ந்த அண்ணன் தம்பிகளாகிய செலுவன் மதலைமுத்து ஆகிய இவர்களிருவரும் வாந்திபேதியால் பிலியகுளத்தில் மரணமடைந்த ஐந்து நாள் வரையில் ஊரானது அமரிக்கையாயிருந்தது. ஆறாம் நாளோ, அந்தோ! பரிதாபம்! ஊர் முழுவதும் கலக்கமுற்றிருக்கிறது. ஓரே நாளில் கிறீஸ்துவர்களில் 10 பேருக்கு வாந்திபேதி கண்டு, அவஸ்தையாய்க் கிடந்தார்கள். மறு நாள் இன்னும் 6 பேர். மூன்றாம் நாள் மறுபடியும் 6 பேர். ஆக மூன்று நாட்களில் 22 பேர் ஷை வியாதியால் கஷ்டப்படுகிறார்கள். தாமதமின்றி ஓர் நவநாள் ஜெபம் துவக்கப்படுகிறது. காலை மாலை பூசை, பிரார்த்தனைக்கு நூற்றுக்கணக்கானபேர் கவலையுடன் ஒழுங்காக வந்து கோவிலை நிரப்பி மிக்க உருக்கப்பற்றுதலுடன் மன்றாடுகிறார்கள். நாள்தோறும் பூசையில் 50 முதல் 100 பேர் வரையில் திவ்விய சற்பிரசாதத்தை அருந்துகிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளிலோ தேவநற்கருணை உட்கொள்ளுபவர்களின் தொகை இருமடங்கு அதிகப்படுகிறது. இந்த நவநாட்களிலொன்றாகிய ஜனவரிமாதம் 15-ந்தேதி மதுவிலக்குச் சபையார் தங்கள் சபையில் முதல் முதல் மரணமடைந்த செலுவன், மதலைமுத்து இவர்களுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காகப் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கச் செய்தார்கள். சபைக்குச் சேர்ந்தவர்களும், ஊராரிற் பலரும் முந்தின நாள் பாவசங்கீர்த்தனஞ் செய்து, அந்தப் பூசையில் 200 பேருக்குமேல் தேவநற்கருணை உட்கொண்டு அந்த இரு சகோதரர்களின் இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுத்தார்கள்.

நவநாள் ஜெபம் நடந்தேறிய நாட்களெல்லாம் ஊருக்குப் பலவிதமான ஆத்தும நன்மைகளை வருவித்துக்கொண்டு வந்தது. ஒவ்வொரு நாளும் தங்கள் ஆத்தும காரியங்களின்மட்டில் அசட்டையுடையவர்களாய், தேவதிரவிய அநுமானங்களை நாடி வராமலிருந்தவர்களிற் சிலர் தங்கள் குற்றங் குறைகளை யுணர்ந்து நாள்தோறும் காலையில் பூசைக்கும், சாயரட்சை பிரார்த்தனைக்கும் வந்து, நல்ல பாவசங்கீர்த்தனம்

செய்து, தேவநற்கருணை உட்கொண்டார்கள். ஒவ்வொரு நாளும் இப்போர்க்கொத்த மனந்திரும்புதல்கள் சிலவற்றை விளைவித்துக்கொண்டே வந்தது. நவநாள் ஜெபமானது ஜனவரி மாதம் 21-ம் தேதி முடிவானது. அன்று காலை 4 மணிக்கு நடந்த பூசைப்பலியில் ஊராரிற் பெரும்பாலர் நூற்றுக்கணக்காய் தேவநற்கருணை உட்கொண்டார்கள். பூசை முடிந்தபின் ஒவ்வொருவரும் தம் இல்லிடம் சேர்ந்து தம்தம் வேலைகளுக்கேகினார்கள். அன்று சாயந்தரம் 8 மணிக்கு வேண்டுதல் தேர் நடைபெற்றது. தேர் சுற்றுப்பிரகாரத்தில் ஊர் கிறீஸ்துவர்கள் பயபக்தியுடன் ஜெபமாலை சொல்லிக்கொண்டு வர, மற்ற இந்துக்களும் இவர்களைக் கண்டுபாவித்து அற்பக் கூச்சலின்றி தேரைப் பின்தொடர்ந்து தங்களுக்காக மன்றாடிவந்தார்கள். அன்றுமுதற்கொண்டு வாந்திபேதியானது புதிதாய் யாருக்கும் காணவில்லை. ஏற்கனவே வாந்திபேதி கண்டவர்களிற் சிலர் மரணமடைந்திருந்தாலும், பலர் சௌக்கியமடைந்தார்கள்.

C. C.

---

## Friendly Talk.

### சிநேக வாய்ச்சல்லியம்.

**6-ம் நாள்.**

பி. சர்வேசுரனுக்குத் தோஸ்திரம் சாமி.

கு. ஆசீர்வாதம்.

கு. உபதேசி இன்னும் வரவில்லையோ?

உ. சர்வேசுரனுக்குத் தோத்திரம் சாமி.

கு. ஆசீர்வாதம்....நீதியப்பா.

உ. சாமி.

கு. இவ்வாரம் நாம் பிள்ளைகளுக்குச் சொல்லிக்காட்டியதெல்லாம், அவர்கள் நன்றாய்க் கண்டுபிடித்திருக்கிறார்களா?



உ. நீங்கள் சொல்லிக்கொடுத்ததெல்லாம் ஏறக்குறைய கண்டுபிடித்திருக்கிறார்கள் சாமி.

கு. சரி, அவர்களை நம்மிடம் அனுப்பு. நாமும் சோதிக்க வேணும்.

கு. பிள்ளைகளே, நாம் உங்களுக்குச் சொல்லித்தந்ததெல்லாம் கூடியமட்டும் கண்டுபிடித்திருப்பதாக நமக்குத் தெரிய வந்தது. நல்லது, நாம் கேட்டுப்பார்ப்போம்.—நரகத்திற்குப் போகிறது சகல பொல்லாப்புகளிலும் பெரிய பொல்லாப்பென்று போன வாரம் சொன்னீர்களே; சரி, ஆனால் நரகத்திற்குப் போகிறவர்கள் யாரென்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

பி. நரகத்துக்குப் போகிறவர்களா! நரகத்துக்குப் போகிறவர்கள் திருடரவகதான். அவகதான் நரகத்துக்குப் போராங்கோ.

கு. அப்படியானால் கள்ளு சாராயம் குடிக்கிற குடிகாரரெல்லாம் மோட்சத்துக்குப் போகிறார்களா?

கு. பெரியவர்கள் பேச்சைக் கேளாமலும், கட்டுபாட்டுக்கடங்காமலும், கடிவாளமில்லாத குதிரைகளைப்போல திரிகிறவர்களுமான சண்டிப்பசங்களும், கெட்டவர்களோடு சேர்ந்து துஷ்ட பழக்கம் பழகுகிற தப்பிலிகளும் மோட்சம்போய்ச் சேருவார்களா?

கு. பொய்ச் சத்தியம் பண்ணுகிறவர்களுக்கும், சாபம் போடுகிறவர்களுக்கும், சாமி பேரைச் சொல்லி தூஷணம் சொல்லுகிறவர்களுக்கும் மோட்சமுண்டா?

கு. பணப்பேய்பிடித்து, அநியாய வட்டிவாங்கி, குறையாக அளந்து, அதிகமாக வாங்கி, தொட்டது தொண்ணூறுக்கும் பணம்! பணம்!! என்று தங்கள் அகண்ட வாயை அகலமாய்த் திறந்து, மறுபடியும் பணம், பணமென்று கதறி, சரிஞாயம்பேசி அநியாயம் பண்ணுகிறார்களே! அவர்களும் மோட்சம் போவதுண்டா?

சே. இவுங்கெல்லாம் மோக்ஷத்துக்குப் போவாங்கிண்ணு உங்ககிட்ட எப்போ சொல்லவந்தேஞ்சாமி. அவர்களும் நரக பாதாளத்திலேதான் விழுவாங்கோசாமி.

கு. உழைத்தவர்களுக்குக் கூலிகொடாமல் அவர்கள் தலையில் சாம்பலடிக்கிறார்களே அவர்கள் போகிற இடம் எது?

பி. இதென்னசாமி மடிச்சு மடிச்சு கேக்கிறன்ங்கிளா! நாடிக்கு வேறே எண்ணெய் தலைக்கு வேறே எண்ணயாசாமி. அவுங்களும் அந்த அடிநரகத்துக்கே போவாங்கோசாமி.

கு. சரி இருக்கட்டும். ஒருத்தன் ஏதோ ஒரு பாவத்தைக் கட்டிக்கொண்டபிறகு அந்தப்பாவத்திற்கும் பொறுத்தலடைய ஏதாவது ஒரு வழி கிடையாதா செசிலி?

செ. அதென்னமோசாமி எனக்கொண்ணும் தெரியாது. சும்மா பொய்யேஞ் சொல்லாட்டி.

கு. யாருக்குத் தெரியும் சொல்லுங்கள் பார்க்கலாம்.

கு. ஒருத்தருக்கும் தெரியாது. இருக்கட்டும். நாம் கட்டிககொள்ளுகிற பாவங்களுக்கு சாமி பொறுத்தல் கொடாவிட்டால், நமக்குப் பெரிய மோசமென்று உங்களுக்குத் தெரியுமல்லவா.

பி. ஆமாம் சாமி பெரிய பொல்லாப்புத்தான். அப்போ என்......ன செய்கிறது. எங்......கே போய் பாவத்தைத் தொலைக்கிறது!

கு. பிள்ளைகளே! அது ஒரு பெரிய பொல்லாப்புத்தான். சாமி பாவத்தைப் பொறுக்காவிட்டால், ஏனென்றால் சாமி பாவத்தைப் பொறுக்காமல் போனால் செத்தபிறகு ஒவ்வொருவரும் நரகத்திற்குப் போயேதீரவேணும். ஐயோ நரக வேதனையோ ஒருவன் அனுபவிக்கக்கூடிய எல்லா வேதனைகளிலும் மிகக் கொடுமையானதும், பயங்கரமானதுமான பெரியபொல்லாப்பு. கை கால் சரீர முழுதும் விலங்குமாட்டி வேதனைப்படுவதிலும், தூக்கப்பட்டுச் சாவதிலும், உயிரோடே நெருப்பில் வெந்து நீராவதிலும், சாமியார் பட்டணையில் இருக்கிற வெல்டிங் உலையில் வேவதிலும், நரகவேதனை மெத்தப் பயங்கரமும் கொடுமையுமான அகோர பொல்லாப்பு. அதற்குச் சந்தேகமில்லை. விலங்கு வேதனை, உயிரோடு முடிந்துபோகும். தூக்குண்டு சாகிறதும், நெருப்பில் வெந்து நீராகிப் போகிறதும், கொஞ்ச நிமிஷத்திற்குள் தீர்ந்துபோகும். நரக வேதனை ஒருபோதும் முடியாமல் என்றென்றைக்கும் எப்போதைக்கும் எப்போதைக்கும் நிலைத்திருக்கும்.

கு உபதேசி எங்கே காணோமே. நீதியப்பா?

உ. சாமி இங்கேதான் இருக்கிறேன் சாமி.



கு. இப்போது நாம் சொல்லிய ஒவ்வொரு காரியத்தையும் பிள்ளைகள் நன்றாய்க் கண்டுபிடித்தார்களா, சோதித்துப் பார் அவர்களை?

உ. முத்தாய், செசிலி இங்கே:—கை, கால், சரீர முழுதும்போட்டுத் துன்பப்படுத்துகிற விலங்கு வேதனை பெரிதா அல்லது நரகவேதனை பெரிதா செசிலி?

செ. நரக வேதனைதான் பெரிசுங்கோ உபதேசியாரே.

உ. தூக்கு மரத்திலே தொங்கப்போட்டு மனுஷரைச் சாகடிக்கிறார்களே, அந்த நோவு வருத்தத்தைவிட நரக வேதனை அதிக கஷ்டமா முத்தாயி?

மு. தூக்குமரத்து வேதனை நோவெல்லாம் செத்த நேரத்திலே தீர்ந்துபோகும். நரகஆக்கினை எப்போதும் முடியாமலிருக்குமே உபதேசியாரே. அப்போ நரகவேதனை தான் சரியான அதிக வருத்தமிங்கோ உபதேசியாரே.

(இன்னும் வரும்.) S. M.

---

## PAGE FOR THE YOUNG.

## பிள்ளைகளின் பக்கம்.

### The Fate of a boy who transgressed the Laws of God.

### சர்வேசுரனுடைய கற்பனைகளை மீறிநடந்த ஓர் கெட்ட பிள்ளையின் நிர்ப்பாக்கியம்.

உத்திராந்தி இராச்சியத்திலே பேர்பெற்ற கிறீஸ்துவக் குடும்பமொன்றிருந்தது. அவர்கள் குமாரனாகிய பதினான்கு வயதுள்ள யாகப்பன் என்பவன் மிகவும் அயோக்கியன்.

பெரியோர் சொல்லுக்குக் கீழ்ப்படியாதவன். தானென்கிற ஆணவம் தலைக்குமேலேறித் தனது இஷ்டப்படி செய்யும் தறுதலை. சகோதரர் சகோதரிகளைத் திட்டி அடித்துத் துன்பப்படுத்தும் பரம துஷ்டன். படிப்பிலோ சாவ முட்டாள். புஸ்தகம் பள்ளிக்கூடமென்றால் கிட்டேவரமாட்டான். ருசியான பதார்த்தங்களைத்தேடி மனத்திருப்தியோடு சாப்பிடுவதில் சமர்த்தன். தகப்பனார் நயத்தினாலும் பயத்தினாலும் இப்பிள்ளையைத் திருத்தத் தன்னாலானவரையில் பிரயாசப்பட்டும் வீணாயிற்று. கடைசியாக அவர் ஓர்நாள் அவனைக் கூப்பிட்டு, "மகனே! நீ வரவரக் கெட்டுப்போகிறாய். உன்னால் மற்றப் பிள்ளைகளும் கெட்டுப்போவார்கள்போலிருக்கிறது. உன்னுடைய துர்மாதிரிகையானது உன் சகோதரர் சகோதரிகளையும் பிடித்துக்கொள்ளுமென்று பயமாயிருக்கிறது. ஆனதுபற்றி உனக்கு இன்னும் இரண்டுவாரம் கெடு கொடுக்கிறேன். அதற்குள் உன்னைத் திருத்திக்கொள்ளாதே போனால் நீ என் வீட்டில் இருக்கக்கூடாது" என்றார்.

இரண்டு வாரமாயிற்று. பிள்ளையாண்டான் வழக்கம்போல் தனது சேஷ்டைகளை விடாதிருந்தான். தகப்பனார் அவனை வீட்டைவிட்டு வெளியே துரத்தினார். யாகப்பனும் ஆங்காரத்தோடு தலை நிமிர்ந்தவண்ணமாய் வெளியே புறப்பட்டான். அன்று முழுதும் வீதிகளில் அலைந்துதிரிந்து புசிக்க ஆகாரமில்லாமல் களைத்துப்போய் ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்துறங்கினான். மறுநாள் தெருக்கள் வழியே யாராவது ஆகாரம் கொடுப்பார்களாவென்று பார்த்துக்கொண்டே போனான். இவனைக் கவனிப்பார் ஒருவருமில்லை. இரண்டு நாளாக சாப்பாடில்லாமையால் களைத்துத்தவித்து, கண்கள் உள்ளே போக, முகம் வாடி, காலில் பலமற்று, கைகள் அசைவற்றுப், படுக்கப் பாயில்லாமல், இருக்க இல்லிடமில்லாமல், தெருக்கோடியில் குவிந்து கிடந்த கற்களின்மேல் தலையை வைத்துக்கொண்டு படுத்துத்தூங்கினான். அன்றிரவு வெகு குளிராயிருந்ததோடு மழையும் பெய்யத் துவக்கினது. பையன் விழித்துக்கொண்டு தகப்பனாரிடம் போய் மன்னிப்புக்கேட்கலாமாவென்று நினைத்தான். ஆனால் அவனுக்கு இயல்பாயுள்ள ஆங்காரமானது மேற்கொள்ளச் 'செத்தாலும் சாவேன். என் வீட்டுக்குத் திரும்பமாட்டேன்' என்று சொல்லி அங்கேயே படுத்துறங்கினான். ஐயோ! பாவம்! நடுச்சாமத்தில் சிறுவன் எழுந்திருக்கச் சக்தியற்றவனாய் மழையில் இராமுழுதும் நனைய உடனே கடுஞ்சுரம் அடிக்-



கத் துவக்கிற்று. காலையில் தேகமெல்லாம் நெருப்புப்பொறி விடுவதுபோல் கொதித்து சூரியோதயமாகும் நேரத்தில் பிள்ளை இறந்துபோனான். பார்த்தவர்கள் இரக்கப்பட்டு அவனைத் தகப்பனார் வீட்டுக்குத் தூக்கிக்கொண்டுபோனார்கள். பிள்ளை இறந்துவிட்டானென்று கண்ட தகப்பனார் மகா துயரப்பட்டு தனது தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு, கோவென்றலறி பிள்ளையைக் கட்டிக்கொண்டு, "அப்பா, எனது அருமை மகனே! என் கண்மணி, உனக்கு இப்படி நடக்குமென்று கனவிலும் நினைக்கவில்லையே! நான் பாவி: ஏண்டா, இப்படிச் செய்தாய். மோசம் போனேனே" என்று கதறியழுதார். மற்ற பிள்ளைகளெல்லாரும் இறந்துபோன தங்கள் சகோதரன்மேல் விழுந்து அழுதார்கள். பார்த்த ஜனங்களெல்லோரும் பரிதாபம், பரிதாபம் என்று சொல்லி விசனப்பட்டார்கள்.

பிரியமான பிள்ளைகளே! நீங்கள் சாவான பாவ அந்தஸ்தில் இருக்கும்போது உங்களுக்கு நடப்பதும் இதுவே. உங்கள் நல்ல தகப்பனாராகிய சர்வேசுரன் சிலவேளையில் மகாப் பட்சத்தோடு உங்களைப் பாவசங்கீர்த்தனத்துக்கு அழைக்கிறார். சிலவேளையில் நரகத்தில் தள்ளுவேனென்று பயமுறுத்துகிறார். கடைசியாக மற்றப் பிள்ளைகளும் கெட்டுப்போவார்களேயென்றெண்ணி உங்களைத் தூரத் துரத்திவிடுகிறார். பிறகு என்ன சம்பவிக்குமென்று நீங்களே யோசித்துப்பாருங்கள். நீங்கள் எப்பேர்ப்பட்ட துரோகங்கள் கட்டிக்கொண்டிருந்தபோதிலும், எத்தனை தடவைக் கட்டிக்கொண்டிருந்தபோதிலும் மெய்யாக மனஸ்தாபப்பட்டும் திரும்பவும் அவரிடம்போய் மன்னிப்புக்கேட்டால், எவ்வளவு சந்தோஷத்தோடு உங்களை மன்னிப்பாரென்று எளிதே விளங்கும். ஆதலால் உயிருள்ளளவும் ஒருக்காலும் அவநம்பிக்கைப்படாதேயுங்கள். உங்கள் பாவங்களுக்காகத் துக்கப்பட்டு அளவில்லாத வற்றாத ஊற்றாகிய திரு இருதயத்தினிடம் அண்டிச் செல்லுங்கள். அது உங்களுக்கு மெய்யான ஆறுதலையும் சம்பூரண இளைப்பாற்றியையும் அளித்தருளும். போதகன்.

## Jayaseelan.
## ஜயசீலன்.

### 9-ம் அத்தியாயம்.

ஜயசீலன்: இராஜசட்டம் அக்கிரமிகளைத் தண்டித்து சிட்சை செய்ய ஏற்படுத்தப்பட்டிருக்கும்போது அவர்களைப் பாதுகாக்க முயல்வதால் என்ன பிரயோஜனம்?

தனபாலன்: கீர்த்தியும் பேரும் அடைந்து மனிதர்களால் புகழப்பட ஆசிக்கும் லாயர்கள் தங்களை மேன்மைப்படுத்திக்கொள்ள ஏற்படும் சந்தர்ப்பங்களைக் கைவிடலாகாது. குற்றவாளி விடுதலையாக்கப்பட்டாலும் சரி, விடுதலை பெறாவிட்டாலும் சரி, நேர்த்தியான பிரசங்கங்களைச் செய்து சாமர்த்தியமென்று பெயரெடுத்து மற்ற வியாஜ்ஜியங்களில் ஜெயங்கொள்ளவும் தங்கள் பெயரை நிலைநாட்டவும் பார்ப்பது தங்கள் தொழிலை நிறைவேற்றுவதற்கு இன்றியமையாத சாதனம்.

ஜயசீலன்: மகிமையடைவதற்கு அது வழியானால் நான் என் ஜீவியநாளெல்லாம் மற்றவர்களால் அறியப்படாமல் அந்தரங்கத்தில் இருப்பதே நலம்.

தனபாலன்: நீ இஷ்டமான மார்க்கத்தைத் தெரிந்து கொள்ளலாம். பேரும் புகழும் பெற்று நீ உலகத்தில் என்றும் பாக்கிய சந்தோஷம் சுகித்து அநுபவிக்கக்கூடிய வழிப்பாடுகளை நான் காட்டும்போது நீ அவைகளைப் பின்பற்றாதே போனால் நிர்ப்பாக்கியத்தை நீ தேடிக்கொள்ளுகிறாய்; உன் இஷ்டம்.

ஜயசீலன்: அது போகட்டும்; நீ அன்று என்னை மிகவும் கேவலப்படுத்தித் தனிமையாய் என்னை விட்டுப்போனது எனக்கு மிகவும் வருத்தத்தை உண்டாக்குகிறது. உனக்கு என் மேலுள்ள பட்சவாஞ்சையைக் காட்டும் விதம் இதல்ல.

தனபாலன்: தமாஷுக்காகவும், பரிகாசமாகவும் அதனைச் செய்தேனேயொழிய மற்றப்படியல்ல. அதைக்கண்டு



நீயும் ஆனந்தங்கொள்ளவேண்டும். இனிமேல் முன்னிருந்த சிநேகிதர்கள் கூட்டத்தைவிட உனக்குத் திருப்தி கொடுக்கக் கூடிய நண்பர்களுடைய சகவாசம் கிடைக்கும். நீ எப்பொழுதாவது நாடக சாலை, நடனம் செய்யுமிடத்துக்குப் போனதுண்டா? நீ இன்றிரவு என்னுடன் வந்தால் சந்தோஷமாய் உன்னை அழைத்துப்போவேன்.

ஜயசீலன்: நான் ஒருக்காலும் அப்படிப்பட்ட இடங்களுக்குப் போனதே கிடையாது. எனக்கு நூதன காரியங்களைப் பார்க்கவும் அவைகளால் என் புத்தியை விசாலப்படுத்திக்கொள்ளவும் எவ்வளவோ ஆசை. ஆனால் என் தகப்பனார் உத்தரவின்றி ஒன்றும் செய்யக்கூடாதவனாயிருக்கிறேன்.

தனபாலன்: அவரைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய். வீட்டுப் பின்பக்கத்திலிருக்கும் உன் கதவு வழியாய் நீ எந்த நேரத்திலும் சத்தமின்றி உன் அறைக்குள் பிரவேசிக்கக் கூடுமாயிருக்கும்போது நீ பயப்படவேண்டியதென்ன? மேலும் நீ காலதாமதமாய்ப் போகும்போது உன் தகப்பனார் அயர்ந்த நித்திரையிலிருப்பாராகையால் அச்சங்கொள்வதற்கு யாதொரு காரணமுமில்லை.

ஜயசீலன்: இல்லை. முன்னொருதடவை நடந்ததுபோல் மறுபடியும் என் தகப்பனாருக்கு விசாரத்தை உண்டாக்கக் கூடாது. ஏதோ காரணத்தையறிவித்து இரவில் அவர் எனக்காகக் காத்திராதபடி நான் அவரிடம் ஒரு வார்த்தை சொல்லுவது மிகவும் நல்லது.

தனபாலன்: அப்படியானால் உன் இஷ்டப்பிரகாரம் செய். இன்று சாயரட்சை ஏழுமணிக்கு உனக்காகக் காத்திருப்பேன். நாமிருவரும் இன்று இரவு சந்திக்கவேண்டுமென்பதை மறக்காதே.

ஜயசீலன்: தன் நண்பனின் கோரிக்கையை மறுக்காமல் வாக்களித்ததின்மேல் இருவரும் பிரிந்து தங்கள் வீட்டுக்குப் புறப்பட்டார்கள். வழக்கம்போல் ஆறுமணிக்கு ஜயசீலன் வீட்டில் இராச்சாப்பாடு பரிமாறப்பட்டது. பிறகு தன் தகப்பனாரிடம் நாடகசாலைக்குப் போவதற்கு உத்தரவு கேட்பதற்குப் பதிலாய்த் தான் அவ்விடம் போகவிருப்பதாகத் தகப்பனிடம் தன் எண்ணத்தைக் காட்டினான். மகன் இப்படித்

தைரியமாய்ப் பேசுவது விபரீதமாகக் காணப்பட்டபோதிலும் தன் மகனுக்கு புத்தி உற்சாகத்தை உண்டாக்கவும், சமயா சமயங்களில் இவ்வித வேடிக்கை விளையாட்டுகள் அவசரமென்றெண்ணி அதற்குத் தடங்கல் செய்யவில்லை. மேலும் முன்னொருதடவை தான் செய்த குற்றத்தின் கனாகனத்தைக் கண்டுபிடித்து அதற்காக மனஸ்தாபப்பட்டதால் இனி இவ்வித துர்மார்க்கம், துர்ச்சிநேகத்தை விட்டொழித்திருப்பானென்று எண்ணியிருந்தார். ஆகையால் மகன் தன்னிடம் பேசின விதத்தைப்பற்றி சற்றும் சிந்திக்காமல் தன் சம்மதம்கொடுக்க ஜயசீலன் தான் வாக்களித்தபிரகாரம் தனபாலனைச் சந்திக்கப் புறப்பட்டுப்போனான். குறித்த நேரத்தில் இருவரும் நாடகசாலையில் சேர்ந்து, தங்களுடைய ஆசனத்தில் அமர்ந்தார்கள். ஜயசீலனுடைய ஆச்சரிய ஆர்ப்பரிப்புக்கு அளவேயில்லை. முன் இப்படிப்பட்ட இடத்தில் அவன் பிரவேசித்ததில்லையாதலால், நாடகசாலையில் ஜோதிமயமாய்ப் பிரகாசிக்கும் விளக்கு லஸ்தர்களையும், ஜோடினைக்காக வைக்கப்பட்டிருந்த ஜாமான்களின் விசித்திர வேலைப்பாட்டையும், ஆண்களும் பெண்களும் கண்களை மயக்கத்தக்க உடுபாவனையுடன் உட்கார்ந்து சந்தோஷமாய்ப் பேசிக் கொஞ்சிக் குலாவுவதையும் பார்த்து ஆனந்த பரவசத்தில் அமிழ்ந்தினான். நாடகம் துவக்குவதற்கு சமயமானவுடன் திரைகள் தூக்கப்பட்டன. மேடையில் நடினஞ்செய்தவர்களுடைய இனிய குரலும், நடைபெற்ற விஷயங்களின் சிறப்பையுங் கண்டு அதன்மேலே தன் கவனம் முழுதும் செலுத்தினவனாயிருந்தான். ஆனால் நாடகமேடையில் சாதாரணமாய் மனிதர் பார்ப்பதென்ன? பாவமார்க்கங்களைத் துவேஷித்துத் தள்ளி நன்னடக்கையையும், புண்ணிய வழிகளையும் எடுத்துரைத்து மோக்ஷசாம்ராஜ்ய பாக்கியத்தைப் பெறுவதற்கு அவர்களைத் தூண்டுவதற்குப் பதிலாய் மனிதர்களுடைய ஆசாபாசங்களையும் இன்ப சுகத்தையும் நாடித் தேடிச் சுகிக்கும்படி அவர்களை ஏவிவருகிறதுதான்.

(தொடரும்.)

---

## Here and There.

### நானா சங்கதிகள்.

Conversion of an Anglican Bishop:—அமேரிக்கா தேசத்தில் (Dr. J. Kinsman) கின்ஸ்மன் என்னும் ஒரு பதித மேற்றிராணியார் மனந்திரும்பி நமது வேத சத்தியங்களை விசுவசித்து, கடந்த ஜனவரி-மீ பால்டிமோர் என்னும் அதிமேற்றிராசனக் கோவிலில் மகா கனம்பொருந்திய (Gibbons) கிப்பன்ஸ் கர்தினால் அவர்களால் திருச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

Marshal Foch:—ஐரோப்பிய மஹா யுத்தத்தில் ஜயமடைந்த பேர்போன மார்ஷல் Foch (பெfாஷ்) என்னும் சேனாதிபதி ஒருநாள் கோவிலில் ஜெபம் பண்ணும்போது ஒரு நாஸ்திகன் அவருடைய விசுவாசம் எப்பேர்ப்பட்டதென்று அறிய விரும்பி அந்தக் கோவிலில் பிரவேசித்து, உற்றுப் பார்த்தான். அவ்வளவு மகிமைபெற்ற அந்தப் பெரிய சேனாதிபதி தாழ்ச்சியோடு முழுங்காலிலிருந்து மகா பத்தி விசுவாசத்துடன் ஜெபமாலை வேண்டிக்கொள்ளுகிறதைக் கண்டவுடனே மனந்திரும்பி சத்தியவேதத்தை விசிவசித்து நல்ல கிறீஸ்துவனானான். அவன் தன் சிநேகிதர்களுக்குச் சொன்னதாவது: "அவர் கோவிலில் ஜெபம் செய்கிறதைக் கண்டேன், அதின்பேரில் யோசனை செய்தேன், இப்போது சத்திய வேதத்தை விசுவசிக்கிறேன்."

Bolsheviks:—போல்ஷெவிக்ஸ் என்னும் ருஷிய தேசத்து நிஷ்டூர கலாபனைக்காரர்கள் தங்கள் சொந்தத் தேசத்தைக் கொலையினாலும், கொள்ளையினாலும் பாழாக்கியபிறகு, நமது இந்திய தேசத்தையும் பலவந்தமாய்ப் பிடிக்கவும், அதில் கலாபனை எழுப்பவும், கொள்ளையடிக்கவும் ஆசிக்கிறார்களென்று தெரியவருகிறது. அவர்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற முடியாதேபோனாலும், அவர்களுடைய துர்ப்போதனையும், துர்ப்புத்தியும் பரம்பாதபடிக்கு சகலரும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

Shipwreck:—கடந்த ஜனவரி-மீ சத்தியவேத போதகர்களாகிய ஒரு மேற்றிராணியாரும், 17 குருக்களும், பிராஞ்சு தேசத்திலிருந்து ஆப்பிரிக்கா தேசத்துக்கு சத்தியவேதத்தைப் போதிக்கும்படி கப்பலில் ஏறிப்போகும்போது கப்பல் பெரும் புசலால் சேதப்பட்டது; அவர்களும், மற்ற அனேக பிரயாணிகளும் சமுத்திரத்தில் அமிழ்ந்தி மரணமடைந்தார்கள்.

A brutal murder:—கோயமுத்தூரில் கடந்த ஜனவரி மாதம், ஒரு பரிதாபமான செய்தி சம்பவித்தது; போட்டோகிராபராகிய C. S. குருசாமிபிள்ளை, சூலூர் அருகில் கொலைப் பாதகர் கையில் அகப்பட்டுக் கொல்லப்பட்டார். சில நாட்களுக்குப்பிறகு, அவருடைய பிரேதம் தலையில்லாமல் பொள்ளாச்சித் தாலூகா ஆரமலை என்னும் கிராமத்தில் கிடைத்தது. இரத்தக்கறையுள்ள ஒரு மோட்டர்கார் அகப்பட்டது. இந்தக் கொலை விஷயமாய் சூலூர் சுப்பராவ், கௌஸ், பொன்னன் என்பவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டு, போலீஸார்களால் பிடிக்கப்பட்டு கோயமுத்தூர் ஸப் ஜெயிலில் அடைபட்டிருக்கிறார்கள்.

H. E. the Delegate Apostolic:—இந்தியாவில் பாப்பானவரின் ஸ்தானாபதியாக புதிதாய் நியமனம் பெற்ற மிகவும் வந்திக்கத்தக்க பியேத்ரோ பிஸானி என்பவர் சென்ற மாதம் 6-ம் தேதி பெங்களூரில் வந்து சேர்ந்திருக்கிறார்.

---

## For the Church of the Sacred Heart, Coimbatore.

### கோயமுத்தூர் திரு இருதயக் கோவில் கட்டடத்திற்கு தர்மம்.

கோயமுத்தூர்:— .R.Ry. C. S. தேவசகாயம்பிள்ளையவர்கள் ரூ. 5.

குன்னூர்:—திரு இருதயத்துக்கு நன்றியறிதலாக ரூ. 2.

---

## Kodiveri.

### கோடிவேரிபங்கு விசாரணைக்குட்பட்ட சிக்கிரசம்பாளையம்.

சிக்கரசம்பாளையம் என்னும் ஊரில் கத்தோலிக் கிறீஸ்துவர்கள் பல ஊர்களிலிருந்து குடியேறித் தங்களுடைய மாமூலாகிய நெசவுத் தொழிலைவிட்டு பூமிகளைப் பிடித்து சாகுபடி செய்து வருகிறார்கள். இந்த ஊர்க் கோவில் ரொம்பவும் சிறியதாயிருப்பதையும், ஜனங்களுக்கு நெருக்கமாயிருப்பதையும் கண்ட சங். (J. M. Gaucher) அருள் மரியநாதர் சுவாமியாரவர்கள் ஜனங்களை உற்சாகப்படுத்தி இந்த ஊருக்குத் தகுதியான ஒரு கோவிலைக் கட்டவேணுமென்றும், இதற்கு தொகை சேகரிக்கத் தங்களுடைய பூமிகளின் மாசூல் வரவில் சலகை ஒன்றுக்கு ஒரு வள்ளம் வீதமாக ஒரு பண்டு ஏற்படுத்தவேணுமென்றும் ஊராருடன் தீர்மானித்து, அம்மாதிரியாய் சுமார் 24 வருஷகாலந்தொட்டு நடந்துவருகிறது. ஆரம்பத்தில் இவ்வூர் முக்கியஸ்தர்களான கோவில் மணியம் வேளாங்கண்ணி முதலி, நாட்டாண்மை இராயப்ப முதலி, பெரியதனம் சவேரியப்ப முதலி இவர்களின் விடாமுயற்சியால் ஊர் ஜனங்களுடன் சேர்ந்து, ஒரு நல்ல கோவிலையும் கட்டி முடித்து, ஒரு பள்ளிக்கூடத்தையும் கட்டினார்கள். மேற்கண்ட முக்கியஸ்தர்கள் மூவரில் இருவர் முன்னமேயே காலஞ்சென்றார்கள். கடைசியாக பெரியதனம் சவேரியப்ப முதலி சென்ற ஜனவரி மாசத்தில் காலஞ்சென்றதைப்பற்றி அனுதாபப்பட வேண்டியதாயிருக்கிறது. மேற்கண்ட தர்ம வரியால் ஒரு தொகை சேர்த்து அதன் வட்டியைக்கொண்டு இவ்வூர்ப் பள்ளிக்கூடத்தை ஆதரித்துவருகிறார்கள். இத்தர்மத்தண்டல் நீடித்து நடத்தும்படியாயும், தாராளமாய்த் தர்மம் செய்யும் இவ்வூர்க் கிறீஸ்துவர்களுக்கு வந்திக்கத்தக்க ஆசை பார்து மேற்றிராணி ஆண்டவர் அவர்கள் ஒரு ஆசீர்வாத நிருபமும் அனுப்பியிருக்கிறார். ஆகையால் மேற்கண்ட பெரியோர்கள் மறு உலகம் சேர்ந்து தங்களுடைய புண்ணியத்துக்கு சம்பாவனை அடைந்திருப்பார்கள் என்பது நம்பிக்கை. இப்போது இருக்கும் இவர்களுடைய குமாரர்கள் மேற்கண்ட தர்மத்தண்டலை விடாமுயற்சியாய் அனுசரித்து, ஊர்க்கிறீஸ்துவர்களுடன் புண்ணியபலன் அடைவார்களென்று நம்பிக்கையுண்டு. D. M. C.

ஓர் கத்தோலிக் கிறீஸ்துவன்.

---

## பெரியகோடிவேரி பங்கு கோவில் பஞ்சாங்கம்.

**1920-ம் ஷு மார்ச்சு-மீ**

5-ம் உ முதல் வெள்ளிக்கிழமை பூசை காலை 6-மணிக்கு. பூசைக்குப் பிறகு திவ்வியநற்கருணை ஆசிர்வாதம்.

19-ம் உ அர்ச். சூசையப்பர் திருநாள். பூசை காலை 6-மணிக்கு. பூசைக்குப்பிறகு திவ்வியநற்கருணை ஆசிர்வாதம்.

25-ம் உ தேவமாதாவுக்கு கபிரியேல் சம்மனசு மங்கள வார்த்தை சொன்ன திருநாள். பூசை காலை 6-மணிக்கு. பூசைக்குப்பிறகு திவ்வியநற்கருணை ஆசிர்வாதம்.

28-ம் உ குருத்து ஞாயிற்றுக்கிழமை; அந்த நாளில் புது நன்மை வாங்க தயாராயிருக்கும் பிள்ளைகளுக்கு புதுநன்மை கொடுக்கப்படும்.

### ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகள்.

ஜனவரி-மீ 13-ம் உ முதல்கொண்டு பெபுருவரி-மீ 14-ம் உ வரையிலும்.

அக்கரைக் கொடிவேரி: சலேத்தப்பன், பெரியம்மாள்.
இவர்கள் மகன் மதலைமுத்து.

பெரிய கொடிவேரி இராயப்பன், இரத்தினம்மாள்
இவர்கள் மகன் சிலுவைமுத்து.

அக்கரைக் கொடிவேரி சின்னப்பன், அருளாய்.
இவர்கள் மகள் சின்னம்மாள்.

குண்டிரி: முடியப்பன், ஆரோக்கியம்மாள்
இவர்கள் மகன் தெய்வசகாயம்.

சிக்கரசம்பாளையம், சாமிநாதன், மதலையம்மாள்:
இவர்கள் மகன் இராயப்பன்.

பெரிய கொடிவேரி: சின்னப்பன், சவேரியம்மாள்
இவர்கள் மகன் அந்தோனிமுத்து.

இக்குழந்தைகள் குழந்தை சேசுவைப்போல் ஞானத்திலும் புத்தியிலும் வளருவார்களாக.

### ஜனவரி-மீ 13-ம் உ முதல் பெபுருவரி-மீ 14-ம் உ வரையில் மரித்தோர்களின் கணக்கு.

அக்னேசம்மாள், வயது 80, பெரியகொடிவேரி.—இவளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக, 1. பர. 1. பிரி. 1. திரி. வேண்டிக்கொள்ளவும்.

J. B. Petit.

# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VI.** **April 1920.** **No. 4.**

புத்தகம் VI.] FIDES AC ROBUR. [நம்பர் 4.

## NOTICE.

According to a new Indult graciously granted by the Holy Father the Pope to the faithful of India, on the 31st January 1920, and communicated by His Excellency the Delegate Apostolic to His Lordship the Bishop of Coimbatore, the following modifications are to be made to the rules of Fast and Abstinence previously issued for the diocese of Coimbatore :—

1.—The obligation of Fast and Abstinence on Holy Saturday is completely removed.

2.—The Vigil of the Assumption of the B. V. M. is to be added to the days of abstinence.

The above Indult, including all the other Lenten rules and concessions already in force in the Diocese of Coimbatore, is granted for an unlimited time.

*( By order of His Lordship the Bishop of Coimbatore. )*

# Liberality.

## உதாரம்.

மகா வந்திக்கத்தக்க கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள் தமது தபசுகால நிருபத்தில் கிறீஸ்துவர்கள் ஒவ்வொருவரும் அநுசரிக்கவேண்டிய தர்மக் கடமையையும், தர்மத்தினால் ஆத்தும சரீரத்துக்கு உண்டாகும் நன்மைகளையும் தெளிவாக விளக்கிக் காட்டுகிறார் :—

மேற்றிராணியாருடைய மேன்மையான போதகம், நமது ஞாபகத்திலும், மனதிலும் தங்கும்படி, சில முக்கியமான வாக்கியங்களைச் சுருக்கமாக விளக்கிக் காட்டுவோம்.

விசேஷமாய் இவ்வுலகில் அறியாத மூட ஜனங்கள், ஒருவன் மேன்குலத்தில் பிறந்து, அல்லது, ஆஸ்திபாஸ்தி, சம்பத்து உள்ளவனாயிருந்தால், அவனை மேன்பாடுள்ளவனென்றும், பாக்கியவானென்றும் நினைக்கிறார்கள்.

ஆயினும், சேசுக்கிறீஸ்துநாதருடைய போதகமும், நன்மாதிரிகையும், மனிதனின் மெய்யான மகிமையும், பாக்கியமும் அவனுடைய புண்ணியங்களில் அடங்கியிருக்கிறதென்று தெளிவாக ருசுப்படுத்துகிறது.

தர்மஞ்செய்தலென்றால், பிறன்மட்டில் இரக்கமுடையவர்களாய் அவனது அவசரங்களில் உதவிபுரியும் நல்ல கிரியையாம். ஜெபத்தோடுகூட, ஒருசந்தி, தர்மம் ஆகிய இவைகளைச் செய்யாவிட்டால், நமது ஜெபம் அவ்வளவு பயனுள்ளதல்லவென்றும், ஆஸ்திகளைத் தேடிச்சேர்த்துவைக்க அதிக கவலைப்படுவது புத்திஹீனமென்றும இஸ்பிரீத்து சாந்துவானவர் நமக்குத் தெளிவிக்கிறார். ஆனால், பூலோக ஆஸ்திபாஸ்திகள், சபிக்கப்பட்டவைகளென்று நாம் தீர்மானிக்கலாமோ? பரிச்சேதங் கூடாது. ஏனெனில், உதாரமுள்ளவர்களிடத்தில் இருக்கும் செல்வமானது, தேவ ஆசீர்வாதமாகவும், அவர்களது சாங்கோபாங்கத்திற்கும், மற்றவர்களின் இரட்சண்யத்திற்கும் ஏதுவாகவுமிருக்கிறது.

எத்தனையோபேர் தங்கள் தர்மங்களாலேயே கடவுளுக்கு அதிகபிரியமுள்ளவர்களாகி, மிகுதியான தேவாசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார்கள். ஏழைகளுக்கு உதவிசெய்வதிலும்,



தேவாலயங்களைக்கட்டி அதிற்சிறைபட்டிருக்கும் நமது நேச இரட்சகரின் இருப்பிடத்தைச் சிங்காரித்து வைப்பதிலும், தங்கள் ஆஸ்திகளைச் செலவிட்டவர்களுக்குக் குணக்குண்டோ?

நாம் தர்மஞ்செய்கையில் நம்முடையதையல்ல, ஆனால், கடவுளுக்குச் சொந்தமானதையே மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறோம். ஏனெனில், "பூலோகமும் அதிலடங்கிய சகலமும், ஆண்டவருடையது;" தர்மம் செய்யவேண்டிய கடமை ஆஸ்திக்காரருக்கு மாத்திரமல்ல, எல்லோருமே (ஏழைகளுங்கூட) தர்மஞ்செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில், சுத்த ஏழைகள் முதலாய், மற்றவர்களுக்கு 'ஆத்தும சரீர' உதவி செய்ய, எத்தனையோ வழிவகைகள் இருக்கின்றன.

அர்ச். மார்ட்டின் என்பவர் ஞானஸ்நானம் பெறுமுன் அவரொரு ஏழைச் சேவகனாயிருக்கையில், கையில் காசில்லாததினால், தாம் போட்டிருந்த அங்கியைத் தானே இரண்டாக அறுத்து பாதியை ஓர் ஏழைக்குத் தர்மஞ்செய்ததை யோசித்துப்பாருங்கள். இது நடந்த அதே இராத்திரியில் சேசுநாதர் "எனது பாலிய சிஷ்யனாகிய மார்ட்டின் என்பவன் இந்த அங்கியை எனக்குத் தந்தான்," என்று சம்மனசுகளுக்குச் சந்தோஷத்துடன் சொல்லிக்காட்டிய காட்சியைக் கண்டார்.

திருச்சபையில் அந்நிய தேசத்துப் போதக சபை, திருப்பாலத்துவ சபை, அர்ச். இராயப்பர் காசு முதலிய பெரிய தர்மக் காரியங்களெல்லாம் எளிமையினின்று உண்டானதென்று அறிந்திருக்கிறோம். இந்தத் தேசத்திலும், நமது மேற்றிராசனத்திலிருக்கும் கோவில்களும், ஜெபக்கூடங்களும், குருமடங்களும், அநாதைகளின் தர்மமடங்களும், பாடசாலைகளும், குருமார்கள் ஜீவிக்கப் புசிக்கும் போஜனமும் முதலாய் வேறு தேசத்து உதார சிந்தையுள்ள கிறீஸ்துவர்களின் தர்மங்களல்லவா?

தர்மஞ் செய்வதில் கீழ்க்கண்ட தப்பறைகளை விலக்க வேண்டும்.

சிலர் தர்மஞ் செய்தாலும், வீண் பெருமை, சிலாக்கியம் சுயப்பிரியராய் தாங்கள் செய்யும் தர்மக் கிரியைகளை மற்றவர்கள் கண்டு தங்களைப் புகழவேண்டுமென்கிற எண்ணத்தோடு செய்கிறார்கள்.

சிலர் மற்றவர்களுடைய பொருளை எடுத்து தர்மஞ்செய்ய எப்போதும் தயாராயிருக்கிறார்கள். இது நீதிக்கு விரோத

மான பாவம். கடன்காரர் மற்றவர்களுக்குத் தர்மஞ்செய்ய நினைக்குமுன் நீதிப்பிரகாரம், அவர்கள் கொடுக்கவேண்டிய கடனைக் கொடுத்துவிடவேண்டும்.—"ஒருவன் துணியைப் பிடுங்கி, வேறு ஒருவனுக்குக் கொடாதே"—இன்னொருவர் பணத்தை எடுத்து, ஏழைகளைப் போஷிக்காதே" என்று, அர்ச். கிறிசொஸ்தோம் அருளப்பர் சொல்லியிருக்கிறார்.

மேலும் சோம்பேறிகளுக்கும், குடிகாரருக்கும் உதவி செய்தால், அவர்களுடைய கெட்ட வழக்கத்தை உற்சாகப்படுத்தலாகும்: இதுவிஷயத்தில் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்; என்றாலும், நாம் அதிக லோபிகளாயிருக்கக் கூடாது. ஏனெனில், கடவுள் எல்லோர்பேரிலும், பாவிகள் மட்டிலும் முதலாய்த் தாராளமுடையவராயிருக்கிறார். தர்மஞ் செய்வதால், உண்டாகும் நன்மைகள், அநேகம். வாங்குவதைவிடக் கொடுப்பதே நலமென்று சேசுநாதசுவாமி சொல்லுகிறார். அதற்கு விரோதமாய்ச் சிலர் சிறு பிராயந்துவங்கி கையை நீட்டி, "காசு கொடுங்கள்" என்று, கேட்கத் தங்கள் பெற்றோரால் வழக்கப்பட்டிருக்கிறார்கள். பிள்ளைகளுக்குக் காசு கிடைத்தால், அவர்கள் சௌக்கியத்தையும், குணத்தையும் கெடுக்கக்கூடிய, கடலை பொரி, மிட்டாய் முதலியவற்றை இஷ்டம்போல் வாங்கித் தின்கிறார்கள். தர்மக் கிரியைகளைச் செய்ய, சிறு பிள்ளைகளை முதலாய்ப் படிப்பிக்கவேணும்.

ஏழைகளுக்குக் கொடுக்கையில், நாம் சுவாமிக்குத்தானே கொடுக்கிறோம். தர்மஞ்செய்வதால் பாவிகள் வரப்பிரசாதங்களையும், அதின்வழியாய்,மனந்திரும்புதலையும் அடைகிறார்கள்.

தர்மத்தால் பல பாவங்கள் பொறுக்கப்படுகின்றன. நீதிமான்முதலாய், தன் பாவங்களுக்கு வரவிருக்கும், அநித்திய ஆக்கினைகளின் பொறுத்தலை அடைவான்.

தர்மம் ஞான நன்மைகளை மாத்திரமல்ல, இலௌகீக நன்மைகளையும் பெற்றுக்கொடுக்கும். "இரக்கமுடையவன் எளிமையுள்ளவனாகமாட்டான்."

**தர்மம், ஒருசந்தி** யாகிய இவை இரண்டும், ஜெபத்துக்கு இரண்டு இரக்கைகளாகவிருந்து, அது பரலோகத்துக்கு ஏறிச் செல்வதற்கு உதவுகின்றன. ஆகையால், ஏழைகள்மட்டிலும், கோவில்மட்டிலும், உத்தரிக்கிற ஆத்துமாக்கள்மட்டிலும், தர்மசிந்தை யுடையவர்களாயிருங்கள்.

"கொடுங்கள் அவை உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்."

## The Wood-Cutter's Shoes.

## மரம்வெட்டியின் சப்பாத்துகள்.

மகா வந். கோயமுத்தூர் மேற்றிராணியாருடைய நிருபத்திலிருந்து பின்வரும் நேர்த்தியான சரித்திரத்தை எடுத்தெழுதுகிறோம்.

ஒருநாள் இரண்டு சிறு பையன்கள் தங்கள் தாய்மார்களோடு ஓர் காட்டின் வழியாய்ச் சென்றார்கள். அப்போது ஏழையாகிய மரம்வெட்டி ஒருவன் தனது மரச் சப்பாத்துகளைக் கழற்றிக்கீழே வைத்துவிட்டு, கொஞ்சந்தூரத்துக்கப்பால் மரம் வெட்டிக்கொண்டிருந்ததைக் கண்டார்கள். பிள்ளைகள் விளையாட்டுக்காக அவைகளை யெடுத்து ஓர் புதரில் ஒளித்துவைக்க எத்தனித்தார்கள். அப்போது அவர்களுடைய பக்தியுள்ள தாய்மார்கள் அவர்களைக் கண்டித்து, அப்படிச் செய்யாமல், அதற்கு பதிலாக, அந்தச் சப்பாத்துகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் வெள்ளிக்காசைப் போட்டுவைக்கும்படியாக புத்தி சொன்னார்கள். பையன்களும் அப்படியே செய்தார்கள். அந்த ஏழைமனிதன் திரும்பிவந்து தனது சப்பாத்துகளைப்போட எடுக்கையில், இதோ! வெள்ளிக்காசுகள், அதில் மின்னிக்கொண்டிருக்கக்கண்டான். அவன், உடனே கண்ணீர்விட்டழுதுகொண்டு, முழந்தாளிலேயிருந்து, சுவாமிக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செலுத்தி, ஆபத்தில் உதவிசெய்த, தானறியாத, அந்த நல்ல உபகாரிகளுக்குத் தேவாசீர்வாதம் வரவேணுமென்று மன்றாடினான். அவனுடைய பெண்சாதியும் இரண்டு பிள்ளைகளும், வெகுகாலம் வியாதியாயிருந்து அப்போதுதான் சொஸ்தமடைந்தார்கள். அவர்களுக்கு முழுச்சுகம்வர நல்லஉணவு கொடுக்கவேண்டியிருந்தது. இதற்கு அவனுக்கு வழியில்லை. ஆனால், சப்பாத்தில் போடப்பட்டிருந்த பணத்தைக்கொண்டு, அவசியமான ஆகாரப் பொருட்களை வாங்கிக்கொடுத்ததால் தனது உயிர்க்குயிராயிருந்தவர்கள், சீக்கிரம் நல்ல சுகமடைய வழியாச்சுது. இந்த இரண்டு சிறுபையன்களோ சற்றுதூரத்தில் ஓர் மரத்துக்குப் பின்னால் ஒளிந்திருந்து, அந்த ஏழைமனிதனை எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவன் சந்தோஷப்படுவதைக் கண்டு, அவர்கள் இருவருக்கும் சந்தோஷம் உண்டாயிற்று. சுவாமி அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களில் ஒருவர் பிராஞ்சுதேசத்தின் மார்ஷல் என்னும், பெரிய தளக்கர்த்தரானார்; மற்றொருவர் உத்தம குருவானார்.

## The Little Garden of Roses.

### சிறு ரோஜாத் தோட்டம்.

### மலர் 10.

"He that abideth in me and I in him beareth much fruit." (John. XV. 5.)

"ஒருவன் என்னிடத்திலும், நான் அவனிடத்திலும் ஒன்றித்திருந்தால் அவனே மிகுதியாக கனி தருவான்." (அரு. 15-ம் அதி. 5-ம் வச.)

1. மனிதனுடைய ஆசைகளும், நினைவுகளும் வெவ்வேறானதாகவும் இடைவிடாமல் மாறுந் தன்மையுடையவைகளாயுமிருக்கின்றன. ஆனால் சர்வேசுரன்பேரில் வைக்காத ஆசைகளும், சிந்தனைகளும் எல்லாம் வீணிலும் வீண். விழலிலும் விழல். ஏனெனில் அவைகளெல்லாம் சர்வேசுரனுக்கு ஆகாதவைகளாயும், மனதுக்குச் சஞ்சலமாயும் இப்பூலோகத்தில் நிலையற்றனவாயுமிருக்கின்றன. ஆகையால் சர்வேசுரனை சர்வத்துக்கு மேலாக ஆசித்து, அவரைத்தேடிக் கண்டடைந்து, எல்லாவற்றிற்குமேலாக அவரைச் சுகித்து சிநேகித்து, மற்றவைகளையெல்லாம் உள்ளது உள்ளபடியே அவருடைய ஞான ஒழுங்கின்பிரகாரம் நடத்துகிறவனே தெய்வீக ஞானம் பொருந்தியவன்.

எப்போதும் பேராசையும் பெருங்கவலையும் குடிகொண்டிருக்கும் மனிதனுடைய இருதயமே! சர்வேசுரனைப் புறக்கணிப்பதால் உனக்குண்டாகும் சலிப்பும், துயரமும், மனக்குத்தும் எப்பேர்ப்பட்டவைகளென்று அறியமாட்டாயா? உனக்கு யாதொரு ஆறுதலையும் திருப்தியையும் கொடுக்க இயலாத அழிந்துபோகும் இவ்வுலக இன்பசந்தோஷங்களில் பாக்கியமும் திருப்தியும் உண்டென்றெண்ணி அவைகளை நாடிப் பின்செல்வதேன்? நீ இன்னும் என்னசெய்துகொண்டிருக்கிறாய்? உனக்குத் திருப்தி தரும் பாக்கியத்தை எங்கே தேடித்திரிகிறாய்?

ஓ! அற்ப மனுஷா! உன்னிருதயத்தை நீயே சோதித்துப்பார். நீ இதுமட்டும் சாவான பாவம் செய்யாமல் சர்வேசுரனுக்குப் பிரியமுள்ள பிள்ளையாய் அவர் ஊழியத்தில் இருந்



தாயோ அல்லது துர் இச்சைப்பிரகாரம் நடந்து பாவத்தைச் செய்தாயோவென்று உன்னைச் சோதித்துக் கேட்டுப்பார். ஐயோ! ஊதாரி! போனதுபோகட்டும், உன் தகப்பனாகிய சர்வேசுரனைத் தேடிப்போ. அவர் பாதத்தில் விழுந்து பொறுத்தல்கேள். அப்போது நீ இழந்துபோன தேவ இஷ்டப்பிரசாதத்தையும், சம்பாதித்திருந்த புண்ணியப்பேறுகளையும் சர்வேசுரன் உனக்குத் திரும்பவும் தந்தருளுவார்.

2. சர்வேசுரனன்றி அவரால் சிருஷ்டிக்கப்பட்ட எந்தப் பொருளும் உனக்குத் திருப்தியைத் தராது. 'மின்னுகிறதெல்லாம் பொன்னல்ல.' ஆனதுபற்றி நீ தேடிப்போகும் இவ்வுலக ஆஸ்தி திரவியம், மகிமை, பெருமை இன்பசுகமெல்லாம் கொஞ்சத்துக்குள் மின்னி அழிந்துபோகும் மாய்கைகளாம்.

'கண் பார்த்துத் திருப்தியடைவதில்லை. செவி கேட்டு இரம்மியங்கொள்வதில்லை' என்கிற பழமொழியை அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்வாயாக. சிருஷ்டிகருடைய மகிமைக்காகச் செய்யப்படாதவைகளில் நீ பார்க்கிறதெல்லாம் வெறுங்கனவேயொழிய மற்றப்படியல்ல. ஆனதுபற்றி தீர்க்கதரிசியான தாவீது இராஜா, 'ஓ! என் ஆண்டவரே! உமது சிருஷ்டியினால் என்னை மகிழ்ச்சியாக்கினீர். உமது கரங்களின் கிரியைகளினால் நான் மகிழ்வேன்' என்று பாடியிருக்கிறார்.

சிருஷ்டிக்கப்பட்ட எந்த வஸ்துவும் நிலைமையானதல்ல. நித்திய பரம கடவுளான சர்வேசுரனைத் தவிர நித்தியமானதும் சாசுவதமானதும் யாதொன்றுமில்லை.

3. உண்மையில் எப்போதும் ஸ்திரமாயிரு. அது உன்னைப் பொய்யினின்றும், பாவத்தினின்றும், சத்துருவின் பகையினின்றும் மீட்கும். அயலானுக்கு விரோதமாக அநீதமாகச் சொல்லும் அபவாதமானது தூஷிக்கிறவனுடைய தலையிலே விழும்.

கிறீஸ்துநாதரோ உண்மையானவர். அவரைப் பின்பற்றுகிறவன் உண்மையையும் புண்ணியத்தையும் நேசிக்கிறவனாவான். இகலோக சுகத்துக்காவது, செல்வத்துக்காவது அல்லது கௌரவத்திற்காவது உண்மையைக் கைவிடுபவன் தனது விசுவாசத்தை இழந்து நற்குணத்துக்கு எதிரிடையாக நிற்கும் கீர்த்தியைப் போக்கடித்துக்கொள்ளுகிறான்.

கடவுளே உண்மைஸ்வரூபம். பொய்யர்கள் அதிக காலம் மறைந்திருக்க அவர் விடுவதில்லை.

தீங்கிழைப்பவன் கொஞ்ச காலம் தனது பொய்யைப் பரவச்செய்யலாம்; ஆனால் சத்தியவந்தனே முடிவில் வெல்வான். மேலும் கபடிக்குத்தான் நினையாத நேரத்தில் குழப்

பம் வந்துசேரும். உலக காரியங்களை வெறுத்துச் சரீரத்தை ஒறுத்தல்செய்து சர்வேசுரனைப் பின்செல்லுகிறவனே மெய்ஞ்ஞானமுள்ளவன். அதேனெனில் இவன் வியர்த்தமான காரியத்தைவிட்டு உண்மையையும், மாமிசத்தைவிட்டு ஞானத்தையும் கைக்கொள்ளுகிறான். ஆனதுபற்றிக் கடவுளுக்குப் பிரியமாயும் நேர்மையாயுமிருக்கும் விஷயத்தைத்தவிர வேறொன்றைப்பற்றி நினைக்காதே. ஆசையும்படாதே. சர்வேசுரனது மகிமை தோஸ்திரத்துக்காக நற்காரியங்களைச்செய்து, அவரை முழுமனதோடு நேசித்துப் புண்ணியவழியிலே சாங்கோபாங்கமாக நடந்துகொண்டுவரப் பிரயசப்படு.

உண்மையையே பேசிப் பாவத்தை வெறுப்பவன் மோட்சத்திற் சர்வேசுரனால் மிகவும் உயர்த்தப்படுவான். ஆனால் பாவத்தைச்செய்து உண்மையை வெறுக்கிறவனோ நித்திய தண்டனைக்குள்ளாவான். ஆனதுபற்றி உண்மைக்கும் தர்மத்துக்கும் அடங்கி நட. அவ்விதமாக நீ சர்வேசுரனுக்கும், சம்மனசுகளுக்கும் மனிதர்களுக்கும் பிரியமுள்ளவனாக இருப்பாய்.

பயப்படாதே. துஷ்டர்கள் சொற்பக்காலத்துக்கு உனது நன்மையை மறைத்துவைக்கலாம். ஆனால் அநியாயத்தினால் வருந்தி, பொறுமை தைரியத்தோடிருப்பவனுக்குச் சம்பாவனையாக சர்வேசுரன் தம்மையும், தம்மிடத்திலடங்கிய நித்திய பேரின்ப பாக்கியங்களெல்லாவற்றையும் தந்தருளக் கிருபை அன்பு நிறைந்த சித்தமுள்ளவராயிருக்கிறார்.

நித்திய சமாதானமாக வாழவும், உன் மனச்சாட்சி உன்னை எதிலும் குறைகூறாமலிருக்க நீ விரும்புகிறாயா? அப்படியானால் நீ அடக்கமுள்ளவனாகவும், பொறுமையுள்ளவனாகவும், தாழ்ச்சியுள்ளவனாகவுமிருப்பாயாக. ஏனெனில் உன்னிருதயத்தில் உண்டாகிற துர் எழுச்சிகளை அவைகள் தோன்றும்போதே, ஜாக்கிரதையுடனும், வைராக்கியத்துடனும் அடக்காவிட்டால், உன்னைக்காட்டிலும் மிகவும் அபாயகரமான விரோதி வேறொருவருமில்லை.

உன் குற்றங்களை நன்றாய்க் கவனித்தறி. அப்போது இன்னான் இப்படிக்கொத்தவனோ அப்படிக்கொத்தவனோவென்றும், இன்னான் செய்கிறதென்ன சொல்லுகிறதென்னவென்றும், ஆராய்ந்து நோக்கிப்பார்க்க உனக்கு இச்சையுண்டாகாது.

ஆகையால் சகலத்தையும் சர்வேசுரனுடைய கவலையில் ஒப்பித்துவிட்டு, நீயோவென்றால் உத்தம சமாதானத்தில் நிலைத்திருந்து அவனவன் தன்னிஷ்டமானபடி நடக்க விட்டுவிடு.

(இன்னும் வரும்.) S. S. G.

# History of the Diocese of Coimbatore.

## Introduction.

## கோயமுத்தூர் மேற்றிராசனப் பாண்டிய வர்த்தமானம்.

சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் சகல பிரபஞ்சங்களும் பல பல மாறுபாடுகளை நாளாவட்டத்தில் அடைந்திருக்கின்றன. நாம் வசிக்கும் இப்பூவுலகமும், இதர அண்டகோளங்களைப்போல் பல பல மாறுபாடுகளை அடைந்திருப்பதாக இயற்கையமைப்பு சாஸ்திரத்தில் சிறந்த கர்த்தாக்கள் படிப்பிக்கிறார்கள். அநேக இராஜ்ஜியங்கள் முன் ஒரு காலத்தில் கீர்த்தியாய் ஆண்டுவந்தனவென்றும், இப்பொழுது அவைகள் தங்கள் கீர்த்தியை இழக்க இதர இராஜ்ஜியங்கள் பல வெற்றிகளை அடைந்து பெருமையாய் ஆண்டுவருவதை சரித்திர நூல்களில் வாசிக்கலாம்.

இனி நான் எழுத இருக்கும் கடிதங்களைக்கொண்டு நமது மேற்றிராசனத்தில் பல பல புது ஊர்கள் உற்பத்தியாயிருக்கின்றனவென்றும், முற்காலத்தில் இருந்த சில சிறந்த கிறீஸ்துவ ஊர்கள் அடியோடே மறைந்தோ அல்லது குறைந்தோ போய்விட்டனவென்றும் அறிவீர்கள்.

நமது ஆண்டவராகிய சேசுநாதர்சுவாமி பரலோகத்திற்கு எழுந்தருளுவதற்குமுன்பதாக தமது அப்போஸ்தலர்களை நோக்கி, உலகமெங்கும போய் சகல ஜனங்களுக்கும் பிரசங்கிக்கும்படியாகக் கொடுத்த கட்டளைக்குகந்த அப்போஸ்தலர்கள் இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றபின், நாலாதிசைகளிலும் சென்று பிரசங்கித்தார்கள் பாரம்பரை சத்தியத்தின்பிரகாரம் அப்போஸ்தலராகிய அர்ச்.- தோமையார், பார்த்தீகர், மெதியர், பார்சீகர், ஹிர்க்கானர், பக்திரீகர், முதலானவர்களுக்கு விசுவாச சத்தியங்களைப் பிரசங்கித்தபிறகு, நமது இந்தியா தேசத்திற்கு புறப்பட்டுவந்தார். அக்காலத்தில் அன்னியர்கள் பாய்க்கப்பல்களின் வழியாக, இந்தியாவுடன் வர்த்தகம் செய்துகொண்டிருந்தார்கள். தென்மேற்கு பாகங்களிலிருக்கும் கடல்துறைப் பட்டணங்களாகிய, திருவாங்கூர், கொச்சி முதலிய பட்டணங்களில் இறங்குவார்கள். இந்த பாய்க்கப்பலில் வந்த நமது அப்போஸ்தலரான அர்ச். தோமையார், மேற்குப் பாகங்களில் இறங்கி அப்பாகங்களில் பிரசங்கித்தார். மலையாளதேசத்திலிருக்கும் நஸ்திராணி என்று இப்போது சொல்லப்படும் ஜனங்களுக்கு ஆயிரக்கணக்காய் ஞானஸ்நானம் கொடுத்தார். இந்த அப்போஸ்தலர் நமது கோயம்புத்தூர் மேற்றிராசனத்திக்கு வந்தாரா! (இன்னும் வரும்)

தேசாபிமானி.

## The Correct things for a Catholic Home.

### ஒவ்வொரு கிறீஸ்துவ குடும்பஸ்தனும் அனுசரிக்கவேண்டியது.

1. கிறீஸ்துவன் வீட்டில் ஒழுங்கு, சுத்தம், ஒடுக்கம் என்பன என்றும் செழித்தோங்கல்.

2. பாடுபட்ட சுரூபம் தக்க இடத்தில் பூச்சியத்துடன் வைத்திருத்தல்.

3. பக்திக்குரிய படங்கள், சேசுவின் திரு இருதயப் படம், தேவமாதாப்படம், திருக்குடும்பப்படம், காவல்சம்மனசு படம், நமது பாதுகாவலரான அர்ச்சியசிஷ்டவர்கள் படம், இவைபோன்றவற்றை வைத்திருத்தல்.

4. வேதப்படங்களன்றி, அழகான வேறுபடங்கள் இருந்தபோதிலும் சற்றேனும் அநாச்சாரமானதும், அவலட்சணமானதுமான படங்களை ஒருபோதும் காணப்படாதிருத்தல்.

5. மந்திரித்த குருத்தோலை சுவரில் தொங்கல்.

6. மந்திரித்த மெழுகுவர்த்தி கத்திரிச்சாலிலாவது, அலமாரியிலாவது, பதனமாய் வைத்திருத்தல்.

7. மந்திரித்த தீர்த்தம் ஒரு சீசாவில் வைத்திருத்தல்.

8. உள்ளவர்கள், கூடுமானவரையில், திருக்குடும்ப முதலிய அர்ச்சியசிஷ்டவர்கள் சுரூபங்களை அழகிய சிறு பீடங்களில் ஸ்தாபிப்பார்கள்.

9. ஓர் நல்லகிறீஸ்துவன் வீட்டில், தேவசந்நிதானத்தை நினைப்பூட்டுகிறவைகளைக் காண்போமேயல்லாமல், அதற்கு தடங்கலாயிருப்பதொன்றையும் காணமாட்டோம்.

10. பக்தியுள்ள ஒவ்வொரு கிறீஸ்துவனும் தன் சரீரத்தின்மேல் ஓர் உத்தரீயத்தைத் தரித்திருப்பதுமன்றி, ஜெபமாலையொன்று கைக்கொண்டு அந்திசந்தி, ஜெபக்கடனைத் தீர்ப்பான்.

11. சுவிசேஷப்புஸ்தகம், ஞானோபதேசம், ஒரு ஜெபபுஸ்தகம், ஒரு நல்ல பத்திரிகை, இவற்றைச்சேகரித்தல் சுருக்கத்தில் சொல்லவேண்டுமானால், ஒவ்வொரு பக்தியுள்ள கிறீஸ்துவனுடைய வீடும் சிறு தேவாலயமென்றே சொல்லத்தகும்.

Adorn your home with Sacred Pictures; thy will lift your heart to God and remind you of better things.

S. M. S. G.

## Friendly Talk.

### சிநேக வாய்ச்சல்லியம்.

**7-ம் நாள்.**

பி. சர்வேசுரனுக்குத் தோஸ்திரம்சாமி

கு. ஆசீர்வாதம்-எல்லாரும் நல்ல சௌக்கியமா?

பி. சௌக்கியந்தான்சாமி-சத்தியநாதனுக்கும், பரஞ்சோதிக்கும், அன்னமுத்துக்கும் அம்மை கண்டிருக்கிறது சாமி.

கு. ஆ! அப்படியா-பாவம்-அவர்கள் சௌக்கியமடைய சாமியை மன்றாடுவீர்களாக. நாமும் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுவோம்.

கு. பிள்ளைகளே நரகவேதனை எல்லாப்பொல்லாப்பிலும் பெரிய பொல்லாப்பாயிருப்பதால் அப்பொல்லாப்புக்குத் தப்பித்துக்கொள்ள வழிதேடாமலிருக்கிறது பெரிய பைத்தியமல்லவா?

செ. ஆமாஞ்சாமி தப்பித்துக்கொள்ள எனக்காசைதான். எல்லாருக்கும் அந்த ஆசைதான் இருக்கும். ஆனால் தப்பித்துக்கொள்ள வழி வேணுமே!

கு. மனசிருந்தால் வழியுண்டு.

செ. செரி அந்த வழியைச்சொல்லிக்காட்டுங்கோ சாமி

கு. சொல்லுகிறோம். கவனமாய்க்கேட்டு மனதில் வையுங்கள்.

கு. நரகத்திற்குப்போக நியாயமென்ன? பாவஞ்செய்தபடியால், செய்த பாவத்திற்குப் பொறுத்தல் அடைந்தாலோ நரகத்திற்குத் தப்பித்துக்கொள்ளலாம்.

மு. பாவத்துக்குப்பொறுத்தல் எப்படி கிடைக்கும்சாமி?

கு. இது வருத்தமல்ல. பாவசங்கீர்த்தனம் பண்ணினால் போதும். பாவப்பொறுத்தல் அடையலாம்.

செ. என்ன சாமி புதுப்புதாப்பேச்சா பேசராங்கோ.

கு. நல்லது இருக்கட்டும். கோவிலிலே ஞானஸ்நானத் தொட்டிக்குப் பக்கத்திலே பாவசங்கீர்த்தனத்தொட்டி இருக்கிறதே அதை நீங்கள் பார்த்ததில்லையா?

பி. ஆமாஞ்சாமி பார்த்திருக்கிறோம்.

கு. அத்தொட்டிக்குள்ளே சாமியார் ஒருவர் சர்ப்பிலீஸ் சட்டைபோட்டு, கழுத்தில் ஊதாப்பட்டுப்போட்டு உட்காந்திருக்கிறதைக் கண்டதில்லையா?

செ. ஆமாஞ்சாமி மிக்கேல் சம்மனசானவர் திருநாளுக்கு முந்தி ஒருநாள் பார்த்தேன்சாமி ஒரு சாமியார் அந்தத்தொட்டிக்குள் உக்காந்திருந்ததை.

கு. அந்தத்தொட்டியைச்சுற்றிலும் ஜனங்கள் கூட்டமாய் நின்றுகொண்டு காத்துக்கொண்டிருந்ததை யார் கவனித்தது சொல்லுங்கள் பார்ப்போம்?

முத்து. ஆமாம்சாமி ஜனங்கள் செரியான நெருக்கமாய் நின்றுகொண்டு என்னமோ எடுக்கப்போகிறாப்போல தாண்டுகால் போட்டுக்கொண்டிருந்தாங்கோ. அம்புரோஸ்சாமி யார் பக்கமிண்ணு ஒருத்தரையொருத்தர் புடிச்சுத் தள்ளிக்கிட்டு எனக்கு மிந்திச்சு உனக்கு மிந்திச்சிண்ணு நெருச்சிக்கிட்டுப் போயி முழங்காலில்கூட இருக்காதபடிக்கு தாண்டுகால்போட்டு நின்று ஏதோ கசுமுசுக்கசுப்பெண்ணு பேசிப்போட்டு வந்திட்டாங்க சாமி.

கு. பாவசங்கீர்த்தனத் தொட்டிக்குப்பக்கத்தில் ஒவ்வொருத்தராய்ப்போய் முழங்காலிலிருக்கிறதையும் மறுபடி எழுந்து வருகிறதையும் கவனித்துப் பார்த்ததுண்டா முத்தாயி?

மு. ஆமாஞ்சாமி நல்லாப் பாத்தேன். போறாங்கோ மொழங்காலிருந்தாங்கோ எந்திரிச்சு வந்தாங்கோ.

கு. சரி. இதெல்லாம் கவனமாய்த்தான் பார்த்திருக்கிறீர்கள். ஆனால் அப்படிப் போய் முழங்காலிலிருக்கிறவர்கள் ஒவ்வொருவரும் என்னசெய்கிறார்களென்று உங்களுக்குத் தெரியுமா பிள்ளைகளே.

செ. பாசங்கீத்தம் பண்ணப் போராங்கிண்ணு சொன்னாங்கோ சாமி.

கு. பாசங்கீத்தம் அல்ல. "பாவசங்கீர்த்தனம்" என்று சொல்லு.

செ. எப்படிச்சாமி. பாவசங்கீதனமா.' நாம் படிச்சாரிக்கிறே செரியாச் சொல்லறதக்கு.

கு. அப்படியானால் நிறுத்திச்சொல்லு. "பாவ-சங்-கீர்த்-தனம்."

செ. "பா-வ-சங்-கீர்த்-தனம்."

கு. சரி. இப்படித்தான் சொல்லவேணும்.

கு. பாவசங்கீர்த்தனம் பண்ணும்போது என்ன செய்கிறார்கள் தெரியுமா?

பி. இஞ்சே ஆருக்குத் தெரியும் சாமி. ஒருத்தருக்கும் தெரியாது. நீங்கதா சொல்லுங்கோ சாமி.

கு. பாவசங்கீர்த்தனம் செய்கிறதென்றால், பாவசங்கீர்த்தனத் தொட்டியில் இருக்கிற சாமியாரிடம் போய் தான் செய்த ஒவ்வொரு பாவத்தையும் மெள்ள இரகசியமாய்ச் சொல்லுகிறதுதான் பாவசங்கீர்த்தனம். உதாரணமாக "நான் பொய் சொன்னேன்." "நான் திருடினேன்" 'பொய்ச் சத்தியம் பண்ணினேன்.' 'சபித்தேன்' கெட்டவார்த்தை சொன்னேன்.' 'ஞாயிற்றுக்கிழமை கடன்பூசை காணத் தப்பிப்போனேன்.' 'அந்த நாளிலே விலக்கப்பட்ட வேலை செய்தேன்.' வெள்ளிக்கிழமை கறிதின்றேன்.

கு. ஆனபடியால் பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறது இன்னதென்று இப்போது நன்றாய்த் தெரியுமல்லவா.

பி. கொஞ்சங் கொஞ்சந்தாத் தெரியும். ரொம்ப தெரியாது.

கு. அதினால் குற்றமில்லை. இன்னம் கொஞ்சநாள் பொறுத்து உங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லிக் காட்டுகிறேன். நேரமாய்விட்டது. வீட்டுக்குப் போங்கள் செபம் சொல்லிவிட்டு.

பி. சர்வேசுரனுக்குத் தோஸ்திரம் சாமி.

கு. ஆசீர்வாதம்.

(இன்னும் வரும்.) S. M.

## விநோத வினா?

ஒரு ஆஸ்திக்காரன் சாகுந்தறுவாயில் 10 இலட்சம் ரூபாய் காணியாட்சியாக விடுகிறான்.—அதில், பத்தில் ஒரு பாகம் அவன் பெண்சாதிக்கும், பன்னிரண்டில் ஒருபாகம் அவன் மகனுக்கும், பதினாறில் ஒருபாகம் அவன் சகோதரனுக்கும், பன்னிரண்டில் ஒருபாகம் அவன் சிற்றப்பனுக்கும், பாக்கியெல்லாம் பெரியப்பன் மகனுக்கும் சுதந்தரமாய்க் கொடுத்துவிடுகிறான்.

ஒவ்வொருவனுக்கும் எவ்வளவு கிடைக்கும்?

மறுமொழி :—ஒரு வக்கீல்.

---

உத்தம குருவாகிய மூத். கூரோதார்ஸ் என்பவர் ஒருநாள் காலையில் தமது பங்கு விசாரணையைச் சேர்ந்த ஒரு கிறீஸ்துவனிடமிருந்து ஒரு காகிதம் வரப்பெற்றார். அக்காகிதத்தில், அவர் பாசாங்குக்காரனென்றும், மோசக்காரனென்றும், மூடனென்றும், அநியாயக்காரனென்றும் பலவித நிந்தைகளாற் தூஷணிக்கப்பட்டிருந்தார்.

அதேநாளில், மாலையில், வேறொரு கிறீஸ்துவனிடமிருந்து இன்னொருகடிதம் அவருக்கு வந்தது. அதில் அவர் நீதிமான் என்றும், மகா புண்ணியவான் என்றும், தயவுள்ளவனென்றும், சகல நற்குணங்களாலும், புண்ணியங்களாலும் நிறைந்தவர் என்றும் மேன்மையாய்ப் புகழப்பட்டிருந்தார்.

ஷை குருவாகிய கூரோதார்ஸ் அவ்விரண்டு கடிதங்களையும் ஒத்துப்பார்த்து, நிந்தையினாலேயாவது ஸ்துதியினாலேயாவது மனக்கலக்கப்படாமல், "உலகத்தின் கீர்த்தியும், மதிப்பும் அப்படித்தான்" என்று சொன்னார்.

ஆகையால் நீ செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றும்போது, மற்றவர்கள் உன்னைப்பற்றி நினைப்பதையும், சொல்லுவதையும் கவனியாதே.

---

## Page for the Young.

### பிள்ளைகளின் பக்கம்.

### Our Lord Jesus Christ and His Blessed Mother.

### நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரும், அவருடைய பரிசுத்த தாயாராகிய கன்னிமரியம்மாளும்.

ஒருநாள் ஆங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த ஒரு வாலிப [illegible] டப்ளினிலிருக்கும் ஒரு கன்னியாஸ்திரி மடத்துக்குச் சென்று பத்துப்பிராயமுள்ள தனது குமாரனை தங்கள் மடத்தில் ஒரு வருஷம் வைத்திருக்கும்படி அதிலிருந்த சகோதரிகளை கேட்டுக்கொண்டாள். இதற்கு அந்தக் கன்னியாஸ்திரிகள் சம்மதிக்க அவன் அங்கேயே படித்து வந்தான்.

இப்படி இச்சிறுவன் மடத்துக்குப்போய் வந்துகொண்டிருக்கையில் ஒருநாள் அவனுக்கும் அவனுடைய தாயாருக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது :—

தாய் : "தம்பீ ! உன் தாயாராகிய என்னைவிட யாரையாகிலும் நீ அதிகமாய்ச் சிநேகிக்கிறதுண்டா ?"

சிறுவன் : "ஆம் ! அம்மா !"

தாய் : (ஆச்சரியத்தோடு) என் கண்ணே ! அது யார் ?

சிறு : சர்வேசுரன், அம்மா !

தாய் : சரி. ஆனால் சர்வேசுரனுக்குப்பிறகு என்னைத்தானே மற்றெல்லோரையும் பார்க்க சிநேகிக்கிறாய் ?

சிறு : இல்லை இல்லை, அம்மா !

தாய் : (அதிக ஆச்சரியத்தோடு) பின்னே யாரை ?

சிறு : என்னை இரட்சிப்பதற்காகத் தமது உயிரைக் கொடுத்த சேசுநாதர்சுவாமியை.

தாய் : இன்னும் எனக்குமுந்தி யாராவது உண்டா ? சேசுநாதர்சுவாமிக்குப்பிறகு நான்தான் அல்லவா ?

சிறு : இல்லை அம்மா, இன்னுமொருவருண்டு.

தாய் : (மகா ஆச்சரியத்தோடு) தம்பி, நீ விளையாடுகிறாய். அது யார் ?

சிறு : நான் சேசுநாதர்சுவாமியுடைய திருத்தாயாராகிய அர்ச். கன்னிமரியம்மாளை உங்களைப் பார்க்கிலும் அதிகமாய்ச்

சிநேகிக்கிறேன். அர்ச். தேவமாதாவுக்குப்பின் உங்களைத்தான் மற்றெல்லோரையும் பார்க்க அதிகமாய்ச் சிநேகிக்கிறேன். வேறொருவரும்" உங்களுக்குமுன் என்னிருதயத்திலில்லை.

இதைக்கேட்டு அந்தத் துரைசானி தன் பிள்ளையை மார்போடு அணைத்து சேசுநாதர்சுவாமியையும் அர்ச். கன்னிமரியம்மாளையும்பற்றிய இந்தக் காரியங்களையெல்லாம் எங்கே கற்றாயென்று மகனைக் கேட்டாள். அப்போது அவன் இதையெல்லாம் ஷை மடத்தில், தன்னோடு வாசித்துவந்த ஒரு சிறுவன் தனக்குக் கற்றுக்கொடுத்ததாகச் சொன்னான். கொஞ்சக் காலத்துக்குப்பிறகு அர்ச். தேவமாதாவின் கிருபையால் தாயும் மகனும் மனந்திரும்பி மரணபரியந்தம் நல்ல கிறீஸ்துவர்களாய் ஒழுகிவந்தார்கள்.

பிரியமான பிள்ளைகளே! நீங்கள் சிறுவர்களாயிருக்கும்போதே மற்றெல்லோரையும்பார்க்க சேசுநாதசுவாமியையும், அவருக்குப்பின் அவருடைய பரிசுத்த தாயாரையும் சிநேகிக்கப் பழகவேண்டும். அநுதினமும் தேவமாதாவுக்குத் தோத்திரமான யாதோர் ஜெபத்தை ஜெபிப்பதே முறை. காலமே விழித்தெழுந்திருக்கும்போதும், இராத்திரியில் நித்திரைசெய்யப் போகும்போதும், வீட்டில் பிரவேசிக்கிறபோதும், வெளியில் போகிறபோதும் அந்த ஆண்டவளுக்கு வணக்க தோத்திரஞ் செய்வதும், அநுதினம் அவளைக்குறித்து ஒரு பத்துமணி ஜெபமாவது ஜெபிப்பதும், அவளுடைய திரு விருதாகிய உத்தரீயம், சுரூபம் முதலிய அடையாளங்களைத் தரித்துக் கொள்வதும். அவளுடைய திருநாட்களில் பாவசங்கீர்த்தனம் பண்ணி நன்மை வாங்குகிறதும், மிகவும் உத்தம முறையாமே. இவ்விதமாக தயை பட்சம் நிறைந்த அத்திருத்தாயாரை மாறாத பத்தியுடன் வணங்கி ஸ்துதித்து நேசித்துச் சேவித்து உங்களை அவள் அடைக்கலத்தில் வைத்து, அவளுடைய உத்தம மாதிரிகைகளைக் கண்டுபாவித்து, சுமுத்திரையாய் நடப்பீர்களேயாகில் நீங்கள் திரு மாதாவின் ஆதரவினால் அவளுடைய திவ்விய குமாரனிடத்திலுங் கிருபைபெற்று அவருக்குப் பிரியமுள்ளவர்களாகிப் பேரின்ப இராட்சியத்தில் சேருவது தப்பாது. (போதகன்.)

---

## Jayaseelan.
## ஜயசீலன்.

### 10-ம் அத்தியாயம்.

பற்பல தேசத்து ஆசார முறைகளையும், நாகரீக மேன்பாடுகளையும் போதித்து, புத்தியைத் துலக்கி, அறிவை விசாலிக்கச் செய்வதாகச் சொல்லி, நடத்தப்படும் நாடகங்களால் விளையும் தீமைகள் இத்தனை அத்தனையென்று, வரையறுத்துச் சொல்லமுடியாது. அவைகள் விசேஷமாய் கற்பென்னும் பரிசுத்த புண்ணியத்தை அடியோடு அழித்து, மோக பாவம் மிகுந்து பெருகச்செய்கிறது. டிராமாக்கூட்டத்தாரால் ஆடப்படும் நாடகங்கள், பொதுப்படச் சொல்லிலடங்காத மோக பாவங்களுக்கு தூண்டுதலாயிருக்கின்றன. இவைகள் மெய்யான நரக ஆட்டங்கள் என்றால் பொய்யாகாது. சிற்சில சமயங்களில், நல்ல நீதிக்கதைகளையும், சரிதைகளையும் நாடகமாக ஆடுகிறார்கள் என்றாலும், இவ்விதச் செய்கைகளுடன், ஆகாத சம்பாஷணைகளையும், சிற்றின்பப் பாடல்களையும் சேர்த்துக் கூட்டி, மகா கேவலமான காமக்கூத்துகளும், வேடிக்கைகளும் கலந்து, இனிய மனோரஞ்சித நாடகம் என்னும் அழகிய பெயரால் அழைப்பார்கள். தவிர இவ்வித நாடகங்களை ஆடுகிறவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால், பொதுப்பட மனம் போனபோக்கெல்லாம் சென்று திரியும் வாலிபருஞ், வெட்கமின்றி நாடக மேடையில் நடனம் செய்வதே வேலையாயிருக்கும் பரஸ்திரிகளுந்தான் அப்படிப்பட்டவர்கள். அவர்களுடைய முக்கிய நோக்கம் காசு ஒன்றுதானே. இவ்விதமாகத் தங்கள் மானத்தைக் காசுக்கு விற்ற மானிடபதர்கள், பச்சை பச்சையாய்க் கக்கும், அநாச்சார வார்த்தைகளும், செய்யும் அவலட்சணமான சாடை சயிக்கினைகளும், நல்ல யோக்கியர் எவர்க்கும், அருவருப்பாய் இருக்குமென்று சொல்லாமலே விளங்கும். பார்ப்பவர்கள் கண்ணைப் பறிக்கும்படி முத்து, இரத்தினாபரணங்களையும், பகட்டான பட்டாடைகளைத் தரித்துக்கொண்டும், புனுகு, சவ்வாது முதலிய வாசனை வர்க்கங்களை ஏகமாய் ஏற்றிக்கொண்டும், வீணை, மத்

தளம், மிருதங் முதலிய சங்கீத வைபவங்களோடு, சிறப்பாய்ச் சிங்காரிக்கப்பட்ட மேடைமேல் ஏறி, அசுசியான கதைகளைப் பாடினால், பார்ப்போர் கற்புக்குப் பழுதுவராமற் போகுமா? சரீர துர்நாட்டங்களைத் தூண்டிவிடாமலிருக்குமா? அடக்கக் கூடாத அநந்தங்கோடி துர் ஆசைகளுக்கும், மூர்க்கமான துர் மார்க்கத்துக்கும் கெட்ட நாடகங்களே ஏற்ற ஊற்றென்று அறியவும்.

ஜயசீலன் முதற்றடவையாக இவ்வித நாடகத்தைக் கண்ணுற்றபடியால், தன் மனோரம்மியத்தை அடக்க முடியாதவனாய், ஆநந்த சமுத்திரத்தில் அமிழ்ந்தி பரவசமானவன்போல் காணப்பட்டான். ஆயினும், மேடையிற் காட்டப்பட்ட விஷயங்களும், காட்சிகளும், உண்மையாயிருக்கக்கூடுமாவெனத் தனக்குள் சந்தேகித்து, தனபாலனை வினவ, அவனும் தான் பார்த்ததெல்லாம் உண்மையிலும், உண்மையே என்றும், உலகத்தில் சாதாரணமாய் நடைபெறுங் காரியங்களேயென்றும், விடை பகர்ந்ததின்மேல், தன் அறியாமையைப்பற்றித் துக்கித்தான். ஜயசீலனுக்கு ஓர்வித நாடகப் பைத்தியம் பிடித்துவிட்டது. இவ்வளவு இன்பசுகத்தைத் தரக்கூடிய டிராமாக்களை இதுவரைக்கும் அசட்டை செய்ததற்கு ஓர்விதப் பரிகாரஞ்செய்ய, தன் தகப்பனை வஞ்சித்து, நாள்தோறும் நாடகத்துக்கு, தான் வருவதாக, தன் நண்பன் தனபாலனுக்கு வாக்களித்தான். அதனால் வந்த லாபமென்ன? ஏற்கனவே தகாத புஸ்தகங்களை வாசித்ததால், அவன் புத்தி தடுமாறி, சுவாமியை மறந்து, அவரைத் தூஷித்து, மனிதனுடைய இருதயத்தில், அவர் வைத்தருளிய சுபாவ கோட்பாடுகளையே அலட்சியஞ் செய்யத்தொடங்கினான். நாடகமோ தகப்பனுக்குச் செய்யவேண்டிய, சங்கை, மரியாதை முதலியவைகளைத் துவேஷிக்கவும், நல்லொழுக்க நற்படிப்பினைகளை அசட்டை செய்யவும் தூண்டியதால், நிலைகுலைந்து பாவப் படுகுழியில் விழுந்தான். ஒரேவார்த்தையில் சொல்லவேணுமானால், அவன் பெரிய அயோக்கியனும், அக்கிரமியும், வேதமற்ற நாஸ்திகனுமானான்.

ஜயசீலனும், தனபாலனும், நாடகசாலையை விட்டுப் புறப்பட்டு, பட்டணத்தின் மத்தியில் யோக்கியமான வீதியின் வழியாய்ச் சென்று, ஒரு வீட்டின் கதவைத் தட்ட அது உடனே திறக்கப்பட்டது. காவற்காரன் அவர்களை மிகவும் சந்தோஷமாய் வரவழைத்தான். பிறகு மாப்படிகளின் வழியாய் மேல



மாடிக்குச் சென்று, அங்கே அழகாய்ச் சிங்காரிக்கப்பட்ட ஒரு பெரிய அறையில் பிரவேசித்தார்கள். அறை நடுவில் பெரிய மேஜைகள் போடப்பட்டிருந்தன.

மேஜையைச் சுற்றிலும் கனவான்களைப்போலொத்த பெரிய மனுஷர்கள் டம்பமாய் உட்கார்ந்துகொண்டு, ஏதோ நடைபெறவிருக்கும், பெரிய விஷயத்தை எதிர்பார்ப்பவர்கள் போல் காணப்பட்டார்கள். ஒவ்வொருவருடைய பக்கத்திலும் பொன் வெள்ளி நாணயங்கள் குவித்திருக்க, கருப்பு உடையணிந்த ஒருவன், தன் கையில் வைத்திருந்த சீட்டுக்கட்டின் சில கார்டுகளை, மேசையைச் சுற்றியிருந்த ஒவ்வொருவன் பக்கத்திலும் வைத்துச் சில வார்த்தைகளை உச்சரித்தான். இக்கிருத்தியம் நடந்த அடுத்த நிமிஷத்தில் அவன் உதவிக்காரர்களில் சிலர், மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்த சிலருக்கு, நாணயங்களை எண்ணிக் கொடுத்தார்கள். பலரிடமிருந்து குவியலாய் வைத்திருந்த பொன் வெள்ளிப் பணங்களைப் பெற்றுக் கொண்டார்கள். இதே மாதிரி பலதடவை நடந்தது. சாதாரணமாய் சூதாட்டங்களில் நடப்பதுபோல், சிலர் ஜெயமடைந்தால் கொஞ்சம் பணம் ஆதாயமடைந்தும், பலர் தோல்வியடைந்ததால், தங்கள் ஆஸ்திகளையே பறிகொடுத்து, வீடு போய்ச் சேர்ந்தார்கள். (தொடரும்.)

## Here and There.

### நானு சங்கதிகள்.

Notice:—மகா. வந். கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்களுக்கு புதிதாய்க் கொடுக்கப்பட்ட சுதந்தரத்தின் பிரகாரம், இந்தவருஷம் முதற்கொண்டு, பெரிய சனிக்கிழமை ஒருசந்தி, சுத்தபோசனக்கடன் முழுதும் நிறுத்திவிடும்படி நமது மேற்றிராணியார் தமது மேற்றிராசனத்துக்கு உத்தரவு கொடுத்திருக்கிறார்.

Ordination:—பெப்ரவரி-மீ 25-ம் தேதி புதுவை அதிமேற்றிராசனக் கோவிலில், குருமடத்து நாதர்மார்களுக்கு, மகா. வந். புதுவை அதிமேற்றிராணியாரவர்களால் குருப்

பட்டத்துக்கு முந்தின பட்டங்கள் அளிக்கப்பட்டன. சங். பிரான்சீஸ் நொரோனு; சங். லூயிஸ் மஸ்கரேனுஸ் இருவரும் டீக்கன் பட்டம் பெற்றார்கள். இவர்கள் பெங்களூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர்கள். சப்டீக்கன் பட்டம் பெற்றவர்கள் சங். கொர்னெலியுஸ் லொபொ. (பெங்களூர்). சங். மரியசூசைநாதர் (புதுவை). சங். நோவப்ப அலெச்சியுஸ் (சென்னை); சங். பெலவேந்திரம் (கோயமுத்தூர்); சங். மரிய அம்புரோஸ் (கோயமுத்தூர்); சங். பிரான்சீஸ்க் சேவியர் (கோயமுத்தூர்); வேறு நான்குபேருக்கு அக்கொலைட் பட்டமும்; இரண்டுபேருக்கு முதல்பட்டமுமளிக்கப்பட்டது.

அக்கொலைட் பட்டம் பெற்றவர்களுள் (கோயமுத்தூர்) சங். மரியசூசை ஒருவர்.

The Messenger going Strong :—உடுமல்பேட்டை பங்குகுருவானவராகிய சங். D. M. அந்தோனிநாதர் சுவாமியாருடைய நல்ல பிரயாசை முயற்சியினால், உடுமல்பேட்டை, பொள்ளாச்சி, வால்பாறை முதலிய ஊர்களில், நமது சத்திய தூதனுக்கு, 16 சந்தாதாரர்கள் சேர்ந்தார்கள். இன்னும் அதிகம்பேர் சேருவார்கள் என்று, ஷை சங். சுவாமியார் நமக்கு நம்பிக்கை கொடுக்கிறார். "Many thanks"—ஒரு பங்கு விசாரணையில், ஒரு கத்தோலிக்குப் பத்திரிகையானது இடைவிடாத போதகமாகும்.

Nickel Rupees :—சர்க்காரார் நிக்கல் ரூபாய் நாணயங்களை அச்சடிப்பதாக, சில ஜனங்களுக்குள்ளே பிரஸ்தாபம் பரம்பியிருக்கிறதாம். இது பொய்யான சேதியென்றும், அவ்வித நாணயங்களைச் சர்க்காரார், அச்சடிக்கிறதில்லையென்றும் நமக்குத் தெரியவருகிறது.

War Criminals :—நேச தேசத்தவர்கள், ஜெர்மன் சண்டைக் குற்றவாளிகளை, ஜெர்மன் நீதிஸ்தலத்தில் விசாரிக்கும்படி சம்மதித்துவிட்டார்கள். முதலில் தெரிந்தெடுக்கப்பட்ட சில கேஸ்கள்தான் விசாரிக்கப்படும். 46-பேர் வழிகளை விசாரிக்க வேண்டிய ஜாப்தாவை, நேச தேசத்தவர்கள் ஜெர்மனிக்கு அனுப்பியிருக்கிறார்கள்; இவைகளில், பிரிட்டிஷ் 7; பிரான்சு 12; பெல்ஜியம் 15; இத்தலி 4; போலண்டும், ருமேனியாவும் 8; இக்கேசுகள் விசாரணையாகுங் காலத்தில் நேச தேச நியாயவாதிகளும், பிரதிநிதிகளும், வழக்குகளைக் கவனிப்பார்கள்.

---


# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VI.** **May 1920.** **No. 5.**

புத்தகம் **VI.**] FIDES AC ROBUR. [நம்பர் **5.**


## The crying evil of the present day.

### இக்காலத்து விசேஷ தின்மை.

இக்காலத்தில் வழங்கிவரும் பொல்லாப்புகளில், வாலிபர்களுக்குள் கட்டுப்பாடு இல்லாமையால்தான் பெரிய பொல்லாப்பு உண்டாகிறது. அநேகர் அடக்க ஒடுக்கமில்லாமல், தங்களுக்கு இஷ்டமானதெல்லாம் தேடி நடக்கிறார்கள். காதில் விழுகிறதெல்லாம் கேட்டு, கண்ணிற்படுகிறதெல்லாம் பார்த்து, மனசில் வருகிறதெல்லாம் நினைத்து, நினைக்கிறதெல்லாம் ஆசித்து, ஆசிக்கிறதெல்லாம் செய்து, தங்கள் சுய பட்சத்தைத் தேடி நடந்துவருகிறதைக் காண்கிறோம். ஆகையால், உலகம், பசாசு, சரீரம் முதலிய தந்திர சோதனைகள் நேரிடுங் காலத்தில், அந்த வாலிபர்கள், அவைகளை ஜெயிக்க யாதொரு பிரயாசையும்படாமல், அவைகளுக்கு அடிமைகளாய் உட்படுகிறார்கள். அப்படி துர்க்குணங்களால், வாலிபரின் இருதய

மும் மானமும் கெட்டுப்போன பிறகு, அவர்களுடைய நடத்தையைச் சீர்படுத்துவது மகா அருமையாகும். கெட்டுப்போன பால் நல்ல பாலாகுமா?

சில வாலிபர்கள் வேத சத்தியங்களைப் படித்துத் தெரிந்துகொண்டிருக்கலாம். அடிக்கடி பாவசங்கீர்த்தனஞ் செய்து, நன்மை வாங்கப் பழக்கமுள்ளவர்களாயிருக்கலாம். ஆனாலும், துஷ்ட சிநேகிதர்களுடன் கூடி, துர்ப்புத்தி சொல்லுவதினாலும், துர்ப்போதனைக்குக் காதுகொடுப்பதினாலும், துர்ப்போதனையைப் போதிப்பதினாலும், கெட்டுப்போகிறார்கள்; அவர்கள் உத்தியோகஞ் செய்யும்போது அநியாயஞ் செய்யச் சமயம் கிடைத்ததோ, ஞாயிற்றுக்கிழமைப் பூசைக்குப் போக சோம்பல் உண்டானதோ, யாதொரு தகாத காரியத்தைச் செய்ய எண்ணம் வந்ததோ, சோதனையைத் தடுக்க முடியாமல், தங்களிடம், விசுவாசமும், தைரியமும் இல்லையென்றாற்போல, தங்கள் சுய சுகபோகங்களைத் தேடி அடையப் பிரயாசப்படுகிறார்கள். கிறீஸ்தவ ஜீவியம் சுய பரித்தியாக ஜீவியம் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். அதற்குக் காரணமென்னவென்றால், பிள்ளைகள் வீட்டிலே தக்க படிப்பினையைப் பெற்றுக்கொள்ளவில்லை. பெற்றோர் தங்கள் மக்களுக்கு, உண்மையும், நியாயமுமான புண்ணிய முயற்சிகளைச் செய்யப் பழக்குகிறதில்லை. புண்ணியமாவதென்ன? நன்மை செய்வதற்கு மனிதனுடைய ஆத்துமத்தில், நிலைமையாயுள்ள மனச்சார்பும், நற்குணமும் என்னப்படும். அப்பியாசத்தினாலும், பிரயாசத்தினாலும் புண்ணியம் உண்டாகும்.

அந்தந்தக் காரியத்தைச் செய்வது, அல்லது, விலக்குவது கடமையென்று அறிந்துகொண்டு, தங்கள் கடமையை நிறைவேற்றவேணுமென்கிற நல்ல கருத்துடன் பிள்ளைகள் நடந்துவர அப்பியாசம், செய்து வருவார்களானால், பிற்காலத்தில் மனத்தைரியமுள்ள கிறீஸ்துவர்களாவார்கள்.

அந்தந்தப் பிள்ளை பக்தியுள்ள பிள்ளை என்று சொன்னால் மட்டும் போதாது; அந்தந்த வாலிபன், அடிக்கடி நன்மை வாங்குவது, வெகு நல்லதுதான். ஆனால், மனித முகத்தாட்சண்யத்துக்காக நடவாமல், தனக்கே கடமை உண்டென்று அறிந்து, உணர்ந்து நடக்கிறானோ? தந்திரசோதனை நேரிடும்போது, சர்வேசுரனுக்குத் துரோகம் செய்யக்கூடாதென்று



எண்ணி, தன்னைத்தானே பரித்தியாகஞ் செய்து, வருஞ் சோதனையைத் தடுக்க உறுதியான மனதோடு பிரயாசப்படுகிறானோ அப்படிப்பட்டவன் மெய்யாகவே புண்ணியவான் என்று சொல்லப்படுவதற்குத் தகுதியுள்ளவனாகிறான். அவனுக்கு இந்த உறுதியான கருத்து இல்லாதேபோனால், அவன் தினந்தோறும் நன்மை வாங்கினபோதிலும் அவனிடத்தில் மெய்யான புண்ணியமிருக்கமாட்டாது. அப்படிப்பட்டவன் தனக்குச் சோதனை வருங்காலத்தில், வேதத்தை மறுதலிப்பான், அல்லது அதை அவமானப்படுத்துவான்.

ஆகையால் இரண்டு முக்கியமான காரியங்களைக் கண்டறிய வேண்டியது: ஒவ்வொருவனும், அநுதினமும, சாதாரண காரியங்களில் முதலாய், தன்னைத்தானே பரித்தியாகம் செய்து புண்ணிய முயற்சிகளைச் செய்யவேணும். புண்ணியமானது கானலில் வளரும் செடியைப்போல் தானாய் முளைக்கிறதில்லை. ஆனால், அது தோட்டத்தில் முளைக்கிற பயிரைப்போலிருக்கிறது. புண்ணியத்தைப் பயிரிடவேண்டுமானால் முந்த முந்த தன் ஆத்துமத்தைச் சரியாய்த் திருத்தவேண்டும். பிறகு, தன் ஆசாபாசங்களையும், பஞ்சேந்திரியங்களையும அடக்கவேண்டும். தினந்தோறும, கஷ்டப்பட்டு முயற்சி செய்து, நன்றாய்ப் பயிரைக் காப்பாற்றவேண்டும்.

2. ஒருவன் தன் ஆத்துமத்தில் புண்ணியத்தைக் காப்பாற்றவேண்டுமானால், பாவச் சமயங்களைவிட்டு விலகி, தந்திர சோதனைகளுக்கு இடம் கொடுக்காமல், எந்நேரமும் கட்டும, காவலும் எச்சரிக்கையுமாயிருக்கவேண்டியது மிக்க அவசரம்.

ஒவ்வொருவனும் இடைவிடாமல் வேண்டிய ஆசையோடும் உறுதியான மனதோடும், புண்ணிய ஒழுக்கத்தை அநுசரிக்கத் தக்க முயற்சி செய்வானாகில், இவ்வுலகில் புண்ணிய வரங்களையும், மோட்சத்தில் பாக்கியங்களையும், பரலோகத்தில் முத்தர்களுடன் அதிக சம்பாவனைகளையும்பெற்று, என்றென்றும் கடவுள் தரிசனங்கண்டு களிகூர்ந்திருக்கக் கொடுத்து வைத்தவர்களாவார்கள். "விசுவாசத்தின் கேடயந்தரித்துக் கொள்."

(சத்திய நேசன்.)

## The Little Garden of Roses.

### சிறு ரோஜாத் தோட்டம்.

## மலர். 11.

### 'Trust in the Lord and do good.' (Ps. XXXVI. 3.)

### 'ஆண்டவர்பேரில் நம்பிக்கையைவைத்து நன்மையைச் செய்.' (தாவீது. 36-ம் அதி. 3-ம் வச.)

1. ஒருவனுக்கு இவ்வுலகில் எவ்வளவுதான் திரவிய சம்பத்தும், மகிமை பெருமையும், இன்பசுகமுமிருந்தாலும் அவைகளால் சந்தோஷிக்காமலும், தனது உற்ற நண்பர்களின் மீது தனது நம்பிக்கையை வைக்காமலுமிருக்கக்கடவான். ஏனெனில் இப்பிரபஞ்ச வஸ்துக்களெல்லாம் மாயைகளாயும், ஆத்துமத்துக்கு இடறலாயுமிருக்கின்றன. ஆனதுபற்றி சர்வேசுரன்பேரில் தனது பூரண நம்பிக்கையை வைத்து, வேண்டும்போது அவருடைய அடைக்கலத்தை நாடிச்செல்லுகிறவனை அவர் எல்லா ஆபத்துக்களினின்று கைதூக்கி இரட்சிப்பார்.

நன்னடக்கையுள்ளவனும், எல்லா விஷயங்களிலும் பிறருக்கு சுகிர்த மாதிரிகை காண்பிக்கிறவனும், ஒருவனையும் மனநோகப்பண்ணாமலும், தனது துர் இச்சைகளை அடக்கி, பாவ மாசற்றவனாய் ஒழுகுகிறவன் எவனோ அவன் என்றும் நித்திய சமாதானமுள்ளவனாயிருப்பான். உன் வீட்டின் கதவை மூடிப் படுத்துக்கொண்டால் நீ சமாதானமாய் நித்திரை செய்வாய்.

2. பசாசு உனக்கு வருவிக்கிற தந்திர சோதனைகளை எதிர்த்துத் தாக்கக்கூடிய கேடயமாகும்பொருட்டு நீ நாள்தோறும் யாதாமொரு புண்ணியக் கிரிகையைச்செய்து, சர்வேசுரன்பேரில் முழு நம்பிக்கைவைத்து, ஜெபத்தால் அவருடைய உதவியைக் கேட்பது உனது கடமை. சேசுநாதர்சுவாமி படிப்பித்த ஜெபத்தில், 'எங்களைச் சோதனையில் பிரவேசிப்



பியாதேயும்' என்று நாம் பசாசின் தந்திர மாய்கைகளுக்குள் சிக்கி அகப்படாதபடி மோட்ச பிதாவிடம் பிரார்த்திக்கக் கற்பிக்கிறார். சோதனைவேளையில் தேவ உதவியைத் தேடாமல் நீ எம்மாத்திரம் அசட்டையாயிருப்பாயோ அம்மாத்திரம் நாளுக்குநாள் பலவீனனாகச் சத்துரு உன்பேரில் வல்லபமுள்ளவனாவான். தந்திரசோதனை வரும்போது விழித்திருந்து ஜெபம்செய்து அவைகளோடு எதிர்த்துப் போராடாதவனுக்கு ஐயோ கேடாம்!

இவ்வுலகில் துன்பதுரிதங்களில்லாமல் புண்ணியத்தைச் சம்பாதிக்க முடியாது. அவைகளன்றிப் புண்ணிய சாங்கோபாங்கநெறியில் சாகுமட்டும் வழுவாமல் நிலைநிற்பதும் ஒருவனாலும் கூடாதகாரியம். ஒரு பட்சிக்குக் கூட்டு வாசம் பிடிக்காததுபோல இலௌகீக சுகபோகங்களில் அழுந்தி நிலைதடுமாறி நிற்கும் மனிதனுக்குச் சுகிர்த நடையும் ஏகாந்த,வாசமும் பிடிக்காது. உனது சத்துவத்துக்கு மேற்பட்ட தந்திர சோதனை வந்தாலும், அல்லது பசாசு நெருங்கி உன்னைக் கீழே தள்ளப் பிரயாசப்பட்டாலும், அல்லது உன்னை யாதாமொருவன் பரிகசித்துத் தூசித்து நிந்தையாய்ப் பேசினாலும், மகனே! நீ அவநம்பிக்கைப்படாமல் மாறாத தைரியமுள்ளவனாயிருப்பாயாக. ஏனெனில் உன்னுடைய பாவங்கள் மனிதனுடைய கண்டனையையும் வெறுப்பையும் அடைவதென்றால் அது ஞாயமேயென்று உணர்ந்துகொள். ஆனதுபற்றி உன்னை உபாதிக்கிற தந்திரசோதனையில் மன அமரிக்கையாயிருந்து, 'ஆண்டவரே! நீர் என்னைத் தாழ்த்தினதே நல்லது. அதனால் உமது ஞாயப்பிரமாணங்களைக் கற்றுக்கொள்வேன்' என்று தாவீது இராஜா சொன்னதுபோல நீயும் சொல்லுவாயாக.

ஒருவன் துன்பதுரிதங்களாலும், தந்திரசோதனைகளாலும் அலைக்கழிக்கப்படும்போது தனதாத்துமத்தை சர்வேசுரனுடைய கரத்துக்குக் கீழ்ப்படுத்தக்கடவான். ஏனெனில் அப்போதுதான் அவன் தன் எளிமைத்தனத்தையும், தனது பாவங்களின் கனகனத்தையும் அறிந்து, சர்வேசுரனின் விசேஷ உதவியில்லாமல் தன்னால் ஒன்றும் செய்யமுடியாதென்று கண்டுகொள்ளுகிறான்.

தனது எஜமானனின் சொத்துக்களையெடுத்து அவைகளைத் தனது பற்றுதலுக்கிசைந்தபிரகாரம் உபயோகித்து அதனால்

கர்வங்கொண்டு மற்றவர்களை அலட்சியஞ்செய்கிறவன் நன்றி கெட்டவனும் குருத்துரோகியுமாவான்.

3. தன் தோழர்களையும் தன்கூட வேலைசெய்வோரையும் அதிக இழிவாக எண்ணுகிறவனும், அல்லது அவர்களைவிடத் தான் மேலானவனென்று நினைக்கிறவனும் சர்வேசுரனையும் அவருடைய அர்ச்சியசிஷ்டவர்களையும் அவமதிக்கிறவன் போலாவான். ஏனெனில் மனிதன் தன்னிடத்திலுள்ள குற்றங்குறைகளைச் சற்றாகிலும் ஆராய்ந்தறிந்து அவைகளுக்காக மனஸ்தாபப்படாமலும், தனக்கு வரும் சோதனைகாலங்களில் விழிப்பாயிருந்து ஜெபதபத்திலும், மெய்யான தாழ்ச்சியிலும் நிலைத்திருந்து, உத்தம சிரவணமுள்ளவனாய் ஜீவித்துப் பிறர் சிநேகமும் பொறுமையுமுள்ளவனாய் நடந்துகொண்டு வராமையே இதற்குக் காரணமாகும்.

ஒவ்வொருவனும் தனது சுமையைச் சுமப்பதே போதுமானது; அப்படியிருக்க மற்றவர்களுடைய நடத்தையை ஆராய ஆசைகொள்வதேன்? உன்னால் சுமக்கக்கூடாத சுமையை உனது தலைமேல் தூக்க முயற்சிப்பதேன்?

புறத்தியாரால் ஒருவனுக்கு வரும் அவமானத்தைச் சகித்துக்கொண்டு அவன் குற்றங்களை நல்ல மனதோடு பொறுத்துக்கொள்ளவும், ஒருவனுக்கு விரோதம் செய்கிறவனைக் கோபித்துக்கொள்ளுகிறதற்குப்பதிலாய் வெகு எளிதாய் அவனுக்கு இரக்கங் காண்பிக்கவும், தீயநெறியில் நடப்பவனுக்கு மனத்தாழ்ச்சியையும், சமாதானக் குணத்தையும் கற்பிக்கும் பொருட்டும், சில சமயங்களில் சர்வேசுரன் ஒருவனுடைய குற்றங்குறைகளையும், அசட்டைத்தனங்களையும் பகிரங்கப்படுத்துகிறார்.

அவன் தன் அநுபவத்தைக்கொண்டு சொல்லுகிறதாவது, ‘இவன் சம்மனசல்ல. மனிதன்தான். எனக்குச் சம்பவித்ததுபோலவே இவனுக்கும் சம்பவிக்கக்கூடும். நாமெல்லோரும் சகோதரர். என் எண்ணம் கெட்டதாயிருந்தது. அவன் நினைப்பு நல்லதாயிருக்கக்கூடும். ஒருபோதும் வழுவாதவரும் யாதொரு தப்பிதம் செய்யாதவரும் கடவுளே!’ என்று சொல்லுகிறான்.

உனது சகோதரன் தப்பிதம் செய்யும்போது அவனைப் பரியாசம் செய்வதேன்?



‘ஆகையால் நிற்கிறதாக எண்ணுகிறவன் விழாதபடி பார்த்துக்கொள்வானாக’ நீ தவறி விழுவது பரியாசத்துக்குக் காரணமா? எல்லாருமறிய ஒருவன் படும் அவமானமானது அவனிடத்தில் ஏற்படும் வீண் பெருமைக்காதாரமான உணர்ச்சிகளை அறவொழிக்கிறது.

(இன்னும் வரும்.) S. S. G.

---

## The late Revd. Father Aloysius.

## காலஞ்சென்ற சங். ஞானப்பிரகாசநாதர் சுவாமியார்.

மார்ச்சு-மீ 26-உ சங். ஞானப்பிரகாசநாதர் சுவாமியார், தமது 87-ம் வயதில், விருத்தாப்பியதசையில், பலவீனத்தினால் மரணமடைந்தார்.

இவர் 1833-ல் பெங்களூரில் பிறந்தார். அவர் தமது 13-ம் வயதில், மகா வந். தெ. பிரெசிலக் (de Bresillac) ஆண்டவர் காலத்தில், சங். அந்தோனிநாதர், சங். மரியூணநாதர், சங். சவரிமுத்துநாதர் இவர்களோடே, 1846-ம் வருஷத்தில், கோயமுத்தூர் குருமடத்தில் சேர்ந்தார். அவர் குருமடத்தில் சேரும்போது அதில் சில மாணாக்கர்கள் முன்னதாகச் சேர்ந்திருந்தார்கள். அவர்கள் பெரிய அருளப்பன், சங். அருளாந்துநாதர், சவரிமுத்து, சங். சவரியார், சின்னராயப்பன், சங். இராயப்பநாதர் இவர்கள்தான். இவர் 1862-ம் வருஷத்தில், கோயமுத்தூரில் மகா வந். கொதெல் (Godelle) ஆண்டவர் கையால், குருப்பட்டம் பெற்றார்; அக்காலத்தில், இப்போதிருக்கும், மேற்றிராசனக்கோவில் இல்லாததினால், புரோகியூர் (procure) ஒரு அறை கோவிலாக உபயோகிக்கப்பட்டு அதிலே குருப்பட்டத்தின் திருச்சடங்கு நிறைவேற்றப்பட்டது. கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சுதேச குருக்களில் முதலானவர்களுக்குள் அவர் ஒருவர்

அவருக்கு முந்தி 1858-ம்௵ இம்மேற்றிராசனத்தின் ஆரம்ப சுதேசக் குருக்களாகிய சங். அருள்நாதர் சுவாமியாரும், சங். சவேரிநாதர் சுவாமியாரும், குருப்பட்டம் பெற்றார்கள். அக்காலத்தில், கிறீஸ்துவர்களும், குருக்களும், கோவில்களும், வெகு கொஞ்சமாயிருந்ததினால், குருக்கள் கிறீஸ்துவர்களை விசாரிக்கவும், தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றவும், வெகுதூரம் கட்டைவண்டியில் வெகு கஷ்டத்துடன் பிரயாணஞ் செய்தார்கள்.

அப்படிப்பட்ட நிலைமையில் சங். ஞானப்பிரகாசநாதர் சுவாமியார், தமது அந்தஸ்தின் கடமைகளை, மனத்தைரியத்தோடும், பத்திப்பற்றுதலோடும் நிறைவேற்றினார். அவ்விதமே, தாராபுரம், பாலக்காடு, சித்தூர், பிலியங்குளம் இது முதலிய பங்கு விசாரணைகளை ஒன்றன்பின் ஒன்றாக, அன்போடும், விவேகத்தோடும், நடத்தி வந்தார். அவர் இருந்த ஷை ஊர்க் கிறீஸ்துவர்கள், அவரை மறக்கவில்லை. மறக்கவும் மாட்டார்கள். அவருடைய குருப்பட்டத் தங்க ஜூபிலி 1912-ம்௵ செப்டெம்பர்-௴ பிலியங்குளம், அர்ச். அந்தோனியார் கோவிலில், வெகு ஆடம்பரத்தோடு கொண்டாடப்பட்டது. அந்த சந்தோஷமான நாளில், அவர் பெற்ற பெரும் பாக்கியம் யாதெனில், நமது மேற்றிராணியாராகிய மகா கனம் பொருந்திய (A. Roy) அகுஸ்தின் ருவா ஆண்டவரவர்கள் கேட்டுக்கொண்டதின் பேரில், அர்ச். பாப்பாண்டவராகிய 10-ம் பத்திநாதர் தமது இன்பமான படத்தோடுகூட தமது பரிபூரண ஆசீர்வாதத்தையும் எழுதியனுப்பினார். அந்த ஜூபிலி சமயத்தில், சங். ஞானப்பிரகாசநாதர் சுவாமியார், ஓர் நேர்த்தியான பிரசங்கம் செய்து, அங்கிருந்த எல்லோருக்கும் தகுந்த புத்திமதிகளைச் சொன்னார். தாம் சிறுபத்திலிருந்து பார்த்துவந்த காரியங்களை ஞாபகப்படுத்தி, "கடந்த 50-௵ காலமாக அந்நியதேசத்து போதகர்சபையைச் சேர்ந்த மேற்றிராணிமார்களும், குருமார்களும், இந்த கோயமுத்தூர் மேற்றிராசனத்தில் சத்திய வேதத்துக்காகச் செய்த, நல்ல வேலைகளுக்கும், கிரிகைகளுக்கும், பட்டனுபவித்த கஷ்டங்களுக்கும் நானே சாட்சி."

"கிறீஸ்துவர்களுடைய தொகை விருத்தியாகி, அநேக கோவில்களும், பள்ளிக்கூடங்களும் கட்டப்பட்டன. கோயமுத்தூரில் இப்போது இருக்கிற நற்கிருத்தியங்கள் எல்லாம் தோட்டத்தில் பயிர் முளைக்கிறப்போலே, முளைக்கிறதைக்



கண்டேன். மேற்றிராசனக்கோவில், குருமடம், சீர்மைக் கன்னியாஸ்திரிமடம், நாட்டுக் கன்னியாஸ்திரி சபையும், மடமும், அர்ச். மிக்கேல் பாடசாலையும், தர்மமடம், போர்டிங்கு மடம், அர்ச். சூசையப்பர் கைத்தொழிற் பாடசாலை, இது முதலியவை ஒவ்வொன்றாய், எழுந்திருக்கிறதைக் கண்டேன். மற்ற ஊர்களிலும் எத்தனையோ கோவில்களும், பள்ளிக்கூடங்களும், தர்ம வேலைகளும் செய்யப்பட்டன. அதற்காக, நாம் எல்லோரும் முதலாவது சர்வேசுரனுக்கும், இரண்டாவது அந்நிய தேச போதகர்சபையின் மேற்றிராணிமார்களுக்கும், குருக்களுக்கும், என்றென்றைக்கும், நன்றியறிதலாயிருக்கக் கடவோம்," என்று சொன்னார்.

சங். ஞானப்பிரகாசநாதர் சுவாமியார், ஷை வேலைகளுக்குச் சாட்சியாயிருந்ததுமல்லாமல், தம்மாலானமட்டும், அவைகளின் பங்காளியாகவுமிருந்தார்.

1917-ம்௵ விருத்தாப்பியத்தின் நிமித்தம் அவர் பங்கு விசாரணை வேலையை நடத்தச் சக்தியற்றவரானபோது, மகா வந். மேற்றிராணியாரவர்கள் கோயமுத்தூருக்கு அவரை வரவழைத்துக்கொண்டார். அவ்விடத்தில் அவர் பக்திக்கடுத்த ஜெபத்தியான முறைகளைச் செய்து, தமது அந்திய நாட்களை ஒடுக்கத்திற் செலவழித்தார்.

கடைசியாக 1920-ம்௵ மார்ச்சு-௴ 26-௳ வெள்ளிக்கிழமைக் காலை 7 மணிக்கு தமது விருத்தாப்பியதசையில், பலவீனத்தினால் வெகு அமரிக்கையாக கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அடுத்தநாட் காலையில் மகா கனம் பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள், அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காகப் பாட்டுப்பூசை செய்தபிறகு கல்லறைக்குப் போய் அவரை நல்லடக்கமுஞ் செய்தார்.

ஷை காலஞ்சென்ற நல்ல குருவாகிய சங். ஞானப்பிரகாசநாதர் சுவாமியாரைப்போலே, சர்வேசுரன் இந்தியாவுக்கு, அநேக பக்தியுள்ள குருக்களைக் கொடுத்துக் கிருபை செய்தருளுவாராக!

**R. I. P.**

# History of the Diocese of Coimbatore.

## கோயமுத்தூர் மேற்றிராசனப் பாண்டிய வர்த்தமானம்.

### முதல் அதிகாரம்.

*அர்ச். தோமையார் நமது மேற்றிராசனத்துக்கு வந்தாரா?*

எத்தேசத்து சத்திய திருச்சபையின் சரித்தையைப்பற்றி வரைய வேண்டியதாயிருந்தாலும் அப்போஸ்தலர் காலந்தொட்டு எழுதவேண்டியது அவசியம்.

அவ்வாறே நமது மேற்றிராசனத்து சரித்தையை அப்போஸ்தலிக் காலந்தொடங்கி சற்று பார்க்கலாம்.

போன மாதத்துப் பத்திரிகையில் வாசித்த பிரகாரம் அர்ச். தோமையார் சிந்து தேசத்தின் மேற்கு கடல் துறைமுகத்தில் இறங்கிப் பிரசங்கித்தார், என்பது பாரம்பரைச் சத்தியம். அவர் தென்மேற்கு கடல் பாகங்களில் பிரசங்கித்த பிறகு தென்கிழக்கு பாகங்களுக்கும் போயிருக்கிறார் என்பது நிச்சயம். அதெவ்வாறெனில் சென்னைக்கடுத்த பரங்கிமலையில் (Saint Thomas Mount) ஓர் சிறிய கோவில் உண்டு. அம்மலையின்மேல அர்ச். தோமையார் தன் முன் வைத்து வேண்டிக்கொண்டிருந்த கல் சிலுவையை இந்நாள்பரியந்தம் காப்பாற்றி வருவதாக பாரம்பரைச் சத்தியம்.

அவர் அம்மலையின்பேரில் வேண்டிக்கொண்டிருந்த சமயத்தில் அவரைச் சிறை பிடித்து வரும்படியாக அவ்வூர்ச் சிற்றரசன் போர்வீரர்களை அனுப்பினான். இவர் தப்பி ஓடி மைலாப்பூருக்கு அருகாமையிலிருக்கும் சிறு மலையின் (Little Mount) ஓர் குகையில் மறைந்துகொண்டார். அக்குகையிலிருந்த சமயத்தில் முதலாய் தமதுபேரில் இரக்கப்பட்டு மறைவாய்த் தம்மைப் பார்க்கவந்த அனேகர்களுக்கு தமது இக்கட்டுகளைப் பாராமல் சத்திய திருச்சபையைப் போதித்தார். ஞானஸ்நானம் கொடுக்க ஜலம் கிடையாததைப்பற்றி சர்வேசுரனுடைய வல்லமையினால் அற்புதமாக ஓர் பாறையினின்று ஊற்று கிளம்பச்செய்து, அனேகர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.



அவ்விடத்தில் மறைந்திருப்பதை அஞ்ஞானக் குருட்டாட்டத்தில் அமிழ்ந்திருந்த அரசன் தெரிந்து அவரைப் பிடித்துக் கொல்லும்படியாக, கொலைஞர்களை அனுப்பினான். அவர் தப்பி ஓடும் மார்க்கத்தில் ஈட்டியினால் குத்தப்பட்டு வேதசாட்சியாக மரணமானார்.

அவர் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்ட அவ்விடத்தில் ஆகாயத்தை அளாவிக்கொண்டிருக்கும் மகத்தான மேற்றிராசனக் கோவிலைப் பார்க்கலாம். அக்கோவிலின் மத்தியில் அர்ச். தோமையாரின் கல்லறைப் பீடத்தையும் பார்க்கலாம். நீங்கள் யாராவது சென்னைக்குச் செல்லுவீர்களேயாகில் இத்திருஸ்தலத்தைக் காணாமல் திரும்பவேண்டாம். பக்தி நிறைந்த மகத்தான காட்சி இது!

இக்கோவிலைச் சந்திக்கும்பொழுது அதன் மத்தியில் கட்டப்பட்டிருக்கும் கல்லறைப் பீடத்தையும் கண் குளிரக் கண்டு நமது சிந்து தேசத்திற்கென்று தமது இரத்தத்தைச் சிந்தி உயிர் துறந்து வானுலகத்தில் நமக்காக பரிந்துபேசிக் கொண்டிருக்கும் அவரைப் பிரார்த்திப்பது வேறு பலன்கள் நிறைந்த கிரியையாம். (இன்னும் வரும்).

தேசாபிமானி.

## Correspondence.

கோயம்புத்தூர் மேற்றிராசனக் கோவில், கனம் பொருந்திய சங். (Rev. L. Bechu, V. G.) எல். பெஷ் சுவாமியாரவர்கள் நடத்திவரும் சத்திய தூதன் என்னும், மார்ச்சு மாத—மாதாந்தரப் பத்திரிகை என் கைக்குக் கிடைத்து, அதில், 59-வது பக்கம், கொடிவேரிப் பங்கு விசாரணைக்குட்பட்ட சிக்கரசம்பாளையம் என்னும், ஒரு ஊர் சமாச்சாரத்தை வாசித்து, அதிக சந்தோஷமடைந்தேன். ஷை ஊரில் கோவில் ரொம்பவும் சிறியதாகவும், ஜனங்களுக்கு நெருக்கமாவும், இருந்தபடியால், அவ்வூர்ப் பங்கு விசாரணை செய்துவரும் (Rev. J. M. Goucher) சங். அருள்மரியநாதர் சுவாமியாரவர்களின் உற்சாகத்தால், ஒரு போதுமான புதுக் கோவில் கட்ட சென்ற 24 வருடங்களாக, ஓர் பண்டு ஏற்பாடுசெய்து, அவ்வூர் முக்கியஸ்தர்களான கோவில் மணியம், வேளாங்கண்ணி முதலி 1, நாட்டாண்மை இராயப்ப முதலி 2, பெரியதனம் சவேரியப்ப முதலி 3, ஆக இவர்களின் விடாமுயற்சியாலும், ஒரு நல்ல புதுக்கோவிலையும், ஒரு பள்ளிக்

கூடத்தையும் கட்டி முடித்து, மேற்கண்ட தர்ம வரியிலிருந்து, வேறு ஒரு பண்டும் ஏற்படுத்தி, அந்தப் பண்டின் வட்டியைக் கொண்டு அவ்வூர்ப் பள்ளிக்கூடத்தையும் நடத்திவருவதாகக் கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆனால், ஷெ மூன்று முதலிமார்களும் காலஞ்சென்றுவிட்டதைப்பற்றி விசனித்தபோதிலும், கடவுள் அவர்களுக்கு நித்திய சமாதானத்தைக் கட்டளையிட்டருள 3 பர. 3 பிரி. 3 கிரி. வேண்டிக்கொள்ள எல்லோரையும், மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கோவில் விளங்க, குடி விளங்க" என்பதுபோல, ஷெயூர் கிறீஸ்துவர்கள், ஏழைகள் என்றே சொல்லவேண்டியிருக்கிறது. இருந்தாலும் அவர்கள் முன் செய்துவந்த நெசவு தொழில் ஜீவனத்துக்குப் போதாமல் இருந்தபடியால், தயவுள்ள கடவுள் அவர்களுக்கு ஒரு நல்ல வழியைக் காட்டி, பூமிகளைப் பிடித்து, நெற்றி வியர்வை நிலத்தில் விழ இராப்பகலாய்ப் பாடுபட்டு, இப்பஞ்ச காலத்தில் சகலரும் ஒற்றுமையுடன் நடந்து, ஷெ தர்மத் தண்டல் கடந்த 24 வருஷங்களாக, விடா முயற்சியுடன், சரிவர நடந்துவந்து, கடைசியாக நற்காரியங்களில் முடிவு பெற்றதை நினைக்கும்போது, கடவுளின் விசேஷ கிருபையென்றே எண்ணவேண்டும். ஷெயூர் விசாரணை, சங். பங்கு சுவாமியாரவர்களுக்கும், சகல கிறீஸ்துவ சகோதர குடும்ப கோத்திரங்களுக்கும், சகல பாக்கியங்களும், தீர்க்காயுளும் பெருகவும் உண்டாகவென்று, நித்திய கடவுளைப் பார்த்துப் பிரார்த்திக்கின்றேன். ஆனால் கோயம்புத்தூர் மேற்றிராசனத்துக்குட்பட்ட இன்னும் சில ஊர்களில், கோவில்கள் அதிக கேவல ஸ்திதியிலும், பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்கள் சரிவர நடந்துவராமலிருப்பதையும், ஊர்களில் தக்க சமாதான ஒற்றுமையுமில்லாமலிருப்பதையும், கேள்விப்பட்டும், கண்ணாரப் பார்த்தும், மிகவும் பரிதாபப்படுகிறேன். ஷெயூர்களுக்கு எப்போது நல்ல காலம் வருமோ தெரியவில்லை. சிக்கரசம்பாளையத்தைவிட சில ஊர்கள் நல்ல ஸ்திதியிலிருந்தும் நற்காரியங்களைக் கொஞ்சமேனும் கவனியாமலிருப்பது மிகவும் பரிதாபமே! "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்"—"ஊக்கமது கைவிடேல்," என்பதுபோல, அந்தந்த ஊர்களில் இருக்கும் பெரியதனக்காரர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும், தக்க சமாதானத்துடனும் விடா முயற்சியுடனும் கடவுளை நம்பி, ஒரு காரியத்தை நடத்துவார்களேயாகில், தேவானுக்கிரகத்தால், அநுகூலம் ஆகும் என்பதில் கிஞ்சித்தேனும் தடையிராது. மேலும் சிக்கரசம்



பாளையத்தில், ஒரு பண்டு ஏற்படுத்தி, அதன் வரவைக் கொண்டு, ஒரு பள்ளிக்கூடமும் நடந்துவருகிறதென்றால், எவ்வளவு நன்மையான காரியம். இதுபோலவே, மற்ற ஊர்களிலும் ஒரு பண்டு ஏற்பாடுசெய்து, அதின் வரவைக் கொண்டு, கூடியவரையில், பிள்ளைகளைப் படிப்பித்து வருவார்களேயானால, அந்தந்த ஊர்களிலிருக்கும், பங்கு சுவாமிமார்களுக்கும், கிறீஸ்துவர்களுக்கும் ஏழைகளுக்குமுள்ள கஷ்டங்கள் நிவர்த்தியாகி, நன்மைகள் பெருகும் என்பதில் சந்தேகமில்லை.

M. M. S. ஓர் கத்தோலிக் கிறீஸ்துவன்.

## Tit for tat

## அடிக்கும் பிடிக்கும் சரி.

பதிதன்.—கத்தோலிக்கராகிய நீங்கள் பூசை நேரத்திலே அப்பம் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருச்சரீரமாக மாறிப்போகிறதென்று சொல்லுகிறீர்களே, அது படிப்படியாய் மாறிப்போகிறதா, அல்லது, திடீரென மாறிப்போகிறதா?

கத்தோலிக்கன்.—அது திடீரென மாறிப்போகிறது.

பதிதன்.—ஆனால் எந்தத் திடமான நேரத்திலே மாறிப்போகிறது?

கத்தோலிக்கன்.—குருவானவர் நடுப்பூசையில், தேவவசீகர வார்த்தைகளை உச்சரித்தவுடனே அப்பம் சேசுநாதருடைய திருச்சரீரமாக மாறிப்போகிறது.

பதிதன்.—குருவானவர் கடைசி வார்த்தை சொன்னவுடனே மாறிப்போகிறதா?

கத்தோலிக்கன்.—அப்படித்தான்.

பதிதன்.—அப்படியானால், கடைசி வார்த்தையினாலேதான் மாறிப்போகிறதே தவிர, மற்ற வார்த்தைகளுக்கு யாதொரு பலன் இல்லை. "**இது**" என்றால் ஒன்றுமில்லை; "**இது என்னுடைய**" என்றால், இன்னும் ஒன்றுமாகவில்லை. "**இது என்னுடைய சரீரம்**" என்றால், எல்லாம் உடனே மாறிப்போச்சுது;—என்ன விநோதமாயிருக்கிறது!

கத்தோலிக்கன்.—இது சர்வ நியாயமாயிருக்கிறது.

பதிதன்.—எனக்கு அர்த்தமாகவில்லை, தயவுசெய்து விபரஞ் சொல்லும் ஐயா?

கத்தோலிக்கன்.—சரி; சற்றுக் கவனியும், நான் உன்னைப் பார்த்து, "நீ" என்று சொன்னால், அர்த்தம் ஒன்றுமில்லை. "நீ ஒரு" என்றால் ஒன்றுமில்லை. "**நீ ஒரு பெரிய**" என்றால் ஒன்றுமில்லை. "**நீ ஒரு பெரிய மடையன்**" என்றால், திடீரென உனக்கு அர்த்தமாச்சுது அல்லவா! Olim.

## Page for the Young.

### பிள்ளைகளின் பக்கம்.

## Do not utter falsehood.

### பொய்மொழி புகலேல்.

சில வருஷங்களுக்குமுன் நியூயார்க்கிலிருந்து லிவர்பூலுக்குப் புறப்பட்டு மூன்று நாள் பிரயாணம் வந்த ஒரு ஆங்கிலேய புகைக்கப்பலில் ஏற்றுமதிச் சரக்குகளின் நடுவே ஒரு சிறிய பையன் கண்டுபிடிக்கப்பட்டான். அவனுக்குத் தாய்தந்தையராவது சகோதரன் சகோதரியாவது சிநேகிதராவது ஒருவரும் அங்கில்லை. அவன் யார்? எங்கிருந்து வருகிறான்? எவ்விடத்துக்குப் போகிறான்? என்றும் தெரியாது. அவன் பத்து வயதுடையவன். அப்பையன் கந்தை வஸ்திரத்தை உடுத்திக்கொண்டிருந்தானாயினும் அவன் முகத்தில், மாசின்மையும், நேர்மையும் அழகும் ஜொலித்தது. அவனைப் பிடித்துக் கப்பலதிகாரியிடம் கொண்டுபோய்விட்டார்கள்.

கப்பற்றலைவன் சிறுவனைப் பார்த்து, 'அடே, பயலே! என் அநுமதியின்றி எப்படி இக்கப்பலில் பிரவேசித்தாய்?' என்று கேட்க, சிறுவன் மறுமொழியாக, 'என் மாற்றாந்தாய் என்னைத் தன்னிடம் வைத்துக்கொள்ளவும் அல்லது எனது அத்தை வசிக்குமிடமாகிய லிவர்பூலுக்கு வழிச்செலவு கொடுத்து அனுப்பவும் தன்னாலியலாதென்று சொல்லி என் அத்தையிடம் போய்ச் சேரும்படி இக்கப்பலில் விட்டுவிட்



டார்கள்' என்றான். பணச்செலவொன்றுமின்றி கடலைத் தாண்ட முயலும் மனிதர்களையும், பிள்ளைகளையும் ஏற்றுமதிச் சரக்குகளின் நடுவே கண்டுபிடிப்பது வழக்கமாதலாலும், இப்பேர்ப்பட்டவர்களால் மாலுமி அநேகந்தடவை ஏமாற்றப்பட்டிருந்ததாலும் அச்சிறுவன் திருட்டுப்பையனென்று சந்தேகித்து அவனைக் குரூரமாய் நடத்த ஆரம்பித்தான். நாடோறும் அவன் வரவின் காரணம் என்னவென்று கேட்டாலும் கூட்டிக் குறைக்காமல் எப்போதும் ஒரேவித மறுமொழி சொல்லி வந்ததினால் ஒருநாள் அக்கப்பற்றலைவன் பொறுமையிழந்தவனாய் அதிக கோபங்கொண்டு அவன் கழுத்தைப் பிடித்து நெறித்துக்கொண்டு, கையில் கடியாரத்தை வைத்துக்கொண்டு, 'இன்னும் பத்து நிமிஷத்தில் உண்மையைச் சொல்லாவிடில் இந்தப் பாய்மரத்தில் தூக்கிப்போடுவேன்,' என்று மகா உக்கிரத்துடன் மொழிந்தான்.

இதைக் கேட்டவுடனே பையனுக்குண்டான பயங்கரம் கொஞ்சநஞ்சமல்ல. அவனைச் சுற்றிப் பிரயாணிகளும், கப்பலாட்களும், எதிரே கையில் கடியாரத்தை வைத்துக்கொண்டு கோபாவேசத்துடன் நிற்கிற தலைமை உத்தியோகஸ்தனும் தவிர அவனுக்குத் துணையாக ஒரு சிநேகிதனும் கிடையாது.

இச்சிறுபையன் கண்களினின்று நீர் வடிந்தோட வெளுத்த முகத்தோடும், துக்கத்தோடும் தலை நிமிர்ந்தவனாய் நின்றான். ஆனால் கொஞ்சமேனும் பயப்படவில்லை. இவ்விதமாக 8 நிமிஷங்கள் கடந்தன. உடனே மாலுமி, 'பயலே! இன்னம் 2 நிமிஷமட்டுமிருக்கின்றன. அதற்குள் உண்மையைச் சொல்லாவிடில் உன்னுயிர் போவது நிச்சயம்' என்று உரக்கக்கூவினான். அப்போது குரூரமுள்ள மாலுமியின் முகத்தை நோக்கி அப்பையன், 'ஐயனே! சிறிது நேரம் ஜெபம் செய்யட்டுமா' என்று கேட்க, அம்மாலுமி பதிலுரையாமல் தலையை மட்டும் அசைத்தான்.

உடனே பையன் முழங்காலிலிருந்து தன் இருகரங்களைக் குவித்து வானத்தை நோக்கி, கண்களை ஏறிட்டு, 'பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே' என்கிற மந்திரத்தைச் செபித்து பரலோகத்துக்குத் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி, திவ்விய கர்த்தனை மன்றாடினான். அவன் சாகத் துணிந்தானாயினும் பொய் பேசத் துணியவில்லை. எல்லோரும் அவனையே பார்த்துக்கொண்டு நின்றார்கள். கன்னெஞ்சர் முதலாய்ப்

பெருமூச்செறிந்தார்கள். இதைக் கண்ட மாலுமி மனந்தாளாமல் பையனிடம் விரைந்து சென்று, தன் கரங்களால் வாரியெடுத்து முத்தமிட்டு ஆனந்தக் கண்ணீர், சொரிந்து 'பிள்ளாய்! உனது சரித்திரத்தையெல்லாம் முற்றும் நம்பினேன்' என்றான். அதுமுதற்கொண்டு இப்பையனை மாலுமி பட்சமாய்ப் பராமரித்து வந்து, கப்பலில் ஒரு உத்தியோகமும் கொடுத்து அவனைத் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டான். பிறகு அச் சிறுவன் நன்னடக்கையாலும், நேர்மைத் தனத்தினாலும் கப்பல் உத்தியோகத்தில் படிப்படியாய் உயர்ந்து கடைசியிற் பேர்பெற்ற கப்பற்றலைவனானான்.

பிள்ளைகளே! இதனால் நீங்கள் நேர்மையை நாடவும், இந்த அநாதப் பிள்ளையின் புண்ணிய நடத்தையைப் பின்பற்றவும் மனவுறுதிகொள்ளுங்கள்.

போதகன்.

## Jayaseelan.

## ஜயசீலன்.

### 11-ம் அத்தியாயம்.

ஜயசீலன் இப்போது நடக்கப்பெற்ற வியாக்கியானங்களை, தனபாலன் வழியில் அறிந்து, தான் வந்திருக்கும் இடம் எப்பேர்க்கொத்ததென்று, தெளிவாய்க் கண்டுகொண்டான். சூதாட்டத்தால் விளையக்கூடிய கேடு, அபகீர்த்தி, நஷ்டம் முதலியவைகளைக் கவனியாமல், அந்தக் கெட்ட அப்பியாசத்துக்குக் கையளித்ததால், எத்தனையோ வாலிபர்கள் அந்தப் படுகுழியை விட்டகல முடியாமல் தவிக்கிறார்கள். ஏராளமான திரவிய சம்பத்துகளோடு. கீர்த்திப் பிரதாபத்துடன் வாழ்ந்து வந்த எத்தனையோ குடும்பங்கள் சகலத்தையும் இழந்து, கஞ்சிக்குக் காற்றாய்ப் பறந்து, யோக்கியம் மரியாதை கெட்டு, அதோகதியானதை, சரித்திரங்களிலும், அனுபவசித்தியாலும் வாசித்தும், கேட்டும், பார்த்ததில்லையோ? சூதாட்டத்தால் சிலர் பெரிய தொகையைச் சம்பாதித்து, ஆஸ்திக்காரராகலா



மென்று எண்ணி மோசம்போவதுண்டு. ஆனால், சாதாரணமாய்ச் சம்பவிப்பதென்ன? துவக்கத்தில் தன் கையிலிருந்த சிறு தொகையைச் சூதாட்டத்தில் இழந்து, கொஞ்சம் கொஞ்சமாய் வீட்டிலிருக்கும், தட்டுமுட்டு ஜாமான்களையும், நகைநட்டுகளையும் அடவு வைத்து, தானும் பெண்சாதி பிள்ளைகளும் பிழைக்க வழியில்லாமல் தவிப்பதே அதன் முடிவு. சூதாட்டத்தில் பழக்கப்பட்டவன் கொஞ்ச நாளைக்குப் பிற்பாடு, அதை விட்டொழிக்கலாமென்று எண்ணுவது எவ்வளவு பெரிய தப்பறை. மனம் வராது, மனம் உண்டானபோதிலும் தைரியம் கிடையாது. சூது விளையாடக் கையில் காசில்லாதபோது, அதைச் சேகரிக்க அவன் தேடும் உபாயங்களும், வழிப்பாடுகளும் எவ்வளவு கேவலமானவை. எந்த அக்கிரமத்துக்கும் பயப்படமாட்டான். எவ்வித ஈன செய்கைகளுக்கும், திருட்டு, கொலை முதலிய பஞ்சபாதகங்களுக்கும் முதலாய் அஞ்சாமல் தன் எண்ணத்தை முடிக்கப் பிரயாசப்படுவான்.

இப்படிப்பட்ட நிர்ப்பாக்கிய இடத்தில், ஜயசீலன் கால் வைத்தது மிகவும் பரிதபிக்கத்தக்கதே. கெட்ட சகவாசம் அவனை இந்தக் கேவல அந்தஸ்தில் கொண்டுவந்து சேர்த்தது. ஜயசீலனுக்குக் கொஞ்சம் உற்சாகம் உண்டாக்குவதற்காகவும், அவ்விளையாட்டின்மட்டில் ஆசை, பிரீதி வருவிக்கவும், தனபாலன் இன்னொருவனிடம் சேர்ந்து, ஒவ்வொருவனும், 10 ரூ. ரொக்கம் வைத்து, தாயக்கட்டைகளைக் குலுக்க ஆரம்பித்தார்கள். துவக்கத்தில் தனபாலன் அபஜெயமடைவதாகக் காணப்பட்டாலும், வெகு சீக்கிரத்தில் தன் விளையாட்டு நண்பனை தோல்வியடையச் செய்து, ரூ. 200 அபகரித்துக்கொண்டான். இத்தொகையைத் தன் சட்டைப் பையில் பதனமாய் வைத்து, ஜயசீலனைக் கூட்டிக்கொண்டு, வீடுபோய்ச் சேரப் புறப்பட்டான். இதைப்பார்த்த ஜயசீலன், மிகவும் ஆச்சரியப்பட்டு, இவன் அதிசீக்கிரத்தில், ரூ. 200 சம்பாதித்த, இரகசியத்தைத் தெரியப்படுத்த வேணுமென்று மிகவும் கேட்டுக்கொண்டான். தனபாலன் தன் சாமர்த்தியத்தைப்பற்றி வெகுவாய்ப் புகழ்ந்து பேசி, தனக்கு இஷ்டமிருந்திருக்குமேயாகில், இதைவிட மும்மடங்கு பணத்தைச் சடுதியில் சேகரித்திருக்கக் கூடுமென்றும், அந்த இரகசியத்தை இப்போது வெளிப்படுத்த முடியாதென்றும் சொன்னான். ஜயசீலன் திரும்பவும் வற்புறுத்திக் கேட்டதின்பேரில், விளையாட்டைத் தான் கற்றுக்கொண்ட பிற்பாடுமாத்திரம், அது தனக்கு விளங்குமென்றும், மறுபடி அந்த இரகசியத்தைத் தெரிவிப்பதாகவும் வாக்களித்

தான். பண ஆசை ஜயசீலனை சூதாட்டத்தின்மட்டில் அவாவை உண்டாக்கிற்று. "எவ்வளவு சீக்கிரத்தில் வெகு சொற்பத் தொகையோடு, இவ்விடம் வந்தவர்கள் பணம் நிறைந்த பையோடு வீட்டுக்குப் போகிறார்கள். நமக்கும் இந்த அதிர்ஷ்டம் கிடையாதா"? என்று தனக்குள் எண்ணிக்கொண்டு, தனபாலனிடம், இவ்விளையாட்டுக்கடுத்த பல விஷயங்களைப்பற்றி விசாரித்து, தான் நாள்தோறும் இவ்விடம் வருவதாகவும், விளையாட்டைச் சீக்கிரம் கற்றுக்கொள்வதற்கு, தான் உதவியாயிருக்கவேண்டுமென்றும், தனபாலனை ரொம்பவும் வருந்திக் கேட்டுக்கொண்டான். நண்பனின் மனம் சந்தோஷத்தால் பூரித்தது. ஜயசீலனை படுகுழியில் ஆழ்த்தக் கங்கணங் கட்டிக்கொண்டிருந்த தனபாலன், ஒரு ஆட்சேபனையுஞ் செய்யாமல், நாள்தோறும் மத்தியானம் 3 மணிக்குமேல் விளையாடும் இடம் திறந்திருக்குமென்றும், ஒரு நாளாவது வரத் தவறக்கூடாதென்றும் கண்டிப்பாய்ச் சொல்லி, இருவரும் தங்கள் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். ஜயசீலனுக்குத் தகப்பனுடைய எண்ணம் மனதில் உதித்தது. முன் பல தடவை அவனை ஏமாற்றியிருக்கிறபடியால், தான் நினைத்த காரியத்தை நிறைவேற்ற யாதொரு தடங்கலும் நேரிடாதென்று தன்னைத் தைரியப்படுத்திக்கொண்டான். மறுநாள் குறித்த நேரம், ஜயசீலனும், தனபாலனும் முன் செய்த ஏற்பாட்டுப்பிரகாரம் ஒரு வீதியின் கோடியில் சந்தித்து, சூதாடும் வீட்டின் மார்க்கமாய் நடந்து அங்கே சேர்ந்தார்கள். முதல் 3 நாளாய் ஜயசீலன் விளையாட்டையும், அதின் ஜாலங்களையும் தீரமாய்க் கற்றுக்கொண்டான். அடுத்த நாள் மற்ற கூட்டாளிகளுடன் சேர்ந்து, பணம் ரொக்கம் வைத்து, விளையாடவும் துவக்கிவிட்டான். வேடன் பட்சிகளைப் பிடிக்கக் கண்ணி வைத்து, ருசிகரமான பதார்த்தங்களுடன் பாஷாணமும் கலந்து கொடுத்து, அவைகளைத் தன் கைவசப்படுத்துவதுபோல் பசாசும் வெளித் தோற்றங்களைக்கொண்டு, மனிதர்களை ஏமாற்றித் தன் வலையில் சேர்க்கிறது. ஜயசீலன் விளையாட்டில் பலதடவைகளில் ஜெயமடைந்தான். சூதாட்டத்தில் அவனுக்கு ஆசைப் பற்றுதல் உண்டாகிவிட்டது. சில தினங்களில் பெரிய தொகையையும் சம்பாதித்தான்.

(தொடரும்.)

## Here and There.

### நானா சங்கதிகள்.

Obituary : மார்ச்சு ௴ 26-ம் ௳ கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச்சேர்ந்த சங். ஞானப்பிரகாசநாதர் சுவாமியார் தமது 87-ம் வயதில் கோயமுத்தூரில் மரணமடைந்தார். அடுத்தநாள் 6-மணிக்கு மகா கனம்பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள் அவருடைய ஆத்துமத்துக்காக பெரிய பாட்டுப்பூசை செய்தபிறகு நல்லடக்கம் நடத்தினார்.

R. I. P.

Union is strength : கடந்த ௴ 22-ம் ௳ கோயமுத்தூர் கத்தோலிக்கு கிளப் என்னும் ஒரு சங்கம் புதிதாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே 45 மெம்பர்கள் சேர்ந்திருக்கிறார்கள். சங். பங்குக் குருவானவர் பிரசிடெண்டாகவும், M. R. Ry. பெரியநாயக முதலியார் B. A. L. T. வைஸ்பிரசிடெண்டாகவும், M. R. Ry. சஞ்சீவிநாதபிள்ளை செக்கிரடரியாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

மேலும், கத்தோலிக்கு வாலிபர் யூனியன் என்னும் வேறொரு சங்கம், வாலிபர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது, அதற்கு சங். பங்கு குருசுவாமியார் பிரசிடெண்டாகவும், அர்ச். மிக்கேல்மடத்து மானேஜராகிய சங். L. Tournier, தூர்னியர் சுவாமியார் வைஸ்பிரசிடெண்டாகவும், M. R. Ry. மாணிக்கம் செக்கிரடரியாகவும் நியமிக்கப்பட்டார்கள். ஷை 2-சபைகள் திடப்பட்டு, நிலைநின்று, ஆத்தும காரியங்களிலும், உலக காரியங்களிலும், மெத்த நன்மைசெய்யுமென்று நம்புகிறோம்.

Transfers : கோயமுத்தூர், அமலோற்பவ சீர்மைக் கன்னியாஸ்திரி மடத்திற்கு, 25-வருஷகாலமாக, சிரேஷ்ட தாயாராயிருந்த சங். (Gertrude) ஜெர்த்துருத் தாயார் கடந்த மாதம் கொழும்புக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

௸ நல்ல தாயார் சென்ற 25-வருஷமாக, கோயமுத்தூர் கிறீஸ்துவர்களுக்கும், அஞ்ஞானிகளுக்கும், நன்மைசெய்து, அநேகவித நற்கிருத்தியங்களை நடத்திவந்தார்கள். அவர்களுக்குப்பதிலாக சங். ட்லொர் தாயார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

குன்னூரில் அர்ச். சூசையப்பர் சீர்மைக் கன்னியாஸ்திரி மடத்து சிரேஷ்ட தாயாராகிய சங். ஸென்ற். பால் (St. Paul) தாயார், பெங்களூருக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப்பதிலாக 8-வருஷத்திற்குமுன் அம்மடத்தின் சிரேஷ்ட தாயாராயிருந்தும்; கடந்த 8-வருஷம் ௸ கன்னியாஸ்திரி சபையின் பெரிய சிரேஷ்ட தாயாராயிருந்தும்வந்த, சங். அன்னமரித் தாயார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

Thou shalt not kill : கோயமுத்தூர் சின்னடிப் பாளையத்தில், கடந்த ஜனவரி-மீ 6-உ இரங்கசாமி முதலி என்பவனைக் கொலைசெய்த 7-பேர்கள் பிடிபட்டு, செஷனில் விசாரணையாகி, ஏழுபேரையும் தூக்கிவிட தீர்ப்பாகிவிட்டது. இது கொலை செய்வோருக்கு நல்ல படிப்பினை.

Wanted : A Teacher : கோயமுத்தூர் "நல்லாயன் எலிமெண்டரி பாடசாலைக்கு, ஹையர்கிரேட் எலிமெண்டரி டிரெய்ன்ற் உபாத்தியாயர் தேவை. ஆகையால், கோயமுத்தூர் கத்தோலிக் கோவில் நல்லாயன் பாடசாலை மானேஜருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

**For the Church of the Sacred Heart, Coimbatore**

**கோயமுத்தூர் திரு இருதயக் கோவில் கட்டடத்திற்கு தர்மம்,**

A. S. J. ரூ. 5—0—0.

---

161401


# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VI.** **June 1920.** **No. 6.**

**புத்தகம் VI.]** FIDES AC ROBUR. **[நம்பர் 6.**


## NOTICE.

*Office of the Registrar-General of Births, Deaths and Marriages, MADRAS.*
*Dated the 5th May 1920.*

SIR,

1. The Government of India have directed that there should be opened in the Register of Marriages, by the side of the existing column headed "Signature of two or more witnesses present," a new column headed "Names of witnesses in full," and that in this column the names of the witnesses should be written *clearly and legibly* In registers where there is no separate column for signatures of witnesses, their names should be entered clearly and legibly immediately below their autograph signatures. The object is to obviate the inconvenience caused by the fact that the signatures of witnesses are frequently found to be illegible and undecipherable. I have the honour therefore to request that you will be so good as to have the requisite addition made in the registers in your charge and in the forms of copies or extracts of marriage entries. The Superintendent of Stationery has been requested to make the necessary addition in the future supply of marriage returns and forms.

2. I have the honour to invite your special attention to the note at the head of the letter form used by myself which is reproduced below :—

> "Communications and remittances should be addressed to the sender of this letter by his official designation unless they are of a demi-official or confidential nature when his name as well as designation should be employed."

The result of addressing communications which are not of a confidential or demi-official nature to the Registrar-General by name as well as by designation involves delay in many cases, as, when I am on tour, these communications, being treated as personal, follow me and have to be returned to my headquarters office. I have therefore the honour to request that the instructions which I have quoted may be followed invariably.

I have the honour to be,
Sir,
Your most obedient servant,
C. M SCHMIDT,
*Registrar-General of Births, Deaths and Marriages.*

*(By order of His Lordship the Bishop of Coimbatore)*

## Emigration.
## பிறதேசம் போதல்.

நாம் வாழும் இந்திய தேசம் வெகு செழிப்புள்ள தேசமானாலும், இதில் பல ஜனங்கள் செல்வாக்காய்ப் பிழைப்பது, கஷ்டமென்று எண்ணி, கடலைக்கடந்து சிங்கப்பூர், பினாங்கு, கொழும்பு, நட்டால் முதலிய தேசங்களுக்கு தனிமையாயோ அல்லது குடும்பத்தோடோ பிழைப்பைத் தேடப்போகிறார்கள்.



ஏழை ஜனங்கள் தங்கள் ஊரையும், பந்து ஜனங்களையும் விட்டு, பிறதேசம் போகும்படி, பல மேஸ்திரிமார்கள் அவர்களை நல்வார்த்தை சொல்லி மயக்கி இழுக்கிறார்கள். இந்த மேஸ்திரிகள் ஊரூராய்ச் சுற்றித் திரிந்து, ஜனங்களுக்கு இல்லாததும், பொல்லாததும் சொல்லிப் பசப்பி, அங்கே போனதும், கைநிறைய வெள்ளியை அள்ளலாமென்றும், பெண்சாதி பிள்ளைகளும்கூட சொற்ப வேலைசெய்து, மடி நிறையப் பணம் சம்பாதிக்கலாமென்றும் தந்திரமாய்ச் சொல்லுகிறார்கள்.

கபடமற்ற மூட ஜனங்கள், சூதை அறியாமல், அவர்கள் பேச்சை நம்பி, புழுவைக்கண்டு ஓடிவரும் மீன் கூட்டங்களைப் போல, கூட்டமாய் ஓடி ஏமாந்துபோகிறார்கள். அவர்களைக் கூப்பிடுகிற மேஸ்திரி, அவர்களுக்குக் கொஞ்சம் காசு கொடுத்து, கள்ளுக்கடைக்குக் கூட்டிப்போய், வெறியெடுக்கக் குடிக்கச்செய்து, அவர்களை வண்டியில் ஏற்றி, கப்பலில் ஏற்றி அடித்து, உதைத்து, மிதித்து, வாடியில் அடைக்கிறான். கப்பல் நடுக்கடலில் அசைந்து, புரண்டு, உருண்டு சுழலும்போது தான், ஊரை விட்டுவந்த அந்த மூட ஜனங்களுக்கு சுய அறிவு வந்து, விசனத்தால் கலங்கி அழுகிறார்கள்.

ஐயோ! இந்தப் பாழும் பயலை நம்பி வந்தது எங்கள் தப்பிதம். இனி என்ன செய்வோம்?

கப்பல் துறை சேர்ந்த பின்பு, இந்த ஜனங்களையெல்லாம் ஆடுமாடுகளைப்போல, பலவிதமாய் இம்சைப்படுத்தி, இந்தத் தோட்டத்திற்கும், விஷக்காய்ச்சல் நிறைந்த அந்த மலை நாட்டுக்கும் அனுப்புகிறார்கள்.

சரீரத்துக்கு வரும் இந்தத் துன்பங்களைப் பார்க்கிலும், கிறீஸ்துவர்களின் ஆத்துமத்துக்கு வரும் பொல்லாப்போ சொல்லமுடியாது. ஞாயிற்றுக்கிழமைகளில் திவ்விய பூசைக்குப்போக நேரமில்லாமல் ஓயாமல் வேலை செய்வார்கள். இவர்களுக்குப் பாவசங்கீர்த்தனம் இல்லை. இவர்கள் பிள்ளைகளுக்கு ஞானோபதேசமும், படிப்பும் இல்லை.

அப்படிச் சில வாலிபர்கள் தங்கள் தாய் தகப்பன் வீட்டை விட்டு, ஊதாரிப்பிள்ளைகளைப்போல கெட்டுப்போகிறார்கள்; வேறு சிலர் தங்கள் பெண்சாதி பிள்ளைகளை விட்டு, ஓர் கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல் மரியாதை, யோக்கியம், அடக்கம் ஒடுக்கமில்லாமல் நடந்து குடும்பம் நிர்மூலமாகிறதற்கு காரணவாளிகளாகிறார்கள்.

நீங்கள் எவனையும் நம்பி, ஊரையும் வீட்டையும் விட்டு, எங்கேயாகிலும் போய் பிழைக்கலாமென்று எண்ணி மோசம் போகாதேயுங்கள். நமது தேசத்திலேயே இருந்து பிழைக்கும்படி பல ஏதுக்கள் உண்டு. "முயற்சியுடையோர் என்றும் இகழ்ச்சி அடையார்." "பிறதேசம் போனால், பரதேசியாய் அலைவாய்," "வீடு விட்டுப்போனவன் கேடு கெட்டு, பாடு பட்டு, சூடுபட்டுத் திரும்புவான்," என்பது அநுபவ சுலோகம்.

ஒருநாள் கூச்சமுள்ள ஒரு பிச்சைக்காரன் இரகசியமாய் என்னிடம் வந்து பிச்சை கேட்டான். கந்தையை உடுத்தி, தேகம் மெலிந்து, ஓர் கை திமிர்வாதம் பிடித்து, நாக்குத் திக்கி, புத்தி ஒருவாறு கலங்கிய இந்த மனிதனைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். ஆனாலும் அவனைக் கண்டவுடனே அவனுடைய அடையாளம் அறிந்து, நீதானா......?—ஆமாம் சுவாமி என்று ஓர்விதமாய்ப் புன்சிரிப்புடன் பதிலுரைத்தான். ஐயோ! நான் ஆறுவருஷத்துக்குமுன் உன்னைப் பார்த்த அந்தஸ்துக்கும், இப்போதிருக்கிற அந்தஸ்துக்கும் ஏன் அவ்வளவு வித்தியாசம்? காரணம் சொல்லு?—"சுவாமி, நான் நன்றாய்ப் பிழைக்கலாமென்று எண்ணி, பல ஊராரோடேகூட பரதேசம் போய் மோசம்போனேன். சொல்லமுடியாத கஷ்டம் நஷ்டப்பட்டேன். அங்கே போனவர்கள் காடுகளில் வியாதியினாலும், தரித்திரத்தினாலும், கஷ்டப்படுகிறார்கள். நானும் வியாதியாகி, துன்பம் பொறுக்கமாட்டாமல், சாகிறதற்குமுன் சொந்த ஊரைத் திரும்பப் பார்க்கவேணுமென்று ஆசைப்பட்டு வந்தேன். ஆனால் வழிச்செலவுக்கும், சாப்பாட்டுக்கும் ஒரு காசுகூட கிடையாது" என்று வாய் திக்கி கஷ்டத்தோடே சொன்னான். அவனுக்கு ஒரு ரூபாய் கொடுத்து அனுப்பினேன். ஆனால் அந்தப் பரிதாபப் பார்வையை நினைக்கும் போது, என் இருதயம் பதறித் துடிக்கிறது. அதன்பிறகு அவன் தன் ஊரில் போய்ச் சேர்ந்து இறந்துபோனதாகக் கேள்விப்பட்டேன்.

இதை வாசிப்பவர்களே! பிறதேசம் போவதால் பெரும் ஆபத்து வரும் என்று அறிந்து, பிறர் அப்படிப் போகாதபடிக்கு நீங்கள் புத்திசொல்லி, உங்களால் கூடியமட்டும் தடுத்து வருவீர்களாகில், பிறருக்கு சரீர விஷயத்திலும், ஆத்தும விஷயத்திலும் பெரும் உபகாரம் செய்வதுபோல் ஆகும் என்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. (சத்திய நேசன்.)

# The Little Garden of Roses.

## சிறு ரோஜாத் தோட்டம்.

### மலர். 12.

'Pray without ceasing' (I. Thess. V. 17.)

'இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்' (முதல் தெசலோனி 5-ம் அதி. 17-ம் வச.)

1. நற்செய்திகளை நாம் கேட்பது அருமை. யுத்தம் எங்கும் பரவுகின்றது; உள்ளே பயம்; வெளியே போராட்டம். நமக்குத் துன்பதுரிதங்களில்லாத நாளில்லை. சாவின் பயங்கரத்துக்குரிய நினைவு நம்மை விட்டகலாத நேரமில்லை.

நியாயாதிகாரியான சர்வேசுரன் சில சமயங்களில் நமக்குப் பஞ்சம், படை, நோய் முதலிய துன்பங்களை வரவிடுகிறார். இவைகளால் துன்மார்க்கரைத் தண்டிப்பதும் தவிர, தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் தமது நித்திய பேரின்ப பாக்கியத்துக்குச் சுதந்தரவாளிகளாக்கச் சித்தப்படுத்துகிறார்.

ஆகையால் இவ்வுலகில் உனக்கு நேரிடும் சொற்பத் துன்பதுரிதங்களை நீ சுளுவில் சகித்துக்கொள்ளவும், உன்னைச் சுற்றிலுமுள்ள ஆபத்துக்களினின்று தப்பித்துக்கொள்ளவும், சத்துரு உன்பேரில் எறியும் உக்கிரமான அம்புகளை எதிர்த்துத் தாக்கவல்ல மார்புக்கவசமாகும்பொருட்டு நீ இடைவிடாமல் ஜெபம் செய்வது அத்தியாவசியமான காரியம். ஜெபம் செய்ய மனதில்லாதவன் யுத்தத்துக்குப் பயந்தோடுகிறான். போராடுவதில் பிரயத்தனஞ் செய்யாதவன் வெற்றிமுடியை இழந்துபோகிறான். ஆகையால் நீ ஜெயமடையவேண்டுமானால் எப்போதும் யுத்தத்துக்கு முஸ்திப்பாயிரு. நீ போராடமாட்டேனென்றால் முடிசூட்டப்படவேண்டாமென்றாற்போலாயிற்று. ஆனால் முடி சூட்டப்பட ஆசிப்பாயாகில் வீரியத்துடனே போராடி அவ்வெற்றிமுடியைச் சம்பாதித்துக்கொள். எப்போதும் ஜெபம்செய்து சத்துருவோடு போராட யாரால் கூடும்?

எவனொருவன் தனக்கு வரும் இக்கட்டு இடையூறுகளில் சர்வேசுரனது அடைக்கலத்தை நாடியோடிவந்து, அவர்பேரில் தனது பூரண நம்பிக்கையை வைக்கிறானோ அவனுக்கு இவ்வுலகில் முடியாத காரியமொன்றுமில்லை. ஆனதுபற்றி, "ஆண்ட

வர் தம்மை வேண்டிக்கொள்ளுகிற யாவருக்கும், தம்மை உண்மையாய் வேண்டிக்கொள்ளுகிற யாவருக்கும் சமீபமாயிருக்கிறார்."

எப்போதும் உதடுகளால் ஜெபம்பண்ண உன்னால் முடியாவிட்டால் உன் முழுவிருதயத்தோடும், முழு சத்துவத்தோடும், நுணுநுணுக்கமான கவனத்தோடும், சுறுசுறுப்புள்ள பத்திவிநயத்தோடும் ஜெபம் செய்வாயாக.

நற்கிருத்தியங்களைச் செய்யவும், சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமான ஊழியஞ் செய்யவும் வேண்டுமென்கிற மிதமிஞ்சின ஆவலே நாம் என்றும் நமது இருதயப்பீடங்களில் அவருக்குச் சமர்ப்பிக்கும் பலியாகும். தான் முன் செய்த குற்றங்களை நினைத்து நினைத்து மனஸ்தாபப்படுவதும், நற்கிருத்தியங்களைச் செய்வதில் மனஞ்சலியாமல் நாள்தோறும் புண்ணியசாங்கோபாங்கநெறியில் விருத்தியடைய ஆசிப்பதே எப்போதும் ஜெபம் செய்வதுபோலாகும். அதனால, "ஆண்டவரே! என் ஆசைகளெல்லாம் உமக்குத் தெரிந்திருக்கிறது. எனது பிரலாபம் உமக்கு மறைந்திருக்கவில்லை" என்று தீர்க்கதரிசியாகிய தாவீது இராஜாவோடு சேர்ந்து நீயும் ஜெபிப்பாயாக.

2. இலௌகீக மாய்கைகளாலும், உன்னை மேற்கொள்ளப் பார்க்கும் துராசாபாசங்களாலும் நீ அலைக்கழிக்கப்படும்போது சர்வேசுரனுடைய திரு வாக்கியங்களை நினைவுகூர்ந்து அவைகளைப்பற்றித் தியானிப்பதும் ஞானப்புஸ்தகங்களைப் பத்தியுடன் வாசிப்பதும் உன்னுடைய இருதயத்துக்குச் சமாதானத்தையும், அமரிக்கையையும் கொடுக்கவல்லது. வேதாகமங்களை அடிக்கடி வாசிப்பவன் அதிலே மறைந்திருக்கும் ஞானமிர்தத்தைக் கண்டடைந்து இவ்வுலகில நல்லொழுக்கமாய் நடக்கக் கற்றுக்கொள்ளுவான். நன்மாதிரிகைகள் நமக்குப் பின்பற்றி நடக்கும் ஊக்கத்தையளிக்கின்றன. அவற்றைப் பின்பற்றி ஒழுகுதற்கு வேண்டிய தேவ இஷ்டப்பிரசாதத்தை நமக்குச் சர்வேசுரனிடமிருந்து சம்பாதித்துத் தருவது ஜெபமே. கடவுளைப்பற்றி வாசிப்பது நல்லது; சுவாமியை வேண்டிக்கொள்ளுவது அதிக நல்லது; ஆனால் சேசுநாதர்போல வேண்டிக்கொள்ளுவதோ எல்லாவற்றிலும் மேன்மையானது.

எல்லாவற்றிலும், எல்லாவற்றிற்கும் மேலாக சர்வேசுரனுக்குச் சதாகாலமும் புகழ்ச்சியும் வாழ்த்துதலும் உண்டாகும்பொருட்டு ஆசைகொண்டு தன் மனோவாக்குக் காயங்களால் அவரது மகிமைப்பிரதாபத்தைத் தோற்றுவிப்பதைத்



தவிர வேறொரு நோக்கத்தையும் கருதாதவன் என்றும் ஆசீர்வதிக்கப்பட்டவனும்.

3. தேவஊழியத்துக்குத் தன்னைக் கையளித்தவொருவன் வேதாகமங்களை வாசிக்கிறதிலும், ஞானப்புஸ்தகங்களைப் படிப்பதிலும், செபத்தியானஞ் செய்வதிலும், சலிப்பாயிருந்து வீண் பேச்சுகளில்மட்டும் மெத்தக் கவனமுள்ளவனாயிருந்தால் அவனை எப்படிப் பத்திமானென்று சொல்வது?

அற்ப விஷயங்களைப்பற்றிப் பேசுவதிலும், அவற்றிற்குச் செவிசாய்ப்பதிலுமே இன்பங்கொள்பவன் தமது ஆத்துமத்தைக் கேவலமான விலைக்கு விற்றுக்கொண்டவனாகிறான். உனது கஸ்தி துன்பத்தில் ஆறுதலையும், தேவானுக்கிரகத்தையும் பெறுவதற்கு வழியாயிருப்பது ஜெபமே. ஆனதுபற்றி அவ்வேளைகளில் உன்னைச் சர்வேசுரனுடைய அடைக்கலத்தில் ஸ்தாபித்து அவரைத் தாழ்ச்சியுடன் மன்றாடுவாயாக. எவ்வளவு துரிதமாய்ச் செபத்தை நாடுவாயோ, அவ்வளவுக்கதிகமான பிரயோசனத்தையடைவாய். எவ்வளவுக்கதிகமாய்த் தாமதிப்பாயோ, அவ்வளவுக்குக் குறைவான பேறுபலன்களையடைவாய். எவ்வளவுக்கு அதிக பத்தியுடன் ஜெபிப்பாயோ, அவ்வளவுக்கு மேலாக சர்வேசுரன் உன்பேரில் தயையுள்ளவராயிருப்பார்.

தயாபரரான சர்வேசுரன் நமது அவசரங்களில் அவரிடத்தில் சரணமாக ஓடிவந்து நமக்கு வேண்டியதை அவரிடம் கேட்கவேண்டுமென்று ஆசிக்கிறார். ஏனெனில் நாம் கேட்கும் காரியங்களைத் தடையின்றிக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார். ஆனதுபற்றி, "கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்று சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறார்.

அவர் தமது சுகிர்த மாதிரிகையாலும், நன்மொழிகளாலும் நம்மை ஜெபம் செய்வதற்கழைக்கிறார். தம்முடைய பயமுறுத்துகைகளால் நம்மைப் பலவந்தப்படுத்துகிறார். தம்முடைய அனுக்கிரகங்களால் நமக்குத் தூண்டுதலளிக்கிறார். தரித்திரத்தைத் தந்து நம்மைத் தண்டிக்கிறார். வாழ்வையளித்து நம்முடைய பணிவுக்குத் தகுந்த சன்மானஞ்செய்கிறார்.

4. நல்ல சமாச்சாரங்களைக் கேட்க விரும்புகிறவர்களே! வாருங்கள். வந்து சேசுநாதரோடு விருந்துகொள்ளுங்கள். மோக்ஷராஜ்யத்தைப்பற்றியும், வரப்போகிற தீர்வைநாளைப்பற்றியும், மோக்ஷ ஜெருசலேமைப்பற்றியும், நவகோடி சம்மனசுகளும் மோக்ஷவாசிகளும் அனுபவிக்கிற ஆனந்தத்தைப்பற்றியும், தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குத்

தாமளிக்கிற கௌரவ கண்ணியங்களைப்பற்றியும், எண்ணிலும் சொல்லிலுமடங்காத ஆனந்த சந்தோஷத்தில் அக்களித்துக் கொண்டு அவர் பேசும்போது அவருடைய இன்பரசமான வார்த்தைகளுக்குக் காதுகொடுத்துக் கேட்கக்கடவீர்கள்.

(தொடரும்.) S. S. G.

## Common Sense and Catholic Schools.

### மெய்ஞ்ஞானமும் கத்தோலிக் பள்ளிக்கூடங்களும்.

நமது பிள்ளைகள் கத்தோலிக்குக் கிறீஸ்துவப்பிள்ளைகள். அவர்களுடைய பெயர்மாத்திரமல்ல, அவர்களுடைய புத்தியும், மனமும், இருதயமும், கத்தோலிக்குக் கிறீஸ்துவ அடையாளம் பதிந்திருக்கின்றன. ஆகையால் அவர்களுடைய புத்திக்கும், மனதிற்கும், இருதயத்திற்கும் கத்தோலிக்குப் படிப்பினை அவசரம் வேண்டும். அப்படிப்பட்ட படிப்பினையினால் நமது பிள்ளைகள் மெய்யான கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களாவார்கள். கத்தோலிக்குப் படிப்பினை இல்லாவிட்டால், நமது பிள்ளைகள், ஒருவிதமாக நல்ல அஞ்ஞானிகள், அல்லது நல்ல பதிதர்கள், அல்லது நல்ல நாஸ்திகர் ஆகக்கூடும். ஆனால் ஒருபோதும் நல்ல கிறீஸ்துவர்களாகவே முடியாது.

நமது பிள்ளைகள் கத்தோலிக்குப் படிப்பினை அடைய வேண்டுமானால், அவர்கள் நமது கத்தோலிக்குப் பள்ளிக்கூடங்களில்தான் படிக்கவேண்டும் என்பதைத்தவிர வேறே வழி இல்லை.

இதுவிஷயத்தில் திருச்சபையின் கட்டளை ஒன்று உண்டு. கத்தோலிக்குக் கிறீஸ்துவப்பிள்ளைகள், கத்தோலிக்குப் பள்ளிக்கூடங்களில் படிக்கவேண்டியதேதவிர, வேறே பள்ளிக்கூடங்களிலாவது, அஞ்ஞானிகள், பதிதர் ஏற்படுத்திய பள்ளிக்கூடங்களிலாவது படிக்கப் போகக்கூடாது. மேலும் நமது நல்ல தாயாகிய திருச்சபை கண்டிப்பாய்ச் சொல்லுகிறதென்னவென்றால்:—

“பதித பள்ளிக்கூடத்துக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்புகிற தாய் தகப்பன்மார்கள், திருச்சபையின் சாபத்துக்கு உள்ளாவார்கள்.” ஆகையால் நமது கத்தோலிக்குப் பிள்ளைகளை கத்தோலிக்குப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவேண்டுமென்பதே கண்டிப்பான கடமை.

ஆனால் நமது கத்தோலிக்குப் பள்ளிக்கூடங்கள், மற்ற எந்தப் பள்ளிக்கூடங்களைப்போலவே கல், சுண்ணாம்பு, மரம் இவைகளால்தான் கட்டப்பட்டிருக்கின்றன.



மற்ற எவ்வித பள்ளிக்கூடங்களுக்கும், ஜன்னல், கதவு, மேஜை, நாற்காலி, டெஸ்க், பெஞ்சு, முதலிய ஜாமான்கள் வேண்டியதுமல்லாமல், உபாத்திமார்களும் வேண்டும்; ஷை ஜாமான்களை வாங்குவதற்கும், உபாத்திமார்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும் பணம் வேண்டும். பணமோ பயிரைப் போலத் தோட்டத்தில் விளைகிறதில்லை; அப்படி இருந்தபோதிலும், நமது கத்தோலிக்குப் பிள்ளைகளுக்கு கத்தோலிக்குப் பள்ளிக்கூடங்கள் வேண்டும். இது கடவுளுடைய சித்தம்; இது திருச்சபை கட்டளை; இது மெய்ஞ்ஞானம்.

ஆகையால் நம்மாலானமட்டும், கத்தோலிக்குப் பள்ளிக்கூடங்களுக்கு பண உதவி செய்யக்கடவோம்.

(Common Sense.)

வயிறு வளர்க்கும்படியாகவும், நல்ல கலியாண சம்பந்தம் செய்யும்படியாகவும், உத்தியோகம் பெறும்படியாகவும், ஊரில் உள்ள பகை வைராக்கியத்தைக் காட்டும்படியாகவும், கெட்ட கத்தோலிக்கரில், சிலர் பதிதராய்ப் போயிருக்கிறார்களென்பது வாஸ்தவமே! ஆனால் பக்தியும் புத்தியுமுள்ள நல்ல கிறீஸ்துவன் பதிதனாய்ப் போனானென்று கேள்விப்பட்டிருக்கமாட்டீர்கள்!

## Friendly Talk.

### சிநேக வாய்ச்சல்லியம்.

பி. சாமி, சர்வேஸ்பரனுக்குத் தோஸ்திரம்.

கு. ஆசீர்வாதம். பிள்ளைகளே, பாவசங்கீர்த்தனத்தைக் குறித்து இன்னம் கொஞ்சநாள்கழித்து தெளிவாய் சொல்லிக் கொடுப்போமென்று நேற்றுச் சொன்னோம். ஆனால், நினையாத சில அவசரமான காரியங்களைப்பற்றி முன்குறித்த நாள்களில் நமக்கு அலுவல் இருக்கிறபடியால், இன்றைக்குத் தானே பாவசங்கீர்த்தனத்தைப்பற்றிய தெளிவான சில சங்கதிகளைச் சொல்ல வந்திருக்கிறோம். ஆகையால் அதைக் கருத்தாய்க் கேட்டு மனதில் வையுங்கள்.

பாவசங்கீர்த்தனஞ் செய்யக் கோவிலுக்குப் போனவுடனே முழங்காலிலிருந்து சாமியையும், தேவமாதா, காவல்சம்மனசு, சூசையப்பர் இவர்களை மன்றாடி ஒவ்வொரு பாவத்தையும் நன்

ருய் நினைத்துப்பார்த்து மனசிலே வைத்துக்கொள்ளவேணும். பிறகு, பாவங்களுக்காக நல்ல கஸ்தி விசனப்படவேணும். இது ஏனென்று தெரியுமா? தெரியாது உங்களுக்கு. சொல்லுகிறதைக் கவனியுங்கள். இப்பூமியை உண்டாக்கி இதிலே நம்மை குடியிருக்கப்பண்ணியதார்? சுவாமி. இப்பூமியில் நாம் இருக்கிறவரைக்கும் நாம் உண்கிற சாப்பாடு அவருடையது. உடுத்துகிற துணி அவருடைய பொருள். அவர் நமக்கு கொடுத்திருக்கிற ஆத்தும சரீரம் அவருடைய சொந்தப் பொருள். அதுகளிலிருக்கிற புத்தி சாமர்த்தியம் சாமியுடைய பிச்சை. நோய் நொடி இல்லாமல் நம்மைக் காப்பாற்றுகிறவர் அவர்தானே பிள்ளைகளே. நோய் நொடி வந்தாலும் சௌக்கியப்படுத்துகிறவரும் அவர்தான். பொல்லாப்பு வந்தாலும் அதிலிருந்து நம்மைத் தப்பித்துவிடுகிறவரும் அவர்தான். பொல்லாப்பில்லாமலே நம்மைக்காப்பவரும் அவர்தான். அவருடைய உதவி ஒத்தாசையின்றி ஒரு நிமிஷமேனும் நாம் உயிரோடிருக்க முடியுமோ? ஒருபோதும் முடியாது. ஆகையால் பிள்ளைகளே! இப்படிப்பட்ட நல்ல சாமிக்கு—ஈவு இரக்கமுள்ள எஜமானுக்கு, பொறுமையும் சாந்தகுணமுமுள்ள தகப்பனுக்கு ஊழியக்காரர்களாயிருப்பது, மக்களாயிருப்பது மகாப் பெரிய மகிமையல்லவா—மிகுந்த பெருமையல்லவா—பிள்ளைகளே.

பி. சாமி, நீங்க சொல்லரதெல்லாம் நெசமாத்தானிருக்குது சாமி.

கு. இது இப்படியிருக்க, மனிதன் தனக்குக் கிடைத்த இந்த மகிமையையும் பெருமையையும் பாராமல், சாமியும், எஜமானும், தங்கமான தகப்பனுமானவருடைய பேச்சைத் தட்டிவிட்டு; அவருடைய கட்டளைப்படி நடவாமல், அவர் செய்யச்சொல்லுகிறதைச் செய்யாமலும், செய்யவேண்டாமென்கிறதை வேணுமென்றே செய்தும் அவரைப் பரிகாசம் செய்வது பாவமல்லவா—துரோகமல்லவா, பிள்ளைகளே?

பி. ஆமாஞ் சாமி. துரோகமுங்கூடத்தா — பாவமுங் கூடத்தா.

கு. இப்படி அவர் பேச்சை மீறிப் பாவத்தைச் செய்கிற படுபாவியான மனுஷன் அவரோடு சண்டைப்போடுகிறான் என்று சொல்லப்படாதா?

பி. நல்லாச் சொல்லலாஞ் சாமி.

கு. இப்பேர்ப்பட்டவன் சமியைப் பார்த்து, நான் உன் பேச்சைக் கேட்கமாட்டேன். உன் கட்டளை எனக்குச் சரிப்படாது, ஆனதினாலே அதற்குக் கீழ்ப்படியமாட்டேன், அதின்



படி நடக்கவுமாட்டேன் என்று வாயால் சொன்னால், பாவமா? அவன் பண்ணுகிறதே பத்தாதா?

பி. அவன் அப்படிப் பண்ணரதே போதுஞ் சாமி.

கு. அவன் அப்படிப் பாவத்தைப் பண்ணும்போது சாமி அவன்பேரில் பட்சம் வைப்பாரா? பிரியமாயிருக்குமா சுவாமிக்கு அவன்பேரிலே? சாமி அவனைச் சிநேகிப்பாரா?

பி. அதெங்கிருந்து வந்திட்டுது சாமி, சாமி அவனைச் சிநேகிக்கிறதுக்கு? அவங்கிட்ட பச்சமாயிருக்கோ? அவங்கிட்ட பிரியமாயிருக்கோ?

கு. அப்படியானால் அவனுக்கும் சாமிக்கும் ஏதாகிலும் சொந்தமுண்டா?

பி. சொந்தமெங்கிருந்து வந்திட்டுது சாமி அவனுக்கு?

கு. அப்போ தகப்பனென்கிற உறவும் போச்சு—சாமியென்கிற உறவும் போச்சு—எஜமானென்கிற உறவும் போச்சு—அப்படியே எல்லா உறவும் போயிட்டுதா?

பி. ஓ! ஓ! அந்தொறவெல்லாம் எப்போ அவன் பாவத்தைச் செய்தானோ அப்பவே அண்ணடிச்ச காத்திலே மண்ணடிச்சுக்கிட்டுப் போன மாதிரி போயிட்டிது சாமி. எல்லா ஒறவையும் சுட்டுத் திண்ணுபோட்டான் சாமி படுபாவி.

கு. அப்போ அவனுக்கு யாருடைய உதவி இருக்கிறது? யாருடைய உறவு இருக்கிறது—யாருக்கு அவன் சொந்தமாயிருக்கிறான்?

பி. பேயுதவிதான் இருக்குது—பிசாசுகூடத்தா உறவாடறு. அந்தப் பேயிதா அந்தப் பிசாசுதான் அவனுக்குச் சொந்தக்காரர் சாமி.

கு. இப்படி அவன் சாமியை விட்டுப் பிரிந்துபோன பிறகு அவரைத் தேடவேண்டாமா? அவரோடே சமாதானமாகவேண்டாமா, செசிலி?

செ. மோச்சத்துக்குப் போக அவனுக்கு ஆசையிருந்தாக்கா கட்டாயம் வாண்டாமிண்ணு பிரிஞ்சுபோனானே அந்த நல்ல பாட்டன் காலில் விழுந்துதானாகவேணும். அங்கே சுத்தி இங்கே சுத்தி அந்த நல்ல அப்பன் பாதத்தில் விழுந்துதானாகவேணும்.

கு. நல்ல பாட்டனும்—நல்ல அப்பனும்—அப்பன் காலிலே பாட்டன் பாதத்திலே விழுந்தால் மோட்சம் வந்துவிடுமா?

செ. சாமி அப்பனுமல்லோ, பாட்டனுமல்லோ, சாமியைத்தா அப்படி சொன்னே சாமி. (இன்னும் வரும்.) S. M.

# The Watch.

## காவல் சேவகம்.

பிராஞ்சு தேசத்தில் ஆர்லியன்ஸ் நகரில் ஓர் பட்டாளம் தங்கியிருக்கும் காலத்தில், ஒரு சிப்பாய் ஒவ்வொருநாளும் மேற்றிராசன கோவிலுக்குவந்து, மத்தியானத்துக்குப்பின், 1 மணிதுவக்கி 3 மணிவரை, தேவநற்கருணை ஸ்தாபிக்கப்பட்டிருந்த பீடத்துக்குமுன்பாக, பளிங்குக் கற்றூண்போல் அசையாமல் நின்றுகொண்டேயிருந்தார். பங்கு சுவாமியார், தினந்தினம் இந்த விஷயத்தைக் கண்ணால் பார்த்து, அதிசயப்பட்டு, என்ன விசேஷமென்று சேவகனை வினவ பிரியப்பட்டாலும், அதைப்பற்றி ஒருவார்த்தையும் கேட்காமல், சேவகர் தினசரி வரவும் போகவுமாயிருக்கிறதைமாத்திரம் பார்த்துக்கொண்டிருந்தார். ஆகிலும் ஒருநாள் பட்டாளத்து காப்டன் என்பவர் கோவிலில் பிரவேசித்தபோது, சேவகர் வழக்கம் போல் நின்றுகொண்டிருந்தவர், கையெடுத்து சலாம் செய்தார். இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாயென்று காப்டன் தலைவர் சேவகனைக் கேட்க: சேவகர் சொன்ன மறுமொழியாவது, “தலைவரே, பெரிய மனுஷர்களுக்கு காவலாட்களுண்டு. குடியரசு அதிபதிக்கு 4 பேர், பட்டாளத்து ஜெனரலுக்கு 2 பேர், கர்னலுக்கு ஒருவர். இந்த உத்தியோகஸ்தர்களுக்கு அதிபதி இராஜாவான சர்வேசுரன் இந்த கோவிலில் பிரசன்னமாயிருக்கிறார். அவருக்கு ஒரு காவலாளாவது வேண்டாமா? ஆகையால் எனக்கு பட்டாளத்தில் வேலையில்லாத சமயம் இரண்டு மணிநேரம் இந்தக் கோவிலில், பரலோக பூலோக இராஜாவுக்கு காவல் சேவகம் செய்கிறேன். இந்த சேவகத்திலிருக்கிற பிரீதி பற்றுதலைப்போல் எனக்கு வேறொன்றுமில்லை.”

# Listen to our Holy Mother the Church.

## “திருச்சபை உன் நல்ல தாய்; அவள் சொற்படி கேள்.”

“திருச்சபை கற்பிக்கும் சொற்கடங்காதவன் அஞ்ஞானியைப் போலாவான் என்றே கர்த்தரும் சொன்னார்.”

### “வாசிப்பதேதை”

நேசர்களே! உலகிலுள்ள பற்பல சாஸ்திரங்களை முற்றுமே கற்றவருமில்லை; கொஞ்சமேனும் அறியாதவருமில்லை. கொஞ்சம் வாசிக்கத் தெரிந்தவுடனே சகல சாஸ்திர புஸ்த



கங்களையும் படித்தாராய ஆசைகொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கண்டதையெல்லாம் படிக்கப்படிக்க, சில சாஸ்திரங்கள் அஞ்ஞான மார்க்கத்தையொத்த குருட்டு வழிகளையும், சில பதிதப் பேதமைகளையும் போதித்து, வீணாய் ஆத்துமக் கேடுண்டாக்கி நரக பாதையைக் காட்டுகின்றன. சிற்றின்பப் பிரியர்கள், தகாத புஸ்தகங்களையே படிக்க ஆசைப்படுகின்றனர். இது சுத்தப்பிசகு. பேரின்பப் பிரியராகிய பக்தர்கள் ஞானத்தையும் ஈடேற்ற வழியையும்காட்டும் சிறந்த புஸ்தகங்களை ஆராயப் பிரியப்படுகிறார்கள். இது நன்மைதானென்றாலும், அப்படிப்பட்டவர்களும்கூட தாம் நிலைதவறிப்போக மாட்டோம் என்ற கருத்துடன், அஞ்ஞான புஸ்தகம், சிற்றின்பப்பாட்டு, கதை முதலியவற்றைப் படித்து வருவதுமன்றி, விசேஷமாய் பதிதர் தாறுமாறாய் இயற்றிய கெட்ட புஸ்தகங்களையும் வாசித்து, அதனுட்பொருள் மயக்கங்கொண்டு தாங்களே தங்களை அறியாமற் கெட்டழிகிறார்கள். இதுகண்டல்லவோ, ‘மக்களே, என்னைக் கேளாமல் நீங்கள் அப்படிப்பட்ட புஸ்தகங்களை வாசிக்காதீர்கள்’ என்று கண்டிப்பாய் வற்புறுத்துகிறதும் நியாயந்தானே. இவ்வாக்கியத்தைச் செவியுற்ற நம் நேசர்களுக்கு மிகுதியும் வருத்தமுண்டாகலாம். இதுமட்டுந்தானா? எதெது தகாததென்று அந்த நல்ல தாயறிந்தாளோ, முகப்பிரியமும், தயைதாட்சண்யமுமன்றி கண்டிப்பாய் விலக்குகிறாள். தன் பிள்ளைக்கு எதைக் கொடுக்கலாம், எதை விலக்கலாம் என்று அவளுக்கு நன்றாய்த் தெரியும். இதுவுமன்றி, ஆகாத நாடகம், தகாத பையஸ்கோப் முதலிய படக்காட்சி, தகாத பிரசங்கம், டிராமா முதலிய இடங்களுக்கு வலியப்போய், பணத்தையும் கொடுத்து, பாவத்தைத்தேடி ஆத்துமத்தைக் கெடுத்துக்கொள்வதால் லாபமென்ன? மரம் வெட்டும்போது எந்தப்பக்கம் சாய்கிறதோ அந்தப்பக்கமே விழும். நீ சாவை நினைத்துக்கொள். “மகனே, மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்” என்று உன் நல்ல தாய் சொல்லுகிறாள். அந்நல்ல தாயாருக்கு மனவருத்தத்தை உண்டாக்காதே. அவள் எந்நேரமும் உன்மட்டில் கவலை கொண்டிருக்கிறாள். நீ அவளுடனே சண்டைக்குக் கச்சை கட்டாதே, அவளைக் கண்டபடி ஏசாதே, அபதூறு சொல்லாதே. நீ என்ன சொன்னாலும் அவள் கவனிக்கமாட்டாள். கடின வியாதிக்காரன் தன்னிஷ்டப்படி மருந்து கேட்டால் வைத்தியன் கொடுப்பானா? பிள்ளை பாஷாணம் தின்ன ஆசைப்பட்டால், தாய் பிரியமாய்க் கொடுப்பாளா? நல்ல ஆயனானவன்

தன் மந்தையிற் சிதறிப்போன ஆட்டைத் தேடிப் பிடிக்கிறவரைக்கும் வியாகுலத்துடனே தேடித்தேடி அலைந்து, ஆடு கிடைத்தவுடனே சந்தோஷப்படுவதுபோலவே, திருச்சபையும், உங்களிற் தவறிப்போனவர்களைச் சற்கூட்டத்திற் சேர்க்க விசனத்துடன் தேடியலைகிறது. ஆகையால், சந்தோஷத்துடனே அந்த நல்ல தாய் மடியில் வந்துறங்கு. இற்றைவரைக்கும் யாதோர் குறைவுசெய்திருந்தபோதிலும், அவற்றைக் களைந்தெறிந்துபோடு, அவளுக்கும் சந்தோஷமாகும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பழமொழியொப்ப, உங்கள் சித்தம் உங்களிற் பிடிவாதங்கொண்டால், அதற்கு யார்தான் என்செய்வர்? எனக் கற்பிக்கிறதுபோற் காணுகிறது. லுத்தர் முதலிய கலைவல்லவருங் கெட்டழிந்தார்களோ. இவற்றை நன்றாய் நினை.

S. M. S. G.

## Page for the Young

### பிள்ளைகளின் பக்கம்.

## The evils of reading bad books.

### கெட்ட புஸ்தகங்களை வாசிப்பதினால் உண்டாகும் அக்கிரமங்கள்.

ஜெர்மனி தேசத்தில் ஒரு நல்ல பத்தியுள்ள தாய் தந்தையருக்கு ஓரே ஒரு பிள்ளையிருந்தான். அவன் தனது 18 வயது வரையில் தன் பெற்றோருக்கும் குருமார்களுக்கும் பிரியமாய் நடந்து தன்னுடன் போர்டிங் பள்ளிக்கூடத்தில் படித்த பிள்ளைகளுக்குத் தன் சுகிர்த மாதிரிகையால் ஓர் மேல் வரிச்சட்டமாயிருந்தான். ஆனதுபற்றி அவனுடைய தோழர்கள் அவன் நல்லவனென்று சொல்லி அவனைக் கண்டுபாவிக்கத் தேடுவார்கள்.

அப்படியிருக்கையில் லீவு காலத்தில் அவன் வீட்டுக்கு வந்தபோது ஒரு கெட்ட தோழன் அவனுக்குச் சிநேகமானான். முதலில் அவனுக்கு ஒரு கெட்ட புஸ்தகத்தைக் கொடுத்ததினால அவன் அதை உடனே தள்ளாமல் வாசிக்க வாசிக்கப் பிரியங்கொண்டான். அதனால் இருக்க இருக்க அவன் குணம் மாறிப் பிறகு காலேஜுக்கு மறுபடி வந்தபோது முந்தியிருந்த பத்தியும் சுறுசுறுப்பும் போய் சோம்பேறியும், வீண் விசாரமாயும், பெரியோர்களுக்குக் கீழ்ப்படியாதவனுமாயிருந்தான். சில நாட்களுக்குப்பிறகு அவன் கையில் கெட்ட புஸ்தகத்தைக் கண்டதினால் அவனைப் போர்டிங்கிலிருந்து துரத்திவிட்டார்கள். அதனால் அவனுக்குப் புத்தி வந்ததில்லை. தன் வீட்டிற்குத் திரும்பி வந்தபின் தன் ஆசாபாசங்களுக்குத் தடைசெய்யாமல் பொல்லாதவர்களோடு சேர்ந்து அநியாயமான செலவுகளைச் செய்யவும், சூதாடவுங் கற்றுக்கொண்டான். முதலில் சூதாட்டத்தில் கொஞ்சம் லாபம் வரவே, திரும்பத் திரும்ப சூதாடிக் கடைசியில் இரண்டாயிரம் ரூபாய் வரையில் கடனாக வாங்கி எல்லாவற்றையும் இழந்துபோனான். அதைச் செலுத்தும்படிக்குத் தகப்பனாரைக் கேட்டான். அதற்கு அவர், "நீ மனந்திரும்பி சூதும், துர்நடக்கையும் விட்டு நல்லவனாயிருப்பதாக வாக்குத்தத்தஞ் செய்து கொடுத்தாலன்றி நான் உனக்குப் பணம் கொடுக்க மாட்டேன்" என்று சொன்னார். அவன் அப்படியே வார்த்தைப்பாடு கொடுக்க, தகப்பனார் ஆஸ்திக்காரனல்லாததினால் தம் நிலத்தை விற்றுக் கடனைச் செலுத்தினார்.



கொஞ்சக் காலத்திற்குப் பிறகு அவ்வாலிபன் மறுபடியும் கெட்ட புஸ்தகங்களை வாசித்ததினால் அவனிடத்தில் துர்க்குணங்கள் முன்னையைப்பார்க்கிலும் அதிகமாய் வேரூன்றவே, ஒருநாள் இராத்திரி தன் கெட்ட தோழர்களுடன் சூதாடப் போனதில், தன்னிடமிருந்த எல்லாவற்றையுமிழந்து, பிறகு 30 ரூபாய்மட்டும் கடனாக வாங்கி அதையுமிழந்துபோனான். உடனே எழுந்து வீட்டுக்குத் திரும்பிவந்து அமரிக்கையாய்த் தூங்கும் தகப்பனாரை வெகு கோபமாய் எழுப்பி, "எனக்கு 30 ரூபாய் வேண்டும். சூதாடினதிலே அதை இப்போது இழந்துபோனேன்" என்றான். அதற்குத் தகப்பனார் வெகு சாந்தமாய் மகனை நோக்கி, "அப்பா! நீ கேட்கிற பணம் தற்போது என்னிடமில்லை, அப்படி கோபங்கொள்ளாதே" என்றார். தாயும் அழுதுகொண்டு மகனைச் சமாதானப்படுத்தப் பார்த்தாள். இவனோவெனில் கோபவெறிகொண்டு சட்டென சமையலறைக்குப்போய் ஒரு சூரிக்கத்தியை எடுத்து வந்து தகப்பனார் வயிற்றை இரண்டாகப் பிளந்து அவருடைய குடலைக் கைகளாற் பிடுங்கியெறிந்தான். இதைக்கண்ட தாய் கோவென்றலறி மூர்ச்சையாகிக் கீழே விழவே, அப்பாதகன் ஈவு இரக்கமில்லாமல் அவளையும் வெட்டினான்.

அப்பேர்ப்பட்ட கொலைப்பாதகனைப் பிடித்து, விசாரணை செய்து, தாய் வீட்டுக்குமுன் கையை வாங்கித் தலைவெட்டப் போகிற சமயத்தில், அவனுக்கிருந்த ஒரேயொரு சகோதரி, கொலைக்காரனுடைய முழங்கால்களைப் பிடித்துக்கொண்டு தன் சகோதரனை மன்னிக்கவேண்டுமென்று வெகு பரிதாபத்துடன் மன்றாட, அவளைக் கட்டாயமாய்த் துரத்தினார்கள். பிறகு அவள் பைத்தியங்கொண்டு பைத்தியக்காரருடைய தர்ம வைத்திய சாலையிலே செத்தாள். இவ்விதமாகக் கெட்ட புஸ்தகங்களினிமித்தம் அக்குடும்பம் முழுதும் அழிந்துபோனது.

பிரியமான பிள்ளைகளே! இப்போது சொல்லப்பட்ட பாவக்கிரமங்கள் அடிக்கடி காணோம் என்கிறது மெய்யானாலும், வேதத்துக்கு விரோதமாயிருந்தாலுஞ்சரி, நல்லொழுக்கத்துக்கு விரோதமாயிருந்தாலுஞ்சரி, கெட்ட புஸ்தகங்களின் விஷத்தால் எவ்வளவு மோசம் வருமென்று சொல்லிமுடியாது. மேலும் ஆத்தும சமாதானமும், தேவ சிநேகமும், மோட்சபாக்கியமும் அதினால் இழந்துபோகலாமானதால், அப்பேர்ப்பட்ட மோசங்களுக்குப் பயந்து எப்படியாகிலும் அந்த விஷயத்தை விலக்கவேண்டியது என்று அறியக்கடவீர்களாக.

(போதகன்.)

## Should we spend our money on jewels?

## நாம் நகை செய்வதில் பணத்தைச் செலவுசெய்வது ஸரியா?

எவன் தனக்கும், தன் அயலாருக்கும் தீமை உண்டாகும்படி, தன் மிகுதிப் பணத்தைச் செலவு செய்கிறானோ, அவன் மூடன். சாராய வகையில் தன் பணத்தைச் செலவிடுகிற குடிகாரனை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். மேலும், எவன் தனக்கும் தன் அயலார்களுக்கும் நன்மையுண்டாக்க தன் மிகுதிப் பணத்தைச் செலவிடுகிறானோ, அவனே விவேகி. அப்பேர்ப்பட்டவன் தன் பணத்தைக்கொண்டு, ஒரு கிணறு வெட்டுவான், அல்லது தன் நிலத்தைச் சீர்திருத்திக்கொள்ளுவான். அல்லது ஒரு கூட்டுறவு சங்கத்தில் போட்டுவைப்



பான், அல்லது ஒரு கைத்தொழிலுக்கு மூலதனமாய் கொடுத்துவைப்பான். ஆனால், நன்மைக்கோ அல்லது தீமைக்கோ, தனக்கோ அல்லது பிறருக்கோ, ஒருவிதத்திலும், ஒருவருக்கும் உபயோகப்படாமல் தேடிய பணத்தை புதைத்துவைத்தும், நகைகள் செய்தும் பாழாக்குகிறவனை எப்படி அழைப்பதென்று தெரியவில்லை. அவன் மகா மூடனல்ல; ஆனால் மேதாவியுமல்ல.

இந்தியர்கள் தங்கள் வருமானத்தை, வீணாக பொன் வெள்ளி நகைகள் செய்வதில் விரயம் செய்கிறார்கள் என்று நெடுநாளாக அந்நிய தேசத்தார்கள் சொல்லிவருகிறார்கள். அதற்கு எதிர்மொழியாக நாம், மற்ற தேசத்து ஜனங்களும், நம்மைப்போலவே உபயோகமில்லாத காரியங்களிலும், அதிக தீமையுண்டாக்கக்கூடிய விஷயங்களிலும் விரயம் செய்யவில்லையாவென்று சொல்லி திருப்தியடைகிறோம். இது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால், பணத்தை நாம் வீணிலே செலவு செய்வதற்கு அது தகுந்த காரணமாகாது.

நமது தேசத்தில் அதிக பணமில்லையென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே, கொஞ்சம் பணம் மீக்கக் கூடியவர்கள்கூட, அப்பணத்தை நல்ல காரியத்தில் செலவு செய்யவேண்டியது அதிக முக்கியமாயிருக்கிறது.

பணத்தை இலாபம் வரச் செலவிடுவதற்கான நல்ல காரியங்கள் நமது தேசத்தில் எத்தனையோ உண்டு. முதலாவது, குடியானவனாயிருந்தால், அதிக பலன் கிடைக்கும் விதம் தன் நிலத்தைத் தன் பொருளைக்கொண்டு நன்றாய்ப் பண்படுத்திக்கொள்ளலாம். தன் நிலம் புன்செய்யாயிருந்தால், ஒரு கிணறு வெட்டி, பலன் அதிகமாய்க் கிடைக்கும்படிச் செய்துகொள்ளலாம். நன்செய் நிலமாயிருந்தால் நல்ல எருவை ஏராளமாய்ப் போட்டு அதை விர்த்திசெய்யலாம். இரண்டாவது, குடியானவனுக்கு சகாய வட்டிக்குக் கடன் கொடுத்து, சவுக்கார் கையிலிருந்து அவனை விடுவிக்க, தற்காலத்தில் எல்லா ஊர்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கங்கள் குடியானவர்களுக்கு வேண்டிய பணமெல்லாம் கடன் கொடுப்பதாயிருந்தால், எவ்வளவு பணமிருந்தாலும் போறாது. ஆகையால் நம்மிடத்தில் மிகுந்திருக்கிற பணத்தை, இந்தச் சங்கங்களில் ஏன் போட்டுவைக்கக்கூடாது? போட்டுவைத்தால் வட்டியும் சுமாராய்க் கொடுப்பார்கள்.

அல்லாமலும், நமது தேசத்தில், புதிதான தொழில்களை ஆரம்பிக்க அனேகர் முயற்சி செய்துகொண்டு இருக்கிறார்கள்.

அவர்கள் யோக்கியர்களா, புத்திசாலிகளா, என்று முதலில் விசாரித்தறிந்துகொண்டு, பணம் சற்று நிறைய மீதம் பிடிப்பவர்கள் அவர்களை நம்பி கொஞ்சம் பணத்தை அத்தொழில் முயற்சியில் ஏன் செலவிடக்கூடாது?

பணத்தை இவ்விதம் மேற்சொன்ன மார்க்கங்களில் செலவிடுவோமானால், நமக்கும், நமது தேசத்தார்களுக்கும் நன்மையுண்டாகும். அல்லாது, நமது பணத்தை அதிகமாய் நகை வாங்குவதில் செலவிடுவோமானால், அதினால் யாருக்கு என்ன நன்மை? தவிரவும், தேசத்திற்கு அது நஷ்டத்தை விளைவிக்கவில்லையா? தற்காலம், இந்தியாவில் வியாபாரிகளின் உபயோகத்திற்கு வேண்டிய பொன் வெள்ளி நாணயங்கள் அதிகக் குறைவாயிருக்கின்றன. ஆகையால், கவர்ன்மெண்டார் அதிக ரூபாய்கள் புதிதாய் அடிக்கவேண்டியிருக்கலாம். அதற்கு வெளியேயிருந்து, வெள்ளி வாங்கவரும்; அப்பொழுது, அந்நிய தேசத்தார்கள் வெள்ளியின் விலையை உயர்த்துவார்கள். அதினால், சர்க்காருக்கு அதிக நஷ்டம் உண்டாகும். சர்க்காருக்கு நஷ்டமுண்டானால், வரிகளை அதிகப்படுத்தவேண்டியதாயிருக்கும். இந்தக் காரணத்தைக்கொண்டே, பொன், வெள்ளி நாணயத்தை உருக்குவது குற்றமென்று, சர்க்கார் ஒரு சட்டம் செய்திருக்கிறார்கள். அவ்வாறு உருக்கும் யாரும், காவல் தண்டனைக்குள்ளாவார்கள். இதை யாவரும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

நம்மில் சிலர் தங்கள் பெண்களுக்கு நகை செய்வதற்காக, ரூபாய்களையும், பவுன் நாணயங்களையும் சேர்த்துவைக்கிறார்கள். இந்தப் பணத்தைக்கொண்டு அப்பெண்களை, ஒரு நல்ல பாடசாலைக்காவது, கல்லூரிக்காவது அனுப்பிப் படிக்கவைத்தால் அதிக நன்மையாயிராதா என்று நாம் யோசிக்கவேண்டும்.

மற்றும் சிலர் தங்கள் பெண்களுக்கு புருஷர்கள் தங்கள் சொத்தை இழந்துவிடுங்காலத்தில், ஆதரவாக இருக்கும்படி, சீதனம் வைக்க நினைக்கிறார்கள். அது நியாயமே. ஆனால், அதற்காக வட்டியுமில்லாமல், யாரும் சுலபத்தில் திருடிப் போகக்கூடிய நகைகளைப் பலவாறாகக் கொடுக்கவேண்டியதவசியமா? இதற்குப் பதிலாக, அப்பெண்களுக்கு, கூட்டுறவுச் சங்கத்தில் சில பங்குகளையாவது, அல்லது தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிக்கேட்டுகளையாவது, ஏன் வாங்கிக்கொடுக்கக்கூடாது? தபால் ஆபீஸ் காஷ் சர்ட்டிபிக்கேட்டுகளை வாங்குவதாலும், கூட்டுறவுச் சங்கங்களில் பணத்தைப் போட்டுவைப்பதாலும், நமக்கும், நமது தேசத்திற்கும் இலாபம் உண்டு. ஆனால்,



பொன், வெள்ளி நகைகளை வாங்குவதினால், நமக்கும் இலாபம் இல்லை; நமது தேசத்திற்கும் இலாபமில்லை. தவிரவும் இப்பொழுது, சர்க்காரார் தங்கத்தை வெளி தேசத்திலிருந்து வருவித்து விற்றுவருகிறார்கள். அதினால், தங்கத்தின் விலை இறங்குமென்பதையும் எவரும் கவனிப்பார்களாக.

(From the Publicity Bureau.)

## Here and There.

### நானா சங்கதிகள்.

Confirmation Tour:—மகா கனம் பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள், கடந்தமாதம், வெல்லிங்டன், குன்னூர், உதகமண்டலம், இவை முதலிய நீலகிரிப் பங்குகளில், உறுதிபூசுதல் என்னும் தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றினார்.

St. Michael's Secondary School:—சங். (G. Boulanger) புலன்ஜர் சுவாமியார், 16 வருஷகாலமாக சென்ற் மிக்கேல் பாடசாலை மானேஜராகவிருந்து, இப்போது சௌக்கியக் குறைவாயிருக்கிறதினிமித்தம் தாம் கேட்டுக்கொண்டதின் பேரில் மாற்றிப்பட்டு, தம் உத்தியோகத்தை விட்டிருக்கிறார். அவருக்குப் பதிலாக சங். P. Jamboau ஜம்போ சுவாமியார் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சங். G. புலன்ஜர் சுவாமியார், தமது உத்தியோகத்தை நடத்துவதில் பற்பல கஷ்டங்களை மனத்தைரியமாய்ப் பொறுமையுடன் சகித்து, ஷை கல்விச்சாலையை ஒழுங்குமுறை விஷயத்திலும், படிப்பு விஷயத்திலும் வெகு அனுகூலத்துடன் நடத்திவந்தார்.

The motor-car murder:—கோயமுத்தூர் கொலை:—குருசாமிபிள்ளையை கபடமாகக் கூட்டிச்சென்று, தனவந்தனாகிய சுப்பராவ் என்பவன் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இவ்வியாச்சியம் பொள்ளாச்சி சப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டவர்கள் முன் விசாரணை நடந்தது என்று நமக்குத் தெரிந்த விஷயம். இப்போது செஷனுக்கு மாற்றப்பட்டு, அடுத்த ஜுலை-மீ 15-ம் உ கனம் J. J. காட்டன் (Cotton) துரையவர்கள் முன் விசாரணை நடக்கும்.

Bolsheviks defeated:—போலிஷ்காரர் பொல்ஷெவிக்கரோடே சண்டைசெய்து, ஜெயத்துடன் கீயப் பட்டணத்தைப் பிடித்துவிட்டார்கள். 25000 பேர்கள் கைதிகளானதும் தவிர 128 பீரங்கிகளும் 418 மெஷின் பீரங்கிகளும் கைக்கொண்டார்கள்.

The Turks honour the Pope:—ஐரோப்பிய மகாயுத்தத்தில் எல்லா ஜனங்களுக்கும் செய்த பொதுநன்மையுபகாரங்களுக்காக துர்க்கியர்கள் நன்றிபாராட்டி, கொன்ஸ்தந்திநோப்பில் பட்டணத்தில் பாப்பானவராகிய பதினைந்தாம் ஆசீர்வாதப்பருடைய சுரூபத்தை பெரியதாகவும், அழகாகவும் ஸ்தாபிக்க தீர்மானித்தார்கள். சுல்த்தானும் அவருடைய குடும்பத்தாரும், மந்திரிகளும், மற்றவாசிகளும் அதற்கு வேண்டிய பண உதவி செய்கிறார்கள்.

St. Anthony's Feast:—பதுவைப்பதியான அர்ச். அந்தோனியார் திருவிழா அறிக்கை:—

கோயமுத்தூருக்கு அடுத்த பீலியகுளத்தில் 1920-ம் வருஷம் ஜூன்-மீ 13-உ ஞாயிற்றுக்கிழமை அர்ச். அந்தோனியார் திருவிழா வழக்கம்போல் கொண்டாடப்படும். காலை 8 மணிக்குப் பாடற்பூசையும், சாயந்திரம் 8 மணிக்கு தேர் சுற்றுப்பிரகாரமும் நடைபெறும்.

M. S. MICHAEL,
பங்கு சுவாமியார்.

The Turkish Peace Treaty:—நேசக்கட்சியார் துர்க்கி தேசத்துக்குச் செய்த சமாதான திட்டங்களை கடந்த மாதம் பிரசித்தஞ் செய்தார்கள். அவைகளிற் பிரதானமானவை:—கொன்ஸ்தந்திநோப்பில் என்னும் பட்டணமும் ஆசியாமைனர் என்னும் தேசமும் துருக்கியருக்கு விடப்பட்டது. ஆனால் அர்மீனிய, அரேபிய, பலஸ்தீனா, சிரியா, மெஸபொத்தாமியா இவை முதலிய தேசங்கள் துருக்கி இராச்சியத்திலிருந்து பிரித்துவிடப்பட்டிருக்கின்றன. அர்மீனியா, அரேபியா இவ்விரண்டு தேசங்களுக்கும் சுய அரசு கொடுக்கப்பட்டது. பலஸ்தீனா, மெஸபொத்தாமியா இவ்விரண்டும் இங்கிலாந்து விசாரணைக்கும், சிரியா பிரான்சு விசாரணைக்கும் உட்பட்டிருக்கின்றன.

---

**For the Church of the Sacred Heart, Coimbatore.**

**கோயமுத்தூர் திரு இருதயக் கோவில் கட்டடத்திற்கு தர்மம்.**

குன்னூர்: A. V. அந்தோணிசாமி நன்றியறிதலாக ரூ. 1.

# The Messenger of Truth.

## சத்திய தூதன்.

16 JUL 19.. MADRAS

**Vol. VI.** **July 1920.** **No. 7.**

**புத்தகம் VI.]** FIDES AC ROBUR. **[நம்பர் 7.**

## Church and Labour.

### திருச்சபையும், தொழிலாளிகளும்.

சத்தியவேதம் உண்டான நாள் முதல் இந்நாள் வரையில், திருச்சபையானது ஏழைகளையும், கஷ்டப்படும் தொழிலாளிகளையும், பட்சமாய் நேசித்து, அவர்களை விசேஷ கவலையுடன் காப்பாற்றி வருகிறது.

எத்திசையிலும், எக்காலத்திலும், அவர்களுடைய நிலைமையை விருத்தி செய்யும்படி, அது பலவிதமாய் பிரயாசப்படுகிறதைக் காண்கிறோம். ஆகையால், திருச்சபை தொழிலாளிகளுடையதாய் இருக்கிறதென்று சொல்லலாம்.

முற்காலத்தில் வேலைக்காரர் தங்கள் எஜமான்களுக்கு நீச அடிமைகளாயிருந்து, மிருகங்களைப்போல் கிரயத்துக்கு விற்கப்பட்டும், அடிக்கப்பட்டும், அற்பக் குற்றத்துக்காக கொல்லப்பட்டும், வேடிக்கைக்காக சிங்கம், புலி முதலிய துஷ்ட மிருகங்களுக்கு இரையாகப் போடப்பட்டும் சொல்லிலடங்காத பரிதாப ஸ்திதியில் இருந்தார்கள்.

அவர்கள்மேல் மனமிரங்கி, அவர்களை மீட்டுக் காப்பாற்றும்படியான இராஜாவும், மந்திரியும், சேவகனும், ஒருவரும் இருந்ததில்லை. அப்படியிருக்கப் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட சத்திய திருச்சபை, வேலைக்காரருடைய அடிமைக்குரிய ஸ்திதியைப் பார்த்தவுடனே, மனுஷர்கள் எல்லோரும், சகோதரர்களாயிருக்கிறார்கள், என்கிற சத்தியத்தைப் போதித்து, உலக அபிப்பிராயமும், வழக்கமும், சட்டமும் கவனியாமல்,

பயமின்றி, இராஜாக்களிடத்திலும், மந்திரிகளிடத்திலும் மனுப பேசி, தர்க்கித்து அவர்களை அடிமைத்தனத்திலிருந்து, மீட்டுக்கொள்ளப் பிரயாசப்பட்டது. தொழிலாளிகள் இப்போது அனுபவிக்கும் நல்ல ஸ்திதிக்கு கிறீஸ்து வேதந்தான் அவர்களை விர்த்திக்குக் கொண்டுவந்ததென்பதற்குச் சந்தேகமில்லை.

நமது நாட்களில் திருச்சபை, அவர்களைக் கைவிட்டதென்று எண்ணவேண்டாம். நல்ல தாயாகிய திருச்சபை தொழிலாளிகளுக்காகவும், ஏழைகளுக்காகவும் ஏற்படுத்தின தர்மக்கிரியைகள் எண்ணிலடங்காது. பாடசாலைகளோ, தர்ம மடங்களோ, தர்ம சாப்பாட்டுச்சாலைகளோ, கைத்தொழிற் சாலைகளோ, வைத்தியசாலைகளோ, சங்கங்களோ, அவைகளுக்கெல்லாம் கணக்குண்டோ?

"மெய்யாகவே கஸ்தி துன்பப்பட்டு, சுமை சுமந்துகொண்டு, கஷ்டப்படுகிற நீங்கள் எல்லோரும் என்னிடம் வாருங்கள்" என்று சேசுநாதர் சொல்லுமாப்போல, திருச்சபையும் சொல்லலாம்.

குருக்களும், சந்நியாசிகளும், கன்னியாஸ்திரிகளும், ஆத்தும விஷயத்திலும், சரீர விஷயத்திலும், பிறத்தியாருக்கு உதவியான தர்மக்கிரியைகளைச் செய்வதில், தங்கள் ஜீவிய காலத்தைச் செலவழிக்கிறார்கள்.

மேலும் திருச்சபையானது தொழிலை மேன்மைப்படுத்துகிறது. தொழிலின் மேன்மையும், மகிமையும் எவ்வளவென்று, கண்டுபிடிக்கவேண்டுமானால், நசரேத்து வீட்டுக்குப் போய் திருக்குடும்பம் வேலைசெய்கிறதைப் பாருங்கள். பரலோக இராஜாவாகிய சேசுக்கிறிஸ்துநாதர்தாமே, கஷ்டமான தச்சுவேலையைச் செய்து, தமது அன்றன்றுள்ள அப்பத்தைச் சம்பாதித்தார். அந்தத் திருவீட்டிலே சண்டைகளும், முறைப்பாடுகளும், கலாபனைகளும், வேலை நிறுத்தல்களும் காணப்படுவதில்லை.

மனிதர்கள் பலவித அந்தஸ்துள்ளவர்களாயிருக்கிறார்கள். இராஜாக்களென்றும், பிரஜைகளென்றும், ஆஸ்திக்காரர்களென்றும், ஏழைகளென்றும், எஜமானர்களென்றும், ஊழியர்களென்றும், பல பல அந்தஸ்துள்ளவர்களாயிருக்கிறார்கள்.

அப்படி எப்போதும் இருந்தது; எப்போதுமேயிருக்கும்;—எஜமானர்களும் வேண்டும், ஊழியர்களும் வேண்டும்; அப்படியே இரு கண்களும் மேலான உயர்ந்த ஸ்தானத்திலிருந்துகொண்டு, சரீரத்துக்கு ஆபத்து நேரிடாதபடிக்கு, ஜாக்கிரதையாயிருந்து, நான்கு திசைகளையும் சுற்றிப்பார்த்து தேக சௌக்கியத்தைக் கருத்தாய்க் கவனித்து வருகிறது.



இரு கால்களோ சரீரத்தின் பாரத்தைத் தாங்கி, கல்லிலும், முள்ளிலும், ஆற்றிலும், சேற்றிலும் நடந்து, எல்லாத்துக்கும் தாழ்ந்த ஸ்தானத்திலிருந்து, வேலைகளை முறைப்பாடின்றிச் செய்துவருகிறது. கைகால் முதலிய தேக உறுப்புகள் ஒன்றையொன்று விரோதித்து, தன் வேலையைக் கிரமமாய்ச் செய்யாதேபோனால் சரீரமே வியாதிப்பட்டு, பலமிழந்து, அவயவங்கள் ஒவ்வொன்றும் துன்பப்படும் என்பது நிச்சயம்.

அப்படியே. ஜனசமூக வாழ்க்கை செழித்து விர்த்தியாகும்படி, எஜமான்களுக்கு ஊழியரும், ஊழியருக்கு எஜமான்களும் தேவையானவர்கள்.

ஆகையால் எஜமான்களும், ஊழியர்களும், தங்கள் தங்கள் அந்தஸ்துக்குரிய கடமைகளை அநுசரித்து, தங்களோடு ஒற்றுமையாய் சமாதான நிலையிலிருக்கவேண்டும். இந்தச் சத்தியத்தைத் திருச்சபை எக்காலத்திலும் போதித்துவந்தது.

நமது காலத்தில் அநேக இடங்களில் தொழிலாளிகள் தங்கள் எஜமான்களுக்கு விரோதமாகக் கிளம்பி, கலாபனையை எழுப்பி வேலையை நிறுத்திவிடுகிறதைக் காண்கிறோம். அதனால், யாருக்கு முக்கியமாய் நஷ்டமுண்டாகிறது? அவர்களைத் தூண்டிவிடுகிறவர்களுக்கோ? இல்லை. தங்கள் அன்றன்றுள்ள அப்பத்தைச் சம்பாதித்து கஷ்டப்படும், எளிய தொழிலாளிகளுக்குத்தான் அதிக நஷ்டம் உண்டாகிறது. ஏனெனில், அவர்கள் 8, 15 நாள்களுக்கு வேலைக்குப் போகாமல் இருந்தால், சாப்பாடு அவர்களுக்கு எப்படிக் கிடைக்கும்?

மேலும் தொழிலாளிகளுடைய கலாபனையால், அன்ன வஸ்திரத்துக்கு வேண்டிய ஜாமான்கள் விலை ஏறிப்போய், ஏழைகள் மாத்திரமல்ல, சகலரும் கஷ்டப்படுகிறார்கள். அவ்விதமே, அதிக ஆசை அதிக நஷ்டம்" என்ற பழமொழிப்படி உள்ள பொருளைவிட்டு, இல்லாததை விரும்பி மோசம் போகிறார்கள் அநேகர்.

ஆகையால், கிறீஸ்துவத் தொழிலாளர்களே, நீங்கள் அப்படிப்பட்ட கலாபனைச் சங்கங்களில் சேராமல், திருக்குடும்பத்தைக் கண்டுபாவித்துத் தினந்தோறும், "அன்றன்றுள்ள எங்கள் அப்பம் எங்களுக்கு இன்று தாரும்" என்று சர்வேசுரனைப் பக்தியுடன் மன்றாடி, முறைப்பாடின்றி வேலைசெய்து, மரியாதையாய்ப் பிழைத்து வருவீர்களாக.—கடவுள் உங்களை கவனிக்கிறார்; திருச்சபை உங்கள் தாய். அர்ச். சூசையப்பர் உங்கள் பரிபாலகரானவர்: அப்படியிருக்க ஏன் பயப்பட வேணும்?

(சத்திய நேசன்.)

# The Little Garden of Roses.

## சிறு ரோஜாத் தோட்டம்.

### மலர். 12.

(முன் தொடர்ச்சி.)

கிறீஸ்துநாதருடைய மறைவுள்ள பரம இரகசியங்களை எடுத்துக்கூறி மனஸ்தாபப்படாமல் சாகிற பாவிகளின்மேல் தேவகோபம் உண்டாகிற விஷயத்தைப்பற்றி இடித்துக்கூறும் தீர்க்கதரிசிகளுக்குக் காது கொடுங்கள்.

அப்போஸ்தலர்களும், சுவிசேஷகர்களும் யேசுக்கிறீஸ்துநாதர் போதித்த தெய்வீக போதகங்களையும், அவர் செய்தருளிய பல அற்புதங்களையும் நாம் விசுவசிக்கவேண்டுமென்று நமக்கு அறிவிக்கும்போது அவைகளுக்குக் காது கொடுப்பது நமது கடமையாகும்.

மேலும் திருச்சபையின் வேத சாஸ்திரிகள் தங்கள் நடக்கையைப் பல புண்ணியங்களால் அலங்கரித்து, பதிதர்களுடையவும், பிரிவினைக்காரருடையவும் துர்ப்போதனைகளைப் பலத்த ஞாயங்களால் எதிர்த்து, மறுத்து, அடக்கி, வேதாகமங்களில் மறைந்திருக்கும் பரம இரகசியங்களை வெகு சாதுரியத்துடன் எடுத்துக் காட்டும்போதும், அவற்றையெல்லாம் நாம் உயிருள்ள விசுவாசத்துடன் கவனித்துக் கேட்போமாக.

இப்போதனைகளினின்று, நம்மில் ஒவ்வொருவரும் நமது நடக்கைக்கும் விருப்பத்துக்கும் தக்கதுபோல், வேண்டிய சத்தியங்களைத் தெரிந்துகொண்டு அவற்றை மேற்கொண்டொழுக வேண்டும். அச்சத்தியங்கள் எவ்வளவு அற்ப சொற்பமானவைகளாய்க் காணப்பட்டாலும் அவைகளை அபேக்ஷிக்கவும், அப்போதனைகளிலுள்ள நமது புத்திக்கெட்டாதவைகளைத் துவேஷிக்கவும் கூடாது. ஏனெனில் ஞானவான்களை நாம் கண்டனஞ்செய்வது தவறு. மேலும் தேவ ஏவுதல்களால் தூண்டப்பட்ட நீதிமான்களையும், சர்வேசுரனுடைய அர்ச்சியசிஷ்டவர்களையும் அவமதிப்பது தேவ நிந்தனையாம்.

5. ஆனதுபற்றி முந்தமுந்த வேதாகமங்களிலுள்ள உண்மைகளை ஆராய்ந்து கண்டுபிடிக்க வருந்துவாயாக. அவைகள் எவ்வளவு சாதாரணமான சத்தியங்களாயிருந்தபோதிலும், அவைகளை விசுவசித்து அவற்றின் பிரகாரம் நடக்கத் தீர்மானித்துக்கொள். முதலில் அவற்றால் உனக்கு நன்மை உண்டாகுமானால் பிறகு சர்வேசுரன் தமது பரம ஞானத்தின் மறைவுள்ள இரகசியங்களை உனக்கு விளங்கப்பண்ணுவார். "ஆகையால் நன்மை செய்ய அறிந்தவன் அதைச் செய்யாதிருப்பானாகில் அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" என்று யாக்கோபு ஆகமம் 4-ம் அதி. 17-ம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

வாசித்தறிந்தவைகளைக்கொண்டு ஞானப்பலனடையாதவர்களும், வேத சத்தியங்களைச் சரிவர அறிந்துகொண்டபிறகு அவைகளை மேற்கொண்டொழுகித் தங்கள் நடக்கையைச் சீர்திருத்திக்கொள்ளாதவர்களும், மேஜை நிறையப் பல ருசிகரமான ஆகாரங்களிருந்தும் அவற்றைப் புசியாமல் வெறுமனே பசியோடு திரும்பிப்போகிறவர்களுக்கொப்பாவார்கள்.

ஒருவன் வேலை செய்யாதவனாயில் வறுமையான ஸ்திதியிலிருப்பதுபோல அரிதாய்ச் செபம் செய்கிறவன் சுறுக்குள்ள பத்திமானாவது கஷ்டம்.

யாதாமொருவன் தனது குற்றங்குறைகளை ஆராய்ந்தறிந்து அவற்றைத் திருத்திக்கொள்ள மனமில்லாமல், பிறருடைய குறைகளைப்பற்றிப் பேசுவானாகில், அவன் முட்களுக்குள்ளே நல்ல விதையை விதைப்பவன்போலாவான். ஆசாபாச எழுச்சிகளை உத்தம விதமாய் அடக்காமல், செபம் செய்ய வருபவன், எவ்வளவுதான் பக்தி உருக்கத்தோடு ஜெபித்தாலும், அதனால் பலனையடையான். சர்வேசுரனுக்கு அருவருப்பாயுள்ள பாவக்களைகளைத் தன்னாத்துமத்திலிருந்து வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டு, எப்போதும் அவருடைய சமுகத்தில் நேர்மையாய் நடக்கிறவன் பாக்கியவான். கடவுள் முன்னிலையில் மகா தாழ்ச்சியோடும், மிகுந்த மனஸ்தாபத்தோடும், தன் அநீதங்களைச் சங்கீர்த்தனம் பண்ணுகிறவன், எல்லாப் பாவங்களினின்றும் பரிசுத்தனாக்கப்படுவான்.

6. தெய்வபக்தியுள்ளவன் தன் ஜெபத்திலும், கல்விப்பிரியன் தன் புஸ்தகங்களிலும், பத்தியுள்ளவன் புண்ணியஞ்செய்வதிலும், பெருந்தன்மையுள்ளவன் தன் மகிமையிலும், தாழ்ச்சியுள்ளவன் இகழ்ச்சியிலும், தனவந்தன் தன் ஆஸ்தியிலும், பிச்சைக்காரன் பிச்சையெடுப்பதிலும், போசனப்பிரியன் குடிப்பதிலும் உண்பதிலும், மிதபோஜியானவன் மட்டசனத்திலும், சோம்பேறி வியர்த்தமான பேச்சிலும், ஞானவான் தன் கல்வியறிவிலும், உத்தம சந்நியாசி ஒழுங்குக்குக் கீழ்ப்படிவதிலும் இன்பங்கொள்ளுகிறான். ஆனால் இவ்வித இலௌ

கீக இன்பங்கள் மெய்யான தேவ சிநேகமும் இருதய சமாதானமுமுள்ள ஒருவன் அநுபவிக்கும் தெய்வீக யோகவின்பத்துக்கு ஈடாகா.

உனது ஆத்துமத்துக்கு மோசம் வருவிக்கத்தேடுகிற சத்துருக்களை நீ ஜெயித்து மேற்கொள்ளவேண்டுமானால், அவர்களை விட்டோடி மௌனத்திலும், ஏகாந்தத்திலும், ஜெபதபத்திலும், படிப்பிலும், வேலையிலும் உன் காலத்தைக் கழிப்பாயாக.

பத்திமான் ஞானக்காரியங்களைப்பற்றி நினைப்பதிலும், உண்மையைப் பேசுவதிலும், நீதியாய் நடப்பதிலும், சர்வ ஜாக்கிரதையுள்ளவனாயிருப்பான். மேலும் அவன் பிரபஞ்ச காரியங்களை நிந்தித்துப் பரலோக காரியங்களின்பேரில் அபேட்சையுள்ளவனாயிருப்பான்.

அடக்கமுள்ளவன் புறத்தியார் தனக்குச் சொல்லும் புத்திமதிகளை மகா தாழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வான்; முன் யோசனையுள்ளவன் தனக்குக் கெடுதி சம்பவிப்பதற்கு இடங்கொடான்; நோயாளி பொறுமையோடு தன் வருத்தத்தை அனுபவிப்பான்; சுறுசுறுப்புள்ளவன் தன் வேலையைப் புறக்கணிக்கமாட்டான்; அற்பக் குற்றங்களை விலக்காதவன் பலத்த குற்றங்களில் விழுவான்.

7. காலையில்பத்தி வெதுவெதுப்புள்ளவனாயிருப்பவன் மாலையில் பத்தி சுறுக்குள்ளவனாயிருப்பது அரிது.

ஒருவன் மட்டித்தனமுங் கேடுமுள்ள அசட்டைத்தனத்துக்கு இடங்கொடாமல் தன்னுடைய இரட்சண்ய அலுவலைச் செய்வதில் பிரமாணிக்கமும் சுறுசுறுப்புள்ளவனாயிருப்பானேயாகில் சந்தேகமின்றி சர்வேசுரன் அவனுக்கு நித்திய பேரின்ப சம்பாவனையைக் கொடுப்பதில் பிரமாணிக்கரும், தாராளகுணமுள்ளவராயிருப்பார். ஏனெனில் தம்முடைய சுகிர்த நற்குணங்களையும், பரிசுத்த நடவடிக்கைகளையும் கண்டுபாவிக்கும் மகாத்துமாக்கள், அநுசரிக்கும் நற்கிருத்தியங்களுக்கும், அவர்கள் தமக்காகப் பட்டநுபவிக்கும் துன்பதுரிதங்களுக்கும் கைம்மாறாக அவர்களைத் தம்மோடு ஐக்கியமாக்கித் தம்மிலடங்கிய சகல நன்மை சுக பாக்கியங்களுக்குப் பங்காளிகளாக்குகிறார்.

சோம்பேறிக்கு இப்பிரபஞ்சத்திலுள்ள வியர்த்தமான காரியங்கள் திருப்தியைக் கொடுப்பதில்லை. ஆனால் புண்ணியவாளன் தன் அவசரத்துக்கு வேண்டிய காரியங்களையுமு லாய் வேண்டுமென்றே வெறுக்கிறான்.

மெய்யான தாழ்ச்சியில் உறுதியாயிருந்து, இலௌகீக மகிமைகளையெல்லாம் ஒன்றுமில்லாத வஸ்துவாக எண்ணி,



சுத்தக் கருத்தோடு சர்வேசுரனுடைய தோத்திரத்தையே முழுதும் தேடுகிறவன் என்றும் புண்ணிய சாங்கோபாங்க நெறியில் வழுவாமல் நடக்கிறவனாவான்.

சர்வேசுரனுக்கு மாத்திரம் பிரியப்பட விரும்பி, புறக் கவலைகளையெல்லாம் ஒழித்துவிட்டுத் தன்னுள்ளடங்கி வசித்து ஞானகாரியங்களின்மேல் நாட்டமுள்ளவனாயும், இவ்வுலக காரியங்களை வெறுத்து சர்வத்துக்கும் மேலாக சர்வேசுரனை மனப்பூரணமாய் நேசித்து அவருடைய சிநேகத்தில் என்றும் நிலைநிற்கிறவனே ஞானிகளில் ஞானியாவான்.

(இன்னும் வரும்.) S. S. G.

## A Generous Soldier.

### புறத்தியானுக்காகத் தன் இரத்தத்தைக் கொடுத்த சேவகன்.

சில நாளுக்குமுன் ஐரோப்பாவில் நடந்த யுத்தத்தில் ஓர் சேவகன் காயம்பட்டான். உடனே அவனை ஓர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனார்கள். அவன் சுகப்படவேண்டுமானால் கத்தியை வைத்து அறுத்து ஆற்றவேண்டியிருந்தது. அந்த ஆஸ்பத்திரியிலோவென்றால், ஏற்கனவே, அநேக நோயாளிகள், கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தார்கள். மேற்சொல்லப்பட்ட காயம்பட்ட சேவகன் இரத்தமெல்லாம் சுண்டி, மெலிந்துபோயிருந்ததினால், அவனைச் சத்தரம் செய்யும்போது தாங்கமாட்டானே. ஆகையால், வேறு இரத்தத்தை சூட்சக் குழாய் வழியாய் அவன் உடலில் செலுத்தவேண்டி நேர்ந்தது. இதனால், வைத்திய சாஸ்திரி உரத்த சத்தத்தோடு இதற்கு என்ன செய்கிறதென்று கத்தினார்.

இவர் இப்படி பலமாய்ப் பேசிய சத்தம் பக்கத்திற் படுத்திருந்த, பிராஞ்சு தேசத்தில் பிரிட்டன் மாகாணத்தைச் சேர்ந்த ஓர் பிரிட்டன் சேவகன் காதில் விழுந்தது. அப்போது இந்தச் சேவகன் உடனே வைத்திய சாஸ்திரியைப் பார்த்து தாழ்மையுடன் கேட்டதாவது: "ஐயா! நீர் அறுக்கப்போகும் அந்த பிரிட்டன் சேவகன், என் உடன்தோழ சிப்பாயாக்கும். உங்களுக்கு இஷ்டமானால் என் திரேகத்தின் ஒரு பாகத்திலிருந்து, இரத்தம் எடுத்து, அவன் திரேகத்தில்

செலுத்தலாம்" என்றான். வைத்திய சாஸ்திரி இவன் சொல்லைக்கேட்டுச் சந்தோஷப்பட்டு, பிரிட்டன் சேவகனுடைய திரேகத்திலிருந்து, இரத்தம் எடுத்து தான் அறுக்கப்போகும் காயம்பட்ட சேவகனுடைய திரேகத்தில், சூட்சக் குழாய் வழியாய்ச் செலுத்தினார். அப்போது வைத்திய சாஸ்திரியுடைய பிரயாசை முயற்சியால் தன் சத்திர வைத்தியம் அநுகூலமடைந்தது. அவ்விடமிருந்த யாவரும் இந்த பிரிட்டன் சேவகனுடைய தாராள குணத்தைப் பார்த்து அதிசயப்பட்டார்கள். இவன் ஏழையாயிருந்ததினால், இவன் குடும்பப் பிழைப்புக்கு வேண்டி, 500 பிராங்க்ஸ் பணம், உடனே சேகரம் செய்து, வைத்திய சாஸ்திரி பிரிட்டன் சேவகனுக்குக் கொடுக்கப்போனார். அந்த சேவகன் வைத்திய சாஸ்திரியைப் பார்த்து:—"ஐயா! அந்தப் பணம் எனக்கு வேண்டாமென்க மறுபடியும், அதை வாங்கிக்கொள் என்று வற்புறுத்த, அந்தச் சேவகன் "ஐயா! என் இரத்தத்தைக் கிரயத்துக்கல்ல, தருமமாகவே கொடுத்தேன்" என்றான்.

சகோதரமே! நமதாண்டவராகிய சேசுநாதர் 19 நூற்றாண்டுகளாக, தமது இரத்தத்தை மானிட ஜென்மங்களின் இரத்தத்தாரை வழியாய்ச் செலுத்திவருகிறாரோ! இப்பேர்ப்பட்ட தாராளகுணத்திற்கு எல்லை வரம்பில்லையோ, இதற்குக் கைம்மாறாக என்ன கேட்கிறார்? பொன் அல்ல, வெள்ளியல்ல, பிறர்சிநேகத்தையே கேட்கிறார். ஆகையால், நாம் செய்யவேண்டியதென்ன? அவருக்கு நன்றியறிந்த தோஸ்திரஞ்செய்து, அவரை ஆராதித்து, மகிமைப்படுத்தி சிநேகிப்போமாக.

## History of the Diocese of Coimbatore.

## கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் சரிதை.

அப்போஸ்தலரான அர்ச். தோமையாருக்குப் பிறகு, அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியாரும், முத்திப்பேறுபெற்ற தெபிரித்தோ அருளானந்தரும், இன்னும் வேறே அநேக பரிசுத்தரும், பக்திப் பற்றுதலுமுள்ள வேதபோதகர்களும், இந்தியாவில் சத்திய வேதத்தைப் போதித்தார்கள்.

17-ம் நூற்றாண்டில், மதுரை மிஷனிலிருந்து, சேசுசபைக் குருக்கள் கோயமுத்தூர் நாட்டில் அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தைப் போதித்து, அநேகம்பேரைத் திருச்சபையிற் சேர்த்தார்கள்.



1775-ம் வருஷத்தில் புதுச்சேரி, மைசூர், கோயமுத்தூர், கும்பகோணம் முதலிய நாடுகள், அந்நிய தேசத்து போதகர் சபையின் குருக்களுக்கு அர்ச். பாப்பானவரால் ஒப்புவிக்கப்பட்டன. இவர்கள் வருங்காலத்தில், கோயமுத்தூர், நீலகிரி, மலையாளம் முதலிய நாடுகளில் உள்ள பற்பல ஊர்களில் கோவில்களும், கத்தோலிக் கிறீஸ்துவர்களும் இருந்ததாக பழைய சரித்திரத்தில் காண்கிறோம். அவைகளில் சிலவற்றைப்பற்றிய சுருக்கமான வரலாற்றைக் குறித்தெழுதுவோம்:—

**சவேரியார்பாளையம்:**—கோயமுத்தூருக்கு அருகில் இருக்கும் இந்தக் கிராமத்தில்தான் கோயமுத்தூர் நாட்டிலுள்ள முதல் கிறீஸ்துவர்கள் காணப்பட்டார்கள் என்று சொல்லுகிறார்கள்.

1482-ம் வருஷத்தில் பிலியகுளம் என்னும், ஏரி கட்டப்பட்டபோது, சவேரியார்பாளையம் என்ற கிறீஸ்துவ ஊர் உண்டாயிற்று என்பது சிலருடைய அபிப்பிராயம். வேறு சிலரோவென்றால், 16-ம் நூற்றாண்டில் மாத்திரம் உண்டாயிற்றென்றும், அங்கேயிருந்த முதல் கிறீஸ்துவர்கள் அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியார் கையினால் ஞானஸ்நானம் பெற்று, மேற்குக் கடற்கரையோரத்து, மலையாள தேசத்திலிருந்து வந்துசேர்ந்ததாகவும் சொல்லுகிறார்கள். இந்த அபிப்பிராயந்தான் நியாயமாய்த் தோன்றுகிறது. அந்தக்காலத்திலேயே, கண்ணம்பாளையம், பிலியகுளம் என்ற கிராமங்களிலும்கூட சில கிறீஸ்துவர்கள் குடியிருந்தார்கள்.

**தாராபுரம்:**—அமராவதி, ஆற்றின் கரையோரமாயிருக்கும், தாராபுரம் என்னும் ஊர், முன்காலத்தில் கோயமுத்தூர் ஜில்லாவின் தலைப்பட்டணமாயிருந்தது. 1608-ம் வருஷத்தில் அவ்வூரில் முதல் கத்தோலிக்குக் கோவில் கட்டப்பட்டது. சுமார் 1650-ம் வருஷத்தில், தஞ்சாவூரில் அஞ்ஞானிகளால் உபத்திரவப்பட்ட கிறீஸ்துவர்கள் தாராபுரத்துக்கு ஓடிவந்துவிட்டார்கள். அவ்விடம் வடக்குப் பக்கத்தில் நஞ்சையன் பாளையம் என்னும் கிராமத்தில் ஓர் பெரிய கோவில் கட்டினார்களாம்.—திப்புசுல்த்தான் சண்டைகாலத்தில், திப்பு

வுடைய சேவகர்கள் சங். இராயப்பநாதர் என்ற சேசுசபைக் குருசுவாமியாரைக் கொன்றுவிட்டார்கள். அவர் அவ்விடத்தில்தான் அடக்கஞ் செய்யப்பட்டார். அவருடைய கல்லறையை இன்னும் காணலாம்.

கரூர், ஈரோடு, முதலிய ஊர்களில் சுமார் 1650-ம் வருஷத்தில் சில கிறீஸ்துவர்கள் குடியிருந்தார்களாம்.

**சத்தியமங்கலம்** :—இந்த ஊரில் 1640-ம் வருஷத்தில் கிறீஸ்துவ சபை அபிவிர்த்தியாய் ஸ்தாபிக்கப்பட்டது. அன்றியும், அக்காலத்தில், கணவாய்க்கரை, பசூர், வாணிப்புத்தூர், பூதப்பாடி, கருமுத்தன்பட்டி, மேட்டூர், குத்தால்பூர் முதலியவிடங்களிலும் கிறீஸ்துவர்கள் மிகப் பெருகியிருந்தார்கள்.—பசூரிலும், கணவாய்க் கரையிலும், பூதப்பாடியிலும், முதலிய சிலவிடங்களில் முற்காலத்திய கோவிற் கட்டடங்களில் சில இடிந்த குறிப்படையாளங்களை நாளைக்கும் காணலாகும்.—விசேஷமாய் சத்தியமங்கலத்தையடுத்த கிராமங்களில் அநேகம் கிறீஸ்துவர்கள் குடியிருந்தார்கள்.—அவ்விடத்தில், மதுரையிலிருந்து வந்த "சங். தாகோஸ்தா" என்னும் குருவானவர் ஒரே மாதத்தில் 600 அஞ்ஞானிகளை மனந்திருப்பி ஞானஸ்நானம் கொடுத்தாராம். முத்திப்பேறுபெற்ற அருளானந்தையர், (John de Britto.) அந்நாட்டிலிருந்த கிறீஸ்துவர்களை மூன்று தடவை சந்தித்து விசாரிக்க வந்தார்.

1650—1651 வருஷத்துக்குள்ளாக 1500 அஞ்ஞானிகள் மனந்திரும்பி திருச்சபையிற் சேர்ந்தார்கள்.—தவிர 1656—1659-ம் வருஷகாலத்துக்குள் 1639 அஞ்ஞானிகள் கிறீஸ்துவர்களானார்கள். ஆகையால், அக்காலத்தில், அந்தப் பங்கு விசாரணையில் சுமார் 3500 கிறீஸ்துவர்கள் இருந்தார்கள். 1662-ம் வருஷத்தில் அதே விசாரணையில் 15 கோவில்கள் கணக்கெடுக்கப்பட்டது. அந்தக்காலத்தில், சத்தியமங்கல நாட்டிலிருந்த கிறீஸ்துவர்கள், அஞ்ஞானிகளால் பற்பல சமயங்களில் சத்தியவேதத்துக்காக உபத்திரவப்பட்டார்கள். பிற்பாடு திப்பு சுல்த்தான், கிறீஸ்துவேதத்துக்கு விரோதமாய் எழும்பிக் கலாபனை செய்தகாலத்தில், சத்தியமங்கலம் நாட்டில் குடியிருந்த கிறீஸ்துவர்கள் கலைந்துபோக, அவர்களுடைய கோவில்களெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. இந்த ஸ்திதி மிகவும் துக்கத்துக்குரியது.

## The Narrow gate.
## நெருக்கமான வாசல்.

ஒருநாள் நல்ல சுகமும், புஷ்டியுமுள்ள ஒரு மனிதன், தபசினால் வெகுவாய் மெலிந்திருந்த, கூரோதார்ஸ் என்னும் பரிசுத்த குருவானவரை நோக்கி: "சுவாமி, நான் மோட்சத்திலே பிரவேசிப்பது கஷ்டமாயிருக்கும் என்று தோன்றுகிறது. ஆகையால் மோட்சத் திறவுகோல் வைத்திருக்கும் அர்ச். இராயப்பரிடத்தில், நீங்கள் எனக்காகப்பேசி, சிபாரிசு செய்வீர்களென்று நம்புகிறேன். மேலும் நீங்கள் மோட்சத்திற்குப்போகும் சமயத்தில் நான் உங்கள் அங்கியைக் கைப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு உங்களோடேகூட அதிலே பிரவேசிக்கப் பிரயாசப்படுவேன்" என்று சொன்னான்.

குருவானவர் புன்னகைகொண்டு, "நேசனே! ஒருபோதும் அப்படிச் செய்யாதே. ஏனெனில் மோட்ச வாசல் அதிக மெத்த நெருக்கமாயிருக்கிறது. அப்படிச் செய்வாயாகில், நாம் இருவரும் மோட்சத்தில் பிரவேசிக்க முடியாமல் வெளியே இருக்கவேண்டியிருக்கும் என்று பயப்படுகிறேன்" என்று சொன்னார்.

God is not deaf :—சர்வேசுரன் செவிடரல்ல :—

வேறொரு சமயத்தில் ஒரு சிறு பையன் ஷை கூரோதார்ஸ் என்னும் குருவானவரிடம் வந்து சொன்னதாவது: "சுவாமி, நீங்கள் ஜெபம் செய்யும்போது, ஏன் சத்தமில்லாமல் மெதுவாய்ப் பேசுகிறீர்கள்? ஆனால் நீங்கள் பிரசங்கஞ்செய்யும்போது, கோவில் அதிரும்படிச் சத்தமாய்ப் பேசுகிறீர்கள்" என்று கேட்டான்—அதற்குக் குருவானவர், "தம்பீ, நான் பிரசங்கம் செய்யும்போது அநேக செவிடர்களுக்கும், தூங்குகிறவர்களுக்கும் செய்கிறேன். நான் ஜெபம்பண்ணும்போதோ, சர்வேசுரனோடு பேசுகிறேன். சர்வேசுரன் செவிடரல்ல" என்று பதிலுரைத்தார். (Olim.)

## Lace Work

### பின்னல் வேலை.

கோயமுத்தூர் அமலோற்பவ சீர்மைக் கன்னியாஸ்திரி மடத்தில் நடத்தப்பட்டுவரும் தர்ம கிருத்தியங்களில், பின்னல் வேலைக் கற்றுக்கொடுத்தல் ஓர் விசேஷமானது. ஷை மடத்தில், சிறு பிராயந்துவக்கி, பெண்பிள்ளைகள், உள் பிள்ளைகளும், வெளிப்பிள்ளைகளும் ஏறக்குறைய 30 பேர், அந்தச் சிறந்த கைத்தொழிலைப் பழகி வருகிறார்கள். அவர்கள் அந்த வேலை பழகிவரும்போதே, அவர்கள் செய்யும் வேலைக்குக் கூலி கொடுக்கப்படுகிறது.—அவ்விதமே, பெண்கள் சுறுசுறுப்பான வேலை அப்பியாசம், பக்தி, நல்லொழுக்கம் இது முதலிய நற்குணங்களை அடைகிறதுமல்லாமல், பின்காலத்துக்கு ஓர் நல்ல பிழைப்பை அடையக்கூடியவர்கள் ஆகிறார்கள்.

ஆகையால் கூடியமட்டும் பெண்பிள்ளைகள், இந்த வேலையைக் கற்றுக்கொள்வது மெத்தவும் நல்லது.—பின்னல் வேலை எல்லாருக்கும் தகுந்த வேலையானது. ஏழைப் பெண்பிள்ளைகளும், இராஜ புத்திரிகளும், வாலிபப் பெண்களும், விவாகமான பெண்களும், படியாத பெண்களும், படித்த பெண்களும், யாவரும் தடையின்றி கஷ்டமின்றி, செலவின்றிக் கற்றுக்கொள்ளலாம்.

பெண்பிள்ளைகள் தங்கள் வீட்டு வேலைகளைச் செய்கிறதுடன் பின்னல் வேலையும் செய்வார்களானால், வீண்நேரம் போக்கி, அடுத்த வீட்டுக்காரியோடு, வீண் பேச்சு, கோள் குண்டணி, அவதூறு வார்த்தை பேசி, சண்டைபோடுவதற்கு நேரமிராது ; அதற்குப் பதிலாய் அவர்கள் தங்கள் ஆத்துமத்துக்கு நன்மையும், வீட்டுக்குப் பெருதவியுமாயிருப்பார்களென்பதற்கு யாதோர் சந்தேகமுமில்லை.—பின்னல வேலையுள்ள உடை எவ்விடத்திலும் பிரியமாய் விற்கப்படுகிறது. மேலும் "சுறுசுறுப்புள்ள வேலை சோதனையில்லாத துணை" என்னும் பழமொழியொப்ப, அந்த இன்பகரமான வேலை, சோம்பல் என்னும் பேயைத் துரத்திவிடும்.—ஷை பின்னல் வேலையைப் பழகிக்கொள்ளப் பிரியப்படும் வெளிப்பெண்பிள்ளைகள், அமலோற்பவ, சீர்மைத் தாயார் மடத்திற்குப்போய்



விபரம் கேட்டுக்கொள்ளலாம். அந்த நல்ல தாயார் அவர்களைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வதோடுகூட, அவளவள் செய்யும் வேலைக்குத் தகுந்ததுபோல் கிரயமும் கொடுப்பார்கள்.

## Jayaseelan

### ஜயசீலன்.

### 12-ம் அதிகாரம்.

ஜயசீலன் தீன் தோழனைத் தெரிந்துகொள்வதில் அஜாக்கிரதையும், முன்யோசனையில்லாமலும் இருந்தபடியால் சிறிது காலத்துக்குள்ளாக, மதியிழந்து, மரியாதைகெட்டு, அவனுக்கு வந்த கேடு நிர்ப்பாக்கியம் எவ்வளவென்று முன் சொன்னவைகளைக்கொண்டு வாசித்தவர்கள் அறிந்திருக்கலாம். மனிதனுடைய சுபாவம் பாவத்திலே சாயுமல்லாமல், புண்ணியத்திலே சாய்கிறதில்லை. அதனால் பொல்லாதவர்களோடு கூடினால், அவர்கள் சொல்லுகிற பொல்லாத புத்தியினாலேயும், அவர்களுடைய பொல்லாத நடக்கையினாலேயும், துர்க்குணங்கள், பாவ அக்கிரமங்கள், எளிதாய் விளையுமென்பதற்கு சந்தேகமில்லை. ஞானியானவர் சொல்லுவதுபோல், புத்திமான்களோடு சஞ்சரிக்கிறவர்கள், புத்திமான்களுமாய், புண்ணியவான்களுமாயிருப்பார்கள். பொல்லாதவர்களுடன் சிநேகமாயிருப்பவன் அவர்களுக்குள்ளே அவனும் ஒருத்தன் ஆவான்." உலகபோதனையாகிய வீண் வார்த்தைகள், உலகத்தில் ஞானிகளாக எண்ணப்படுகிறவர்களுடைய தப்பறைகள், உலகம் புண்ணிய நற்செய்கைகளாகப் பாவிக்கிற அக்கிரம செய்கைகள் அடங்கிய நூல்களை ஜயசீலன் தன் மனச்சாட்சி கண்டனையைப் புறக்கணித்து, சிநேகிதனின் முகப்பிரீதிக்காக வாசிக்கத் தொடங்கினான். தன் அன்பார்ந்த உபாத்தியாயரிடம் கற்றுக்கொண்ட நல்லொழுக்கம், அவர் அவனுக்குப் புகட்டிய அமிர்தஞானம், புண்ணியமார்க்கம், தனபாலன் சகவாசத்தால் கொஞ்சங்கொஞ்சமாய் அவன் இருதயத்தில் மறையத்

துவக்கினது. தன் நண்பன் கையில் தன்னை முழுதும் ஒப்படைத்தபடியால், அவனை முழுதும் நம்பி, வேதத்துக்கு விரோதமாய் நாஸ்திகர் எழுதிய புஸ்தகங்களை வாசிக்கவும் தலைப்பட்டான். இந்தத் தப்பறைகளுக்குச் விரோதமாய் சொல்லப்படும் விஷயங்களை அறிய ஜயசீலன் நினைக்கவில்லை. தனபாலனும் தன் நண்பனைக் கெடுக்கக் கங்கணங்கட்டிக் கொண்டிருந்தபடியால், எதிர் நியாயங்களை அவன் அறியாதிருக்கும்படி மிகவும் ஜாக்கிரதையாயிருந்தான். இதன் முடிவுதான் என்ன? வெகு சீக்கிரத்தில் ஜயசீலன் தெய்வ பயம் அற்று, கடவுளை மறந்து, தன்னைப் படைத்துக் காப்பாற்றி, போஷித்து, பராமரித்து வருபவரை புறக்கணித்து தூஷிக்கவும் ஆரம்பித்துவிட்டான். அடக்கவொடுக்கம், மேரை மரியாதையற்று, தன் மனம்போனபடி செய்வதே சர்வ நன்மையென்றும் எண்ணினான்.

ஜயசீலனைப் பாவ மார்க்கத்தில் நடத்திச்சென்ற தனபாலன் இத்துடன் அவனை விடவில்லை. இன்னம் அவனிடத்தில் இருக்கக்கூடிய நல்ல உணர்ச்சிகளை, வேரோடு பறித்தெறிய, லாகிரி முதலிய மதுபானங்களை அருந்தவும் அவனைப் பழக்கிவிட்டான். குடியனுடைய சேர்க்கை அயோக்கியர், துஷ்டர், திருடர் இவர்களுடன் இருக்குமென்பதற்கு யாது சந்தேகம். ஜயசீலன் மதுபானக் கடையிலிருந்து, நாடகம், கூத்துமேடை ஏறினான். அதில், அவன் கற்றுக்கொண்ட பாடங்களால், தன் தகப்பனை வஞ்சிக்கவும், அவருடைய கட்டளைகளை அசட்டை செய்து, புகட்டின நற்புத்திமதிகளை ஏளனஞ்செய்து பழிக்கவும் ஏற்பட்டான். கடைசியாய்த் தன் பயிற்சிக்கு, யாதோ குறைவாயிருந்ததுபோல, சூதாட்டமும் கற்றுக்கொண்டானானால், அவனிடத்தில் எல்லாவித, அயோக்கியதனமும், துஷ்டக் கிரிகைகளும் வெளிப்படும் என்பதற்கு ஐயமுண்டோ? துஷ்ட சகவாசத்தால் ஜயசீலன் ஒரு வருஷகாலத்துக்குள்ளாக, பெரிய துஷ்டனும் அயோக்கியனுமானான். சூதாடும் இடத்துக்கு வந்த அநேகர் பெருந்தொகையோடு திரும்பிப்போவதை அநுபோகத்தில் பார்த்திருந்த ஜயசீலனுடைய இருதயத்தில் பண அவாவை எழுப்பி, அவனைப் படுகுழியில் ஆழ்த்த நினைத்திருந்த தனபாலன், பல வழிபாடுகளை எண்ணிக் கடைசியாய் ஒரு உபாயம் சித்தி பெறுமென்று நம்பி, அதை உபயோகிக்கலானான். தன்னிடத்திலுள்ள சொற்பப் பணத்தைக்கொண்டு, சூதாட்டத்தால், பெரிய தொகை சம்பாதிக்க முடியாததாகையால், இன்



னும் கொஞ்சம் பணம் எப்படியாவது சேகரிக்க வேண்டுமென்றும், அதற்காகத் தான் ஒரு யோசனை செய்திருப்பதாகவும் தனபாலன் கூறினான். அதாவது, உன் தகப்பனைப் பட்டணத்து ஜனங்களெல்லாம் யோக்கியமான மனிதனாகவும், பெரிய வியாபாரியாகவும், எண்ணுவதாலும், மற்றவர்கள் அவரிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பதாலும், நீ அவருடைய கையெழுத்து வைத்து, நாம் ஆசிக்கும் பணத்தைச் சம்பாதிப்பது வெகு சுலபம். இப்பணத்தைக்கொண்டு, பெரிய தொகையை சூதாட்டத்தில் ஜெயித்து அதைக் கட்டிவிடலாம். மீதியிருக்கும் பெரிய தொகையால் நாம் தனவந்தராகி சுகமாக வாழ்வதற்கென்ன தடை? என்றான். இதைக் கேட்டவுடனே ஜயசீலன் மனந் திடுக்கிட்டது. தனபாலன் தன்னை ஏய்க்க ஆசிக்குங் காரியத்தின் கனகனத்தையும், அதினால் தனக்கு வரக்கூடிய ஆபத்து மோசத்தையும் ஒருவாறு அறிந்தான். ஆனால் அவன் சொன்னதற்கெல்லாம் தனபாலன் சமாதானஞ்சொல்லி, அவனை வற்புறுத்தினதின்மேல், கடைசியாய்ச் சம்மதித்து குறித்த நாளில் 500 ரூபாய்க்குப் பத்திரத்தில் தன் தகப்பனுடைய கள்ளக் கையொப்பமும் போட்டான்.

(தொடரும்.)

## Here and There.

### நானா சங்கதிகள்.

The Marian Congress :—நமது பரிசுத்த பிதாவாகிய 15-ம் ஆசிர்வாதப்பர் சென்னை அதிமேற்றிராணியாரவர்களுக்குத் தமது ஆசிர்வாதமடங்கிய தந்திச் சமாச்சாரத்தைக் கர்தினால் காஸ்பாரி மூலியமாய் அனுப்பி, இவ்வருஷம் கூடவிருக்கும் மரியாயின் மகா சங்கத்துக்கு முயற்சி யெடுத்திருக்கும் கிறீஸ்துவர்களையும், சமூகமாகும் சகல விசுவாசிகளையும் மோட்ச இராக்கினியின் பாதுகாவலில் வைத்து, அவள் பரிசுத்த குமாரனின் ஆசீரை இம்மகா சங்கத்தின்மீது அளிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறார்.

More pay for teachers:—தற்காலத்துக்கு, இந்த வருஷம் மட்டும், சர்க்கார் எலிமெண்டரி பாடசாலைகளின் உபாத்தியாயருக்கு மாதம் 4 ரூபாய், அதிகமாய்க் கொடுக்கவேணுமென்று சென்னை சட்ட சபையில் தீர்மானித்தார்கள். 30 ரூபாய்க்குக் குறையாமல் கொடுப்பார்கள் என்று யாரோ சொன்னார்களாம்?

Wake up, Catholics:—சென்ற மே-மீ மதுரைப் பட்டணத்தில் நடந்த கத்தோலிக்கு சங்கத்தில், நம் கத்தோலிக்கர்களினுடையவும், பதிதர்களான புரோட்டெஸ்டாண்டார்களுடையவும், கல்வி விர்த்தியின் தாரதம்மியத்தை எடுத்துக் காட்டப்பட்டபோது, கத்தோலிக்கர் கல்விப்பயிற்சியில் எவ்வளவோ பின்னிடைந்திருக்கிறார்களென்று விசனிக்கின்றோம்.

கத்தோலிக்கர் புரோட்டெஸ்டாண்டாரைவிட ஜனத்தொகையில் அதிகப்பட்டிருந்தும், கல்வியில் பின்னிட்டிருக்கும் தாரதம்மியம் பின்வருமாறு :—

| | | புரோட். | கத்தோ. |
|---|---|---|---|
| பீ. ஏ. பட்டம் பெற்றவர்கள் | ... | 369. | 121. |
| எப். ஏ. பரீட்சை | ... ... | 4364. | 1439. |
| மெற்றிகுலேட்ஸ் | ... ... | 9364. | 4639. |

கத்தோலிக் பெற்றோர்களே, கண்விழித்து வாசியுங்கள்!—பதிதர்களுக்கு கத்தோலிக்கரைப்போலே, பள்ளிக்கூடங்கள், மடங்கள், அவ்வளவு கிடையாதே! நாம் கடைத்தேறுவதெப்படி?

St. Joan of Arc:—கடந்த மே-மீ 16-ம் உ பிராஞ்சு தேசத்தின் வீரமுள்ளவராகிய முத். ஜான்தார்க் என்னும் கன்னிகைக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் திருச்சபையால் கொடுக்கப்பட்டது. அத்தினத்தில் உரோமாபுரியில் நடந்த கொண்டாட்டத்தின் மகிமையை என்னவென்று சொல்லமுடியாது. 60 கர்தினால்மார்களும், 300 மேற்றிராணிமார்களும், பற்பல தேசத்து ஸ்தானாபதிகளும், மந்திரிமார்களும், கணக்கில்லாத விசுவாசிகளும் ஆஜராக வந்திருந்தார்கள். ஆங்கிலேயர்களும், இத்தாலியர்களும், மற்ற தேசத்தாரும், பிராஞ்சு தேசத்தாரோடே ஒரே மனதாய்ச் சேர்ந்து, அதி அற்புதாசய



மான அர்ச்சியசிஷ்ட கன்னிகையை பக்தி விசுவாச சந்தோஷத்தோடு ஆடம்பரமாய் வாழ்த்திக் கொண்டாடினார்கள்.

அர்ச். ஜான்தார்க் அம்மாளுக்குத் தோஸ்திரம்!

Train Service:—அடியிற்கண்ட விஷயம் சில சந்தாதாரர்களுக்குப் பிரயோசனமாயிருக்கக்கூடும்.

ஜூன்-மீ 15-உக்கு மேற்பட ரெயில் வண்டி. (Train) நேரத்தின் ஜாபிதா மாற்றப்பட்டிருப்பதின் விபரமாவது :—

**மதறஸ் — மேட்டுப்பாளையம்.**

I. மெயில் வண்டி (Mail train).

| ஸ்டேஷன்கள். | | புறப்படுதல் மணிக்கு | சேர்தல் மணிக்கு. |
|---|---|---|---|
| மதருஸ் | ... | மாலை 6-40. | |
| கோயமுத்தூர் | ... | ... ... | காலை 7-5. |
| மேட்டுப்பாளையம் | ... | ... ... | காலை 8. |
| உதகமண்டலம் | ... | மத். 3. | மத். 12-40. |
| மேட்டுப்பாளையம் | ... | ... ... | மாலை 7-40. |
| கோயமுத்தூர் | ... | ... ... | மாலை 8-42. |
| மதருஸ் | ... | ... ... | காலை 9-30. |
| **II. பாஸெஞ்சர் டிரெயின் :** | | | |
| போத்தனூர் | ... | காலை 8-45. | காலை 8-55. |
| கோயமுத்தூர் | ... | ... ... | காலை 9-50. |
| மேட்டுப்பாளையம் | ... | ... ... | |
| உதகமண்டலம் | ... | காலை 11. | மாலை 3-40. |
| மேட்டுப்பாளையம் | ... | ... ... | மாலை 2-55. |
| கோயமுத்தூர் | ... | ... ... | மாலை 4-52. |
| போத்தனூர் | ... | | மாலை 5. |

## பெரிய கோடிவேரியில் 2—6—20-ல் நடந்த 16 கலியாண ஆடம்பரங்களின் சிறப்பு ஒழுங்குகளின் வர்த்தமானங்களாவன.

1. கொஞ்சகாலத்துக்குமுன் கொடிவேரியங்கு விசாரணை செய்துகொண்டிருந்த கனம் சங்கைக்குரிய கோசே சுவாமியார் ஏற்படுத்திய பிரகாரம் நாட்டுக் கலியாணங்களில் அஞ்ஞானத்துக்கடுத்த சீர்காரியங்களையும், வீண் ஆசாரங்களையும், வீண் செலவுகளையும், குடி முதலிய லாகிரி வஸ்துக்களையும் நிறுத்தி, 16 கலியாணங்கள் நடந்தேறின.

2. அர்ச். சவேரியார் ஆலயத்தில் மெய்விவாக திருமண வார்த்தைப்பாடு கொடுத்த 16 கலியாணக்காரருக்காக கனம் சங்கைக்குரிய ஜே. பி. பெத்தி சுவாமியார் பாட்டுப்பூசையும் வைத்து அந்தப் பூசையில் கலியாண ஆசீர்வாதமும் கொடுத்து பூசைமுடிந்து அவர்களுடன் சற்று நேரம் தேவ ஆசீர்வாதம் வரக்கூடிய திரு வசனங்களை சம்பாஷித்து ஆசீர்புரிந்து சந்தோஷத்துடன் அவர்களைத் தங்கள் தங்கள் வீட்டிற்கு அனுப்பிவைத்தார்.

3. அன்றையத்தினமே கலியாணக்காரர்கள் யாவரும் சீர் என்னும் வீண் சடங்கு, வீண் ஆசாரங்களையும், வீண் செலவுகளையும் நீக்கி, மதுபானத்தையும் தள்ளி, விருந்துண்டும் வரிசைகளும் கொடுத்து சாயரட்சை மேளவாத்தியத்துடன் நல்ல அமரிக்கையுடனும் சமாதானத்துடனும் சந்தோஷத்துடனும் ஊர்கோலம் சுற்றுப்பிரகாரம் வந்து முடிவுசெய்தார்கள்.

4. இந்த மெய்விவாகம் செய்துகொண்டவர்கள் தங்கள் குடும்பத்தில் சமாதானமாயும் சந்தோஷமாயுமிருக்கும்படியாக சர்வேசுரன் அர்ச். சூசையப்பருடைய திருக்குடும்பத்தை ஆசீர்வதித்து காப்பாற்றின மாதிரியாய் இந்தக் குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும்படியாய் சேசுவின் திரு இருதயத்தைப் பார்த்து வேண்டிக்கொள்வோமாக.

J. B. PETIT.



## Kodiveri.

## பெரிய கோடிவேரி கோவில் பஞ்சாங்கம்.

---

### 1920-ம் ௵ ஜூலை-௴

1-ம் ௳ வியாழக்கிழமை சேசுநாதருடைய திரு இரத்தத்தின் திருநாள். பூசைக்குப் பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

2-ம் ௳ மாதத்தின் முதல் வெள்ளி. பூசைக்குப்பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

16-ம் ௳ வெள்ளிக்கிழமை அர்ச். உத்தரியமாதாத் திருநாள். பூசைக்குப்பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம்—பிறகு உத்தரிய சபையில் சேர பிரியமுள்ளவர்கள் சேரலாம்.

### ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகள்.

சிக்கரசம்பாளையம். பாப்புமுதலி மதலையம்மாள் இவர்கள் குமாரன் ஆரோக்கியன்.

பெரிய கொடிவேரி. இராயப்பமுதலி அந்தோனியம்மாள் இவர்கள் குமாரன் சின்னச்சாமி.

ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகள், சேசுநாதர், சுவாமியைப்போல இந்த குழந்தைகள் வயதிலும் ஞானத்திலும் தேவ வரப்பிரசாதத்திலும் வளருவார்களாக.

**பெரிய கொடிவேரி 2-6-20-ல் நடந்த கல்யாணங்கள்.**

1. அருளப்பன் - சலேத்துமரியம்மாள்.
2. சவரிமுத்து முதலி - மரியமுத்தம்மாள்.
3. மரியசூசை முதலி - அன்னம்மாள்.
4. மரியசூசை முதலி - சவரியம்மாள்.
5. அந்தோனி முதலி - செபஸ்தியம்மாள்.
6. பாக்கியம்பிள்ளை - மதலையம்மாள்.
7. மிக்கேல் முதலி - அன்னம்மாள்.
8. சின்னப்ப முதலி - கிறிஸ்தீனம்மாள்.
9. அந்தோனி முதலி - அற்புதம்மாள்.
10. சூசை முதலி - சலேத்து மரியம்மாள்.
11. அக்கரை கொடிவேரி அந்தோனி முதலி - சவரியம்மாள்.
12. 4-6-20-ல் இராயப்ப முதலி - மாசில்லம்மாள்.
13. கன்னம்பாளையம் மதலைமுத்து முதலி - அற்புத மரியம்மாள்.
14. அக்கரை கொடிவேரி அடைக்கலப்ப முதலி - அற்புத மரியம்மாள்.
15. 7-6-20-ல் அக்கரை கொடிவேரி சூசையப்ப முதலி - சூசைமரியம்மாள்.
16. பெரிய கொடிவேரி யாக்கோப் முதலி - இரத்தினம்மாள்.
17. 9-6-20-ல் கொங்குருபாளையம் செல்லநாயக முதலி - காணிக்கையம்மாள்.

சர்வேசுரன் திருக்குடும்பத்தை எவ்விதமாக ஆசீர்வதித்து காப்பாற்றினதுபோல, இந்தப் புதுக்குடும்பங்களையும் ஆசீர்வதித்து காப்பாற்றி வரும்படியாக வேண்டிக்கொள்வோமாக.

J. B. Petit.

---


# The Messenger of Truth.

## சத்திய தூதன்.

Vol. VI. August 1920. No. 8

புத்தகம் VI.] FIDES AC ROBUR. [நம்பர் 8.


8 - SEP 1... MADRAS

## Responsibility of Christian Women.

### கிறீஸ்துவ பெண்பிள்ளைகளுடைய கடமை.

குடும்பமானது பாக்கியமாய்ச் செழித்தோங்குவதற்கும், சீர் குலைந்து, நிர்மூலமாவதற்கும், அதில் வாழும் பெண்பிள்ளைகளை முக்கிய காரணமென்று சொல்லலாம். புருஷனை நல்ல வழியில் நடக்கச் செய்வதும், அவன் துர்மார்க்கமாய் நடந்தால் அவனைச் சரியான வழிக்குக் கொண்டுவருவதும், பிள்ளைகளை சிறுபத்திலேயே, நன்னடக்கையில் பழக்குவதும், அவர்கள் வளர்ந்தபின் தங்கள் குடும்பத்தை ஒழுங்காய் நடத்தும்படி செய்வதும், குடும்பத்தில் நித்திய சமாதானத்தைக் காப்பாற்றுவதும், எல்லாம், கிறீஸ்துவக் குடும்பத்தில் வாழும் பெண்பிள்ளைகளின் கையில் இருக்கிறது:—ஆகையால் பெண்பிள்ளைகள் நல்லவர்களாயிருந்தால் நல்ல சம்மனசுகளைப்போல அநேக புண்ணியங்களுக்குக் காரணமாயிருப்பார்கள் என்பது உண்மை. ஆனால் அவர்கள் துர்க்குணமுள்ளவர்களாயிருந்தால், பசாசுகளைப்போலாகி கணக்கில்லாத பாவங்களுக்குக் காரணமாயிருப்பார்கள் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

தகப்பன் அநுதினம் வேலை செய்து, தன் உத்தியோகத்தைச் செலுத்திக், கஷ்டப்பட்டு வேர்வை வேர்த்துக் குடும்பத்துக்குத் தேவையான அன்றன்றுள்ள அப்பத்தைச் சம்

பாதித்துக்கொண்டிருக்கும்போது, தாயானவள் வீட்டில் இருந்து குழந்தைகளை விசாரித்து வளர்க்கிறதோடுகூட, அவர்களுக்கு புத்திமதி சொல்லி, நல்லொழுக்கம், படிப்பினை, பத்தி விசுவாசம், மேலோர் மரியாதை, கற்பு, கீழ்ப்படிதல் இவை முதலிய நற்குணங்களைக் கற்பிக்கவேண்டிய கடமைப்பட்டிருக்கிறாள்.

ஆகையால் அந்தந்த வீட்டிலே வாழும் பிள்ளைகள் நல்லவர்கள் என்றால் தாயானவள்தான் அதற்கு முக்கிய காரணம். அதற்கு விரோதமாய்ப் பிள்ளைகள் பொய், திருட்டு, துர்ப்பேச்சு, துர் நடக்கை முதலிய துர்க்குணங்களில் பழகியிருந்தால் தாய்தானே அதற்குக் காரணம் என்பது சரி. அப்படிப்பட்ட தாய் தன் பிள்ளைகளுக்கு பால் கொடுப்பதோடுகூட அவர்கள் இருதயத்தில் துர்க்குணங்களையும் உண்டாக்குகிறாள். அவர்களுக்கு துர் மாதிரிகை காண்பித்து வீட்டு வேலையைச் சரியாய்ச் செய்யாமல் வீண் நேரம் போக்கி, அடுத்த வீட்டுக்காரியோடு வீண்பேச்சுப்பேசி, தகாத வார்த்தைகளைச் சொல்லி சண்டை போடும்போது, பிள்ளைக்கு என்ன படிப்பினையாகும்?

அவ்விதமாய்ப் பிள்ளைகள் கெட்டு, கெட்ட சிநேகிதர்களோடு சேர்ந்து, குடித்து, சூதாட்டம் ஆடி, தெய்வமில்லை, வேதமில்லை என்றாற்போல துர்மார்க்கராய் நடந்து, தங்கள் தாய் தகப்பனுக்கும், குடும்பத்தாருக்கும் அவமானமும், கஸ்தி துன்பமும் வருவித்தால் அதற்குக் காரணம் என்னவென்று அறிய தூரம் போகவேண்டியதில்லை; தகப்பனையும், குருமார்களையும் கேட்கவேண்டாம். அந்தப் பிள்ளைகளைப் பெற்று வளர்த்த தாயாரைத்தான் கேட்கவேண்டும். அவளே அதற்குக் காரணம்.

ஆகையால் கிறீஸ்துவக் குடும்பம் பாக்கியமாய்ச் செழித்தோங்குவதற்கு தாயானவள் இரண்டு முக்கியமான கடமைகளை அநுசரிக்கவேண்டும். அதாவது :—1. அவள் தன் பிள்ளைகளுக்கு நன்மாதிரிகையாய் நடந்து அவர்களுக்கு நல்லொழுக்கம், தெய்வ பக்தி, கீழ்ப்படிதல் முதலிய நற்குணங்களைக் கற்பிக்கவேண்டியது.

2. பெண்சாதி தன் புருஷனைப் பட்சமாய் நேசித்து வீட்டிலேயே சமாதானத்தைக் காப்பாற்றவேண்டும்.

இது விஷயத்தில் அர்ச். கிரகோரி என்பவர் பெண்பிள்ளைகளுக்குச் சொல்லும் புத்திமதியாவது :

“எல்லாத்துக்குமுன் சர்வேசுரனைச் சிநேகி. பிறகு உன் கணவனை உன் ஜீவியத்தின் கண்போல எண்ணி நட,



அவனைத்தவிர மற்றொருவனையும் நேசியாதே. அவன் உன் பேரில் கோபமாயிருக்க இடங்கொடாதே. அவன் கோபமாயிருக்கும்போது, நீ பேசாமல் இரு. அவனுடைய துன்ப வருத்தங்களில், அவனுக்கு உதவி செய்து ஆறுதல் சொல்லத் தவறாதே.

உன் கணவனை நேசித்து அன்போடே அநுசரித்து நட, ஏதாவது சொல்லவேணுமானால் சமயம் பார்த்து பட்சத்தோடும் மரியாதையோடும் சொல். அவன் குற்றங்களினிமித்தம் அவன்பேரில் இரக்கப்படவேணுமேயொழிய கடுஞ்சொல் கூறித் திட்டித் தூற்றுவது மகா புத்தியீனம்.”

பெண்பிள்ளைகள் எல்லோரும் இந்தத் தங்கப் புத்திமதிகளைக் கேட்டு அநுசரித்து நடப்பார்களேயானால் அநேக குடும்பங்களில் அதிக பாக்கியமும் செல்வமும் செழித்தோங்கும் என்பதற்கு சந்தேகமே இல்லை.

(சத்திய நேசன்.)

## The Little Garden of Roses.

## சிறு ரோஜாத் தோட்டம்.

### மலர் 13.

‘Let all your actions be done in charity’ (I Cor. XVI. 14.)

‘உங்கள் காரியமெல்லாம் தேவசிநேகத்தோடு செய்யப்படக்கடவது’ (1 கொரி. 16-ம் அதி. 14-ம் வச.)

தர்மமானது ஒரு உத்தம புண்ணியம். அது எல்லா ஞானங்களையும், கொடைகளையும், புண்ணியங்களையும் விட மிகவும் மேலானது. அது நம்மைச் சர்வேசுரனோடு ஐக்கியமாக்குகின்றது. மனிதர்களைச் சம்மனசுகளுக்கொப்பாகச் செய்து, நம்மைச் சர்வேசுரனுடைய பிள்ளைகளாகவும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய நேசர்களாகவும் ஆகும் வரத்தை நமக்குப் பெறுவிக்கின்றது. இதனால்தான் நமது திவ்விய கர்த்தர் ஒரு மாசற்ற கன்னிகையினிடத்தினின்று பிறந்து மனுக்குலத்தை இரட்சிக்கச் சிலுவையிலறையுண்டு மரிக்கத் திருவுளமானார்.

தர்மம் நம்மைச் சகல பாவங்களினின்றும், நித்திய மரணத்தினின்றும் மீட்கும். அது நமக்கு உற்சாகத்தைக் கொடுத்து, மட்டில்லாத ஞான இன்பத்தை நமது ஆத்துமத்தில் பொழிந்து, அதினால் நமதாண்டவராகிய சர்வேசுரனை நமது முழு இருதயத்தோடும், முழு ஆத்துமத்தோடும், சகல தத்துவங்களோடும், முழு மனதோடும் நேசிக்கச் செய்யும்.

அது பாவத்தின் தோஷத்தை நிவர்த்தி செய்யும்; அடிமைத்தனத்திலுள்ளவனைச் சிறை மீட்கும்; சத்துருவைச் சிநேகிதனாக்கும்; ஒரு அந்நியனை நமக்கு அந்நியோந்நியமாக்கும்; அறிமுகமில்லாதவனை நம்மோடு சிநேகமுள்ளவனாகச் செய்யும்; தர்மம் நாம் சர்வேசுரனிடத்தில் ஸ்திரப்பட்டு புண்ணிய வழியில் வழுவாமல் நடக்கவும், மரிக்கும்போது தேவ இஷ்டப்பிரசாதத்தோடே செத்து மோட்ச பேரின்ப பாக்கியத்தையடையவும் வரத்தைத் தருகின்றது. ஆங்காரிகளைத் தாழ்ச்சியுள்ளவர்களாகவும், மூர்க்கமுள்ளவர்களை அடக்கமுள்ளவர்களாயும், புண்ணியத்தில் வெதுவெதுப்புள்ளவர்களைச் சுறுசுறுப்புள்ளவர்களாகவும் செய்கின்றது. கஸ்தி துன்பப்படுகிறவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. உலோப குணமுள்ளவர்களின் கைகளைத் திறக்கும்படி செய்கின்றது. பூலோக மனிதன் தன் செல்வங்களை அரோசித்துத் தள்ளவும், புண்ணியத்தின்மேல் ஆசைகொண்டு நித்திய பாக்கியத்தைத் தேடவும் மனங்கொள்ளச் செய்கிறது. அறிவீனர்களுக்கு ஞானத்தையும் கல்வியையும் புகட்டுகின்றது. ஆகையால் தருமவாளர்களுக்குத் தாங்கள் செய்த யாதோர் தருமத்தின் பலனை திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் பரலோகத்தினின்று சகல வரப்பிரசாதங்களையும், சரீர சுகபாக்கியங்களையும் ஏராளமாய்க் கொடுக்கிறார்.

அதனுடைய ஓட்டமோ மகா தைரியமும் துணிகரமுமுள்ளது. எப்படியெனில் அது பத்தி சுவாலகர், ஞானாதிக்கர் என்கிற நவவகை வானோர்களுக்கு மேலாகக் கிளம்புகின்றது. அது ஒன்றாயிருப்பதுமன்றி, ஒன்றுக்கொன்று எதிரிடையான வஸ்துக்களாற் பூரணமடைந்து தலை, இடை, கடைகளைத் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கிறது.

மனித ஒப்புரவிற் பிறவாது மனதுக்குச் சந்தோஷத்தையளித்து, உத்தம நன்மையையடையப் பேறு பலனைத் தந்து சதாகாலத்துக்கும் நிலைத்திருக்குமா சந்தோஷத்தை ஒன்றல்ல, எல்லா மனிதர்களுடைய இருதயத்திலும் ஊட்டுகிறது.

தர்மமானது வானத்திலும் பூமியிலும், நீரிலும் நிலத்திலும் எங்கும் வியாபிக்கின்றது.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவைகளில் கண் பார்க்கக்கூடியதும், காது கேட்கக்கூடியதுமான அற்புதங்களில் சர்வேசுரனுடைய ஸ்தோத்திரத்தையும், மகிமையையும் தோன்றுவிக்கச் செய்வது தர்மமே.

ஒரே ஒரு முயற்சியால் உலகத்தைச் சிருஷ்டித்தருளின சர்வேசுரனின் சுவாதீன சித்தத்தையும், அவரது சக்தியையும், அவரது ஞானத்தையும், எல்லாவற்றையும் பரிபூரணமாக ஆளும் அவரது முன்னறிந்து ஊட்டுகையையும், தனது பூரண நிலையினால் தெரிவிக்காத எவ்வளவு அற்ப வஸ்துவும், இகழத்தக்க பொருளும் இப்பிரபஞ்ச முழுவதிலுமில்லை. இப்படியில்லையென்ற நினைவே இராஜாதி இராஜனும், தன் நேசத்தகப்பனுமாகிய உத்தம சர்வேசுரனை நாடி அவரைத் துதிக்குமாறும், எல்லாவிடத்திலும் அவரது கீர்த்தியைப் புகழுமாறும் பக்திமானைத் தூண்டிவிடுகிறது.

தீயின்முன் மெழுகு உருகுவதுபோலத் தர்மம் ஒருவனுடைய இருதயத்தை இளகச்செய்யும். அப்போது அவனுடைய சிந்தை உன்னத சர்வேசுரனை நோக்கி அவரோடு ஐக்கியமாயிருக்கத்தேடும். அப்போது உன்னதமான மகிமையும், நித்திய பாக்கியமும், ஏக திரவியமும், அளவற்ற ஞானமும், இன்பக்கடலும், பரிபூரண சத்தியமும், நீதியும், ஞானமுமாயிருக்கிற தேவனுடைய தயாபர அடைக்கலத்தை நாடி அவருடைய நேசத்தைக் கைக்கொள்ளவும், அவர் பேரிலேயே நம்பிக்கையாயிருந்து, அவருக்குள் ஐக்கியமாகி அவரோடு அளவறுக்கப்படாத நித்திய பேரின்ப பாக்கியத்தை அநுபவிக்கப் பூலோக காரியங்களைவிட்டு அது உயர எழும்பி வானத்தின் நக்ஷத்திரங்களுக்கு மேலாகத் தாவிச் செல்லுகின்றது.

தான தர்மம் நாம் கடைசிவரைக்கும் நிலைத்திருக்கும் வரத்தை நமக்கு அடைவிக்கின்றது. ஏனெனில் இவ்வரிய வரத்தைப் பெறும்படியாக எத்தனையோ அர்ச்சியசிஷ்டவர்கள் இடைவிடாமற் கண்ணீர் சிந்தி எவ்வளவோ உருக்கத்தோடு சர்வேசுரனை மன்றாடி வந்தார்கள்.

தர்மமானது பாவத்துக்கு உத்தரிப்பும், பரிகாரமுமாகும். தண்ணீர் நெருப்பை அவிக்கிறதுபோலவே தர்மம் பாவத்தைத் தடுக்கும். இது பிற சிநேகத்துக்கும் தேவ சிநேகத்துக்கும் அத்தாட்சியும் உறுதியுமாகும். பிற சிநேகமில்லாதவனோவென்றால் சர்வேசுரனைச் சிநேகிக்கிறதுமில்லை, மோட்சத்தை அடையப்போகிறதுமில்லை. இதை நன்றாய் நினைவுகூர்வாயாக.

(தொடரும்.) S. S. G.

# History of the Diocese of Coimbatore.

## கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் சரிதை.

(முன் தொடர்ச்சி.)

**சத்தியமங்கலம்** :—சுமார் 1650-ம் வருஷத்தில் கொடிவேரி, மாதாப்பாளையம் கோட்டாம்பாளையம், குதிரைக்கல் பாளையம், தாளவாடி, கவுண்டன்பாளையம், சதுமுகை துரையம்பாளையம் முதலிய ஊர்களில் கிறீஸ்துவர்கள் இருந்தார்கள். துரையம்பாளையம் வடக்கிலுள்ள ஒரு தோட்டத்தில் சிலுவையைத் தாங்கியிருக்கும் ஒரு கல்லறையை இன்னும் காணலாம். அவ்விடத்தில் சேசு சபையைச் சேர்ந்த ஒரு குருவானவர் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவருடைய பேர் தெரியாது.

கொங்குருபாளையம் என்னும் ஊரில் முத்திப்பேறுபெற்ற அருளானந்தையர் சத்திய வேதத்தைப் போதித்தாராம். அவ்வூரின் மேற்கு புறத்திலுள்ள முத்துபாளையம் என்னும் மேட்டிலே ஒரு கோவில் கட்டப்பட்டிருந்தது.

**கணுவக்கரை** :—சத்தியமங்கலம் பங்கு விசாரணை பெரிதான பிறகு 1666-ம் வருஷத்தில் கணுவக்கரை, விசப்பூர் என்னும் இரண்டு பங்குகளாக பிரிக்கப்பட்டன. சில காலத்துக்குப்பின் அங்கேயிருந்த குருவானவர் விசப்பூரை விட்டு எல்லைமங்கலம் என்னும் கிராமத்தில் தமது வாசஸ்தலத்தை ஸ்தாபித்தார்.

கணுவக்கரையிலிருந்த கிறீஸ்துவர்கள் காளிப்பேட்டை மூடுதுறை இவ்விரண்டு ஊர்களில் பரம்பினார்கள். கணுவக்கரையில் 17-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருந்த கோவிலுக்கு இப்போது ஒரு சிறு திட்டு தவிர வேறு அடையாளம் ஒன்றுமில்லை. அதற்குக் காரணம் இன்னதென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. அவ்வண்ணம் அக்காலத்தில் அந்தப் பக்கத்திலுள்ள கிறீஸ்துவ ஊர்கள் கொஞ்சக்காலம் செழித்த பிறகு முழுதும் அழிந்துபோயின. அவ்வூர்களில் வசித்த கிறீஸ்துவர்கள் சமாதானமில்லாமல் ஒருவரொருவருக்கு விரோதமாய் சண்டை எழும்பி வந்ததினால் பிரிந்து கலைந்துபோனதாக சிலர் சொல்லுகிறார்கள். வேறே சில ஊர் கிறீஸ்துவர்கள் தங்கள் பங்கு சுவாமியாருக்கும், திருச்சபைக்கும் விரோதமாய்க் கலாபனை செய்ததினாலே தேவ கோபாக்கினையினால் தண்டிக்கப்பட்டு அவர்களுடைய ஊர் முதலாய் தரை மட்டமாய் நிர்மூலமானதென்று சிலர் சொல்லுகிறார்கள்.

**கருமத்தன்பட்டி** :—முன் காலத்தில் கணுவக்கரையின் பங்கு விசாரணையைச் சேர்ந்த கருமத்தன்பட்டி என்னும் ஊரில் கிறீஸ்துவர்கள் மிகப் பெருகியிருந்தார்கள். அவ்விடமிருக்கும் கோவில் ஜெபமாலைமாதாவின் திருயாத்திரை ஸ்தலமாக சுமார் 1640-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது. ஏறக்குறைய அதே காலத்தில் சோமனூர் என்னும் ஊரில் சில அஞ்ஞானிகள் மனந்திரும்பி, சத்திய வேதத்தில் சேர்ந்து அர்ச். இஞ்ஞாசியாரைக் குறித்து ஓர் கோவிலைக் கட்டினார்கள். கருமத்தன்பட்டியைச் சேர்ந்த கிறீஸ்துவர்கள் முத்திப்பேறு பெற்ற அருளானந்தய்யரால் விசாரிக்கப்படப் பாக்கியம்பெற்றார்கள். கருமத்தன்பட்டிக்கடுத்த வேட்டுபாளையம். கோம்பக்காட்டுப்புதூர் என்னும் கிராமங்களில் சில கிறீஸ்துவர்கள் குடியேறினார்கள்.

**வாளிபாளையம்** :—சுமார் 1690-ம் வருஷத்தில பிர்கடவு என்னும் ஊரிலிருந்து கணுவக்கரைக்கு வந்த ஓர் அஞ்ஞானிப் பையன் அமிர்தநாத சுவாமியாரால் ஞானஸ்நானம் பெற்றான். அவன் பேர் ஆநந்தப்பன். அவன் வளர்ந்தபின் உபதேசி வேலை செய்துகொண்டிருக்கும்போது ஒரு நாள் கூட்டலத்தூர் என்னும் மலையில் வசித்த ஒரு அஞ்ஞானி பூசாரி சத்திய வேதத்தில் சேரப் பிரியமாய் இருந்ததாக கேள்விப்பட்டு அவனிடம் போய் எல்லைமங்கலம் என்னும் ஊருக்கு அவனைக் கூட்டிக்கொண்டு போனான். அங்கேயிருந்த குருவானவர் அப்பூசாரிக்கு அமிர்தபபன் என்கிற பேர் வைத்து ஞானஸ்நானம் கொடுத்தார். ஆநந்தப்பனையும், அமிர்தப்பனையும் கொண்டு அநேக அஞ்ஞானிகள் மனந்திரும்பினார்கள். அவ்விடத்தில் கிறீஸ்துவர்கள் பெருகினபிறகு ஏரகாலிபாளையம் என்னும் ஊரில் சிலர் தங்கள் வாசஸ்தலத்தை ஸ்தாபித்தார்கள். பிறகு அங்கிருந்து வாளிபாளையம் என்னும் ஊருக்கு வந்து குடியிருந்தார்கள். அழிந்துபோன ஏரகாலிபாளையத்தில் நிற்கும் அடையாளம் ஒன்றுமில்லை. ஆனால் 1850-ம் வருஷமுதல் கிறீஸ்துவர்கள் வாளிபாளையத்தில் திடமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார்கள்.

---

## Existence of the soul.

### ஆத்துமம் உண்டா?

சில வருஷங்களுக்குமுன் ஒரு ஊரில் நாஸ்திகனான ஒரு வைத்திய சாஸ்திரி ஒருநாள் ஒரு குருவானவரோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கும்போது கேட்டதாவது: சுவாமீ, எப்போதாவது ஓர் ஆத்துமத்தைக் கண்ணாலே பார்த்திருக்கிறீர்களா?

குருவானவர்: இல்லை.

நாஸ்திகன்: ஒரு ஆத்துமத்தை காதாலே கேட்டிருக்கிறீர்களா?

குரு: இல்லை.

நாஸ்திகன்: ஒரு ஆத்துமத்தின் ருசியை அறிந்திருக்கிறீர்களா?

குரு: இல்லை.

நாஸ்திகன்: ஒரு ஆத்துமத்தை அநுபவத்தில் அறிந்திருக்கிறீர்களா?

குரு: ஆமாம். கடவுள் அப்படி எனக்குக் கிருபை செய்திருக்கிறார்.

நாஸ்திகன்: அப்படியிருக்க ஒன்றைத்தவிர மூன்று இந்திரியங்கள் ஆத்துமமில்லை என்கிறதற்கு திருஷ்டாந்தமாயிருக்கின்றன என்று சொன்னார். அதற்கு மறுமொழியாக குருவானவர் கேட்டதாவது: வைத்திய சாஸ்திரியாரே, எப்போதாவது, நோவைக் கண்ணாலே பார்த்திருக்கிறீர்களா?

நாஸ்திகன்: இல்லை.

குரு: ஒரு நோவை காதாலே கேட்டிருக்கிறீர்களா?

நாஸ்திகன்: இல்லை.

குரு: ஒரு நோவின் வாசனையை அறிந்திருக்கிறீர்களா?

நாஸ்திகன்: இல்லை.

குரு: ஒரு நோவின் ருசியை அறிந்திருக்கிறீர்களா?

நாஸ்திகன்: இல்லை

குரு: ஒரு நோவை அனுபவித்திருக்கிறீர்களா?

நாஸ்திகன்: ஆமாம்.

குரு: அப்படியிருக்க, ஒன்றைத்தவிர நான்கு இந்திரியங்கள் நோவு கிடையாதென்பதற்கு திருஷ்டாந்தமாயிருக்கின்றன:—ஆனாலும் நோவு உண்டு என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அப்படியே ஆத்துமம் உண்டு என்பது உறுதி என்று சொன்னார். வைத்திய சாஸ்திரி அதைக் கேட்டு திகைப்படைந்து போய்விட்டார். Olim.

---

## Ten good reasons.

### பத்து சுகிர்த காரணங்கள்.

கள்ளுச் சாராயக் கடைகள் மூடப்படுவதற்கு பத்து முக்கிய காரணங்கள் உண்டு. அதாவது:

1. கள்ளுச் சாராயக் கடைகளால் எந்த சபையின் நல்லொழுக்கமும் அபிவிருத்தியும் அழிந்து போகின்றன.

2. இராஜ்ய விவகாரத்து விஷயத்தில் விவேகம் மங்கிப் போகிறது.

3. ஷை கடைகளால் இராஜ சட்டத்தை மீறி நடப்பதற்கு, காரணமாயிருக்கும்.

4. ஷை கடைக்காரர் அநியாயமான லாபத்தைச் சம்பாதிக்கிறார்கள்.

5. கடைக்குப் போகிறவர்களுடைய நல்ல பேரும் உத்தியோகமும் கெட்டுப்போகும்.

6. கள்ளுச் சாராயக்கடைகளிலிருந்து குடும்பத்துக்கு தரித்திரமும், நிர்ப்பாக்கியமும் உண்டாகிறது.

7. அவ்விடத்துக்குப் போகிற தாய் தகப்பன், அல்லது புருஷன் பெண்சாதி தங்கள் அந்தஸ்தின் கடமைகளைப் பற்றி அசட்டைபண்ணி ஒழுங்கீனமாய் நடக்கிறார்கள்.

8. அதினால் வாலிப ஆண்பிள்ளைகளுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் துர்மாதிரிகையும், அவர்கள் யோக்கியத்துக்கு ஆபத்தும் உண்டாகும்.

9. ஷையாருடைய மக்களும் சபிக்கப்பட்ட இடங்களுக்குப்போய், குடியினால் கெட்டு தங்கள் தாய் தகப்பனுக்கு துன்பமும், கஸ்தியும் வருவிக்கிறார்கள்.

10. எந்த ஊரில் கள்ளுச் சாராயக்கடைகள் அதிகமாயிருக்குமோ அவ்வூருக்கு அதிக அவமானம் வரும்.

---

Keep your face towards the sunshine and the shadows will fall behind you.

---

# அரசாங்க சீர்திருத்தம்.

(பப்ளிஸிடி பிரோவிலிருந்து)

மாட்சிமை தங்கிய நமது சக்கரவர்த்தியார் இந்தியாவின் அரசாட்சி சம்பந்தமாய் சில புதிய ஏற்பாடுகளை அங்கீகரித்தாரென்பதும், அப்புதிய ஏற்பாடுகள் இன்னும் சில மாதங்களுக்குள் நடவடிக்கைக்கு வருமென்பதும் யாவருக்கும் இப்பொழுது தெரிந்த விஷயம்.

இப்புதிய ஏற்பாட்டுக்கும், பழைய ஏற்பாட்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? புதிதாக எவ்விதமான அதிகாரங்களும் உரிமைகளும், சென்னை மாகாணவாசிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன?

தற்கால ஏற்பாட்டின்படி கனம் பொருந்திய கவர்னரும் அவரது நிர்வாக சபையும் இராஜதானியின் நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள். இவ்வாளுகை இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் திருப்தியுண்டாகுமாறு சென்னை கவர்னர் நன்றாக நடத்தவேண்டும்.

மேலும் தற்கால ஏற்பாட்டின்படி சட்ட நிரூபண சபை உத்தியோக முறையில் அங்கத்தினராக இருப்பவர்களையும் சேர்த்து மொத்தம் 46 அங்கத்தினர்களோடு கூடியது ஆகும். அவர்களில்:—

| | | | |
|---|---|---|---|
| உத்தியோகஸ்தர்கள் | ... | ... | 12 |
| கவர்னரால் தெரிந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரல்லாதவர்கள் | ... | ... | 13 |
| குடிகளால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் | .. | | 21 |
| | ஆக மொத்தம் | ... | 46 |

இவ்வாறு குடிகளால் தெரிந்தெடுக்கப்படும் 21 அங்கத்தினரில் இருவர் மகமதியராலும், மற்றவர்கள் ஜமீன்தாரர்களாலும், பெரிய மிராசுதாரர்களாலும், வியாபாரிகளாலும், தோட்டக்காரர்களாலும், (Planters) ஜில்லா, தாலுக்கா போர்டுகளின் மெம்பர்களாலும், முனிசிபல் கவுன்சிலர்களாலும், சென்னை சர்வ கலாசபையாராலும், சென்னை கார்ப்பொரேஷன் கவுன்சிலர்களாலும் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.



இந்த சபைக்கு அநேக அதிகாரங்கள் உண்டு. இதின் அனுமதியின்றி யாதொரு புதிய சட்டமும் ஏற்படுத்த முடியாது. இதின் அங்கத்தினர் கேள்விகள் மூலமாய் துரைத்தனத்தின் நோக்கங்களை அறிந்துகொள்ளலாம்.

அன்றியும் இவர்கள் பொது ஜனங்கள் விருப்பங்களை சபையில் பேசி அவற்றைத் தீர்மானங்களாக சபையினர் அங்கீகரிக்குமாறு செய்து ஜனங்களின் அபிப்பிராயத்தை துரைத்தனத்தாருக்குத் தெரிவிக்கவும் கூடும். ஆனால் இப்புதிய ஏற்பாடு செய்ய, தீர்மானத்திற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, துரைத்தனத்தார் இச்சட்டசபையின் தீர்மானங்களின்படியே நடக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

இந்தியா துரைத்தனத்தாரின் நோக்கமும் இச்சட்ட நிரூபணசபையாரின் நோக்கமும் ஏதாவதொரு விஷயத்தில் ஒத்திராவிட்டால், மாகாண துரைத்தனத்தார் இந்தியா துரைத்தனத்தாரின் சொற்படியே நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவது, இச்சபையின் அங்கத்தினரில் பாதிக்கு மேல் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாகவும், அல்லது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். அன்றியும் மற்றவர்களோ 7,000 செல்வாக்குள்ள பணக்காரக்குடிகளால் மாத்திரம் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். ஆதலால் குடிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களை அதிகப்படுத்தவேண்டுமென்றும், எலக்ஷனில் இன்னும் அநேக ஜனங்களுக்கு செல்வாக்கு இருக்கவேண்டுமென்றும் எல்லோரும் நிர்ப்பந்தித்திருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:-

முதலாவது—சட்ட சபையின் அங்கத்தினரில் பெரும்பான்மையோர் குடிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். புதுச் சபையின் அங்கத்தினர் 127 பேர்கள். இவர்களில் குடிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் 98. அன்றியும் முன்போல பணக்காரர்களும் பட்டதாரிகள் மட்டும் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெறுகிறதில்லை. அநேக சிறு குடிகளும், சொற்ப சொத்துள்ள ஏழைகளுங்கூட 'வோட்' கொடுக்கும் அதிகாரம் பெறுவார்கள். ஆகவே புதுச் சபையின் அங்கத்தினர் முன்னிருந்ததைக் காட்டிலும் அதிகமான

இவ்விராஜதானியின் ஜனங்களின் மனோபாவத்தைச் சட்டசபையில் எடுத்துப்பேசக்கூடியவர்கள் ஆவர். இரண்டாவது—முக்கிய அம்சம் என்னவென்றால், இனி சில இலாகா சம்மந்தப்பட்டவரையில் இந்தியா கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயப்படியேதான் மாகாண துரைத்தனத்தார் நடக்கவேண்டுமென்பது இல்லாது, இனி ஏற்படும் சட்டசபைக்கு இஷ்டப்படி நடக்கவேண்டுமென்பதேயாம். இவ்விதம் விடப்பட்ட இலாகாக்களுக்கு 'மாற்றப்பட்ட இலாகாக்கள்' என்று பெயர். அவை கல்வி, விவசாயம், ஜில்லா, தாலூக்கா போர்டுகள், முனிசிபாலிடி போன்ற மற்றும் சில முக்கியமானவைகள். இனிமேல் இவ்விலாக்காக்கள் சம்பந்தப்பட்டவரையில் மாகாண துரைத்தனத்தார், சட்டசபையைத் திருப்திசெய்ய வேண்டுமேயல்லாது இந்தியா கவர்ன்மெண்டைத் திருப்தி செய்யவேண்டியதில்லை.

இதற்காக, இனிமேல், அடியிற் குறித்த ஏற்பாடுகள் செய்யப்படும். கனம் பொருந்திய கவர்னர் புதுச்சபையில் அங்கத்தினரிலிருந்து இரண்டு: மூன்று மந்திரிகளை நியமிப்பார்.

இப்பொழுது கவர்னரும் நிர்வாக சபையிலுள்ள மெம்பர்களைப்போல மந்திரிகள், கல்வி, விவசாயம் முதலிய பிரித்துக்கொடுத்த இலாக்காக்களின் வேலைகளை நடத்திவருவார்கள். இவ்விலாக்காக்களின் வேலைகளைச் சபையோர்களுக்குத் திருப்தியாகவும் விவேகத்தோடும் மந்திரிகள் நடத்திவர வேண்டும். அவ்விதம் அவர்கள் நடந்துகொள்ளாவிட்டால், அவர்கள் இலாகாச் செலவுக்குத் தேவையான பணத்தைக் கொடுக்க இச்சபை மறுத்துவிடலாம்.

இப்புதிய ஏற்பாட்டினால் மேலே எடுத்துக்காட்டிய சுதந்தரங்களைத் தவிர இன்னும் அநேக விஷயங்களில் புதிய அதிகாரங்களும் விருத்தி செய்யத்தக்க சமயங்களும் இம்மாகாண வாசிகளுக்கு வாய்க்கும். ஆனால் முக்கியமானவை மேற்கூறிய இரண்டு அம்சங்களேயாம்.

மந்திரிகள் மதியோடு தீர்மானிக்காவிட்டாலும் சரி, அல்லது அவர்கள் சரியாகத் தீர்மானித்ததைச் சட்டசபையின் இதர அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் சரி. இராஜாங்க காரியமும் கெட்டு, ஜனங்களும் கஷ்டப்படுவார்கள். ஆகையால் சட்ட சபையின் அங்கத்தினரைத் தெரிந்தெடுக்க உங்களுக்கு 'வோட்' உரிமையாயிருந்தால் எவன் ஒருவன் தானும் விவேகத்தோடு இம்மாதிரி விஷயங்களில் முடிவுக்கு

வர்க்கூடியவனோ, அதோடு சரியான ஆலோசனை செய்யக்கூடியவனோ, அதோடு சரியான ஆலோசனை செய்யும் மந்திரிகளோடு கூடி உழைப்பவனோ அவனை நீங்கள் பொறுக்கியெடுக்கவேண்டும்.

மற்றொரு விஷயத்தையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது நமது மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியார் இப்புதிய ஏற்பாட்டின் மூலமாக இந்தியா தேசத்து ஜனங்களுக்கு, புதிய அதிகாரங்களையும், உரிமைகளையும், அளித்தபோது நாம் இப்பொழுது கொடுத்த, புதிய அதிகாரத்தைச் சரிவரச் செலுத்திப் பொறுப்பைச் சரிவர வகுத்துவரும் பக்ஷத்தில் மேன்மேலும் அதிக அதிகாரங்களையும், உரிமைகளையும் நமக்கு வழங்கப்போவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்பதே.

---

## Page for the Young.

## பிள்ளைகளின் பக்கம்.

### A Pius Youth.

### பக்தியுள்ள வாலிபன்.

சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் போர்த்துக்கல் தேசத்தில் லிஸ்பன் பட்டணத்தில் உயர்ந்த வம்சபதிகளாயும், நற்குண சீலராயுமிருந்த தாய்தந்தையரிடத்தினின்று கபிரியேல் என்பவன் பிறந்தான். இவன் சிறுபிராயத்திலேயே வேதகாரியங்களையறிந்து சர்வேசுரனுக்குகந்த பிள்ளையாய் நடந்துவந்தான். இவனுக்கு தக்க வயது வந்தபோது இவனுடைய பெற்றோர் நல்லொழுக்கத்திற் சிறந்து பேர்போன ஒரு போர்டிங் மடத்துக்கு இவனை அனுப்பினார்கள். கபிரியேல் கலாசாலையில் பிரவேசித்த நாள்முதற்கொண்டு தன்னாற் கூடியவரையில் பத்தியிலும், புத்தியிலும் அபிவிர்த்தியடைய விடாமுயற்சியுடன் உழைத்து வந்தான். புதுநன்மை வாங்க ஆயத்தஞ் செய்து வற்றாத ஊறணியாகிய சம்மனசுக்களின் போஜனத்தைப் புசித்தபின் புண்ணியத்தில் நாளுக்கு நாள்

ஓங்கி வளர்ந்து, தன் பரிசுத்ததனத்தினாலும், பத்தியுருக்கத்தாலும் எல்லா மாணவர்க்கும் ஒரு திலகம்போல் விளங்கினான்.

பாலர்கள் மடத்தில் ஜீவிக்கும் காலம் பாக்கியமான காலம். ஏனென்றால் தாயைப்போல் நேசிக்கும் ஆத்தும குருக்களும், தந்தையைப்போல ஒரு கையாலடித்து மறு கையால் அணைக்கும் சிரேஷ்டர்களும் சிறுவர்களின் மாசற்ற தனத்தைக் காப்பாற்ற எவ்வளவோ பிரயாசப்படுகிறார்களென்பது நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஆனால் லீவு நாட்களில் இப்போர்ப்பட்ட விசாரணையில்லாமையால் சில விசை பிள்ளைகள் பெற்றோருடைய அஜாக்கிரதையினாலும், துஷ்ட சகவாசத்தாலும், பத்தி விசுவாசத்தைப் போக்கடித்துக் குரு மொழிதட்டி, ஞாயிறுவாரம் பூசை தப்பி, தங்கள் அருமையும் பெருமையும் குலைந்து திரிகிறதை நாம் கஸ்தியுடன் பார்த்துவருகிறோம். மடத்தைவிட்டு ரயில் வண்டியேறினதும், ‘இனி வாலை அவிழ்த்துவிடலாம்’ என்பது சிறுவர்களின் வழக்கம். ஆனால் கபிரியேல் இப்பேர்ப்பட்டவர்களின் வகுப்பைச் சேர்ந்தவனல்ல. வீடு வந்து சேர்ந்ததும் தான் மடத்திலிருக்கும்போது பண்ணின நல்ல பிரதிக்கினைகளை நினைவுகூர்ந்து, தான் சர்வேசுரன் சந்நிதானத்திலிருப்பதை உணர்ந்து தக்க மேரை மரியாதையோடும் அடக்க வொடுக்கத்தோடும் நடந்துகொள்வான். நாடோறும் பூசைக்குத் தவறாமல் போய் திவ்வியநற்கருணை உட்கொள்வான். மற்றப் பிள்ளைகளைப்போல் அவனிங்குமிங்கும் சுற்றித்திரியாமல் சாயந்திரவேளையில் அருகாமையிலுள்ள கோவிலுக்குத் திவ்வியநற்கருணை சந்திக்கச் சென்று, அவன் உருக்கமாய் வேண்டிக்கொள்வதைப் பார்த்தவர்கள் மனவுருவெடுத்த சம்மனசுதானோவென்று ஆச்சரியப்படுவார்கள்.

பள்ளிக்கூடத்தில் படிப்பை முடித்துப் பரீட்சை நடந்தவுடன் 18 பிராயம் நடக்கும்போது இப்பரிசுத்த வாலிபன் வியாதியாய் விழுந்தான். இருக்க இருக்க வியாதியதிகரித்தது. ஆயினும் தனது பத்தி முயற்சிகளில் ஒன்றையாவது கைவிட்டவனல்ல. மரணமணுகி வருவதைக்கண்ட புண்ணியசீலியாகிய அவன் தாய், தனது துக்கத்தை அடக்கிக்கொண்டு தன் மகனை நோக்கி: ‘என் கண்ணுக்குக் கண்ணாகிய மகனே! இதோ சர்வேசுரன் உன்னைத் தம்மிடம் அழைக்குங் காலம் வந்துவிட்டது. அதற்கு முஸ்திப்பு செய்’ என்று சொல்ல, அவனதை மகா சந்தோஷத்துடன் கேட்டு, ஆத்தும குருவை



வரவழைத்து அவஸ்தைபூசுதல் பெற்று, பாவசங்கீர்த்தனஞ் செய்து கடைசிவிசையாக திவ்வியநற்கருணையும் உட்கொண்டான். சாவதற்குச் சற்று நேரத்துக்குமுன், அவன் முகம் மாற, பஞ்சடைந்த கண்கள் பிரகாசிக்க, திடீரென்று உரத்த சத்தமாய், ‘ஆ! இதோ! என்னை அழைத்துக்கொண்டுபோக தேவதாயார் எழுந்தருளிவருகிறார். என் நேச தாயே! என் அருமை அன்னையே! என் மரண நேரத்தில் என்னைக் காத்து இரட்சியும்’ என்று பிரார்த்திக்கும்போது அவன் ஆத்துமம் தன் அன்பரிடம் பறந்துபோயிற்று. ஆ! எவ்வளவு பாக்கியமான மரணம்!

பிரியமான பிள்ளைகளே! நீங்களும் இப்பேர்க்கொத்த பாக்கியத்தைச் சுகித்தனுபவிக்க விரும்புகிறீர்களல்லவா? அப்படியானால் இப்பரிசுத்த மாணாக்கனை நீங்கள் பின்பற்றி நடக்கவேண்டும். ஆனதுபற்றி நீங்கள் செய்யும் பிரதிக்கினைகளைச் சாகுமட்டும் பிரமாணிக்கமாய் அநுசரித்து, நாடோறும் தவறாமல் திவ்விய பூசைகண்டு, அடிக்கடி திவ்விய நற்கருணையைச் சந்தித்து, கூடுமானால் நாடோறும் அல்லது வாரத்திற்கு ஒரு விசையாகிலும் சம்மனசுக்களின் போஜனத்தை உட்கொண்டு, உங்கள் மாசற்றதனத்தைக் காப்பாற்றவும், தேவசிநேகத்தில் விர்த்தியடையவும் விடாமுயற்சி செய்துவந்தால் இப்பரிசுத்த வாலிபன் பிரவேசித்த மோட்ச வாசல் உங்களுக்கும் திறக்கப்படுமென அறியக்கடவீர்களாக.

(போதகன்.)

---

## Jayaseelan.
## ஜயசீலன்.

### 13-ம் அதிகாரம்.

ஜயசீலன் தன் தகப்பனுடைய கள்ளக் கையொப்பத்தைப் பத்திரத்தில் இட்ட 3 மணி நேரத்துக்குள்ளாக பணம் அவன் கைக்குக் கிடைத்தது. அவன் செய்த வீர செய்கைக்காக தனபாலன் அவனை வாழ்த்தி இரண்டு பேரு

மாக இனிமேல் சாயரட்சைதோறும் சூதாடுமிடத்தில் சந்திக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தார்கள். ஜயசீலன் தன் தகப்பனை வஞ்சித்து வெளியில், 4, 5, மணி நேரம் போக்க, சமயம் கிடைக்கும் போதெல்லாம் தனபாலனை சூதாடுமிடத்தில் சந்தித்து மற்றவர்களோடு ஆடிப்பாடிக் குதித்து விளையாடி வருவார்கள். ஏமாற்றிப் பெற்றுக்கொண்ட ரூபாய் 500 எத்தனை நாளைக்கு! சில சமயங்களில் சொற்பத் தொகையை சம்பாதித்தாலும் சாதாரணமாய் தனபாலன் பெரிய தொகையை விளையாட்டில் இழந்து 15 நாட்களுக்குள்ளாக பணமுழுதும் பறி கொடுத்தவனாய், கையிலொரு காசுமில்லாத பரம ஏழையாய்த் திரும்பினான். தங்களுடைய பொக்கிஷத்தை அதிகரிக்க ஆசைப்பட்டுத் தொடங்கின வேலை அதோகதியாய் முடிந்தது. இவ்வளவு தொகையையும் இழந்தபின்னும் புத்தி வராமல் பெரிய சூதாடிகள் வழக்கமாய்ச் சொல்வதுபோல் தனபாலனும் “இப்போதுதான் விளையாட்டின் சூட்சத்தைக் கண்டுபிடித்தேன். இன்னும் 1 ரூபாய் என் கையில் இருக்குமேயாகில் எத்தனை நூறு ரூபாய்களைச் சம்பாதிக்கக்கூடுமாயிருக்கும்,” என்று சொல்லி ரொம்ப ஆயாசத்தோடும் கவலையோடும் விளையாட்டு மேஜையை விட்டெழுந்தான். அவநம்பிக்கையோடு வீட்டுக்கு இருவரும் திரும்பிப்போகப் புறப்படும்போது ஜயசீலன் தனபாலனைப் பார்த்து மிகவும் கிலேசத்தோடு சொல்வான்.

ஜயசீலன் : விளையாட்டில் பெரிய தொகை சம்பாதித்து ஆஸ்திக்காரராகி சுகமாய் வாழலாமென்ற நம்பிக்கையற்று, கொண்டுவந்த பணத்தையும் இழக்கலானோம்.

தனபாலன் : ஆம் கடைசிக் காசு வரையில் தோல்வியடைந்தோம்.

ஜய : ஆனால் நீ உபயோகிக்க இருந்த உபாயம் தவறக் கூடியதல்லவென்றும், எப்படியும் நஷ்டத்துக்கு வழியில்லை என்றும் எனக்குத் தீர்மானமாய்ச் சொன்னாயே, இப்போது என்ன ஆச்சுது.

தன : நான் உபயோகித்த தந்திரம் பிரயோஜனமுண்டாகத்தக்கதே. ஆனால் என் துர் அதிர்ஷ்டத்தினால் அப்படி நேர்ந்தது ; சமயா சமயங்களில் எப்படிப்பட்ட சமர்த்தர்களுக்கும் சம்பவிக்கக்கூடியது. என் கையில் இன்னும் ரூ 100 இருக்குமாகில்........



ஜய : கையிருப்பைப்பற்றி இப்போது பேசுவதில் யாதும் பயனில்லை. செலுத்தவேண்டிய கடனைப்பற்றி என்ன? அதுதான் பெரிய கவலை. இன்னும் சில தினங்களுக்குள்ளாக வாங்கின தொகையைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமே. அந்த எண்ணம் என் மனதில் ஆயாசத்தை உண்டாக்குகிறது. கடனை குறித்த தினத்தில் செலுத்தாவிட்டால் போலீசார் என்னை மறியல் செய்து சிறையில் போடுவார்கள். செய்யும் வழி யாது? எனக்கு பல நியாயங்களைச் சொல்லி என்னை ஏமாற்றிக் கடன் பத்திரத்தில் கள்ளக் கையொப்பம் போடச் செய்தாய். நீ தப்பித்துக்கொண்டாய், என்னைப் போலீசார் பிடிக்கும்போது எனக்கு உதவி செய்பவர் யார்?

தன : ஏன் ரொம்பவும் கலங்குகிறாய், உன்னைவிட பேடி நான் பார்த்ததில்லை. நீ தத்துவ சாஸ்திரம், தேச சட்டம் படித்தும் பிரயோஜனமென்ன? உனக்கு இப்போது வயது 19 ஆகிறது. நீ செய்யும் காரியங்களுக்கு நீ உத்தரவாதியாக வேண்டுமானால் 21 வயது ஆகவேண்டும். இந்தப் பிராயத்துக்கு முன் ஒருவன் செய்யும் குற்றத்துக்காக தேச சட்டம் ஒருவனையும் ஆக்கினைக்குட்படுத்த முடியாது. ஆகையால் நீ கவலையின்றி இருக்கலாம். உன்னை நம்பிப் பணம் கொடுத்தவன் பணத்தை இழந்து நஷ்டம் அடைவானேயொழிய உனக்கு ஒன்றும் நேரிடாது.

ஜய : என்னை ஒன்றும் தொந்தரவு செய்யாவிட்டாலும் என் தகப்பனாருடைய கையொப்பத்தைக் கள்ளத்தனமாய், நான் பத்திரத்தில் போட்டபடியால் என் தகப்பனாரிடத்தில் அந்தத் தொகையை வசூல் செய்வார்களே. தகப்பனாருக்கு எவ்வளவு ஆபத்து. என் குடும்பத்துக்கும் எவ்வளவோ அவமானம்.

தன : உன் தகப்பனாரிடத்தில் பத்திரத்தைக் காட்டினால் அந்தத் தான் எழுதவில்லை என்றும், தன்னுடைய கையெழுத்தல்லவென்றும் தைரியமாய்ச் சொல்லலாம். உன் தகப்பனாருக்கு நஷ்டமென்ன, ஆபத்தென்ன, ஒன்றுமில்லாத காரியத்தைப்பற்றி குடும்பத்துக்கு என்ன அவமானம் வரப்போகிறது. வீண் விசாரங்களை யொழித்து கவலையற்றிரு.

(இன்னும் வரும்.)

## Here and There.

### நானா சங்கதிகள்.

Encyclical Letter:—அர்ச். பாப்பானவராகிய பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் பிறர் சிநேகத்தைப்பற்றியும் உலக சமாதானத்தைப்பற்றியும் ஓர் நிருபத்தை விளம்பரம் செய்திருக்கிறார். அதாவது: ஒருவரையொருவர் நேசிக்கவேண்டுமென்றும், பிறருடைய குற்றங்களை மன்னிக்கவேண்டுமென்றும், கிறீஸ்துவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார்.

ஐந்து வருஷகாலமாய் ஐரோப்பாவில் நடந்த மகா யுத்தத்தினால், நிலைகுலைந்திருக்கும் உலகத்துக்கு இந்த சுகிர்த சத்தியங்களை ஞாபகப்படுத்துகிறது தக்க சமயம்—மேலும் சேசுக்கிறீஸ்துநாதருக்குப் பதிலாயிருக்கிற" அர்ச். பாப்பானவர் இவைகளைப் போதிப்பதற்கு தகுந்த அதிகாரமும் சுதந்தரமும் உண்டு.

சகல கிறீஸ்துவர்களும் அவருடைய போதனையைக் கேட்டு நடப்பார்களாக.

Back from France:—ஜூலை-மீ 3-ந்உ சங். R. பெல்ஸ் (Beyls) குரு சுவாமியார் பிரான்சுதேசத்திலிருந்து கோயமுத்தூருக்கு சௌக்கியமாய்த் திரும்பி வந்தார்.

கத்தோலிக்கு வாலிப யூனியன் மெம்பர்களும், அர்ச். சூசையப்பர் கைத்தொழிற்சாலையின் தொழிலாளர்களும் அவரைச் சந்தோஷமாய்ச் சந்தித்தார்கள். இப்போது மேற்படி சங். குரு சுவாமியார் கோத்தகிரி பங்கு விசாரணைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Transfer:—சங். (L. Perriere) பெரியர் சுவாமியார் அசௌக்கியத்தின் நிமித்தம், சீர்மைக்குப் போகவேண்டியிருப்பதால், சங். (S. M. Michael) மிக்கேல்நாதர் சுவாமியார் தற்காலம் குருமடம் விசாரணைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருக்குப் பதிலாக சங். (G. Boulanger) ஜி. புலான்ஜர் சுவாமியார், சவேரியார்பாளையம் விசாரணைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Value of the Pound:—ஜூலை மாதம் 12-ம் தேதி முதல் இந்தியாவில் பவுன் விலை 10 ரூபாயாகப் போகிறதாக கவர்ன்மெண்டார் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

Catholic Candidates:—கத்தோலிக்க இந்திய சங்கத்தார் அடுத்த வருஷத் துவக்கத்தில் கூடவிருக்கும் புதிய சீர்திருத்த சட்ட சபைக்குப் பின்னால் வரைந்துள்ள ஐந்து கத்தோலிக் கனவான்களை மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கக் கத்தோலிக்கரைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள் 1-வது வடபாகம் கஞ்சம், விசாகப்பட்டணம், குண்டூர் முதலிய ஜில்லாக்களுக்கு பாரிஸ்டரான மிஸ்டர் M. இரத்தினசாமி அவர்களையும், 2-வது வடமத்திய பாகம், கடப்பை, கர்நூல், பல்லாரி, வட ஆற்காடு தென்னாற்காடு, சென்னப்பட்டணம் ஜில்லாக்களுக்கு ஹைகோர்ட் வக்கீல் ஹானரபில் மிஸ்டர் T. அருமைநாதபிள்ளை அவர்களையும், 3-வது தென் மத்தியபாகம் திருச்சிறாப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஜில்லாக்களுக்கு திருச்சி அர்ச். சூசையப்பர் கலாசாலை வித்தியாபாரகர் மிஸ்டர் S. அற்புதசாமி உடையார் அவர்களையும், 4-வது மேற்கு பாகம் கோயமுத்தூர், சேலம், தென்கன்னடம் ஜில்லாக்களுக்கு ரிட்டையர்ட் கான்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் ராவ் சாகிப் E. C. M. மாஸ்கரனஸ் அவர்களையும், 5-வது தென்பாகம் திருநெல்வேலி, இராமநாதபுர முதலிய ஜில்லாக்களுக்கு தூத்துக்குடி முனிசிபல் சேர்மன் ராவ்சாகிப் குரூஸ்பெர்னாண்டஸ் அவர்களையும் அங்கத்தினராகக் கத்தோலிக்கர் வோட் கொடுக்கும்படி கோரப்பட்டிருக்கிறது.

## Kodiveri.

### பெரிய கோடிவேரி கோவில் பஞ்சாங்கம்.

### 1920-ம் வரு ஆகஸ்டு-மீ

6-ம் உ வெள்ளிக்கிழமை:—சேசுநாதர் மறுரூபமான திருநாள். மாதத்தின் முதல் வெள்ளி. பூசைக்குப் பிற்பாடு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

14-ம் உ சனிக்கிழமை:—சுத்தபோஜனம்.

15-ம் உ ஞாயிற்றுக்கிழமை:—தேவமாதா மோட்சத்திற்கு எழுந்தருளின திருநாள். காலை 8 மணிக்கு பாட்டுப்பூசை.

### பெரிய கோடிவேரியில் ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகள்.

(1) சக்கரையாஸ் முதலி, மாசில்லாமணி - இவர்கள் குமாரன் சின்னப்பன்.

(2) இன்னாசிமுத்து, அடைக்கலம்மாள் - இவர்கள் குமாரன் குழந்தைசாமி.

(3) சலேத்தப்பன், சவரியம்மாள் - இவர்கள் குமாரன் அந்தோனிமுத்து.

(4) சலேத்தப்பன், சின்னம்மாள் - இவர்கள் குமாரன் அந்தோனிசாமி.

(5) பிரான்சிஸ், முத்தாய் - இவர்கள் குமாரத்தி சின்னம்மாள்.

(6) அருளப்பன், செசிலம்மாள் - இவர்கள் குமாரன் ஜெயராஜ்

சேசுநாதர்சுவாமியைப்போல இந்தக் குழந்தைகள் வயதிலும் ஞானத்திலும் தேவ வரப்பிரசாதத்திலும் வளருவார்களாக.

(Sd.) J. B. Petit.


# The Messenger of Truth.

# சத்திய தூதன்.


8-SEP 1920 MADRAS.


Vol. VI. September 1920. No. 9.

புத்தகம் VI.] FIDES AC ROBUR. [நம்பர் 9.


## Good Manners.

## ஒழுக்கம்.

(கோயம்பத்தூர் கத்தோலிக் கிளப்பின் அங்கத்தினரில் ஒருவராகிய ஜீ. பொன்னுசாமி என்பவரால் உபந்நியாசிக்கப்பட்டது.)

காட்டிலே வாழும் கரடி, புலி, சிங்கம் முதலிய மிருகங்களைப்போல் மனிதர்கள் தனித்து வசிக்கக்கூடியவர்களல்ல. பலர் சேர்ந்து உறவாடி ஒருமித்து வாழ்வதே நமக்கு இயற்கையாயிருக்கிறது. அவ்வாறு நாம் சேர்ந்து உறவாடும்பொழுது நாம் அன்னவர்களிடம் காண்பிக்கும் அன்பு, அடக்கம், ஒடுக்கம், மேரை மரியாதை, பிறசிநேகம் முதலிய மேலான குணங்களை நடத்தி அநுசரிக்கும் முறைமைகளுக்குத்தான் ஒழுக்கமென்று பெயரிட்டனர் பெரியோர்.

ஒழுக்கம் நல்லொழுக்கம் தீயொழுக்கமென்று இருவகைப்படும். "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்—தீயொழுக்கம் என்றும் இடும்பைதரும்" என்றார் திருவள்ளுவநாயனார். அதாவது நல்லொழுக்கம் அறநெறிமார்க்கங்களுக்காதாரமாகவும், தீயொழுக்கம் எப்பொழுதும் துன்பங்களுக்குக் காரணமாகவும் இருக்கின்றன என்பதாம்.

"வைகறைத் துயிலெழு," "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்பவை முறையே விடியற்காலத்தில் அதாவது சூரியோதயத்திற்குச் சற்றுமுன்பே எழுந்திருத்தல், ஆடை

ஆபரணம் சுத்தமாயிருத்தல் என்று அர்த்தம்கொள்ளும். அவைகளை அநுசரிக்கும் முறைகளும், அவைகளின் பிரயோசனமும் யாவருக்கும் "வெள்ளிடைமலைபோல் துலங்க விளங்கும்" ஆதலால், சேர்க்கை, சம்பாஷணை, ஈகை முதலியவைகளைப்பற்றிச் சற்று ஆராய்வோம்.

**சேர்க்கை**:—நல்லவரின் சேர்க்கையினால் இன்பமும், தீயவருடைய சேர்க்கையினால் துன்பமும் உண்டாகும். ஆகையால் 'நல்லோரோடிணங்கியிரு' என்றபடி நல்லவர்களைச் சார்ந்து சிநேகமாயிருக்கவேண்டும். 'தீயாரோடிணங்கியிருப்பது தீது' என்றபடி தீயவரை நோய்போல், அல்லது நாகபாம்பைப்போலெண்ணி விலக்கிவிடவேண்டும். தீயவரைவிட நல்லவர்களுடைய பகைமையே நல்லது. நல்லவர்களுக்குத் தன்னைச் சார்ந்தவர்களைக் கெடுக்கவேண்டுமென்ற எண்ணங் கிடையாது. சமயம் வாய்த்தபொழுது நன்மையைச் செய்துகாட்டிச் செய்த குற்றத்தை உணர்த்துவார்கள். நீ அவர்களைப் பழிவாங்கினாலும் அவர்கள் உன் குற்றத்தைப் பொறுப்பார்கள்.

"ஒறுத்தார்க் கொருநாளைக்கின்பம், பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும்பொருந்தும்" என்றதை நன்குணர்ந்தவர்களானதால், பொறுமையே பூஷணமாகக்கொண்டவர், சில சமயங்களில் உன் செய்கைகளைப்பற்றி உன்மீது கோபங்கொண்டாலும், அச்சணத்திலேயே அக்கோபத்தைத் தணித்து "ஆங்காரமென்னும் மதயானைவாயிற் கரும்பாய், ஏங்காமலென்னை அருளெய்துநிற்கு நாளென்றுளோ" வென்று பரனை மன்றாடும் குணமுடையோர். கெட்ட குணமுடையோர் கடூர வார்த்தைகளைக் கக்கிக் கோபித்து மனவருத்தமுண்டுபண்ணிச் சந்தோஷப்படுவார்கள். 'பன்றியோடு சேர்ந்த கன்றும் மலந் தின்னும்' என்ற ஆன்றோர் வாக்குக்கொப்ப அவர்களது சிநேகம் நாளடைவில் நம்மை அவர்களது துற்பழக்கங்களில் பழக்கி, யோக்கியதையும் இழக்கச்செய்து, நமது வாழ்வை வீணாக்கி இறுதியில் யாவராலும் இகழப்படும்படி செய்யும்.

**சம்பாஷணை**:—நாம் பிறரோடு பேசுவதில் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஏனெனில் பேச்சாலேயே நன்மை தீமைகள் விளைகின்றன. பொய் சொல்லக்கூடாதென்பது பத்துக்கற்பனைகளிலொன்று. பொய்யால் பல தீமைகள் நேரிடும். பொய் பேசுகிறவர்களைப் பிறர் அவமதிப்பதோடுகூட எக்காலத்திலும் எவரும் நம்பமாட்டார்கள். பண



ஆசைக்காக நியாயஸ்தலங்களில் பொய் பேசுகிறவர்களும், மதிப்புக்காகவும், உத்தியோக ஸ்திதியைக் காப்பாற்றுவதற்காகவும் பொய் பேசுகிறவர்களும் "பொய்சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாது" என்ற பழமொழிப்படி மெய்யாகவே இறுதியில் தரித்திரத்தை அநுபவிப்பார்கள்.

"அடக்கம் அமரருளுய்க்கும், அடங்காமை ஆரிருளுய்த்துவிடும்" என்றிருப்பதால், நாம் எக்காலத்திலும், எவ்விடத்திலும் அடக்கமுள்ளவர்களாயிருக்கவேண்டும். நம்மைக்காட்டிலும் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தவரிடத்துச் சம்பாஷிக்கும்போது பேச்சுகளை அதிகமாய்ப்பேசாமல் ஆலோசித்துப் பேசவேண்டும். அவர்கள் என்ன பேசுகிறார்கள், நாம் அவர்களிடம் என்ன கற்றுக்கொள்ளலாமென்ற நோக்கமே யிருக்கவேண்டியது. சபைக்கூட்டங்களில் அநுபவமுதிர்ச்சியற்றவன், மேற்குலத்தானாயிருந்தாலுஞ் சரி, பணக்காரனாயிருந்தாலுஞ் சரி, நல்ல ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டவனாயிருந்தாலுஞ் சரி, அதிகமாய்ப் பேசினால் அறியாமை வெளிப்படுவதோடு அவமதிப்புக்கும் ஏதுவாகும்.

"ஆடையால் ஏனையணியால் அலங்கரித்துப்
பீடுபெறவந்த பெருமூடன்—நீடவையில்
எவ்வளவும் பேசாதிருப்பனோ
அவ்வளவும் நல்லதவனுக்கு"

என்றபடி ஒன்றும் பேசாமல், ஊமைபோலிருந்தால் அவனுடைய மானத்தைக் காப்பாற்றிக்கொள்வான்.

(இன்னும் வரும்.)

---

## Common Sense and the Pastor.

### மெய்ஞ்ஞானமும் ஞானமேய்ப்பனும்.

ஞானமேய்ப்பன், மற்ற மனிதர்களைப்போல, ஆத்துமமும், சரீரமும் உள்ள மனிதன். அவர் பரலோகத்திலல்லவே, இப்பூமியிலேயே உழைத்துவருகிறார். இப்பூமியில் இருக்குமட்டும் சாப்பாடும், வஸ்திரமும், வாசஸ்தலமும் அவருக்கு அவசியமானது. ஆனால் இப்பூலோகத்தில் ஒருவன் கையில்

பணம் இருந்தால்தான் அவனுக்கு அவசரமானவைகள் கிடைக்கும். அப்படியிருக்க, ஞான மேய்ப்பனுக்கும், பணம் அவசரம் என்று மெய்ஞ்ஞானம் சொல்லிக்காட்டுகிறது.— பணமோவெனில் அவருக்கு எப்படிக் கிடைக்கும்? அவருடைய அழைப்பு தெய்வத்துக்குரியதாயிருக்கிறபடியால், அவருக்கு உலக வேலையாவது, உத்தியோகமாவது வியாபாரமாவது, செய்து பணத்தைச் சம்பாதிக்க உத்தரவில்லை. அப்படியிருக்க, அவருக்கு வேண்டிய பண உதவி செய்ய வேண்டியது யார்? அவர் எவர்களுக்காக உழைக்கிறாரோ, அவர்கள்தான் அவருக்குப் பண உதவி செய்யவேணும் அல்லவோ. ஆகையால் அந்தந்த பங்கு விசாரணையைச் சேர்ந்த விசுவாசிகள் அவருக்குப் பண உதவி செய்வது கடமை என்று மெய்ஞ்ஞானம் கற்பிக்கின்றதல்லவோ, ஒவ்வொரு விசுவாசியும் அக்கடமைக்குட்பட்டிருக்கிறான்; மேலும் "நமது ஞான மேய்ப்பர்களுக்கு நம்மாலானமட்டும் உதவி செய்யவேணுமென்று" திருச்சபை கற்பிக்கின்றது. ஆனாலும் சில கிறீஸ்துவர்கள் எப்போதாவது ஞாயிற்றுக்கிழமைகளில் உண்டியல் பெட்டியில், ஓர் காசு போட்டால் அதனால் குருக்கள் கோவில்களையும், பள்ளிக்கூடங்களையும் கட்டி, தர்ம மடங்களையும், குரு மடங்களையும் சவரக்ஷணை செய்யவேணும் என்றும், தலைக்கட்டுப்பணம், பூசை, கலியாணம், அடக்கம், இது முதலிய மிராசுகளை வாங்காமல், குருக்கள் சகலத்தையும் நடத்தவேணுமென்றும், எண்ணிக்கொண்டாப்போல் முறையிட்டுப் பேசுகிறார்கள். அவர்கள் தெரியாமல் சொல்லுகிறார்களென்று நாம் நினைக்கவேண்டியது; அவர்கள் மனசு பொருந்தி அப்படிப் பேசினால் மகா புத்தியீனமும் அநியாயமும் என்று சொல்லத்தகும்.

ஆனால், அந்தந்த பங்கு ஞான மேய்ப்பன் எனக்குப் பிரியப்படவில்லை என்றும், நான் அவருக்குப் பண உதவி செய்யமாட்டேன் என்றும், சிலர் சொல்வார்களாக்கும். ஆனால் இப்படிப்பட்ட சாக்குப்போக்குச் செல்லாது. அந்தந்த பங்கு சுவாமியார் உனக்குப் பிரியமாயிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அதினால் உன் கடமை மாறிப் போகாது. வேறே சிலர் நான் ஏழையாயிருக்கிறதினால் கோவிலுக்கு எப்படிப் பண உதவி செய்யக்கூடுமென்று வீண் சாக்குப் போக்குச் சொல்லுகிறார்கள்:—அப்படி உன் கடமைக்குத் தப்பித்துக்கொள்ளலாமென்று நினையாதே. நீ ஏழையாயிருந்தால் உன் அந்தஸ்தின் பிரகாரம் உன்னால்



ஆனமட்டும் கோவிலுக்கு உதவி செய். ஒன்றுக்கு நூறாகக் கடவுள் உனக்குப் பலன் அளிப்பார்.

திருச்சபை ஏழைகளை நேசித்து அவர்களுடைய ஏழைக் காணிக்கைகளைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுகிறது. ஆனால் பத்தியுள்ள உலோபிகள் திருச்சபைக்கும் கடவுளுக்கும் வெறுப்பாயிருக்கிறார்கள். *(Common Sense.)*

---

## The Little Garden of Roses.

### சிறு ரோஜாத் தோட்டம்.

**மலர் 13.** (முன் தொடர்ச்சி).

2. சர்வேசுரனோடு ஐக்கியமாகி அவருடைய சிநேகத்தில் நிலைத்து, அவருடைய பரம வீட்டின் சம்பூரணத்தால் பூரிக்கப்பட்டு, அவருடைய செல்வ நதி வெள்ளத்தில் தாக சாந்தி செய்கிறவன் எவ்வளவோ அளவில்லாத இன்பத்தைச் சுகிக்கிறான்.

அர்ச்சியசிஷ்டவர்களும், சம்மனசுக்களும், மற்ற மோட்ச வாசிகளும் சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசித்து அவரோடு ஏகோபித்து, அவர் ஐக்கியத்திற் சுகிக்கும், எண்ணிலும் சொல்லிலுமடங்காத ஆநந்த சந்தோஷத்தில் நாமும் பங்கடைவதென்றால் எவ்வளவோ பாக்கியமுள்ளவர்களாயிருப்போம்.

ஆனால் ஐயோ! நமக்கு முடிவான கதியாயிருக்கவேண்டிய இவ்வித உன்னத பாக்கியங்களை ஆசித்துத் தேடும் போது, நம்மை எப்பக்கத்திலும் சூழ்ந்துகொண்டு இடைவிடாமல் அலைக்கழிக்கிற தந்திர சோதனைகளைத் தருமம் என்னும் ஆயுதத்தைக்கொண்டு தைரியமாய் எதிர்த்துப் போராடி ஜயங்கொள்ளவேண்டியிருக்கிறது.

ஏனெனில் அடிக்கடி இன்பத்திற்குப் பிறகு துன்பமும், ஆறுதலுக்குப்பிறகு துயரமும், சிரிப்புக்குப்பின் அழுகையும், சமாதானமும் இளைப்பாற்றிக்குப்பிறகு சகல வீண் விசாரங்களும், இருதயக் கலக்கமும் நாம் அநுபவிக்க நேரிடுகிறது.

மேலும் நாம் பூரண இளைப்பாற்றியும் ஆறுதலுமடைந்ததாக எண்ணிக்கொண்டிருக்கும்போது, அநேகந்தடவைகளில் நமக்குப் பேரழிவாவது, பொறுக்கமுடியாத சோதனையாவது, சரீரத் துர்ப்பலமாவது, மனித விரோதமாவது, தேக நஷ்டமாவது, நமது சத்துருக்களின் எதிர்ப்பாவது, வகையற்ற பற்றுதல்களாவது, வீண் கிலேசமாவது, வீண் கவலையாவது, இளையவர்களது தூஷணையாவது, முதியவர்களது கண்டனையாவது, அல்லது அதிகாரிகளுடைய தண்டனையாவது அநேகந்தடவை சம்பவித்திருக்கிறதல்லவா?

என்னத்திற்குச் சர்வேசுரன் இவைகளை நமக்கு அனுப்புகிறார்? பல சமயங்களில் நமது புண்ணியத்தைச் சோதித்து, அதனால் நாம் சௌரியப் புண்ணியக்கிருத்தியங்களைச் செய்யும்படியாகவும், வேறு சமயங்களில் நமது உள்ளத்திலுதிக்கும் ஆங்காரத்தினின்றும், மறைந்திருக்கிற பற்பல துர்நாட்டங்களினின்றும், சுயதாக்ஷண்ணியத்தினின்றும், நம்மைச் சுத்திகரிக்கிறதற்காகவும், மெய்யாகவே நிர்ப்பாக்கிய ஸ்திதியிலிருப்பவர்களுக்கு நாம் உதவிபுரிந்து, வருந்துவோரை உதார குணத்தோடு ஆதரித்து வரும்படியாகவுந்தான். ஏனெனில் நாம் கொடுக்கும் ஒவ்வொரு தருமத்திற்கும், சர்வேசுரனிமித்தம் நாம் செய்யும் ஒவ்வொரு நற்கிருத்தியத்திற்கும் பலன் தருபவர் அவரே. ஆண்டவருடைய ஆசீர்வாதம் மனிதனை ஐசுவரியவனாக்கும். அவருடைய ஆசீர்வாதத்தினால்தான் நமது உத்தியோகங்கள் தழைத்துக் குடும்பங்கள் செழித்து வருகின்றனவென்று நாம் கண்ணாரக் கண்டுவருகிறோம்.

ஆனதுபற்றி நம்மை நாமே நம்பாமலும், ஸ்துதி மேன்மையைத் தேடாமலுமிருப்போமாக. புகழின் ஆசை ஒரு திருடனைப்போல் உள்ளத்தில் புகுந்து ஞானத் திரவியம் என்கிற புண்ணியத்தைப் பறித்துக்கொள்ளும். ஆகையால் நமது தர்ம புண்ணியங்களைத் தாழ்ச்சியால் மறைத்துக் காப்பாற்றக்கடவோம். தர்ம சிந்தனையுள்ளவன் நமது திவ்விய கர்த்தர் படிப்பித்த பிரகாரமாய் மற்ற மனுஷர்களைத் தன் சகோதரரென்றெண்ணி, சர்வேசுரனுக்காக வேண்டித் தன்னை எல்லோருக்குமுன்பாகத் தாழ்த்திக்கொள்ளுவான். இப்படிச் செய்வதுதான் உண்மையான தருமகுணமென்பதாகும்.

தருமத்தினால் மனிதனுக்கு மோட்ச வாசல் மறுபடியும் திறக்கப்பட்டது. சர்வேசுரன் தருமகுணமுள்ளவரானபடியால் தம்மை மிகவும் தாழ்த்திப் பாவிகளை இரட்சிக்கப் பரலோகத்தினின்றிறங்கி, தரித்திரமுள்ள ஓர் ஸ்திரீயிடத்தில் ஓர் மாட்டுக்கொட்டகையில் பிறக்கவும், தரித்திர சீலைத் துண்டுகளாற் சுற்றப்பட்டு மிருகங்களுக்கு நடுவில் அவைகளின் முன்னணையிற் கிடத்தப்படவும் திருவுளமானார். தருமத்தினாலும், சிலுவையில் அறையுண்டு அடைந்த அவமான மரணத்தினாலும், அதி உன்னத ஆநந்த பாக்கியமும் தயவுள்ள சுதனாகிய சர்வேசுரன், தமது பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பாரிசத்துக்கெழுந்தருளி, அங்கே மனிதனுக்குத் தகுந்த இடத்தைத் தயார் செய்துவைத்துக் காத்துக்கொண்டிருக்கிறார்.



3. தருமகுணம் ஒருபோதும் சோம்பியிருப்பதில்லை. மிகவும் உயர்ந்தவையும், பெருமை பொருந்தியவையுமான விஷயங்களைக் கையேற்று அது சுறுசுறுப்பாய் வேலை செய்கிறது. தாழ்ச்சியும் அடக்கவொடுக்கமுள்ளவர்களிடத்திலே அது அருளோடும் அன்போடும் இறங்குகிறது.

கண்ணியமான தொழில்களைப் புரிவதில் அது பாடுபடுகிறது. கீழ்ப்படிதலைக் காட்டுவதற்காகச் செய்யும் இழிவான வேலைகளிலும் அது ஆனந்தங்கொள்ளுகிறது.

மேலும் அது வியாதிஸ்தருடைய இரணங்களைக் கழுவுவதிலும், அவர்களுடைய கால்களைக் கழுவுவதிலும், அவர்களுடைய படுக்கைகளை விரிப்பதிலும், அவர்களுடைய வஸ்திரங்களைச் சுத்தஞ் செய்வதிலும், அவர்களுடைய அழுக்கைத் துடைப்பதிலும் அருவருப்புக்கொள்வதில்லை.

யாதொரு வித்தியாசமுமின்றி எந்தச் சிருஷ்டியால் துன்பம் வந்தாலும், எவ்வளவு வந்தாலும், எத்தனைவிசை வந்தாலும், சுவாமியுடைய கையிலிருந்து வருவதுபோல எல்லாவற்றையும் சந்தோஷமாய்ப் பெற்றுக்கொண்டு அதைப் பெரிய லாபமென்றெண்ணும்படி செய்கின்றது.

மற்றப் புண்ணியங்களைவிடத் தான தருமமென்ற பிறர்நேசக் கிருத்தியத்தை அதிகமாய்ச் செய்யவேண்டும். ஏனெனில் சர்வேசுரன்மட்டில் நேசங்கொண்டிருப்பது சகல புண்ணியங்களுக்கும் சம்பூரணமாகும். நாம் நமது தருமக் கிரியைகளால் புறத்தியார்மட்டிலுள்ள நேசத்தை மெய்யாகவே காட்டுபவர்களாயிருக்கிறோம். நமது கர்த்தர் நம்மை அநுசரித்துவரக் கட்டளையிட்டிருப்பது இப்புண்ணியந்தான். நாம் தயையாயிருந்தால்தான் மோட்சம் நமக்குக் கொடுக்கப்படுமென்று நமது ஆண்டவர் கண்டிதமாகச் சொல்லியிருக்க, நாம் நமது ஆத்துமத்தைப் போக்கடித்துக்கொண்டாலும், நாம் செய்து வரும் இடைவிடாத தருமத்தை ஒருநாளும் கைவிடப்படாது. (தொடரும்). S. S. G

---

# History of the Diocese of Coimbatore.

## கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் சரிதை.

(முன் தொடர்ச்சி.)

**கோயமுத்தூர் :**—கோயமுத்தூரில், முதல், முதல் சுமார் 1650-ம் வருஷத்தில், கத்தோலிக் கோவில் அர்ச். பிராஞ்சிஸ்கு சவேரியாரைக்குறித்துக் கட்டப்பட்டது. 1676-ம் வருஷத்தில் அவ்வூரிலுள்ள அஞ்ஞானிகள் கிறீஸ்துவர்களுக்கு விரோதமாய் ஓர் கலாபனை எழுப்பினார்கள்; அது எப்படியென்றால், ஓர்நாள் சில துஷ்ட அஞ்ஞானிகள் இரண்டு ஏழைக் கிறீஸ்துவர்களைப் பிடித்து அவர்கள் கழுத்தில் இலிங்கத்தைக் கட்டாயத்தினால் கட்டிவிட்டார்கள். அந்தக் கிறீஸ்துவர்கள் அஞ்ஞானிகளுக்குப் பயப்பட்டு, அவ்விலிங்கத்தை, அறுக்கத்துணியாமல், சங். கொரிய என்னும் குருவானவரிடம் சென்று, நடந்த செய்தியைத் தெரிவித்தார்கள். குருவானவர் அதைக்கேட்டவுடனே இலிங்கத்தை அறுத்து எடுக்கச் சொல்லி, அவர்களின் பிரதான அஞ்ஞானிகளிடம் போய் நாங்கள் மெய்யான கிறீஸ்துவர்கள்தான் என்று பிரசித்தமாய்ச் சொல்லும்படி கட்டளையிட்டார். அவ்விரண்டு கிறீஸ்துவர்களும் அப்படியே செய்தார்கள். அதனால் அஞ்ஞானிகள் கோபங்கொண்டு கிறீஸ்துவர்களுக்கு விரோதமாய்க் கலாபனை எழுப்பினார்கள். கடைசியாய் அந்தக் காரியம் தேசாதிபதியிடத்தில் விசாரணையாகி அஞ்ஞானிகள் செய்த அநியாயத்துக்காக ஓர் அபராதம் கொடுக்கத் தீர்வையிடப்பட்டார்கள்.

**நீலகிரி** மலையில் 1608-ம் வருஷத்தில் ஒரு குருவானவர் சத்திய வேதத்தைப் போதித்தாராம்.

**அத்திக்கோடு**—1750-ம் வருஷத்தில் அத்திக்கோடு என்னும் ஊரிலும் அதின் அருகிலுள்ள கிராமங்களிலும் பல கிறீ



**பாலக்காடு**—18-ம் நூற்றாண்டில் பாலக்காட்டில் வந்து சேர்ந்த கிறீஸ்துவர்கள் பஞ்சத்தினிமித்தமாவது அல்லது அக்காலத்தில் நடந்த திப்புசுல்தான் சண்டையின் நிமித்தமாவது ஓடிவந்தவர்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த நாட்டில் அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியாரைக்குறித்தும், அர்ச். இஞ்ஞாசியாரைக் குறித்தும் இரண்டு சிறிய கோவில்கள் கட்டப்பட்டிருந்ததாம். ஆனால் பிரதான கோவில் ஞானிப்பாளையம் என்னும் கிராமத்தில் இருந்தது; அப்போது அந்நாட்டிலுள்ள கிறீஸ்துவர்கள் சங். பவோன் அமிர்தநாதர் என்பவரால் விசாரிக்கப்பட்டார்கள். சுமார் 1671-ம் வருஷத்தில், பாலக்காடு இராஜாவின் சிபார்சினால் பழைய சுடுகாட்டின் அருகில் அமிர்தநாதர்சுவாமியாருக்கு ஓர் பூமி கொடுக்கப்பெற்று அவ்விடத்தில் ஒரு பெரிய கோவில் கட்டப்பட்டது. அதினால் அவ்வூர் பெரிய கோவில்பாளையம் என்று பேர்பூண்டிருக்கிறது. பிறகு அவ்வூர் கிறீஸ்துவர்கள் வெகு ஏழைகளாகி, பிரிந்து சிலர் ஆயம்பாளையத்திலும், வேறு சிலர் வடக்கஞ்சேரியிலும், இன்னும் சிலர் கோவில்பாளையத்திலும் சென்று குடியிருந்தார்கள். இன்னும் சவேரியார்பாளையம் தோணிப்பாளையம் என்னும் ஊர்களிலும் கிறீஸ்துவர்கள் குடியிருந்தார்கள். ஆனால் அவ்விரண்டு ஊர்களிலும் இருந்த கோவில்கள் பிறகு தரைமட்டமாய் அழிந்துபோயின.

**கோயமுத்தூர்** நாட்டில் திருச்சபை அப்படிப்பட்ட அந்தஸ்திலிருக்கும்போது, அந்நிய போதக சபையைச்சேர்ந்த குருக்கள் அர்ச். பாப்பானவரால் அனுப்பப்பட்டு, இந்த நாட்டிலும் சத்திய வேதத்தைப் போதிக்கவந்தார்கள். மேற்கண்டபடி சில இடங்களில் கிறீஸ்துவர்களுடைய சபையானது கொஞ்சம் செழித்தோங்கி இருந்தபோதிலும், அநேக ஊர்களில் திருச்சபையின் நிலைமை மிகவும் குறைவு. வேறே அநேக ஊர்களில் முன்னிருந்த கிறீஸ்துவர்களும் கோவில்களும் துக்கத்துக்குரிய பாழ்களே தவிர வேறே அடையாளம் ஒன்றும் காணப்படவில்லை.

---

The man who tells you that he is going to do big things always has lots of time to talk about it, but the man who is really doing them is too busy to talk.

---

## St. Benedict.

### அர்ச். ஆசீர்வாதப்பர்.

ஆசீர்வாதப்பர் சபையை ஏற்படுத்திய இவர் கி. பி. 480-ம் ஆண்டில் அம்பிரியாவிற் பிறந்து பெற்றோரால் சிறுவயதிலேயே கல்வி கற்க உரோமைக்கு அனுப்பப்பட்டார். அங்கு கூடவிருந்த பிள்ளைகளது ஒழுக்கமற்ற நடத்தையை வெறுத்து தன் செவிலித்தாயுடன் உரோமையை விட்டுவிட்டார். பின் தேவசிநேகப் பெருக்கால் கடுமையான தவஞ்செய்யக் கருதி, தன் செவிலித் தாய்க்கும் தெரியாமல் ஓர் குகையில் ஒளிந்துகொண்டு தவம் செய்தார். இப்படி மூன்று வருஷங் கழிய, இறுதியில் சில இடையர்கள் கண்டு இவரை அர்ச்சியசிஷ்டவரெனக் கொண்டாடி இவருக்கு வேண்டுவனவற்றைக் கொண்டுவந்து கொடுப்பார்கள். இவரும் அவர்களுடைய ஆத்துமங்களைக் கவனித்துவந்தமையால் தங்கள் நடத்தையை முற்றும் மாற்றினார்கள்.

இவ்விதமாய் இவர் கீர்த்தி எங்கும் பரம்ப, பசாசு பொறுமையுறாது, அர்ச் அந்தோனியாரைச் சோதித்ததுபோல் இவரையுஞ் சோதிக்க மனித ரூபமாய் ஓர்நாள் இவரை அணுகிற்று. இவர் சிலுவையடையாளத்தால் அதை விரட்டினார். பின்னும் இவர் உரோமையிற் கண்ட ஓர் ஆளை மனதில் நினைத்து கடின சோதனைப்பட்டதின்மேல் இவர் மனந்தளர்ந்து தன்னிடம் விட்டு உலகிற்குச் செல்ல எண்ணினார். ஆனால் அச்சமயம் ஓர் தேவானுக்கிரகக் கதிர் இவரை ஊடுருவத் தெளிந்து, அங்கிருந்த முட்செடிகளின்மேல் படுத்துப் புரளத் தேகமெல்லாம் காயமாகி இரத்தமயமானார். சாத்தானும் இவரை விட்டகன்றான்.

நாளடைவில் அநேகர் உலகத்தை வெறுத்து இவரிடம் வந்தார்கள். இவர் இருக்கும் இடத்துக்கருகில் ஓர் மடாதிபர் மரிக்க, சந்நியாசிகளெல்லோரும் இவரையே மடாதிபராகத் தெரிந்துகொண்டார்கள். தாழ்ச்சியுருவெடுத்தாற்போன்ற இவர் இணங்காது பலகாலம் மறுத்தும், சந்நியாசிகள் விடாமல் விண்ணப்பஞ்செய்துகொண்டதின்மேல் கடைசியில் அதற்கு இணங்கினார். ஆயினும் சீக்கிரத்தில் அவர்கள் இவரது



கொடிய தவத்திற்குரிய நடத்தைகளை அனுசரிக்கமுடியாது வெறுப்படைந்து, சிலர் பாஷாணத்தால் இவரைக் கொல்லவும் துணிந்தார்கள்.

எப்படியெனில், அவர் ஓர்நாள் பந்தியமரும்போது பாஷாணம் கலந்த ஓர் பானத்தை முதலில் இவருக்குக் கொடுத்தார்கள். பானம் பண்ணுமுன் இவர் மந்திரித்த அளவிலே அப்பாத்திரம் புதுமையாய் உடைந்து பானம் கொட்டுண்டது. இரகசியமறிந்து, "சகோதரர்களே, சர்வேசுரன் உங்களை மன்னிப்பாராக" எனச் சொல்லி மறுபடியும் ஏகாந்தமாயினார்.

ஆனால் தெய்வசித்தம் வேறாயிருந்தமையால், சீக்கிரத்தில் பலர் இவரிடம் வந்துசேர்ந்தார்கள். இவர் அவர்களைப் பன்னிரண்டு மடங்களில் ஏற்பாடுசெய்து ஒவ்வோர் மடத்திற்கும் ஓர் அதிபரை ஏற்படுத்தித் தன் பொதுக்காப்பில் வைத்திருந்தார்.

இங்கும் பசாசு ஓர் கொடிய பகைவனை எழுப்ப அவ்விடம் விட்டகன்றுபோய்க் காசினோமலையுச்சியிலே சேர்ந்தார். அங்கு அஞ்ஞானக் கோவிலொன்றும், அதற்குப் பக்கத்தில் ஓர் பெரிய பூந்தோட்டமும் இருந்தன. அஞ்ஞானிகளை மனந்திருப்பி, அக்கோவிலை இடித்து, ஓர் தேவாலயமும் ஓர் மடமும் கட்டுவித்தார்.

*உலகமெங்கும் பேர்போன இம்மடத்தில்தான் தமது சபை ஒழுங்குகளை எழுதினார். இவ்வொழுங்குகள் பிறபாடு உரோமை நாட்டிலுள்ள சந்நியாச சபைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவந்தன.* இவர் சபை பிறகாலம் அளவின்றிப் பெருகி, திருச்சபைக்கும், உலகத்துக்கும் சொல்லிலடங்கா நன்மைகளைச் செய்துவருகிறது.

* இச்சபையோரில் 35 பாப்புமார்களும், 200 கர்தினால்மார்களும், 1165 அதிமேற்றிராணிமார்களும், 551[illegible] மேற்றிராணிமார்களும், 55,460 குருக்களும் தங்கள் அர்ச்சியசிஷ்டதனத்துக்குப் பேர்போனவர்களாயின், இச்சபையார் செய்திட்ட நன்மைகளை எண்ணவும் முடியுமோ?

தமது மரணம் கிட்டிவந்ததை முன்னறிந்து, பாக்கு ஆறு நாளுக்குமுன் கல்லறையை முஸ்திப்பு செய்து கி. பி. 57[illegible]-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 21-ந் தேதி பாக்கியமான மரணமடைந்தார்.

* Mgr. D'Anger's funeral oration on the anniversary of Dom Gueranger, Abbot of Solesmes 1876.

## The Benefit of Education

### கல்வியின் நன்மை.

நமக்குக் கல்வி மிகவும் அவசியமானது. கல்வியே இல்லாவிட்டால் நமக்குள் நாகரீகம் ஓங்கி வளராமல் நிலைகுலைந்து போவதற்கு இடமாகும். கல்வியறிவு இல்லாமையினாலே நமது முன்னோர்கள் நாகரீகம் விர்த்தியடையாமல் ஈத்த மிலேச்சர்களைப்போல் நடந்துவந்தார்கள். இடையில் சற்று நாகரீகந் தெளிவுண்டானபோது, ஔவை, கம்பர், அதிகமான், கபிலர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலியவர்கள், கல்வியில் பயிற்சிசெய்து மேலான வித்வான்களாகத் தோன்றினார்கள். என்றாலும் நமது நாட்டார் கல்வியின் அபிவிருத்தியை அதிகமும் சட்டைபண்ணாமலிருக்கிறார்கள். இப்படியிருக்கும் காலத்தில் ஆரியர் என்னும் ஜாதியார் வட திசையிலிருந்து இந்தியாவில் பிரவேசித்தபோது ஜனங்களை நான்கு வகுப்பினராகப் பிரித்தும், தாங்களே மேல்குலத்தார் என்றும், தங்களுக்கே கல்வி உரித்தானதென்றும், மற்ற இனத்தார் கல்வி கற்கபுகின் அவர்கள் மண்டை வெடித்துப்போமென்றும், மற்ற ஜாதியாரகளை கல்வி கற்கவொட்டாமல் தடுத்து, தாங்கள் மட்டும் வேத பாராயணம் ஓதிவந்தார்கள். ஆனால் தற்காலம் நாகரீகம் விருத்தியடையப் பெற்றது, விசேஷமாய் நமது காருண்ய கவர்ன்மெண்டாராகிய ஆங்கிலேயர்களாலும், நமது சத்தியவேதக் குருக்களாலுமே. இப்படி நாகரீகமடைந்து கல்விப் பொருளும், செல்வப் பொருளும், செழித்தோங்கி வளரும் இக்காலத்திலுங்கூட அநேகர் கவர்ன்மெண்டார் சகாயத்தால், பிரதம கல்விச்சாலைகளிலும், உயர்தர கல்விச்சாலைகளிலும், கல்லூரிகளிலும் பயின்று பிரவேச பரீட்சை முதல, பி ஏ., எம் ஏ., எல்.எல்டி., ஐ சி எஸ் முதலிய பரீட்சைகளில் சோதிக்கப்பட்டு, தேறிவருவதை, இரு கண்ணால் பார்த்திருந்துங்கூட அனேகர் கல்வியின் முன்னேற்றத்தையும், அதனால் விளையும பலனையும் கருதாது இன்னமும் சுத்த மௌடீகர்களாய், கல்வியைக கனவிலும் கருதாதிருப்பவரை நேரில கண்டும் வருகிறோம. இதுபற்றியே கவர்ன்மெண்டார் ஏழைகளுககென்றும, கல்வியின் வாசனையறியாத மிலேச்சர்



களுக்கென்றும் பிரதம பாடசாலைகளை வற்புறுத்தி ஏற்படுத்தி, திரவிய சகாயமும் செய்து வெகுமானமாகக் கற்பித்து வருவதை நாளைக்கும் கண்டுவருகிறோம்: இதையேனும், நமது நாட்டார் சற்றேனும் கவனிக்கிறார்களா? இதைக் கொண்டாவது நமது மக்களை முன்னுக்குக் கொண்டுவந்தார்களா? இல்லையே! முன்னிலும் ஏறக்குறைய கல்வியில் விருத்தியும், நாகரீகமும் அடைந்துவரும் இக்காலத்தில்கூட செல்வந்தர் முதலாய் முற்றும் கவனியாது, முழு மோசமாய் கள் குடித்தல், கொலை, பொய், களவு, காமம், மோசம், அநியாயம் இது முதலிய தாறுமாறான அக்கிரமங்களைச் செய்து, தமது இனத்தாராகிய சுய தேசத்தாருக்கே பொருந்தாத, பொல்லாப்புகளைச் செய்து வருகிறார்கள். இது பரிதாபத்திலும் பரிதாபமே. நமது இனங்களே, நீங்கள் நாகரீகத் தேர்ச்சியையும், கல்வியின் அபிவிருத்தியையும், தெரிந்து படித்துக் கொள்ளவேணுமானால், பிரான்ஸ், இங்கிலீஷ், இத்தலி, அமேரிக்கா, முதலிய ஐரோப்பிய தேசத்தாரையும்; சீனா, ஜப்பான் முதலிய நமது அயல் தேசத்தாரையுமே கண்டு தெரிந்துகொள்ளுங்கள். (பின் தொடரும்) C. A. T.

---

## How a queen of the earth, paid homage to the King of Heaven.

### உலக இராணி பரலோக இராஜாவுக்கு செய்த வணக்கம்.

சிலகாலத்துக்குமுன் ஒருநாள் ஸ்பெயின் என்னும் இராச்சியத்தின் இராணி மோர்ட்டர்காரில் ஏறி மட்ரிட் என்னும் பட்டணத்தின் தெருக்களின்வழியாய்ப் போகும்போது ஒரு வியாதிஸ்தனுக்கு திவ்விய நன்மை கொண்டு போகும் ஒரு குருவானவரை வழியில் சந்தித்தாள். உடனே அந்த பத்தியுள்ள இராணி தன் மோர்ட்டர்காரை நிறுத்தி, அதிலே குருவானவரை ஏறச்சொல்லி தான் இறங்கி பின் சென்று நடந்தே வியாதிக்காரன் வீட்டுக்குப் போனாள். அங்கே குருவானவர் வியாதிஸ்தனுக்கு திவ்விய நன்மை கொடுக்கும்போது பக்கத்தில் முழங்காலிலிருந்து செபஞ் செய்துகொண்டிருந்தாள். இவ்விதமே உலக இராணி பரலோக இராஜாவுக்கு வணக்கஞ்செய்தாள்.

---

## Legend of St. Christopher.

### அர்ச் கிறீஸ்தோபேருடைய சரிதை.

அர்ச். கிறிஸ்தொபெர் என்னும் வார்த்தைக்கு கிறீஸ்து நாதரைச் சுமக்கிறவர் என்ற பதமாம். இவர் இந்த சுகிர்த பேர் அடையுமுன் அஞ்ஞானியாயிருந்தார். அவர் யூதேயா தேசத்தில் பிறந்தவர். அதிசயமான பலமுள்ள இராட்சதன். அதைப்பற்றி அவர் வெகு ஆங்காரங்கொண்டு, பூலோகத்தில் எந்த எஜமானுக்கு அதிக வல்லமையிருக்குமோ, அவனுக்குத்தான், அவர் ஊழியஞ்செய்யத் தீர்மானித்துக்கொண்டார். அவ்விதமே அவர் ஒரு இராஜாவின் போர்ச்சேவகத்தில் அமர்ந்தார். அந்த இராஜா ஒருநாள், தமது சமூகத்தில் பிசாசைப்பற்றி சிலர் பேசிக்கொண்டிருந்தபோது பயப்படுகிறதுபோல சிலுவை அடையாளம் வரைந்தார். அதைக் கண்டு இராட்சதன், விபரங்கேட்டு இராஜா பிசாசுக்குப் பயப்படுகிறார் என்று அறிந்து, அவர் ஊழியத்தைவிட்டு, அவனைவிட அதிக வல்லமையாயிருக்கும் நரகத்தின் இராஜாவாகிய பிசாசின் பட்டாளத்தில் சேர்ந்தார். பிறகு லூசிப்பேர் என்னும் நரக இராஜா, ஓர் பட்டணத்துக்குப் போகும்போது, வழியோரத்தில் ஸ்தாபித்திருக்கும் ஓர் பெருஞ் சிலுவையைக் கண்டமாத்திரத்தில் மிகவும் நடுநடுங்கி பயப்படுகிறதைக்கண்ட இராட்சதன் நரக இராஜாவாகிய பிசாசு சேசுக்கிறீஸ்துநாதருக்கு பயப்படுகிறதென்று நிச்சயித்து, அதைவிட்டு, அளவில்லாத வல்லமையுள்ள சேசுக்கிறீஸ்துநாதரைத் தேடத் தீர்மானித்து, ஓர் வனவாசியிடம் போனார். அவ்வனவாசி திவ்விய எஜமானுக்கு ஊழியஞ் செய்யவேணுமானால், ஜெபதபஞ் செய்யவேணும் என்று கற்பித்தார். அது இராட்சதனுக்கு சரிப்படாததினால் வனவாசி வேறே வழிப்பாட்டை ஏற்படுத்தினார். தமது வாசஸ்தலத்தின் அருகில் ஓர் ஆபத்துக்குரிய ஓடையிருந்தபடியால், நாள்தோறும் அவ்வழியாய் வரும் வழிப்போக்கர்களை சுமந்து அக்கரைக்கு பிறசிநேகத்தினிமித்தம் க்ஷேமமாய்க் கொண்டுபோகவேணுமென்று அந்த இராட்சதனுக்குக் கட்டளையிட்டார். அவர் அதற்குச் சம்மதித்து



ஊன்றுகோலாக ஒரு பனைமரத்தை வெட்டி தன் கையில் பிடித்துக்கொண்டு தன் வேலையைச்செய்ய ஆரம்பித்தார். அப்படி வேலை செய்துகொண்டிருக்கையில் ஒருநாள் ஒரு அழகான சிறு பையன் கரைக்கு வந்துசேர்ந்து தன்னை அக்கரைக்குக் கொண்டுபோகவேணுமென்று கேட்டான். இராட்சதன் தாமதமின்றி அச்சிறுவனைத் தன் தோளின்மேல் தூக்கிக்கொண்டு ஓடையில் நடக்க ஆரம்பித்தார். ஆனால் அவர் நடக்க நடக்க, அவர் சுமந்த சிறுவன் மிகுந்த பாரமாய்த் தோன்றி தலை குனிந்து இருவரும் தண்ணீரில் அமிழ்ந்திப் போகும்படியான ஆபத்து நேரிட்டது. அப்போது அச்சிறுவன் தான் பரலோகத்தினுடையவும் இப்பூலோகத்தினுடையவும் இராஜாவாகிய சேசுநாதர் என்று வெளிப்படுத்தி, தான் சொன்னதற்கு அத்தாட்சியாக இராட்சதன் கையில் ஊன்றுகோலாயிருந்த பனைமரத்தை ஆற்றோரத்தில் நடச்செய்து, காய்ந்திருந்த பனைமரம் உடனே பச்சையாகி முளைத்து, அதில் ஓலைகளும் பழங்களும் தாராளமாய்க் காணப்பட்டன.

பிறகு அந்த பாக்கியமான இராட்சதன் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்தொபெர் என்னும் பெயரை வைத்து, வேறே அநேக அஞ்ஞானிகளை மனந்திருப்பி, வேதத்துக்காக அகோர வேதனைப்பட்டு தன் உயிரைக்கொடுத்து வேதசாட்சியானார்.

(Olim.)

---

## The Madras Elementary Education Bill.

### சென்னை எலிமெண்டரி எடுகேஷன் பில்.

இவ்விராஜதானியிலுள்ள பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் கல்வி கற்பிக்கும் விஷயங்களில், சில விசேஷமான ஏற்பாடுகள் செய்யவேண்டியதைப்பற்றிய ஒரு சட்டத்தை (பில்) சட்ட நிரூபண சபையாருடைய ஆலோசனைக்காக சர்க்காரார் இப்பொழுது கொண்டுவந்திருக்கிறார்கள்.

#### ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு கல்வி சபை.

ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு கல்வி சபை புதிய சட்டத்தினால் ஏற்படுத்தப்படும். முதலில் ஜில்லா கலெக்டர்

அச்சபைக்கு தலைவராயிருப்பார் (பிரிசிடெண்டாயிருப்பார்). ஆனால், அச்சபையில், எவனையாவது அம்மாதிரி தலைவராக ஸர்க்காரார் நியமிக்கலாம்; அல்லது அவர்களுள் ஒருவனை தலைவராக தெரிந்தெடுக்க, ஸர்க்காரார் அச்சபையார்களுக்கே உத்தரவு கொடுக்கலாம். பள்ளிக்கூடங்களை பரீட்சிக்கிற பெரிய இன்ஸ்பெக்டரும், அஸிஸ்டண்ட் இன்ஸ்பெக்டரும் அச்சபைக்கு மெம்பர்களாயிருப்பார்கள். ஜில்லா போர்டார்கள் அச்சபைக்கு இரண்டு மெம்பர்களை யனுப்பலாம். ஒவ்வொரு தாலூக் போர்டும் முனிஸிபாலிடியும் ஒவ்வொன்று அல்லது அதற்கு மேற்பட்ட மெம்பர்களை அச்சபைக்கு தெரிந்தெடுத்தனுப்பலாம். அதோடு, ஸர்க்காரார் அச்சபைக்கு குறிப்பிட்ட சிலரை மெம்பர்களாக நியமிக்கலாம். பிரத்தியேகமாக சிறு அதாவது எலிமென்டரி பள்ளிக்கூடங்களை வைத்துக்கொண்டிருக்கும் கூட்டத்தார்களுக்கு ஸர்க்காரார் ஷை சபைக்கு சில பிரதிநிதிகளை அனுப்ப சுதந்திரம் கொடுக்கலாம்.

இச்சபையார் கல்வி இலாகாவாருடனும் முனிஸிபாலிடியாருடனும் தாலூக் போர்டாருடனும் கலந்து யோசனை செய்து, இப்பொழுது இருக்கிற பள்ளிக்கூடங்களை சீர்திருத்தம் செய்யவும், வேறு புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவும் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். அவர்கள், லாயக்கானவர்கள் அநேகரை உபாத்தியாயர்களாக பழக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். கல்வி இலாகா இன்ஸ்பெக்டர்களால் பார்க்கப்பட்டு வந்த வேலைகளில் பலவற்றையும் இச்சபையார் கவனிப்பார்கள். ஸர்க்காராரிடமிருந்து பண உதவி பெறவேண்டிய பள்ளிக்கூடங்கள் இன்னவை என்பதை இவர்கள்தான் தீர்மானிக்கவேண்டும். ஸர்க்காரிடமிருந்து ஷை பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கவேண்டிய "கிராண்ட்" (grant) பணத்தை இவர்கள் வாங்கிக்கொள்வார்கள். பள்ளிக்கூடங்களைப் பார்வையிட்டு அவற்றின் நிலைமையைப்பற்றி கல்வி இலாகா உத்தியோகஸ்தர்கள் இச்சபையார்க்கு தெரிவிப்பார்கள். அவற்றையெல்லாம் கவனித்தபிறகு, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் எவ்வளவு பணம் உதவியாகக் கொடுக்கவேண்டுமென்பதை இவர்கள் தீர்மானிப்பார்கள்.

பொதுவாக இந்தப் புதிய சட்டத்தின் குணமென்னவென்றால், பின்வருமாறு :—

புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதினாலும் ஏற்கனவே இருக்கிற பள்ளிக்கூடங்களைச் சீர்திருத்தம் செய்வதி



னாலும், செலவு அதிகமாகும். அதற்கேற்ற வருமானம் வேண்டும். ஷை காரியங்களை நடத்த தாலூக் போர்டாரும் முனிசிபாலிடியாரும் இஷ்டப்பட்டால், அவர்களுக்கு இதற்காக ஒரு தனி வரி போட சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி வரிப்போட்டால் ஸர்க்காராரும், அவ்வரிக்கு சமமான ஒரு பணத்தொகையைக் கொடுத்து உதவுவதோடு இத்தனை நாட்களாக கொடுத்துக்கொண்டு வரும் பணத்தையும் கொடுத்துக் கொண்டுவருவார்கள். ஸர்க்காரார், மேலே குறித்ததைக் காட்டிலும் அதிகமாகக் கொடுத்தாலும் கொடுக்கலாம். தாலூக் போர்டார் அல்லது முனிஸிபாலிடியார் அம்மாதிரி வரி போட்டு அநேக பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினால் அவர்கள், அவ்விடங்களிலுள்ள பிள்ளைகளை அப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும்படி அப்பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு உத்தரவிடலாம்.

பிறகு, முனிஸிபாலிடியார், தாலூக் போர்டார், ஜில்லா போர்டார்முதலிய கூட்டத்தார்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாலாகிய, ஜில்லா கல்விச் சபை, என்ற சபைகள் ஏற்படுத்தப்படும். இப்பொழுது கல்வி இலாகாவார்களால் கவனிக்கப்பட்டுவரும் விஷயங்களில் அநேகம் இச்சபையார்களால் கவனிக்கப்படும். எந்தெந்த பள்ளிக்கூடங்களுக்கு ஸர்க்கார் ஒத்தாசை அல்லது உதவி செய்யவேண்டுமென்பதையும் அதை எவ்விதமாக (எவ்வளவு பண உதவி) செய்யவேண்டுமென்பதையும் தீர்மானித்து, அதிகாரம் செலுத்தவேண்டிய சுதந்திரம் இச்சபையாருக்கு உண்டு. உபாத்தியாயர்களாக அநேகர்களை பழக்குவதற்கும், புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதற்கும், ஏற்கனவே இருக்கிற பள்ளிக்கூடங்களைச் சீர்திருத்தம் செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகளை இச்சபையார்கள்தான் செய்யவேண்டும்.

இந்த புதிய சட்டம் இப்பொழுது சட்ட நிரூபண சபையாரினால் கவனிக்கப்பட்டு வருகிறது.

(From the *Publicity Bureau.*)

---

Every man has just as much of vanity as he wants of understanding.

---

## Annual Report of the Society of Foreign Missions for the year 1919.

### அன்னிய தேசத்துப் போதகர் சபையின் 1919-ம் ஆண்டின் வருஷாந்தர ரிப்போர்ட்.

| | | கோயமுத்தூர் மேற்றிராசனத்தில் |
|---|---|---|
| மேற்றிராசனங்கள் ... | 35 | |
| கத்தோலிக்கரின் தொகை ... | 1664963 | 43792. |
| கோவில்கள் ... | 6252 | 125. |
| ஐரோப்பிய வேத போதகர்கள் | 1178 | 33. |
| சுதேச குருக்கள் ... | 1082 | 20. |
| உபதேசிமார் ... | 3446 | 42. |
| குரு மடத்திலுள்ள வித்தியார்த்திகள் | 2610 | 12. |
| சந்நியாசிகள் ... | 408 | 11. |
| கன்னியாஸ்திரிகள் ... | 7153 | 112. |
| மனந்திரும்பின அஞ்ஞானிகள் | 28091 | 425. |
| பாடசாலைகள் ... | 5269 | 79. |
| மாணுக்கர்கள் ... | 192603 | 5622. |

---

## Here and There.

### நாலு சங்கதிகள்.

Kotagiry :—கோத்தகிரியில் தேவமாதா பிறந்த திருநாள் செப்டெம்பர் மாதம் 12-ம் உ ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும். காலை 9-மணிக்கு பாட்டுப்பூசையும், பிறகு இங்கிலீஷ் பிரசங்கமும், மாலை 5-மணிக்கு தேவநற்கருணை ஆசீர்வாதமும், பிறகு தமிழ் பிரசங்கமும், $5\frac{3}{4}$-மணிக்கு சுற்றுப் பிரகாரமும் நடைபெறும்.

வெளியூர் கிறிஸ்துவர்கள் கோத்தகிரி கோவிலில் போய் திவ்விய நன்மை வாங்கப் பிரியமிருந்தால் தாங்கள் பாவசங்கீர்த்தனம் செய்ததாகவாவது, தேவதிரவிய அநுமானங்களைப் பெறுவதற்கு யாதொரு விக்கினமில்லையென்பதாகவாவது



தங்கள் தங்கள் பங்கு விசாரணைக் குருசுவாமியாரிடத்தில் ஒரு சீட்டு வாங்கிக்கொண்டு வரவேண்டியது.

பூசைக்காவது வேறுவித வேண்டுதலுக்குக் காணிக்கையாவது கொடுக்க பிரியமுள்ளவர்கள் கோத்தகிரி பங்கு சுவாமியாரிடத்தில் பண முதலியவைகளைக் கொடுத்து செலுத்தவேண்டும்.

Rev. R. Beyls,
கோத்தகிரி பங்கு சுவாமியார்.

Marian Congress :—மரியாயின் மகா சங்கம் 1921-ம் வருஷம் ஜனவரி-மீ 13-ம் தேதி வியாழக்கிழமை மாலை துவக்கப்படும்; 15-ம் தேதி சனிக்கிழமை மாலையில் ஊர்பவனி, வெற்றித்தேர் சிறப்பலங்காரங்கள் வெகு விமரிசையாக நடைபெறும். இந்தியா, பர்மா, சிலோன் முதலிய தேசங்களிலிருந்து அநேக கிறீஸ்துவர்கள் வந்து தேவமாதாவின் மகிமைப்பிரதாபத்தைக் கொண்டாடுவார்கள் என்று நம்பப்பட்டிருக்கிறது. 16-ம் தேதி காலை முடிவுபெறும்.

Progress of Education :—சென்னை இராஜதானியிலுள்ள ஆண்பிள்ளைகளில் 100-க்கு 20-பேருக்கும், பெண்பிள்ளைகளில் 100-க்கு 2-பேருக்குந்தான் எழுதப் படிக்கத் தெரியுமாம்.

Peace with Turkey :—சென்ற ஆகஸ்டு மாதம் 10-ம் தேதி துருக்கியர்கள் சமாதான உடன்படிக்கைக்குக் கையொப்பமிட்டார்கள்.

War with Bolsheviks:—போல்ஷெவிக் தேசத்தார்கள் போலண்ட் தேசத்தில் உட்பிரவேசித்து போலீசாரை பின்னடையச் செய்துவிட்டார்கள். இப்போது போலீசாருடைய நிலைமை தெளிவானதாயில்லை. சண்டை நிறுத்தஞ்செய்ய காரியஸ்தர்கள் வழிப்பாடுகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

Progress of the Church :—1919-வருஷத்தில் இங்கிலாண்டில் 9402-பதிதர்கள் மனந்திரும்பி, திருச்சபையில் சேர்ந்தார்கள்.

"The charity of Christ presseth us"—அமேரிக்கா தேசத்தில் 625-வைத்தியசாலைகள், சந்நியாசிகளாலும், கன்னியாஸ்திரிகளாலும் நடத்தப்படுகின்றன.

Coimbatore :—சென்ற ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி, தேவமாதா மோட்சத்துக்கு எழுந்தருளின திருநாளன்று

மகா கனம்பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியார் அவர்கள் மேற்றிராசன கோவிலில் உறுதிபூசுதல் என்கிற தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றினார். 143-பேர் ஷை தேவதிரவிய அநுமானத்தைப் பெற்றார்கள். இவர்கள் சத்தியவேதத்தில் திடப்படுத்தப்பட்டு இஸ்பிரீத்துசாந்து வானவருடைய ஏழு வரப்பிரசாதங்களை தங்கள் ஆத்துமத்தில் காப்பாற்றிக்கொண்டு உத்தம கிறீஸ்துவர்களாய் நடப்பார்களாக.

A New Daily :—செப்டெம்பர் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு ஈஸ்டர்ன் மெயில் (Eastern Mail) என்னும் தினவர்த்தமான ஒரு புது பத்திரிகை டெல்லி (Delhi) என்னும் பட்டணத்தில், இங்கிலீஷ் பாஷையில் பிரசுரிக்கப்படும் என்று தெரியவருகிறது. கர்னல் ஓ. கோர்மன், மிஸ்டர் S. J. கொன்சல்வெஸ் என்ற இரண்டு கத்தோலிக் துரைகளால் ஷை பத்திரிகை ஏற்படுத்தப்பட்டது.

Advertisement rates :—சத்திய தூதனில் பிரசுரிக்க விரும்பும் விளம்பரங்களைக் கீழ்கண்ட விகிதப் பிரகாரம் முன்பணம் அனுப்பினால் பத்திராதிபர் அனுமதியுடன் பிரசுரிக்கப்படும்.

| | | 1 Page. | ½ Page. | ¼ Page. |
|---|---|---|---|---|
| | | RS. | RS. | RS. |
| 1 Month | ... | 3 | 2 | 1 |
| 3 Months | ... | 8 | 6 | 3 |
| 6 Months | ... | 15 | 10 | 5 |
| 1 Year | ... | 27 | 18 | 9 |

## For the Church of the Sacred Heart, Coimbatore.

### கோயமுத்தூர் திரு இருதயக் கோவில் கட்டடத்திற்கு தர்மம்.

கோயமுத்தூர் : திரு இருதயத்துக்கு நன்றியறிதலுள்ள ஓர் கிறீஸ்துவன். ரூ. 2.


# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VI.** **October 1920.** **No. 10.**

புத்தகம் **VI.**] FIDES AC ROBUR. [நம்பர் **10.**


## Good Manners.

## நல்லொழுக்கம்.

சம்பாஷணை : (தொடர்ச்சி.)

நாம் பிறரிடத்தில் எப்போதும் அன்பான வார்த்தைகளைப் பேசவேண்டும். "இனியவுளவாக இன்னாத கூறல், கனியிருப்ப காய் கவர்ந்தற்று" என்றார் நாயனார். அதாவது, நமது சகோதரர்களிடத்தில் அன்பான வார்த்தைகளைப்பேசி, அன்னவர்களைச் சந்தோஷப்படுத்துவதற்குப் பதிலாக கடுர வார்த்தைகளுரைத்து மனம் நோகப்பண்ணுவது, ஓர் மரத்தில் பழுத்த இனிய நற்கனிகளிருக்க, அவைகளைக் கைப்பற்றாது காய்களைப் பறிப்பதுபோலாமென்றார்.

"யாகாவாராயினும் நாகாப்பர் காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்றமையால் நாவடக்கம் நமக்கு அத்தியாவசியம். நாவை அடக்காவிட்டால், வீண் வார்த்தைகளைப் பிரயோகப்படுத்தினால், சொற்குற்றங்களைப் பெற்று அவமானப்படுவதோடுகூட துன்பத்திற்கும் உள்ளாவோம்.

"பிறர்குற்றங் கூறுவான் தன்குற்றமுணரான்"
"பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்ப தொன்றுண்டு—பிறர் பிறர்
சீரெல்லாங் கூறி சிறுமைப்புறங்காத்து
யாரார்க்குந் தாழ்ச்சிசொலல்."

பெரும்பாலார் பிறரை காணாதவிடத்து அவர்மீது குறை கூறி அவரை இழிவாகப் பேசுவதையே பெரும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் மனிதப் பிறப்பு சிறந்ததெனப் போதிக்கின்றனர்! ஆனால் என் சிற்றறிவிற்கெட்டிய வரையில் இதைவிட மிருக ஜென்மமே சிலாக்கியம். இப்படி அன்னியர்களைப் பழிக்கின்றவர்கள் குற்றமற்றவர்களோவென்றால், அவர்களிடத்தில் எவ்வளவோ ஆசாபாசங்கள் குடிகொண்டிருக்கின்றன. தன் குற்றமுணரும் புத்திமான்கள் பிறரை நிந்திக்கமாட்டார்கள். அவ்வாறின்றி படிப்பில்லாத மூடன் படித்தோனை நோக்கிப் 'படிப்பில்லாதவன்' என்றும், வாயாடித்தனமாகப் பேசுகிறவன் வேறொருவனை 'வாயாடி' என்றும், துர்க்குணன் நற்குணமுடையோனை 'துர்க்குணன்' என்றும், பிறர் புறங்கூறித் திரியலாகாது. பிறரிடமுள்ள நற்குணங்களையே எடுத்துப் பேசவேண்டும்.

**தர்மம் :** தர்மமென்பது இரப்போர்க்குக் கொடுத்தலாம். இதுபற்றியே திருவள்ளுவரும் "வறியார்க் கொன்றீவதே ஈகை, மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீர துடைத்து" என்று கூறியிருக்கின்றனர். நாம் பார்த்து வருவதுபோல, உலகத்திலே தரித்திரர்கள், தங்களுக்குரிய பெருமை சிலாக்கியமெல்லாம் ஒழித்து, முகத்தில் மிகப்பரிதாபம் தோன்ற பகுத்தறிவு உண்டாயிருந்தும், முக்கியமாய்த் தங்களுடைய பலவீனத்திலேயே தங்களை இல்லாதவர்களென்றும், எளியவனென்றும் சொல்லித் தாழ்த்தி, செல்வர்களையண்டி யாசகம் உராக்கின்றனர். ஆத்தன்மையுடையார்க்குப் பொருளுடையார் இல்லையென்றுரைப்பது மிகவும் பரிதாபத்துக்குரிய நிலையென்பது எல்லார்க்குந் தெரிந்த விஷயமே. அதிகமாகத் தருமம் செய்யவேண்டுவதில்லை. ஆனால் ஒவ்வொருவரும் தங்களுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி நற்காரியங்களுக்கும், ஏழைகளுக்கும் கொடுத்து உதவவேண்டும். நற்குடும்பத்தில் பிறந்து செல்வாக்காய் வளர்ந்தவர்களின் அநேக குடும்பங்கள் கெட்டுச் சீரழிந்து போய்விட்டன என்பது நம்மெல்லோருக்கும் தெரிந்திருந்தும், இப்பேர்ப்பட்ட குடும்பங்களை முன்னுக்குக் கொண்டுவரக்கூடுமாவென்றால், கூடும். ஆனால் யார் முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்றாலோ, முக்கியமாய் அவர்கள் பந்து மித்திரர்களும், சுற்றத்தாராலுமே ஆகவேண்டிய காரியமிது. ஒவ்வொருவரும் சொற்பத்தொகை கொடுத்து உதவினால், 'பலதுளி பெருவெள்ளம்' என்றபடி பலபேர்களுடைய சொற்ப உதவியால் அக்குடும்பம் தாரித்திர வலையில் சிக்காமல் மரியாதையாய்க் காலங்கழிக்கக்கூடும்.



தரித்திரர்கள் செல்வான்களிடம் சென்று, அவர்களைப் போற்றிப் பணிந்து தர்மம் கேட்பதை நாம் பார்த்திருக்கிறோம். அப்பொழுது அவர்களுடைய எண்ணம், செல்வானால் உதவப்பட்டு பலனடைவோம் என்றுதானிருக்கவேண்டும்.

ஆனால் சில தனவான்கள் ஏழைகளைக் கண்டமாத்திரத்தில் அவர்களைப் பழித்துக்கூறி நாளையும் பின்னையும் தங்களுடைய இல்லத்தை எட்டிப்பாராமலிருக்கும்படி பரிகாசஞ் செய்கின்றனர். ஏழைகளுக்கு முகமலர்ந்து அவர்கள் விரும்பியதை அன்புடனே கொடுத்து உதவிசெய்யவேண்டும்.

**மதுவிலக்கு :**

கல்வியறிவைக் கெடுத்திடுமே—உன்றன்
கனநலமெல்லாம் அழித்திடுமே
செல்வமென்ற பேரைப்போக்கிடுமே, பின்பு
சிறியனாக்கும்—மதுபானம்.

தற்காலத்தில் குடியென்பது மனிதனைத் தன் வசப்படுத்தி பெரியோனென்றும, சிறியோனென்றும், கற்றோனென்றும், மூடனென்றும் பாராமல், அனைவரையும் கெடுத்து நாசப்படுத்தி வருவதை அறிந்திருக்கிறோம். இதனால் வருவனவெல்லாம் நஷ்டமேயாம். சரீர நஷ்டம், செல்வ நஷ்டம், மான நஷ்டமாகிய இவைகளாம். நமக்குள் அநேகர், தரித்திரர்களாயும், ஒழுக்கக் குறைவுள்ளவர்களாயும், யாவராலும் இகழப்படுகிறவர்களாயும், இருப்பதற்கு அநுகூலம் குடியேயாகும். நாம் பார்த்து வந்திருக்குமாப்போல் எத்தனையோ பணக்காரர்கள், படித்தவர்கள், படியாதவர்கள், உத்தியோகஸ்தர்கள் அப்போதைக்கப்போது தனவந்தர்களாய்த் தோன்றி குடியென்னும் தரித்திரத்தில் விழுந்துகெட்டார்கள். இப்போதும் எத்தனையோபேர் தங்கள் நல்ல சம்பாதனையைக்கொண்டு நாலுபேர் பார்த்து மதிக்க நல்ல யோக்கியமாய் வாழ்ந்து பிள்ளைகளை நற்பயிற்சியில் வளர்க்காமல் குடியில் இறைக்கின்றனர். குடிவெறியானது புத்தியைக் கெடுத்து, ஞாபக சக்தியைப் பழுதாக்கி, தேகத்தைக் கெடுத்து, அழகைக் குறைத்து, இரத்தத்தை அசுத்தப்படுத்தி வியாதியை உண்டுபண்ணுவதை நாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல கண்ட சத்தியம். குடியானது தரித்திரத்தின் கூட்டாளி; மனைவி மக்களின் பரிதாபம், வியாகுலம்.

(இன்னும் வரும்.)

# The Little Garden of Roses.

## சிறு ரோஜாத் தோட்டம்.

### மலர் 13. (முன் தொடர்ச்சி).

4. 'ஆண்டவர்பேரில் நம்பிக்கைவைத்து, நற்கிருத்தியத்தைச் செய்யக்கடவாய். பூலோகத்தில் வசித்து, அதன் ஆஸ்திகளைக்கொண்டு நீ விசாரிக்கப்படுவாய்' என்று தீர்க்கதரிசியானவர் சொல்லியிருக்கிறார்.

தருமகுணமுள்ள மனம் எப்போதும் இரக்கமுள்ளது. அது தனி நன்மையைத் தேடாது. தனக்குக் கொஞ்சம் சகாயம் போதுமென்றிருக்கும். யாதொன்றைப் பெற்றுக் கொள்வதைவிடக் கொடுக்கிறதே பெரிய பாக்கியமென்றிருக்கும்.

நமது வாக்கினால் நாம் சதா சர்வேசுரனைப் புகழ்ந்து ஸ்துதித்து வரவேண்டுமென்று தருமம் நம்மைத் தூண்டுவதால், அதினிமித்தம் நாம ஏழைகளுக்குப் பரிந்துபேசவும், அவர்களை ஆதரிக்கவும், சாந்தப்படுத்தவும், அவர்களுக்குத் தைரியங்கொடுக்கவும், நற்புத்தி போதிக்கவும் நமது வாக்கினால் உபகாரம் செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம்.

தருமத்தினிமித்தம் நமது கரங்கள் சர்வேசுரனுக்காக வேலை செய்யவேண்டியிருப்பதால், அவைகளால் யாதோர் வேலைசெய்து, ஏழை எளியோர்களைக் காப்பாற்றக்கடவோம். மேலும் சாப்பாடு முதலான பக்ஷணங்களையும், நாம் கஷ்டப்பட்டுச் சேகரித்து வைத்திருக்கும் பணங் காசுகளையும் ஏழைகளுக்குப் பட்சத்தோடு கொடுக்க நமது கரங்களை நீட்டுவோமாக.

நமது கண்களால் சதாகாலம் சர்வேசுரனுடைய அளவறுக்கப்படாத சோதிப்பிரதாப மகிமையைத் தரிசிக்கவேண்டியிருப்பதால், நாம் ஏழைகளையும், திக்கற்றவர்களையும் நம்மிடத்தில் பட்சத்தோடும், அன்போடும், வரச்செய்து, நமது கண்களால் அவர்களுக்குத் தயை காட்டவேண்டுமென்று தருமம் நம்மை ஏவுகின்றது.



சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்வதில் நமது கால்களை உபயோகிக்கவேண்டியிருப்பதால், தருமத்தினிமித்தம் நாம் வார்த்தையாலும், கிரியையாலும், உபகாரஞ்செய்ய எண்ணும்போது, நமது நேசமானது நம்மைத் துரிதப்படுத்தி, க்ஷணப்பொழுதில் குறித்த இடத்தைச்சேரப் பாதங்களை உபயோகப்படுத்திக்கொள்வோமாக.

நமக்கு ஒழிந்தநேரத்தை, நமது சகோதரர்களான புறத்தியாருடைய பிரயோசனத்திற்காக உபயோகப்படுத்தி, அவர்களைக் காப்பாற்றக்கடவோம்.

நாம் சகலருக்கும் நல்லவர்களாயும், எல்லாவற்றிற்கு மேலாக சர்வேசுரனையும் நேசித்து, நமது இருதயங்களை உதாரகுணத்தோடு திறந்து, அத்தியந்த பட்சம் காட்டுவோமாக.

நெருப்பு விறகைப்பற்றி எரிப்பதுபோல, தருமமென்கிற நெருப்பானது பாவமென்கிற விறகை எரித்துச் சாம்பலாக்கிவிடும். அது மனஸ்தாபத்தால் ஆத்துமத்தைச் சுத்திகரிக்கும். பாவசங்கீர்த்தனத்தால் அதைக் கழுவும்; ஜெபத்தால் அதன் மாசை அகற்றும்; சுவிசேஷ வாசகத்தால் அதற்கு நற்போதனையைக் கொடுக்கும்; பக்திக்குரிய தியானத்தால் அதற்கு ஞான ஆசையை மூட்டும்; தன்னுள்ளத்தில் தங்கி வசித்து ஞானக்காரியங்களின்மேல் நாட்டமுள்ளதாகச்செய்து சர்வேசுரன்பேரில் மிகுதியான தேவசிநேகமுள்ளதாகி, அவரோடு ஏகோபித்திருக்கச்செய்யும்.

தாழ்ச்சியோடுகூடி செய்யப்படும் தருமமானது அற்பப் பாவங்களின் பொருட்டாவது, முன் மன்னிக்கப்பட்ட பாவங்களுக்குரிய அநித்திய ஆக்கினைக்குரிய பூரண தீர்ப்பை இவ்வுலகத்திலேயே தீர்க்கின்றது. ஆபத்து இனி ஏற்படாதபடி காக்கிறது; தற்கால விஷயங்களை யூன்றியறியும் சக்தியளிக்கிறது; அநேக சந்தேகங்களினின்றும் நம்மை விலக்குகிறது; வேடிக்கை பார்க்கும் எண்ணத்தை விலக்குகிறது; அனாவசியமான விஷயங்களினின்றும் ஒதுக்கிவிடுகிறது; வீண் உம்பத்துக்கேதுவான காரியங்களைத் தள்ளிவிடுகிறது; பொய் விஷயங்களைக் கண்டுபிடிக்கச்செய்கிறது; வெட்கப்படத்தக்க காரியங்களைச் செய்வதிற் பயத்தை ஊட்டுகிறது; கடினமான விஷயங்களை மெதுவாக்குகிறது; மறைந்துள்ள விஷயங்களை அறியும் சக்தியையளிக்கிறது; பரம இரகசியங்களை ஜெபகாலத்தில் நமக்குத் தெரியப்படுத்துகிறது. சுருக்கிச்சொல்

வின், தருமம் உள்ளும்புறம்புமுள்ள எல்லாவற்றையும் அடக்கி ஆளுகிறது.

நம்மிடத்தில் சுபாவமாயுள்ள ஆங்காரமும், வீண் பெருமையும் தருமத்தின் மூலமாக நாம் அடையக்கூடிய நன்மைகளை அடையத் தடைசெய்கின்றன. ஆனால் சர்வேசுரனுடைய ஊழியரெல்லாரிடத்திலும் காணப்படும் தருமமானது, எந்தக் காரியத்திலும் தம்முடைய நலத்தைத் தேடாமல், எல்லாவற்றிலும் தேவதோத்திர மாத்திரமே உண்டாகும்படி செய்ய வல்லது.

5. எல்லாவற்றிற்குமேலாக சர்வ நன்மைகளுக்கு ஊறணியாயிருக்கிற சர்வேசுரனைத் தனக்கு முடிவான கதியாகக் கொண்டிருக்கும் ஆத்துமம் எவ்வளவோ பாக்கியமுள்ளது. ஏனெனில் அது பிரபஞ்ச காரியங்களையெல்லாம் தனக்குக் கசப்பாகவும், துன்பமும் விரோதமுமானவற்றையெல்லாம் பொறுமையாகவும், சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலக காரியங்களெல்லாம் விழலும் விழலென்றெண்ணி, சர்வத்துக்குமேலாகச் சர்வேசுரனைக் கண்டடைந்து, அவரை எல்லாவற்றிற்கு மேலாகச் சுகித்துச் சிநேகிக்க ஆசைகொள்ளும்.

சர்வேசுரன் இப்பேர்ப்பட்ட ஆத்துமங்களைத் தேடி, அவைகளைத் தமது அணைகடந்த அன்பில் மூழ்கும்படி செய்கிறார். அப்போது அவ்வாத்துமம் அவருடைய நேசத்தைப் பெறும்பொருட்டுத் தன் சுயலாபத்தையும், இவ்வுலக காரியங்களையும் பழுதற வெறுத்துவிட்டுத் தன்பேரில் நீச எண்ணங்கொண்டு, தனக்குத்தானே மரித்துத் தனது பரிசுத்ததனத்தைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டுத் தனது சத்துருக்களுடன் இடைவிடாமல் போராடும். பிறகு இப்பரிசுத்த ஆத்துமம் இவ்வுலகப் பற்றுதல்களினின்று நீங்கி, யாதொரு தடையில்லாமல் சந்திர, சூரிய, நட்சத்திரமண்டலங்களுக்கு மேலாகக் கிளம்பித் தனது சிருஷ்டிகரும் கர்த்தாவுமான சர்வேசுரனுடைய மார்பில் சாய்ந்து இளைப்பாறத் தீவிரித்துச்செல்லும்.

தருமமானது நாம் இவ்வுலக மாய்கைகளோடு கட்டப்பட்டிருக்கும் கட்டுகளையவிழ்த்து நம்மை விடுவிக்கும். நமது பாரச்சுமைகளை இலேசாக்கும். மேலும் முந்தமுந்தக் கடவுளுக்கு எது பிரியமோ அதைச் செய்யத் தீவரித்தோடும். அப்போது அது தன் தெய்வ சொரூபமாகிய கிறீஸ்துவுடன் சேர்ந்து, 'பிதாவே! எனது மனதின்படியல்ல. எப்போதும் எல்லாவிடங்களிலும் உமது சித்தத்தின்படியே ஆகட்டும்' என்று பிரார்த்திக்கும்.



நாமெல்லோரும் ஒரே தந்தையான சர்வேசுரனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று அங்கீகரித்துக்கொண்டு, எல்லோரையும் சகோதரர்களாகப் பாவித்து, ஒருவரொருவரை நேசித்து, ஒருவருக்கொருவர் உதவி சகாயம் புரிந்துவருவோமாக. கடந்துபோகும் ஆஸ்தியை நம்பாமல், சகல பாக்கியங்களுக்கும் காரணராயிருக்கிற சர்வேசுரனை முழுமனதோடு நேசித்து, அவர்பொருட்டு நமது சகோதரர்களை நம்மைப்போல நேசித்துவருவோமானால், சொற்பநாளைக்கு ஜீவித்திருக்கப்போகிற இச்சரீர ஜீவியம் கடந்தபின், சதாகாலமும் மோட்ச ஜீவியத்தில் சர்வேசுரனோடு இராச்சியபாரம் செய்பவர்களாவோம். (இன்னும் வரும்.) S. S. G.

---

## Optimist and Pessimist.

## நன்மையாய் நினைக்கிறவனும், கெடுதியாய் நினைக்கிறவனும்.

நமது பத்திரிகைக்கு வேண்டிய விஷயங்களை எழுதிக்கொண்டிருக்கும்போது, சகலமும் கெடுதியாய் நினைக்கும் ஒரு சிநேகிதர் நம்மிடம் வந்து, நம்மை நோக்கி, உமக்கு அதிக வேலை இருக்கிறதென்று தோன்றுகிறது, அடுத்த மாதத்துக்கு உமது பத்திரிகையை முஸ்திப்பு செய்கிறீரோ?

**நன்மையாய் நினைக்கிறவர்:**—ஆமாம்; அச்சுக்கூடத்துக்கு அதை அனுப்ப நாள் ஆயிற்று. குறித்த நாளில் அதை அனுப்பத் தவறினால் அச்சுக்கூடத்து மானேஜர் வருத்தப்படுவார்.

**கெடுதியாய் நினைக்கிறவர்:**—சரிதான்; நல்ல வேலைதான், செய்துவருகிறீர்; ஆனால் நீர் எடுக்கும் பிரயாசைக்கு என்ன பிரயோசனம்? பத்திரிகைகளை வாசிக்க ஜனங்களுக்கு நேரம் உண்டோ? நேரம் இருந்தாலும் அவர்களுக்குப் பிரியம் உண்டோ? இல்லை.

**நன்மையாய் நினைக்கிறவர்:**—காலம் மாறிப்போகிறது, நமது நாட்களில் அநேகர் பத்திரிகைகளை வாசிக்கிறார்கள்—கெட்ட புஸ்தகங்களுக்கும், கெட்ட பத்திரிகைகளுக்கும் கணக்கில்லை. அது விஷ மருந்தைப்போல் பரம்பி ஜனங்களுடைய புத்தியைக் கெடுக்கிறது. நம்மாலானமட்டும் அதை மறுத்து

கத்தோலிக் பத்திரிகைகளைப் பிரசுரிப்பது நமது கடமை அல்லவா?

**கெடுதியாய் நினைக்கிறவர்:**—ஆமாம். ஆனால் நமது கிறீஸ்துவர்களுக்குள்ளே எத்தனைபேர் நல்ல பத்திரிகைகளை வாசிக்கப் பிரியபடுகிறார்கள்? அவர்கள் கட்டுக்கதைகளைப் படிக்கப் பிரியப்படுவார்களே ஒழிய மற்றப்படி எங்கே நல்ல பத்திரிகைகளைப் படிக்கிறார்கள்?

**நன்மையாய் நினைக்கிறவர்:**—அவ்வளவு கெடுதியாய் நினைப்பது சரியல்லவே. நல்ல பத்திரிகைகளை வாசிக்கிறவர்கள் சிலராவது உண்டு. நமது எளிய சத்தியதூதன் முதலாய் மாதமாதம் எப்போ வரும் என்று சில சந்தாதார்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று நமக்குத் தெரியவருகிறது.

**கெடுதியாய் நினைக்கிறவர்:**—இருக்கலாம். ஆனால் அவர்கள் அதிலிருக்கும் புத்திமதிகளைக் கவனித்து அனுசரித்து நடக்கிறார்களா? துர்ப் போதனையைப் போதிக்கிறவர்களின் சொல்லை அவர்கள் கேட்கிறதொழிய மற்றப்படி நற்புத்தியைப் புகட்டுவார் சொல்லைக் கேட்கிறதில்லை.

**நன்மையாய் நினைக்கிறவர்:**—துர்ப்புத்தி சொல்லுகிறவர்கள் அநேகர் உண்டு என்பது மெய்தான். அவைகளைக் கேட்கிறவர்களும் அநேகர் என்பதும் வாஸ்தவம். ஆனால் "ஆணியானது, அடிக்க அடிக்க இறங்கும் என்பதுபோல் புத்திமதி சொன்னால் படிப்படியாய் மனதில் நிலைக்கும் என்பதற்கு சந்தேகமில்லை. திருச்சபை உண்டான நாள் முதல் இந்நாள்வரை வேதவிரோதிகள் இருந்தேவருகிறார்கள். இன்னும் உலகமுடிவுவரை இருப்பார்கள். அதினிமித்தம் நாம் கைகளைக் கட்டிக்கொண்டு ஒன்றும் செய்யாமலிருக்கவேணுமா? நீங்கள் போய் சகல ஜனங்களுக்கும் சுவிசேஷத்தைப் போதியுங்கள் என்று சேசுநாதர்சுவாமி கட்டளையிட்டார் அல்லவா? அப்பிரகாரமே அப்போஸ்தலர்களும், குருக்களும் சுவிசேஷத்தை ஓயாமல் போதித்துவந்தார்கள்; இன்னும் உலக முடிவுபரியந்தம் சுவிசேஷத்தைப் போதிப்பார்கள். அதைக்கேட்டு நடக்கிறவர்கள் பாக்கியவான்கள். அதைக் கேளாதவர்கள் மோசம் போகிறார்கள். அது அவர்களுடைய காரியம்.

**கெடுதியாய் நினைக்கிறவர்:**—சரிதான். ஓர் பத்திரிகையைப் பிரசுரித்துப் பணச்செலவு செய்கிறதைவிட வேறு தர்மகாரியங்களில் அச்செலவைச் செய்தால் அதிக பிரயோசனமாயிருக்காதா?



**நன்மையாய் நினைக்கிறவர்:**—வேறு எந்தத் தர்மகிருத்தியங்களையும் செய்யவேணும், பத்திரிகைகளையும் பிரசுரிக்கவும் வேணும் என்று பரிசுத்த பிதா 10-ம் பத்திநாதர் தாமே சொன்னதுபோல, கோவில்களையும், பள்ளிக்கூடங்களையும் கட்டுகிறதைவிட ஓர் நல்ல கத்தோலிக் பத்திரிகையைப் பிரசுரிப்பது அதிக பிரயோசனம்.

**கெடுதியாய் நினைக்கிறவர்:**—ஐரோப்பா தேசக் கத்தோலிக்கரைக்குறித்து அர்ச். பாப்பானவர் அவ்வாக்கியத்தைச் சொன்னார். ஆனால் இந்திய கத்தோலிக்கர் பெரும்பான்மையோர் படிப்பிலும், வாசக விஷயத்திலும், அசட்டையுள்ளவர்களாயிருக்கிறதினால், பத்திரிகைகளால் வெகு சொற்பப் பேருக்கு பலன் உண்டாகும்.

**நன்மையாய் நினைக்கிறவர்:**—அந்த சுகிர்த வாக்கியம் இந்தியா தேசத்தாருக்கும் செல்லும் என்று நமக்குத் தோன்றுகிறது. கடவுள் சகலருக்கும் தமது உதவி வரப்பிரசாதங்களைக் கொடுத்தாலும், சிலபேர்மாத்திரம் அவைகளை ஏற்றுக்கொண்டு பலன் அடைகிறார்கள். அதுபோலவே நூறு பேர்களில் ஒருவனுக்குமாத்திரம் நமது சின்ன பத்திரிகை பிரயோசனமாயிருந்தால், அது எவ்வளவோ நன்மை தரும். ஆகையால் நல்ல விதை விதைக்கப் போனவனைப்போலவே நாமும் எவ்விதத்திலும், நல்ல விதை விதைக்கப் பிரயாசப்படவேணும். அந்த நல்ல விதைகளில் சிலது முட்களின் நடுவிலும், கற்பாறைகளின்மீதும், வழியோரத்திலும் விழுந்து பிரயோசனமில்லாமல் போகும் என்று நமக்குத் தெரிந்தாலும், சிலதுகள் நல்ல நிலத்தில் விழும் என்று உறுதியாய் நம்புகிறோம். நல்ல நிலத்தில் விழுந்த விதை சுவாமி கிருபையால் ஒன்றுக்கு நூறு பலனைக் கொடுக்கும் என்று விசுவசிக்கிறோம். (Optimist.)

---

## History of the Diocese of Coimbatore.

## கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் சரிதை.

(முன் தொடர்ச்சி.)

1776-ம் வருஷத்தில் அன்னிய தேசத்துப் போதகர் சபையின் குருக்கள் இந்தியாவில் வந்து சேரும்போது முத

லில், புதுவைப்பட்டணத்தில் தங்கள் வாசஸ்தலத்தை ஸ்தாபித்தார்கள். முற்காலத்தில் அச்சபையைச் சேர்ந்த முதல மேற்றிராணிமார்களாகிய மகா வந். பள்ளு (Pallu) ஆண்டவரும், தெலா மோட் லம்பெர்ட் (De la Motte Lambert) ஆண்டவரும், கொட்டொலண்டி (Cotolendi) ஆண்டவரும், இந்தியாவின் வழியாய் பயணஞ்செய்து சீன தேசத்துக்குப் போனார்கள். விசேஷமாய், மகா வந். பள்ளு ஆண்டவர் பற்பல சமயங்களில் இந்தியாவைத் தரிசித்து சிலகாலம் தங்கியிருந்தார். அன்னியதேசத்துப் போதகர் சபையானது பிராஞ்சு தேசத்துப் பாரீஸ் பட்டணத்தில் 1663-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அதின் முக்கிய கருத்து என்னவென்றால், அவர்கள் சத்திய வேதத்தைப் போதிக்கும் தேசங்களில் சுதேசக் குருக்களை ஏற்படுத்தி அஞ்ஞானிகளை மனந்திருப்புவதுதான். அவ்விதமே ஷை. சபையின் குருக்கள் இந்தியாவில் பிரவேசித்தவுடன் புதுவைக்கு அடுத்த வீரம்பட்டணம் என்னும் ஊரில் ஓர் குருமடத்தை ஏற்படுத்தினார்கள். இந்தியாவுக்கு புதிதாய் வந்த குருக்களுக்கு தலைவராக மகா வந். பிரிகோ (Brigot) ஆண்டவர் நியமிக்கப்பட்டார். 1778-ம் வருஷத்தில் புதுவை நாட்டைத் தவிர, சென்னை, திருச்சினாப்பள்ளி, மைசூர், கோயமுத்தூர், கும்பகோணம் இதுமுதலிய விஸ்தாரமான நாடுகள் அவருடைய விசாரணைக்குச் சேர்க்கப்பட்டன.

1788-ம் வருஷத்தில் புதுவைக் குருமடத்தில் முதல் இந்திய குருக்களாக 2 பேர் குருப்பட்டம் பெற்றார்கள். இவர்கள், தோமாஸ் சுவாமியாரும், பிலிப்பு சுவாமியாருந்தான். பிறகு 1792-ம் வருஷத்தில் புதுவை மேற்றிராசனக்கோவில் அருகில் ஒரு புது குருமடம் கட்டி ஸ்தாபிக்கப்பட்டது.

1784-ம் வருஷத்தில் திப்புசுல்தான் கிறீஸ்துவர்களுக்கு விரோதமாய் எழுப்பின கலாபனையால் குருக்கள் எல்லாரும் திப்பு இராச்சியத்திலிருந்து தள்ளப்பட்டார்கள். பிறகு சகல கோவில்களும் தரைமட்டமாக்கப்பட்டன. கிறீஸ்துவர்கள் தங்கள் சத்திய வேதத்தை விடும்படியாகவும் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அதினால் அக்காலத்தில் இந்தியாவிலுள்ள மற்ற கிறீஸ்துவர்களைப்போல கோயமுத்தூர் நாட்டிலுள்ள விசுவாசிகளும் வெகு கஷ்டப்பட்டார்கள். ஒன்று அல்லது இரண்டு தவிர மற்ற கோவில்கள் எல்லாம் தரைமட்டமாக்கப்பட்டன. கோயமுத்தூரை அடுத்த ஆயம்பாளையம் என்னும் ஊரில் இருந்த சின்னக்கோவில் துலுக்கர்களின் மறதியினால் விடப்பட்டு சேதப்படவில்லை.



கருமுத்தன்பட்டிக் கோவில் துலுக்கர்களால் இடிக்கப்பட்டிருக்கும்போது, சில பிராமணர் அதின் சித்திரவேலையுள்ள இரண்டு கதவுகளை எடுத்து ஒன்றை அன்னூருக்கு அடுத்த புலுவபாளையம் என்னும் ஊருக்குக் கொண்டுபோய் அஞ்ஞானிக் கோவில்களில் வைத்தார்கள். அதை இன்னும் நமது நாட்களில் காணலாம். மற்றொரு கதவு மங்கலம் என்னும் ஊருக்கு அடுத்த வடுகங்காளி பாளையத்திலிருக்கிறதாம்.

கருமுத்தன்பட்டி விசுவாசிகள் தங்கள் கோவிலிலிருந்த சில சுரூபங்களை ஒழித்துக்கொண்டு வேத கலாபனை முடிந்தபின் இவைகளைப் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கும் கோவில்களில் மறுபடியும் ஸ்தாபித்தார்கள். ஷை சுரூபங்களில் ஒன்று தேவமாதா சுரூபம். அது வருஷா வருஷம் கருமுத்தன்பட்டி ஜெபமாலைமாதா திருநாள் சமயத்தில், தேரில் சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டுபோகப்படுகிறது. திப்புசுல்தான் வேத கலாபனைக்காலத்தில் அநேக கிறீஸ்துவர்கள் பயத்தினாலே சத்திய வேதத்தை மறுதலித்து துலுக்கர்களானார்கள் என்பது துக்கத்துக்குரிய விஷயம். அப்படி 40,000 பேர்களுக்குமேல் சத்திய வேதத்தை விட்டுவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். சிலர் துலுக்கர்களுக்கு உபாயமாய்த் தப்பித்துக்கொண்டிருந்தாலும் வேதசாட்சிகள் ஆகவில்லை.

கோயமுத்தூருக்கு அடுத்த சவேரியார் பாளையத்தில் குடியிருந்த கிறீஸ்துவர்கள் ஸ்ரீரங்க பட்டணத்துக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களில் இரண்டுபேர் செத்துக்கிடக்கும்போது மற்றவர்கள் சிறைச்சாலைக் காவலர்களுக்கு கைலஞ்சங் கொடுத்துத் தாங்களும் செத்துக்கிடக்கிறவர்களைப்போல் பாசாங்குபண்ணி சிறைச்சாலையைவிட்டுத் தப்பி தங்கள் ஊருக்குத் திரும்பிவந்தார்கள். கோவில்பாளையம் கிறீஸ்துவர்களோ துலுக்கர்களால் கொண்டுபோசப்படுகையில் இரவில் கொளையாறு என்னும் ஆற்றோரம் சேரும்போது தண்ணீர் அதிகமாய் இருந்ததினால் அதின் ஓரத்தில் தங்கினார்கள். அப்போது துலுக்கச் சேவகர்கள் தூங்கிக்கொண்டிருக்க, கிறீஸ்துவர்கள் இரவில் ஓட்டம்பிடித்துப் போனார்களாம்.

---

"The little chains by which a habit is forged are too small to be felt until they are too strong to be broken."

---

## உடை.

மனிதர்கள் மிருகங்களைப்போலின்றி தங்கள் தேசத்தின் ஒழுக்க முறைகளுக்குத் தகுந்தபடியும், நாகரீகத்துக்குத் தக்கவாறும் தங்கள் சரீரத்தை உடைகளால் மறைத்துக்கொள்ளுகிறார்கள். இதுவே முறை.

நாகரீகமற்ற ஜனங்கள் சொற்ப உடைமட்டும் அணிந்து மானங் காப்பாற்றினால் போதும் என நடக்கிறார்கள். நாகரீகமுள்ளவர்கள் அப்படியின்றி உடைகளால் தங்கள் சரீரத்தைச் சீராய் மூடுகிறார்கள். ஆகவே உடையானது மானங் காப்பாற்ற ஏற்பட்ட ஓர் ஏது.

ஆனால் இது விஷயத்தில் பற்பல தேசங்களில் பற்பல மாதிரிகள் உண்டு. மிகக் குளிர்ந்த தேசத்திலுள்ளவர்கள் சரீரத்தில் அனல் உண்டாகும்பொருட்டுக் கம்பளி, தோல் முதலியவற்றால் நெருக்கமான உடைகள் செய்து அணிந்து கொள்ளுகிறார்கள். மிக உஷ்ணதேசங்களில் வசிப்பவர்களுக்கு இவ்வித உடை அவசியமில்லை. ஏற்கனவே சூரியவெப்பம் அதிகமாகையால், அவர்கள் குளிர்ச்சியான உடை அணியவேண்டும். இத்தேசங்களில் பருத்தி, பட்டு முதலியவற்றால் செய்த துணிகளே உடுப்புக்கு ஏற்றவை.

இவ்வுடைகளை அணிந்துகொள்வதில் பல முறைகளை அனுசரித்து வருவதும் உண்டு. இத்தேசத்தில் நீளமான வஸ்திரங்களால் தேகத்தை மூடுவதே வழக்கம். ஆனால் அடிக்கடி இது கழைந்து போவதினால் இவ்வுடைகளை பின்னும் பின்னும் கவனிக்கவேண்டியிருக்கிறது. இது காரணம் பற்றியே சுலபமாக சரீரத்தை விட்டகலாதவண்ணம் சட்டை முதலிய உடைகள் தைத்து அணிகிறார்கள்.

மனிதர்கள் இயற்கையாயுள்ளவைகளால்மட்டும் திருப்தியடைகிறதில்லை. இயற்கையிலுள்ளவைகள் எவ்வளவு அழகாயிருப்பினும் அத்துடன் நில்லாது பலசெயற்கை முயற்சிகளால் அதை அலங்கரிப்பதே வழக்கம். நம் தேசத்தில் அழகுக்கு அழகு செய்பவர்போல் இயற்கையில் அழகு பொருந்திய சரீரத்தைப் பல ஆபரணங்களிட்டு சர்வேசுரனு-



டைய சிற்ப வேலை மனித சிற்பியின் வேலைக்குக் குறைந்ததென்று எண்ணினாற்போல அலங்காரம் செய்கிறார்கள். இது எவ்வாறு இருக்கிறதெனில் இந்துக்களாயிருந்து கிறீஸ்துவர்களான நாம் சர்வேசுரன் அளித்த மெய்விவாகத்துடன் திருப்தியடையாது ஜனங்கள் மத்தியில் மறுபடியும் மணவாளர்களை ஒழுங்காயிருத்தி மறுபடியும் அவர்களின் கரங்களைச் சேர்த்து யாவருங் காணச்செய்கிறதுபோலாம். இவ்விதம் செய்கிறது தேவாலயத்தில் நடந்த விவாகம் மெய்விவாகம் எனச் சந்தேகிக்கிறதாலல்ல; ஜனங்கள் தேவாலயத்தில் நடந்த வைபவங்களின் மட்டில் முழுத் திருப்தியடையவில்லையென்றோ, அல்லது தக்க நியாயமின்றி செய்யும் வெறும் வழக்கமென்றோ சொல்லவேண்டும்.

இப்படியே இயற்கையில் மட்டும் உள்ளவைகளின்மேல் அதிருப்தியடைவதும் அதைச் செயற்கையில் அநுசரிப்பதும் மனிதருக்கு இயல்பு. உடுப்பு விஷயத்திலும் இப்படிதான். இயற்கையான சரீரத்தை நாம் மூடுகிறோம்; இவ்வுடைகளை ஏன் எம்மாதிரியும் செய்யக்கூடாது? என்று எண்ணுகிறோம். ஆயினும் நாம் மிருகங்களைப்போலின்றி புத்தியுள்ளவர்களாகையால், செய்யும் எவ்வித கருமங்களும் நியாயமுள்ளவைகளாயிருக்கவேண்டும். ஓர் காலத்தில் ஒழுங்காய்த் தோன்றுவது மற்றொரு காலத்தில் ஒழுங்கீனமாயும், அக்காலத்திய நாகரீகத்துக்கு ஏற்ற நடை உடைகள் மற்ற காலத்தின் ஏற்ற நடைகளுக்கு முற்றும் விப்பாயிருப்பதும் இயல்பு. அவ்விதமே மலையாளத்தில் புலையர் எனுஞ்சாதியார் அணிந்துகொள்ளும் உடுப்புகள் தற்கால நாகரீகத்துக்கு முற்றும் விரோதமாயிருக்கின்றன. முன் இதுவே ஒழுக்கமுள்ளதென்று கொண்டாடப்பட்டிருக்கிறது. முன் காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட வருணாசிரமும், அவற்றிற்குரிய மனுதர்ம சாஸ்திரமும் அக்காலத்திய நாகரீகத்துக்கு ஏற்றவையென்று கொண்டாடப்பட்டு இக்காலத்தும் மேம்பாடாய் வருணாசிரமமுடையோராக எடுத்துக் கூறப்பட்டாலும், அவற்றால் விளைந்த பல தீமைகளை அறியும் எவரும் அவற்றைக் கண்டனம் செய்து வருகின்றதை நாம் தினந்தோறும் பார்க்கிறோம். ஆகையால் மனிதர் நடை உடைகள் தேச வியல்புக்கும் கால நாகரீகத்திற்கும் ஏற்றவையாயிருக்கவேண்டியது என அறிகிறோம்.

(இன்னும் வரும்)

## Converted by a Hail Mary.

### பிரியதத்த மந்திரத்தால் மனந்திரும்பப்பட்டவன்.

பிரான்ஸ் தேசத்தில் ஓர் ஊரில் அருள் என்னும் ஓர் வாலிபன் இருந்தான். அவனுடைய தகப்பன் அவனைப் பாரீஸ் பட்டணத்து சர்வ கலாசாலைக்கு அனுப்பத் தீர்மானித்தார். வாலிபன் ஊரைவிட்டு புறப்படுமுன் தனது சுற்றத்தார் உத்தரவைப் பெறும்படிக்கு வீடு வீடாய்ச் சென்று, ஓர் வீட்டில் வயது சென்ற புண்ணிய விதவையிடம் போனான். அந்தம்மாள் அவனைப்பார்த்து "தம்பி, அருள்சாமி நீ, நமது ஊரைவிட்டுப்போவது எனக்குக் கஸ்தியைக் கொடுக்கிறது.— பாரீஸ் பட்டணத்தில் எனக்காக ஒரு சின்னக்காரியம் செய்வாயா? அங்கே ஜெயமாதா ஆலயம் என்னும் ஒரு திருஸ்தலம் உண்டு. அவ்விடம் போய், மோட்சராக்கினியின் சுரூபத்தின் முன் முழந்தாளிலிருந்து எனக்காக ஒரு பிரியதத்த மந்திரம் சொல்லிவிட்டு வந்துவிடு" என்றாள். இதைக் கேட்டவுடன் வாலிபன் சிரிப்புடன் அப்படியே ஆகட்டும் அம்மா என்று சொல்லிப்போனான். பிறகு அருள்சாமியின் ஆத்தும விஷயம் மகா நிர்ப்பாக்கிய ஸ்திதியில் இருந்தது. அவன் கோவிலுக்குள் நுழைந்து வெகு காலமிருக்கும். பாரீஸ் பட்டணத்தில் சிலகாலம் படித்தபின், வீட்டுக்குத் திரும்ப உத்தேசித்தான். ஆனால் மேற்சொன்ன கிழவி ஞாபகம் வந்தது. ஆகையால் ஒருவரும் பார்க்காத நேரத்தில், அந்தக் கோவிலுக்குள் நுழைந்து அவள் கேட்டுக்கொண்டபடி செய்து விடுவது உத்தமம் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு ஜெயமாதாக்கோவிலை நோக்கிப்போனான். உள்ளே நுழைந்து பக்தி பற்றுதலின்றி, முழங்காலிலிருந்து பிரியதத்த மந்திரத்தைத் துவக்கினான். ஆனால் அந்த ஜெபத்தை ஜெபித்து வெகுகாலமாகிவிட்டபடியால், வார்த்தைகள் ஞாபகத்துக்கு வரவில்லை, இரண்டு, மூன்று முறை திரும்பத் திரும்ப துவக்கினான். அச்சமயத்தில், அவன் சிறுவனாயிருக்கும்போது நடந்த காரியமெல்லாம் ஞாபகத்தில் வந்தது. அவனுடைய தாயார் அவனைத் தன் மடியில் வைத்துக்கொண்டு பட்சத்தோடு, இம்மந்திரத்தைப் படிப்பித்ததும், அவளோடு முதல் முதல் கோவிலுக்குப் போனதும், ஞானோபதேசம் படித்ததும், நன்மை வாங்கினதும், பூசைக்கு உதவி செய்ததும், சகலமும் ஒன்றின்பின் ஒன்றாய், அவன் மனதில் உதித்தது. அக்காலத்தில் தான் அனுபவித்த மனச்சமாதானமும் இப்போது தானிருக்கும் அவலட்சண நிர்ப்பாக்கிய அந்தஸ்தையும் நினைத்தான். அவன் இருகண்களினின்றும் கண்ணீர் ஆறாய்ப்பெருகி ஓடத் தேம்பித் தேம்பியழுதான்.



அப்போது கோவிலின் மூலையில் ஒரு குருவானவர் பாவசங்கீர்த்தனத் தொட்டியில் உட்கார்ந்திருந்தார். அவர் வாலிபன் அழுவதைக் கண்டு அவனிடம் போய், கையைப் பிடித்துத் தூக்கி "மகனே, உன் அன்புள்ள தாயாகிய மோட்சராக்கினியை விட்டுப் பிரிந்து திரிந்த பிள்ளைபோலிருக்கிறாய், அந்த நல்ல ஆண்டவள் உன்னைப்போல ஊதாரிப்பிள்ளைகளைத் தேடிப் பிடித்து இங்கே அனுப்புவதுண்டு. பயப்படாதே, என்னிடம் வந்து உன் கணக்கைத் தீர்த்துக்கொள், சந்தோஷமாயிருப்பாய்," என்று சொல்லி அழைத்துக் கொண்டுபோய், அவனுக்குப் பாவசங்கீர்த்தனம் கொடுத்து ஆறுதல் சொல்லி அனுப்பினார். அருள்சாமி தனது ஊருக்குத் திரும்பிப் போய், நேரே தனது ஆத்தும உபகாரியாகிய புண்ணியவதி வீட்டுக்குப் போய், நன்றி செலுத்தினபின் தான் தன்னுடைய வீட்டுக்குப் போனான். (Olim.)

---

## Page for the Young.

### பிள்ளைகளின் பக்கம்.

### On work.

### வேலையின்பேரில்.

ஜார்ஜ் என்ற சிறுவன் ஒரு கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தான். அவன் மெத்தவும் சோம்பேறி. உபாத்திமார்களும், பெரியோர்களும் சொல்லும் புத்திமதிகளுக்கெல்லாம் காதுகொடுத்தவனல்ல. ஓர்நாள் சிரேஷ்ட சுவாமியார் அவனைப் பார்த்து: 'தம்பி, என்ன செய்தி என்றார்?' பையன்: 'என்ன சுவாமி! படிக்கிறதென்றால் வெகு கஷ்டமாயிருக்கின்றது' என்றான். சுவாமியார்: 'அப்போது என்ன செய்யவேண்டு

மென்கிறாய்' என்று கேட்க, பையன்: 'ஒன்றுஞ்செய்யாமல் சும்மாயிருக்கவேண்டும்' என்றான். சுவாமியார் அவனுக்கு கடைசிவிசையாகப் புத்தி கற்பிக்கவேண்டி, 'சரி, உன் பிரியம் போல சும்மாயிருக்கலாம். உன் புஸ்தகங்களையெல்லாம் மூட்டையாகக் கட்டிவைத்துவிட்டு சீக்கிரம் நமது அறைக்கு வா' என்றார். பையன் சந்தோஷத்தோடு அப்படியே செய்துவிட்டு ஓட்டமாயோடிவந்து, சிரேஷ்டர் முன்னிலையில் வந்து நின்றான்.

சுவாமியார் அவனைப்பார்த்து: 'சும்மாயிருப்பது உனக்கு சந்தோஷமும், பாக்கியமுமல்லவா? நமக்கோ வேலை செய்வதுதான் சந்தோஷமும், பாக்கியமும். சும்மாயிருப்பது உனது உடன்படிக்கை. வேலைசெய்வது நமது உடன்படிக்கை. இதை மறவாதே. இப்போது நாம் வேலை செய்யப்போகிறோம். நீ நமக்குமுன்னால் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு ஒன்றுஞ்செய்யாமல் சும்மாயிருந்துகொண்டு, நாம் வேலை செய்வதைப் பார்த்துக்கொண்டிரு' என்று சொன்னார்.

பையன் அப்படியே அதிக சந்தோஷத்தோடு ஓர்பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, சிரேஷ்டர் வேலைசெய்வதைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு மணி நேரமாயிற்று. பையனுக்குக் கொஞ்சம் சலிப்புத்தோன்ற, சுவாமியார் அறையிலிருந்த ஓர் புஸ்தகத்தைக்கண்டு அதை எடுக்கக் கையை நீட்டினான். அப்போது சிரேஷ்டர் அவனைப்பார்த்து: 'தம்பி, உன் உடன்படிக்கையை நினைத்துக்கொள். படிக்கிறதென்பதாவது, வாசிக்கிறதென்பதாவது, ஏதாவது வேலை செய்கிறதென்று அர்த்தம்; ஆகையால் ஒன்றுஞ்செய்யாமல் சும்மாயிரு' என்றார். கொஞ்சநேரத்துக்குப்பிறகு அவனுக்கு இன்னம் கொஞ்சம் அதிகமாகச் சலிப்புண்டாகத் துவக்கிற்று. சிரேஷ்டரிடத்தில் சில கேள்விகளைக் கேட்டான். அவைகளுக்கு அவர் பதில் ஒன்றுஞ்சொல்லாமல் தமது வேலையைச் செய்து முடித்தபிறகு, அவனைப்பார்த்து: 'உன்பாடு உனக்கு, என்பாடு எனக்கு; சும்மாயிருப்பதினால் உனக்குவரும் சந்தோஷத்துக்குப் பழுதுவாராதபடி நாம் உனக்கு ஒரு தொந்தரவும் பண்ணமாட்டோம்' என்று சொல்லிவிட்டு, அவனை அங்கேயே விட்டுவிட்டு, ஜெபப்புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு வெளியே ஜெபம்பண்ணப் போனார்.

பையனுக்கோ வரவர சந்தோஷம் மாறி, அதிகச் சலிப்பு வரத் துவக்கினது. வெளியில் தனது கூட்டாளிகள் துள்ளிக் குதித்து விளையாடுவதைக் கண்டு, தானும் அங்கேபோக நோக்கங்கொண்டு. வெளியே வருவதை சுவாமியார் கண்டு,



அவனைப் போகாமல் தடுத்து, அவனைப்பார்த்து: 'உன் உடன்படிக்கையை மறந்துவிட்டாயே, விளையாடுகிறதென்றால் ஏதாவது செய்கிறதல்லவா? உடன்படிக்கையை மறக்காமல் சும்மாயிரு, அல்லது ஒருபக்கத்திலிருந்து மற்றொருபக்கம் உலாத்து' என்றார். அதன்பிறகு பையனுக்கு வந்த சலிப்புக்கோ அளவில்லை. சும்மாயிருப்பதில் பாக்கியமில்லையென்றும், வேலை செய்வதில்தான் பாக்கியமடங்கியிருக்கிறதென்றும் கண்டுபிடித்து, தான் நினைத்ததும், செய்ததும் தப்பிதமென்று உணர்ந்து, சிரேஷ்டரிடத்தில் பொறுத்தல்கேட்டு, அது துவக்கிக் கடினமான வேலை செய்யத்தொடங்கிக் கடைசியாய்ப் பேர்பெற்ற சாஸ்திரியானான்.

பிரியமான பிள்ளைகளே! வேலை செய்வது வருத்தமான காரியமாயிருந்தாலும், அதன்பேரில் பிரியம் வைக்கவேண்டும். ஒழுங்காக வேலைசெய்தால் உங்களுக்கு க்ஷேமமும், நன்மையுமுண்டாகும்; இல்லாவிட்டால் நஷ்டமும், தீமையும் நேரிடும். நெற்றிவேர்வை நிலத்தில்பட கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டுமென்பது சர்வேசுரனுடைய கட்டளை. நீங்களெல்லோரும் சேசுக்கிறீஸ்துநாதருடைய பிள்ளைகள். அவர் தமது ஜீவியகாலத்தில் கடினமாய் உழைத்து, தமது ஜெபத்தினாலும், பிதாவின்பேரில் தமக்குள்ள சிநேகத்தினாலும், மனிதர் இரட்சண்யத்தின் ஆவலினாலும் வேலைகளை அர்ச்சித்தருளினார். இந்தத் திவ்விய மாதிரிகையை நீங்கள் கண்டுபாவிக்க வருந்தி உழைக்கக்கடவீர்களாக! (போதகன்.)

## Jayaseelan.
## ஜயசீலன்.

### 14-ம் அதிகாரம்.

இந்த சம்பாஷணை முடிந்தபின் நண்பர் இருவரும் தங்கள் வீட்டுமார்க்கமாகத் திரும்பினார்கள். ஜயசீலன் மிகவும் கவலையுடனும், விசாரத்துடனும் வீடுபோய்ச் சேர்ந்து தன் அறையில் பிரவேசித்து நடந்த விஷயங்களைப்பற்றி யோசிக்கலானான். தன்னை ஏமாற்றி சகல துர்க்குணங்களையும் கற்றுக் கொடுத்து தன்னைப் படுகுழி பாதாளத்தில் தள்ள விடா முயற்சி எடுத்துக்கொண்ட தனபாலனைச் சபித்துக்கொள்

வானோ? அல்லது தன் தகப்பனாருடைய அரிய புத்திமதிகளை அசட்டை செய்து, "மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என்னும் மூதியர் வார்த்தைகளையும் புறக்கணித்து கெட்ட சுபாவத்தின் ஏவுதல்களுக்குக் காது கொடுத்ததால் வந்த தீங்குகளுக்குத் தன்னைத்தானே கடிந்துகொள்வானோ? சிறிதுநேரம் தன் அந்தஸ்தைக் கவனித்து யோசித்திருப்பானேயாகில் சகலமும் அவனுக்கு "உள்ளங்கை நெல்லிக்கனி" போல தெளிவாய் விளங்கியிருக்கும். வந்த நல்ல உணர்ச்சிகளை அலட்சியஞ் செய்து, தன் மனதைத் தேற்றிக்கொண்டு யாது விசேஷமும் நடவாததுபோல் நடித்துவந்தான். இரண்டொருநாளில் தான் கள்ளக் கையொப்பம் வைத்து வாங்கின பணத்தைச் செலுத்தவேண்டிய காலம் நெருங்கினது. குறித்த தினத்தில் அந்நியன் ஒருவன், ஸத்தியானந்தன் வீட்டுக்கு வந்து பத்திரத்தின் சமாச்சாரங்களை சுருக்கமாய் சொல்லிக்காட்டி பணத்தைச் செலுத்தவேண்டிய நாள் கடந்துவிட்டபடியால் உடனே செலுத்தும்படியாகவும், செலுத்தாவிடில் பல இக்கட்டுத் துன்பங்களுக்கு ஆளாக வேண்டியிருக்குமென்றும் சொல்லிக் கண்டித்தான். நடந்த விஷயங்களைப்பற்றி யாதொன்றும் அறியாத ஸத்தியானந்தன் மிகவும் திகிலடைந்து தன்னை அந்நியனொருவன் அவமதித்து தூஷித்ததின் காரணம் என்னவென்று அறியக்கூடாமல் தத்தளித்தான். அவன் கையில் வைத்திருந்த பத்திரத்தை வாங்கிப் படித்துப் பார்த்ததும் தன்னையறியாமலே துக்கம் மேலிட்டு திடீரென இரத்தம் இருதயத்தை நோக்கிப் பாய, அவன் முகம் வெளுத்து மூர்ச்சையாய் விழும் தறுவாயிலிருந்தான். ஆயினும் உடனே தைரியத்தைக் கைக்கொண்டு, பத்திரத்தைக் கொண்டுவந்தவருக்கு நல்ல வார்த்தை சொல்லித் தான் சாயரட்சைக்குள்ளாக அவனை வந்து பார்த்து காரியங்களை ஒழுங்கு செய்வதாகச் சொல்லி, தன்னை மன்னிக்கக் கேட்டுக்கொண்டார்.

ஸத்தியானந்தனுக்கு, தன் கள்ளக் கையொப்பம் வைத்து பணம் பெற்றுக்கொண்டது ஜயசீலனேயென்று தெளிவாய் விளங்கினது. தன் மகன் எவ்வளவு அக்கிரமத்துக்குத் தலைப்பட்டுவிட்டானென்றும், துஷ்டருடைய சகவாசத்தால் எவ்வளவுக்கு புத்தி கெட்டு மதிமயங்கி ஈன செய்கைகளுக்கு தன்னை கையளித்தானென்றும் பரிஷ்காரமாய் கண்டுகொண்டார். கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள வந்த அந்நியனை அனுப்பிவிட்டு, சற்றுநேரம் தனிமையாய் இருந்து தன்னை திடப்படுத்திக்கொண்டு, ஜயசீலன் இருந்த அறைக்குச் சென்றார்.



ஏதோ புஸ்தகத்தின் பக்கங்களைப் புரட்டிக்கொண்டு ரொம்பவும் கவனமாய் வாசிப்பதாக பாசாங்கு பண்ணிக்கொண்டிருந்த தன் மகன் பக்கமாய்த் திரும்பி சாவதானமாய்ச் சொல்வார்.

ஸத்தியானந்தன்: பத்திரத்தில் கையொப்பமிட்டு நீ பெற்றுக்கொண்ட ரூபாய் 500 பற்றிய சமாச்சாரத்தை விபரமாய் எனக்குச் சொல். இந்தத் தொகை இன்னம் செலுத்தப்படாதபடியால் நானே அதற்கு உத்தரவாதியாக வேண்டியிருக்கிறது. எதுக்காக இப்படிச் செய்தாய்?

ஜயசீலன்: தகப்பனாருடைய இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இவன் திடுக்கிட்டுப் பயந்து, உடனே என்ன சொல்வதென்று தெரியாமல், சற்று ஆராய்ந்து யோசித்தபின் பத்திரத்தைப்பற்றிய சமாச்சாரம் எனக்குத் தெரியும். நானும் என் சிநேகிதனும் கூடி ஒரு முக்கியமான காரியம் செய்து முடித்ததற்காக அந்தத்தொகை வாங்கப்பட்டது.

ஸத்: அந்த முக்கிய காரியம் என்ன?

ஜய: அது என்னவென்று நான் சொல்லமுடியாது. இது என்னையும் என் சிநேகிதனையும் அடுத்தது. மற்ற யாருக்கும் இரகசியத்தை வெளிப்படுத்துவது கூடாது. ஆனால் அது தங்களுடைய வியாபாரத்துக்குச் சம்பந்தப்பட்டதல்லவென்று நிச்சயமாய்ச் சொல்வேன்.

ஸத்: பணத்தைக்கொண்டு என்ன செய்தீர்கள்?

ஜய: நாங்கள் நினைத்த காரியம் அனுகூலமாகவில்லை. இருந்த பணத்தையும் இழந்துவிட்டோம்.

ஸத்: இந்தப் பத்திரத்தில் என்னுடைய பெயர் வருவதற்குக் காரணம் என்ன? ஏன் கள்ளத்தனமாய் என் கையொப்பத்தை அதில் வைத்தாய்?

ஜய: அது உங்களுடைய கையொப்பமில்லை. என்னுடையதே. என்னை நம்பி ஒருவரும் பணம் கொடுக்கமாட்டார்களாகையால் உங்களுடைய பெயரை நான் பத்திரத்தில் வைத்தேன். சிலதினத்துக்குள்ளாக எங்கள் காரியம் அநுகூலமானவுடன் பணத்தைக்கொடுத்து இவ்விஷயத்தை முடிக்க எண்ணியிருந்தோம். ஆனால் கோரிய காரியத்தில் அபஜெயமடைந்தபடியால் கடனை உத்தரிக்க முடியாமல் போச்சுது.

ஸத்: சரி, வாங்கின பணத்தைச் செலுத்தாவிடில் உன்னைப் போலீஷார் மறியல்செய்து சிறைச்சாலைக்குக் கொண்டுபோவார்களே. என்ன செய்யப்போகிறாய்?

ஜய: என்னை என்ன செய்யமுடியும்? எனக்கு இன்னும் 21-வயது ஆகவில்லை. அப்படியிருக்கும்போது என்னைக் குற்றவாளியாக யாரும் தீர்மானிக்கமுடியாது. (தொடரும்.)

## Here and there.
### நாநா சங்கதிகள்.

Karumuthampatty :—ஒக்டோபர்-மீ 3-ம் வ ஞாயிற்றுக்கிழமை, கருமுத்தன்பட்டியில் அர்ச். ஜெபமாலைமாதா உற்சவம் வழக்கம்போல நடைபெறும்.

Death of a Cardinal :—கடந்த செப்டெம்பர்-மீ 2-ம் வ பாரீஸ் அதிமேற்றிராணியாராகிய மகா வந்திக்கத்தக்க ஆமெத் (Amette) கர்தினால் அவர்கள் காலஞ்சென்றார்.

Polish Victory :—ஆகஸ்டு-மீ 19-ம் வ போலந்துக்காரர் வார்ஸாவுக்கு தெற்கில் போல்ஷெவிக்குகளை வளைத்துக் கோட்டைகளுக்கு வெளியே நெருங்கும்படி செய்து கடும் போர் செய்ததில் கனசேதப்பட்டு செம்படைகள் 120 மைல் தூரம் பின்னிடைந்தார்கள். அநேகமாயிரம் கைதிகள் பிடிபட்டார்கள்.

Progress of the Church :—1919-ம் வரு-த்தில் அமேரிக்கா தேசத்தில் 21,625 பதிதர்களும், இதர மதஸ்தரும் மனந்திரும்பி திருச்சபையில் சேர்ந்தார்கள்.

Religious Orders :—பாரீஸ் பட்டணத்தில் 128 கன்னியர் மடங்களும் 550 வேறு பல சிறு மடங்களுமிருக்கின்றன.

Earthquake :—செப்டெம்பர்-மீ 6-ம் வ இத்தலி தேசத்தின் பல பாகங்களில் பூமியதிர்ச்சி உண்டாகி டஸ்கனியிலும், லொம்பார்டியிலும் அதிக பொருள் சேதமும் உயிர் நஷ்டமும் உண்டானது.

Kotagiri Festival :—கடந்த செப்டெம்பர்-மீ 12-ம் வ கோத்தகிரியில் தேவமாதா பிறந்த திருநாள் வெகு சிறப்போடும், விமரிசையோடும் கொண்டாடப்பட்டது. ஆயிரக்கணக்கான திருயாத்திரைக்காரர்கள், அவ்வூரில் சேர்ந்து, அர்ச். தேவமாதாவுக்கு தங்கள் வேண்டுதல்களை நன்றியறிதலோடும், பத்தியோடும் செலுத்தினார்கள். இத்துடன் மலையில் வசிக்கும், படுகர் என்னும் அஞ்ஞானிகள் முதலாய் அநேகர் மோட்ச இராக்கினியை வேண்டிக்கொள்ள வந்தார்கள்.

கோத்தகிரி பங்குவிசாரணையின் சங். R. Beyls (பெல்ஸ்) என்னும் பங்குசுவாமியார் செய்த நல்ல ஏற்பாடுகளால் திருவிழாவானது ஒழுங்கோடும், பத்தியோடும் நடந்தேறப்பட்டது. திருயாத்திரைக்காரர்கள் சந்தோஷமும், தேவாசீர்வாதமும் பெற்று தங்கள் தங்கள் இல்லிடம் சுகமாய்ச் சேர்ந்தார்கள்.

---


# The Messenger of Truth
## சத்திய தூதன்.

**Vol. VI.** **November 1920.** **No. 11.**

புத்தகம் VI.] FIDES AC ROBUR. [நம்பர் 11.


16 DEC 1920

## Good Manners.—நல்லொழுக்கம்.
(தொடர்ச்சி)

### வீடும், அதில் அநுசரிக்கும் முறைகளும்.

தாய் தந்தையர்கள் பிள்ளைகளை வளர்ப்பதெப்படியென்று அறியாத குறையால் எத்தனையோ பிள்ளைகள் துற்பழக்கங்களில் பழகிக் கெட்டுவிடுகிறார்கள். பிள்ளைகள் படிப்பும் நல்லொழுக்கமுமின்றி வீதிகள்தோறும் திரிந்து அலைவிட்டு விடுகிறார்கள். எவ்வளவுபேர் நமக்குத் தெரிந்திருக்குமாப்போல் நன்றாய்க் கஷ்டப்பட்டு சம்பாதித்தும், குடியிலும் வீண் செலவிலும் அழித்துவிடுகிறார்கள். ஆபத்திற்கென்று மீத்துவைக்கும் புத்தி இவர்களுக்கு இல்லை. நன்றாய்க் குடிப்பதும், நன்றாய்த் தின்பதும் ஜோக்காய் உடுத்துவதுமே இவர்கள் ஆனந்தம்.

நாளைக்கு எப்படியென்று இவர்களைக் கேட்டால்
நாளைக்கு சாமியுண்டு என்று சொல்லுவார்கள்போலும்.

நாளை நாளைக்கென்பீராகில்
நமனுடை முறை நாளாவது மறியீர்
நம்முடை முறை நாளாவது மறியீர்
எப்போதாயினும் கூற்றுவன் வருவன்
அப்போதந்த கூற்றுவன் தன்னை
போற்றவும் போகான் பொருளொடும் போகான்

என்ற கபிலர் உரையை இவர்கள் அறிந்திருந்தால் நலமாயிருக்கும்.

சிலர் வீடுகளில் அசுத்த வார்த்தைகளை வெகு சாதாரணமாய் உபயோகப்படுத்தி வருகின்றனர். சந்தோஷத்திற்கு ஒரு கெட்டபேச்சு, விசனத்திற்கு ஒரு கெட்ட பேச்சு, கோபத்திற்கு ஒரு கெட்ட பேச்சு, இவர்கள் தங்கள் புண்ணிய வாயைத்திறந்து கக்கும் உதாசனங்களைக் காது கொடுத்து கேட்க முடியாது. சுபாவமாய் இப்படிப்பட்டவர்கள் குடித்தாலோ அவர்கட்கு முறை துறையென்பது கிடையாது. அண்டை வீட்டார் என்ன சொல்லுவார்கள் என்று நினைக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட இடங்களில் முக்கியமாய் இராக்காலங்களில் சண்டை சச்சரவுகள் மும்முரமாகும். போலீஸ்காரர் முதலாய் அவைகளெல்லாம் அவ்விடங்களுக்குச் சாதாரணமானவையென்று அவ்விஷயங்களில் தலையிடமாட்டார்கள். பிள்ளைகள் இவ்வார்த்தைகளைக் கேட்பார்கள். பல தடவைகளில் கேட்பதினால், தாங்கள் அவ்வார்த்தைகளை உபயோகப்படுத்தத் தலைப்படுவார்கள். நல்ல கிறீஸ்துவர்களாய் ஜீவிக்க வேண்டும் என்னும் எண்ணம் யார்யாருக்குண்டோ அன்னவர்கள் அத்தகையான இடங்களை வெறுத்துத்தள்ளி, நல்லவர்கள் உத்தமர்கள் யோக்கியர்கள் மத்தியில் குடியேறவேண்டும். வாடகை 1-ரூபாய் அதிகமானாலும் பரவாயில்லை, நல்லவர்கள் மத்தியில் ஜீவித்துவந்தால் "பூவோடு கூடிய நாரும் மணம் பெறும்" என்னும் பழமொழியின்படி நாமும் அவர்களுடைய நல்லொழுக்கத்தைக் கண்கூடாய் கவனித்துப்பார்க்க நமது நடத்தையில் மாற்றமுண்டாகும்.

**குடும்ப ஒற்றுமை**:—குடும்பத்தார் யாவரும் ஒரு வீட்டில் ஒற்றுமையாய் வாழ்வதினால், ஒருவர் ஒருவரைச் சங்கிப்பார்களென்றும், அப்படிப்பட்ட சங்கையுடன் ஒருவரை ஒருவர் நேசிக்கும் அன்பிற்கே அன்பென்னும் பெயர் செல்லும் என்றும் விளங்கும். குடும்பத்தில் பெரியவராயுள்ளவர்கள் இளைஞருக்கு இடும் கட்டளைகளை அன்போடும் செய்யவேண்டும். ஒருவரோடொருவர் அன்பான வார்த்தைகளைப்பேசி உறவாடவேண்டும். ஒருவருக்கொருவர் சங்கை மரியாதை முதலியவைகளை வீட்டில் கற்றுக்கொண்டால்தான் வெளியிலும் பெரியோர் சிறியோர் ஆகிய இவர்களிடம் நாம் நடக்கவேண்டிய வழிகளைச் சுலபமாய்க் கற்றுக்கொள்ளலாம். குடும்பத்தில் மெய்யான சங்கை, வணக்கம், மரியாதை, தாழ்ச்சி ஆகிய இவைகளிருந்தால்தான் உத்தமமான அன்பென்பது ஏற்படுகிறது. அப்படிப்பட்ட அன்புள்ளவர்கள் எங்கும் யாரிடத்திலும் மரியாதையோடு நடந்து நல்லபேர் எடுப்பார்கள்.

---



## The Little Garden of Roses.

### சிறு ரோஜாத் தோட்டம்.

### மலர் **14**. (முன் தொடர்ச்சி).

'Rosist tho dovil and ho will fly from You' (Jac. IV. 7.)

'பசாசை எதிர்த்து நில்லுங்கள், அப்போது அது உங்களைவிட்டு அகன்றுபோகும்.' (இயாக. 4-ம் அதி. 7-ம் வச.)

1. ஒரு புண்ணியவான் தனது புறக்கவலையையொழித்து இடைவிடாமல் பத்தியுடன் ஜெபிப்பதினாலும், தியானஞ் செய்வதினாலும், வேதாகமங்களைக் கவனத்துடன் வாசிப்பதினாலும், எழுதுவதினாலும், மற்ற யாதொரு பிரயோசனமான வேலையைச் செய்வதினாலும், தனது ஆத்துமத்தை சர்வேசுரனோடு ஒன்றுபடுத்தும்போது, அவனுடைய வலப்பக்கத்தில் பரிசுத்த சம்மனசுகள் நின்றுகொண்டு அவனை உற்சாகப்படுத்தி அவன் செய்வதைப்பார்த்து அகமகிழ்கிறார்கள். மறுபக்கத்திலோ துர்மனப் பசாசுகள் நின்றுகொண்டு அவன் செய்வதைக் கெடுக்கவேண்டி எந்நேரமும் அவனைத் தந்திர சோதனைகளாலும், துன்பதுரிதங்களாலும் அலைக்கழித்து மனதைப் பல வழிகளில் இழுக்கப் பிரயாசப்படுகின்றன.

யுத்தத்தில் நீ வலுவுள்ளவனாயிருக்கவேண்டுமானால், ஜெபம் செய்வாயாக. அப்போதுதான் நீ பலனடைந்து, சேசுநாதர் சுவாமிக்காகத் துன்பப்படத் தயாராயிருப்பாய்.

நீ ஜெபம்செய்யத் துவக்கும்போது பசாசுகள், உன்னைவிட்டு விலகி ஓடிவிடுகின்றன. ஆனால் மட்டுத்திட்டமில்லாத சம்பாஷணைகளில் நீ நாட்டம் வைக்கும்போது, உன் சத்துருக்களாகிய பசாசுகள் திரும்பிவந்து, உனக்குப் பலவிதத்திலும் தந்திர சோதனைகளை வருவித்து, உன்னைக் கீழே வீழ்த்தச் சமயம் பார்த்துக்கொண்டிருக்கும்

ஆனால், ஒரு நல்ல விழிப்புள்ள சிரேஷ்டர் தம்முடைய அதிகாரத்தால் இவ்வித மட்டுத்திட்டமற்ற சம்பாஷணைகளில் காலத்தை விருதாவாய்ச் செலவழிக்கிறவர்களையும், நற்கிருத்தி

யங்கள் செய்வதில் அசமந்தமாயிருப்பவர்களையும் கண்டித்து விலக்குவார்.

ஆகையால் உலக சந்தடியெல்லாம் விட்டொழித்து உன்னுள் அடங்கியிருந்து, உன் நினைவு, வாக்கு, சிந்தனையெல்லாம் சர்வேசுரன்பேரில் வைத்து, இரட்சண்ணியத்துக்கும் சர்வேசுரனுக்கும்மாத்திரம் அடுத்தவைகளைச் சிந்தித்து, உன் நம்பிக்கையெல்லாம் சுவாமியின்பேரில் வைக்கக்கடவாய். அப்போது உத்தம சமாதானமும், மன அமரிக்கையுங் கொண்டிருப்பதோடு நற்கிருத்தியங்கள் செய்வது உனக்குக் கசப்பாகத் தோன்றாது.

2. அற்பக் காரியங்களைச் சொற்பமென்றெண்ணாமல், அவைகளைப் பிரமாணிக்கமாய்ச் செய்யக்கடவாய். அதனால், மோட்ச இராச்சியத்தில் உனக்கு மகத்தான சம்பாவனை கிடைப்பதுமல்லாமல், சம்மனசுகளுடைய கூட்டத்தில் ஒருவனாயிருக்கப் பாத்திரவானாவாய்.

பசாசு உறங்குகிறதில்லை, மாமிசத்தின் துர் இச்சை இன்னம் மாய்ந்ததுமில்லை. ஆகையால் யுத்தத்துக்கு எந்நேரமும் ஆயத்தமாயிருக்கக்கடவாய். ஏனெனில், சற்றும் இளைப்பாறாத சத்துருக்கள் உன்னை நாலாபக்கங்களிலும் சூழ்ந்து நெருக்குகிறார்கள். ஆனதுபற்றி ஏகாந்த வாசத்தில் சோம்பேறித்தனமுள்ளவனாயும், வெளியில் வீண் பேச்சுப் பேசுகிறவனாயுமிராதே. அப்படி இராவிட்டால் உன்னுடைய சுறுசுறுப்பையும் மௌனத்தையுங் கண்டு வெட்கி உன்னைவிட்டுப் பசாசு அகன்றுபோவான்.

மனுஷ சஞ்சாரத்தையொழித்து, ஏகாந்தத்திலிருந்து சர்வேசுரனுக்காகமாத்திரம ஜீவித்திருக்க முயற்சிப்பவர்களையும், தங்கள் காலத்தை ஜெபத்திலும், தியானத்திலும் செலவழிக்கிறவர்களையும் பசாசு விரும்புகிறதில்லை. ஏனெனில் அவர்கள் எப்போதும் தங்களைச் சர்வேசுரனுடைய அடைக்கலத்தில் ஸ்தாபித்து, அவருடைய திருக் குடங்கையை விட்டகலாமல் இருப்பதாலும், என்னென்ன தந்திரங்கள் அவர்களுக்கு வந்தபோதிலும் அவைகளால் நஷ்டப்படாமல் எப்போதும் அவர்கள் அதிகப் பேறுபலன்களைச் சம்பாதித்துக் கொள்ளுகிறதைப் பசாசு காண்கிறதால், அவர்களை அது எதிர்க்கமுடியாமல் வெட்கப்பட்டு ஓடிப்போகின்றது.

நீ ஏகாந்தத்திலிருந்தாலுஞ்சரி, மனிதருக்கு நடுவே சஞ்சரித்தபோதிலுஞ்சரி, உலகம், பசாசு, சரீரமாகிய இம்மூவகைச் சத்துருக்களால் உனக்கு எவ்வளவு பலமான சோதனைகள் வந்தாலும் எப்போதும் விழிப்பாயிருந்து,



அவைகளால் தள்ளுண்டு போகாதபடி ஜெபம், தபம், ஒறுத்தல், அடக்கம் முதலிய ஞான ஆயுதங்களைக்கொண்டு அவைகளை வீரதத்துவத்துடன் எதிர்த்துநின்று அவைகளோடு போராடி ஜெயங்கொள்வது அத்தியாவசியம்.

ஆகையால் என்ன தந்திரம் வந்தாலும் உனது நிலையிலே நின்றுகொண்டு மாறாத தைரியமுடையவனாயிருப்பாயாக. மேலும் உருக்கத்தோடு ஜெபம் பண்ணுவதாலும், சுறுசுறுப்போடு உன் வேலையைச் செய்வதாலும், அடிக்கடி ஞானப் புத்தகங்களை வாசிப்பதாலும், பொறுமையுள்ளவனாயும், மெய்யான தாழ்ச்சி உள்ளவனாயுமிருந்தால், நீ எல்லாச் சத்துருக்களிலும் பலவானாவாய். உன்னைத் தாழ்த்திச் சுத்திகரிக்கவும், உனக்கு நல்லுணர்ச்சிகளைக் கொடுக்கவும் உதவியாயிருக்கிற தந்திர சோதனைகளாலும், இக்கட்டு இடையூறுகளாலும் நீ நெருக்கப்படும்போது அவநம்பிக்கைப்படாமல், சர்வேசுரன் பேரில் உனது முழு நம்பிக்கை வைக்கக்கடவாய். இந்த ஞான யுத்தத்தில் பின்வாங்காமல் நிற்கப் பிரயாசப்படுவாயாகில், உண்மையாகப் பரலோகத்திலிருந்து உனக்குத் தேவ உதவி வரக்காண்பாய். நீ வெற்றியடையும்படிக்கு ஞானப் போராட உனக்குச் சமயங் கிடைக்கச்செய்கிறவரான சர்வேசுரன்தாமே, நீ அவருடைய உதவியை நம்பி யுத்தஞ்செய்யும்போது உனக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருக்கிறார்.

எல்லாவிடங்களிலும், எப்போதும் தனக்கு இடையூறு வருங்காலத்தில் அதைப் பொறுமையுடன் அநுபவிக்க அப்பியாசிப்பவன் தன் சத்துருக்களை சுளுவில் மேற்கொண்டு, ஞான ஜீவியத்தில் மெத்தவும் விருத்தியடைவதுமல்லாமல், இவ்வுலகத்தில் என்றும் மாறாத சந்தோஷத்தையும், மோட்ச இராச்சியத்தில் சர்வேசுரனோடும், சகல அர்ச்சியசிஷ்டவர்களோடும் முடியாத பாக்கியத்தையும், குறையாத சந்தோஷத்தையும், நித்திய ஆனந்தத்தையும், நிலைநிற்கும் ஜீவியத்தையும், பேரின்ப சிநேகத்தையும் என்றும் அவன் அநுபவிக்கும் பாக்கியம் பெறுவான். (இன்னும் வரும்.) S. S. G.

---

In private—watch your thoughts;
In the family—watch your temper;
In company—watch your tongue.

---

## History of the Diocese of Coimbatore.

### கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் சரிதை.

(முன் தொடர்ச்சி.)

1797-ம் வருஷத்தில் ஆங்கிலேயர் திப்புசுல்தானுடைய படைகளை ஜெயித்து, அவனுடைய இராச்சியத்தையும் பிடித்து, ஸ்ரீரங்கப்பட்டணத்தில் பிரவேசித்தார்கள். திப்புசுல்தான் சண்டையில் காயப்பட்டு இறந்துபோனான்.

அதன்பின் கோயமுத்தூர், தாராபுரம் முதலிய நாடுகள் ஆங்கிலேய சமஸ்தானத்தில் சேர்க்கப்பட்டன. அக்காலத்தில் சங். (Champenois) ஷம்பனொய் என்னும் ஆண்டவர் புதுவை விக்கர் அப்போஸ்தொலிக்காயிருந்தார். சண்டையும், வேத கலாபனையும் முடிந்து சமாதானம் ஆனவுடனே, அந்நியதேச போதக சபையின் குருக்கள், கலாபனையால் பிரிக்கப்பட்ட கிறீஸ்துவர்களைச் சேர்க்கவும், பயத்தினால் வேதத்தை மறுதலித்தவர்களை மனந்திருப்பவும், அழிக்கப்பட்ட கோவில்களை மறுபடி கட்டவும் பிரயாசப்பட்டு உழைத்தார்கள். மைசூர் இராச்சியத்திலிருந்து சங். (Dubois) துபொய் என்னும் குருவானவர் பற்பல சுதேச குருக்களுடைய உதவியைக்கொண்டு, கோயமுத்தூர் நாட்டில் ஆட்டுக்குட்டிகளைப்போல பிரிந்திருந்த கிறீஸ்துவர்களை விசாரிக்க, கணுவக்கரை, சத்தியமங்கலம், கொடிவேரி, கருமுத்தன்பட்டி முதலிய ஊர்களைத் தரிசித்து வந்தார். அக்காலத்தில் இந்த குருவானவர் அம்மை குத்தும் விதத்தைச் சிலருக்குப் படிப்பித்து, நாலு திசைகளிலும் அவர்களை அனுப்பினார். மேலும், இந்தியாவிலுள்ள மாமூல் ஆசாரங்களைப்பற்றி ஓர் பெயர்பெற்ற புத்தகத்தையும் பிரசுரித்தார். அவர் மிகக் கீர்த்தியடைந்து மைசூரில் "பெரிய பிரபு" என்றும், கருமுத்தன்பட்டியில் இராஜபுத்திரன் என்றும் ஜனங்களால் அழைக்கப்பட்டிருந்தார்.

சுமார் 1803-ம் வருஷத்தில் சங். துபொய் சுவாமியார் கொடிவேரியில் ஒரு கோவிலைக் கட்டினதுமல்லாமல், ஓர் பழைய நியாய ஸ்தானத்தை அடைந்து, அதைச் சுவாமியார் ஸ்தலமாகவும் மாற்றினார்.



கருமுத்தன்பட்டியில் ஆங்கிலேய சர்க்காரிடம் பழைய கோவில் இருந்த பூமியை வாங்கி புதுக்கோவில் கட்டும்படி ஏற்பாடு செய்தார். அதின்பிரகாரம் சங். ஞானப்பிரகாசநாதர் என்னும் ஓர் சுதேசக் குருவானவர் அக்கோவிலைக் கட்டிமுடித்தார். இவர் முயற்சியினால் இன்னும் பூடம்பள்ளி, கன்னம்பாளையம் என்னும் ஊர்களில் சிறு கோவில்கள் கட்டப்பட்டன. சவேரியார்பாளையத்தில் சவேரிமுத்து என்னும் ஓர் கிறீஸ்துவனுடைய தருமத்தினால் ஓர் புதுக்கோவில் கட்டப்பட்டது.

1803-ம் வருஷத்தில் கருமுத்தன்பட்டி அல்லது கோயமுத்தூர் நாட்டில் 3500 கிறீஸ்துவர்கள் இருந்தார்கள்.

சங். (Magny) மாக்னி என்னும் குருவானவர் புதுவை சுதேச குருமடத்தின் சிரேஷ்டராயிருந்தார். அவர் மிக ஆவலோடு சுதேச குருக்கள் அபிவிருத்தி அடையும்படி பிரயாசப்பட்டார். ஆனால் வாலிபர்களுக்குக் கீழ்ப்படிதல், தாழ்ச்சி, பொறுமை இது முதலிய நற்குணங்களைப் படிப்பிப்பது மகா அருமை என்றும், குருமடத்திலுள்ள 12 வித்தியார்த்திகளில் 4-பேர் நிலைக்கொண்டு குருப்பட்டம் பெற்றால் நலம் என்றும் சொல்லுவார். ஆனாலும், 1794-ம் வருஷம்முதல் 1806-ம் வருஷம்வரை 7-பேர் மாத்திரம் குருப்பட்டம் பெற்றார்கள்.

சங். ஷம்பனொய் ஆண்டவர் 1810-ம் வருஷம் காலஞ்சென்றார். அவருக்குப்பதிலாக சங். (Hebert) எபெர்ட் என்பவர் ஆண்டவராக நியமிக்கப்பட்டு, 1811-ஆம் மார்ச்சு-மீ 3-உ ஆண்டவர் பட்டம் பெற்றார்.

அப்போது புதுவை மிஷனில் ஐரோப்பிய வேத போதகர்கள் 9-பேர் மாத்திரம் இருந்தார்கள். இவர்களில் 5-பேர் விருத்தாப்பியரோ அல்லது வியாதிஸ்தரோ வேலைசெய்ய சக்தியில்லாதவர்களாக இருந்தனர். சுதேச குருக்களும் 6-பேர் மாத்திரம் இருந்தனர். வேலை செய்யக்கூடிய இந்த 10-பேர் எவ்வளவு கஷ்டப் பிரயாசப்பட்டபோதிலும், வேலைகள் எல்லாம் செய்யமுடியவில்லை.

அதனாலேதான் சங். துபொய் சுவாமியார் மிகவும் துக்கத்தோடு சீர்மைக்கு கடிதம் எழுதினதாவது:—நாங்கள் எல்லோரும் விருத்தாப்பியரானோம். எங்கள் முடிவுநாள் சமீபமாயிருக்கிறது. இவ்விடம் இருக்கும் நாங்கள் எல்லோரும், சிலர் வயதினாலும், வேறு சிலர் வியாதியினாலும் மிகவும் பலவீனர்களானோம். ஆனால், எங்களுக்குப்பதிலாக ஒருவரும் வருவதைக் காணாமல் இருக்கிறதினால் மிகக் கஸ்திப்படுகிறோம்.

எங்களை அடக்கஞ்செய்ய இரண்டொருத்தரையாவது அனுப்பக்கூடாதோ?

அவ்வண்ணமே சங். எபெர்ட் ஆண்டவரும் சீர்மைக்கு அடிக்கடி கடிதம் எழுதி, சில குருக்களை அவ்விடமிருந்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுவார். இந்தப் பரிதாபக் கூக்குரல் பிராஞ்சுதேசத்துக்குக் கேட்கப்பட்டது.

1810-ம் வருஷமுதல், 1836-ம் வருஷம்வரை 25-அந்நிய போதக சபைக் குருமார்கள் புறப்பட்டு, புதுவையில் கப்பலைவிட்டு இறங்கி இந்தியாவில் வந்து சேர்ந்தார்கள்.

---

## Saved from Purgatory by a Mass.

## ஒரு பூசையின் பலத்தினால் உத்தரிக்கிற ஸ்தலத்தினின்று இரட்சிக்கப்பட்டவன்.

லக்கோர்தேர் சுவாமியார் ஓர் பிரசங்கத்தில் சொன்ன சரித்திரமாவது: போலாண்ட் என்னும் தேசத்தில் லுபொமீர்ஸ்கி என்னும் ஓர் பிரபு இருந்தார். அவர் கடவுள் இல்லையென்றும், சாவோடு ஆத்துமம் அழிந்துபோகும் என்றும் ஞானக்காரியங்களைக் கவனியாமல் நடந்துவந்தார். ஓர் நாள் மாலையில் அறையைவிட்டுத் தமது வீட்டுக்கு அடுத்த ஓர் தோப்பில், உலாவிக்கொண்டிருக்கும்போது, காய்ந்த சருகுகளையும், குச்சிகளையும் ஓர் கழுதையின்மேல் ஏற்றிக்கொண்டிருந்த ஓர் கிழவியைக்கண்டு "இதுதானா உன் பிழைப்பு? என்று கேட்க, கிழவி, "பிரபுவே, எனக்கு வேறே பிழைப்பு இல்லை, என் புருஷன் சில நாட்களுக்குமுன் இறந்துபோனார். இப்போது அவர் ஆத்துமத்துக்கு ஓர் பூசை செய்விக்கக்கூட பணம் கிடையாது" என்று சொல்லி கண்ணீர் சிந்தி அழுதாள். அதைக் கேட்ட பிரபு, இதோ சில பொன் நாணயம்; அதுகளைக் கொண்டு உன் புருஷன் ஆத்துமத்துக்காக பூசைகள் செய்வி என்று சொல்லிக் கொடுத்துவிட்டுப் போனார். இவர் மன இரக்கத்தால் இந்தத் தர்மத்தைச் செய்ததேதவிர மற்றப்படி விசுவாசத்தால் செய்தவரல்ல. கிழவி பங்குசுவாமியாரிடம் சென்று தன் புருஷன் ஆத்துமத்துக்காக பலபூசைகள் செய்யும்படி குருவானவருக்கு அந்தப்பணத்தைக் கொடுத்தாள்.



ஐந்துநாள் கடந்தபின் இரவில் ௸ பிரபுவானவர் தன் அறையில் உட்கார்ந்து ஒரு புஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கும்போது, குப்பைக்காட்டான்போல கேவலமாய் உடுத்திய யாரோ ஓர் மனிதன் திடீரென்று தன்முன் நிற்கிறதைப்பார்த்து சற்று படபடப்புடன் அவனைநோக்கி: "நீ யார்? இங்கே என்ன செய்கிறாய், என்னத்துக்கு வந்தாய், உள்ளே வர உனக்கு உத்தரவு கொடுத்தது யார்?" என்று வினவவே, ஐந்து நாட்களுக்குமுன் நீர் தர்மமாகக் கொடுத்த சில பொன் நாணயங்களைக்கொண்டு என் மனைவி என் ஆத்துமத்துக்காக பூசை செய்வித்தபின்,' நான் உத்தரிக்கிறஸ்தலத்தினின்று இரட்சிக்கப்பட்டதினால் மோட்சத்துக்குப்போகிறேன், நான் உமது மட்டில் வைத்த என் நன்றியறிதலைக் காட்டும்படி தயையுள்ள சர்வேசுரன் உம்மிடம் வர உத்தரவு செய்தார். நீர் என் மனைவிக்குக் கொடுத்த தர்மத்துக்குப் பதிலாக ஆத்துமம் ஒருபோதும் அழியாது என்னும் சத்தியத்தை உமக்கு அறிவிக்க வந்தேன் என்று சொல்லி மறைந்தான்.

பிரபு இந்தக் காட்சியினால் மனந்திரும்பி அந்நாள்முதல் மரணபரியந்தம் நல்ல கிறீஸ்துவராய் நடந்தார். (Olim.)

---

## உடை.—தொடர்ச்சி.

உடையானது தேச இயல்புக்கும், தற்கால நாகரீகத்துக்கும், ஏற்றதாயிருக்கவேண்டும் என்று முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது.

இத்தேசம் உஷ்ணதேசமாகையால் மிகக் கெட்டியானதும், நெருக்கமானதுமான உடைகள் சுகத்துக்கு ஏற்றதல்ல. இதினால்தான் ஆங்கிலே நாகரீகம் இங்கு பரம்புமுன் மனிதருடைய உடைகள், நெருக்கமின்றி பெரிதாய்ச் செய்யப்பட்டன. தற்காலமோ, ஆங்கில நாகரீகத்தையொட்டி நெருக்கமான உடைகளைச்செய்து அணிந்து வருவதைக் காண்கிறோம். ஏற்கனவே இந்தியர் அணியும் உடைகள் அநாகரீகமுள்ளவைகளுமல்ல. சரீரத்தைக் காக்கப் போதாமையாயுமல்ல. ஆயினும் ஐரோப்பியர் உடுத்துவதுபோல உடுத்தினாலன்றி நாகரீக உடையணிகிறதில்லையென சிலர் தப்பெண்ணங்கொண்டிருக்

கின்றனர். இன்னும் இவ்வுடையை அணிவதால் தங்கட்கு இயல்பாயில்லாத மதிப்பு வருகிறதாயும் வீணாய் நினைக்கிறார்கள்.

ஐரோப்பியரிடமிருந்து இந்தியர் கற்றுக்கொள்ளவேண்டியவைகள் அநேகம் உண்டு. ஆனால் நமக்கு அவசியமானதும், நன்மை பயக்கக்கூடியதுமானவைகளையே நாம் ஏற்றுக்கொள்ளுதலே முறை. இல்லையேல் நாம் அறிவிலிகள் என்பதற்கு அதுவே அத்தாட்சியாகும். ஐரோப்பியர் எக்காரியத்திலும் முயன்று ஊக்கத்துடன் செய்து முடிக்கிறார்கள். கல்வியில் கவலைகொண்டு நிபுணர்களாய் உலகத்துக்கு விளக்குப்போன்றும் இருக்கிறார்கள். சரியான ஐரோப்பியர் நடை உடைகளில், மற்றோர்க்கு நன்மாதிரிகையாயுமிருக்கின்றனர். இத்தேசத்தார்போல ஐரோப்பிய நாகரீகத்தையே சரியான நாகரீகம் என்று அநேகமாய் அவர்களது தகாத செயல்களையும், நடை உடைகளையுமே விசேஷமாய் பின்பற்றிவருகிறார்கள். இது அப்படிச்செய்வோரது அறிவில்லாக் குறையே. உடை விஷயத்தில் கவனிக்கவேண்டிய இன்னொரு காரியம் என்னவெனில், அது அந்தஸ்துக்கு தகுந்ததாயிருக்கவேண்டும். இதைச் சரியாய்க் கவனிப்பதில்லை. ஆத்தும கவலைக்குப்பிறகு சரீரக் கவலையுள்ள மனிதர் தங்கள் வருமானத்தைத் தக்கவிதமாய் அவசியமான காரியாதிகளில் மிதமாய்ச் செலவிடவேண்டும். முதல், முதல் மனிதருக்கு உணவே அவசியம். தத்தம் வரவைக் கணக்கிட்டு உடலை வளர்க்கும் போசனங்களைத்தேடி உண்ணவேண்டும். அநேகர் சம்பாதிப்பதில் மிக சொற்பம் மாத்திரம் கையில் மீதி வைத்து மற்றதை உணவிற்ச் செலவழிப்பார்கள். இது பெரும்பிசகு. உணவிற்கு ஒருவனுடைய வரவில் பாதிக்குமேற் செலவிட தக்கதன்று, மறுபாதி மற்ற செலவிற்கு வைத்திருக்கவேண்டும.

உணவிற்குப்பின் தேவையானது இல்லிடம். மழை பெய்யுங்காலத்தில் குரங்குகள் அவஸ்தைப்படுவதை யார் அறியாதவர்கள். அப்படிக் காலமெல்லாம் சொந்த வீடின்றி அயலார் வீடுகளில் வசித்து காலமெல்லாம் துன்பப்படுபவர் அநேகர். சில பட்டணங்களில் கிறிஸ்துவர்கள் பரம்பரையாய் அயலார் வீடுகளில் வசிக்கிறார்கள். பிறப்பும் வாழ்வும, இறப்பும் ஆகிய இவைகளெல்லாம அயல் மனையிலேதான். இதைப் பார்க்கிலும் நமது மதத்துக்கும் நாம் நடித்துக்காட்டும் நாகரீகத்துக்கும் கேவலம் வேறு என்ன உண்டு. வீட்டிற்குப்பின் நமக்குத் தேவையானது உடை. கந்தையானாலும் கசக்கிக்கட்டு என்பதால், உடையானது சுத்தமாயிருக்கவேண்டுமென வற்



புறுத்தலொழிய அது அதிக விலையுயர்ந்ததாயும், பார்ப்போர் கண்களைக் கவரக்கூடியதாயும் இருக்கவேண்டியதில்லை. உடையின் சுத்தத்தில் கிறீஸ்துவர்கள் ஆணும் பெண்ணும் தங்களைப் போன்ற இந்துக்களைப் பின்பற்றுவார்களாகில் மிக நன்மை. இந்துக்கள் சாதாரணமாய் விலையுயர்ந்த உடைகளையும் அதிக மெல்லியதானவைகளையும் விரும்புவதுமில்லை. வண்ணானை எதிர்பார்த்துக்கொண்டு அழுக்கணிந்துகொண்டிருப்பதுமில்லை. ஆகையால் உடையானது தன் அந்தஸ்துக்குத்தக்கதும், சுத்தமானதுமாயிருத்தலே அவசியம். உடைக்குப்பின் தங்கள் பிள்ளைகளின் கல்விக்கும், வியாதி நேர்ந்தகாலத்தில் செலவுக்கும், முதிர்ந்த காலத்தில் கிறீஸ்துவனுக்குரியதும் கடமைப்பட்டதுமான தானதர்மங்களுக்கும் மீதியான பாகத்தைச் செலவிடவேண்டும. ஆனால் நாம் சாதாரணமாய்ப் பார்த்து வருவதுபோல் நமது கிறீஸ்துவ சகோதரர்களில் பெருந்தொகையானவர்கள் உண்பதுவும், உடுப்பதுவுமே கவலையாகத் தங்கள் வரவெல்லாம் செலவிட்டு, தங்கள் பிள்ளைகளின் கல்விக்கும் பொருளின்றி, அதை முற்றிலும் ஒழிக்கிறார்கள். பிள்ளைகளை இம்மாதிரி கெடுப்பதுமன்றி இவர்கள் மரிக்கும்போது தங்கள் குடும்பங்களையும் அதோகதியாய் விடுகிறார்கள். வாழ்நாட்களில் சற்று கவனத்துடன் இருந்து உடுப்பதும் உண்பதும் நியாயமாய்ச் செய்துவந்திருப்பார்களாகில் இப்படிப்பட்ட கேவலம கிறீஸ்துவக் குடும்பங்களுக்கு ஏற்படாது.

(இன்னும் வரும்.)

---

## The Benefit of Education

## கல்வியின் நன்மை.

(முன் தொடர்ச்சி.)

நமது இனங்களே, இதைச் சற்று கவனமாய் வாசியுங்கள். நாம் கல்வியைக் கருதிப்பிடித்து நம்மால் கூடியவரைக்கும் கஷ்டப்பட்டு நமது பிள்ளைகளை ஏன் படிப்பிக்கவேண்டுமென்றால், இப்போது நமக்குத் தெரிந்திருக்கிறதும், தற்காலத்தில் நடக்கிறதும் ஆகிய ஒவ்வொரு காரியங்களைப் பார்க்கும்போதும்

கேள்விப்படும்போதும் எவ்வளவோ துக்கத்தையும் விசனத்தையும் மென்மேலும் உண்டாக்குகிறது: கல்வியில் தேர்ச்சியடைந்து பெரிய உத்தியோகங்களையும், பட்டங்களையும் அடைந்திருக்கிறவர்கள் அநேகம்பேர். ஆனால் நமது கத்தோலிக் கனவான்களோ மிகவும் சொற்பப்பேர். ஏன் நமது கத்தோலிக்கர் கல்வியில் விர்த்தியடையக்கூடாது. நமது கத்தோலிக் பாடசாலைகள் அநேகம் இருந்தும் கத்தோலிக்கர் அதைக் கவனியாமல் இருக்கிறார்கள். சர்வேசுரன் நமக்கு வேண்டிய புத்தியைக் கொடுத்திருந்தும், அநேகர் அசுத்த மிலேச்சர்களைப்போல் நடந்துவருகிறார்கள். நாமே இவ்விதமிருந்தால் நமக்குப்பின் வரப்பட்ட நமது பிள்ளைகளின் கெதி என்ன ஆகுமோ தெரியாது. இம்மாட்சிமை தங்கிய ஆங்கிலேயர் ஆளுகையின் காலத்திலே இப்படியிருக்குமானால் மற்றவர்கள் கோருகிறமாதிரி சுய அரசாட்சி கொடுக்கப்பட்டுவிட்டால், அக்காலத்தில் நமது பிள்ளைகளின் கெதி என்ன ஆகுமோ என்பதைச் சற்று யோசித்துப்பாருங்கள். ஆகவே இதுகளை எல்லாம் பலமாய் மனதில் கொண்டு இனிமேலாவது தங்கள் தங்கள் பிள்ளைகளை எவ்வளவு தூரம் படிக்கவைக்கமுடியுமோ அவ்வளவு தூரமாவது படிக்கவைக்கவேணும்.

"மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னனுக்குத்
தன்தேசமல்லாற் சிறப்பில்லை - கற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாஞ் சிறப்பு."

---

## In memory of the late Very Rev. Fr. N. Rondy.
## காலஞ்சென்ற மிக. சங். ரோண்டி சுவாமியவர்களின் ஞாபகம்.

சென்ற செப்டெம்பர்-மீ 26-உ கோயமுத்தூர் கத்தோலிக் க்ளப் மெம்பர்கள் காலஞ்சென்ற மிக. சங். N. ரோண்டி சுவாமியாரின் போட்டோ படத்தைத் தங்கள் கூட்டச்சாலையில் வெகு சிறப்புடன் ஸ்தாபித்தார்கள். க்ளபுக்கு முன்னால் மெம்பராகிய மகா-ள-ள-ஸ்ரீ போலீஸ் இன்ஸ்பெக்டர், அழகாய் ஜோடிக்கப்பட்ட ஒரு பந்தலில் அர்ச். மிக்கேல் மடத்து



பாண்ட் வாத்தியம் இன்பமாய் வாசிக்க, மகா வந்திக்கத்தக்க கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்களை வரவழைத்தார்கள். இன்னும் அவ்விடம் அநேக குருப்பிரசாதிகளும் கிறீஸ்துவ சகோதரர்களும் விஜயஞ் செய்தார்கள். இரண்டு சிறு மாணவர்கள் ஓர் உருக்கமான டையலாக் சம்பாஷணை செய்து முடித்தபின், கத்தோலிக் க்ளப் மெம்பராகிய மகா-ள-ள-ஸ்ரீ C. தேவசகாயம்பிள்ளையவர்கள் மிக. சங். ரோண்டி சுவாமியாருடைய ஜீவிய சரிதையைப்பற்றி ஓர் நேர்த்தியான உபந்நியாசம் செய்தார். அதன்பிறகு மகா வந்திக்கத்தக்க (A. Roy) ரூவா ஆண்டவர் மிக. சங். ரோண்டி சுவாமியாருடைய படத்தின் மூடியைத் திறந்தருளினார். அப்போது வாத்தியம் வாசிக்க, ஜனங்கள் குதூகலத்தோடு கைகொட்டி படத்தைத் தரிசித்தார்கள்.

கத்தோலிக் க்ளப் வைஸ்பிரசிடெண்டு மகா-ள-ள-ஸ்ரீ A. பெரியநாயகம் முதலியார் அவர்கள் B.A., L.T. மற்ற மெம்பர்கள்பேரால் மகா வந்திக்கத்தக்க மேற்றிராணியாரவர்களுக்கும், விஜயஞ்செய்த குருமார்களுக்கும் நன்றியறிந்த தோத்திரமாகவும், ஜனங்களுக்கு வந்தனமாகவும், சில தக்க வார்த்தைகளை உரைத்தார். கடைசியாக மகா வந்திக்கத்தக்க மேற்றிராணியாரவர்கள் கத்தோலிக் க்ளப் மெம்பர்கள் செய்த நல்ல ஏற்பாடுகளைப்பற்றி அவர்களைப் புகழ்ந்து மிக. சங். ரோண்டி சுவாமியாருடைய புண்ணியங்களையும், நற்குணங்களையும், விசேஷமாய் அவருடைய கீழ்ப்படிதலையும் மெச்சி, கிறீஸ்துவர்களுக்கு சில விமரிசையுள்ள புத்திமதிகளைச் சொன்னார்.

மிக. சங். ரோண்டி சுவாமியார் செய்ததெல்லாவற்றையும், கீழ்ப்படிதலின் ஏவுதலினால் செய்ததின்பேரில் மகிமை பெற்றார். அதுபோல சகல கிறீஸ்துவர்களும், திருச்சபைக்கும், தங்கள் குருக்களுக்கும் கீழ்ப்படிந்து நடந்துவந்தால், சரீர விஷயத்திலும், விசேஷமாய் ஆத்தும விஷயத்திலும் அனுகூலமடைவார்கள் என்று சொன்னபிறகு தமது ஆசீர்வாதம் அளித்தார்.

கத்தோலிக் க்ளப் மெம்பர்கள் ஷை காரியத்தை அவ்வளவு சிறப்போடும் நல்லொழுக்கத்தோடும் நடத்தினதினால் ஜனங்கள் அவர்களை வெகுவாய் மெச்சினார்கள்.

---

Make yourself an honest man, and then you may be sure there is one scoundrel less in the world.

---

## Page for the Young.
### பிள்ளைகளின் பக்கம்.

## History of a Rain-drop.
### ஒரு மழைத்துளியின் சரித்திரம்.

ஒரு மழைத்துளி ஆகாயத்திலிருந்து விசாலமான பெருங்கடலில் அலை முகட்டில் விழும்போது, "ஐயோ! நான் அநியாயமாய் இப்படுகுழியில் வீழ்ந்தாழ்ந்து மாண்டுபோகிறேனே" என்று அலறியது. ஆயின், 'தானொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்' என்ற மொழிப்படி அது அங்குள்ள ஒரு சிப்பியில் வீழ்ந்து அழகிற் சிறந்த ஒரு தெள்ளிய முத்தாயிற்று. தானிவ்வாறு மாறியது கண்டு பேரானந்தங் கொண்டது. பின் சிறிதுகாலத்துக்கெல்லாம் முத்துக்குளிப்பவர்கள் அதனை வலைபோட்டு பிடித்திருக்கையில் அது, 'அந்தோ! கொடுமை, நான் செத்தேனே' என்று முன்போலவே மீண்டும் ஓலமிட்டது. ஆயினும் அது ஆணிமுத்தாதலால் அதனை வர்த்தகர் கண்டு, கொண்டாடி, அரசனிடம் கொண்டுபோய்க் கொடுத்தனர். அவ்வரசன் அதற்கு இணையானது எங்குமில்லையென்று அறிந்து மகிழ்ந்து அதைத் தன் கிரீடத்திற்கு அணியாக அதன் உச்சியில் வைத்துக் கொண்டான். இவ்வாறு அம்மழைத்துளியானது மன்னர் குழாம்வந்து அணிபடியும் வேந்தன் முடிமேல் ஏறும் பெரும் பாக்கியம் தனக்கு உண்டானதைக் கண்டு, 'இது எனக்கு எங்கும் நிறைந்த வல்ல கடவுளின் பேரருளால் உண்டாயிற்று' என்று மகிழ்ந்து கடவுளைத் துதிசெய்தது.

இதனால் பிள்ளைகளே! ஆரம்பத்தில் எவ்வளவு கஷ்டத்தோடு உழைப்பீர்களோ அவ்வளவும் பின்னால் உயர்வையடைவீர்களென்பது தெளிவாய்த் தெரிகிறது.

மண்ணில் பிறந்து மண்ணோடு மண்ணாய்ப் போகும் எவனுமே மனம் வைத்து உழைக்கவேண்டுமென்பது தெய்வத் திருவுளமாகையால், 'உன் நெற்றிவேர்வை நிலத்தில் விழும்படி வேலைசெய்து உழைப்பாயென்று' ஆதிமனிதருக்குக் கர்த்தர் கட்டளையிட்டருளினானென்று நீங்கள் அறிவீர்களாதலால், கஷ்டப்பட்டு வருந்தி வேலை செய்து தானே காலக்ஷேபஞ் செய்யவேண்டும். அப்படிச் செய்யாது எந்நேரமும் வீண்பொழுது போக்குவீர்களாகில் தேவ கட்டளைக்கு விரோதியாவீர்கள். வேலைசெய்யாமல் சோம்பித்திரிபவர் பாவஞ்செய்யும் வித்தையில் பூரண பண்டிதராவார்கள். இதல்லாமல் இப்பூமியில் கல்விப்பொருளும் செல்வப்பொருளும் யாருக்குண்டு. உழைப்பாளிகளுக்கேயன்றி, சோம்பித்திரிகிறவர்களுக்கில்லை. ஏனெனில் முயற்சியில்லாவிடின் கல்வியில்லை, கல்வியில்லாவிடின் புத்தியில்லை, பராக்கிரமமுமில்லை. இவைகளில்லாவிடின் பொருளுமில்லை, பெருமையுமில்லை. ஆனதுபற்றி பிள்ளைகளே! காலத்தை வீணில் போக்கடிக்காதேயுங்கள். பலதுளிகள் கூடி ஆறாய்ப் பெருகும். அதுபோல பலநேரங்கள் கூடி ஒரு ஜீவிய காலமாகுமாதலால், வீண்பொழுதைப் போக்குகிறவன் தன் உயிர் வாழ்தலையே போக்குகிறான். ஆகையால் ஒரு விநாடியாவது வீணில் போக்கடிக்காமல் வேலைபுரிவதற்கும், புண்ணியஞ் செய்வதற்கும் காலத்தை உபயோகித்துக்கொள்ளக்கடவீர்கள். வேலையும் புண்ணியமும் செய்து வருவீர்களாயின் இவ்வுலகத்திற்கும், மறுலோகத்திற்கும் உதவும் செல்வமுடையவர்களாவீர்கள். (போதகன்.)



---

## Jayaseelan.
### ஜயசீலன்.

14-ம் அதிகாரம்.—(தொடர்ச்சி.)

மகன் சொன்ன இவ்வார்த்தைகளை சத்தியானந்தன் கேட்டு பிரமிப்படைந்து "சண்டாளா, என்னையறியாமல், நீ எப்படிப்பட்ட நீச அந்தஸ்தில் விழுந்திருக்கிறாய்! இதை விட இழிவுக்குரிய காரியம் ஏதாவது உண்டோ? உன்னை நற்குணசாலியும், வேத அபிமானமுமுள்ளவனாக எண்ணியிருந்தேனே. ஆனால் இப்பொழுது நீ பெரிய திருடனும், அயோக்கியனும், எப்படிப்பட்ட நீச செய்கைக்கும் அஞ்சாத படுபாவியாய் இருப்பதாகக் காண்கிறேன். கள்ளக் கையொப்பம் வைத்து மற்றவர்களை ஏமாற்றி பணம் வாங்கி அதை சூதாடி அழித்த நீ எந்த அக்கிரமத்துக்குத்தான் துணியமாட்டாய். உன்னால் குடும்பத்துக்கு வந்த அவமானமும், எனக்கு வர இருக்கும் துன்ப இக்கட்

டும் எவ்வளவென்று கடவுளே அறிவார்" என்று மனக்கிலேசத்துடன் சொல்ல, தான், கடன் சீட்டுக்கொண்டுவந்த மனிதனைப் பார்த்து வருவதாகவும், தான் திரும்பி வருமளவும் ஜயசீலன் வீட்டைவிட்டு எங்கேயும் போகக்கூடாதென்றும் கண்டிப்பான கட்டளை கொடுத்தார். தன் தகப்பனார் சொன்னபிரகாரம் நடப்பதற்கு அடையாளமாக தலை வணங்கி மௌனமாய் நின்ருன். இரண்டுமணி நேரத்துக்குள்ளாக சத்தியானந்தன் மிகவும் கிலேசத்துடனும் வாடின முகத்தோடும் திரும்பி "இனி யாதொரு நம்பிக்கையுமில்லை. கடனை உத்தரிப்பதற்கு எனக்கு வேண்டிய சம்பத்துமில்லை. 'எல்லாம் என்னையாளும் ஈசன் செயல்' என் முதிர்ந்த வயதில் எனக்கு வந்த துன்பம், இக்கட்டு அவமானத்தை நான் அனுபவிக்க வேண்டியதே. எனக்கு வந்த இந்த நிர்ப்பாக்கியத்தில் கைகொடுத்து உதவக்கூடியவர் யாருமில்லையே" என்று கஸ்தியுடன் சொல்லி வீட்டில் பிரவேசித்தார். தகப்பனார் படும் கிலேச வருத்தத்தைக் கண்ணுற்ற ஜயசீலன், மனக்கண்டனையால் பீடிக்கப்பட்டு, இதற்கெல்லாம் காரணம் தானேயென்று உணர்ந்து கஸ்தியோடு, "தகப்பனார் போன அலுவல் அனுகூலமாகவில்லையோ" என்று அவரை வினவினான்.

சத்தியானந்தன் :—பணப்பேராசைகொண்ட அந்த கல்நெஞ்சன், நான் என்ன சொல்லியும் சம்மதிக்கவில்லை. என்னிடத்தில் இருக்கப்பட்ட சகலத்தையும் அவன்வசம் ஒப்புவிப்பதாக கெஞ்சி மன்றாடினேன். கடனை ஒழிப்பதற்கு அதுகளெல்லாம் போதாமையால், கடைசிக்காசு வரையிலும் உத்தரித்தாலன்றி எனக்கு விடுதலையில்லையென்றும், எனக்கு விரோதமாய் கோர்ட்டில் பிரியாது தொடக்குவதாகவும் சொல்லி என்னை அவமானமாய்ப்பேசி அனுப்பிவிட்டான்.

ஜயசீலன் :—காரியம் இப்படியானால் நானே அவனிடம் நேராய்ப் போய் நடந்த விஷயங்களை தெளிவாய்ச் சொல்லிக் காட்டி கையொப்பம் வைத்தது நான்தானென்றும் நான் இன்னும் மைனராயிருப்பதினால் பணத்தை வசூலிக்க வியாச்சியம் தொடங்கமுடியாதென்றும் சொல்லி வருவேன்.

சத்தியானந்தன் :—உனக்கு விரோதமாய் அவன் ஒன்றும் செய்யமுடியாதென்று நினைக்கிருயா? பைத்தியகாரா, நீ வாங்கின கடனைக்கொடுக்காதபடியால் உனக்கு விரோதமாக சிவில் வியாஜ்ஜியம் இல்லாவிட்டாலும் கள்ளக்கையொப்பமிட்டு பணம் வாங்கினபடியால் உன்னை மறியல் செய்து கிரிமினல் கோர்ட்டில் உன்னை நிற்கச்செய்வான். நீ தப்பித்துப்போக எண்ணுவது பைத்தியம். நீ உன் சிநேகனுடைய பொய்யான



வார்த்தைகளை நம்பி மோசம் போனுயாக்கும். அவன் உன்னை ஏமாற்றி படுகுழியில் தள்ளவே அப்படிச் செய்தான். நான் லாயராயில்லாவிட்டாலும் நீ 'பெரிய பாதகத்தைக்கட்டிக் கொண்டாயென்றும், உன்னை நீதிப்பிரகாரம் தண்டிப்பதாயிருந்தால் அது உனக்குக் கேடாய் முடியுமென்றும் நிச்சயமாய்ச் சொல்வேன். நீ செய்த அக்கிரம செய்கைக்கு நானே இப்போது பாடுபடப்போகிறேன். முதிர்ந்த வயதில் குடும்பத்துக்கு வந்த அவமானத்துக்குப் பரிகாரஞ்செய்யவும், நீதிக்கு உத்தரிக்கவும், நான் சிறையில் சாகப்போகிறேன். இப்பொழுதாவது நீ செய்த அக்கிரமத்தின் கனகனத்தை அறிந்து பாவ மார்க்கத்தைவிட்டு புண்ணிய நெறியைப் பின்பற்றி என்றுமழியாத மோட்ச சாம்ராஜித பாக்கியத்துக்கு உன்னை முஸ்திப்புசெய்வாயாக. இவ்வார்த்தையைக் கேட்டதும், ஜயசீலன் இடிவிழுந்தவன்போலாகி கல்லான அவன் நெஞ்சம் கரைந்து குற்றங்களை உணர்ந்து தன் நடக்கையை ஆராய்கையில், ஒரு பக்கம் வெட்கமும், மற்றொருபக்கம் கஸ்தியும் படத்தொடங்கினான். பிறகு தலை நிமிர்ந்து துக்கக்குரலுடன் தகப்பனைப் பார்த்துச் சொல்லுவான்: 'என் அன்புள்ள தந்தையே, அக்கிரமம் செய்தவன் நானே, உமக்கும், சகோதரிக்கும், குடும்பத்துக்கும் நாசத்தைத் தேடின பாவி நானே, வரப்போகிற துன்பத்துக்குள்ளாகவேண்டியது. நீதியின் தண்டனையை நானே ஏற்றுக்கொண்டு உங்களை மாசில்லாதவர்களாகக் காப்பாற்ற வேண்டியது என் கடமை. சகல பாரமும் என் தலைமேலே இருக்கட்டும். அதைச் சுமப்பதற்கு நான் முஸ்திப்பாயிருக்கிறேன்' என்று கண்களில் நீர் வடிய பிரலாபித்துச்சொன்னார்.

———

(பின்தொடரும்.)

## Here and there.

### நானு சங்கதிகள்.

France :—கடந்த செப்டெம்பர்-மீ 23-ம்௳ பிரதம மந்திரியாயிருந்த கனம் M. மில்ரான் அவர்கள் பிராஞ்சு குடியரசுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

As the old cock crows so crows the young :—லண்டன் பட்டணத்தில் ஓர் உலோபிக்கு அநேக வீடுகள் சொந்த

மாயிருந்தன. காரியக்காரனைவைத்து வாடகைப்பணம் தண்டல் செய்வது வீண் செலவென மதித்து அந்த உலோபி தானே போய்ப் பணம் தண்டிக்கொண்டுவருவான். அவ்வீடுகளில் ஒன்றில் குடியிருந்த மகன் ஒருபோதும் வாடகைப்பணம் கொடாததினால், தகப்பன் மகனிடம் சென்று "மகனே, நீ ஒரு மாதமாகிலும் கொடைக்கூலி கொடேன் என்கிறாய், ஆகையால் இந்த வீட்டை உனக்கே சொந்தமாக்கிப்போடுகிறேன்" என்றான். அதற்கு மகன், "அப்பா வேண்டாம், என்பேருக்கு நீர் வீட்டை எழுதிப் போட்டால், நானல்லோ, வீட்டுவரியும் ஜலவரியும், வெளிச்சம் முதலான சில்லறை வரிகளும் கட்ட வேண்டும். இந்த வீண்தண்டா எனக்கு வேண்டாம்" என்றானாம். ......

The wave of conversions:—இங்கிலாண்டில் அநேக பதிதர்கள் மனந்திரும்பி திருச்சபையில் சேருகிறார்கள் என்று தெரியவருகிறது. சில நாட்களுக்குமுன் ஒரு சின்ன துரைசானி பாதிரியிடம் சென்று: "பிறசிநேக சகோதரிகள்" என்னும் ஒரு கன்னியாஸ்திரி சபையை ஏற்படுத்தவேணும் என்று யோசனை செய்துகொண்டிருக்கும்போது. பாதிரியார் "மகளே, அது நம்மாலே முடியாத காரியம். இது விஷயத்திலும், மற்ற அநேக விஷயங்களிலும் கத்தோலிக்கர் எங்களுக்கு மேலானவர்களாயிருக்கிறார்கள்" என்று சொன்னார். அதற்கு சின்ன துரைசானி நாங்கள் அவர்களுக்கு தாழ்ந்தவர்களாயிருப்பானேன்? அப்படியானால் நாங்களும் கத்தோலிக்கராக வேணுமோ என்று சொன்னாள். இந்த சம்பாஷணை நடந்து சில நாட்களுக்குப் பிறகு அச் சின்ன துரைசானி மனந்திரும்பி சத்திய வேதத்தில் சேர்ந்தாள். பிறகு ஒருநாள் தன் பழைய பாதிரியாரை வழியில் கண்டு நான் இப்போது கத்தோலிக் வேதத்தில் சேர்ந்தேன் என்று சந்தோஷமாய்ச் சொல்ல, பாதிரியார் நானும் அப்படித்தான்; போனதடவை இருவரும் சம்பாஷித்ததுமுதல் யோசனைசெய்து மனந்திரும்பி சத்திய திருச்சபையில் சேர்ந்திருக்கிறேன் என்று சொன்னார்.

Feast of the Holy Rosary:—ஒக்டோபர் மாதம் 3-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கருமுத்தன்பட்டி உற்சவம் வழக்கம் போல் வெகு சிறப்புடன் நடைபெற்றது.

1-ம் தேதி வெள்ளிக்கிழமை மகா கனம்பொருந்திய மேற்றிராணியாரவர்கள் வரவழைக்கப்பட்டு 3-ம் தேதியாகிய ஞாயிற்றுக்கிழமையத்தினம் பாடல்பூசை செய்தார். அநேக விசுவாசிகள் திவ்யசற்பிரசாதத்தை உட்கொண்டு தங்கள் வேண்டுதல்களைப் பத்தியாய்ச் செலுத்திவந்தார்கள்.



For the devastated churches of France:—பிரான்ஸ் தேசத்தில் கடந்த யுத்தத்தில் பாழாக்கப்பட்ட நாடுகளிலுள்ள கோவில்களையும், வீடுகளையும் செப்பனிடுவதற்கு உதவியாக வசூலான தர்மத்தண்டல்.

| | | |
|---|---|---|
| எரிச்சாம்பதி பங்கு | ... | ரூ. 39—7—8. |
| சவேரியார் பாளையம் | ... | ,, 2—0—8. |

The sword and the altar:—இத்தலி படையைச் சேர்ந்த ஜெனரல் அல்போன்ஸ் மரிய புஸ்கோ என்பவர் சேனையைவிட்டு குருமடத்தில் சேர்ந்து, கடந்த செப்டெம்பர் மாதம் 5-ம் தேதி பிரான்ஸ் தேசத்தில் சலேத் என்னும் நகரில் தமது 63-ம் வயதில் குருப்பட்டம் பெற்றார்.

A Blessed family:—ஆங்கிலேய சேனாதிபதியாகிய கர்னல் வான் (Vaughan) என்பவருக்கு 6 புத்திரர்கள் இருந்தனர். முதல் புத்திரர் வெஸ்ட்மினிஸ்டர் கர்தினால் அதிமேற்றிராணியாராகவும், 2-வது புத்திரர் சிட்னி அதிமேற்றிராணியாராகவும், 3-வது புத்திரர் செபஸ்தொப்பொல் மேற்றிராணியாராகவும், 4-வது புத்திரர் குருவானவராகவும், 5-வது புத்திரர் பெனடிக்டின் குருவானவராகவும், 6-வது புத்திரர் சேசுசபைக் குருவானவருமாக இருந்தார்கள். அக் கர்னலுக்கு 5 புத்திரிகள் உண்டு, அவ்வைந்துபேரும் கன்னியாஸ்திரிகள் ஆனார்கள்.

The crown and the veil:—லக்ஸம்புர்க் என்னும் இராச்சியத்தின் இராணி தேவ ஊழியத்தின் மகிமைக்காக உலகத்தின் மகிமையையும், இராசசியத்தின் கிரீடத்தையும் விட்டு கர்மேல் என்னும் கன்னியாஸ்திரி சபையில் சேர்ந்தாள்.

Marian Congress:—மரியாயின் மகா சங்கத்தில் குறிக்கப்பட்டிருந்த தேதி மாற்றப்பட்டிருக்கிறது. ஜனவரி-மீ 4-ம் உ செவ்வாய்க்கிழமை சாயங்காலம் துவக்கி அடுத்த வியாழக்கிழமை 6-ம் உ சாயங்காலம் முடியும் என்று இப்போது தெரியவருகிறது.

Railway accident:—ஒக்டோபர்-மீ 17-ம் உ இரவில் சுமார் $10\frac{1}{2}$ மணிக்கு புகைவண்டி மதராஸிலிருந்து பெங்களூருக்குப் போகையில் அரக்கோணம் சமீபத்தில் தண்டவாளங்களிலிருந்து அப்புறப்பட்டு சேதப்பட்டது. 13 பிரயாணிகள் உயிர் சேதப்பட்டார்கள். 18 பேர் காயப்பட்டார்கள். சில பாதகர்களாகிய ரெயில்வே கூலியாட்கள் வண்டிச்சக்கரங்கள் போகும் இருப்புக்கம்பிகளை வேணுமென்று எடுத்து அப்பேர்ப்பட்ட அக்கிரமம் செய்ததாக பிரஸ்தாபம்.

---

## Kodiveri.

### பெரிய கோடிவேரி கோவில் பஞ்சாங்கம்.

### 1920-ம் ஆு நவம்பர்-மீ

1-ம் உ திங்கள். சகல அர்ச்சியசிஷ்டவர்கள் திருநாள். காலை 6-மணி பூசைக்குப்பிறகு திவ்வியநற்கருணை ஆசீர்வாதம்.

2-ம் உ செவ்வாய். உத்தரிக்கிற ஆத்துமாக்களின் திருநாள். காலை $7\frac{1}{2}$-மணிக்குப் பாட்டுப்பூசையும், சாயரட்சை 6-மணிக்கு கல்லறையும் மந்திரிக்கப்படும்.

5-ம் உ வெள்ளி, தலைவெள்ளி. காலைப்பூசைக்குப்பிறகு திவ்வியநற்கருணை ஆசீர்வாதம்.

---

### ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகள்.

1. பெரிய கொடிவேரி. குழந்தையப்பன், செபஸ்தியம்மாள்—இவர்கள் குமாரத்தி அர்தோனியம்மாள்.

2. ,, சாந்தப்பன், மரிகிருதம்மாள்—இவர்கள் குமாரத்தி மதலைமரியம்மாள்.

3. ,, லூயீஸ் தேவன், பெரியம்மாள்—இவர்கள் குமாரன் ஜெபமாலை மரியண்ணன்.

சேசுநாதர்சுவாமியைப்போல் இந்தக் குழந்தைகள் வயதிலும் ஞானத்திலும் தேவ வரப்பிரசாதத்திலும் வளருவார்களாக!

### மரித்தவர்கள்.

1. பெரிய கொடிவேரி. நோட்டக்கார லூயீஸ் முதலி, வயது 75.

2. ஷெ.யூர் நாட்டாண்மை இன்னாசியம்மாள், வயது 80.

இவர்கள் ஆத்தும இளைப்பாற்றிக்காக, 1-பர. 1-பிரி. 1-திரி. வேண்டிக்கொள்வோமாக.

J. B. Petit.

---

# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

16 DEC 1920

Vol. VI. December 1920. No. 12.

புத்தகம் VI.] FIDES AC ROBUR. [நம்பர் 12.

## The best Christmas story.

### கர்த்தர் பிறந்த திருநாள் உத்தம சரிதை.

அந்நாட்களிலே சம்பவித்ததேதெனில், உலக முழுமை
யும் குடிக்கணக்கு எழுதப்படும்படியாக செசார் அகுஸ்துஸ்
இராயனிடத்திலிருந்து ஓர் கட்டளை பிறந்தது. சீரியா தேச
த்து அதிபதியாகிய சீரினுஸ் என்பவனால் இந்த முதலாம்
குடிக்கணக்குச் செய்யப்பட்டது. ஆதலால் எல்லாரும்
ங்கள் பேர் எழுதிக்கொடுக்கும்பொருட்டுத் தங்கள் தங்கள்
சொந்த ஊருக்குப்போனார்கள். அப்படியிருக்க, சூசையப்பர்
தாவீதின் கோத்திரத்தையும், குடும்பத்தையும் சேர்ந்தவரா
கையால், கர்ப்பவதியான தம்முடைய மனைவி மரியம்மாளோடு
பேரெழுதிக் கொடுக்கும்படியாக, கலிலேயாவிலுள்ள நசரேத்
தைவிட்டு யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீது
நகரத்துக்குப் போனார். அவர்கள் அங்கே இருக்கையில் சம்
பவித்ததேதெனில், அவளுக்குப் பேறுகாலம் நிறைவேறிற்று.
அவள் ஓர் மாட்டுக்கொட்டிலில் தலைச்சன் பிள்ளையைப்பெற்று
துணிகளால் அவனைச்சுற்றி முன்னிட்டியில் கிடத்திவைத்
தாள். ஏனெனில் சத்திரத்தில் அவர்களுக்கு இடமில்லாமல்
போயிற்று. அப்போது அந்த நாட்டில் சில இடையர்கள்
விழித்து, தங்கள் கிடைக்குச் சாமக்காவல் காத்துக்கொண்டி
ருந்தார்கள். அப்பொழுது இதோ ஆண்டவருடைய தூதன்

அவர்களருகே வந்து நிற்க, தெய்வீகப்பிரகாசம் அவர்களைச் சூழ்ந்து ஒளிர, அவர்கள் மிகவும் பயந்து அஞ்சினார்கள்.

ஆனால் தேவதூதன் அவர்களை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; ஏனெனில் இதோ, எல்லா ஜனத்துக்கும் மகா சந்தோஷத்தை வருவிக்கும் சுபசெய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். அதேதெனில் இன்று தாவீதின் நகரத்தில் கிறீஸ்துநாதராகிய இரட்சகர் உங்களுக்காகப் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றி, முன்னிட்டியில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள், இதுவே உங்களுக்கு அடையாளம் என்றார். என்றவுடனே வானுலக சேனையின் கூட்டம் அந்த தேவதூதனோடு சேர்ந்து, சர்வேசுரனைத் துதித்து, உன்னத ஸ்தலங்களிலே சர்வேசுரனுக்கு மகிமைப்பிரதாபமும் பூலோகத்திலே நல்ல மனதுள்ள மனுஷர்களுக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது என்றார்கள்.

(அர்ச். லூக்காஸ் 2-ம் அதிகாரம்.)

A Holy and Merry Christmas!

## The Little Garden of Roses.

## சிறு ரோஜாத் தோட்டம்.

### மலர் 15.

'Bear ye one another's burdens' (Gal. VI. 2).

'ஒருவரொருவருடைய குற்றங்களைத் தாங்கிக்கொண்டு வாருங்கள்.'
(கலாத்தி. 6-ம் அதி. 2-ம் வச.)

ஒரே போதகத்தாலும், ஒரே ஐக்கிய பிரயோசனத்தாலும், ஒரே ஆளுகையாலும் ஏகமாயிருக்கிற மெய்யான திருச்சபையின் பிள்ளைகளாயிருக்கிற நாம், கிறீஸ்துவுடன் ஒன்றுபட்டு ஒரே ஞானக் குடும்பமாயிருப்பதால், எந்த விகற்பத்தையும் பாராட்டாமல் குறையில்லாத பிறசிநேகத்தால் சகோதரவொற்றுமையும், அந்நியோந்நிய சுகிர்த நேசவொருமிப்பும் உள்ளவர்களாயிருக்கக்கடவோம். இப்படிப்பட்ட சுகிர்த ஒருமிப்பில், பத்தி, தேவசிநேகம், பிறசிநேக முதலிய புண்



ணியங்கள் தடையில்லாமல் வர்த்திக்கும். அப்போது தேவ ஊழியத்தில் ஞான சந்தோஷமும் ஆறுதலுமிருக்கும்.

நாம் கிறீஸ்துநாதரின் அவயவங்களாயிருக்கிறோம். எப்படியெனில், இஸ்பிரீத்துசாந்துவின் வரப்பிரசாதங்களால் அர்ச்சிக்கப்பட்டும், ஞானஸ்நானத்தால் மறுபிறப்படைந்தும், கிறீஸ்துநாதருடைய திருவாக்கினாலும், சுகிர்த மாதிரிகையினாலும், அதிசய அற்புதங்களாலும் திடன்பட்டும், கிறீஸ்துவினுடைய திவ்விய பாடுகளினால் இரட்சிக்கப்பட்டும், அவருடைய இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டும், அவருடைய சரீரத்தால் போஷிக்கப்பட்டும் நாமெல்லோரும் ஒரே கிறீஸ்துவின் ஞான சரீரமாகிய ஒரே சபையாயிருக்கிறோம். சரீரத்தில் ஒவ்வொரு உறுப்பும் மற்றவைகளுக்குதவியாகும். எப்படியெனில் கால் கழுவுகிறதற்குக் கை உதவும். சரீரமெல்லாம் அங்கங்கே போகக் கால் உதவும்; காண்கிறதற்குக் கண்ணும், கேட்கிறதற்குக் காதும், பேசுகிறதற்கு நாவும், உண்பதற்கு வாயும், அப்படிச் சரீரத்துக்குத் தேவையான அந்தந்தக் காரியங்களுக்கு மற்ற உறுப்புகளுமுதவுகிறதல்லவோ; அப்படியே கிறீஸ்துவின் ஞான சரீரமாகிய திருச்சபையின் உறுப்புக்களாகிய நாம், அதன் தலையாகிய கிறீஸ்துநாதருடைய சித்தத்தின்படியே திருச்சபையெல்லாவற்றிற்கும் தங்களுக்குள்ளே ஒவ்வொருவருக்கும், அந்நியோந்நிய உதவியாயிருக்கவேண்டியதுமல்லாமல், சமாதானத்தில் ஒருமிப்பாயிருக்கவும் கடமைப்பட்டிருக்கிற நாம், புறத்தியாருக்கு எல்லாவிதத்திலும் தீங்கு செய்யத் தேடுவதேன்?

நன்மையைத்தரும் இனிய வசனங்கள் அனந்தம் உண்டாயிருக்க, அவைகளை விட்டுவிட்டுத் தீமைகளைத் தரும் கொடுமையான வார்த்தைகளாலும், கிரியைகளாலும், தனது சகோதரனை அவமானப்படுத்த முயற்சிப்பவன் கிறீஸ்துநாதரை அவமதிப்பவனாவான். அப்பேர்ப்பட்டவன் தன் குற்றத்தையுணர்ந்து, மனஸ்தாபப்பட்டு அதற்குத் தகுந்த பரிகாரம் செய்யாமற் போவானேயாகில் நீதியதிபரான சர்வேசுரனுடைய கோபாக்கினைக்குப் பாத்திரவானாகிப் பசாசுகளோடும், மற்றச் சகல பாவிகளோடும் நரகக் குழியில் தள்ளப்பட்டு என்றென்றும் சொல்லிலடங்காத கொடூர ஆக்கினையை அநுபவிப்பான்.

நம்மெல்லோருக்கும் தகப்பனாகிய சர்வேசுரன் மோட்சத்தில் சகல பிரதாபங்களோடு வீற்றிருக்கிறார். ஆனதுபற்றி இவ்வுலகிலிருக்கும் நாம், மேன்மக்களாயிருந்தாலுஞ்சரி,

கீழ் குலத்தாராயிருந்தாலும் சரி, எந்தெந்த வமிசத்தாரும், ஊராரும், நாட்டாரும், குலத்தாருமாயிருந்தாலும் சரி எல்லாரும் யாதொரு வித்தியாசமில்லாமல் கிறீஸ்துநாதரில் ஐக்கியப்பட்டு இணைபிரியாத அவருடைய சகோதராயிருக்கிறோம்.

நம்மெல்லோரையும் சிருஷ்டித்தவர் ஒரே கடவுள். அவரோதான் நம்மைக் காப்பாற்றி, இரட்சித்து ஆண்டு வருகிறார். தமது சுகிர்த மாதிரிகைகளைப் பின்பற்றித், தம்முடைய கற்பனைகளைச் சுமுத்திரையாய் அநுசரித்து, உள்ளும் புறமும் மாசற்றவர்களாய் ஜீவித்துக், கடைசியில் தேவ இஷ்டப்பிரசாதத்தோடு மரித்து, தம்முடைய மோட்சானந்த பாக்கியத்தில் பங்கடைய வாருங்களென்று நம்மை அழைக்கிறவரும் அவரே. இப்படித் தம்மைச் சேவிப்பவர்களுக்குச் சம்பாவனையாகத் தம்மையும், தம்மிலடங்கிய பாக்கியங்களெல்லாவற்றையும், தம்முடைய நவவிலாச சம்மனசுகளுக்கும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்கும், மற்றுமுள்ள மோட்சவாசிகளுக்கும் முன்னிலையில் தமது தெய்வீகத்தின் பிரத்தியட்ச தரிசனையை என்றும் ஊழியுள்ளகாலம் கொடுப்போமென்று வாக்களிக்கிறவரும் அதே கடவுள்தான்.

ஆகையால் நாம் அதே கடவுளால் மோட்சானந்த பாக்கியத்துக்கு அழைக்கப்படுவதினாலும், ஒரே விலையால் நாமெல்லோரும் மீட்கப்பட்டதினாலும், தேவ இஷ்டப்பிரசாதத்தின் ஆலயமாகிய நமது ஆத்துமங்களில் அவர் பூரண திருப்தியோடும், சந்தோஷத்தோடுமிருந்து வாசஞ்செய்யப் பிரியப்படுவதாலும், நாம் ஒருவரொருவரைச் சிநேகிக்கவும், ஒருவர்க்கொருவர் ஊழியஞ் செய்யவும் பிரயாசப்படுவோமாக.

நாம் சேசுநாதருக்குப் பிரியப்படவேண்டுமானால் அவருடைய சிநேகத்திற்காகவேண்டி, நாம் ஒருவரொருவருடைய சுமையைச் சுமந்துகொண்டு நமது சகோதரர்களைத் தக்கவிதமாய் மதித்து ஒருவரொருவருக்காக வேண்டிக்கொள்வோமாக. அப்போது சர்வேசுரன் நமது மனதில் உத்தம வகையில் பிரசன்னமாயிருப்பார். நாமும் சர்வேசுரனிடத்தில் உத்தம வகையில் தங்கியிருப்போம். அவர் நம்மிடத்தில் வாசஞ் செய்வார். நாமும் அவரிடத்தில் வாசஞ்செய்வோம்.

நமது சகோதரரிடத்தில் எவ்வித குற்றங்குறைகளிருந்தாலும், நம்மிடத்திலுள்ள குணக்குறைகளை மற்றவர்கள் பொறுத்துச் சகித்துக்கொள்ளவேண்டுமென்று நாம் ஆசிப்பதுபோல, நாமும் அவர்களுடைய குற்றங்களையெல்லாம்



முழுமனதோடும், தயவுடனும் பொறுத்துக்கொள்ளவேண்டியது நமது கடமையாகும். அப்போது நாமெல்லோரும் கிறீஸ்துநாதருடைய பிறசிநேகக் கட்டளையை நிறைவேற்றுபவர்களாவோம். அப்படிச் செய்வதினால் நித்திய சமாதானத்தையுஞ் சகோதரவொருமிப்பையுங் காப்பாற்றிக்கொள்ளலாம்.

(தொடரும்.) S. S. G.

---

## Pastoral Letter·

### மேற்றிராணியாருடைய நிருபம்.

மகா வந்திக்கத்தக்க கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள் குருத்துவத்தைப்பற்றி நல்ல படிப்பினையுள்ள ஓர் நிருபத்தை எழுதியிருக்கிறார். அதன் சுருக்கமாவது:—

குருத்துவத்தின் மகத்துவம்—குருவானவர் சர்வேசுரனுடைய விசேஷ நேசபுத்திரன். தேவ வரப்பிரசாதத்தின் உத்தம வேலை. நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரின் அலுவலை உலகத்தில் தொடர்ந்து நடத்த நியமிக்கப்பட்டவர். ஒருவிதத்தில் நமது மோட்ச தாயினுடைய வேலையும், கிறீஸ்துவ தாய்மாரின் தேவ அருள்பெற்ற கனியுமாயிருக்கிறார். குருக்கள் சபை இராஜ சபை என்று தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும், சொல்லியிருக்கிறார்கள். குருத்துவ அந்தஸ்திற்கு சரியான அந்தஸ்து உலகிலில்லை. மன்னர், மன்னாதி மன்னர் அந்தஸ்தை மட்டுமல்ல: சம்மனசுகள் அந்தஸ்தைவிட உயர்ந்தது. ஏனென்றால் மன்னர்க்கு மானிட சரீரத்தின்மீதுதான் அதிகாரம். ஆனால் குருக்களுக்கோ ஆத்துமத்தின் மீதும் அதிகாரம் என்று அர்ச். கிறீசோஸ்தோம் அருளப்பர் வசனிக்கிறார்:—சம்மனசுகளுக்கில்லாத அதிகாரம் அவர்களுக்குண்டு. சம்மனசுகளுக்கு கோதுமை அப்பத்தை சேசுநாதர்சுவாமியுடைய திருச்சரீரமாகமாற்ற அதிகாரமில்லை. சகல சம்மனசுகளும் ஒன்று சேர்ந்தாலும் ஒரு பாவத்தை மன்னிக்க முடியாது. குருவானவர் சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தராயிருக்கிறார். அது எப்படியெனில், நமது அவசரங்களைச் சர்வேசுரனுக்கு அறியச்செய்து நமக்காக சர்வேசுரனை மன்றாடி அவர் நமதுமேல் தமது அநுக்கிரகங்களையும்,

ஆசீரையும் பொழியச் செய்கிறார். இதனால்தான் ஓர் சம்மனசுவையும் ஓர் குருவையும் எதிர் வரப் பார்த்தால் முதலில் குருவை வணங்குவேன் என்று அர்ச். பிரான்சீஸ் அஸ்ஸிசி சொல்லுவார். குருத்துவ அந்தஸ்து மகா கஷ்டமும் பொறுப்புமுள்ளது. குருவின் கடமைகள் அற்ப சொற்பமல்ல. குருக்கள் பூமியின் உப்பாயும், உலகத்தின் ஒளியாயுமிருக்கிறார்கள். அதனால்தான் அநேக சமயங்களில் ஜன சமுசயத்திற்கும் துஷ்டர்களின் நிந்தை அபதூறு உபத்திரவத்திற்கும் தங்கள் குருவாகிய சேசுநாதரைப்போல் ஆளாகிறார்கள். குருக்கள் குணத்தில் சில குறைகள் தோன்றினும், அதற்காக அவர்களைத் தூற்றுவது தகாது.

ஏனெனில் மாசற்றதனத்திலும் சுய பரித்தியாகத்திலும் குருக்கள் சபைக்கு நிகரான சபை ஒன்றுமில்லை. கிறீஸ்துவர்களில் சிலர் அகந்தையுடன் குருக்களை நடத்துகிறார்கள். குருக்கள் அற்ப ஊழியக்காரரென்று எண்ணுகிறார்கள். இப்படிச் செய்வதால் குருக்களின் மனதையும், உங்களை நிந்திக்கிறவன் என்னை நிந்திக்கிறான் என்று சொன்ன ஆண்டவரின் திருஇருதயத்தையும் புண்ணாக்குகிறார்கள்.

**குருத்துவத்தின் அவசரம்.**—ஜீவ உற்பத்திக்கும், விருத்திக்கும் சூரியன் எவ்வளவு அவசரமோ, அப்படி ஆத்துமாக்களின் ஞான ஜீவியத்திற்கும் வளர்ச்சிக்கும் குருக்கள் அவசரம். நிற்க, இப்பூமியில் கிறீஸ்துநாதரின் சாயலும் பதிலாளிகளுமான குருமார் ஆண்டவர் துவக்கின பாவப் பரிகார வேலையை எக்காலத்துக்கும் திருச்சபையில் தொடர்ந்து நடத்த அவசரம்; ஆகவே குருக்கள் அவசரம். அநேக குருக்கள் அவசரம், நல்ல குருக்கள் அவசரம், பங்கு விசாரணைக் கிறீஸ்துவர்கள் புண்ணிய நெறியிலும் சாங்கோபாங்க மார்க்கத்திலும் நடக்க வழி காட்டல், பள்ளிக்கூடங்களை விசாரித்தல், அஞ்ஞானிகளை மனந்திருப்புதல் முதலிய நானாவித வேலைகளைச் செய்யுந் தகுதியான குருக்கள் அவசரம். குருக்கள் அவசரமென்றால் குருமடங்களும் அவைகளின் சம்ரக்ஷணையும் அவசரம். ஏனெனில் குருக்களாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் வயதிலும் கல்வியிலும் ஞானத்திலும் வளருமிடமே குருமடம்.

**தாய் தந்தையருடைய கடமைகள்.**—தாய் தந்தையர் குருத்துவ அந்தஸ்திற்கு சர்வேசுரன் அழைக்கும் தங்கள் பிள்ளைகளைக் குருமடத்திற்கு அனுப்ப கடமைப்பட்டிருக்கிறார்கள். குருவாகப் பிரியமுள்ள உங்கள் புத்திரரைத் தடுக்காமல், நமது பள்ளிக்கூடங்களுக்குச் சிறுவத்திலேயே அனுப்பும்படி வெகுவாய்ப்



புரிந்து கேட்டுக்கொள்ளுகிறோம். சர்வேசுரனுடைய மகிமைக்கும், ஆத்தும இரட்சண்ணியத்துக்கும் தன்னைத்தானே கையளித்து உழைப்பதைவிட இவ்வுலகில் அரிய பெரிய மகிமை பெருமை இல்லையென்று உங்கள் பிள்ளைகளுக்குப் போதியுங்கள். எவ்வித உலக உத்தியோகத்தைப்பார்க்கிலும் குருத்துவ அந்தஸ்து மேன்மையானதென்று விளக்கிக்காட்டுங்கள். வீட்டில் இப்படி கற்பித்து, நடக்கையால் நன்மாதிரிகை காண்பித்தால், நமது ஆண்டவரும் தேவதாயும் உங்கள் குடும்பங்களைச் சந்தித்து உங்கள் மக்களில் சிலரை குருக்களாகத் தெரிந்துகொள்வார்களென்பது நிச்சயம்.

ஏனெனில் குருக்கள் நல்ல கத்தோலிக் குடும்பங்களினின்று தெரிந்துகொள்ளப்படுவார்கள். நிற்க, உங்கள் புத்திரரைச் சர்வேசுரனுடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கிறது போதாது, கிறீஸ்துவர்களனைவரும் பண உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றும் அறியக்கடவார்கள். ஏனெனில் குருக்களுக்கும் மற்ற மனிதரைப்போல உண்ண உணவும், அணிய ஆடையும் வேண்டும். மேலும் உங்கள் புத்திரரைப் படிப்பிக்க வேண்டிய உதவி ஒத்தாசைகளையும் குரு மடங்களுக்குப் பண உதவியையும் புரிந்துவாருங்கள். இவ் இரண்டு உதவிகளைச் செய்யும்படி நமது மேற்றிராணியார் நமது ஆண்டவர்பேராலும் தேவதாய்பேராலும், கிறீஸ்துவ சகோதரர்களை மெத்தவும் கேட்டுக்கொள்ளுகிறார்.

Praise not thy work, but let thy work praise thee.

---

## History of the Diocese of Coimbatore.

## கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் சரிதை.

(முன் தொடர்ச்சி.)

சுமார் 1820-ம் வருஷத்தில் கோயமுத்தூர் நாட்டிலுள்ள கிறீஸ்துவர்கள் பலதடவைகளில் கனம்பொருந்திய ஏபொர்ட் ஆண்டவருக்கு விண்ணப்பம் எழுதி, தங்களை விசாரிக்க குருக்களை நியமித்து அனுப்பவேணுமென்று கேட்டுக்கொண்டார்

கள். ஆனால் அக்காலத்தில் அன்னியதேசத்து குருக்கள் கோயமுத்தூர்நாட்டில் பிரவேசிப்பதற்கு ஆங்கிலேய சர்க்காரிடமிருந்து ஒரு விசேஷ உத்தரவு வேண்டியிருந்தது. ஆனாலும் புதுவை ஆண்டவர் சங். பொஷ்ட்டன் என்னும் ஓர் குருசுவாமியாரை கோயமுத்தூர் நாட்டிலுள்ள கிறிஸ்துவர்களை விசாரிக்க அனுப்பினார். இவர் சத்திய வேதத்தைப் போதிக்க சர்க்காருடைய உத்தரவு வேண்டியதில்லை என்று எண்ணி, பயணச்சீட்டு இல்லாமல் வந்தார். வந்தவுடனே, சர்க்கார் அவரைத் தள்ளிப்போட்டார்கள். அவருக்குப் பதிலாக சங். ஜரிழ் என்னும் குரு சுவாமியார் சர்க்கார் உத்தரவின்றி புறப்பட்டு வந்தார். ஆனால் கோயமுத்தூர் கலெக்டர் துரை அதை அறிந்தவுடனே அவர் மூன்று நாட்களுக்குள் காவேரி தாண்டி திரும்பிப்போகவேணும் என்றும் கட்டளையிட்டபடியால் அவரும் தங்காமல் போய்விட்டார். அதன்பிறகு புதுவை மேற்றிராணியார் சய். அருளாந்து என்னும் ஓர் சுதேச குருசுவாமியாரை நியமித்து அனுப்பினார். ஆங்கிலேய கலெக்டர் துரை அக்குருவானவர் கோயமுத்தூர் நாட்டில் பிரவேசித்ததாக கேள்விப்பட்டு, அவர் எவ்விதக் கலகமும் செய்யாதபடிக்கு வாக்குத்தத்தங் கொடுக்கவும், அதற்கு ஜாமீன் 500 ரூபாய் கொடுக்கவும் வேணுமென்று கட்டளையிட்டார். அந்தக் குருவானவர் அதற்குச் சம்மதியாமல் கோயமுத்தூர் நாட்டை விட்டு திரும்பிப்போனார். கடைசியாய் சேலத்திலிருந்து சங். குஸ்ட் சுவாமியாரும், சங். பக்ரே சுவாமியாரும் ஆகிய இருவரும் சர்க்கார் கட்டளையின்படி பயணச்சீட்டை அடைந்து, கோயமுத்தூர் வந்து சேர்ந்திருந்தார்கள்.

பிரதான பங்கு விசாரணையாகிய கருமத்தன்பட்டியிலிருந்து, கோயமுத்தூர் கொடிவேரி முதலிய பங்குகளைத் தரிசித்து விசாரித்தார்கள். அக்காலத்தில் கோயமுத்தூர் தேசத்தில் 8000 கிறீஸ்துவர்கள் இருந்தார்கள். அவர்களில் சிலர் ஐரோப்பிய குருக்கள் வேணுமென்றும், சிலர் கோவைக் குருக்கள் வேணுமென்றும் தர்க்கித்து இரண்டு கட்சிகளாகப் பிரிந்திருந்தார்கள். துன்மார்க்கமாய் நடந்துவந்த வேறு சிலரோவெனில், குருக்கள் ஒருவரும் வேண்டாமென்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். இந்த ஒவ்வாமையினால் சத்திய வேதத்துக்கு வெகு கெடுதியானதுமன்றி, பலவிடங்களில் பதிதர்கள் திருச்சபைக்கு விரோதமாய்ப் போதிக்கவும், கிறீஸ்துவர்களைக் கெடுக்கவும், அந்தச் சமயத்தைத் தெரிந்துகொண்டார்கள். ஆனாலும் 1820-ம்௵ முதல் 1825-ம்௵ வரை



யில் எரிச்சாம்பதி, குலுக்குப்பாறை, குழிராயன்பாளையம், சவேரியார்பாளையம், கோட்டமுங்கலம், மாதாப்பாளையம் முதலிய ஊர்களில், திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டதுமல்லாமல், ஷை இடங்களிலும், தாராபுரம், கோம்பகாடு, பிலியகுலம் முதலிய ஊர்களிலும் சின்ன கோவில்கள் கட்டப்பட்டன.

1829-ம்௵ தென் இந்தியாவில் ஓர் பெரிய உபத்திரவம் நேரிட்டது. அதாவது, அகோர பஞ்சத்தினாலும், ஓர் அதிசயமான குளிர்காய்ச்சலாலும் கணக்கில்லாத ஜனங்கள் செத்தார்கள். அநேக ஜனங்கள் தென்திசைக்கும் மேல்திசைக்கும் ஓடிப்போனார்கள்; திருடர்கள் இரவும் பகலும் திரிந்து ஊர்களைக் கொள்ளையடித்துக்கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் ஜனங்கள் சொல்லிலடங்காத துன்ப துரிதம் அனுபவித்தார்கள். ஓர் தகப்பன் பசியைப் பொறுக்கமாட்டாமல், செத்த தன் புத்திரனுடைய கையை வெட்டி குடலைப் பிடுங்கி சமைத்து சாப்பிட்டதும், ஓர் தாய் பால் குடிக்கும் தன் குழந்தையைக் கொன்று சாப்பிட்டதும் இது முதலிய பரிதாப செய்கைகள் காணப்பட்டன. வேறே அநேகர் தங்கள் பிள்ளைகளை துலுக்கர்களுக்கு விற்றார்களாம்.

செத்த பிரேதங்கள் சாகிறவர்களோடுகூட ஊர்களிலும், வழிகளிலும் அடக்கமில்லாமல் நெருக்கமாய்க் கிடந்து நாய்களுக்கும் நரிகளுக்கும் பட்சிகளுக்கும் இரையாயிருந்தன. இவற்றை மிருகங்கள் முதலாய் அரோசிகமடைந்து வெறுத்துவிட்டன. அப்படிப்பட்ட உபத்திரவத்தின் காலத்தில் சர்க்காரும் சத்தியவேத குருக்களும் நிர்ப்பாக்கியமுள்ள ஜனங்களுக்கு கூடுமானமட்டும் உதவிசெய்ய பிரயாசப்பட்டார்கள். குருக்கள் ஜனங்களுடைய சரீரத்துக்கு உதவி செய்ததோடுகூட அவர்களுடைய ஆத்துமத்தையும இரட்சிக்க வெகு சுறுசுறுப்போடு பிரயாசப்பட்டார்கள். அதைப்பற்றி ஓர் ஆங்கிலேய கலெக்டர் சங். ஷார் பொன்றே என்னும் குரு சுவாமியாருக்கு காகிதம் எழுதி, அதிலே அவரை மெச்சி, நன்றியறிந்து, "நீங்கள் மெய்யாகவே ஜனங்களுடைய தகப்பனும், பெரிய உபகாரியுமானீர்கள்" என்று எழுதினார்.

A conscience without God is a tribunal without a judge.

# A Parable.
## ஓர் உவமை.

(மோட்சவாசலில் நடந்த ஓர் சம்பாஷணை.)

அர்ச். இராயப்பர் மோட்சவாசலில் நின்று ஓர் பெரும் புத்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கிறார். அவஸ்தைபூசுதலின்றி மரித்த குறும்பன் என்னும் ஓர் கிறீஸ்துவன் நடுநடுக்கத்துடன் நடந்துவந்து திடீரென அர்ச். இராயப்பரைப் பார்த்து நின்று நான் உள்ளே வரலாமா?

இராய:—நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?

குறு:—என்பேர் குறும்பன். கலாதிராணையம், பங்கு விசாரணையைச் சேர்ந்தவன்.

இராய:—உனக்குப் பயணச் சீட்டு உண்டா? உன்னுடைய ஞானஸ்நான சீட்டு இருக்கிறதா?

குறும்:—(ஆத்திரத்துடன்) இதோ இருக்கிறது.

இராய:—சரிதான்.

குறும்:—நான் உள்ளே வரலாமா?

இராய:—ஆத்திரப்படாதே. உன் பாவச்சுமை அசாத்தியமாயிருக்கிறது. இந்தப் பெருமூட்டையோடே உள்ளே போவது கூடாத காரியம். நீ சாகுமுன் பாவசங்கீர்த்தனம் பண்ணி அவஸ்தைப்பூசுதல் பெற்றிருக்கிறாயா?

குறும்:—கொள்ளைநோய்கண்டு ஒரே நாளில் செத்தேன். என் சொந்தக்காரர் குருவானவரைக் கூட்டிக்கொண்டு வரும்போது நான் உயிர்விட்டு இறந்திருந்தேன்.

இராய:—உத்தம மனஸ்தாபமாவது படவில்லையோ?

குறும்:—அதைப்பற்றி நான் நினைக்கவேயில்லை.

இராய:—நீ பாவசங்கீர்த்தனம் பண்ணி எவ்வளவு காலம் ஆயிற்று?

குறும்:—நாலு, ஐந்து வருஷமிருக்கும்.

இராய:—ஏன் அவ்வளவு அசட்டையாயிருந்தாய்?

குறும்:—என் பங்குசுவாமியாருக்கும், எனக்கும் சண்டை உண்டாகி நான் ஊரார் சிலரோடு சேர்ந்து அவருக்கு விரோதமாய்க் குழப்பம் எழுப்பின அந்த வருத்தத்தினால் சங்கீர்த்தனம் பண்ணவில்லை.

இராய:—உங்கள் ஞான மேய்ப்பனுக்கு விரோதமாய் குழப்பம் செய்யத் துணிந்தீர்களா? அதென்ன அக்கிரமம்?



குறும்:—அவர் நாங்கள் சொன்னபடி செய்கிறதில்லை, கோவில்காரியாதிகளைக் கணக்குக் கேட்கிறார். கோவில் மிராசுகளை வாங்குகிறார். எங்கள் இஷ்டம்போல நடக்கச் சம்மதிக்கிறதில்லை. நாங்கள் கேட்கிறதெல்லாம் கொடுக்கிறதில்லை.

இராய:—(கோபத்துடன்) கோவிலைச் சேர்ந்த பொருட்களைக் கண் காணிக்க வேண்டியவர் யார்? குருவானவர் அல்லவா? உங்கள் சொற்படி கேட்டு உங்கள் அடிமையாயிருக்க குருவானவர் உங்களுக்குத் தலைமையாயிருக்கிறாரா? ஆடுகள் தான் மேய்ப்பனுக்கு வழி காட்டுகிறதா? மேய்ப்பன் அல்லவோ ஆடுகளுக்கு வழி காட்டவேணும். குடும்பத்தில் பிள்ளைகள் தகப்பனை நடத்துகிறதா? தகப்பன் அல்லவோ பிள்ளைகளை நடத்தவேணும்.

குறும்:—(சாஷ்டாங்கமாய் விழுந்து) நான் செய்தது பெருந் தப்பிதம். இப்போது எனக்கு நன்றாய் விளங்குகிறது மன்னித்துக்கொள்ளும்.

இராய:—மன்னிப்பின்காலம் கடந்துபோயிற்று—செத்த பிறகு மன்னிப்பு கிடையாது.

குறும்:—இராயப்பரே! என்பேரிலிரக்கமாயிரும், தெரியாமல் செய்தேன்.

இராய:—பிரயோஜனமில்லை. மோட்சத்தில் உனக்கு இடம் கிடையாது.

குறும்:—ஓர் விண்ணப்பம் என் கிராமத்துக்குப் போய் என் வீட்டாருக்கும், சொந்தக்காரருக்கும், இதுகாரியத்தை அறிவிக்க, உத்தரவுதாரும்; மற்றப்படி அவர்களும் என்னைப் போல நாசமாய்ப் போவார்கள்.

இராய:—பிரயோஜனமில்லை. நமது திவ்விய இரட்சகர் தமது அப்போஸ்தலர்களையும் அவர்களைத் தொடர்ந்தவர்களையும் குறித்து என்ன சொன்னார். எவன் உங்களுக்குச் செவி கொடுக்கிறானோ அவன் எனக்குந்தானே செவி கொடுக்கிறான். எவன் உங்களைப் புறக்கணிக்கிறானோ அவன் என்னையுந்தானே புறக்கணிக்கிறான். ஆகையால் குருக்களுக்கு விரோதமாய்க் குழப்பஞ் செய்கிறவர்கள் சேசுநாதருக்கு விரோதமாய்க் குழப்பஞ் செய்கிறார்களென்பது நிச்சயம்.

குறும்:—அவர்கள் இதை நினைக்கிறதில்லை.

இராய:—இவர்கள் வேண்டியமட்டும் புத்தி போதகங்கள் கேட்டிருக்கிறார்கள். மனந்திரும்பாவிட்டால் அது யார் குற்றம். குருவானவர் அவர்களுக்கு புத்திமதிகளைச் சொல்லும்

போது அவர்கள் கேட்காமல், அல்லது பூசைக்குப் பிறகு குருவானவர் பிரசங்கம் செய்யும்போது அவர்கள் அதைக் கேட்காமல் கோவிலை விட்டு வீட்டுக்குப் போனால் யார் குற்றம். அவர்களுடைய குற்றந்தான். மோட்சவாசலில் சர்வேசுரனுக்கு விரோதமாய்க் குழப்பஞ் செய்த கெட்ட சம்மனசுக்களை நீ கண்டுபாவித்தபடியால், நீயும் அவர்களோடே ஊழியுள்ளகாலம், நரகவேதனை அநுபவிக்கப் போகிறாய்.

குறும்:—ஐயோ! இந்தக் குழப்பத்தை உண்டுபண்ணியவன் நானல்லவே! வேறொருவன் இந்தக் குழப்பத்துக்கு என்னை இழுக்காவிட்டால் நான் அதில் சேர்ந்திருக்கமாட்டேன். அந்தப் பாவிப்பயலால் நான் கெட்டேன்.

இராய:—கெட்டுப்போன சம்மனசுக்களும் லூசிப்பேர் என்கிற தலைவனால் கெட்டு மோட்ச இராச்சியத்தை இழந்து நித்திய நரககேட்டுக்குள்ளானார்கள். அதுபோலவே நீயும் கெட்டு அவர்களோடே நரக அக்கினியில் நித்தியகாலம் வேகக்கடவாய்.

Olim.

---

## Page for the Young.

### பிள்ளைகளின் பக்கம்.

ஒரு இராச்சியத்தில் ஒரு கிறீஸ்துவன் சித்திரம் எழுதுவதில் மிகவும் கைதேர்ந்தவனாயிருந்தான். அவன் தனது வாலவயதில் ஒரு ரூபத்தை காம இச்சையை மூட்டும்படி பார்க்கக்கூடாத அசங்கியங்களை சித்தரித்திருந்தான். அநேகர் அந்த ரூபத்தைப் பார்க்க மனசில்லாமல் வெட்கப்பட்டுத் திரும்பிப் போய்விட்டார்கள். அந்தப் படத்தை ஓர் பிரபு விலைக்கு வாங்கி தன் அரண்மனையில் ஸ்தாபித்திருந்தான். அவ்விடம் போய் அதைப்பார்த்தவர்களில் பலர் பாவத்தில் விழுந்தார்கள். இதைப் பார்த்துச் சித்திரக்காரன் அநேகர் கெட்ட வழியில் நடக்கத் தானே மூல காரணம் என்று தான் செய்த குற்றத்தை நன்றாய்க் கண்டுணர்ந்து தான் அப்படி எழுதியதற்காக துக்கமும், உத்தம மனஸ்தாபமும் பட்டதல்லாமல், மிகுந்த ஆவலுடன் தான் எழுதும் படத்தைப் பார்த்து மற்றவர்கள்



தெய்வ பக்தியிலும் நல்லொழுக்கத்திலும் திருந்தும்படியாக தேவமாதா, அர்ச்சியசிஷ்டவர்கள் முதலிய பக்திக்கடுத்த படங்களை எழுதினதுமல்லாமல் தன்னால் கூடியவரையில் சில நாள் தன் குற்றத்துக்காக தபசும்பண்ணினான். அவைகளைப்பார்த்து அநேகர் வேத விசுவாசத்திலும் விடா பக்தியிலும் நல்லொழுக்கத்திலும், விருத்தியடைந்தார்கள். அவன் இவைகளைப்பார்த்துச் சந்தோஷித்து தன் அந்தியகாலத்தில் தேவதிரவிய அநுமானங்களைப்பெற்று மிகுந்த சந்தோஷத்துடனும், நல்ல ஆயத்தத்துடனும் மரணமடைந்தான். அவன் இறந்த சில காலத்துக்குப் பிறகு அவன் ஆத்துமம் ஒரு குருவானவருக்குத் தன்னைக் காண்பித்து—சுவாமி, தேவரீர் என்பேரில் இரக்கமாயிரும். நான் செய்த பாவத்துக்காக உத்தரிக்கிற ஸ்தலத்திலே வெகு வேதனைப்படுகிறேன். "நான் தீயிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒத்தாசை செய்யவேண்டும்" என்று அழுதுகொண்டு சொன்னது. அதற்கு குருவானவர் நீ எந்த பாவத்தின் முகாந்தரமாக கஸ்தியனுபவிக்கிறாய் என்று கேட்டார். அதற்கு ௸ ஆத்துமம் குருவானவரை நோக்கி தந்தையே! நான் இறந்தபின் சர்வேசுரனிடத்தில் கணக்கு ஒப்பிக்கப் போனபோது பசாசானவன் "சுவாமீ, இவன் தனது வால வயதில் தன் கையால் எழுதின அக்கிரமமான படங்களைப் பார்த்து அநேகர் கெட்டு நரகத்திற் புதைக்கப்பட்டிருக்கிறார்கள். இவன் எழுதிய ஆகாத அக்கிரம படங்கள் இன்னும் ௸ பிரபுவின் வீட்டில் ஸ்தாபகமாயிருப்பதைக் காணலாம். இவனை என்னிடம் ஒப்பியுங்கள். நான் நரகத்துக்குக் கூட்டிக்கொண்டு போகிறேன்" என்றது. இதைப் பார்த்து அவனுடைய காவலான சம்மனசானவர் ஆண்டவரே! இவனை இச்சாத்தானிடம் ஒப்படைக்க வேண்டாம். இவன், தான் செய்த குற்றத்துக்குப் பரிகாரமாகக் கடின தபசு செய்ததுமன்றி இவன் எந்தக்கையால் அக்கிரமமான படங்களை எழுதினானோ அந்தக் கைகளுடன் உத்தரிக்கிற ஸ்தலத்தில் மிகுந்த வாதைப்பட்டு தன் பாவப்பரிகாரக் கடனைத் தீர்த்துக்கொண்டான். மேலும் இவன் தன் குற்றத்தை நன்றாயுணர்ந்து ௸ தன் கையினாலேயே, தேவமாதா முதலிய அர்ச்சியசிஷ்டவர்கள் படங்களை எழுதியதுமன்றி அவற்றால் அநேகர் ஈடேறவும் வழிகாட்டினான். ஆகையால் தேவரீர் இவன்பேரில் இரக்கமாயிரும் என்று கெஞ்சி மன்றாடினார். ஆனதால் கர்த்தர் மனதிரங்கி இவன் எழுதின படம் பிரபுவின் வீட்டிலிருந்து எடுக்கப்படுகிறவரையில் இவன் தனது கையுடன் உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படவேண்டும் என்று ஆக்கியாபித்தார்.

ஆகையால் தந்தையே, தேவரீர் ஷை பிரபுவினிடம் போய் நான் அவருக்குக் கொடுத்த படத்தை எடுத்து எறிந்துவிடும்படி புத்தி சொல்லுங்கள். மேலும சில நாட்களுக்குப்பின்பு உன் இரண்டு மக்களும் இறந்துபோவார்கள். நீ ஷை படத்தை எடுக்காவிட்டால் நீயும் இறந்துபோவாய் என்று இதை உனக்கு அறிவிக்கும்படி கடவுள் கட்டளையிட்டார் என்றும் பிரபுவுக்குச் சொல்லும்படி குருவானவரிடம் சொல்லிவிட்டு அவ்வாத்துமம் மறைந்துபோனது. பிரபு நடந்த சேதியைக் குருவானவரால் கேள்விப்பட்டு ஷை படத்தை எடுத்துப்போட்டார். பிரபுவின் பிள்ளைகள் இரண்டுபேரும் இறந்துபோனார்கள். பிரபுவும், தான் செய்த குற்றத்தையுணர்ந்து அதற்காக தபசு செய்து நல்லவனானான். பிறகு சித்திர வேலைக்காரனுடைய ஆத்துமம் உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்து மகா மகிமையுடன் மோட்சத்துக்குப் போனதைக் குருவானவர் கண்டார்.

சகோதரரே, இந்தச் சரித்திரத்தைப் படிப்பதினால் நீங்கள் அறியவேண்டியது என்னவெனில், கெட்ட படங்களாகிய சித்திர புத்திரன் முதலிய அஞ்ஞானிகளும் காமாதுரரும் எழுதிய படங்களையும், பயாஸ்கோப்பில் காட்டப்படும் கெட்ட படங்களையும் விருப்பமுடன் அடுத்தடுத்துப் போய்ப் பார்த்து வருவதுமன்றி அதற்குச் சம்பந்தமான கெட்ட சரித்திரங்களை வாசித்து அதற்கேற்ற சரி படங்களை எழுதுவதும் மகா பாவம். அதனால் சுவாமி நம்மைத் தண்டித்து நரகத்துக்குப்போகக் கட்டளையிடுவார். அவ்வித பொல்லாப்பு நமக்கு நேரிடாதபடி பார்க்கவேண்டியது நமது கடமை.

M. L. A.

---

## Jayaseelan.
## ஜயசீலன்.

### 15-ம் அதிகாரம்.—(தொடர்ச்சி.)

ஜயசீலன், தான் செய்த அக்கிரம செய்கைகளுக்காகத் தானே தண்டனைக்கு உட்பட்டு நீதிக்கு உத்தரிப்பது நியாயமும் நலமுமென்று பலமுறை தன் தகப்பனுருக்கு வற்புறுத்தியும் அவர் அதை ஏற்றுக்கொள்ளாமல் நியாய ஸ்தலத்தில்



தாமே குற்றவாளியென்று தீர்மானிக்கப்படத் தம்மைக் கையளித்தார். ஜயசீலன் தான் இவ்வளவு நாளாய் நடந்து வந்த வழியை விட்டு விட்டு புது மனிதனைக் காட்டும் மனஸ்தாபக் குறிகளால் சற்று ஆறுதலடைந்து, தனக்கு வர இருக்கும் துன்பத்தை மறந்தவராகக் காணப்பட்டார். குடும்பத்துக்கு வந்த கேட்டையும் அவமானத்தையும் இதுவரையிலும் தன் அன்பார்ந்த குமாரத்திக்கு வெளியிடாமல் மறைத்து இரகசியம் காத்த சத்தியானந்தன், தாயில்லாப் பிள்ளையாகிய தன் நேச மகளைத் தானும் கூடிய சீக்கிரம் விட்டுப் பிரியலாச்சுதே என்று சொல்லி தனக்குள்ளே ஆழுக் கஸ்தி வியாகுலத்துக்காளானார்.

தேவ சித்தத்துக்குப் பணிந்து நடப்பதே அதிமேலான செய்கையாகையால் ஜயசீலன் கையில் தன் மகளை ஒப்புவித்து அவளைத் தன் கண்மணியாகப் பாவித்து தேற்றி ஆதரித்து வரவேண்டுமென்று வெகுவாய்க் கேட்டுக்கொண்டார். ஜயசீலனும் அதன்படியே நடப்பதாக வாக்களித்தான். தகப்பனுருக்கு வர இருக்கும் இக்கட்டுத் துன்பங்களைப்பார்த்து மனதில் சொல்லமுடியாத சஞ்சல வியாகுல முண்டானாலும் அவருடைய சிநேகத்தையும் உதார சிந்தையையும் ஜயசீலன் கண்டு ஆச்சரியப்பட்டு தன் ஜீவிய காலமெல்லாம் நன்றியறிதலுள்ளவனாகவும், அவர் தனக்குப் புகட்டின மேலான புத்திமதிகளின்பிரகாரம் நடப்பதாகவும் உறுதி தீர்மானம் கொண்டான். சற்று நேரம் இருவரும் மௌனங் காத்தபின் தகப்பனார் தன் குமாரனைப் பார்த்து, சரி, நண்பர்களைத் தெரிந்துகொள்வதில் உனக்கிருந்த அஜாக்கிரதையின் பயனாகவும், துர்ச்சகவாசத்தால் விளைந்த பலனாகவும், வந்த கேடுகளையும் உனக்குப் பதிலாக நான் ஏற்றுக்கொண்ட நீதித்தீர்ப்பையும் சரியாய் அறிவாய். ஆதலால் போன காரியங்களைப்பற்றி இனி பேசுவதில் பிரயோஜனமில்லை. உன் அக்கிரமத்துக்குக் கிடைக்கவேண்டிய தண்டனையைவிட உன் மனக்கண்டனையே மேலானது. அதுவே போதும் என்று சொல்லியபின், இவ்விஷயத்தைப் பற்றி ஜயசீலனிடம் பேசுவதை விட்டு விட்டார்.

ஜயசீலன் தனபாலனோடுகூடி பிறரை வஞ்சித்து துர்மார்க்கமாய்ச் சம்பாதித்த பணத்தை சூது விளையாட்டிலும், குடியிலும் இருவரும் சேர்ந்து அழித்தபடியால், தனக்கு வந்த கஷ்டதிசையிலும் துன்பத்திலுமே தனபாலன் தாயாராவது கைகொடுத்து உதவி செய்து தனக்கு வர இருக்கும் கேட்டை நீக்கக்கூடுமாயிருக்குமென்னும் எண்ணம் சத்தியானந்தன் மன

தில் உதித்தது. இதற்காக தனபாலன் தாயார் இருந்த வீட்டைச் சேர்ந்து அவளிடத்தில் தான் அவ்விடம் வந்த காரணம் என்னவென்று நடந்த விஷயங்களை துக்க வியாகுலத்துடன் சொல்லிக் காட்டினார். ஜயசீலனும் தனபாலனும் சில நாட்களாகப் பிரியாத நண்பர்களாயிருக்தார்களென்றும், தன் சிநேகிதனைத் துன்பத்துக்குள்ளாக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணம் அவன் மனதில் இல்லாவிட்டாலும் உலக அநுபோகம் தனபாலனுக்கு இல்லாதபடியால் அவன்சொன்ன துர்ப்புத்தியாலும் காட்டின கெட்ட மாதிரிகையாலுமே தன் குடும்பத்துக்கு இவ்வளவு துன்பம் வந்ததென்றும் தாழ்மையாய்ப் பகர்ந்தார். தனக்கும் குமாரனுக்கும் குமாரத்திக்கும் வர இருக்கும் நிர்ப்பாக்கியத்தைப் பார்த்து, இரக்கம் வைத்து பெரிய தயவு செய்து தங்களைக் காப்பாற்ற வேண்டுமென்றும் இவ்வரிய தர்ம செய்கைக்காக தங்கள் ஜீவிய காலமெல்லாம் நன்றியறிதல் உள்ளவர்களாயிருப்பார்களென்றும் மிகவும் கெஞ்சி மன்றாடினார். வந்த பண நஷ்டத்துக்கெல்லாம் தனபாலனே காரணமாயிருந்தாலும் ஜயசீலன் பேரால் தான் பிரயாசையோடு கொடுக்க இருக்கும் தொகையோடு அவளும் கொஞ்சம் உதவி செய்து கடனை உத்தரிக்கவும், வந்த துன்பங்களை நீக்கவும் வேண்டுமென்று வேண்டினார்.

இவ்வளவு தாழ்மையாய்க் கெஞ்சி மன்றாடின போதிலும் தனபாலன் தாயார் இருதயம் கொஞ்சமாவது இளகவில்லை. அந்த ஆங்கார கர்வமுள்ள மனுஷி தன் குமாரனைப்பற்றி குறை பேசுவதைக்கேட்டு அடிபட்ட நாகம்போல் சீறி விழுந்து, தனபாலன் யோக்கியனும் நற்குணசாலியுமாகையால் துர்ப்புத்தி மற்றவர்களுக்குப் போதிக்கவும், அவர்களைத் தகாத வழியில் நடக்கச் செய்யவும், சூது விளையாடவும் தன் மகன் ஒருக்காலும் துணியமாட்டான் என்று கண்டிப்பாய்ப் பேசினாள். ஜயசீலன் முட்டாள்தனத்துக்கும் அக்கிரம செய்கைக்கும் பரிகாரம் செய்ய பணம் தேவையாயிருந்தால் யோக்கியமான வழிப்பாடுகளைக்கொண்டு வேறே எங்கேயாவது சேகரம் செய்யவேண்டுமென்றும் சொல்லி சத்தியானந்தனைத் தூஷித்து அனுப்பிவிட்டான். போன விஷயம் அநுகூலமாகாதபடியால் தப்பிக்கும் வழி வேறே ஒன்றும் இல்லையென்று கண்டு மிகவும் விசாரத்தோடு வரப்போகிற காரியங்களை மன அமைதியுடன் ஏற்றுக்கொள்ளும் எண்ணத்துடன் வீடு திரும்பினார். சத்தியானந்தன் வாக்குக்கொடுத்தபிரகாரம் முன் நடந்த விஷயங்களைப்பற்றி தன் மகனிடம் மறுபடி பேசினவரல்ல.



சமயா சமயங்களில் ஜயசீலன் கடன் வாங்கின வியாச்சியத்தைப்பற்றி தனக்கு அனுப்பப்பட்ட நோட்டீசுகளை மாத்திரம் அவனுக்குக் காட்டி தான் நீதியின் தீர்ப்புக்கு ஆளாகவேண்டிய காலம் சமீபித்திருக்கிறதென்றும், இன்னம் சில நாட்களுக்குள்ளாக தான் எண்ணினபடி சிறையில் தன் இருப்பிடத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் சொல்லிவருவார். கொஞ்சம் கொஞ்சமாக சத்தியானந்தனுடைய சொத்து விலைக்கிரயமானது. எல்லாவற்றையும் விற்றும், கடனுக்குக் கொடுக்கப் போதுமான தொகை இல்லாதபடியால் கடனுக்கு உத்தரிக்க சிறையில் அடைக்கப்பட்டார். (இன்னும் வரும்.)

---

## Here and there.

### நாலு சங்கதிகள்.

H. E. the Delegate Apostolic:—சென்ற மாதம் மாட்சிமை தங்கிய அப்போஸ்தலிக் டெலிக்கட் அவர்கள் மங்களூர், கள்ளிக்கோட்டை, முதலிய இடங்களிலும், மலையாள இராச்சியங்களிலும் ஞான விசாரணை செய்ய சென்றிருக்கிறார்.

The King of Greece:—அக்டோபர்-மீ 25-ம்௳ கிரீக் தேச அரசர் தேகவியோகமானார்.

Ordination:—டிசம்பர்-மீ 19-ம்௳ கோயமுத்தூர் மேற்றிராசனக் கோவிலில் சங். பிரதர் எஸ். மாசில்லாமணி குருப்பட்டம் பெறுவார் என்றும், புதுவை அதிமேற்றிராசனக் கோவிலில், 18-ம்௳ சங். பிரதர் லோபோ (மைசூர் மேற்றிராசனம்) குருப்பட்டமும், சங். பிரதர் எஸ். பெலவேந்திரம், A. மரியஅம்புரோஸ், A. பிரான்சிஸ் சவேரியார் (கோயமுத்தூர்) சங். பிரதர் மேரி ஜோசப் (புதுவை) சங். A. நாயப்பர் (மதரால்) தியாக்கோன் பட்டமும், சங். பிரதர் பிரான்சீஸ் ஜோசப் (மதராஸ்) சின்னப்பட்டங்களும் பெறுவார்கள் என்று கேள்விப்பட்டு சந்தோஷிக்கிறோம்.

Mass for the dead:—நவம்பர்-மீ 2-ம்௳ பிராஞ்சுதேசத்தின் சகல பங்கு கோவில்களிலும் மகாயுத்தத்தில் மரித்த போர்வீரர்களுக்காக பாடல் பூசை வைக்கும்படி பிராஞ்சு சர்க்கார் கேட்டு அதற்கு வேண்டிய பண செலவு செய்தார்களாம்.

**The Pope's Fund:**—அர்ச். பாப்பானவராகிய 15-ம் ஆசீர்வாதப்பர் மத்திய ஐரோப்பிய தேசங்களில், மகாயுத்தத்தால் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவிக்காக ஓர் பண்டு ஏற்படுத்தியிருக்கிறார். ஆங்கிலேய சர்க்கார் அதற்கு 850 பவுண்டு கொடுத்தார்கள்.

**Presentation Convent:**—செப்டெம்பர்-மீ 27-ந் உ காணிக்கைமாதா கன்னியாஸ்திரி மடத்தில் 70 பிராயமுள்ள உரோஸம்மாள் என்ற சகோதரியும், ஒக்டோபர்-மீ 26-ந் உ 33 பிராயமுள்ள இராபேல் மரியம்மாள் என்ற சகோதரியும் காலஞ்சென்றார்கள். R. I. P.

**The Catholic Club, Coimbatore:**—ஒக்டோபர்-மீ 27-ந் உ கத்தோலிக் கிளப் சாலையில் கூட்டம் நடைபெற்றது. ராவ் பஹதூர் R. N. ஆரோக்கியசாமி முதலியார் அவர்கள் அக்கிராசனாதிபதியாயிருக்க, திவான் பஹதூர் L. D. சுவாமிக்கண்ணு பிள்ளை அவர்கள், கத்தோலிக் சங்கங்களைப்பற்றி ஓர் நேர்த்தியான உபந்நியாசம் செய்தார். அவர் கோயமுத்தூரில் கத்தோலிக் கிளப் என்னும் ஓர் சங்கம் ஏற்பட்டிருக்கிறதைப்பற்றி சந்தோஷமடைந்ததுமன்றி இவ்வித கிளப் அல்லது சங்கம் அல்லது யாதொரு சபை கூடியமட்டும் இம்மேற்றிராசனத்தின் ஒவ்வொரு பங்கிலும் ஏற்படுத்தப்படுமாகில், கத்தோலிக் சகோதரர்களுக்கு மெத்த நன்மையாயிருக்குமென்றும், விசேஷமாய் நமது நாட்களில் கத்தோலிக்கர் இப்படிப்பட்ட சங்கம் உண்டுபண்ணி ஒற்றுமையாயிருப்பது அதி அவசரம் என்றும் சொன்னார்.

**The Wave of Conversions:**—தற்காலம் ருஷியா தேசத்தில் அநேக பிரிவினைக்காரர் மனந்திரும்பி வருகிறார்கள் என்று தெரியவருகிறது. கற்கோவ் என்னும் பட்டணத்தில் ஒரே நாளில் 6000 பேர் பிரிவினையை விட்டு திருச்சபையில் சேர்ந்தார்களாம்.

**Peace on earth:**—ஐரோப்பிய மகாயுத்தம் முடிந்து சமாதானமாகி 2 வருஷம் ஆயிற்று. இருந்தாலும் உலகத்தில் முழு சமாதானம் உண்டாகவில்லை. ருஷியா தேசத்தில் கலாபனை, அயர்லாண்ட் தேசத்தில் குழப்பம், மெஸப்பொட்டோமியாவில் கலகம், ஆர்மேனியா தேசத்தில் சங்காரம், சீனா தேசத்தில் அகோர பஞ்சம். அநேக இடங்களில் கைத்தொழில் நிறுத்தல், எங்கும் உயர்ந்த அகவிலை, இது முதலிய துன்பங்களை ஜனங்கள் அநுபவித்துவருகிறார்கள். சமாதானத்தின் இராஜாவாகிய சேசுநாதர் உலகத்துக்கு சமாதானம் தந்தருளுவாராக.



# Obituary

## நன்மரண அறிக்கை.

**சவுரிபாளையம்:**—இவ்வூர் மணியகார சாந்தப்பிள்ளை மகன் முத்துப்பிள்ளை என்பவர் இவ்வூரில் ஏறக்குறைய 20 வருஷத்துக்குமேல் உபாத்தியாயராகவும், போஸ்ட்மாஸ்டராகவும் இருந்து அநேக இளைஞர்களுக்கு கல்விப்பாலும், ஞானப்பாலும் புகட்டி கோவில் மணியம் பார்த்துக்கொண்டு சுமார் 47-வது வயதில் பரலோக பிராப்தியானார். இவர் இவ்வூரில் நல்லவனென்றும், பொது ஜன ஊழியனென்றும் சகலராலும் புகழப்பட்டுவந்தபடியால் இவரது மரணமானது இவ்வூருக்கே இடியைப்போலிருக்கிறது. இவர் நவம்பர்-மீ 12-ம் தேதி காலை 4½ மணிக்கு உயிர் துறந்து திருச்சபைச் சடங்குகள் பூர்த்தியாய்ச் செய்யப்பட்டு மாலை 2½ மணிக்கு பக்கத்துக் கிராம ஜனங்களாலும், உள்ளூர் ஜனங்களாலும் சங். பங்கு சுவாமியாருடன் புடைசூழ்ந்து நல்லடக்கம் செய்யப்பட்டார். அச்சமயத்தில் "துக்கக் கண்ணீர் சிந்தாதார் யாருமே கிடையாது. இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளும் நிர்ப்பாக்கியன்,

M. S. Muthu Pillai.

* * *

குன்னூர் அர்ச். அந்தோனியார் செக்கண்டரி பாடசாலை உபாத்தியாயர் S. சூசை கவுண்டரின் கனிஷ்ட புத்திரியும், பொள்ளாச்சி மெஸ்ஸர்ஸ் பட்டேல் பிரதர்ஸ் கம்பெனியாரின் சப் ஏஜண்டு Mr. C. R. அந்தோனிமுத்து கவுண்டரின் பிரிய மனைவியுமாகிய S. ஆரோக்கியம்மாள் விஷ ஜுரத்தால் பீடிக்கப்பட்டு ஒன்பது நாளாகச் செய்யப்பட்ட எவ்வித சிகிச்சைக்கும் குணப்படாமல் கடைசித் தேவதிரவிய அநுமானங்களை குறையறப் பெற்றுத் தனது 17-ம் பிராயத்தில், 1920-ம் வருஷம் நவம்பர்-மீ 9-உ செவ்வாய்க்கிழமை மத்தியானம் 3-மணிக்குப் பரலோக பிராப்தியடைந்தனள். அவளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. R. I. P.

161401
330.039



## Kodiveri.

### பெரிய கோடிவேரி கோவில் பஞ்சாங்கம்.

---

### 1920-ம் ௵ டிசம்பர்-மீ

3-ம் வ தலை வெள்ளிக்கிழமை. அர்ச். சவேரியார் திருநாள். காலை 6 மணிக்குப் பூசையும், பூசைக்குப்பின் திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும்.

5-ம் வ ஞாயிறு. காலை 8 மணிக்குப் பாட்டுப்பூசையும், சாயங்காலம் 7 மணிக்கு அர்ச். சவேரியார் தேர் சுற்றுப்பிரகாரமும், அதின்பின் திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும்.

8-ம் வ புதன். தேவமாதா ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த திருநாள். காலை 6 மணிக்குப் பூசையும், பூசைக்குப்பின் திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும்.

24-ம் வ வெள்ளி. கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தின நாள் கடன் ஒருசந்தி.

25-ம் வ சனி. கர்த்தர் பிறந்த திருநாள். நடுச்சாம பாட்டுப் பூசையும், உடனே 2-வது பூசையும், காலை 7 மணிக்கு கடைசிப் பூசையும்; சாயங்காலம் 5 மணிக்கு திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும்.

28-ம் வ செவ்வாய். மாசில்லாத குழந்தைகளின் திருநாள். காலை 6 மணிப் பூசைக்குப் பிறகு குழந்தைகளை மந்திரிக்கப்படும்.

31-ம் வ வெள்ளி. வருஷத்தின் கடைசி நாள். சாயங்காலம் 6 மணிக்கு திவ்வியநற்கருணை ஆசீர்வாதம். இவ்வருஷத்தில் சர்வேசுரனிடத்தில் நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக தேதேயும் பாடப்படும். சர்வேசுரனுக்கு விரோதமாக செய்திருக்கிற பாவங்களுக்காக மிசரேரே பாடப்படும்.